அட்டாங்கம், எண்வகையுறுப்பு, the eight parts of the body—viz. : the feet, hands, shoulders, forehead and breast.

அட்டாவதானம், எண்வகையவதானம், the art of attending to eight things or studies at once.

அட்டாலம், மேன்மாடம், an upper room or pavilion on the flat roof of an Indian house.

அட்டி, அதிமதுரம், licorice. 2. செஞ்சந்தனம், red sandalwood.

அட்டிகம், ஜாதிக்காய், nutmeg.

அட்டிகை, ஓராபரணம், a necklace worn close to the neck.

அட்டிமை, ஓமம், sison, or Bishop's weed.

அட்டில், மடைப்பள்ளி, a kitchen, cook-room.

அட்டு, பனட்டு, dried palmyra jelly.

அட்டை, அட்டை, a leech.

அணங்கு, அச்சம், fear. 2. அழகு, beauty. 3. ஆசை, desire. 4. கொலை, killing. 5. தெய்வப் பெண், a female deity, goddess, a female inhabitant of Swerga. 6. தெய்வம், an inferior deity. 7. தேவர்க்காடுங்குத்து, a form of demonolatry,—dancing, &c., intended to obtain divine aid for the removal of sickness. 8. நோய், disease. 9. வேலனாடல், dance to Skanda. 10. பெண்மகள், woman in general. 11. வருத்தம், pain, affliction, suffering. 12. அணங்கென்னேவல், *imp.* kill, desire, fear, suffer.

அணம், } மேல்வாய், the palate or
அணரி, } roof of the mouth.

அணல், கீழ்வாய், the lower part of the mouth. 2. மிடறு, throat windpipe.

அணவல், கிட்டல், approximating, coming close to.

அணவு, சாரென்னுமேவல், *imp.* approximate, come close to. 2. நடு, middle.

அணவுதல், சார்தல், approximating. 2. புணர்ச்சி, union, coalescing.

அணி, அணியென்னுமேவல், *imp.* put on jewels, garlands, clothes, &c., adorn, embellish. 2. அலங்காரம், a rhetorical embellishment, a figure of speech. 3. அழகு, beauty. 4. ஆபரணம், ornament, jewels. 5. ஒழுங்கு, order, regularity. 6. நன்மை, goodness. 7. படைவகுப்பு, a main body or division of an army. 8. பெருமை, greatness. 9. மாலை, garland, wreath or string of flowers. 10. எல்லை, boundary. 11. கருவி, instruments, tools, utensils, implements. 12. சம்பாரம், stores.

அணிகம், சிவிகை, a litter, palankeen.

அணிகலன், ஆபரணம், an ornament, jewels, dress.

அணிதல், அலங்கரித்தல், adorning with ornaments, embellishing, beautifying, garnishing. 2. பூணல், putting on jewels, garlands, clothes, &c.

அணிந்தம், கோபுரவாயிலின் மேடை, the seat or pial near the entrance of pagoda.

அணிந்துரை, பாயிரம், preface, introduction.

அணிமா, அட்டசித்தியிலொன்று, one of the eight சித்தி—the faculty of reducing one's self to the size of an atom.

அணிமை, சமீபம், nearness, proximity either of time or place.

அணியல், மாலை, garland or necklace.

அணிலன், அட்டவசுக்களிலொருவன், one of the eight demigods.

அணில், அணிற்பிள்ளை, a squirrel.

அணு, உயிர், soul, spirit. 2. சிறுமை, fineness, subtleness. 3. நுண்மை, an atom, a minute or elementary particle of matter.

அணுகலர், பகைவர், enemies.

அணுகல், கிட்டல், drawing near, approaching.

அணுச்சைவம், சைவம் பதினாறினொன்று, one of the sixteen varieties of the Saiva religion.

அணுரூபி, ஆன்மா, the soul. 2. கடவுள், the Deity.

அணை, கரைப்பொது, a bank of a tank, river, sea-shore, &c. 2. செய்கரை, an artificial bank, dam, causeway, &c. 3. மெத்தை, mattress, cushion, pillow. 4. வரம்பு, dam or ridge for retaining water in fields. 5. துணை, accompaniment, attendance, adjunct. 6. முட்டு, a support, prop, buttress. 7. புணரென்னு மேவல், *imp.* become joined, unite with, come or be in contact with.

அணைதல், புணர்தல், uniting with, copulating.

அணைவு, ஆதரவு, help, support, protection safeguard.

அணைக்கம், மரப்பொது, a tree in general.

அண், வேட்டைநாயினுருவுகயிறு, a leash for dogs, a running knot.

அண்டகம், குப்பைமேனி, the plant Acalypha.

அண்டகடாகம், அண்டகோளவோடு, the shell supposed to surround the earth and its attendant spheres.

அண்டகை, அப்பவர்க்கம், pastry, cakes, bread.

அண்டகோசம், அண்டவிவரநூல், an astronomical treatise.

அண்டசம், முட்டையிற் பிறப்பன, animals produced from eggs or spawn, oviparous animals, viz., அரணை, Lacerta interpunctala; ஆமை, tortoise; இப்பி, bivalvular shellfish; உடும்பு, guana; ஒணான், Lacerta cristala; தவளை, frog: நண்டு, crab, a lobster; பல்லி, lizard, newt; பறவை, bird, fowl; பாம்பு, serpent, snake; மீன், fish; முதலை, crocodile, &c.

அண்டம், ஆகாயம், the sky, the visible heavens. 2. பீசம், testicle. 3. முட்டை, an egg. 4. அண்டகோளம், an imaginary shell surrounding the earth and its accompanying sphere.

அண்டயோனி, சூரியன், the sun.

அண்டர், இடையர், herdsman, cowherds, shepherds. 2. பகைவர், foes, opponents, enemies. 3. வானோர், celestials.

அண்டலர், பகைவர், foes, enemies.

அண்டல், கிட்டல், approaching, approximating.

அண்டவாணர், வானோர், the gods, celestials.

அண்டிகம், செந்நாய், a reddish species of wild dog.

அண்டை, அருகிடம், nearness, vicinity, side.

அண்ணந்தாள், } **அண்ணாந்தாள்**, } தலைநிமிர்ந்திருக்கப் பூட்டுங் கயிறு, a kind of torture, in which a cord is fastened round the neck and the head tied close to the great toe, while the hands are kept behind.

அண்ணம், உண்ணா, the uvula or small rounded process which hangs from the soft palate at the posterior part of the mouth. 2. மேல்வாய், palate, the upper part of the mouth.

அண்ணல், அருகன், the god of the Jainas. 2. இராசா, a king. 3. சார்தல், cleaving to, being attached. 4. தமையன், an elder brother. 5. புத்தன், the god of the Buddhists. 6. பெருமையிற் சிறந்தோன், a superior, a great man. 7. முல்லைநிலத் தலைவன். a ruler in a jungle district. 8. பெருமை, greatness, dignity, exaltation, loftiness.

அண்ணன், தமையன், an elder brother.

அண்ணாத்தல், அங்காத்தல், opening the mouth looking upward. 2. மேனோக்கல், looking upward.

அண்ணுதல், சார்தல், cleaving to, being attached, joining, uniting with, approaching.

அண்முதல், கிட்டுதல், approaching, being near.

அண்மை, அணிமை, nearness, being near.

அதகம், மருந்து, a medicine, medicament (கல்லாடம்) 2. (*M. Dic.*) பெருமருந்து, a twining plant—Indian Birthwort, Aristolochia Ind.

அதடம், செங்குத்து, precipice.

அதட்டம், அரவுயிர்ப்பு, the poisonous breath of snakes. 2. பாம்பினச்சுப்பல், the fang of a serpent.

அதட்டல், உரப்பல், making a sudden or vehement noise to frighten beasts, &c. 2. உறுக்குதல், ranting, hectoring, blustering, upbraiding, &c., in order to awe, silence. 3. கண்டித்தல், reproving authoritatively and vehemently. 4. (பிங்.) அமட்டுதல், attempting to refute one by sophistry and blustering.

அதமதானம், கடைப்படுதானம், giving for the sake of praise, or through fear, partiality, &c., which is of the lowest merit.

அதமம், கீழ்மை, lowness, inferiority.

அதமன், கீழோன், a mean, vile, abandoned man.

அதமாங்கம், கால், the foot.

அதம், அத்திமரம், the fig tree. 2. சங்கரித்தல், destruction, destroying. 3. தாழ்வு, lowness, a low place, downward course. 4. பள்ளம், low land, hole, hollow, &c. 5. பாதாளம், the lower worlds.

அதம்பம், கற்பரிபாஷாணம், one of the thirty-two kinds of native arsenic.

அதரம், கீழுதடு, the under lip. 2. உதடு, the lips. 3. பெண்குறி, pudendum muliebre.

அதராமிர்தம், (*in erotics.*) இதழூறல், moisture imbibed from another's lips in embraces.

அதரிசனம், காணப்படாமை, invisibility, imperceptibility. 2. குருடு, blindness.

அதரிசனன், குருடன், a blind person.

அதரித்திரன், கன்னன், Karna, an ancient king famed for liberality. 2. தரித்திரமில்லான், a rich man.

அதருமம், பாவம், injustice, wickedness.

அதருமாத்திகாயம், யாதனா சரீரம், a body assumed by the soul after death, to undergo suffering for sin in the inferior region.

அதர், ஆட்டதர், a kind of wattle or excrescence, sometimes hanging under the neck of goats and sheep, a dewlap. 3. நுண்மணல், fine sand. 3. புழுதி, dust. 4. வழி, way, path.

அதர்கொளல், அதர்கோள், } வழிபறித்தல், highway robbery.

அதர்வணம், நான்காம் வேதம், the last of the four vedas.

அதலம், அதலலோகம், } கீழேழுலகத்தொன்று, the first of the abysses or seven nether worlds.

அதவம், அதவு, } அத்திமரம், the fig-tree.

அதழ், பூவிதழ், a petal.

அதளை, நிலப்பீர்க்கு, a plant with bitter fruit, which is eaten when boiled—Cucumis tuberosus.

அதள், தோல், skin, cuticle.

அதனு, மிகுதி, largeness, greatness. 2. அளவிற்கதிகம், excess.

அதாசலம், காட்டு மல்லிகை, a kind of wild jasmine with red blossoms. (*M. Dic.*)

அதாதிரு, உலோபி, a miser, one who is extremely parsimonious.

அதி, மிகுதிப்பொருளைத் தருமடைச் சொல், an augmentative prefix.

அதிகடம், யானை, an elephant.

அதிகண்டம், நித்திய யோகத் தொன்று, the sixth of the twenty-seven yogas of the lunar path.

அதிகதம், எட்டாதது, that which is out of reach.

அதிகதை, வெற்றுரை, a speech or expression which has no sense, a nonsensical speech.

அதிகநாரி, see அதிகற்றுதி.

அதிகம், இலாபம், gain, profit. 2. குருக்கத்தி, a kind of tree—Goertnera racemosa. 3. படை, army. 4. பொலிவு, abundance, plenty. 5. மிகுதி, much, excess.

அதிகரணம், மேன்மை, supremacy, superiority.

அதிகல், வன மல்லிகை, a kind of wild jasmine with red blossoms.

அதிகற்றுதி, கொடுவேலி, a plant, plumbago.

அதிகன், ஆதிக்கன், a chief personage, 2. சிவன், God, the Supreme Being.

அதிகாசம், பெருநகை, a loud rude laugh, horse-laugh.

அதிகாந்தம், ஓர் கல், a precious stone. 2. மிகுவழகு, great beauty.

அதிகாயன், இராவணன் மைந்தரி லொருவன், one of the sons of Ravana.

அதிகாரம், அதிகரித்தல், increasing, enlarging, exceeding, being aggravated. 2. பண்பு, disposition, nature. 3. நூலுறுப்பு, chapter of a book, section. 4. (பாரதி) சுதந்தரம், ownership. 5. விருத்தியுரையுறுப்புப் பதினாலினொன்று, one of the fourteen sub-divisions of விருத்தியுரை—determining the meaning of doubtful terms by reference to the subjects under discussion. 6. பக்குவம், fitness, competency, worthiness, eligibility.

அதிகிருச்சிரம், ஓர் விரதம், a kind of fasting.

அதிகுணன், கடவுள், God, as excelling in all good qualities or according to Hinduism, he who is above all attributes, who is without attributes.

அதிகும்பை, கையாந்தகரை, a medicinal herb—Eclypta prostrata.

அதிகோலம், அழிஞ்சில், a medicinal tree whose root, bark, fruit, leaves, flowers, &c., are an antidote against poison—Alangium decapitalum.

அதிக்கிரமம், வரம்புகடத்தல், transgression, iniquity, impiety.

அதிங்கம், அதிமதுரம், the lico rice plant, either the runner or the roof.

அதிசங்கிலிதம், சங்கலித சங்கலிதம், the summation of a series in geometrical progression, whose first term is one and ratio two.

அதிசயச்சொல், வியப்புமொழி, a word indicating wonder surprise, an exclamation.

அதிசயம், அற்புதம், an extraordinary occurrence, anything wonderful, strange, miraculous. 2. ஓரலங்காரம், hyperbole or exaggerated description. 3. மாயையாக்கைக் குரிய பதினெண்குற்றத்தொன்று, one of the eighteen defects of the body.

அதிசயன், அருகன், god of the Jainas.

அதிசயோத்தி, see அதிசயம்.

அதிசரம், நெட்டுயிர்ப்பு, suspiration, sigh.

அதிசரித்தல், கிரகஞ்செல்லல், passing as a planet from one sign to another.

அதிசாமியை, வெண்குன்றி, the wild licorice, resembling Glycyrrhiza glabra.

அதிசாரணம், மாவிலங்கு, Crataeva.
அதிசாரம், ஓர் பேதி, diarrhoea, dysentery. 2. கிரகநடை, the passage of a planet from a sign before the expiration of its proper period, to which it will return by retrogression.
அதிசூக்குமம், மிகுநுண்மை, the state of being very minute, subtile.
அதிசௌரயம், தேமா, the sweet mango tree. (*M. Dic.*)
அதிசத்திரகம், } அதிசத்திரம், } காளான், a fungus, mushroom, toadstool. (*M. Dic.*)
அதிட்டச்செல்வி, இந்திரபாஷாணம், one of the thirty-two kinds of prepared arsenic.
அதிட்டம், நல்வினைப்பயன், luck good or bad (commonly good), fortune, propitious events happening as the fruit of actions performed in previous births. 2. மிளகு, pepper.
அதிட்டானுசைதன்னியம், the passive, immoveable essence of the Supreme Being, the Deity in the abstract.
அதிட்டானம், நிலை, situation, location. 2. நியமம், prescribed rule.
அதிட்டித்தல், நிலைப்படல், being situated, abiding. 2. ஆவாகனமாதல், becoming inspired with divinity as an image.
அதிதலசிலேட்டுமம், ஓர் நோய், a kind of phlegmatic disease.
அதிதனு, பொன், gold.
அதிதாரம், இலந்தை, a thorny tree yielding a small fruit, like the mulberry, the jujuba—Ziziphus jujuba.
அதிதி, காசிப்பிரமாவின் மனைவிகளிற்றேவதைகட்குத் தாய், one of the thirteen wives of Kasyapa, being the mother of the gods or devas. 2. புதியவன், a guest. 3. சிராத்தத்திற்கொவ்வாத திதி, the anniversary of one's death occurring inauspiciously on a part of two tithis, so that the ceremonies cannot be performed. 4. சத்தப்பிதிரர்களிலொருவர், one of the seven paternal ancestors whose names are propitiated in funeral ceremonies.
அதிதிநாள், புனர்பூசநாள், the seventh lunar constellation.
அதிதிபூசை, விருந்தினர்க்குபசாரம், hospitality.
அதிதியர், புதியோர், guests, visitors.
அதிபசமி, கொன்றை, a genus of flower-trees Cassia. (*M. Dic.*)
அதிபதி, ராஜா, king, sovereign. 2. தலைவன், lord, master, superior, protector.
அதிபறிச்சம், வாலுளுவையரிசி, a medicinal seed.
அதிபன், ராஜா, a supreme ruler, king. 2. எப்பொருட்குமிறையோன், the Supreme Being. 3. தலைவன், lord, master.
அதிபாதகம், மாபாதகம், heinousness, the worst of the great sins.
அதிபாரகம், கோவேறுகழுதை, a mule.
அதிபாரம், மிகுபாரம், great weight, excessive heaviness.
அதிமதுரம், வெண்குன்றி, the wild licorice.
அதிமலம், see மாவிலங்கு.
அதிமுத்தம், குருக்கத்தி, a kind of tree—Goertnera racemosa.
அதியாமம், முயற்புல், Agrostis linearis as அறுகு.
அதிரல், அதிர்தல், shaking, quaking. 2. விரிதூறு, a low jungle of considerable extent. 3. ஆரவாரித்தல், resounding attended with a shock, as by thunder, by an earthquake, sounding as a drum, reverberating, &c.
அதிராகம், கந்தகம், sulphur.
அதிராத்திரம், யாகமிருபத்தொன்றினொன்று, one of the twenty-one sacrifices.
அதிராயம், அதிசயம், astonishment, wonderfulness.
அதிரிசம், காணப்படாதது, invisibility, that which is invisible. 2.

குருடு, blindness, want of sight, privation of vision.

அதிரிசன், குருடன், a blind man. 2. கடவுள், the Deity, the invisible being.

அதிரேகம், அதிசயம், astonishment, wonder, wonderfulness.

அதிரோகம், மிகு பிணி, complicated disease. 2. காசம், consumption.

அதிர், அதிரென்னேவல். *imp.* shake, quake. 2. ஒலி, sound.

அதிர்ச்சி, ஆரவாரம், a great noise, shouting.

அதிர்தல், நடுங்கல், shaking, quaking, trembling.

அதிர்த்தல், அதட்டல், intimidating, menacing, rebuking. 2. சொல்லுதல், speaking, dictating.

அதிர்ப்பு, அச்சம், fear, alarm. 2. அதிரல், shaking. 3. ஆரவாரம், clamor, vociferation, shouting. 4. நடுக்கம், tremor, trembling.

அதிவிடயம், ஓர் மூலிகை, a medicinal root used for dysentery.

அதிவியாத்தி, மிகைபடக்கூறல், redundancy of matter, as one of the three faults of composition.

அதிவிருட்டி, கனமழை, heavy rain.

அதிவெள்ளைச்சிந்தூரம், சவ்வீரம், sublimate of mercury.

அதீதப்பிரமம், கடவுள், the Deity, as beyond human comprehension.

அதீதம், எட்டாதது, that which is beyond reach, exceeding the power of human comprehension. 2. கடந்தது, that which excels or goes beyond, exaltedness, pre-eminence.

அதீதர், வானோர், the supernals. 2. முனிவர், ascetics, wise men who by their austerities have obtained great eminence.

அதீதாவத்தை, துரியாதீதம், the state of the soul abstracted from sensible abjects by meditation, insensibililty.

அதீனம், உரிமை, the relation which property bears to the owner, right of possession.

அது, அஃது, 6ஆம் வேற்றுமையுறுபு, a form of the sixth or possessive case singular. 2. சுட்டுச்சொல், a demonstrative pronoun—that thing.

அதுக்கம், துக்கமின்மை, the state of being free from grief.

அதுக்கல், அடித்தல், slapping with the hand, slapping beasts to urge them orward. 2. அமுக்கல், pressing, squeezing, &c., with the fingers.

அதுங்கல், அமுங்கல், being pressed, compressed, forced out by pressure.

அதுலம், உவமையின்மை, incomparableness, that which is unequalled. 2. ஒரெண், a number—one thousand quintillions.

அதுலன், கடவுள், the Supreme Being, the unequalled.

அதுலிதம், அசைவின்மை, immovableness, unchangeableness. 2. ஒப்பின்மை, state of being unequalled.

அதுல்லியம், ஒப்பின்மை, incomparableness.

அதெந்து, பயப்படாதே, fear not. (Telugu used in திருவாசகம்.)

அதைத்தல், தாக்கிமீளல், rebounding as a ball, springing or starting back, unbending with force, recovering straightness as a bent bow. 2. வீங்கல், swelling, puffing up.

அதைரியம், தீரமின்மை, timidity, want of fortitude, dispiriteness.

அதோகதி, இறக்கம், downward course or tendency, descent. 2. பள்ளம், valley, low ground. 3. நரகம், hell.

அதோமாயை, அசுத்தமாயை, subordinate or inferior illusion or *Maya*.

அதோமுகம், ஆற்றுநீர்க்கழிமுகம், the junction or confluence of a river with the sea. 2. கீழ்நோக்கிய முகம், a downcast look, the head inclined downwards.

அதோமுகி, கவிழ்தும்பை, a plant whose flower bends downwards.

அதோலம்பம், நிறுத்திட்டவரி, a perpendicular.

அதோவாயு, அபானவாயு, wind downwards.

அத்தகடகம், கைவளை, a bracelet.

அத்தகண்டாதனம், ஒரு கால் மேனீட்டி யொருகைக்கொண்டு நீட்டின காலைக்கட்டி மற்றைக் கையை நிலத்தூன்றியிருப்பது, one of the hundred and eight positions of the yogi, in which he stands on one foot, extends the other, presses one hand on the ground, and with the other takes hold of the extended foot.

அத்தகம், கருஞ்சீரகம். black cumin used medicinally—nigella sativa. *2.* ஆமணக்கு, the castor plant. (*M. Dic.*)

அத்தகோரம், நெல்லி, a class of trees, the fruit of which is used for pickles and in medicine.

அத்தகோளம், பாதியுண்டை, a hemisphere.

அத்தசகாயம், பொருளுதவி, pecuniary aid.

அத்தசந்திரன், வாலசந்திரன், the crescent moon.

அத்தசாமம், பாதிச்சாமம், midnight.

அத்தநாரீச்சுரன், சிவன், Siva, who is half woman.

அத்தப்பிரகரன், கரந்துறை கோள் களிலொன்று, one of the unseen planets.

அத்தமண்டபம், கோவிலினடுமண்டபம், the court in a temple next to the sacred shrine.

அத்தமனம், படுகை, setting, disappearing as the sun or other heavenly bodies.

அத்தமாணம், ஆமணக்கு, the castor plant. (*M. Dic.*)

அத்தம், அருநெறி, a difficult way. *2.* ஓர்நாள், the thirteenth lunar mansion. *3.* கண்ணாடி, a mirror. *4.* காடு, a jungle. *5.* கை, the hand. *6.* சொற்பொருள், signification as of a word or sentence. *7.* பாதி, half. *8.* பொன், gold, wealth, riches. *9.* வழி, a way, road. *10.* குங்கிலியம், a gum, bdellium. *11.* அதிடயம், a medicinal root. *12.* குக்கில், a drug.

அத்தர், முனிவர், the distinguished sages. *2.* தேவர், the gods.

அத்தவாளம், உல்லாசம், pleasantness, gaiety, foppishness. *2.* காடு, a jungle. *3.* போர்வை, an upper garment falling down loose to the waist behind and held up by the arms in front.

அத்தன், அருகன், the god of the Jainas. *2.* கடவுள், the Supreme Being. *3.* குரு, priest. *4.* சிவன், Siva. *5.* தகப்பன், father. *6.* மூத்தோன், elder. *7.* கடுக்காய், a fruit—Terminalia. *8.* வெள்ளீயம், pewter.

அத்தாணி, அரசிருக்கை, a throne.

அத்தாணி மண்டபம், அரசிருக்கை மண்டபம், senate-house, presence, chamber.

அத்தாதுரம், பொருளாசை, desire for wealth, covetousness.

அத்தாயம், கடைசற் சக்கரத்தின் மிதி, the treadle of a turner's lathe.

அத்தான், மைத்துனன், a brother-in-law.

அத்தி, எலும்பு, a bone. *2.* ஓர் மரம், a tree—Ficus racemosa. *3.* கடல், sea, ocean. *4.* கொலை, killing, murder. *5.* பாதிசெய்யென்னே வல், *imp.* halve. *6.* யானை, an elephant. *7.* திப்பிலி, long pepper, *8.* தசைநாடியிலொன்று, one of the ten arteries of the system.

அத்திகன்னி, வெருகு, a shrub—Arum macorhizon. *2.* கரிசலாங் கண்ணி, a medicinal plant—Eclypta prostrata. (*M. Dic.*)

அத்திகோபம், ஓர் நயனரோகம், a disease in the eye.

அத்திகோலம், அழிஞ்சில், a tree—Alangium.

அத்திசம், நீர்முள்ளி, a plant—Barleria.

அத்திசயனன், அத்திசயன், } விஷ்ணு, Vishnu, as having slept on the sea of milk.

அத்தித்திப்பிலி, யானைத்திப்பலி, a large kind of long pepper.

அத்திப்பஞ்சரம், என்புக்கூடு, a skeleton.

அத்திப்புரசாதனி, அவுரி, the indigo plant. (*M. Dic.*)

அத்திபேதி, ஓர் மருந்து, a medicine for elephants.

அத்தியக்கினிட்டோமம், யாகமிருபத்தொன்றினொன்று, one of the twenty-one yagas.

அத்தியட்சரம், பிரணவம், the mystic syllable O'm.

அத்தியட்சன், அதிகாரி, an overseer, a superintendent.

அத்தியந்தம், ஓரெண், a number—ten thousand quintillions. 2. மட்டின்மை, boundlessnes, excessiveness, much.

அத்தியந்தாபாவம், (*in logic*) முழுதுமின்மை, absolute negation, or nonexistence.

அத்தியயம், அழிவு, destruction. 2. குற்றம், vice, transgression.

அத்தியயனம், வேதமோதல், studying, reading the sacred books, one of the six duties of Brahmins.

அத்தியாகரணம், தொகைவிரித்தல், supplying an ellipsis. 2. வாதம், reasoning, discussion.

அத்தியாசம், அத்தியாரோபணம், அத்தியாரோபம், } ஆரோபம், mistaking one thing for another, illusion. (பிரபுலிங்கலீலை. *in.*)

அத்தியாசனம், அபரக்கிரியையினொன்று, presenting the ashes of the burnt bones to the Brahmin.

அத்தியாத்துமிகம், அத்தியான்மிகம், } தன்னால் வருந்துன்பம், disease occasioned by one's own misconduct.

அத்தியாபகன், வேதமுரைப்போன், a teacher of the Vedas.

அத்தியாபனம், வேதமோதுவித்தல், teaching the sacred books.

அத்தியாயம், முனிவருரைத்த விலக்கியச் செய்யுட்கூறுபாடு, section or division of a book. 2. வேத நூலை விரித்தவிலக்கியத்தின் கூறுபாடு, a chapter or lecture of the Vedas. 3. வேதம், sacred writings.

அத்தியான்மிகநூல், சாங்கியம்—பாதஞ்சலியம்—வேதாந்தம், three shastras of human composition concerning God and the souls of men.

அத்திரசத்திரம், கைவிடுபடை கைவிடாப்படை, both missile and projectile weapons.

அத்திரசந்தானம், அம்புமாரி, vollies of arrows in succession.

அத்திரதர், நான்காம் வகுப்பு ரதவீரர், the charioteers of the 4th and lowest order in war.

அத்திரதேவர், ஆயுததேவர், an image in form of a weppon preceding the god of the temple in processions, a weapon god.

அத்திரபரீட்சை, வில்வித்தை, the practice of archery—one of the sixty-four கலைஞானம்.

அத்திரப்பிரயோகம், அம்பெய்தல், discharge of arrows.

அத்திரம், அம்பு, an arrow. 2. கழுதை, an ass. 3. குதிரை, a horse. 4. கைவிடுமாயுதப்பொது, any missile weapon. 5. மலை, a mountain. 6. முன்விடுமம்பு, a dart thrown forward. 7. நிலையின்மை, unsteadiness, uncertainty, that which is unworthy of confidence as the world and its enjoyments. 8. (*M. Dic.*) இலந்தை; a thorny tree—Ziziphus jujuba.

அத்திராசம், பயமின்மை, fearlessness.

அத்திராதரம், அத்திராதாரம், } அம்புறைதூணி, a quiver.

அத்திரி, உலைத்துருத்தி, a forge bellows. 2. ஒட்டகம், camel, 3. ஓரிருடி, one of the seven stars of the Ursa Major, of Great Bear, supposed by the Hindus to be the seven great Rishis. 4. கணை, an arrow. 5. கழுதை, an ass. 6. குதிரை, a horse. 7. மலை, a mountain. 8. விண், the atmos-

phere. 9. தருமநூல் பதினெட்டி னொன்று, one of the eighteen treatises on law, ethics and jurisprudence.

அத்திரு, அரசு, a tree, the Ficus religiosa.

அத்திலை, செருப்படி, a class of medicinal plants—Coldenia procumbens.

அத்தினபுரம், } ஓர் நகரம், name
அத்தினுபுரம், } of a city, Hastinapura.

அத்தினி, நால்வகைப் பெண்ணி னொருத்தி, the lowest of the four classes of women. 2. பெண், யானை, a female elephant.

அத்து, அசைச்சொல், an expletive. 2. அரைப்பட்டிகை, a woman's girdle or waist-ornament. 3. இசைப்பு, uniting, joining, making to agree. 4. சாரியை, an increment used in declining nouns. 5. சிவப்பு, redness. 6. செவ்வை, accuracy, correctness, straightness. 7. தைத்தல், a seam, the joining of cloth.

அத்துகமானி, அரசு, a tree, the Ficus religiosa.

அத்துகம், ஆமணக்கு, a tree from the kernels of which the castor oil is extracted—Ricinus.

அத்துச்சம், கிரகநிற்கு நல்லுச்சம், the most auspicious degree in the veritical sign, in which a planet may be placed.

அத்துமம், அரத்தை, a shrub whose root is medicinal and forms a drug—Galangea. (*M. Dic.*)

அத்துலாக்கி, கருஞ்சீரகம், a plant—Nigella sativa. (*M. Dic.*)

அத்துவம், சிவப்பு, redness. 2. வழி, way, road.

அத்துவாக்காயம், கருஞ்சீரகம், black cumin—Nigella sativa.

அத்துவாந்தம், காலைமாலை வெளிச்சம், twili ht.

அத்துவானம், பாழ்வெளி, a desert, a desolate place.

அத்துவிதம், } இரண்டன்மை,
அத்துவைதம், } unity, oneness, the existence of but one principle in tee universe.

அத்தூரம், மரமஞ்சள், a medicinal tree.

அத்தை, தலைவி, a lady, a woman of rank or eminence. 2. முன்னிலையசைச்சொல், a poetic expletive joined to the second person. 3. குருபத்தினி, the wife of a priest. 4. தாய், a mother, a matron. 5. தந்தை சகோதரி, a father's sister.

அத்தோ, அதிசயவிரக்கச்சொல், an exclamation of wonder, pity and distress.

அநகம், பாவமின்மை, sinlessness 2. மாசின்மை, purity, spotlessness.

அநகன், அருகன், Argha. 2. கடவுள், the Deity, the Supreme Being.

அநங்கம், இருவாட்சி, a flowering runner. 2. உடலின்மை, immateriality. 3. மல்லிகை, a running flower plant—Arabian jasmine.

அநங்கன், உடலிலான், a bodiless being. 2. கடவுள், the Deity as being without body. 3. மன்மதன், Kama, the Hindu Cupid.

அநந்தசயனன், விஷ்ணு, Vishnu.

அநந்தஞானி, கடவுள், the infinitely wise—God.

அநந்தம், அளவின்மை, immensity. 2. ஆகாயம், either pervading all-space; the first of the five elements and that into which, at the termination of things, all become resolved. 3. ஒரெண், a number—one hundred thousand quintillions. 4. பொன், gold. 5. கோளகபாஷாணம், one of the thirty-two kinds of arsenic.

அநந்தரம், மேல், next, after, &c.

அநந்தலோசனன், கடவுள், the all-seeing—God. 2. புத்தன், Buddha.

அநந்தவிரதம், ஓர் விரதம், a ceremony in honour of Vishnu.

அநந்தன், அருகன், Argha. 2. கடவுள், the Deity. 3. சிவன், 4. சேடன், the king of serpents. 5. திருமால், Vishnu. 6. பலபத்திரன், Balaram. 7. அட்டநாகத்

தொன்று, one of the eight serpents.

அநந்தை, பார்வதி, Parvati. 2. பூமி, the earth.

அநரவன், வெந்தோன்றி, a plant—Gloriosa.

அநருகம், தகுதியின்மை, unfitness.

அநர்த்தம், பயனிலாச் சொல், that which is without meaning, nonsense.

அநவரதம், எப்போழ்தும், always, continually, eternally.

அநாதரம், அவமதிப்பு, disrespect.

அநாதி, கடவுள், the Deity. 2. சிவன், Siva.

அநாமிகை, ஆழிவிரல், the ring-finger.

அநாயகம், அரசாட்சியின்மை, want of Government, anarchy, political distraction.

அநாரதம், எப்போழ்தும், duration, always.

அநாவிருட்டி, மழையின்மை, drought.

அநாவிலன், சுக்கிரன், the planet Venus. (இரே.)

அநிகம், see அநீகம்.

அநிக்கிரகம், கட்டுப்பாடின்மை, unrestrainedness, liberty.

அநிசம், நித்தியம், eternity, that which is eternal.

அநிட்டை, உறுதியின்மை, unsteadiness, unsteadfastness.

அநிதம், } அநித்தியம், transient-
அநியதம், } ness. (உரிச்.)

அநித்தம், அநித்தியம், that which is temporal, worldly illusion, transitoriness, time in opposition to eternity.

அநித்தியம், நிலையின்மை, transitoriness. 2. பொய், falsehood, lie.

அநிமாலினம், சாவு, death.

அநியமச்சிலேடை, (*in rhetoric.*) சிலேடையணியிலொன்று, ambiguous terms in verse employed in an indeterminate sense.

அநியமம், நியமமின்மை, the state of being undecided, unascertained, uncertain, undetermined.

அநியமவுவமை, உவமையணியிலொன்று, a figure in rhetoric.

அநியாயம், நியாயமின்மை, unreasonableness, injustice, a wrong action, illogicalness.

அநிருத்தன், மன்மதன் மகன், the son of Kama.

அநிர்தம், மாயை, unsubstantialness, delusion—as in the mirage.

அநில நாள், சோதி நாள், the fifteenth lunar asterism. 2. விசாக நாள், the sixteenth lunar asterism.

அநிலம், காற்று, air or wind. 2. பிறப்பு, birth.

அநிலன், ஓரவுணன், the name of a giant. 2. வாயு, god of the wind. 3. அட்டவசுக்களிலொருவன், the name of one of the Vasus.

அநீகம், ஓர் படையின்றொகை, a certain division of an army or force, one-tenth of an அக்குரோணி.

அநீதம், நீதியின்மை, injustice.

அநீதர், கீழ்மக்கள், the unjust, the base.

அநீதன், நீதியில்லான், an unjust man.

அநு, கதுப்பு, the jaw. 2. தொடர்ச்சி, following close, succeeding, together. 3. மோனை, alliteration in poetry. 4. சமம், like, equal to.

அநுகமனம், உடன்போதல், accompanying.

அநுகரணம், ஒன்றுபோற் செய்தல், imitation, doing a thing like another.

அநுகரணவோசை, ஒலிக்குறிப்பு, imitative sound.

அநுகூலம், காரியசித்தி, the accomplishment of an object, a happy issue, consummation, success, prosperity. 2. கிருபை, favour, auspices, kindness, propitiousness.

அநுகூலன், உபகாரி, patron benefactor, 2. (சுவைக்கொத்து) சிங்காரநாயகி நால்வரிலொருவன், a husband who does nothing in breach of his faith to his wife.

அநுகோர்த்தம், (*anat.*) பின்மூளை, cerebellum.

அநுக்கம், சந்தனம், sandal tree. 2. சோம்பு, lethargy, indolence. 3. பயம், fear. 4. பாம்பு, a snake. 5. வருத்தம், suffering, distress, pain, grief.

அநுக்கிரமம், ஒழுங்கு, order, regularity, train.

அநுசந்தானம், ஆராய்வு, search, inquiry, investigation, விடாயோகம், meditation, contemplation (on an image of the deity) in the mind.

அநுசன், அநுசாதன், } தம்பி, a younger brother.

அநுசிதம், தகுதியின்மை, unfitness, unsuitedness. 2. பொய், falsehood.

அநுதாத்தம், வேதசுரத்திலொன்று, the grave accent in chanting the Vedas.

அநுதாபம், மனத்தாபம், repentance.

அநுத்தம், பொய், falsehood, lie.

அநுநாதம், எதிரொலி, an echo.

அநுபபத்தி, அநுபபத்தியேது, } not supporting an assertion by good argument, inconclusive argumentation. 2. முடியாதுவிடல், non-completion, not effecting or accomplishing, failure.

அநுபமை, உவமையின்மை, incomparableness. 2. தென்மேற்றிசையானைக்குப் பெண் யானை, female of the elephant at the south-west point.

அநுபல்லவி, பதத்தின் முதற்சிற்றடி, the stanza immediately following the chorus in the species of verse called பதம்.

அநுபாகம், (*in anat.*) maxillary portion.

அநுமதி, சம்மதி, assent, approbation consent. 2. கட்டளை, order, command.

அநுமந்தன், ஆஞ்சனேயன் Hanuman.

அநுமரணம், உடன்கட்டையேறல், the voluntary death of a widow on the funeral pile with the deceased husband.

அநுமானம், ஓர் பிரமாணம், inference, illation—one of the logical modes of arriving at a conclusion, as from smoke to infer the presence of fire. 2. சந்தேகம், doubt, hesitancy, uncertainty, conjecture.

அநுராகம், ஆசை, attachment, fondness, faithful love of husband and wife.

அநுலாபம், கூறியதுகூறல், tautology, repetition.

அநுலோமன், உயர்குலத் தந்தைக்கு மிழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளை, the issue of a high caste father by a low caste mother.

அநுவழி, புதன், the planet Mercury.

அநூரு, சூரியன்றேர்ப்பாகன், the charioteer of the sun. 2. புதன், the planet Mercury. 3. முடவன், a cripple, a lame man.

அந்தகஜயன், சிவன், Siva who overcame the messenger of death.

அந்தகம், ஆமணக்கு, a shrub—Ricinus.

அந்தகன், அழிப்போன், destroyer. 2. குருடன், a blind person. 3. சனி, the planet Saturn. 4. நமன், Yama, the regent of the dead. 5. சவர்க்காரம், soap. 6. (*M. Dic.*) புல்லூரி, a parasitic plant—Loranthus pentandrus.

அந்தகாரம், இருள், darkness, gloom. 2. மனவிருள், mental darkness. 3. நரகம், hell.

அந்தகாரி, சிவன், the foe of Yama—Siva.

அந்தகோரம், நெல்லி, a tree—Phyllarnthus.

அந்தக்கரணம், உட்கருவி, the intelectual faculties, embracing. 1. மனம், the mind or organ of thought. 2. புத்தி, reason, the organ of consciousness or apprehension. 3. ஆங்காரம், energy, any one of the passions. 4. சித்தம், will, resolution, desire.

அந்தணர், பார்ப்பனர், Brahmins. 2. முனிவர், sages, recluses.

அந்தணன், கடவுள், the Supreme Being. 2. பார்ப்பான், a Brahmin.

அந்தணர்வாக்கு, வேதம், the Vedas.

அந்தணன், அருகன், Argha. 2. சனி, Saturn. 3. சிவன், Siva. 4. பிரமன், Brahma. 5. வியாழம், the planet Jupiter.

அந்தணாளர், பார்ப்பனர், Brahmins. 2. அரசர்க்குறுதிச் சுற்றத்திலொருவர், one of the five confidential servants of a king, a king's household priests. 3. முனிவர், recluses.

அந்தப்புரம், அரசன்றேவியிருக்கை, a place for kings' wives, the queen's apartments in a palace, zenana, seraglio, women's apartments.

அந்தம், அழகு, beauty, handsomeness, comeliness. 2. கடை, end, termination. 3. கஸ்தூரி, musk. 4. சாவு, death. 5. என்பினந்தம், (*in anat.*) extremity of a bone.

அந்தரகாமி, ஆகாயமார்க்கஞ் செல்லும் பரி, a horse which goes above the earth through the air.

அந்தரங்கம், ஏகாந்தம், loneliness, 2. மனம், the interior, the mind. 3. இரகசியம், privacy, secrecy, what is said in confidence.

அந்தர சைவம், ஓர் சைவம், one of the divisions of the Saiva religion.

அந்தரச்சிந்து, கற்பாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

அந்தர திசை, கிரகநிலை, a nine-fold subdivision of the period of a planet's influence on a person's life.

அந்தரத் தாமரை, ஆகாயத் தாமரை, a species of lotus, whose foots float in the water, not adhering to the soil.

அந்தரபவனி, ஆகாயகமனம், motion through the air. 2. மிகுவேகம், very great swiftness.

அந்தரமத்திமபுத்தி, difference between the mean and true daily motion of the sun or of a planet.

அந்தரம், அளவு, measure. 2. ஆகாயம், the sky, atmosphere. 3. இடை, intermediate space. 4. இருள், darkness. 5. கூட்டம், crowd. 6. தனிமை, singleness, loneliness, solitariness. 7. தீமை, disaster, mishap, dilemma. 8. தேவர்கோயில், temple. 9. பேதம், difference, dissension. 10. முடிவு, end, taken distributively—end of each. 11. சேடம், remainder after subtraction, difference.

அந்தரவல்லி, கொல்லன்கோவை, a a medicinal creeper.

அந்தரவசனம், கொடிப்பாசி, creeping moss upon water. (*M. Dic.*)

அந்தரவாசம், ஆகாயவாசம், dwelling in the air.

அந்தரவாயு, வீமபீசம், hydrocele.

அந்தராயம், தீமை, disaster, mishap, exigency, dilemma.

அந்தராளம், நடு, middle, intermediate space.

அந்தராளன், அநுலோமத் தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்த பிள்ளை, the son of an அநுலோம father and பிரதிலோம mother.

அந்தரி, துர்க்கை, Durga. 2. பார்வதி, Parvati. 3. ஆகாயவாணி, a goddess as inhabiting the aerial regions.

அந்தரித்தல், தனித்திருத்தல், being lonely, solitary, forlorn. 2. உதவியற்றிருத்தல், being helpless, friendless forsaken without means of subsistence, being in difficulty or extremity. 3. சேடங்காணல், finding the difference between two quantities.

அந்தரிந்திரியம், see அந்தக்கரணம்.

அந்தரியாகம், உட்பூசை, internal or mental worship, as opposed to பகிரியாகம்.

அந்தரியாமி, கடவுள், the indwelling, the Deity.

அந்தர், கீழ்மக்கள், low caste persons.

அந்தர்க்கதம், மறைதல், disappearing, becoming invisible.

அந்தர்த்தானம், மறைவிடம், a secret place. 2. அந்தரங்கத்தானம், the privy parts. 3. மறைகை, disappearance, concealment.

அந்தர்ப்புரம், see அந்தப்புரம்.

அந்தளம், கவசம், coat of mail.

அந்தளி, தேவர்கோயில், a temple.

அந்தன், குருடன், a blind man. 2. சனி, the planet Saturn.

அந்தாதி, ஓர் தொடை, a rhyme in which the last syllable, word or words of one stanza is the first of the succeeding. 2. ஓர் பிரபந்தம், a poem of அந்தாதி, verses. 3. கடவுள், the first of the last—God.

அந்தாளிபாடை, ஓர் பண், a kind of tune.

அந்தி, பொருந்தெனேவல், *imp.* unite, join, be connected. 2. மாலைக்காலம், evening, evening twilight as joining the day with the night. 3. முத்தெருக் கூடுமிடம், the meeting of three ways or the place where three ways meet.

அந்திகம், அயல், nearness, proximity.

அந்திகாவலன், ஓர் தேவதை, the guardian deity of the evening twilight supposed to walk the streets, &c.

அந்திகை, இரா, night. 2. பெண், a woman. 3. கண்ணோய், a disease of the eye. 4. அடுப்பு, a fireplace. 5. குருடு, blindness.

அந்தித்தல், பொருந்தல், uniting, joining.

அந்திமந்தாரம், அந்திமந்தாரை, } ஓர் பூஞ்செடி, a flower plant that blossoms in the after-noon.

அந்திமான், இடையெழு வள்ளலிலொருவன், one of the seven of the second class of liberal kings.

அந்தியகருமம், சாச்சடங்கு, funeral ceremonies.

அந்தியகாலம், சாயங்காலம், the time of death.

அந்தியபம், இரேவதி, the twenty-seventh or last of the lunar mansions.

அந்தியவருணம், சூத்திர ஜாதி, the fourth caste.

அந்தியேட்டி, மரணயாகம், funeral obsequies performed for the benefit of progenitors.

அந்திரக்கொடிச்சி, கந்தகம், sulphur.

அந்திரம், குடல், intestine.

அந்திரவசனம், கொட்டைப்பாக்கு, an entire arecanut dried without boiling.

அந்தில், அசைச்சொல், உ-ம். அந்திற் கச்சிளன் கழலினன், an expletive. 2. அவ்விடம், உ-ம். சேயிழையந் திற்கொழு நற்காணிய, a particle of place.

அந்திவண்ணன், சிவன், Siva.

அந்து, நெல்லந்து, a small insect found in stored grain.

அந்துகம், சங்கிலி, a ring or chain for the ankle. 2. யானைச்சங்கிலி, an elephant's chain fastened to the foot.

அந்தோ, அதிசயவிரக்கச்சொல், an exclamation of surprise, pity or distress, alas. 2. இரக்கச்சொல், an exclamation of pity.

அந்நியபுட்டம், குயில், the kuyil, an Indian bird.

அந்நியம், அயல், a strange or foreign thing. 2. குயில், the kuyil.

அந்நியர், பிறர், others, strangers, aliens, foreigners.

அப, ஒருபசர்க்கம், a particle prefixed to Sanskrit words, implying inferiority, privation, separation, contrariety, &c.

அபகரணம், அடாதசெயல், impropriety, ill-treatment, injury.

அபகாரம், தீமை, injury, offence, effrontery, insult, mischief, opposed to, உபகாரம். 2. நன்மைக்குத் தீமை செய்தல், ungrateful acts, ingratitude.

அபகீர்த்தி, நிந்தை, infamy, disgrace, dishonour, disrepute.

அபக்கியாதி, அவமானம், disrepute, disesteem.

அபக்கிரோசம், நிந்தனை, reviling, abusing.

அபக்குவம், பக்குவமின்மை, immatureness, unripeness.

அபங்கம், பங்கமின்மை, not having defect, perfectness. 2. கோளக பாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

அபசகுனம், துர்க்குறி, a bad omen.

அபசத்தம், வழுச்சொல், ungrammatical language. 2. வீண்சொல், vain talk. 3. அமங்கல மொழி, an inauspicious expression.

அபசயம், தோல்வி, defeat.

அபசரணம், புறப்பாடு, departure, egress.

அபசரிதம், அபசரிதை, } தீயொழுக்கம், improper-conduct. 2. துர்ச்சரித்திரம், history of bad transactions.

அபசவ்வியம், வலப்பக்கம், the right side.

அபசாரம், துன்னடை, wrong conduct, misbehaviour, nonconformity to the shastras. 2. உபசார மின்மை, incivility, disrespect, affront irreverence, impropriety.

அபச்சாயை, அவச்சாயை, } சாயையற்றது, a shadowless being, as a deity or celestial being.

அபட்கை, பாம்பினச்சுப்பற்களி ஞென்று, one of the lower poisonous fangs of a snake.

அபட்சம், விரோதம், opposition, dislike.

அபதூறு, பழிமொழி, ill-report, slander, scandal.

அபதேசம், தந்திரம், evasion, prevarication, disguise by dress, &c., pretence, contrivance.

அபத்தம், பொய், untruth, falsehood.

அபத்தி, பக்தியின்மை, impiety.

அபத்தியம், பத்தியத்தவறு, improper, unfit, unsuitable diet or regimen in medicine, deviation from prescribed diet. 2. இச்சா பத்தியம் மீறல், transgression of abstinence from venery, as a medicinal prescription.

அபநயனம், கடன் கழித்தல், removing, destroying or liquidating a debt.

அபநோதம், நீக்குதல், taking away, removing.

அபமம், கீழ்க்கதி, declination in Astronomy.

அபமிருத்து, துன்மரணம், sudden death, dying of some casualty, not of sickness or decay.

அபயகரம், அபயாஸ்தம், அபயாத்தம், } பயந்தீரவமைக்குங் கை, the right hand of a deity, idol or great person raised in token of dispelling fear and in assurance of protection.

அபயம், அச்சமின்மை, fearlessness, intrepidity. 2. அடைக்கலம், a place of refuge, shelter. 3. தயை, favour.

அபயர், படைவீரர், warriors, veterans.

அபயவாக்கு, அஞ்சாதேயெனுஞ் சொல், assurance of protection, encouragement.

அபயன், கடவுள், he who averts fear—the Supreme. 2. சூரன், a warrior, a hero. 3. சோழன், a king of the Chola dynasty.

அபரசன், தம்பி, a younger brother.

அபரஞானம், பொறிகளாலறியுமறிவு, limited and superficial knowledge, obtained by the senses, &c., and subject to interruption, oblivion, &c.

அபரநாதம், சிவன், தத்துவமைந்தி ஞென்று, one of the five powers or தத்துவம், belonging to Siva.

அபரபக்கம், அபரபட்சம், } தேய்பிறை, the moon in its decrease, the second fortnight of the moon.

அபரமுத்தி, பதமுத்தி, an inferior heaven.

அபரம், கவசம், coat of mail. 2. நரகம், hell. 3. பிணக்கு, variance, discord. 4. பின்பக்கம், the end,

after-part. 5. முதுகு, the back. 6. யானைப் பின் கால், the hind quarter or hind leg of an elephant. 7. மேற்கு, the west.

அபரராத்திரம், கடைச்சாமம், the last watch.

அபரவயசு, முதிர்வயசு, advanced age.

அபரவாக்கியம், பீஜகணிதத்திலும் வானசாஸ்திரத்திலும் வரும் ஒரு சங்கேதபதம், a resulting equation or correction following a calculation. 2. (*in Hindu Astronomy*) the equation of a given tabular number or argument answering to the preceding one.

அபரவிந்து, சிவன், தத்துவமைந்தி னொன்று, one of the five powers or தத்துவம் of Siva.

அபராசிதன், சிவன், the unsurpassed Siva. 2. Vishnu.

அபராணம், அந்திப்பொழுது, the after-noon, the fourth part of the day, or from twelve minutes past three.

அபராதம், தண்டித்தல், amercement, penalty, mulct. 2. குற்றம், offence, transgression, fault, guilt, insult, affront.

அபராதி, தோஷி, a guilty person, an offender.

அபரிச்சதம், நிருவாணம், nudity, nakedness.

அபரிமாணம், அளவின்மை, immeasurableness, immensity.

அபரிமிதம், அளவின்மை, immensity, unlimitedness. 2. பெருமை, greatness.

அபரிபந்தம், மட்டில்லாமை, immensity.

அபரூபம், அவலட்சணம், deformity, ugliness.

அபரோட்சஞானம், பிரம சைதன்னிய தரிசனம், consciousness or knowledge of identity with the deity.

அபரோட்சம், கடவுளுடைய தரிசனம் அல்லது சான்னித்தியம், union with the deity, a state of proximity to liberation from births and of absorption in the deity.

அபலம், பயனின்மை, unprofitableness, uselessness, unproductiveness, unfruitfulness. 2. பலவீனம், weakness, want of strength.

அபவருக்கம், முத்தி, final emancipation of the soul from all pursuits.

அபவாதம், பழிச்சொல், censure, abuse, reproach. 2. அவதூறு, defamation, slander, scandal. 3. மாறுகோள், contradiction, opposition. 4. பிரதிவாதம், (*in law*) defence, replication.

அபவாரணம், மறைவு, concealment, disappearance.

அபாகம், பாகமின்மை, immatureness, rawness, unripeness.

அபாகரணம், கடனிறுத்தல், liquidation of a debt.

அபாங்கம், கடைக்கண் பார்வை, a side glance. 2. கடைக்கண், the outer corner of the eye.

அபாசம், விருப்பின்மை, want of desire. 2. புரட்டு, distortion, perversion.

அபாஷணம், அபாடணம், } மௌனம், silence.

அபாண்டம், இடுநிந்தை, a false accusation or report.

அபாதானம், ஐந்தாம் வேற்றுமையின் எல்லைப் பொருள், the meaning of the fifth case denoting removal.

அபாத்திரம், பாத்திரமின்மை, unfitness, unworthiness.

அபாநன், தசவாயுவிலொன்று, wind from the anus.

அபாமார்க்கம், நாயுருவி, a plant, Achuranthes.

அபாரணை, உண்ணுமை, fasting, omitting a meal after a partial fast.

அபாரம், அளவின்மை, boundlessness, immensity. 2. பரம்பொருள், the boundless, the Supreme Being.

அபாவம், இன்மை, nonentity, nonexistence, absence of a quality or thing. 2. நியாய நூலினோரளவை, (in *Rhetoric* and *Logic*) negation, absence or distitution 3. நிரு மூலம், annihilation.

அபானம், குதம், the anus. 2. see அபாநன்.

அபிகாதம், அடித்தல், striking. 2. வருத்தம், pain, torture.

அபிகாயம், ஒரு காசம், a pulmonary complaint, phthisis.

அபிகாரம், கொள்ளையிடல், robbing. 2. தாக்கல், attack. 3. படையெடுத்தல், taking up arms.

அபிசரன், தோழன், a companion.

அபிசாரம், மந்திரவித்தை, magic for a malevolent purpose, practised with sacrificial fire, spells, diagrams, &c., supposed to produce mental aberration, love, hatred, loss of mental powers, paralysis and death.

அபிசாரி, அபிசாரிகை, } வேசி, a courtezan. 2. விபசாரி, an unchaste woman.

அபிசித்து, ஒரொட்டு நட்சத்திரம், an expunged nakshatra, sometimes introduced, after the 21st, for astrological purposes, thus increasing the number to 28. 2. ஒரு முகூர்த்தம், one of the eight muhurttas or hours.

அபிடங்கம், சாபம், a curse, oath.

அபிடேகம், திருமுழுக்கு, sacred or royal bathing or anointing, as an inaugurating ceremony, a guru, a king, &c., the daily bathing of an idol with Ganges water, oil, ghee, milk.

அபிட்டம், இரதம், quicksilver.

அபிதாநம், அபிதேயம், } பெயர், name, appellation.

அபிநயம், கைமெய்காட்டல், indication of passion, purpose, &c., by gesture in dramatic personification, acting, gesture. 2. அபிநயநூல், a treatise on gesticulation.

அபிநவம், புதுமை, novelty, an extraordinary or wonderful thing.

அபிநிவேசம், தொழிற்பிரவேசம், engagement in a particular business or department.

அபிப்பிராயம், உட்கருத்து, object, internal design, real purpose, intention or motive. 2. மறைபொருள், real or hidden meaning.

அபிமதம், சம்மதம், consent, pleasure, liking, wish, assent.

அபிமந்திரணம், மந்திரித்தல், conjuration, enchantment. 2. பிரதிஷ்டை, consecration.

அபிமன், அபிமன்னு, } அருச்சுனன் மைந்தன், son of Arjuna.

அபிமாநம், களிப்பு, glorying in. 2. சம்மானம், high esteem, splendid estimation. 3. உயர்குணம், the sense of honour which leads one to abstain from mean or unworthy actions, magnanimity nobility of soul.

அபிமுகம், முன்னிலை, presence, nearness.

அபியோகம், போருக்கழைக்கை, challenging to fight. 2. போர், war, battle. 3. தடை, prohibition, prevention.

அபிரங்கி, கருநெல்லி, the black species of நெல்லி.

அபிரட்சை, சர்வரட்சை, universal protection, benevolence.

அபிரதி, இன்பம், pleasure. 2. தொழில், practice, occupation.

அபிராமம், அழகு, beauty.

அபிராமி, சரசுவதி, the beautiful one—Saraswati.

அபிருசி, கீர்த்திப்பிரியம், ambition, desire or fame.

அபிரூபன், அறிவுடையோன், a learned man. 2. காமன், சிவன், விஷ்ணு, சந்திரன், இவர்கள் பெயர், name of Kama, Siva, Vishnu and the Moon.

அபிலாசம், விருப்பம், desire.

அபிவியத்தம், தெளிவு, clearness, distinctness. 2. வெளிப்படை, that which is revealed.

அபிவியாத்தி, சர்வவியாபகம், omnipresence.

அபிவிருத்தி, பெருக்கம், increase, augmentation, continued increase, growth, accession.

அபின்னம், ஒற்றுமை, sameness, identity, unity, homogeneousness, as of heat in the sun or in fire.

அபின்னசத்தி, மாயை, visible nature or maya as identified with the deity.

அபீடனம், சாந்தம், gentleness, kindness.

அபீஷ்டம், மிகுவிருப்பம், great desire, wish, love.

அபீரன், இடையன், a cowherd.

அபூதம், இன்மை, non-existence, absence.

அபூபம், அப்பவர்க்கம், cakes, pastry.

அபேதம், பேதமின்மை, union, concord, similarity.

அப்பட்டா, வட்டத்திருப்பி, a plant, Cissampelos.

அப்பம், அடை, cake or bread in general. *2.* சிற்றுண்டி, pastry, cake. *3.* பிட்டுத்திருப்பி, a plant.

அப்பர், திருநாவுக்கரசர், one of the three celebrated votaries of Siva, who composed a portion of the poem தேவாரம்.

அப்பல், சாந்து முதலியவணிதல், sticking or clapping on with the hand, as sand, paste, plaster &c., or with trowel, as mortar against a wall. *2.* மோதல், beating against with force, striking, smiting. *3.* வியங்கோள்முற்று, *opt.* may you clap, strike, beat, &c.

அப்பன், தகப்பன், father.

அப்பிரமேயம், ஓரெண், a number, a hundred quintillions. *2.* எல்லையின்மை, unboundedness, immeasurableness.

அப்பியங்கம், அப்பியங்கனம், } முழுக எண்ணெய் பூசுதல், anointing the head and body preparatory to bathing.

அப்பியஞ்சனம், எண்ணெய் பூசல், smearing the body with oil. *2.* மை தீட்டல், applying collyrium to the eyelashes.

அப்பியாகதன், அதிதி, visitor, guest.

அப்பிரகம், ஒருவகை லோகம், mica slate.

அப்பிரகாசம், இருள், absence of light, darkness.

அப்பிரதட்சிணம், இடசாரியாய்ச் சுற்றுதல், walking around an object of worship or a temple, keeping it on the left side.

அப்பிரதானி, சாமானியன், an insignificant or unimportant person.

அப்பிரமு, அப்பிரமை, } கீழ்த்திசை யானைக்குப் பெண் யானை, the female of the two elephants supporting the east.

அப்பிரம், மேகம், cloud.

அப்பிராகிருதசரீரம், மேலான சரீ superior or immortal body.

அப்பிராகிருதம், நூதனம், uncommonness, newness, superiority.

அப்பு, அப்பென்னுமேவல், *imp.* attach to a surface, as sandal paste, cement, &c. *2.* கடல், the sea. *3.* நீர், water. *4.* பாதிரிமரம், a tree, Bignonia.

அப்புது, யானையைப் பாகன் அதட்டு மோசை, the sound which its driver makes to urge on an elephant.

அப்புருத்தூணி, சரகாண்டபாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

அப்பை, அப்பைக்கொடி, a plant—Bryonia Rostatras. *2.* கொன்றை, a tree—Cassia.

அமங்கலம், மங்கலமின்மை, inauspiciousness.

அமங்கலி, அமங்கலை, } கைம்பெண், a widow.

அமச்சன், மந்திரி, a king's minister. *2.* வியாழம், the planet jupiter.

அமச்சியல், மந்திரித்தொழில், the office of a minister. *2.* மந்திராலோசனைச் சபை, a cabinet, council. *3.* குறளின் பொருட்பாலுள் ஓரியல், a section on the duties of a minister in Kural.

அமச்சு, மந்திரித்தொழில், the office of a minister. *2.* மந்திரி, a minister.

அமணம், இருபதினாயிரம் பாக்கு, twenty thousand betel-nuts.

அமணர், சமணர், the Jainas as a sect.

அமண், சமண் மதம், the Jaina religion.

அமண்டம், ஆமணக்கு, the castor plant.

அமதி, மதியின்மை, want of knowledge, ignorance.

அமரசயம், அமராசயம், } அசனாசயம், (in physiology) one of the recipient vessels of the body, the stomach.

அமரசிலைக்கந்தகம், ஒரு வகைக் கந்தகம், one of the thirty-two kinds of prepared arsenic.

அமர மாதர், தெய்வ மாதர், goddesses, female celestials.

அமரம், ஒரு நோய், a disease of the eye. 2. வடமொழியினோர் நிகண்டு, a Sanskrit vocabulary—the Amarakosha. 3. the revenue of a village granted by the king to any one. 4. ஆயிரம் காலாட் படையாட்சி, the command of one thousand foot men.

அமரர், பகைவர், foes, enemies. 2. வானோர், the immortals, celestials.

அமராபதி, கடவுள், God. 2. இந்திரன், Indra. 3. தேவலோகம், the world of the gods.

அமராபரணன், போர்ப்புண்ணை ஆபரணமாகக் கொண்டவன், an undaunted hero, one who considers his wounds received in close action as ornaments.

அமரார், பகைவர், foes, enemies, the insubordinate.

அமராவதி, தேவேந்திர நகரம், the capital of Indra.

அமராவதியோன், தேவேந்திரன், Indra.

அமரி, அமிழ்து, ambrosia or nectar. 2. துர்க்கை, the goddess Durga. 3. விடம், poison. 4. சிறுநீர், urine.

அமரியம், குருந்து, a tree—Trichilia. 2. செண்பகப்பூ, the flower of the Michelia.

அமரியுப்பு, சிறுநீரில் விளையுமுப்பு, urine salt, the salt taken from urine, one of the five kinds of உப்பு.

அமரேசன், இந்திரன், Indra.

அமர், அமரென்னேவல், *imp.* be still tranquil, calm. 2. போர், war, strife. 3. மதில், wall around a fort. 4. உக்கிரம், rage, fury, crisis of a disease, the violence or paroxysm of a fever, delirium.

அமர்க்களம், போர்க்களம், field of battle.

அமர்தல், பெருமை, greatness, magnanimity. 2. பொருந்தல், agreeing. 3. பொலிவு, abundance. 4. மிகுதி, profusion, excess. 5. இருத்தல், abiding, dwelling, remaining. 6. விரும்பல், desiring, wishing. 7. படிதல், becoming compressed, condensed.

அமர்த்தல், அமர்த்துதல், quieting, tranquillizing, pressing down, preparing, engaging. 2. பொருதல், fighting, engaging in battle.

அமலம், அழகு, beauty. 2. அழுக்கின்மை, spotlessness, immaculateness, purity.

அமலன், அருகன், Argha. 2. கடவுள், the pure one—the Supreme. 3. சிவன், Siva. 4. விஷ்ணு, Vishnu. 5. மலமிலி, a pure person.

அமலை, ஒலி, noise, din, sound. 2. சோறு, boiled rice. 3. பார்வதி, Parvati. 4. மிகுதி, abundance. 5. இலக்குமி, the goddess Lakshmi.

அமல், மிகுதி, abundance.

அமளி, மக்கட்படுக்கை, a bed. 2. மெத்தை, a mattress.

அமளை, ஒரு பூடு, a plant.

அமாத்தியர், தந்திரிகள், crafty, scheming dissemblers. 2. மந்திரிகள், ministers of state, counsellors.

அமார்க்கம், வேதப்புரட்டு, heresy, irreligion. 2. துன்மார்க்கம், viciousness.

அமாவசி, அமாவாசி, அமாவாசியை, } இரவிமதியோகம்,

conjunction of the sun and moon, the new moon.

அமானம், அளவின்மை, immensity, immeasurableness, countlessness.

அமிசம், பின்னம், part, portion, a fraction. 2. மேல்வாயிலக்கம், the numerator of a fraction.

அமிசு, சூரியன், the sun. 2. அணு, an atom. 3. ஒளி, light, ray of light, splendour.

அமிதம், அளவின்மை, immensity, boundlessness.

அமித்திரன், அமித்துரு, } பகைவன், foe, enemy.

அமிர்தகலை, சந்திரகலை, a phase of the moon.

அமிர்தகிரணன், சந்திரன், the moon.

அமிர்தசஞ்சீவினி, உயிர்தரு மருந்து, a medicament supposed to restore the slain to life.

அமிர்தபிந்து, உபநிடத முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two Upanishads.

அமிர்தம், அமுதம், ambrosia, nectar, milk, honey. 2. மூர்ச்சைதீர்த்துயிர்தரு மருந்து, a restorative cordial, a reviving medicine stimulant. 3. அழியாமை, immortality. 4. இனிமை, sweetness. 5. நீர், water. 6. மோட்சம், final emancipation.

அமிர்தவல்லி, see அமுதவல்லி.

அமிர்தன், கடவுள், the immortal—God.

அமிர்தாசனர், அமுதாசனர், } தேவர், the Gods.

அமிர்தை, அழிவின்மை, imperishableness, immortality.

அமிழ்தம், அமுதம், ambrosia, nectar, the elixir of life.

அமிழ்தல், ஆழ்தல், being immersed, submerged, plunged, sinking.

அமிழ்து, இனிமை, sweetness, any sweet thing. 2. அமுதம், ambrosia.

அமிழ்த்தல், ஆழ்த்தல், immersing, ingulfing, drowning.

அமுக்கல், அமுத்தல், pressing, crushing. 2. ஆழ்த்தல், immersing, plunging into.

அமுங்கல், அமுந்தல், being pressed, crushed, yielding to pressure.

அமுசம், சிறு செருப்படை, a medicinal plant with small leaves.

அமுசு, ஒட்டடை, soot.

அமுதகிரணன், சந்திரன், the nectar rayed—the moon.

அமுதங்கம், சதுரக்கள்ளி, a species of கள்ளி shrub, the prickly pear.

ஆசாரியன், உபாத்தியாயன், a master or teacher of science or general literature, preceptor, professor. 2. குரு, a spiritual teacher and guide. 3. துரோணாசாரியன், a name of Drona, the military preceptor of the Pandavas and Kurus.

ஆசாள், தலைவி, a lady married or unmarried. 2. குருவின் தேவி, a priest's wife.

ஆசானுபாகு, ஆசானுவாகு, } முழந்தாளளவு நீண்ட கையுடையோன், hands reaching to the knees, or the person having such hands,—deemed an excellence.

ஆசான், அருகன், Argha. 2. உபாத்தியாயன், a teacher of science or literature, a preceptor. 3. குமாரன், Skanda. 4. குரு, a guru, priest. 5. சுக்கிரன், Venus. 6. பாலையாழ்த்திறம், a division of tunes or musical mode. 7. மூத்தோன், a senior. 8. வியாழம், Jupiter.

ஆசி, வாழ்த்து, benediction, blessing.

ஆசிகூறல், ஆசீர்வதித்தல், blessing. 2. வாழ்த்தல், wishing prosperity, felicity to another.

ஆசிக்கல், காகச்சிலை, one of the one hundred and twenty kinds of ore.

ஆசிடை, கூட்டம், a company, 2. சீலை, cloth. 3. வாழ்த்து, blessing, auspicious wishes.

ஆசிடையிட்டெதுகை, ஆசெதுகை, } ஓரெதுகை, Is the consonance of the second and third letters in each line of a stanza, with this license, that one of the four consonants ய், ர், ல், ழ், inserted after the first letter of the first line, is omitted after the first letter of the second line, and *vice versa*.

ஆசிடைவெண்பா, ஆசிடையிட்ட வெண்பா, a வெண்பா of four lines in general, to the penultimate foot of the second line of which ஆசு is affixed.

ஆசிதையன், நாவிதன், barber.

ஆசியம், அவமதிச்சிரிப்பு, contemptuous laughter. 2. முகம், face.

ஆசிரமம், see ஆச்சிரமம், an anchorite's abode.

ஆசிரயம், புகலிடம், a place of refuge, an asylum.

ஆசிரியச்சீர், இயற்சீர், the kind of poetic foot peculiar to the ஆசிரியம், verse.

ஆசிரியப்பா, ஆசிரியம், } அகவல், a kind of verse of a peculiar metre, being the second of the பா class and giving name to three species of similar character.

ஆசிரியவசனம், மேற்கோள், aphorism quotations or textuary, proofs from other authors—one of the fourteen sub-divisions of விருத்தியுரை.

ஆசிரியன், உபாத்தியாயன், a teacher of science or literature. 2. குரு, a religious teacher, guru, priest, 3. நூலாசிரியன், the author of any scientific work.

ஆசினி, ஆகாயம், the sky, the visible heavens. 2. ஈரப்பலா, a species of jack tree. 3. மரவயிரம், the hard or solid part of trees. 4. மரவுரி, the bark of a tree which is used by hermits for clothing.

ஆசியம், கருஞ்சீரகம், a plant, the country fennell—Nigella sativa.

ஆசீர்வசனம், ஆசீர்வாதம், } ஆசிமொழி, blessing, benediction.

ஆசீவகப்பள்ளி, சமணமுனிவர் மடம், the convent of the priests of the Jaina sect.

ஆசீவகர், சமண்முனிவர், the priests, teachers and ascetics among the Jains.

ஆசு, அற்பம், a trifle anything small or mean. 2. ஒரு பாட்டு, an extemporaneous poem made by request, the theme. &c., being given. 3. கவசம், armour, coat of mail. 4. குற்றம், fault, defect, blemish, stain. 5. கைக்கவசம், a gauntlet, an iron glove used for defence. 6. சீக்கிரம், rapidity, quickness, swiftness. 7. சமிசை, subject given for an extemporaneous poem. 8. ஒரு பாஷாணம், a kind of arsenic.

ஆசுகம், அம்பு, an arrow. 2. காற்று, wind. 3. பறவை, a bird in general.

ஆசுகன், காற்று, wind. 2. வாயு தேவன், God of the wind.

ஆசுகி, பறவைப் பொது, a bird in general.

ஆசுரம், எண்வகை மணத்திலொன்று, one of the eight kinds of marriage.

ஆசுரவைத்தியம், இரணவைத்தியம், surgery as one of the modes of healing.

ஆசுவயம், விரைவு, speed haste.

ஆசுவலாயநம், உபநிஷத முப்பத்திரண்டிலொன்று, one of the thirty-two உபநிஷதம்.

ஆசுவினம், ஆசுவீசு, ஐப்பசி மாதம், the month of October or Aswin.

ஆசூசம், சூதகம், uncleanness ceremonial impurity.

ஆசை, திசை, a quarter, region, any of the eight points of the compass. 2. பொன், gold, treasure. 3. விருப்பம், desire, attachment, strong inclination.

ஆசையறுத்தல், விருப்பொழித்தல், extinguishing the desires or passions—one of the four good qualities.

ஆசௌசம், see ஆசூசம்.

ஆச்சந்திரகாலம், சந்திரனுள்ளளவும், as long as the moon exists.

ஆச்சந்திரார்க்கம், சந்திரனும் சூரியனும் உள்ளளவும், as long as the moon and sun endure.

ஆச்சா, ஒரு மரம், a kind of timber tree, ebony—Diospyros ebenaster.

ஆச்சியசுத்தி, கிருதசுத்தி, purification with ghee in a puja.

ஆச்சியம், நெய், ghee clarified butter.

ஆச்சிரமம், முனிவரிருப்பிடம், hermitage, the residence of an ascetic. 2. நிலை; religious condition as prescribed especially for the Brahmans, including four degrees or orders, viz., 1. பிரமசாரியாச்சிரமம், the state or condition of a bachelor who, from the time of his investment with the sacred cord is required to tend the sacred fires and to follow his studies under or in the presence of his preceptor. 2. கிருகஸ்தாச்சிரமம், the state of a house-holder, who, from his marriage must strictly observe his religious duties, maintain the sacred fires, and liberally practise hospitality for the support of the other three orders. 3. வானப்பிரஸ்தாச்சிரமம், the state of an anchorite or recluse who, with or without his wife, relinquishes domestic life, retires to the desert feeding on leaves, roots and fruits, or on the hospitality of the second order and continues to perform his daily rites. 4. சன்னியாசி யாச்சிரம், the state of a religious mendicant who performs no rite whatever and lives only on alms, some-times appearing in a state of nudity. The fourth order embraces four distinctions, and each of the others two.

ஆச்சிரயம், பாதுகாப்பு, support, protection, defence.

ஆஞ்சனேயன், அனுமான், Hanuman.

ஆஞ்சி, அலையல், motion, vibration. 2. ஏலம், cardamom. 3. கூத்து, dancing, play. 4. சோம்பல், idleness, laziness.

ஆஞ்சில், சங்கு, a shrub—Monetia tetracantha.

ஆஞ்ஞை, ஆணை, an order, command. 2. ஆறு ஆதாரத்தொன்று, one of

the six ஆதாரம், that is situated in the fore-head.

ஆடகத்தி, குங்கும பாஷாணம், one of the thirty-two kinds of prepared arsenic.

ஆடகம், துவரை, a species of grain or lentil—Cystisus. 2. பொன், gold. 3. ஒருவகைப் பொன், one of the four kinds of gold, regarded as of a greenish hue and likened to the wings of a parrot.

ஆடகி, துவரை, a species of grain or lentil—Cystisus.

ஆடகூடம், செம்புமலை, a mountain containing brass.

ஆடல், அசைதல், moving, waving, shaking, vibrating, singing. 2. குளித்தல், bathing, washing, playing in water. 3. கூத்தாடல், dancing, sporting, gesticulation. 4. செய்தல், doing, acting. 5. சொல்லுதல், speaking, 6. நயச் சொல், a friendly word or conversation. 7. புணர்தல், coition. 8. பொருதல், fighting. 9. விளையாடல், playing.

ஆடவர், ஆண்மக்கள், male persons. 2. இளையோர், young persons. 3. புருடர், men between the ages of thirty-two and forty-eight.

ஆடவள், பெண், a woman in the prime of life.

ஆடவை. மிதுனவிராசி, the third of the twelve signs of the Zodiac.

ஆடாதோடை, ஒரு செடி, a medicinal shrub. 2. மலையாளத்திலுள்ள ஒரு கொட்டை, Malabar nut, Adhatoda vasica.

ஆடி, உத்தராட நாள், the twenty-first lunar asterism. 2. ஒரு மாதம், the month of July. 3. கண்ணாடி, mirror.

ஆடு, ஆடலைச்செய்யெனேவல், *imp.* move, bathe, dance, do, speak, copulate, fight, play. 2. ஆடு, a goat, sheep. 3. மேடவிராசி, the sign of Aries of the Zodiac. 4. வெற்றி, victory, success.

ஆடுதின்னாபாளை, புழுக்கொல்லி, a plant (lit.) that which the goat will not eat—Aristolochia bracteala.

ஆடூஉ, ஆண்மகன், man, a male of the human species.

ஆடூஉவறிசொல், ஆண்பாற்கிளவி, words of the masculine gender.

ஆடை, சித்திரை நாள், the fourteenth lunar asterism. 2. சீலை, cloth, clothing, garment, dress.

ஆடையொட்டி, பேய்ப்புல், an amaranth—Desmocaeta atropurpurea.

ஆட்சி, ஆண்மை, government, domination, rule, reign. 2. உரிமை, possession, heritage, inheritance, title.

ஆட்சேபசமாதானம், சங்கைக்குத்தரம், the rejoinder to an objection.

ஆட்சேபம், ஓரலங்காரம், a figure in rhetoric. 2. சங்கை, objection, adverse argument. 3. நிராகரணம், confutation, refutation of an argument.

ஆட்டம், அசைவு, motion, vacillation, vibration, rocking, swinging, rolling or pitching. 2. தன்மை, likeness, the assumption of a character.

ஆட்டல், அசைத்தல், moving, rocking.

ஆட்டி, தலைவி, a lady, woman of rank. 2. பெண், a woman in general.

ஆட்டுக்கல், பாஷாணத்தொன்று, the bezoar of the sheep.

ஆட்டுக்கால், அடம்பு, a creeper.

ஆட்டுக்காற்கல், கொக்கைக்கல், coral stone.

ஆணம், அன்பு, love, friendship, affection. 2. குழம்பு, soup or a thick consistent liquid curry, porridge. 3. கொள்கலம், a vessel.

ஆணர், நன்மை, goodness. 2. பாணர், singers, panegyrists. 3. வளமை, fruitfulness, prosperity.

ஆணி, ஆணி, nail, pike, pin, peg. 2. எழுத்தாணி, style for writing.

ஆணிச்செருக்கம், இலவண பாஷாணம், one of the thirty-two kinds of prepared arsenic.

ஆணு, இனிமை, sweetness, deliciousness. 2. நன்மை, goodness, benefit.

ஆணை, அடையாளம், the sign or insignia of royalty—as the sceptre, national colours, the seal, the stamp, a badge of office, the impress on the coin, &c. 2. ஏவல், a command, mandate, jurisdiction, order, injunction. 3. சத்தியம், oath, as in a court of justice, &c. 4. தடுத்தல், conjuration, abjuration, obstructing a procedure by oath. 5. மெய், truth, 6. வெற்றி, conquest, victory. 7. சான்றோர் கட்டளை, rules, injunctions, usages, &c., established by the learned of old.

ஆணைவழி நிற்றல், வேளாண்மாந்தரியல்பு ளொன்று, subjection to the king—one of the ten good qualities or virtues of the liberal.

ஆண், ஆண்மகன், the male of human species, man. 2. ஆண் விலங்கு, the male of inferior animals. 3. தலைமை, superiority, eminence, manliness.

ஆண்டகை, இராஜா, a king. 2. சிறந்தோன், a manly person.

ஆண்டகைமை, வீரம், manliness, fortitude, inherent bravery.

ஆண்டலை, கோழி, the gallinaceous fowl, cock or hen.

ஆண்டலைக் கொடியோன், குமரன், Skanda.

ஆண்டளப்போன், வியாழம், he who passes through the sign of the Zodiac every year—Jupiter the planet.

ஆண்டு, அவ்விடம், that place. 2. வருடம், a year.

ஆண்டையர், மனிதர், men, mankind, the human race.

ஆண்டொழின்மைந்தன், அருச்சுனன், Arjuna.

ஆண்பால், புல்லிங்கம், the masculine gender, male sex. 2. ஆண்டன்மை, masculine qualities.

ஆண்மகன், சிறந்தோன், an eminent man. 2. மனிதன், a man. 3. கணவன், a husband. 4. மகன், son.

ஆண்மரம், அகவயிரமுள்ளமரம், the class of trees whose interior is hard, solid and suitable for timber. 2. சேமரம், a medicinal tree whose root, bark, fruit, leaves, flowers, &c., are antidote against poison—Alangium decapitalum.

ஆண்மை, மனவூக்கம், energy, intrepidity, fortitude, courage, manhood. 2. மெய், truth, certainty. 3. வலி, strength, vigour, virility.

ஆதங்கம், ஆபத்து, mishap, calamity, affliction, distress. 2. பறையின் ஓசை, sound of a drum.

ஆதன், நோய், disease, sickness. 2. வருத்தம், pain, suffering.

ஆதபத்திரம், வெண்குடை, a white umbrella—one of the insignia of royalty. 2. குடை, a large umberella of silk or leaves used in the east.

ஆதபம், ஆதவம், } ஒளி, light, lustre. 2. குடை, an umbrella. 3. வெயில், sunshine.

ஆதபன், ஆதவன், } சூரியன், the sun. 2. பார்ப்பான், a Brahman.

ஆதம், ஆதரவு, protection. 2. கூந்தற் பனை, jaggery tree, a palm.

ஆதம்பேதி, நெருப்புநெருஞ்சில், a plant—Indigofera enneaphylla.

ஆதரம், ஆசை, love, desire. 2. ஊர், town. 3. சிலம்பு, ankle-rings. 4. கேள்பு, freight.

ஆதரிசம், கண்ணாடி, a mirror. 2. உரை, a commentary. 3. கையெழுத்துப் பிரதிமூலம், original manuscript.

ஆதரிசனம், கண்ணாடி, a mirror, a looking glass.

ஆதர், குருடர், the blind. 2. அறிவிலார், the ignorant.

ஆதல், ஆகுதல், becoming, happening, coming into existence, being fit. 2. கல்விநூல், science. 3. கூத்து, dance. 4. தெரிதல், vision. 5. நுணுக்கம், minuteness.

ஆதளை, எலியாமணக்கு, a species of the ஆமணக்கு, tree—Patropha glauca, Glaucous leaved physic-nut.

ஆதனமூர்த்தி, அலங்கார ஆசனம், an image as the seat of a deity, *2.* லிங்கம், the linga or phallic emblem of Siva.

ஆதனம், ஆசனம், seat or throne. *2.* சீலை, cloth. *3.* நீளுதல், (*in Anat.*) diastole.

ஆதன், அருகன், Argha. *2.* அறிவிலான், an ignorant person. *3.* உயிர், life soul. *4.* குரு, a guru, priest.

ஆதாரசிலை, அடிக்கல், the base of fundamental stone of pillar, pedestal, &c.

ஆதாரம், உடல், the human body. *2.* நிலை, support, stay; basis, pedestal, foundation. *3.* மழை, rain. *4.* ஆறுதாரம், a region of the body. In Indian physiology, six regions are given: viz., *1.* மூலாதாரம், situated between the anus, குதம், and the genitals, குய்யம். *2.* சுவாதிட்டானம், situated in the genitals, இலிங்கபீடம். *3.* மணிபூரகம், in the navel, உந்திக்கமலம், *4.* அனுகதம், in the heart, இருதயகமலம். *5.* விசுத்தி, in the root of the tongue, அடிநா. *6.* ஆஞ்ஞை, or ஆக்கினை, in the fore-head, புருவமத்தியம்.

ஆதி, அயன், Brahma. *2.* அரன், Siva. *3.* அரி, Vishnu. *4.* அருகன், Argha. *5.* இறைவன், a supreme ruler, an independent sovereign. *6.* எப்பொருட்குமிறைவன், the Supreme Being. *7.* கடவுள், God. *8.* சிவன், Siva. *9.* சூரியன், the sun. *10.* நேரோடல், running in a direct course. *11.* பழமை, antiquity. *12.* புத்தன், Buddha. *13.* மண்டலமாயோடல், a circular, course. *14.* முதல், source, cause, beginning. *15.* ஆதிதாளம், a mode of time or measure in music. *16.* காய்ச்சற்பாஷாணம், a kind of prepared arsenic.

ஆதிகம், சிறுகுறிஞ்சா, creeper—Gymnema sylvestris.

ஆதிக்கடுஞ்சாரி, நவச்சாரம், solder, a metalic cement said to consist of nine salts.

ஆதிக்கம், முதன்மை, superiority, priority, dignity of office, power or trust. *2.* உரிமை, right to possession.

ஆதிக்கல் நாதம், } ஆதிக்கல் பேதம், } அன்னபேதி, a drug's green vitriol, sulphate of iron.

ஆதிக்கன், மேன்மகன், a person of dignity in high office, &c., a superior. *2.* உரியோன், an heir.

ஆதிக்குடி, சவர்க்காரம், soap.

ஆதிக்குரு, பூநீறு, earth impregnated with soda.

ஆதிசாரம், சிற்பநூல் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two kinds of architecture.

ஆதிசேடன், அனந்தன், a fabulous serpent supposed to support the earth on his head—king of the serpents. He is said to have existed prior to the creation of the world and to continue to exist after its destruction.

ஆதிச்சனி, மகநாள், the tenth lunar mansion.

ஆதிட்டம், உண்டசேடம், fragments or leavings of meal.

ஆதித்தநோக்கு, ஆதித்தன்பார்வை, heliocentric aspect.

ஆதித்தபுடம், அருக்கபுடம், the longitude of the sun.

ஆதித்தபுத்தி, அருக்கபுத்தி, the daily motion of the sun.

ஆதித்தமண்டலம், சூரியமண்டலம், the solar system. *2.* உடலிலோர் ஸ்தானம், the region of the stomach or heart of human bodies.

ஆதித்தமத்திமபுத்தி, நிமிஷங்களாலறியும் சூரியகதியின் சராசரி, the mean daily motion of the sun given in minutes.

ஆதித்தர், வானோர், celestials.

ஆதித்தன், சூரியன், the sun.

ஆதித்தன்கூர்மை, இலவணபாஷாணம், one of the thirty-two kinds of arsenic.

ஆதித்தியம், உபசாரம், attention to a guest, hospitality.

ஆதிநாதர், நவசித்தரிலொருவர், one of the nine siddhas.

ஆதிநாராயணன், விஷ்ணு, Vishnu. 2. வச்சிரக்கல், the diamond.

ஆதிநூல், வேதம், the Vedas, the sacred writings. 2. முதனூல், a rule of the highest authority.

ஆதிபத்தியம், அதிகாரம், majesty, royalty, sovereignty. 2. சுதந்தரம், right to possession.

ஆதிபகவன், கடவுள், God.

ஆதிபரன், சிருஷ்டிகர்த்தா, the primeval God—the Supreme Being as the cause of all things.

ஆதிபலம், ஜாதிக்காய், nut-meg.

ஆதிமகாகுரு, துரிசு, blue vitriol.

ஆதிமகாநாதம், உலோகமணல், iron-sand.

ஆதிபன், ராஜா, an emperor, a sovereign. 2. எப்பொருட்குமிறைவன், a master, chief, lord.

ஆதிபுங்கவன், ஆதியங்கடவுள், } அருகன், Argha கடவுள், the Deity.

ஆதிமடக்கு, பாவில் முதற்சொல் திரும்பிவருதல், repetition of a word at the beginning of a line.

ஆதிமூர்த்தி, ஆதியங்கடவுள், } கடவுள், the deity as the source of all.

ஆதியதிவஞ்சம், one of the six divisions of swerga or போகபூமி.

ஆதியந்தகாலம், ஆதியந்தகாலநாடி, } கிரகணம் பிடித்து விடுவதற்குச் செல்லுகிற காலம் முழுமையும், the full duration of an eclipse expressed in nalikai, vinadikai, &c.

ஆதியந்தபாதிச்சா, சீக்கிர உச்சம், tabular correction for the parallax of the orbit of the planets from the first of Capricorns to six signs.

ஆதியோடிடைமடக்கு, முதலுமிடையுமடக்கு, the repetition of a word in the beginning and middle of a line with different meanings.

ஆதியோடு கடைமடக்கு, முதலுங் கடையுமடக்கு, the repetition of a word in the beginning and end of a line.

ஆதிரம், நெய், melted butter.

ஆதிரவிச்சிலை, செங்கழுநீர்க்கல், riddle.

ஆதிரன், பெரியோன், a great personage.

ஆதிரை, திருவாதிரை, the sixth lunar mansion.

ஆதிவருணர், பார்ப்பார், the first caste—Brahmans.

ஆதிவிந்து, ஒரு பாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

ஆதிவராகன், விஷ்ணு, Vishnu.

ஆதிவிராகன், சோரபாஷாணம், one of the thirty-two kinds of prepared arsenic.

ஆதிவிராட்டியன், சோரபாஷாணமும், சூதபாஷாணமும், a name of two of the thirty-two kinds of prepared arsenic.

ஆது, ஆறனொருமையுருபு, a form of the sixth or possessive case singular. 2. யானையைப் பாகன் அதட்டுமோசை, the sound made for driving elephant onward.

ஆதுரம், பேராசை, strong desire.

ஆதுரன், ஆசையுற்றோன், an avaricious or covetous man, a miser. 2. நோயுற்றோன், a diseased person.

ஆதுவன், தரித்திரன், a poor person.

ஆதுலம், கள், toddy.

ஆதேசம், எழுத்துத்திரிபு, (*in grammar*) transmutation or change of letters.

ஆதேயம், சுமக்கப்பட்டது, a thing upheld, supported, &c.

ஆதொண்டை, ஒரு கொடி, a creeper —Capparis horrida.

ஆதோரணர், யானைப்பாகர், elephant-riders, drivers, &c.

ஆத்தன், அருகன், Argha. 2. சங்காத்தி, a friend, companion, an associate. 3. முதல்வன், a great

person, a superior. 4. கடவுள், the Divine Being.

ஆத்தா, அணிநுணா, the custard-apple tree—Anona squamosa.

ஆத்தாள், தாய், a mother. 2. பார்வதி, Parvati—as mother of the world.

ஆத்தானம், கோபுரவாயில், the gate of a tower—being the place of audience. 2. தருமசபை, a senate house, court of justice. 3. இராஜசபை, an assembly of state, the royal auditory, the senate.

ஆத்தி, ஒரு மரம், a tree—Bauhinia racemosa.

ஆத்திசூடி, சிவன், Siva so called as wearing a garland of flowers from the ஆத்தி, tree. 2. ஒரு நூல், a book composed by ஔவை, so called from its beginning with this word.

ஆத்திரகம், இஞ்சி, undried ginger.

ஆத்துமகுப்தர், பூனைக்காலி, a plant —Mucuna prurita.

ஆத்துமசன், புதல்வன், a son.

ஆத்துமசுத்தி, ஆன்மசுத்தி, purity of the soul, freedom from sin, spiritual purity.

ஆத்துமஞானம், } ஆத்துமபோதம், } ஆன்மாவையுணர்தல், individual consciousness. 2. ஆத்துமாவையோகத்தால்அறிதல் spiritual knowledge, instruction.

ஆத்துமதத்துவம், அகக்கருவி, faculties of the soul.

ஆத்துமதரிசனம், ஆத்தும நிலையறிதல், the soul's perception, spiritual; illumination, a consciousness that the deity is the operator in the actions of the soul.

ஆத்துமநிவேதனம், பரசமர்ப்பணம், dedication of the soul, self-dedication.

ஆத்துமயோனி, காமன், Kama. 2. பிரமன், Brahma. 3. சிவன், Siva. 4. விஷ்ணு, Vishnu.

ஆத்துமம், } ஆத்துமா, } ஜீவாத்துமா, the soul, life. 2. பிராணி, a living creature, an animate or sentient being.

ஆத்துமார்த்தம், தன்னிமித்தம் செய்வது, anything done for the sake of one's self. 2. ஆத்மலாபத்திற்குரியது, anything done for the benefit of the soul.

ஆநகம், தம்பட்டம், a small drum. 2. துந்துமி, a large kettle-drum. 3. தேவதரு, a sacred tree growing in Swerga, the Kalpaka tree. 4. மேளம், a double drum, or two drums put together to be beaten at once.

ஆநநம், முகம், face.

ஆநந்தபைரவி, ஓரிராகம், the name of one of the thirty-two tunes.

ஆநந்தம், பேரின்பம், great joy, bliss, supreme delight, happiness.

ஆநந்தன், அருகன், Argha. 2. கடவுள், the Supreme Being. 3. சிவன், Siva.

ஆநாயம், வலை, a net. 2. வாயுவாசயம், (*anatomy*) air-cells.

ஆநாயகலை, இது ஒரு தசைநார், cellular tissue.

ஆநி, உத்தராட நாள், the twenty-first lunar mansion. 2. ஒரு மாதம், the month of June. 3. கேடு, destruction, loss, decay, ruin. 4. கேட்டை நாள், the eighteenth nakshatra. 5. பொருநை நதி the name of a river in the Madura district, which overflows in the month of June. 6. மூலநாள், the nineteenth lunar mansion. 7. வெட்டுக்குருத்து, a tender leaf of the palm cut off.

ஆநியம், நாள், a day of twenty-four hours. 2. பருவம், season. 3. பொழுது, time. 4. மூலநாள், the nineteenth lunar mansion.

ஆந்திரம், ஒரு தேசம், one of the five Dravidian countries. 2. ஒரு பாஷை, the Telugu language.

ஆந்திரிகம், குடர், viscera.

ஆந்திரி கவிலக்கணம், குடரியற்கை நூல், splanchnology, or visceral science.

ஆந்தை, ஒரு புள், an owl with large eyes.

ஆந்தை காதல், ஆந்தை கூவொலி, the screeching of owls. 2. ஆந்தை நூல், augury by the screech of the owl.

ஆந்தோளி, ஓரிராகம், a tune.

ஆபகம், ஆபகை, } உறு, a river.

ஆபச்சைவன், அஷ்டவசுக்களிலொருவன், one of the eight demi-gods.

ஆபணம், கடை, a bazaar, market, a warehouse.

ஆபணியம், ஆபணீயம், } கடைவீதி, a market, anything belonging to a bazaar. 2. கடைச்சரக்கு, ware for sale in a bazaar.

ஆபதம், ஆபத்து, calamity, straits, extremity, exigency.

ஆபதோத்தாரணன், வைரவன், one who disperses calamity—Bhairava.

ஆபற்சன்னியாசம், இறக்கும்பொழுது, பெறுந்துறவு, taking the degree of ascetic when at the point of death, as Brahmans, &c.

ஆபத்தம்பசூத்திரம், ஆபஸ்தம்பரிபற்றிய சூத்திரம், the rule, order or statutes which a certain class of Brahmans follow, observe and recite.

ஆபத்தம்பம், ஒரு தருமநூல், one of the eighteen treatises on law.

ஆபரணம், அணிகலம், ornament, decoration, as jewels, &c. 2. சீலை, clothes, garments.

ஆபாசம், கேடு, disorder, damage, injury, ruin. 2. போலிநியாயம் (*in logic*) semblance of a reason, fallacy, erroneous argument.

ஆபாடம், பாயிரம், introduction, preface, poem, prologue.

ஆபாதசூடம், ஆபாதமத்தகம், } உச்சி தொடங்கி உள்ளங்கால் வரையும், from foot to head, all, the whole.

ஆபானம், மதுக்கடை, a tavern, a liquor shop.

ஆபிரம், இடையர் சேரி, a village of herdsmen.

ஆபீனம், சிற்பர் வீதி, a street of sculptors. 2. பசுவின்மடி, the udder of a cow

ஆபோசனம், விழுங்குகை, swallowing up, drinking from the palm of the hand, as Agastiar is said to have swallowed the sea.

ஆப்பென்பு, தேகத்தில் ஒரு எலும்பு, (*Anat.*) the cuneiform bone.

ஆமகணம், சீதக்கட்டு, diarrhoea.

ஆமசன்னி, குழந்தைகளுக்குக் காணும் ஒருவித மயக்கம், a fit of apoplexy in children, caused by ஆமசுரம்.

ஆமசிராத்தம், பச்சைபடிச்சிராத்தம், raw or undressed articles of food, presented to the officiating Brahman, at the annual ceremony, for the dead.

ஆமசுரம், ஒரு சுரம், a certain fever in children.

ஆமசூலை, ஒரு வகைச் சூலை, one of the சூலை, an arthritic disease.

ஆமயம், நோய், disease, sickness.

ஆமரி, வசனம், a word.

ஆமலகம், நெல்லிமரம், a kind of tree—Phyllanthus emblica. 2. பளிங்கு, crystal.

ஆமா, காட்டுமாடு, the wild ox or cow, the gayal or bosgrunniens, whose lick is supposed to cause death.

ஆமாகொளர், கடுக்காய்ப்பூ, the flower of the gall nut—Terminalia chebula.

ஆமாசயம், இரைப்பை, (*inphysiology*) the stomach—as the receptacle of food taken.

ஆமாத்தியர், தந்திரிகள், king's ministers, councillors. 2. வைத்தியர், physicians, doctors.

ஆமாறு, ஆகுமுறை, the proper manner of doing a thing.

ஆமிரம், மாமரம், the mango tree. புளிப்பு, sourness.

ஆமிலம், ஆமிலிகை, } புளிப்பு, acidity, sourness, புளியமரம், the tamarind tree.

ஆமுகம், ஆரம்பம், prologue, poem, prelude, commencement.

ஆமை, கூர்மம், a turtle, tortoise—Testudo gracca. 2. ஒரு நோய், a kind of disease.

ஆமையாழ், செவ்வழியாழ்த்திறம், a kind of lute.

ஆமோதம், மகிழ்ச்சி, joy, pleasure. 2. மிகுவாசனை, fragrancy, perfume, a good smell.

ஆம், வினைச்சொல், a contraction of ஆகும், as third person future tense of ஆ. It will become. 2. அசைச்சொல், an expletive. 3. சம்மதக்குறி, a particle of assent, yes. 4. உவம உருபு, a particle of comparison. 5. ஈரம், moisture, humidity. 6. நீர், water. 7. தன்மைப்பன்மை விகுதி, a termination of the first person plural, in verbs of both classes. 8. உளப்பாட்டுத் தன்மைப்பன்மை விகுதி, a termination of the plural of verbs embracing the first and second person.

ஆம்பல், அடைவு, manner, fitness, order, propriety, succession. 2. அல்லி, the water-lily—Nymphaea. 3. இசைக்குழல், a species of wind instrument, a pipe of reed or bamboo. 4. ஊதிடு கொம்பு, a hunter's horn. 5. ஒரெண், a number. 6. கள், toddy. 7. சந்திரன், the moon. 8. பண், tunes played on the reed-pipe. 9. மூங்கில், the bamboo. 10. யானை, an elephant. 11. துன்பம், affliction. 12. துதி, praise.

ஆம்பி, ஒலி, sound. 2. காளான், a mushroom. 3. இறைகூடை, a basket for irrigation.

ஆம்பியம், இரதம், mercury.

ஆம்பிரம், புளிப்பு, sourness, acidity. 2. புளிமா, a sour species of mango trees. 3. மாமரம், the common mango tree.

ஆம்பிலம், கள், toddy. 2. புளிப்பு, sourness, acidity. 3. புளியமரம், the tamarind tree.

ஆம்பு, காஞ்சொறி, a plant—Tragia involucrata.

ஆம்புலம், ஆம்பூறு, } சூரை, a thorny shrub —Zizyphus glabrata.

ஆயக்கசுரம், முறைக்காய்ச்சல், a kind of fever.

ஆயக்கல், காரக்கல், a kind of caustic stone or mineral.

ஆயதம், நீளம், length, extension, an oblong figure.

ஆயத்தம், யத்தனம், preparation, readiness, promptness.

ஆயத்துக்கருத்தன், அஞ்சனபாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

ஆயமானம், உயிர்நிலை, the vital parts. 2. இரகசியம், a secret.

ஆயமுற்றரவலன், குபேரன், Kuvera.

ஆயம், ஆதாயம், gain, profit, income, revenue. 2. சுங்கம், duty, custom, toll. 3. சூதாடுங்கருவி, dice. 4. தாய், mother. 5. தோழி, female attendant on a lady. 6. நாணி, bow-string. 7. நீளம், length, extension. 8. மகளிர் கூட்டம், an assembly of women. 9. மல்லரி, a kind of drum. 10. சூதாடுந்தாயம், a cast of dice in a game.

ஆயர், இடையர், shepherds, cowherds cowkeepers.

ஆயர்பாடி, ஆய்ப்பாடி, } இடையர்சேரி, a village of shepherds. 2. ஓரூர், the name of the town where Vishnu in his Krishna avatar was concealed and grew to manhood.

ஆயனம், வருடம், a year.

ஆயன், இடையன், a cowkeeper, one of the cowherd caste. 2. கிருஷ்ணன், a name of Krishna, as a herdsman, the ninth incarnation of Vishnu.

ஆயானம், சுபுவாகுணம், natural disposition.

ஆயி, தாய், mother.

ஆயிரக்காலி, மரவட்டை, a milliped, a woodlouse. 2. துடைப்பம், a broom.

ஆயிரங்கண்ணன், தேவேந்திரன், one who has a thousand eyes—Indra.

ஆயிரங்கதிரோன், ஆயிரங்கிரணன், ஆயிரஞ்சோதி, } சூரியன், the sun—the thousand-rayed.

ஆயிரநாமன், விஷ்ணு, Vishnu.

ஆயிரம், ஒரெண், thousand.

ஆயில், ஆயிலியநாள், the ninth lunar mansion. 2. ஒரு மரம், the name of a large tree, its timber is called Chittagong-Chickrassia-tubularis.

ஆயிழை, விசேடாபரணம், choice ornaments. 2. பெண், a woman, lady, damsel. 3. அரிவாணுனி, the tip of a sickle.

ஆயின்மேனி, பச்சைக்கல், an emerald.

ஆயு, ஆயுகம், வாழ்நாள், age, duration of life, lifetime.

ஆயுகாரகன், சனி, Saturn who as the god of life, fixes the age of man.

ஆயுசுவிர்த்தி, ஆயுவர்த்தனை, } தீர்க்காயு, longevity, long life.

ஆயுசுவிர்த்தி, உலோக மணல், iron sand.

ஆயுட்டானம், ஆயுத்தானம், } ஜாதகம் பார்க்கும் சக்கரத்தில் ஆயுளைக் குறிக்கும் எட்டாவது வீடு, (*in Astrol.*) the eighth sign from that which the moon occupied during the time of one's birth.

ஆயுதபாணி, படைக்கலந்தரித்தோன், an armed man, one under arms.

ஆயுதம், கூத்துப்பயிலிடம், dancing place. 2. படை, a weapon, arms, in general.

ஆயுருவேதம், ஆயுள்வேதம், } உபவேதத்திலொன்று, one of the four உபவேதம், that which teaches medicine. 2. வைத்தியம், the medical art, pharmacy.

ஆயுருவேதாக்கினி, மருந்துசெய்வதற்குத் தக்கதாய் வைத்தியசாஸ்திரத்தில் சொல்லிய நெருப்பு, a kind of fire used in preparing medicines which consists of three kinds, viz., 1. தீபாக்கினி, the flame of a lamp. 2. கமாயக்கினி, fire glowing as the lotus flower. 3. காடாக்கினி, immoderate fire.

ஆயும்யாழ்முனி, நாரதன், the sage skilled in playing on the lyre—Narada.

ஆயுள், நோய்தீர்ப்போன், one who cures diseases. 2. வாழ்நாள், lifetime, duration of life.

ஆயுள்வேதியர், வைத்தியர், physicians, doctors, medical practitioners.

ஆயோகம், அருச்சனை, offering of flowers and perfumes in worship.

ஆயோதம், ஆயோதனம், } போர், war, battle. 2. சேனை, army.

ஆய், ஆய்தல், being nice, fine, subtle, minute. 2. ஆராயென்னேவல், *imp.* inquire, investigate, examine, consider, reflect, determine after investigation. 3. தாய், mother. 4. வருத்தம், distress, suffering.

ஆய்க்குழல், வேய்ங்குழல், a shepherd's horn.

ஆய்ச்சியர், இடைச்சியர், cowherdesses, females of the herdsman tribe.

ஆய்தக்குறுக்கம், தன்மாத்திரையில் குறுகிய ஆய்தம், a contracted sound of the letter ஃ.

ஆய்தப்புள்ளி, புள்ளிவடிவாகிய ஆய்தவெழுத்து, the letter ஃ.

ஆய்தம், ஆய்தவெழுத்து, the letter ஃ.

ஆய்தல், ஆராய்தல், inquiring, investigating. 2. தேர்தல், discriminating, knowing. 3. நுண்மை, being nice, fine, subtle.

ஆய்ந்தோர், அறிவுடையோர் persons of knowledge and research. 2. பார்ப்பார், Brahmans. 3. புலவர், poets, the learned.

ஆய்ப்பாடி, இடையரூர், a village of shepherds.

ஆய்மதி, சிறந்தபுத்தி, intelligence.

ஆய்மயில், அழகியமயில், a beautiful peacock.

ஆய்மலர், தாமரை, selected flower —the lotus flower.

ஆய்வு, அகலம், width, breadth. 2. ஆராய்தல், investigation, examination, attention, &c. 3. நுட்பம், fineness, minuteness. 4. வருத்தம், distress, suffering.

ஆரகம், இரத்தம், blood. 2. ஈயுமெண், a divisor. 3. ஆரம், the denominator of a fraction.

ஆரகூடம், ஆரகூலம், } பித்தளை, brass.

ஆரக்கண்ணியன், சோழன், he who wears a wreath of flowers—a king of the Chola race.

ஆரக்கம், அகிற்கட்டை, the wood of a superior kind of sandal tree.

ஆரக்குவதம், ஆர்க்குவதம், } கொன்றைமரம், a tree—Cassia fistula.

ஆரஞர், துக்கம், great sorrow.

ஆரணம், வேதத்தின் ஞானபாகை, the sacred or mystic part of the Vedas. 2. வேதம், the sacred writings of the Hindus—the Vedas. 3. செய்யுட்குரியவோர் மங்கல மொழி, one of the thirty-two auspicious words that may begin the first verse of a treatise.

ஆரணவாணர், பார்ப்பார், Brahmans.

ஆரணன், பிரமன், Brahma. 2. பார்ப்பான், a Brahman. 3. சிவன், Siva. 4. விஷ்ணு, Vishnu.

ஆரணி, காளி, Kali. 2. பார்வதி, Parvati.

ஆரணியம், ஆரண்ணியம், } காடு, forest, jungle.

ஆரதி, சோடசவுபசாரத்தொன்று, waving lights before an image. 2. ஆலாத்தி, a kind of offering made to prevent the effects of the evil eye.

ஆரமாலையன், சோழன், a king of the Chola race.

ஆரம், ஆத்திமரம், a tree—Bauhinia racemosa. 2. ஆபரணம், an ornament. 3. ஒரு பாணம், a kind of arrow. 4. கடம்பு, a tree—Eugenia. 5. சந்தனமரம், the sandal tree. 6. நந்தவனம், a flower-garden. 7. பதக்கம், a breastplate. 8. பித்தளை, brass. 9. பூமாலை, a flower-garland. 10. மாதரணிவடம், a string of gems worn by women. 11. முத்து, pearl. 12. முத்துமாலை, a string or garland of pearls. 13. கீழ்வாயிலக்கம், the denominator of a fraction. 14. காளிகம், oxide of iron. 15. கோடகசாலை, a plant—Justicia. 16. அஞ்சனபாஷாணம், one of the thirty-two kinds of native arsenic.

ஆரம்பம், தொடக்கம், beginning, commencement, introduction, prelude, prologue. 2. பேரொலி, a great noise.

ஆரருள், நிறைந்த, அருள், full grace, perfect benevolence.

ஆரலம், பகை, hatred, enmity, hostility.

ஆரல், ஆரான்மீன், a fish—the lamprey. 2. கார்த்திகைநாள், the third lunar mansion. 3. செவ்வாய், the planet Mars. 4. நெருப்பு, fire. 5. மதில், the wall of a garden, &c., covered at the top. 6. ஒரு பூண்டு, a plant.

ஆரவடம், முத்துவடம், a string of pearls.

ஆரவம், ஒலி, sound.

ஆரவாரம், ஒலி, sound. 2. பேரொலி, a loud noise, shouting, roaring, clamour, stir, bustle. 3. ஆடம்பரம், mirth, joviality, jubilation, festivity, pomposity, ostentation.

ஆராகவரியம், அரசு, tree—Ficus religiosa.

ஆராதனை, பூசனை, temple-service, offering flowers, &c., before an idol. 2. வணக்கம், worship, adoration, divine service.

ஆராதியர், ஆராத்தியர், } வீரசைவப்பார்ப்பார், a sort of Siva Brahmans who wear the lingam on the breast.

ஆராத்திரவியம், அரசர் பொக்கிஷம், royal wealth, great treasures.

ஆராத்திரிகம், ஆத்திவிளக்கு, waving lamps at night before an image.

ஆராமம், சோலை, a grove. 2. பூந் தோட்டம், a flower-garden.

ஆராய்தல், தேடல், seeking, seeking for. 2. சோதித்தல், investigating, scrutinizing, examining, inquiring, deliberating, contemplating, exploring.

ஆரால், ஆரல்மீன், a fish.

ஆரி, சோழன், the name of the Chola dynasty that formerly reigned in the Carnatic. 2. மேன்மை, excellence, eminence. 3. துர்க்கை, Durga. 4. பார்வதி, Parvati.

ஆரிடம், ஆகமம், moral, religious and judicial knowledge, learning communicated by Rishis. 2. ஒரு மணம், one of the eight forms of marriage. 3. நூல், science, learning. 4. பூசை, worship. 5. வழுக்கு, நிலம், slippery ground. 6. வேதம், the Vedas. 7. இருஷி சம்பந்த மானது, that which is related, belonging to, or derived from the Rishis.

ஆரிடர், சமணர், the Jainas. 2. இருஷிகள், Rishis.

ஆரிதம், தருமசாஸ்திரத்திலொன்று, one of the eighteen codes of laws.

ஆரியப்பூமாலை, காத்தவராயன் மனைவி, wife of Katavarayan. 2. அடங்காப்பெண், a gay, sprightly, wanton, young woman.

ஆரியம், அழகு, beauty. 2. இமய மலைக்கும் விந்தியமலைக்கும் நடுத் தேசம், the country extending from the eastern to the western sea and bounded on the north and south by the Himalaya and Vindhya mountains, respectively. 3. பண்டம், wealth, treasure. 4. வடமொழி, the Sanskrit language.

ஆரியர், ஆசிரியர், learned men, sages. 2. புலவர், poets. 3. வைத் தியர், physicians.

ஆரியவராடி, வராடித்திறத்தி ஞென்று, a class of musical modes, consisting of three varieties—a sub-division of வராடி.

ஆரியவேளரகொல்லி, கொல்லித்திறத் திஞென்று, a class of musical modes or tunes—a sub-division of கொல்லி.

ஆரியன், அறிவுடையன், a learned man, a sage. 2. ஐயனார், Aiyanar. 3. குரு, a priest, guru. 4. சூரியன், the sun. 5. புலவன், a poet. 6. மிலேச்சன், an outcast, an unclean stranger of a foreign faith. 7. வைத்தியன், a physician. 8. மேலவன், a superior. 9. தொம் பன், buffoon, juggler.

ஆரியை, காளி, Kali. 2. துர்க்கை, Durga. 3. பார்வதி, Parvati.

ஆரியைதநயன், வயிரவன், the son of Parvati—Bhairava.

ஆரு, நண்டு, a crab. 2. பன்றி, a hog. 3. கரகம், a pitcher.

ஆருகதம், நாவன்மரம், a tree—Eugenia caryophyllifolia.

ஆருகதம், ஆர்கதம், } சமண்மதம், the religion of the Jainas.

ஆருகதர், சமணர், the Jainas.

ஆருணி, உபநிஷதத்திஞென்று, one of the thirty-two Upanishads.

ஆருத்திரை, ஆர்த்திரை, } திருவாதிரை நாள், the sixteenth lunar asterism.

ஆருபதம், பித்தளை, brass.

ஆருப்பியம், வங்கமணல், lead ore.

ஆருவம், நீர், water.

ஆரூடம், ஏறுவது, rising, the state of being risen or having ascended. 2. மனத்தில் தோன்றுகிற விஷயத் தைப்பற்றி சோதிடனை வினவ வேண்டுகிறவன், இராசி சக்கரத் தின்படி நிற்கும் இடம், the point in reference to the Zodiac where a person stands to consult the astrologer—or the sign designated—by that mentioned at the time—one of the three parts in divination made by astrologers.

ஆரூடன், ஞானத்தில் தேறினவன், one in a religion who has retired from the world.

ஆரூபம், அமையாமை, disagreement, disobedience. 2. நீங்காமை, continuance.

ஆரை, நீருளாரை, a kind of water plant—Marsilea quadrifolia. 2. புற்பாய், a mat made of grass or rushes. 3. மதில், a surrounding wall.

ஆரோகணத்தி, சங்கீதத்தில் நீச ஸ்வரத்திலிருந்து உச்ச ஸ்வரத்திற்கு ஏறுவது, sounding the lute from the lowest note to the highest. 2. எழுச்சி, rising up, upward passage.

ஆரோகணம், ஏறுதல், ascension, rising. 2. கற்படி, stone steps, step or flight of steps, a staircase. 3. தாழ்வாரம், an inclined roof.

ஆரோக்கியம், சௌக்கியம், return of health, salubrity, freedom from disease. 2. சுகம், wholesomeness, safety, comfort.

ஆரோபணம், ஏற்றுகை, elevating, placing in or on.

ஆரோபம், ஒன்றையொன்றாயறிதல், mistaking one thing for another.

ஆரோபிதம், சாட்டப்பட்டது, that which is attributed, or ascribed, deposited. 2. கற்பிதம், attributing a false charge against one.

ஆர், ஆத்தி, a tree—Bauhinia racemosa. 2. ஆர்தலைச்செய்யென்னு மேவல், *imp.* become full, abound, abide, stay, join, drink, eat, suffer, enjoy, receive the fruit of actions performed in former births. 3. ஐந்துருவாணி, the bars passing through the five floors of car. 4. கூர்மை, sharpness, pointedness. 5. சோதி, light, lustre, splendour. 6. தேர், வண்டியகவாய், the axle-tree hole. 7. நிறைவு, fulness, completion. 8. பலர்பால் விகுதி, a termination of the third person plural of the rational class. 9. பாகு, syrup from sugar. 10. பூமி the earth. 11. யாரென்வினா, the interrogative who. 12. நுண்மை, delicateness. 13. வண்டியிலை, the spokes of a wheel. 14. கொன்றை, a tree—Cassia.

ஆர்கதி, திப்பிலி, long pepper.

ஆர்கலி, கடல், the sea, ocean. 2. மழை, rain.

ஆர்க்கம், இரத்தம், blood.

ஆர்க்கு, ஒரு மீன், a species of shellfish of the cockle kind.

ஆர்க்கை, கட்டு, a band, bandage.

ஆர்ச்சனம், ஆர்ச்சனை, ஆர்ச்சிதம், } சம்பாத்தியம், acquisition, accumulation.

ஆர்தல், குடித்தல், drinking. 2. தங்கல், abiding, staying. 3. நிறைதல், abounding, becoming full, crowding. 4. புசித்தல், eating, taking food. 5. வினைப்பயனுகர்தல், suffering, enjoying, experiencing, receiving the fruit of actions, performed in former births. 6. பொருந்தல், joining, belonging to.

ஆர்துபம், அரத்தை, a plant—Alpinia galanga.

ஆர்த்தபம், மகளிர் தீட்டு, the menstrual discharge, monthly evacuation, catamenia.

ஆர்த்தர், துயருறுவோர், distressed persons, the afflicted, the poor. 2. சான்றோர், the great, the wise, the exalted in spiritual attainments.

ஆர்த்தல், அணிதல், putting on clothes, jewels, &c. 2. ஒலித்தல், sounding, resounding. 3. கட்டல், tying, binding. 4. பொருதல், fighting, warring, joining battle. 5. பொருத்தல், joining, causing to join, uniting, knitting. 6. நிறைத்தல், filling. 7. ஊட்டல், giving food.

ஆர்த்தார்க்கோன், சோழன், the king who uses garlands of flowers of the ஆத்தி, tree—Chola.

ஆர்த்தி, துன்பம், pain, affliction, sorrow. 2. அனுபவம், enjoyment or suffering, experience, exercise of the mental or bodily faculties. 3. சிவன் ஐவகைவடிவினென்று,

one of the five forms of Siva, correspodning to ஆகோரசத்தி. 4. விற்குதை, the notch at the end of a bow.

ஆர்த்திரகம், இஞ்சி, ginger in the un-dried state,—Zingibar officinalis.

ஆர்பதம், (prop. அராபதம்) நிழல், shade. 2. வண்டு, a beetle.

ஆர்ப்பு, கட்டு, tying, binding, a tie, bandage. 2. சிரிப்பு, laughter, hearty-laughing, neighing. 3. பேரொலி, a loud noise, roaring, clamour. 4. போர், a battle.

ஆர்மதி, கடகவிராசி, the sign Cancer of Zodiac. 2. நண்டு, a crab.

ஆர்மை, கூர்மை, keenness, sharpness. 2. மதில், a wall.

ஆர்வமொழி, ஓரலங்காரம், a figure in rhetoric—an expression of love, affection, &c.

ஆர்வம், அன்பு, love, affection. 2. ஆசை, desire, pleasure, gratification. 3. ஒலி, sound. 4, சீலை, cloth. 5. நரகம், hell.

ஆர்வலன், அன்புடையான், a kind or affectionate person. 2. புருடன், a husband. 3. மித்திரன், a friend, a lover.

ஆர்வு, ஆராய்தல், investigation. 2. நிறைவு, fulness, abundance. 3. உண்ணல், eating, feeding, drinking.

ஆலகண்டன், சிவன், he in whose throat remains the poison vomited by Vasuki, one of the eight serpents fabled to support the earth—Siva.

ஆலகாலம், நஞ்சு, poison, strong animal poison. 2. விடம், poison ejected by snakes.

ஆலக்கொடிச்சி, அரிதாரம், orpiment or an arsenic in its natural state.

ஆலசியம், சோம்பல், idleness, slothfulness, apathy, laziness, a tardy disposition.

ஆலமர்கடவுள், சிவன், Siva.

ஆலமுடையோன், துரிசி, blue vitriol.

ஆலமுண்டோன், சிவன், Siva who swallowed the poison of the serpent Vasuki, which it disgorged into the sea of milk.

ஆலம், அம்புக்கூடு, a quiver. 2. ஆலமரம், the banian tree which throws down roots from the branches. 3. நீர், water. 4. பாம்பின் நஞ்சு, powerful poison, as of serpents. 5. மலர்ந்தபூ, a blown flower. 6. மழை, rain. 7. மழு, a battle-axe. 8. ஈயம், lead.

ஆலம்பம், பற்றுக்கோடு, a prop, support. 2. புகலிடம், an asylum, refuge. 3. இலம்பம், a perpendicular.

ஆலயம், தேவர்கோயில், a temple, place of worship, church. 2. யானைக்கூடம், an elephant's stall, a shed in which to keep elephants. 3. வீடு, an abode, a house. 4. தங்குமிடம், an abode, an asylum, a receptacle. 5. பிரமாலயம், a Brahman's residence.

ஆலலம், கூறை, a garment given by the bridegroom to the bride at the time of marriage.

ஆலல், ஆடல், dancing, playing. 2. ஒலித்தல், sounding, making a noise. 3. மயிற்குரல், crying or screaming, as a peacock. 4. ஆல் என்பதின் வியங்கோள்முற்று, *opt.* may you dance, sound, scream, &c.

ஆலவட்டம், கால்செய்வட்டம், a circular fan, carried to decorate processions. 2. விசிறி, a small fan.

ஆலவாலம், வயல், a corn-field. 2. மரத்தடியிற்பாத்தி, a trench for water round the foot of a tree. 3. பாத்தி, garden beds or plats made with ridges round them, so as to contain water.

ஆலா, ஒரு பட்சி, a large water-bird. the white-headed sea-eagle.

ஆலாங்கட்டி, மழைக்கட்டி, hail, hailstones.

ஆலாதம், நெருப்புக்கொள்ளி, a firebrand.

ஆலாபம், } சம்பாஷணை, conversation, speaking.
ஆலாபனை, }

ஆலாபித்தல், சுருதிகூட்டல், raising a tune, &c.

ஆலாலம், விடம், poision. 2. வௌவால், a bat.

ஆலாவர்த்தம், ஆலவட்டம், a large fan made of cloth.

ஆலானம், யானைகட்டுந்தறி, the post to which an elephant is tied. 2. கயிறு, a rope or string. 3. யானைகட்டுங்கயிறு, a rope to tie an elephent 4. கட்டல், tying, binding.

ஆலி, அமுதம், nectar, ambrosia. 2. ஆலாங்கட்டி, hail, hailstones. 3. களியென்னேவல், *imp.* be joyous, cheerful. 4. கள், toddy or fermented liquor. 5. காற்று, wind. 6. மழை, rain. 7. மழைத்துளி, rain-drops.

ஆலி, ஆளி, } தோழி, a woman's female friend. 2. தேள், a scorpion. 3. தேனீ, a bee. 4. நிரை, a row, range, a continuous line. 5. வரம்பு, a ridge or mound of earth crossing ditches, dividing fields, &c.

ஆலிங்கனம், தழுவல், an embrace, embracing. 2. புணர்ச்சி, copulation, the conjugal embrace.

ஆலித்தல், களித்தல், rejoicing, being cheerful.

ஆலீடம், அம்பெய்வோர்க்குரிய நிலை நான்கினொன்று, one of the four positions of archers.

ஆலு, நீர்க்குடம், a pitcher, a small water jar.

ஆலுதல், ஆடல், dancing, playing. 2. ஒலித்தல், sounding, making a noise. 3. நிறைதல், becoming complete.

ஆலேகனம், எழுதுகை, writing, painting.

ஆலை, கரும்பாலை, a press for pressing sugar-cane. 2. கள், vinous or spirituous liquor. 3. உபத்திரவம், oppression, affliction.

ஆலைபாய்தல், ஆலையாடல், working at the sugar-cane press.

ஆலோகம், ஆலோகனம், } பார்வை, sight. 2. வெளிச்சம், light. 3. இச்சகம், flattery, compliment.

ஆலோகன், தெளிந்தவன், an intelligent man.

ஆலோலம், நீரொலி, murmuring sound of running water. 2. புள் ளோச்சல், wooping, calling, &c., driving away birds. 3. சலனம், trembling, agitation.

ஆலோலிதமுகம், ஆசையான் மலர்ந்த முகம், a countenance blooming with joy.

ஆலோலிதம், பிரியம், desire, joy.

ஆலோன், சந்திரன், the moon.

ஆல், அசைச்சொல், a poetic expletive, usually annexed to the finite verb, also to nouns. 2. ஆமெனல், the former of affirmation for eyes. 3. ஆலமரம், the baniantree. 4. ஆலென்னேவல், *imp.* dance, sound, &c. 5. வேற்றுமை யுருபு, the chief form of the third case or instrumental ablative—implying cause, agency or instrumentality. 6. வினையெச்ச விகுதி, a form of the subjunctive, joined to the gerund, or in poetry, to the finite verb, expressing *if*.

ஆல்வு, அகல்வு, what is wide, broad or extensive.

ஆவசியகம், அவசரம், a necessary thing, necessity.

ஆவணம், அடையாளம், a sign, mark. 2. உரிமை, right to property. 3. கடை, a bazaar, market. 4. தெரு, street in general, a bazaar street. 5. தேர்மொட்டுப் பொருந் தியபீடம், the interior of a car in which the idol is placed. 6. புநர் பூசம், the seventh lunar mansion. 7. முறிச்சீட்டு, a deed or bond.

ஆவணி, அவிட்டநாள், the twenty-third lunar mansion. 2. ஒரு மாதம், the month August—September.

ஆவணீயம், கடைவீதி, a market street—as ஆபணீயம்.

ஆவநாழி, அம்புக்கூடு, a quiver, case or sheath for arrows.

ஆவம், அம்புக்கூடு, a quiver. 2. நாணி, a bowstring. 3. குங்கும மரம், a tree.

ஆவரணசத்தி, ஞானத்தை மறைக்கின்ற மாயையின் சக்தி, the power of illusion—that which veils the real nature of things.

ஆவரணம், கோட்டை, a fort. 2. சீலை, a cloth or garment. 3. மறைப்பு, a shelter, screen, covering. 4. மதில், a wall. 5. கேடகம், a shield.

ஆவரி, அம்பு, an arrow.

ஆவர்த்தம், சத்தமுகிலினொன்று, one of the seven classes of clouds —that which yields rain; also one of the seven classes of rain clouds.

ஆவலங்கொட்டல், வாயாலார்த்தாடல், making a noise with the mouth, patting it at the same time with the hand—a sign of triumph, or defiance, feigned to have been the practice of demons, and considered disgraceful to other races, and inauspicious.

ஆவலம், கொல்லை, an enclosed garden. 2. வாயாலார்த்தல், noise made with the mouth in defiance.

ஆவலர், காதலர், friends, partisans those attached to one. 2. கொண்கர், husbands.

ஆவலி, } ஆவளி, } ஒழுங்கு, a row, range, continuous lines, series, lineage, dynasty.

ஆவலித்தல், கொட்டாவி விடுதல், gaping, yawning. 2. புலம்பல், weeping, crying, lamenting. 3. ஆசைகூரல், desiring eagerly, longing, yearning after.

ஆவல், ஆசை, great desire, longing, yearning. 2. வளைவு, a bend, turn.

ஆவா, இரக்கக்குறிப்பு, an expression of pity. 2. அதிசயக் குறிப்பு, an expression of surprise.

ஆவாகனம், ஸ்தாபனம், the deifying of an image causing the god to enter it by incantations, &c.

ஆவாசம், வீடு, a house.

ஆவாபனம், நெய்வார்தறி, a loom. 2. ஆசுமணை, a reel for winding thread.

ஆவாரை, ஆவிரை, a plant Cassia auriculata.

ஆவாலம், வௌவால், a bat. 2. மரத்தினடியிற்கோலிய பாத்தி, a hollow for water round the foot of a tree.

ஆவி, உயிர், life, sprit, soul. 2. உயிர்ப்பு, the breath, as emitted by opening the mouth, breath. 3. குளம், a pond, tank. 4. கொட்டாவிவிடுவென்னேவல், *imp.* gape, yawn. 5. பிட்டு, a species of cake dressed in steam. 6. புகை, steam, vapour. 7. வாசனை, smell, fragrance, scent, odour good or bad.

ஆவிதம், திருகூசி, an awl, drill, gimblet.

ஆலித்தல், கொட்டாவிவிடுதல், gaping, yawning.

ஆவிபத்தம், பேராமுட்டி, a plant—Pavonia odorata.

ஆவியம், உயிர், spirit, life, bodily strength. 2. சரீரம், the body, receptacle of the soul.

ஆவியர், வேடர், hunters. 2. வேளாளர், agriculturists.

ஆவிரம், இடையரூர், a village or town of herdsmen.

ஆவிருத்தி, முறை, term, times—when added to a number. 2. பரிவிருத்தி, a complete number of the revolutions of planet.

ஆவிரை, see ஆவாரை.

ஆவிலம், கலங்கனீர், foul or turbid water, puddle.

ஆவுடையார், பாணவட்டம், the lingam representing both sexes.

ஆவேசம், மருள், a paroxysm of religious frenzy through excessive zeal.

ஆவேசனம், சித்திரக்காரர் வீதி, a street of artists. 2. இரவிமண்டலம், the dise of the sun.

ஆவேலி, தொழுவம், a cowhouse, an oxstall.

ஆவோ, அதிசயவிரக்கச்சொல், a particle of admiration, pity or distress.

ஆழமுடைத்தாதல், நூலழகு பத்தி னொன்று, comprehensiveness of language,—one of the ten beauties of composition.

ஆழல், ஆழ்தல், being depressed, being deep, profound, sinking, plunging, being immersed. 2. கறையான், white ants, termites.

ஆழி, கடல், the sea, the great deep. 2. கரைப்பொது, the seashore, bank of a river, tank, &c. 3. சக்கரம், the discus weapon. 4. தேருருளை, a wheel, carriage-wheel. 5. மோதிரம், a ring. 6. யானைக் கைந்நுனி, the tip of an elephant's trunk. 7. வட்டம், a circle. 8. வண்டி, a car, carriage.

ஆழித்தல், ஆழமாக நாட்டல், planting deep.

ஆழிவித்து, முத்து, a pearl.

ஆழிவிரை, ஒரு பூடு, a small plant—Linum, usitatissimum, the seed of which is medicinal. China wallcress. 2. சணல், linseed flax.

ஆழிவெம்முரசோன், மன்மதன், Hindu Cupid, Kama.

ஆழுதல், } ஆழ்தல், } அழுந்தல், becoming deep, being depressed. 2. தாழுதல், sinking, plunging, being immersed. 3. உரத்தல், being intense, severe.

ஆழ்த்தல், கட்டல், binding, building. 2. தாழ்த்தல், sinking into the earth or water, immersing, plunging.

ஆழ்வார், விஷ்ணுவடியார் பன்னிருவர், the twelve devotees of the Vishnu sect.

ஆளகம், சுரை, a creeper, bottle gourd—Lagenaria vulgaris.

ஆளரி, விஷ்ணு, Vishnu in his incarnation as a lion.

ஆளல், ஆளுதல், ruling, possessing, establishing usage—as in language, exercising, managing.

ஆளானம், கட்டுத்தறி, the post to which a cow or other beast is tied. 2. கலப்பை, a plough. 3. யானைகட்டுந்தறி, a stake or post to which an elephant is tied.

ஆளி, ஆளுவோன், a governor, master, owner, manager. 2. ஒழுங்கு, a row, range, a continuous line. 3. கரைப்பொது, the seashore, bank of a river, tank, &c. 4. சிங்கம், the lion as the king of beasts. 5. சிங்கவிராசி, Leo, the Zodiacal sign. 6. செய்கரை, an artificial embankment for confining water. 7. யாளி, a fabulous animal, like a lion, but with a proboscis as an elephant. 8. ஆளிவிதை, a kind of seed.

ஆளியூர்தி, காளி, Kali so called because conveyed on a fabulous animal of the lion kind. 2. துர்க்கை, Durga whose vehicle is the யாளி.

ஆள், அடிமை, a slave, servant. 2. ஆடவன், a person, grown, a man. 3. ஆளுதலைச் செய்யெனேவல், *imp.* rule, possess, exercise dominion, govern, &c.

ஆள் வணங்கி, ஒரு மரம், a tree—Ficus.

ஆள்வினை, உற்சாகம், bravery. 2. முயற்சி, energy, alacrity, perseverance, application, exertion.

ஆள்வினையுடைமை, முயற்சியுடைமை, the possession of energy.

ஆறகோரம், கொன்றை, a tree—Cathartocarpus fistula.

ஆறங்கம், வேதாங்கம் ஆறு, the six subjects embraced in வேதாங்கம்.

ஆறதீகம், கல்நார், asbestos.

ஆறலைத்தல், வழிப்பறித்தல், highway robbery, street robbery.

ஆறல், ஆறுதல், abating, relaxing, cooling, being appeased, healing as a wound, resting. 2. குளிர்தல், cooling, growing cold, being refreshed.

ஆறு, ஆறுதலையுடையெனேவல், *imp.* rest, abate, relax, be appeased. 2. ஒழுக்கம், morality, virtue,

good conduct, the good or right way in a moral sense. *3.* ஓரெண், six. *4.* நதி, a river, natural current, channel or passage through shallows, a canal. *5.* வழி, way, road, path, mode, manner, rule, method, order, custom.

ஆறை, ஆற்றூர், the name of a town in the Carnatic.

ஆற்பதம், சாரம், virtue, vigour, essence, strength.

ஆற்ற, மிகுதியாய், greatly, exceedingly.

ஆற்றல், அதிகம், abundance, copiousness, much. *2.* செய்தல், doing, acting, performing a duty. *3.* ஞானம், wisdom, knowledge of divine things. *4.* நிலையுடைமை, stability, fixedness, firmness. *5.* பரித்தல், bearing, a weight. *6.* பொறை, enduring, forbearance, patience. *7.* மிகுதி, excess. *8.* முயற்சி, energy, spirit. *9.* வலி, strength, power, prowess, ability.

ஆற்றறுத்தல், வலியழித்தல், destroying one's power, enervating.

ஆற்றார், தரித்திரர், the poor. *2.* வருந்தினர், the afflicted. *3.* பகைவர், foes, opponents, rivals, those, who envy one.

ஆற்றிடைப்படல், வழியிலிருத்தல், being in the way. *2.* வழியெதிர்ப்படல், meeting in the way.

ஆற்று, ஆற்றென்னுமேவல், *imp.* cool, appease, loosen what is tied or twisted, perform a duty, bear a weight, carry a burden, &c. *2.* தலைக்கடை, the outer door, or entrance to a house.

ஆற்றுக்காலாட்டியர், மருதநிலப் பெண்கள், women of the agricultural class.

ஆற்றுச்செருப்படி, ஒரு பூடு, a small water-plant.

ஆற்றுணு, கட்டுச்சோறு, rice tied up for a journey.

ஆற்றுத்தும்மட்டி, பேய்க்கொம்மட்டி, colocynth—Citrullus colocynthis.

ஆற்றுநீர்ப்பொருள்கோள், பொருள் கோளெட்டிலொன்று, the natural construction of a sentence.

ஆற்றுநெட்டி, நீர்ச்சுண்டி, a water-plant—Aeschynomene paludosa.

ஆற்றுப்பச்சை, நாகப்பச்சை, a curious green stone—one of the one hundred and twenty kinds of minerals.

ஆற்றுப்படை, ஒரு செய்யுள், a poem, the object of which is to conduct one to a superior. *2.* வழிப்படுத்தல், the act of conducting, directing, leading, &c.

ஆற்றுப்பாசி, ஒரு பூடு, a water-plant—Caulina indica.

ஆற்றுமரி, நீருமரி, a shrub.

ஆற்றுமல்லிகை, ஒரு மல்லிகை, a species of Arabian Jasmin—Jasminum sambac.

ஆற்றுமுள்ளி, ஒரு பூடு, a thorny plant growing by a river—Dilivaria ilicifolia.

ஆற்றுமேலழகி, ஒரு பூடு, a plant—Celsia coromandeliana.

ஆற்றுவித்தல், உறுதிசெய்தல், enabling to bear or endure. *2.* வலிதருதல், inspiring with courage.

ஆற்றொழுக்கு, ஆற்றுநீரோட்டம், the flowing of a river, stream, current. 2. rules following each other in regular and natural order (*lit.*) the flowing of a river—one of the four aspects of a grammatical rule.

ஆனகம், தேவதரு, one of the evergreens of Swerga—the Kalpaka tree. *2.* போர்ப்பறை, a large military drum beaten at one end. *3.* மேளம், a double drum or two drums put together to be beaten at once. *4.* தம்பட்டம், a small drum. *5.* முழங்குமுகில், a thunder-cloud. *6.* காதினுட்சவ்வு, the tympanum.

ஆனகதுந்துபி, வசுதேவன், Vasudevan the father of Krishna. *2.* போர்ப்பறை, a large military drum beaten at one end.

ஆனத்தேர், விடத்தேர்ச்செடி, a shrub—Mimosa.

ஆனந்த, ஒரு வருடம், the forty-eighth year of the Hindu cycle.

இராசயோகம், ஜனனத்தில் சுபகோள்கள் கூடிநிற்கை, a configuration of the planets, denoting the highest prosperity and honour to one born under its influence. 2. ஞானிக்குரிய யோக நான்கினொன்று, one of the four yogas exercised by a sage.

இரசாதிராசன், குபேரன், king of kings,—Kuvera.

இராசாவர்த்தம், ஓரிரத்தினம், a gem.

இராசாளி, ஒரு புள், a large kind of hawk, a falcon.

இராசி, ஒழுங்கு, assortment, row, class, file, regularity in conduct. 2. குவிதல், heap accumulation. 3. கூட்டம், a collection, flock, constellation, cluster, assemblage. 4. மத்தியானம், midday, noon. 5. மேடமுதலியவிராசி, a zodiacal constellation such as Aries, &c.

இராசிநாதன், அதிகாரகிரகம், the ruling planet at the time of a configuration.

இராசிமண்டலம், இராசிவட்டம், the zodiac. 2. ஓரை, (*in astronomy*) zodiacal sign.

இராசியம், பெண்குறி, pudendum mullebre. 2. மறைவு, secret, mystery, anything hidden, recondite.

இராசிலம், சாரைப்பாம்பு, the rat-snake. 2. நீர்ப்பாம்பு, the water-snake—Amphisbaena.

இராசிவக்கிரம், கிரகம் ஒரு ராசியிலிருந்து பின்னுள்ளராசிக்குப் போதல், (*in astronomy*) retrogression of a planet to the next sign.

இராசீவம், தாமரைப்பூ, the lotus flower—Nelumbium.

இராச்சியபாரம், அரசாளுகை, reign, government.

இராச்சியம், உலகு, the worl . 2. நாடு, a territory, country. 3. அரசுசெல்லுமிடம், a k dom, state, realm. 4. அரசாட்சி, the administration, sovereignty, the exercise of the royal power.

இராடம், ஒரு தேசம், the name of a country. 2. கழுதை, an ass. 3. வெங்காயம், onion. 4. பெருங்காயம், asafœtida.

இராட்சத, ஒரு வருடம், the forty-ninth year of the Hindu cycle.

இராட்சதர், see இராக்கதர்.

இராட்டு, அரசன், a king.

இராணம், இலை, a leaf. 2. மயிற்றோகை, peacock's tail.

இராதம், கடைக்கொள்ளி, a fire-brand well-nigh consumed.

இராதை, கிருஷ்ணன் மனைவி, a famous shepherdess,—wife of Krishna. 2. விசாகம், the sixteenth asterism. 3. மின், lightning.

இராதைகாந்தன், கிருஷ்ணன், Krishna.

இராத்திரி, இரவு, night.

இராமகலி, ஓரிராகம், a tune.

இராமக்கிரியை, ஓரிராகம், one of the thirty-two tunes.

இராமசகன், சுக்கிரீவன், Sugriva, the friend of Rama and the king of his monkey hosts.

இராமச்சந்திரன், இராமன், Rama.

இராமசீத்தா, அணிநுணா, bullock's heart—Annona reticulata.

இராமடம், பெருங்காயம், asafœtida.

இராமதூதன், அநுமான், Hanuman.

இராமம், அழகு, beauty, elegance. 2. அழகுள்ளது, anything pleasing.

இராமன், தசரதன்புத்திரன், Rama, one of the incarnations of Vishnu.

இராமன்றேவி, சீதை, Sita, the wife of Rama.

இராமாநுஜன், இலக்குவன், Lakshmana, the younger brother of Rama. 2. விஷ்ணுசமயாசாரியரிலொருவன், the name of one of Vishnu's followers who propagated his religion.

இராமாயணம், இராமசரிதை, the most celebrated epic poem of

the Hindus recording the adventures of Rama, sovereign of Oude.

இராயணி, அரசி, a queen.

இராயன், அரசன், a king, an emperor.

இராவடம், அசோகு, a tree—Guatteria longifolia.

இராவடி, ஏலம், the cardamom—Elettaria cardamomum.

இராவணம், விளக்கு, a lamp.

இராவணன், இலங்கை வேந்தன், the king of Lanka, or Ceylon, killed by Rama.

இராவணன், மந்திரி, மகோதரன், the minister of Ravana.

இராவணத்தம், ஒரு யாழ், a kind of lute formed with a hollow cocoanut shell.

இராவணி, இந்திரஜித்து, the eldest son of Ravana.

இரிகம், இருதயம், mind, heart. 2 இரத்தாசயம், (*Anatomy*) the heart.

இரிசியா, பூனைக்காலி, a plant used for medicinal purposes.

இரிஞர், பகைவர், enemies, foes.

இரிதல், அச்சம், fear, being afraid, 2. ஓடல், running, retreating. 3. கெடுதல், being destroyed, broken. 4. சாய்தல், inclining.

இரிபு, பகை, hatred, animosity. 2. பகைவன், a foe, an enemy. 3. தோல்வி, defeat, discomfiture.

இரியல், இரிதல், defeat, discomfiture, retreat. 2. நல்லாடை, a fine cloth.

இரீதி, பித்தளை, pale brass, or prince's metal. 2. முறைமை, method, principle, regulation, institute, usage.

இரீதிகவுளம், ஓரிராகம், a tune.

இருக்கு, முதல்வேதம், the Rig or first Veda. 2. வேதம், the Vedas in general. 3. மந்திரம், a mantra or mystical prayer.

இருக்கை, இருத்தல், sitting. 2. ஊர்ப்பொது a town, village. 3. ஆசனம், a seat. 4. இருப்பிடம், residence, dwelling, situation.

இருசு, செவ்வை, right, anything straight, direct, proper, correct. 2. வண்டியுளிரும்பு, the axle of a carriage. 3. மூங்கில், bamboo.

இருசுடர், சூரியசந்திரர், the two lights—the sun and moon.

இருடி, ஆந்தை, a species of owl. 2. முனிவன், a Rishi or sage.

இருடிகள், முனிவர், sages, Rishis.

இருடிகேசன், விஷ்ணு, a name of Vishnu.

இருடிபத்தினி, இருடிபன்னி, } முனிவன் மனைவி, the wife of a Rishi.

இருட்டு, இருட்டென்னேவல், *imp.* darken, grow dark, become dark. 2. இருள், darkness, cloudiness, dark.

இருட்டுதல், இருளுதல், becoming dark, or beclouded, being deprived of light.

இருணம், உவர்த்தரை, brackish land. 2. கடன், a debt. 3. கழிக்கப்படுமெண், (*in algebra*) minus quantity. 4. கழிப்புக்குறி, the sign minus.

இருணமோசனம், கடன்தீர்த்தல், the liquidation of a debt.

இருணிலம், நரகம், hell, the land of darkness.

இருதயம், உள்ளம், the heart as the seat of the passions or emotions. 2. உயிர்நிலை, the heart—as the chief seat of life, the breast, bosom. 3. மனம், the mind, the seat of the faculties and of thought. 4. கருத்துரை, the intrinsic meaning or substance of a verse or sentence.

இருதயகமலம், இதயகமலம், the heart—as the consecrated seat of the Deity.

இருதிணை, உயர்திணை அஃறிணை, the two classes into which Tamil nouns are divided. 2. இயங்குதிணை இயங்காத்திணை, the two classes into which creatures are divided.

இருது, பருவம், a season of two months. 2. மகளிர் சூதகம், the monthly courses, catamenia. 3.

கடவுளின் முத்தொழில், office, function, operation—as the evolving, carrying forward and reduction of nature by the Deity.

இருதுசாந்தி, சோபனகலியாணம், the ceremony incident to a girl's arriving at puberty, when offerings are made to the moon to appease that malignant deity, that he may not injure her or attempt her chastity.

இருத்தல், தங்கல், abiding, residing, staying.

இருத்தி, சித்தி, prosperity, success, accomplishment, beatitude. 2. மேன்மை, true greatness.

இருத்து, அஸ்தக்கிரியை, assisting priests at a sacrifice.

இருத்துதல், தங்குவித்தல், causing to sit, seating, putting in or upon, fixing, making stationary.

இருத்தை, சந்திரனின் நாலாம்பக்கம், the fourth of the five periods into which the days between the new and full moon are divided. 2. நாழிகை, an Indian hour of twenty-four minutes. 3. நாழிகை வட்டில், an hour-vessel for measuring time. 4. செங்கோட்டை, the nut of the Semicarpus anacardium.

இருநிதிக்கிழவன், குபேரன், Kuvera.

இருந்து, இருந்தை, } கரி, charcoal.

இருபாவிருபது, ஒரு பிரபந்தம், a poem consisting of ten வெண்பா and ten அகவல், stanzas.

இருபிறப்பாளர், பார்ப்பார், the twiceborn caste—Brahmans, investiture with the sacred thread being deemed a kind of regeneration.

இருபிறப்பு, சந்திரன், the moon. 2. சிறகு, feathers. 3. பல், the teeth. 4. பார்ப்பார், Brahmans. 5. முட்டையிற்பிறப்பன, birds and other oviparous creatures.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை, ஆகியவென்னும் பண்புருபு தொக்கு நிற்க முதலாவது சிறப்புப் பெயரு மிரண்டாவது பொதுப் பெயருமாய் ஒருபொருட் கிரு பெயர் வருவன, the combination of two nouns, of which the first is specific and the second generic, expressing the same thing and having ஆகிய understood between them.

இருபொருள், கல்விப்பொருள் செல்வப்பொருள், learning and riches.

இருப்பவல், ஒரு பூண்டு, a plant the root of which is used medicinally —Gnaphalium Indicum.

இருப்பு, இருக்கை, sitting, being, a state or condition of being, a seat.

இருப்புக்காய்வேளை, ஒரு வகைக்காய் வேளை, a plant.

இருப்பை, ஒரு மரம், the long-leaved bassia—Bassia longifolia.

இருமடியாகுபெயர், ஆகுபெயர் மீண்டும் வேறொரு பொருளுக்கு ஆகுபெயராய் வருவது, An ஆகுபெயர் used again as an ஆகுபெயர்.

இருமணம், நற்கந்தம் துர்க்கந்தம், pleasant and unpleasant odors.

இருமரபு, தாய்மரபு தந்தைமரபு, the two ancestral lines—paternal and maternal.

இருமல், இருமுதல், coughing, a cough.

இருமை, இம்மை மறுமை, the two states, the present and the future. 2. இருதன்மை, two-fold nature, duality. 3. துக்கம், sorrow. 4. பெருமை, greatness, largeness, hugeness. 5. மகிமை, importance, eminence.

இரும்பலி, இரும்பிலி, } ஒரு செடி, a shrub said to be used by alchemists in turning iron into gold, Ferreola buxifolia.

இரும்பன், காரெலி, a black rat.

இரும்பு, ஆயுதப்பொது, instruments in general. 2. கரும்பொன், iron.

இரும்புளி, ஒரு மரம், a tree whose sour fruit is used for curry.

இரும்பை, குடம், a pot. 2. பாம்பு, a snake.

இருவகைத்தோற்றம், சராசரம், the two classes of beings produced, movable and immovable, animate and inanimate.

இருவாச்சி, கருமுகைச்செடி, a flower shrub, a kind of fragrant jasmine

இருவி, தினைத்தாள், millet-stubble. 2. இருவிக்காந்தம், a medicinal drug. 3. ஒரு நாபி, a vegetable poison.

இருவிக்காந்தம், ஒரு நச்சு மூலிகை, a medicinal drug.

இருவினை, நல்வினை தீவினை, the two classes of moral actions, good and evil, in every one of which there is merit or demerit leading to future births, in which they are to be suffered or enjoyed while they keep the soul from union with deity.

இருவேலி, வெட்டிவேர், an odoriferous shrub—the root is medicinal and used also for tats.

இருளல், இருளுதல், becoming dark, darkening, growing dark. 2. *opt.* வியங்கோள்முற்று of இருள், may you darken.

இருளி, பன்றி, a hog. 2. வெட்கம், shame. 3. கருஞ்சீரகம், a plant—Nigella.

இருளை, நாணம், shame, bashfulness, modesty.

இருள், அல், darkness, obscurity. 2. இருளென்னேவல், *imp.* darken, grow dark. 3. உன்மத்தம், ignorance, mental delusion, stupor. 4. கறுப்பு, black, blackness. dark colour. 5. நரகம், hell. 6. யானை, an elephant.

இருள்வலி, சூரியன், the disperser of darkness—the sun.

இரேகுத்தி, ஓரிராகம், a tune.

இரேகை, எழுத்து, letters, writing, 2. சித்திரமெழுதல், delineation, outlines of drawing, sketch. 3. வரி, a line, a stroke in writing. 4. சந்திரரேகை, a digit of the moon.

இரேசகம், பிராணயாமத்தில் சுவாசத்தை விடல், respiration, emission of the breath by one nostril at a time according to the rules prescribed for ascetics. 2. பேதி மருந்து, a purgative, cathartic.

இரேசனம், பேதி, purging, looseness.

இரேசன், வெள்ளைப்பூண்டு, garlic—Allium sativum.

இரேசிதம், குதிரைவட்டமாயோடல், the circular pace of a horse.

இரேசுதல், அசீரணம், indigestion (*in medical books*).

இரேணு, அணு, an atom, fine dust, particle.

இரேணுகம், ஒரு மருந்து, a kind of drug.

இரேதஸ், விந்து, the seminal fluid, semen virile.

இரேபதம், அட்டாதச தருமநூலி லொன்று, one of the eighteen works in judicial law.

இரேயம், கள், toddy, spirituous liquor.

இரேவதம், இரேவதிநாள், the twenty-seventh Nuckshatra or constellation.

இரேவதன், பலதேவன் மாமன், the father of the wife of Baladeva.

இரேவதி, கடைநாள், the twenty-seventh lunar asterism. 2. பலதேவன்மனைவி, the wife of Baladeva.

இரேவதிகொண்கன், பலதேவன், Vishnu in his eighth incarnation.

இரை, உணவு, food in general victuals. 2. ஒலி, sound, noise, roar, hum. 3. ஒலியென்னேவல், *imp.* sound, make noise, roar, hum, buzz. 4. பறவை யுணவு, food of birds, prey.

இரைதல், ஒலித்தல், sounding roaring, buzzing.

இரைத்தல், ஒலித்தல், sounding, roaring, chirping.

இரைத்து, இண்டஞ்செடி, a shrub—Mimosa.

இரைப்பெலி, ஒருவகை எலி, a kind of rat whose bite causes shortness of breath.

இரௌத்திரம், பெருங்கோபம், wrath, hostility, ferocity, warlike

fury. 2. fury, as a sentiment exhibited in poetic description.

இரௌத்திராகாரம், a warlike or ferocious appearance.

இரௌரவம், நரகம், hell, one of the divisions of Naraka, or Tartarus. 2. சிவாகம மிருபத்தெட்டி னொன்று, one of the twenty-eight agamas.

இலகடம், யானைமேற்றவிசு, a seat or canopy to be placed on the back of an elephant.

இலகம், ஊமத்தை, a medicinal plant—Datura.

இலகல், ஒளிசெய்தல், shining, glistening, glittering, twinkling, emitting rays.

இலகிமா, அட்டயோகத்தொன்று, excessive or infinite lightness—one of the superhuman faculties. 2. இலகுத்துவம், levity, lightness.

இலகு, அகில், a superior sandal tree—Agallochum. 2. இலகென் னேவல், *imp.* shine, glisten, glitter, twinkle. 3. குறிலெழுத்து, a short vowel. 4. நொய்மை, minuteness, fineness. 5. தணிவு, ease, respite, cessation, remission, intermission, laxity, relief mitigation. 6. காலத்தசப்பிரமாணத்தி லோன்று, mark or a mode of time in music.

இலகுசம், ஈரப்பலா, a species of bread-fruit tree—Artocarpus lacucha.

இலகுதல், ஒளிசெய்தல், shining, glittering, glistening, twinkling, emitting rays.

இலக்கணம், அடையாளம், sign, a mark or spot. 2. இயல், a chapter, section treating of a series of subjects or things in order. 3. தன்மை, quality, property; inherent, natural or distinguishing characteristics. 4. சிறப்பு, elegance, symmetry, being well proportioned or formed, comeliness, decency, beauty. 5. இலக்கியத்தி னமைதி, philology, grammar.

இலக்கணச்சிதைவு, இலக்கணவழு, grammatical anomaly.

இலக்கணப்போலி, இலக்கணச்சொற் போலுஞ்சொல், words resembling இலக்கணச்சொல்,—being compound words with natural orders reversed, words usual but not elegant.

இலக்கணவழு, இலக்கணப்பிழை, a deviation from grammatical rule, a solecism.

இலக்கணவிளக்கச்சூறாவளி, ஒரு நூல், a treatise on Tamil grammar written in confutation of இலக்கண விளக்கம்.

இலக்கணவிளக்கம், இயற்றமிழ் நூலி லொன்று, a work on Tamil grammar.

இலக்கணி, இலக்கணவித்துவான், a grammarian.

இலக்கணை, இயற்பொருளின் சம் பந்தியை யுணர்த்துவது, poetic license, an allowed deviation from rule in the use of language.

இலக்கம், எண், a number. 2. ஒளி, coruscation, brightness, illumination. 3. குறிப்பு, a mark, an object of aim. 4. இலட்சம், a lakh or one hundred thousand.

இலக்கர், } சீலை, cloth. 2.
இலக்காரம், } கந்தை, a rag.

இலக்கியம், இலக்கண நூற்படி முன் னோர்தந்தசெய்யுள், classical writings according to the usages of which grammatical rules are formed, any ancient classical work or usage. 2. உதாரணம், example from classical writings to illustrate grammatical rules and to show the authority of words or any special usage. 3. குறி, mark or butt.

இலக்கினம், இராசிகளினுதயம், the rising of a sign above the horizon, the oblique ascension or the divisions of the equator which rise in succession with each sign in an oblique sphere—also defined as the arc of the equator which passes the meridian in the same

time with each sign of the eclipitic. 2. the right ascension of the rising point of the ecliptic at any given time.

இலக்குமணன், இலட்சுமணன், } இராமனுக் கிளையோன், the half brother of Rama.

இலக்குமணை, சாரசபட்சியின்பேடு; the female of the Saras, an Indian crane.

இலக்குமி, இலட்சுமி, } சீதேவி, Lukshmi, the goddess, wife of Vishnu. 2. செல்வம், fortune.

இலங்கனம், உணவொழிகை, fasting abstinence—voluntary or prescribed. 2. தாண்டல், leaping, springing, passing over. 3. விதி கடத்தல், violation of moral and religious rules.

இலங்காபுரி, இராவணனகரம், Kandy, the former capital of Ceylon.

இலங்கு, ஒளிசெய்யெனேவல், *imp.* shine be bright, radiate, emit rays, gleam, glitter, coruscate, glisten. 2. குளம், a tank.

இலங்குதல், ஒளிசெய்தல், shining, being bright, glittering, gleaming.

இலங்கை, ஆற்றிடைக்குறை, a rising ground or island in the midst of a river. 2. இலங்கைத்தீவு, the island of Lanka or Ceylon. 3. இராவணனரண், the fort of Ravana supposed to have been south-east of Trincomallee and swallowed up by the sea.

இலசுனம், வெள்வெண்காயம், garlic. 2. மணியின் குற்றத்தொன்று, a white speck or flaw in a gem.

இலச்சினை, ஒரு மோதிரம், a finger-ring with a seal on it, a signet. 2. குறி, a sign.

இலச்சை, வெட்கம், shame.

இலஞ்சி, ஏரி, a lake for irrigation. 2. குணம், disposition, temper, quality. 3. குளம், a natural or artificial tank. 4. கொப்பூழ், the navel. 5. சாரைப்பாம்பு, a rat-snake. 6. புன்கு, a tree—the Dalbergia arborea. 7. மகிழமரம், a flower tree—the Mimusops elengi. 8. மதில், a wall.

இலட்சம், நூறுயிரம், a hundred thousand.

இலட்சியம், குறி, a mark or butt.

இலட்சுமணம், தாளி, a kind of plant —Convolvulus.

இலட்டுகம், அப்பவர்க்கம், meal-cakes in general, 2. தோசை, a large flat cake. 3. பொரிமாத் திரளை, a conical rice-meal cake, sweet cake or ball.

இலணை, அரசு, a tree—Ficus.

இலண்டம், யானையிலத்தி, the dung of elephants.

இலதை, கோற்கொடி, a creeper, a running plant.

இலந்தை, ஒரு மரம், a thorny tree yielding a small fruit like the mulberry,—the jujuba, Ziziphus jujuba. 2. குளம், a tank.

இலபனம், வாய், the mouth.

இலப்தம், பாசிதம், quotient.

இலம்பகம், அத்தியாயம், a chapter or section in works of history or mythology. 2. நுதலணிமாலை, a chain for the forehead of women. 3. மாலை, a garland or chain (ornamental).

இலம்படை, இடுக்கண், distress, affliction. 2. தரித்திரம், poverty.

இலம்பம், இலம்பனம், } தொங்குவது, anything hanging, a pendulum. 2. மாலை, garland. 3. (*in astronomy*) the complement of the latitude or arc between the pole and the zenith of the given place, which is the same as the altitude of the equator. 4. நிறுதிட்டம், perpendicular.

இலம்பாடு, தரித்திரம், poverty. 2. வறுமை, want, destitution, the absence of a thing.

இலம்பாட்டோன், தரித்திரன், a poor man.

இலம்பிகை, அண்ணாக்கு, (*anatomy*) uvula.

இலம்பிதமதி, இலம்பிதம், } சுத்தசசிபுடம், கிராந்தி மண்டலத்திற் கணக்கிட்ட சந்திரபுடம், Moon's longitude reduced to the ecliptic.

இலம்பிதச்சா, உச்சராசி, the sign of right ascension.

இலம்பிதம், தொங்கல், having. 2. உச்சம், right ascension.

இலம்பிதவருக்கன், the sun in his right ascension.

இலம்போதரன், விநாயகன், Ganesa, the large-bellied.

இலயம், கூத்தின்விகற்பம், a kind of dance. 2. கூத்து, dancing. 3. சாவு, death, destruction. 4. ஒடுக்கம், absorption, transformation, involution, reduction of one element into another, as of earth into water, water into fire, fire into air, and air into ether. 5. மறைவு, concealment, disappearance. 6. கரைவு, dissolution, fusion.

இலயஸ்தானம், ஒடுங்குமிடம், the primitive of the evolved forms of nature, and of the transformations or assumed appearances of deity, into which they all become at last resolved.

இலயித்தல், சாதல், dying, perishing, coming to destruction. 2. ஒடுங்கல் being absorbed, as drops in water, the soul in the deity, or as one element in another, being resolved into.

இலயை, தாளப்பிரமாணம் பத்திலொன்று, one of the ten rules of time in music.

இலலாடம், நெற்றி, the forehead.

இலலாடலிபி, தலையிலெழுத்து, supposed writing on the forehead by Brahma, fate, destiny.

இலலிதம், அழகு, beauty. 2. ஓரிராகவிகற்பம், one of the thirty-two tunes.

இலலிதை, இராகமுப்பத்திரண்டிலொன்று, one of the thirty-two tunes. 2. பார்வதி, a name o Parvati.

இலவங்கம், ஒரு வாசனைப்பண்டம், one of the five spices—wild cinnamon.

இலவணபஞ்சாட்சரம், ஒரு மந்திரம், a magical circle or diagram. 2. ஒரு மாந்திரிக நூல், the name of a book containing rules for jugglery or legerdemain.

இலவணபாஷாணம், ஒரு பாஷாணம், one of the thirty-two kinds of prepared arsenic.

இலவணம், உப்பு, salt. 2. உவர்ப்பு, saltness.

இலவந்திகை, வாவியந்திரம், a machine with leathern buckets and wheel for drawing water from tanks.

இலவம், இலவு, } ஒரு மரம், the silk cotton tree, whose produce is used for pillows &c.

இலவம், எண்கணப்பொழுது, a minute division of time. 2. அற்பம், smallness, littleness. 3. ஏழு தீவுகளிலொன்று, one of the seven islands. 4. பூசை, worship.

இலவன், இராமன் முதல்மைந்தன், ths elder son of Rama.

இலளிதபஞ்சகம், ஓரிராகவிகற்பம், one of the tunes of the Hindus.

இலளிதம், அழகு, beauty. 2. மாதுரியம், pleasingness. 3. சரசம், wanton dalliance. 4. உபசாரம், courteousness. 5. சிவகாமமிருபத்தெட்டிலொன்று, one of the twen y-eight agamas. 6. ஓரிராகம், one of the Hindu tunes.

இலளிதை, பார்வதி, Parvati.

இலாகுவம், இலாகு, } சாமர்த்தியம், dexterity, agility, facility.

இலாகன், ஒரு மீன், a fish.

இலாக்கை, ஈர், a nit, the egg of a louse.

இலாங்கலி, கலப்பை, a plough. 2. செங்காந்தள், the red காந்தள், creeper called also November flower. 3. தென்னைமரம், a cocoanut tree.

இலாங்கூலம், வால், the hairy tail of an animal.

இலாஞ்சனம், இலாஞ்சனை, } அடையாளம், a mark, sign, symbol. 2. பெயர், a name, an appellation. 3. முத்திரை, seal, signet bearing the name or symbol of the owner. 4. கீர்த்தி, fame, markworthiness.

இலாஞ்சி, ஏலம், cardamom—Elettaria cardamomum.

இலாடம், ஒரு தேசம், the name of a country, the upper part of the Deccan. 2. நெற்றி, the forehead.

இலாடசிந்தூரம், குதிரைக் குளம்பிரும்பைப் புடஞ்செய்தபொடி, a red powder calcined from a horse's shoe.

இலாடன்பருத்தி, ஒரு வகைப் பருத்தி, a cotton shrub—Gossipium.

இலாபம், ஆதாயம், gain, profit advantage.

இலாமச்சை, இலாமிச்சை, } ஒரு வாசனைப்புல், a species of grass with a fragrant root, the cuscus—Andropogon muricatum.

இலாயம், குதிரைப்பந்தி, a stable.

இலாலனம், இலாலனை, } சீராட்டு, fondling, caressing, coaxing a child, wife &c.

இலாலி, நயஞ்செய்கை, wheedling, coaxing, foundling. 2. கற்பழிப்போன், a seducer.

இலாவணியம், அழகு, great beauty, comeliness, gracefulness.

இலாவிருதம், இளாவிருதம், } நவகண்டத்தொன்று, one of the nine varushas or division of the known world.

இலிகி, எழுதுகை, writing, painting, making lines. 2. எழுத்து, a letter.

இலிகிதம், கையெழுத்துப்பிரதி, written books, manuscripts. 2. கலைஞானம் அறுபத்து நான்கினொன்று, the art of writing, penmanship, chitography—one of the sixty-four கலைஞானம்.

இலிகுசம், எலிமிச்சை, the lime tree.

இலிங்ககோளம், கோசகோளம், (*Anatomy*) glans penis.

இலிங்கசங்கமம், symbols of the sexes united—probably a personification of the active energy of the Deity and matter, represented in metal, &c., or formed in the mind as objects of contemplation and worship.

இலிங்கபுடோல், ஐவிரலி, a creeper —Bryonia.

இலிங்கபுராணம், பதினெண்புராணத்தொன்று, one of the eighteen puranas.

இலிங்கம், அடையாளம், a sign, mark, token, symbol. 2. ஆண்குறி, the penis. 3. இங்குலிகம், vermilion. 4. சிவலிங்கம், the phallus or linga—a representation of the membra virilet mulieris used in temples as an object of worship, and regarded as deity under this emblem.

இலிங்கிகள், இலிங்கர், } முனிவர், Rishis or sage ascetics.

இலிபி, எழுத்து, writing. letters, characters, painting, drawing. 2. விதி, destiny, fate, as written in the head.

இலிர்த்தல், சிலிர்த்தல், standing erect—as hair with ecstatic joy or love, also with anger, cold, &c. 2. தளிர்த்தல், sprouting, germinating.

இலீக்கை, ஈர், a nit, the egg of a louse, a young louse.

இலீலாவதி, a wanton or sportful woman. 2. ஒரு பீஜகணிதத்தின் பேர், the name of an algebraical treatise in Sanskrit by Baskarachariar (since translated into English).

இலீலை, விளையாட்டு, play, sport. 2. சரசம், amorous, wanton sport. 3. புணர்ச்சி, coition.

இலுதை, அணில், a squirrel.

இலுப்பை, இலுப்பைமரம், long-leaved bassia—the Bassia longifolia.

இலேகன், எழுதுவோன், a writer, clerk, copyist, a scribe, an amanuensis.

இலேகர், வானோர், the gods, celestials.

இலேகனம், எழுத்து, writing.

இலேகியம், நக்கல், licking. 2. ஒரு மருந்து, a lambative, an electuary or medicine to be taken with the tongue.

இலேகனி, எழுத்தாணி, a style, pen, pencil, a paint-brush.

இலேகை, எழுத்து, a letter. 2. சித்திரம், delineation, painting, drawing.

இலேசம், காலவிரைவு, a moment, an indivisible or minute portion of time, 2. நொய்மை, smallness, minuteness, subtility, anything small. 3. ஓரலங்காரம், a figure in rhetoric. 4. இலேசு, lightness, anything light.

இலேசு, விதப்புக்கிளவி, (*in grammatical rules*) short comprehensive words including further particulars.

இலேசுணம், அரிதாரம், orpiment.

இலேந்து, } கல்லுப்பு, common
இலேவுந்து, } salt in masses (*M. Dic.*)

இலேபம், வால்மிளகு, long pepper—Piper cubeba.

இலேபனம், பூச்சு மருந்து, medicine for smearing, a plaster, an ointment. 2. வாசனைத் தைலம், fragrant ointments. 3. தாதுவலுவிற்குப் பூசுமருந்து, an aphrodisiac ointment for exciting venery. 4. புணர்ச்சி, erection of penis, copulation.

இலேம்புகம், நிலக்கடம்பு, a plant—justicia (*M. Dic.*)

இலை, உலோபம், miserly character. 2. தழை, a vegetable leaf, foliage. 3. வெற்றிலை, betel-leaf.

இலைக்கிளி, தத்துக்கிளி, a grasshopper with leaf-like wings.

இலைக்கொடி, வெற்றிலைக்கொடி, the betelcreeper, piper betel.

இலைங்கம், அட்டாதச புராணத்தொன்று, one of the eighteen puranas.

இலையுதிர்வு, முதுகாடு, an ancient forest.

இலௌகீகம், உலகசம்பந்தம், mundanity, secularity as opposed to spirituality, worldliness, what prevails among men.

இல், இடம், a place. 2. இராசி, constellation or zodiacal sign. 3. இல்வாழ்க்கை, domestic life. 4. ஐந்தனுருபு, implying similitude, removal, material cause, boundary or direction. 5. ஏழனுருபு, a form of the seventh case or local ablative. 6. சாவு, death, destruction, non-existence. 7. தலைவி, a lady. 8. மனைவி, a wife. 9. வீடு, a house.

இல்லடை, அடைக்கலம், anything lodged in a house for security, a deposit.

இல்லம், தேற்றுமரம், a species of tree, the water-clearing-nut tree—the strychnos potatorium. 2. வீடு, a house, home, the domestic state, domestic life.

இல்லல், நடத்தல், the act of frequenting house or place.

இல்லவன், }
இல்லான், } கணவன், a husband.
இல்லோன், }
2. தலைவன், the head of a house.

இல்லவள், தரித்திரி, a destitute woman. 2. மனைவி, a wife.

இல்லவை, இல்லாப்பொருள், things that do not exist. 2. மனைப்பொருள், things that belong to the house.

இல்லாண்முல்லை, புறப்பொருட்டுறையுளொன்று, (*in love poetry*) the lament of a warriors mistress on account of his absence in the camp.

இல்லாமை, தரித்திரம், want, poverty, destitution.

இல்லாள், தரித்திரி, a destitute woman. 2. தலைவி, a lady. 3. மனைவி, a wife.

இல்லி, பொள்ளல், a small hole in a vessel, utensil, tile, &c.

இல்லிடம், அகலம், breadth.

இல்லுனர், மேவினர், friends.

இல்லென்றல், இல்லெனல், denying. 2. சாதல், death, extinction.

இல்லை, இன்மை, negation. 2. சாதல், death, extinction of life.

இல்லோன், தரித்திரன், a poor man, a destitute person, he who is in want. 2. புருடன், a husband.

இவக்காண், இங்கே (*in poetry*), here. 2. இந்நேரமளவும், all this time.

இவண், இவ்விடம், this, place, here, this life.

இவர்தல், ஆசை, desire. 2. ஆசைப் பெருக்கம், excessive desire. 3. எழுச்சி, rising, ascension. 4. ஏறுதல், mounting, climbing, getting up or upon. 5. செறிவு, being close, crowded. 6. சேறல், passing, proceeding, going. 7. நடத்தல், conducting.

இவவு, இழிவு, inferiority, baseness, degradation.

இவறல், } ஆசை, desire. 2.
இவறன்மை, } ஆசைப்பெருக்கம், intense desire. 3. மறதி, forgetfulness.

இவன், சுட்டுச்சொல், this man, a demonstrative noun denoting a person standing near by.

இவுளி, குதிரை, a horse.

இவுளிமறவன், குதிரைவீரன், a cavalier, a horseman, a warrior.

இவை. இவ், these things.

இவ், இவை, these things. 2. சுட்டுச் சொல், a demonstrative, pronoun.

இழத்தல், இழந்துபோதல், losing, forfeiting, suffering loss, being bereaved of.

இழப்பு, இழத்தல், loss, privation, forfeiture.

இழவு, இழத்தல், loss, deprivation.

இழிசொல், பழிச்சொல், calumny, disgraceful or improper language, of which four kinds are enumerated, viz.: 1. கோள்குறளை, an invidious or injurious report, talebearing, aspersion, slander, backbiting. 2. பொய்ம்மொழி, lying, falsehood. 3. கடுஞ்சொல், harsh expressions, irritating language, scolding. 4. பயனில் சொல், nonsense, idle talk, vain expressions.

இழிஞர், சண்டாளர், low caste people, the vulgar, ignoble persons.

இழிதகவு, இழிவு, inferiority, meanness, disgrace. 2. எளிமை, poverty, destitution.

இழிதல், இறங்குதல், descending, dismounting, sinking. 2. இழிவுறுதல், being reduced in character, estimation, rank or circumstances, being degraded, disgraced, degenerating.

இழித்தல், இறக்குதல், causing to descend, lowering, letting down.

இழிபு, தாழ்வு, lowness, inferiority, meanness.

இழிப்பு, நவரசத்துளொன்று (*in rhetoric*), disgust as—one of the passions transformed to poetry.

இழிவு, ஈனம், meanness, insignificance. 2. குற்றம், fault, blemish, deviation from rule, misdemeanour. 3. கேடு, ruin, decay, destruction. 4. தாழ்வு, inferiority, lowness in rank or character, meanness. 5. நிந்தை, contempt, disgrace, ignominy, dishonour. 6. பள்ளம், a hollow or cavity.

இழுக்கம், தளர்வு, failure, deviation, swerving, shrinking, flinching from. 2. ஈனம், fault, defect.

இழுக்கல், தளர்தல், slipping, sliding, falling, deviating from the course. 2. வழுக்குநிலம், slippery ground.

இழுக்கு, ஈனம், a fault, defect, deficiency, blemish. 2. கேடு, ruin. 3. தளரென்னேவல், *imp.* slacken, slide. 4. பொய், falsehood. 5. மறதி, forgetfulness.

இழுது, தித்திப்பு, sweetness, sweet. 2. நெய், ghee, butter. 3. நிணம், fat, grease.

இழுதை, அறிவிலான், an ignorant person, a simpleton. 2. பொய், falsehood.

இழுமு, தித்திப்பு, sweetness.

இழுமெனல், அநுகரணவோசை, a word imitative of sound. 2. இனிமை, sweetness, pleasantness, agreeableness to the touch or ear. 3. சீர்மை, smoothness.

இழுவை, ஒரு முட்செடி, a thorny shrub.

இழை, ஆபரணம், a jewel, an ornament. 2. இழையென்னேவல், *imp.* do, perform, mix, compound. 3. நூற்கிற நூல், yarn, single twisted thread. 4. எண்வனப்பி னொன்று, one of the eight வனப்பு, or ornaments of style.

இழக்கை, கலத்தல், mixing, compounding. 2. செய்தல், acting, doing, performing (see இழைத்தல்).

இழைதல், கலத்தல், being mixed. 2. உரிஞல், rubbing one against another, chafing. 3. உட்குழைதல், being tender as the mind through love.

இழைத்தல், கலப்பித்தல், causing to mix, compounding. 2. செய்தல், doing acting. 3. மணிபதித்தல், enchasing, setting precious stones.

இழைபு, செய்யுள்வனப்பிலொன்று, one of the beauties of composition—the employing of approved words, avoiding those with hard consonants.

இளங்கோக்கள், வைசியர்பொது, the third of the regular castes—the Vaisya.

இளஞ்சூல், பயிரிளகங்திர், young ears of corn not yet shot forth.

இளமை, இளையதன்மை, youth, tenderness, immatureness, juvenility, infancy. 2. உன்மத்தம், indiscretion, immaturity of intellect, illusion.

இளம்படி, பெண், a woman, a lady.

இளம்புல், அறுகு, a grass—the Agrostis linearis.

இளவரசு, பட்டத்திற்குரிய இராசகுமாரன், the heir apparent.

இளவல், இளையோன், a lad, a youth. 2. குழந்தை, a child, babe. 3. தம்பி, a younger brother.

இளவுச்சம், உச்சத்திற்கணிமை, (*in astrology*) the situation of a planet a little before it reaches the meridian.

இளவுழிபாடு, நிலையின்மை, fickleness, unsteadiness. 2. சிறுபிள்ளை கல்வி, elements, rudiments.

இளவேனில், சித்திரை வைகாசியின் பருவம், a milder period of the hot season including the months of April and May. 2. வெப்பம், heat.

இளி, அவமதிச்சிரிப்பு, ridicule, derision, silly laughter. 2. இகழ்ச்சிக் குறிப்பு, a token of scorn or contempt. 3. இணக்கம், union, junction. 4. சிரிப்பு, lau hter. 5. நெற்றியிற்பிறக்குமிசை, a cerebral tone in singing, one of the seven tones of the gamut, supposed to proceed from the forehead. 6. யாழிலோர் நரம்பு, a string of the lute whose sound is in unison with the cerebral tone.

இளிவு, இழிவு, meanness, inferiority.

இளை, இளமை, tenderness. 2. இளைத்தலைச் செய்யெனேவல், *imp.* grow weary, be worn out. 3. காவற்காடு, a jungle, as a means of defence. 4. தலைக்காவல், main guard, a strong watch to a fortress. 5. மேகம், a cloud. 6. வேலி, a hedge, fence. 7. புதன் மனைவி, the son of the king. Karoottaman, who by a curse was changed into a woman and became the wife of Mercury.

இளைஞர், இளையோர், youths, lads. 2. தம்பியர், younger brothers.

இளைத்தல், மெலிதல், growing emaciated, being lean.

இளையோன், தம்பி, a younger brother. 2. இளைஞன், a young

person, a lad. 3. முருகன், Skanda. 4. இலக்குவன், Lakshman, the younger brother of Rama.

இளையாள், இலக்குமி, Lakshmi. 2. தங்கை, a younger sister.

இறகர், இறகு, a feather, a quill. 2. சிறகு, a wing, pinion. சிறை. plumage.

இறகு, சிறகு, a wing, pinion.

இறங்கர், குடம், a water-pot.

இறங்கல், இழிதல், descending, dismounting, getting down a tree, a precipice, &c.

இறடி, கருந்தினை, a species of grain —black millet.

இறத்தல், சாதல், dying, extinction. 2. நடத்தல், transpiring, passing. 3. மிகுதி, excess, surpassing in number, measure, degree, &c.

இறந்தகாலம், சென்றகாலம், past time, past tense.

இறந்துபடல், சாதல், dying.

இறந்தோர், செத்தோர், the dead, departed spirits, the manes.

இறந்தோர்சேர்வனம், சுடுகாடு, a cemetery, the place where the dead are deposited, whether burnt or buried.

இறப்பு, சாவு, death, dying, extinction. 2. போக்கு, passage, passing, loss of time. 3. மிகுதி, excess, prominence, superabundance. 4. வளைவி, a sloping shed.

இறவி, இத்திமரம், the இத்தி, tree. 2. சத்துதீவிலொன்று, the second of the seven islands according to the puranic geography.

இறல், இறுதல், breaking, being snapped off—as a stick, a rope, perishing. 2. கிளிஞ்சில், a bivalve shell-fish, a muscle. 3. கேடு, perishing, destruction, decaying, mouldering, crumbling.

இறவு, இறப்பு, dying, death. 2. இறால், a shrimp, prawn. 3. அழிவு, decay. 4. மிதை, excess.

இறவுளர், குறிஞ்சிநிலமாக்கள், mountaineers, those who live by the chase.

இறவை, ஏணி, a ladder. 2. கூடை, a basket for irrigation.

இறால், இடபவிராசி, Taurus of the zodiac. 2. எருது, a bull. 3. ஒரு மீன், a shrimp, a prawn. 4. கார்த்திகை நாள், the third lunar mansion, pleiades. 5. தேன்கூடு, a honey-comb.

இறுதல், ஒடிதல், breaking, being snapped off as a stick, a rope, being severed as a limb, being broken, lopped or cut off, being truncated. 2. சாதல், perishing, dying, being slain. 3. முடிதல், ending, terminating, ceasing, becoming extinct. 4. கெடுதல், decaying, mouldering, crumbling, being corroded, decaying—as a bone.

இறுக்கர், பாலைநிலமாக்கள், inhabitants of the sultry deserts who are said generally to live by plunder.

இறுக்கல், இறுகச்செய்தல், tightening, straining close or hard. 2. உடுத்தல், putting on clothes, dressing. 3. வியங்கோள்முற்று, *opt.* may you tighten, put on clothes.

இறுங்கு, ஒருவகைச் சோளம், a species of cholam.

இறுதல், ஒடிதல், breaking, being scapped off. 2. கெடுதல், perishing, dying, decaying.

இறுதி, சாவு, death, extinction, perishing. 2. முடிவு, end, termination, ending, expiration of a term, &c. 3. எல்லை, limit, bound, extent.

இறுதிநிலைத்தீவகம், } தீபகச்சொற்
இறுதிவிளக்கு, }
கள் கடையினிற்பது, a figure in rhetoric, an ellipsis.

இறுத்தல், இறையிருத்தல், paying tax. 2. ஒடித்தல், breaking a branch, a bough, &c., snapping asunder. 3. சொல்லுதல், saying in reply, answering. 4. தங்கல், abiding, staying, tarrying. 5. வெட்டல், cutting.

இறுப்பு, குடியிறை, tax, tribute. 2. இறுத்தல், paying tax, breaking, saying in reply, abiding, cutting.

இறுமாப்பு, மிகுமகிழ்ச்சி, transport, rapture, spiritual joy. 2. ஏமாப்பு, pride, self-conceit arrogance, vain glory.

இறும்பல், அதிசயம், admiration.

இறும்பு, குறுங்காடு, a thicket. 2. சிறுமலை, a hill, hillock. 3. தாமரைப்பூ, the lotus flower. 4. தூறு, bushes, shrubs. 5. மலை, a mountain. 6. வண்டு, a beetle. 7. காந்தள், a plant—Gloriosa superba.

இறும்பூது, அதிசயம், wonder, matter of surprise, wonderful or surprising event. 2. சிறுதூறு, shrubs, bushes. 3. தாமரைப்பூ, the lotus flower. 4. மலை, a hill or mountain.

இறுவதஞ்சாமை, வணிகரெண்குணத்தொன்று, fearlessness of loss—one of the eight qualities of a merchant.

இறுவரை, முடிவு, end.

இறுவாய், இறுதி, end, termination.

இறை, அரசன், a king, an independent sovereign, a monarch. 2. இறகு, a feather, a quill, a wing, plumage. 3. இறையென்னுமேவல், *imp.* pour out, lave, irrigate. 4. உயர்ச்சி, height. 5. உயர்ந்தோன், superior, master, lord. 6. ஊழித்தீ, the deluge of fire. 7. எப்பொருட்குமிறைவன், the supreme being. 8. கடன், debt, obligation. 9. காலவிரைவு, a moment, an instant, a portion of time. 10. குடியிறை, tax, tribute, impost, the share of the produce accruing to the king. 11. கையிறை, the lines on the palm and inside of the fingers. 12. சிவன், Siva. 13. சிறுமை, a particle, an atom, anything minute. 14. தங்கல், a halt, a halting place. 15. தலை, the head. 16. பிரமன், Brahma. 17. பெருமை, greatness, superiority, dignity, eminence. 18. மூத்தோன், a great personage. 19. வருத்தம், pain, distress, suffering. 20. விடை, answer, statement, assertion. 21. வீட்டிறப்பு, the inside sloping part of the roof of a house, the eaves.

இறைச்சிப்பொருள், கருப்பொருள், the same as கருப்பொருள். 2. In அகப்பொருள், the meaning implied in the கருப்பொருள்; it is more subtle than in the உள்ளுறை உவமம்; and, generally, it is meant to show the indifference of the lover to his love.

இறைஞ்சல், குனிதல், bowing down, stooping, inclining the head. 2. வணங்கல், making obeisance worshipping by bending or prostration. 3. வியங்கோள்முற்று (*opt.*), of இறைஞ்சு.

இறைஞ்சி, மரவுரி, the bark of a certain tree used for clothing by ascetics and foresters.

இறைதிரிதல், அரசுநீதிதிறம்பல், swerving from the rules of justice.

இறைபயப்பது, செவ்வன் விடையல்லாத விடை. (*in gram*), an indirect answer.

இறைமகள், இராஜகுமாரத்தி, a princess, a lady.

இறைமகன், முருகன், Skanda. 2. விநாயகன், Ganesa. 3. இராஜகுமாரன், a prince.

இறைமாட்சி, அரசர் மாண்பு, royalty, royal dignity, royal excellencies.

இறைமாண்டார், அரசர், kings, those who possess regal dignity.

இறைமை, தலைமை, superiority, eminence, excellence, greatness. 2. தெய்வத்தன்மை, divinity, the divine nature. 3. அரசாட்சி, royalty, dominion, government.

இறைமையாட்டி, தலைவி, a lady, a mistress. 2. அரசி, a queen.

இறையவன், } கடவுள், the Deity,
இறையோன், } Supreme Being. 2. சிவன், Siva.

இறையனாரகப்பொருள், } ஓரிலக்
இறைவனாரகப்பொருள், }

கண நூல், a grammatical work from Siva.

இறைவன், அரசன், king, an emperor, governor. 2. கடவுள், the Supreme Being, Lord. 3. குரு, priest. 4. சிவன், Siva. 5. பிரமன், Brahma. 6. மூத்தோன், an elder brother. 7. தந்தை, a father. 8. தலைவன், a chief, lord, master, a superior, senior.

இறைவன்வேம்பு, சிவனார்வேம்பு, a shrub—Indigofera aspalathoides.

இறைவாசநல்லூர், ஓரூர், the name of a town.

இறைவி, தலைவி, a lady, a mistress. 2. அரசி, a queen. 3. அன்னை, mother. 4. குருவின் மனைவி, a priest's wife.

இறைவை, இறைகூடை, a basket for irrigation. 2. ஏணி, a ladder. 3. நீரிறைக்கு மரப்பத்தல், a a trough for casting out water.

இற்செறித்தல், } அகப்பொருட்
இற்செறிப்பு, }
டுறையிலொன்று, (*in love poetry*) confining a young woman at home, not suffering her to frequent the cornfield as before.

இற்பிறப்பு, குடிப்பிறப்பு, descent from a good family, noble extraction, illustrious birth.

இற்புலி, பூனை, the domestic tiger—a cat.

இற்று, இத்தன்மைத்து, it is of this nature. 2. சாரியை, a connective particle.

இற்றை, இன்று, to-day, this day.

இற்றைநாள், இன்று, this day, to-day.

இனமொழிவிடை, இனத்தைச் சொல் விடை, one of the five kinds of இறைபயப்பது, an indirect answer.

இனமோனை, இனவெழுத்தால் வரு மோனை, a species of alliteration in which the first letter of the first foot of a line is followed by a letter, specified in prosody as related to it, at the beginning or one or more feet.

இனம், குலம், class, kind, species, caste sort. 2. கூட்டம், a company, collective body. a society, an association. 3. சுற்றம், kindred, relations, connexions, affinity, relationship. 4. திரள், flock, herd, shoal, swarm. 5. பசுக்கூட்டம், a herd of cows. 6. அரசர்க்குறுதிச் சுற்றம், king's ministers, attendants of king's royal household.

இனவெதுகை, இனவெழுத்துக்களா லாகுமெதுகை, a species of rhyme in which the second letter of the first foot in two or more lines of a stanza is of the same இனம், class; it is of three kinds வல்லினவெதுகை, மெல்லினவெதுகை and இடையினவெதுகை.

இனவெழுத்து, இனமாயுள்ளவெழுத்துக்கள், related letters—as the hard letters are to their respective soft ones or vice versa; also letters formed from the same sources which in the consonants run in couplets through the alphabet, and the long vowels to the short, and vice versa.

இன்னிலை, சூரியன் நிற்குநிலை, the quarter where the sun may at any hour happen to be.

இனன், அரசன், king. 2. சந்திரன், the moon, 3. சூரியன், the sun.

இனி, இப்போழ்து, now, immediately, presently. 2. பின்பு, henceforth, hereafter. 3. இப்பால், a particle of place, from this limit onward.

இனிது, இனிமையுடையது, that which is sweet, pleasing. agreeable.

இனிப்பு, இனிமை, sweetness, deliciousness, pleasantness, agreeablenss.

இனிமை, தித்திப்பு, sweetness, deliciousness.

இனியசொல், இன்சொல், a sweet word, pleasant discourse, complimentary, courteous language.

இனியவைகூறல், நயச்சொல், pleasant, courteous speech, title of a chapter in குறள்.

இனியவை நாற்பது, ஒரு நூல், the name of a book containing forty agreeable aphorisms.

இனைதல், இரங்குதல், sympathizing, commiserating. 2. துயருறல், grieving, sorrowing, regretting, being afflicted in mind.

இனைத்தல், ஒலித்தல், sounding. 2. வருத்தல், afflicting.

இனைத்து, இத்தன்மைத்து, such, thus, in this manner. 2. இவ்வள விற்று, so much, thus much.

இன், ஐந்தனுருபு, the common form of the fifth case. 2. சாரியை, an expletive particle. 3. இறந்தகால விடைநிலை, a particle characteristic of the past tense. 4. இனிய, sweet, pleasant, agreeable.

இன்சொல், see இனியசொல்.

இன்கண், இன்பம், delight, pleasure.

இன்சொல்லுவமை, ஒருவமையணி, (*in rhetoric*) a comparison between two things, one of which, though excelling, bears a resemblance to the other.

இன்பம், } அகமகிழ்ச்சி, a delight,
இன்பு, } pleasure, happiness, bliss. 2. இனிமை, agreeableness. 3. நவ ரசத்திலொன்று, one of the nine passions or emotions of the mind.

இன்பன். கணவன், a husband.

இன்புறல், மகிழ்ச்சிபொருந்தல், enjoying, pleasure, being happy, rejoicing, experiencing delight, being satisfied.

இன்பூரல், சாயவேர், madder, dye-root,—Oldenlandia umbellata.

இன்மை, இல்லாமை, non-existence, absence of a quality or thing, absolute negation, nothingness. 2. வறுமை, poverty, adversity.

இன்றியமையாமை, இல்லாது முடியாமை, indispensableness, absoluteness, necessity, a *sine qua non.*

இன்று, அசைச்சொல், an expletive. 2. இந்நாள், to-day, at present.

இன்ன, இத்தன்மைய, such, of such, of this kind or manner. 2. உவமை யுருபு, a particle of comparison.

இன்னணம், இவ்விதம் (a poetic contraction of இன்னவண்ணம்) in such a manner, thus.

இன்னலம், இனிய நலம், delight, merit, virtue.

இன்னல், தீமை, evil. 2. துன்பம், pain, suffering, affliction, vexation.

இன்னு, தீமை, evil, mischief, injury. 2. துன்பம், pain, affliction, distress.

இன்னுங்கு, துன்பம், distress, affliction, sorrow.

இன்னுதார், பகைவர், foes, enemies, the unkind, the evil, the malevolent.

இன்னுது, தீது, evil, unpleasantness.

இன்னுநாற்பது, ஒரு நூல், the name of a book containing forty stanzas on various evils.

இன்னுமை, இனிதாகாமை, unpleasantness. 2. துன்பம், affliction, distress, sorrow. 3. தீமை, evil, mischief, injury.

இன்னுர், இத்தன்மையர், persons of such qualities. 2. பகைவர், foes, enemies.

இன்னிசை, இராகம், a tune. 2. ஏழு நரம்புள்ள வீணை, a kind of lute with seven strings.

இன்னிசைகாரர், பாணர், musicians, players on the lute.

இன்னியம், இனியவாத்தியம், a sweet sounding instrument.

இன்னியர், பாடுவர், singers.

இன்னே, இப்போழ்து, now, at present. 2. இத்தன்மை, thus, in this manner, such.

ஈ

ஈ, ஈ, fly. 2. ஒரெழுத்து, the fourth vowel of the Tamil alphabet. 3. கொடுவென்னேவல், *imp.* give, give alms, bestow, grant. 4. முன்னிலையசைச்சொல், a poetic

expletive used in the second person. 5. வண்டு, a beetle. 6. ஈப் பொது, a fly in general. 7. தேனீ, a bee.

ஈகம், சந்தனம், sandal tree—the Santalum album.

ஈகை, இண்டங்கொடி, a thorny creeper—the Mimosa rubicaulis. 2. ஈதல், giving, bestowing, granting, liberality. 3. கற்பகம், one of the fabulous trees of swerga, which yields every thing desired. 4. பொன், gold, treasure, wealth. 5. மேகம், a cloud.

ஈகையன், ஈகையாளன், } கொடுப்போன், a liberal man, a benefactor.

ஈங்கம், சந்தனமரம், sandal wood or tree.

ஈங்கு, இண்டங்கொடி, the இண்டு, creeper. 2. இவ்விடம், this place.

ஈங்கை, இண்டங்கொடி, the Mimosa rubicaulis.

ஈசதேசாத்தி, பெருமருந்து, a creeper —Aristolochia Indica.

ஈசத்துவம், ஈசிதை, } அட்டசுத்தியினொன்று, supreme dominion over animate or inanimate nature—one of the eight superhuman powers.

ஈசனுள், ஆதிரைநாள், the sixth lunar mansion.

ஈசன், அயன், Brahma. 2. அரசன், a king, an emperor, a ruler, a superior. 3. அரன், Siva. 4. அரி, Vishnu. 5. எப்பொருட்குமிறைவன், the lord of the universe. 6. கடவுள், God. 7. குரு, priest. 8. மூத்தோன், a senior, an elder, an aged person.

ஈசன்மைந்தன், முருகன், Skanda. 2. விநாயகன், Ganesa. 3. வீரபத்திரன், Virapatra.

ஈசன்றார், கொன்றைமாலை, the garland of the Cassia. 2. கொன்றை (by metonymy), the Cassia (*M. Dic.*).

ஈசானமேரு, சிவனுறைவெள்ளிமலை, a silver mountain on which Siva is supposed to reside.

ஈசானம், ஈசானியம், } சிவனைம்முகத்தொன்று, one of the five faces of Siva, implaying universal government. 2. வடகீழ்த்திசை, the north-east quarter.

ஈசானன், ஈசானியன், } சிவன், Siva. 2. கடவுள், the Supreme Being. 3. வடகீழ்த்திசை பாலகன், the regent of the north-east.

ஈசானி, சிவன்பஞ்சசத்தியிலொன்று, one of the Satties or female energies of Siva.

ஈசுரமூலி, பெருமருந்து, a medicinal plant—Aristolochia Indica.

ஈசுரவிந்து, பாதரசம், quicksilver.

ஈச்சுரன், ஈசுவரன், } கடவுள், God, the Supreme Being. 2. சிவன், Siva.

ஈசுரன்முகம், the five faces of Siva; they are, 1. ஈசானம், charged with universal dominion. 2. தற்புருடம், with preservation. 3. அகோரம், with destruction. 4. வாமம், with brightness, illumination. 5. சத்தியோசாதம், with production, creation.

ஈசுவரதரு, கடம்பு, a tree—Barringtonia racemosa.

ஈசுவரி, பார்வதி, Parvati.

ஈசுவரிநாதம், ஈசுவரிவிந்து, } கந்தகம், sulphur.

ஈசெல், சிறகுள்ள கறையான், the white ant when winged—Termes fatale.

ஈசை, ஏர்க்கால், the pole or shaft of a plough.

ஈச்சுர, ஒரு வருடம், the eleventh year of the Hindu cycle.

ஈச்சுரம், சிவதத்துவம் ஐந்தினொன்று, the second of the five degrees of religious power derived from Siva.

ஈஞ்சை, கொலை, murder. 2. நிந்தை, disgrace, reproach, stigma (சேதுப் புராணம்).

ஈடணை, விருப்பம், desire. 2. ஈடணத்திரயம், the three desires which men commonly have: first for

children, second for women and third for gold or riches.

ஈடிகை, தூரிகை, a painter's brush.

ஈடு, உவமை, comparison, equality, match. 2. குழைதல், thickening, becoming slimy. 3. பெருமை, greatness, dignity, moral excellence. 4. வலி, power, strength, robustness. 5. இலக்காதல், liability, exposure, obnoxiousness, being subject to, falling a prey (சத 63).

ஈட்டம், கூட்டம், a collection, assemblage, multitude, company. 2. திரள், a flock, herd, shoal, &c. 3. தேட்டம், acquisition, accumulation.

ஈட்டல், சம்பாதித்தல், acquiring, procuring. 2. கூட்டல், collecting, gathering, amassing, accumulating, storing up.

ஈட்டி, சவளம், a lance, a spear, a pike.

ஈட்டியது, தேடியது, what is acquired, obtained, the results in this life, of actions in former births.

ஈண்டல், கூட்டம், crowding, joining. 2. நிறைதல், spreading, being diffused, as salt in water.

ஈண்டு, ஈண்டென்னேவல், *imp.* join, come together, crowd, press. 2. இவ்வண்ணம், in this manner, so. 3. இவ்விடம், this place, in this place, here, the present birth. 4. சீக்கிரம், haste, speed, despatch. 5. புலித்தொடக்கி, a shrub—Caesalpinia.

ஈண்டை, இவ்விடம், this place.

ஈண்டையான், இவ்விடத்தான், a person of this place.

ஈதல், கொடுத்தல், giving, giving alms, bestowing. 2. சொரிதல், abounding in benevolence. 3. பிரித்தல், dividing among several, dividing in arithmetic.

ஈந்து, ஈஞ்சு, a species of palm—Phœnix farinifera.

ஈமத்தாடி, சிவன், Siva, who dances where bodies are burnt.

ஈமம், சுடுகாடு, a place for the cremation of the dead. 2. விறகு, firewood, fuel.

ஈம், சுடுகாடு, a place for the cremation of the dead. This word is often followed by உ as a சாரியை—as ஈ.மு.

ஈயக்குழவி, நீலபாஷாணம், a kind of prepared arsenic.

ஈயம், பஞ்சலோகத்தொன்று, lead, one of the five metals. 2. மிருதார சிங்கி, a kind of prepared arsenic.

ஈயல், ஈதல், the act of giving. 2. தம்பலப்பூச்சி, the cochineal insect.

ஈயவரி, பெருமருந்து, a plant—Aristolochia indica.

ஈயுவன், இராவணன், Ravana, the giant king of Ceylon.

ஈரக்கல், குருந்தக்கல், a red stone, one of the hundred and twenty kinds of ore.

ஈரங்கொல்லியர், வண்ணார், washermen.

ஈரசைச்சீர், ஆசிரியச்சீர், a poetic foot of two அசை.

ஈரடி, இணையடி, two lines.

ஈரடிப்பா, இரண்டடிச்செய்யுள், a stanza of two lines.

ஈரடிமடக்கு, வந்தசொல்லே யிரண்டடியினும் வரப்பாடுவது (*in poetry*), repetition of a foot or feet in two lines with different meanings.

ஈரடிவெண்பா, குறள்வெண்பா, a kind of வெண்பா of two lines.

ஈரடுக்கொலி, உபயவோசை, reiterated words imitative of sound.

ஈரப்பலா, ஆசினிப்பலா, the bread-fruit tree—the Artocarpus incisa.

ஈரமதி, குளிர்ந்த சந்திரன், the cool moon.

ஈரம், அழகு, beauty. 2. அறிவு, knowledge, wisdom. 3. அன்பு, kindness, affection, tenderness. 4. கிருபை, grace, favour. 5. குளிர்ச்சி, coolness, agreeableness. 6. பகுதி, duty, tax. 7. பண்பு, nature, quality. 8. குங்குமப்பூ, the flower of the Crocus sativus.

ஈரல், ஈருள், the lungs, liver, spleen and other viscera.

ஈரவன், சந்திரன், the moon.

ஈரறம், இல்லறந்துறவறம், matrimony with its accompanying household virtues and the virtues of ascetic practice.

ஈராசிடைவெண்பா, இரண்டாசிடையிட்டுவரும் வெண்பா, a species of வெண்பா, with two ஆசு affixed to the end of the third foot of the second line.

ஈரியநெஞ்சம், அன்புள்ள மனம், kind-heartedness.

ஈருள், ஈரல், lungs, liver, spleen, &c.

ஈரெச்சம், பெயரெச்சவினையெச்சம், relative participles and verbal participles.

ஈர், ஈர்தலைச்செய்யென்னேவல், *imp.* cut, split, saw. 2. மயிரிற்பற்று மீர், a nit.

ஈர்க்கில், அம்பிறகு, the feathers of an arrow.

ஈர்க்கு, ஈர்க்கு, the rib of a palm leaf such as palmyra, cocoanut, &c.

ஈர்ங்கதிர், சந்திரன், the moon.

ஈர்தல், பிளத்தல், splitting. 2. அறுத்தல், sawing. 3. வெட்டல், mincing, hacking, chopping.

ஈர்த்தல், அறுத்தல், cutting, hacking. 2. இழுத்தல், pulling, drawing, dragging. 3. பிளத்தல், splitting. 4. உரித்தல், peeling, flaying.

ஈர்ப்பு, ஈர்த்தல், cutting, pulling, splitting.

ஈர்வாள், இரம்பம், a saw.

ஈழம், கள், toddy. 2. சிங்களதேசம், the Cingalese country, Lanka, Ceylon. 3. பொன், gold, wealth. 4. உலோகக் கட்டி, a mass of metal.

ஈறிலான், ஈறிலி, } கடவுள், he who has no end—the Deity.

ஈறு, உப்பளம், brackish land. 2. முடிவு, end, termination, extremity.

ஈறுகெடுதல், ஈறழிதல், the elision of a final letter or letters.

ஈற்றசை, இறுதியிலசையாகு மிடைச்சொல், an expletive at the end of a letter, word, &c.

ஈற்றயல், கடையயல், penultimate.

ஈற்றெலும்பு, கடையெலும்பு, the ossacrum or pelvis of a cow.

ஈனமிலணங்கு, தெய்வப்பெண், a goddess.

ஈனம், இழிவு, disgrace, degradation, meanness. 2. குறைபாடு, deficiency, want, privation, destitution.

ஈனல், ஈன்றல், bearing, bringing forth, begetting, originating. 2. கதிர், an ear of corn.

ஈனனம், வெள்ளி, silver.

ஈனுயம், நிந்தை, ignominy, contumely.

ஈனுமணிமை, சூதகம், ceremonial uncleanness after childbirth.

ஈன்றல், உண்டாதல், originating, being produced. 2. பெறுதல், bringing forth.

ஈன்றாள், தாய், a mother. 2. பார்வதி, Parvati—as the genetrix of the worlds.

ஈன்றான், தந்தை, a father, progenitor. 2. பிரமன், the god Brahma—as creator.

உ

உ, ஓரெழுத்து, the fifth vowel of the Tamil alphabet. 2. சுட்டெழுத்து, demonstrative prefix. 3. சாரியை, a particle used in forming the dative case, also joined to short monosyllabic verbs ending in mutes. 4. இரண்டென்னு மெண்ணின் குறி, a numeral indicating two. 5. ஒரு வினையெச்சவிகுதி, a termination of the verbal participle.

உகத்தல், மகிழ்தல், being glad, delighted. 2. விரும்பல், desiring, lusting for.

உகப்பு, உயர்ச்சி, elevation, height. 2. மகிழ்ச்சி, joy.

உகம், நாள், day. 2. பாம்பு, a serpent, snake. 3. பூமி, the earth. 4. முடிவு, end, termination. 5.

இரண்டு, a pair, couple. 6. யுகம், any one of the four Yugas.

உகரம், ஐந்தாமுயிர், the letter உ.

உகரக்குறுக்கம், குற்றியலுகரம், the letter உ shortened in sound.

உகளல், கடத்தல், passing. 2. குதித்தல், leaping, jumping, frisking, gamboling. 3. பாய்தல், leaping, as a frog.

உகளித்தல், குதித்தல், leaping. 2. பாய்தல், overflowing.

உகா, உகாமரம், a tree—Salvadara persica.

உகாதி, அருகன், Argha.

உகாந்தகாலன், உகாந்தநாதன், } சிவன், Siva. 2. விஷ்ணு, Vishnu.

உகாந்தம், யுகமுடிவு, the end of an age.

உகிரம், இலாமிச்சை, a grass—Andropogon muricatum.

உகிர், நகம், a finger or toe-nail; a talon, a claw.

உகுணம், முகட்டுப்பூச்சி, a bug.

உகுதல், சிந்துண்ணல், being scattered, strewed. 2. உதிரல், being shaken off, falling or dropping off. 3. சொரிதல், trickling or falling down as rain, tears.

உகுத்தல், சிந்தல், spilling, sprinkling, pouring down. 2. சொரிதல், shedding, causing to fall, dropping. 3. விடுத்தல், discharging pouring out.

உகைதல், செல்லல், moving as beast or vehicle with a rider, being ridden or driven.

உகைத்தல், எழுப்பல், inciting, urging forward. 2. செலுத்தல், driving a carriage, &c., riding, going on a horse, in a palankeen, &c. 3. அம்புவிடுதல், discharging arrow, casting, throwing.

உக்கம், ஆலவட்டம், a large kind or circular fan to grace processions. 2. ஏறு, a bull, a bullock, an ox. 3. கோழி, a fowl. 4. தீ, fire. 5. பசு, a cow. 6. மருங்கு, the waist, the middle of the body. 7. பந்து, a ball.

உக்கலை, மருங்கின் பக்கம், the hips.

உக்கல், பக்கம், side.

உக்காரம், சத்திபண்ணல், vomiting, vomition. 2. தொனுப்போடல், bellowing as an ox.

உக்காரி, பிட்டு, a species of meal-cake.

உக்கிடர், சிலந்திப்பூச்சி, a spider.

உக்கிரகந்தம், உக்கிரகந்தி, } வெள்ளுள்ளி, garlic—Allium sativum. 2. பெருங்காயம், asafœtida. 3. வசம்பு, Acorus calamus. 4. வேம்பு, Azadirachta Indica. 5. கரும்பு, sugar-cane—Saccharum officinarum.

உக்கிரமது, வெறிதருமது, ardent spirits.

உக்கிரகம், கோபம், anger, wrath.

உக்கிரம், கொடுமை, severity, fierceness, asperity, harshness. 2. தலைக்காவல், main guard. 3. மூர்க்கம், ferocity, savageness. 4. கோபம், wrath. 5. வியாதிவேகம், the height of a disease.

உக்கிரன், சிவன், Siva. 2. வீரபத்திரன், Virabadra.

உக்கிருட்டம், (properly உற்கிருட்டம்) மேன்மை, excellence, greatness. 2. மிகுதி, excessiveness.

உக்குளான், சருகுமுயல், a kind of hare which lives on dried leaves.

உங்கரித்தல், அதட்டுதல், reproving, menacing, scolding, reprehending. 2. உம்மெனவெகுளல், uttering a kind of grunt in token of disapprobation.

உங்காரம், அதட்டு, menace, reproof, reprehension, roaring, bellowing. 2. உம்மெனவெகுள்கை, the utterance of the particle உம், in token of displeasure, or to intimidate another.

உங்கை, உன் தங்கை, your younger sister.

உசற்காலம், வைகறை, daybreak.

உசனம், அட்டாதச உபபுராணத்தொன்று, one of the eighteen puranas. 2. தருமநூல், பதினெட்டினொன்று, one of the eighteen

works on law, ethics and jurisprudence.

உசனன், சுக்கிரன், the planet Venus.

உசா, உசாவென்னுமேவல், *imp.* consult, deliberate mentally. *2.* ஒற்றர், spies, searchers, examiners.

உசா, உசாதேவி, } சூரியன் மனைவி, one of the consorts of the sun, the other is சாயாதேவி.

உசாத்துணை, உசாவுதுணை, } ஆலோசனைத் துணைவன், an adviser, a counsellor, a faithful companion.

உசாவுதல், ஆராய்தல், searching, examination, espionage. *2.* எண்ணல், consultation, deliberation.

உசி, கூர்மை, sharpness. *2.* விருப்பம், wish.

உசிதசமயம், அவசரம், a fit occasion, opportunity, season.

உசிதம், தகுதி, propriety, suitableness, fitness. *2.* மேன்மை, excellence, niceness.

உசிதன், பாண்டியன், a king of Pandia dynasty.

உசிரம், உசீரம், } இலாமிச்சைவேர், the root of the fragrant grass—Andropogon muricatum.

உசிரம், செவ்வியம், the pepper plant—Piper nigrum. *2.* இடபம், a bull. *3.* கிரணம், a ray of light.

உசிலம், உசிலை, உசில், } சீக்கிரிமரம், a fine timber tree, a kind of ebony with yellow veins—Acacia pennata.

உசு, உளு, a wood-worm.

உச்சம், உயர்ச்சி, height, elevation, altitude, zenith. dignity. *2.* வல்லிசை, the treble in music. *3.* கிரக நிலையைந்திலொன்று (*in astrology*), one of the five situations of planet, the most influential, auspicious and benign.

உச்சயனி, உச்சயினி, } ஒரு நகரம், the city Ougein, formerly the capital of Vikramaditya.

உச்சவம், see உற்சவம்.

உச்சாகம், see உற்சாகம்.

உச்சாடனம், அகற்றல், expelling a demon from a person or place, exorcism. *2.* ஏவல், exciting a demon to injure or destroy some one by magical incantations.

உச்சாரணம், உச்சாரணை, } உச்சரிப்பு, pronunciation, utterance, articulation.

உச்சி, ஆண்மயிர், men's hair. *2.* தலை, head. *3.* நடுத்தலை, the crown of the head. *4.* நடுப்பகல், mid-day, noon. *5.* நாய், a dog. *6.* மயிர்முடி, a knot of hair. *7.* சிகரம், top, apex, summit of a mountain.

உச்சிக்கிழான், சூரியன், the sun (*lit.*) the ruler of the zenith (சிலப்பதி),

உச்சிச்செடி, புல்லுருவி, a parasitical plant—Loranthus.

உச்சிட்டசாங்கரியம், ஒரே பாத்திரத்தில் பலர் கூடியுண்ணல், eating or drinking from the same vessel in common. 12304

உச்சிட்டம், எச்சில், refuse of food, regarded as impure.

உச்சிப்பொழுது, நடுப்பகல், noon-day.

உச்சிரதம், பிரண்டை, a creeper—Vitis quadrangularis.

உச்சிரயம், உயரம், height. *2.* முக்கோணத்தினிறுதிட்ட வரி, the upright side of a right angled triangle.

உச்சினி, see உச்சயனி.

உச்சைச்சிரவம், இந்திரன் குதிரை, the horse of Indra.

உஞற்று, உஞற்றென்னேவல், *imp.* act with energy, perform, execute, institute a lawsuit. *2.* ஊக்கம், energy, exertion, enterprise. *3.* முயற்சி, unfailing application, untiring perseverance. *4.* வழக்கோதல், prosecution at law, institution of a lawsuit.

உஞ்சை, அவந்திநகர், the city of modern Ougein.

உடக்கு, திருகாணிச்சுரையினுட் சுற்று, the spiral groove in the nut of a screw.

உடங்கு, கூடிநிற்றல், union, association, combination.

உடசம், பன்னசாலை, a hut made of leaves, straw, &c. the residence of hermits.

உடப்பு, துறட்டுமுள்மரம், a tree—Pisonia georgina.

உடம்படுமெய், உயிருமுயிரும்புணர விடை வருஞ்சந்தியொற்று, (*in grammar*) the consonants, ய், and வ், as serviles or connecting letters.

உடம்பிடி, வேல், a lance or dart.

உடம்பு, உடல், any animated body assumed as the result of the deeds of former births. *2.* ஒற்றெழுத்து, a consonant.

உடம்பை, கலங்கனீர், turbid water.

உடலம், உடம்பு, body common to man and brute.

உடலல், சினக்குறிப்பு, exhibiting signs of fierceness. *2.* பொருதல், fighting. being enraged.

உடலிலான், காமன், Kama, the Hindu Cupid.

உடல், உடம்பு, body,—human or brute bodily constitution. *2.* ஒற்றெழுத்து, a consonant. *3.* பொரு என்னேவல், *imp.* fight. *4.* பொன், gold.

உடறல், (a change of உடலல்).

உடற்குறை, முண்டம், *2.* a headless body. *2.* உறுப்புக்குறை, any blemish in the body.

உடற்கூறு, சரீரக்கூறு, (*anatomy*) the component parts of the human system.

உடற்கூற்றுத்தத்துவம், அங்காதிபாதம், the principles of anatomy or the description of the component parts of the body.

உடற்றல், சினங்கொண்டுதாக்கல், attacking with fury. *2.* பெருங்கோபம், great fury.

உடற்றுதல், பொருதல், attacking furiously in battle, charging or rushing with fury. *2.* வருத்தல், vexing, afflicting, tormenting. *3.* துரத்தல், driving back, beating away, &c. *4.* சிதறடித்தல், frustrating, thwarting, scattering, dispersing—as an opposing army, &c. *5.* அழித்தல், killing, destroying, exterminating. *6.* பிரயோகித்தல், discharging an arrow or other missile.

உடனிலைமயக்கம், உடனிலைமெய்மயக்கம், } ஒரொற்றே தன்னோடு தான்மயங்குதல், (*in orthography*) the combination of a consonant with itself.

உடனிகழ்ச்சி, ஒருங்கு சம்பவித்தல், coexisting, happening simultaneously. *2.* உடனிகழ்ச்சிப்பொருள், a term in grammar implying coexistence, concomitancy.

உடன்பாடு, சம்மதம், consent, assent, compliance, acquiescence. *2.* விதி, (*in grammar*) positive or affirmative, as opposed to negative terms, or negative forms of expression.

உடன்பாட்டுவினை, விதிவினை, a verb in the affirmative form.

உடன்றல், கோபம், rage. *2.* சினக்குறிப்பு, exhibiting signs of anger. *3.* பொருதல், fighting.

உடு, அகழி, ditch round a fort. *2.* அம்பினிறகு, the feathers of an arrow. *3.* அம்பு, an arrow. *4.* அம்புத்தலை, the point or barb of an arrow. *5.* ஆடு, a goat, sheep. *6.* ஓடக்கோல், a boatman's pole. *7.* சீக்கிரிமரம், a tree—Mimosa. *8.* உடுஎன்னேவல், *imp.* dress, attire, put on clothes. *9.* விண்மீன், a star.

உடுகாட்டி, பொன்னுங்காணி, an edible plant bearing a gold-coloured flower, Illece-brum sessile.

உடுக்கை, இடைசுருங்குபறை, a small drum tapering from each end and forming a small neck in the centre. *2.* ஒருகட்பறை, tambourine. *3.* சீலை. raiment, clothing. *4.* உடுத்தல், dressing.

உடுத்தல், வேஷ்டி புடவைகளைத் தரித்தல், putting on clothes, dressing.

உடுநீர், அகழி, a fort ditch.

உடுபதி, } சந்திரன், he
உடுவின்காந்தன், } who took as his wives the zodiacal constellations, the moon.

உடுபதி, மரமஞ்சள், a tree and its root, very bitter and medicinal—Menispermum fenestratum.

உடுபம், தெப்பம், a raft, float.

உடுப்பு, சீலை, clothes, garments. clothing.

உடுப்பை, சீக்கிரிமரம், a fine timber tree, a kind of ebony with yellow veins—Acacia pennata.

உடும்பு, கோதா, the double-tongued lizard, the guana—Lacerta iguana.

உடுவின்வேந்தன், சந்திரன், the king of the stars—the moon.

உடுவை, அகழ், ditch round a fort.

உடை, உடையென்னேவல், *imp.* break, be broken. *2.* உடைமை, being owned, possession. *3.* சீலை, cloth, raiment, garment. *4.* செல்வம், wealth. *5.* வேலமரம், a species of thorny tree—Acacia.

உடைகுளம், பூராடநாள், the twentieth lunar asterism.

உடைதல், கெடுதல், being ruined. *2.* சாய்தல், being discomfited, retreating before a foe. *3.* தளர்வு, being reduced in strength, being debilitated.

உடைத்தல், தகர்த்தல், breaking.

உடைவு, தளர்வு, weakness, debility.

உட்கரணம், அந்தக்கரணம், the intellectual faculties.

உட்கல், அஞ்சல், fearing, dreading, standing in awe of. *2.* மடிதல், rotting, decaying, perishing, mouldering. *3.* வெட்கம், shame, being ashamed.

உட்கு, அச்சம், fear, dread, terror, expression of fear. *2.* உட்கென்னேவல், *imp.* fear, dread, be ashamed, decay, perish. *3.* நாணம், shame, bashfulness, modesty.

உட்குயிர், உள்ளுயிர், the Deity regarded as the life, or identified with the life or soul of each individual.

உட்குறிப்பு, உள்ளக்குறிப்பு, aim, object, intention.

உட்கை, உட்கல், fearing, dreading, &c. *2.* உள்ளங்கை, the palm of the hand.

உட்டணசஞ்சீவி, பிரண்டை, a plant—Vitis quadrangularis.

உட்டணசிகை, the sign in which either the planet mars, saturn or the sun is situated.

உட்டணம், வெப்பம், heat, intense heat of fire, of the sun, of the weather, or of the body.

உட்டணாதிக்கம், வெப்பமிகை, the prevalence of heat in the body, weather or climate.

உட்பற்று, அகப்பற்று, internal attachment, affections of the heart, &c.

உணக்கம், வாட்டம், dejection of countenance, drooping.

உணங்கல், வாடல், fading, withering, drooping. *2.* வருந்தல், being grieved, sorry, dejected in mind or countenance.

உணராமை, உன்மத்தம், insanity, infatuation, bewilderment. *2.* மயக்கம், stupor, want of perception.

உணர்தல், அறிதல், knowing, being conscious. *2.* ஊடறீர்தல், becoming reconciled as man and wife, being reunited after a love-quarrel. *3.* எண்ணல், considering, contemplating. *4.* தெளிவு, perceiving. *5.* நினைத்தல், thinking. *6.* வாடல், drooping, fading.

உணர்த்தல், அறிவித்தல், informing, instructing. *2.* கற்பித்தல், teaching, enlightening. *3.* ஊடறீர்த்தல், conciliating the other party—as man or wife, recovering the affections—as lovers after love-quarrels.

உணர்வு, அறிவு, consciousness. *2.* தெளிவு, clear discernment. *3.* நீங்கல், separation. *4.* ஊடலுந்

துயிலும் நீங்கல், cessation from sleep, love-quarrels, &c.

உணவு, உணு, good, sustenance, eatables.

உணு, உண்டி, food, sustenance. 2. சோறு, cooked rice.

உண்ணோக்கல், தியானம், contemplation.

உண்டல், புசித்தல், eating, taking food, whether solid or liquid.

உண்டாட்டு, மகளிர் விளையாட்டு, play of females. 2. விளையாட்டு, play, sport. 3. மதுவுண்டாடல், festivity, drinking, joviality.

உண்டி, உண்டல், eating. 2. சோறு, cooked rice. 3. பறவையுணவு, food of birds. 4. இரை, the food of carnivorous animals.

உண்டுகம், பெருவாகை, a tree—Mimosa.

உண்டை, திரட்சி, a ball, sphere, bullet, anything round or globular. 2. படைவகுப்பு, a division of an army.

உண்ணல், புசித்தல், eating, drinking, sucking, feeding, making a full meal.

உண்மாசு, உபமலம், corruption of mind.

உண்மை, அறிவு, wisdom, right knowledge. 2. மெய், certainty, ascertainment. 3. ஊழ், destiny, entailment of actions issuing in joys and sorrows.

உண்மையளவை, பிரத்தியட்சப்பிரமாணம் (*in logic*), ascertainment of a thing by the senses.

உண்மையுவமை, ஓரலங்காரம், (*in rhetoric*) a figure in which the simile is rejected, the reality being ascertained.

உதகக்கிரியை, நீர்க்கடன், presentation of water for the benefit of ancestors.

உதகம், நீர், water. 2. பூமி, the earth. 3. மழை, rain. 4. மழைத் துளி, drops of rain.

உதகவன், தீ, fire or the god of fire.

உதகு, புன்கு, a tree—Dalbergia arborea.

உதக்கு, வடக்கு, north.

உதணம், மொட்டம்பு, an arrow having the head in the form of a bud.

உததி, கடல், the sea, the ocean.

உதபாரம், மேகம், a cloud.

உதபானம், கிணறு, a well.

உதம், நீர், water.

உதயகிரி, உதயமலை, the eastern mountains, behind which the sun is supposed to rise.

உதயம், விடியல், dawn, the break of day. 2. பிறப்பு, birth, origin, appearance. 3. உதயவிராசி, the ascending or rising sign.

உதயலக்கினம், ஜென்மவிராசி (*in astrology*), the sign rising at the moment of birth.

உதயன், சூரியன், the sun.

உதயாதிபன், உதயலக்கினத்துக்கதிபதி, the planet which reigns in the rising sign.

உதயாத்தமனம், உதயமும் அத்தமனமும், sun-rise and sun-set, the rising and setting of the sun, moon or other heavenly bodies.

உதரகோமதம், பாலடை, a shurb—Hallia sororia.

உதரக்கனல், தீபனாக்கினி, heat or fire in the system supposed to produce hunger, &c., gastric fire, used also figuratively for hunger itself.

உதரநாடி, அடிவயிற்றோடு சம்பந்தமுள்ள நாடி (*anat.*), an artery, Boetiac axis.

உதரபந்தனம், அரைப்பட்டிகை, a gold ornament or girdle formerly worn round the waist by men.

உதரப்பிரிவு, தங்குடித்தமர், consanguinity, blood relationship.

உதரம், வயிறு, the belly. 2. அடிவயிறு, the abdomen (*anatomy*).

உதரவணி, உதரவாணி, கண்டங்கத்திரி, a plant—Solanum jacquini.

உதராவி, மரமஞ்சள், a medical plant whose taste is bitter (*M. Dic.*)

உதவகன், நெருப்பு, fire.

உதவல், ஈதல், giving, granting. 2. சகாயம், contributing, helping, assisting.

உதவி, கொடை, a gift, donation, bestowment, a boon, contribution. 2. சகாயம், help, aid, assistance, succour.

உதள், மேடவிராசி, the sign aries. 2. வெள்ளாட்டுக்கடா, a he-goat. 3. ஆடு, a goat, a sheep.

உதறல், உதறுதல், shaking, shaking off. 2. நடுங்கல், shaking with ague, fever, palsy, &c.

உதறிமுறிப்பான், விஷ்ணுகரந்தை, a plant—Spharanthus Indicus.

உதாசனம், உதாசினம், } நிந்தை, contempt, insult, abuse.

உதாசனன், கண்குத்திப்பாம்பு, the eye-snake, a whip-snake, a bright green snake that is said to strike at the eye. 2. நெருப்பு, fire.

உதாத்தம், ஓரலங்காரம் (*in rhetoric*) a figure which expresses copiousness, richness, enterprise, &c. 2. எடுத்தலோசை, the acute accent in chanting the Vedas.

உதாரணம், இலக்கியமெடுத்துக் காட்டல், an example, illustration, proof, authority. 2. துணைக்காரணம், second causes, aids.

உதாரம், கொடை, liberality, generosity, munificence. 2. வாசகதாட்டிகம், boldness or confidence in speaking, eloquence, manliness in carriage and address, clearness of perception and judgment.

உதாரன், உதாரி, } கொடையாளன், a liberal person. 2. சாதுரியன், a person of good address and confidence, manliness, &c.

உதாவணி, கண்டங்காலி, a plant—Solanum jacquini.

உதானம், உதானன், } கண்டத்தியங்கும் வாயு, one of the ten vital airs, that which rises from the navel by way of the throat and passes into the head, supposed to promote digestion.

உதி, உதித்தலைச் செய்யெனேவல், *imp.* rise, be born, assume a form, come into existence, originate. 2. உலைத்துருத்தி, a smith's bellows. 3. ஒதி, a tree that yields a kind of gum—Odina woodier.

உதிட்டிரன், தருமராஜன், the eldest of the five Pandava princes.

உதித்தல், தோன்றல், coming into existence, growing out of, orginating, becoming evolved. 2. பருத்தல், swelling, increasing in size.

உதியன், சேரன், a king of the Sera dynasty. 2. பாண்டியன், a king of the Pandia dynasty.

உதிரம், இரத்தம், blood.

உதிரன், செவ்வாய், the planet Mars.

உதிரி, ஒரு வைசூரி, a disease, a kind of small-pox, so called from the scabs falling off.

உதிரோற்காரி, சத்தமுகிலினொன்று, one of the seven classes of clouds which are to appear at the destruction of the world, discharging blood.

உதிர்தல், உகுதல், dropping off, falling off, crumbling, falling to pieces.

உதிர்த்தல், உகுத்தல், shedding, casting leaves, fruits, &c., as trees, causing to drop or fall in numbers or succession, shaking off, nipping, blasting, shedding tears.

உது, உஃது, that.

உதும்பரம், அத்திமரம், the அத்தி, tree or glomerous fig,—the Ficus glomerata. 2. எருக்கு, a kind of weed or coarse shrub—the Calotropis gigantea. 3. செம்பு, copper. 4. வாயிற்படி, the threshold of a house.

உதை, உதைத்தல், kicking. 2. உதையென்னேவல், *imp.* kick.

உதைதல், தாக்கிமீளல், rebounding, dashing against and returning—as water, receiving a counter

impulse—as a ball, &c. 2. பிரயோகித்தல், discharging (arrows).

உதைத்தல், காலாலுதைத்தல், kicking. 2. பிரயோகித்தல், discharging (arrows, &c.).

உத்தண்டம், உக்கிரம், impetuosity, fierceness, violence. 2. வலிமை, robustness, strength. 3. இராஜசம், imperiousness, haughtiness. 4. மகத்துவம், dignity of carriage and appearance.

உத்தமசத்து, அவுபலபாஷாணம், a kind of arsenic.

உத்தமதாளி, உத்தமாகாணி, } வேலிப்பருத்தி, a medicinal plant—Daemia extensa.

உத்தமபரி, கொத்துமல்லி, a plant—Coriandrum sativum.

உத்தமபலம், முந்திரிகைப்பழம், the fruit of the cashew—Anacardium occidentale.

உத்தமபுருஷன், தன்மை, (*in grammar*) the first person.

உத்தமம், நன்மை, perfection, excellence, goodness, virtue. 2. மேன்மை, nobleness, superiority, eminence.

உத்தமவிம்சதி, வருஷமறுபதில் முதலிருபது, the first twenty years of the Hindu cycle.

உத்தமாங்கம், தலை, the principal part of the body—the head.

உத்தமி, உத்தமை, } சற்குணமுடையாள், a goodwoman. 2. பார்ப்பதி, Parvati.

உத்தரகிரியை, கருமாந்தரம், obsequies last or funeral rites.

உத்தரகுருவம், போகபூமியாறிலொன்று, one of the six portions of the earth, in which, free from sorrow, the soul enjoys the fruits of former virtuous deeds.

உத்தரகோசமங்கை, ஒரு சிவஸ்தலம், a place sacred to Siva.

உத்தரணி, பஞ்சபாத்திரக்கரண்டி, a small spoon or ladle used by Brahmins to water from a cup in ceremonial purifications.

உத்தரதுருவம், வடதுருவம், the north pole.

உத்தரபாகம், பிற்கூறு, the latter part or section.

உத்தரபூமி, வடபூமி, the north part or division of the central continent.

உத்தரமந்தோச்சம், சூரியனுக்குங் கிரகங்களுக்குமுள்ள அதிதூரம், aphelion.

உத்தரமீமாஞ்சை, சாஸ்திரமாறிலொன்று, logic, the same as the Vedanta founded on the Ganakanda, or theological portion of the Vedas, and treating of God as the soul of the universe. It is ascribed to Vyasa.

உத்தரம், உயர்ச்சி, height, eminence. 2. ஊழித்தீ, the final deluge of fire. 3. எதிர்மொழி, answer, reply, rejoinder, response. 4. வடக்கு, the north. 5. அபரம், subsequence, posteriority, futurity.

உத்தராசங்கம், உத்தரீயம், a garment worn loosely over the shoulders.

உத்தராசாடம், உத்திராடம், the twenty-first lunar asterism.

உத்தராயணம், அரிபதம் முதல் விசுபதம் வரையில் சூரியன் செல்லுதல், the course of the sun from vernal to the autumnal equinox.

உத்தரி, குதிரை, a horse.

உத்தரித்தல், சாதித்தல், making satisfaction, indemnifying, guaranteeing.

உத்தரீயம், ஏகாசம், a garment worn loosely on the shoulders, shawl, a scarf, mantle.

உத்தரோத்தரம், மேலுமேலும், higher and higher, more and more, further and further.

உத்தளம், உத்தூளிதம், being wholly besmeared or covered with dry ashes.

உத்தானபாதன், ஓரரசன், a prince, son of Swayambhu, the Menu.

உத்தானம், அடுப்பு, a hearth, a fire-place. 2. இசைப்பு, joining. 3. உயிர்ப்பித்தெழுப்பல், raising, lifting up, resurrection. 4. ஊழித்தீ, submarine fire. 5. புடைப்பு, (*in anatomy*) eminence.

உத்தானி, அங்கையை, மேற்புற மாய்த் திருப்பும்பேசி, (*anat.*) a muscle, supinator.

உத்தி, செல்வம், wealth. *2.* சொல், words, language, discourse. *3.* தந்திரவுத்தி, the art which a scientific or literary author employs in treating his subject. *4.* திருவுருப்பு, a gold ornament, intended as an image of Lakshmi, worn by women. *5.* தூக்கங்கள், pendants, hangings. *6.* தேமல், yellow or tawny spots on the skin chiefly of women, considered as a beauty. *7.* பாம்பின்படப்பொறி, spots on the neck of the cobra or hooded snake. *8.* அறிவு, knowledge. *9.* அபினி, opium. *10.* இசைவு, union, agreement, connexion.

உத்திட்டம், குறிப்பு, that which is mentioned, particularized, described.

உத்தியம், யாகமிருபத் தொன்றி னொன்று, one of the twenty-one sacrifices.

உத்தியாபனம், நோன்பு முடிவு, a ceremony at the termination of a long periodical fast, &c., performed to secure its benefits which would otherwise be lost—the merit of the fast and of all the pains, austerities, labours, &c., would in that case be surrendered—the benefits of fasts so performed in compliance with vows are obtainable either in this life or the future.

உத்தியானம், உத்தியானவனம், } பூந்தோட்டம், a flower garden.

உத்தியுத்தர், உருபாருபர், the second form of deity, as having form and yet being formless.

உத்தியோகம், உள்ளமிகுதி, greatness of mind, joy. *2.* முயற்சி, enterprise, energy, exertion, exercise. *3.* தொழில், office, function, employment.

உத்தியோகபருவம், பாண்டவரும் கௌரவரும், யுத்தத்துக்கான முயற்சிசெய்வதைத் தெரிவிக்கும் பருவம், a section in Bharata which gives an account of the preparation of the Pandus and Gurus for war.

உத்திரட்டாதி, ஒரு நாள், the twenty-sixth lunar asterism.

உத்திரம், உத்திரநாள், the twelfth lunar asterism.

உத்திராசாடம், உத்திராடம், } ஒரு நாள், the twenty-first lunar asterism, figured by an elephant's tooth or a bed and containing two stars, one of which is B in Sagittarius, to distinguish it from the twentieth asterism.

உத்திராபன்னி, சணல், a plant—Crotalaria juncea.

உத்திரி, பருத்தி, a shrub—Gossypium. *2.* மந்திரம், பூஜை, ஜெபம், the three essential parts of worship (mantras), worship and prayer.

உத்திரேகம், தொடக்கம், commencement. *2.* மிகுதி, increase, excess.

உத்துங்கம், உயர்ச்சி, height, eminence, loftiness. *2.* மேன்மை, dignity, superiority, transcendency, moral excellency.

உத்துவாகனம், இருமுறை யேருழல், ploughing a field twice. *2.* விவாகம், marriage.

உத்துவாகிதமுகம், அண்ணாந்துபார்த்தல், looking upwards—one of the fourteen aspects of the countenance.

உத்தூளனம், உத்தூளிதம், } உடம்பெங்கும் பொடி விபூதி தரித்திருத்தல், being wholly besmeared or covered with dry sacred ashes, powdered sandalwood, &c.

உத்தேசம், போதப்பிரகார மூன்றி னொன்று, in logic, one of the three divisions of போதப்பிரகாரம், the name of the subject. *2.* மதிப்பு, a guess, conjecture,

rough estimation, a general calculation.

உத்பிரேட்சை, ஓரலங்காரம், see தற்குறிப்பேற்றம்.

உந்தரம், வழி, way.

உந்தி, ஆறு, a river. 2. ஆன்கூடம், a stall for the cow. 3. உயர்ச்சி, height, eminence. 4. கடல், the sea, ocean. 5. கொப்பூழ், the navel. 6. தேருருளை, a carriage wheel. 7. நடு, middle. 8. நீர்ச்சுழி, a whirlpool. 9. பரப்பு, extension, extended space. 10. மகளிர் விளையாட்டிலொன்று, a kind of play among women. 11. யாழினுறுப்பு, a part of the guitar or Indian lute.

உந்திக்கமலம், கொப்பூழாகிய கமலம், the navel resembling the lotus flower.

உந்திச்சுழி, the navel, curve or involution of the navel.

உந்திப்பூத்தோன், விஷ்ணு, Vishnu.

உந்தியார், ஒரு வேதாந்த நூல், a treatise on vedantic philosophy.

உந்து, கச்சோலம், the husk of cardamom.

உந்துதல், உயர்ச்சி, height. 2. ஏறுதல், riding. 3. தள்ளுதல், pushing out, thrusting forward. 4. செலுத்துதல், despatching, causing to go as vehicle, driving. 5. எழுதல், rising as waves, surf, &c.

உந்துரு, பெருச்சாளி, the mountain rat, the vehicle of Ganesa.

உந்தை, உன் தந்தை, your father.

உந்நதம், உயர்ச்சி, height, elevation, eminence.

உந்மத்தம், ஊமத்தை, a narcotic plant, the thorn-apple datura, மயக்கம், stupor induced by drugs or incantations.

உப, ஒருபசர்க்கை, a Sanskrit prefix implying that which is secondary, auxiliary, near by, over, together with, less, &c.

உபகசிதம், சிரிப்பு, laughter.

உபகந்தம், வாசனை, perfume.

உபகரணம், துணைக்காரணம், implements, apparatus, materials, means. 2. அரசசின்னம், insignia of royalty.

உபகாசம், பரிகாசம், ridicule.

உபகாரம், ஈகை, a donation, a gift, present, benefaction, contribution. 2. சகாயம், favour, kindness, assistance. 3. ஆதரவு, protection, patronage.

உபகாரி, ஈகையாளன், a benefactor, a donor, one who gives liberally.

உபகிருதம், உபகிருதி, } உதவுகை, help, aid, favour.

உபகுல்லம், சுக்கு, dried ginger—Zingiber officinalis.

உபகேசி, பார்ப்பதி, Parvati.

உபக்கிரமம், ஆரம்பம், beginning.

உபசங்காரம், அழித்தல், reduction to original elements, as when the deity destroys the world, &c. 2. ஆட்சேபம், (*in logic*) refutation. 3. விலக்குதல், excluding.

உபசத்தி, ஐக்கியம், union, meetings. 2. ஈகை, donation. 3. தொண்டு, service.

உபசமனம், அமைவு, tranquillity, cessation from external actions for the purpose of silent contemplation.

உபசருக்கம், உபசர்க்கை, } வடமொழி, முதனிலையடை, a Sanskrit auxiliary prefix, forming a component part of a word.

உபசாந்தம், உபசாந்தி, } அமைவு, calmness, tranquillity, alleviation, mitigation.

உபசாபம், வேறுபாடு, disunion. 2. துரோகம், treachery, treason.

உபசாரம், மரியாதை, civility, politeness, urbanity, attention to a guest, affability, blandness. 2. வழிபாடு, reverence, homage acts of worship, duty.

உபசுந்தன், ஓரிராக்கதன், the name of a demon.

உபதாமனநாடி, தமரகசாகைநாடி, (*anatomy*) an artery, bronchial artery.

உபதானம், தலையணை, a pillow, a bolster. 2. அஸ்திவாரம், foundation.

உபதி, தேருருள், the wheel of a carriage. 2. அச்சம், fear. 3. கை, hand.

உபதேசம், தீட்சை, the initiation of a pupil into the mysteries of his religion, a form of secret instruction, incantations, &c., given by the Guru to his disciple, on his admission into any of the four stages or degrees.

உபதேசகலை, கடவுள் குணம் தொழில் முதலியவற்றை விளக்கும் வேத பாகம், that portion of the Vedas which treats of the divine attributes, operations, &c.

உபதை, காணிக்கை, a present to a great person, கையடை, a present.

உபத்தம், பெண்குறி, pudendum muliebre. 2. பெண்குறி ஆண்குறி, genitals.

உபநயம், உபநயனம், } பூணூல் கலியாணம், the investiture of the Brahman and the next two castes with the sacred cord worn over the left shoulder and under the right.

உபநயனம், மூக்குக்கண்ணாடி, spectacles.

உபநளனம், முன்காற்சிற்றெலும்பு, (*anat.*) a bone—Fibula.

உபநாகம், உபநாயகம், } இரணத்திற்கிடு மருந்து, a poultice or other external application generally made of leaves and tied on with a cloth.

உபநாகனம், பூசுதல், unction, anointing, smearing.

உபநிஷதம், வேதநுட்பம், the substance or essential part of the Vedas, the most recondite and mysterious parts.

உபநிஷ்கிரமணம், உபநிஷ்டானம், } பிறந்த நான்காம் மாசம் பிள்ளைக்குச் சந்திரனைக் காட்டல், the taking of a child into the open air, showing it the moon, &c., a ceremony performed in the fourth month.

உபநியாசம், சொல்லிய நியாயத்தை விடை கூற அவதானித்தல், attending to an argument adduced so as to prepare an answer.

உபநியாயம், துணை நியாயத்தொடர், a succession of arguments in support of the same point.

உபபலம், படைத்துணை, auxiliaries, supporting officers or forces in an army. 2. உதவி, help, aid, support.

உபபாதகம், பஞ்சமா பாதங்களுக் கடுத்த பாதகம், crimes of a secondary degree, ranking next to the five heinous sins.

உபபுராணம், பதினெண் புராணத்தைச் சார்ந்த புராணம், puranas secondary to the celebrated eighteen.

உபமலம், மனமாசு, mental impurity, inward depravity.

உபமானம், see உவமானம்.

உபமிதி, ஒப்பு, resemblance, analogy.

உபமேயம், see உவமேயம்.

உபமை, see உவமை.

உபயகோமுகி, கன்றின்றலையுதயமாய் நிற்கும் பசு, a cow in the act of calving, the donation of which to a Brahmin, when the moon is south of the equator, is regarded as very meritorious, (*lit.*) two-faced or looking both ways.

உபயமம், கலியாணம், marriage, wedding.

உபயமாதம், கன்னி தனு மிதுன மீன மாதங்கள், (*in astrology*) the four months in which the sun is in the உபயவிராசி, equivocal or intermediate signs, viz. : March, June, September and December, being of medial influence.

உபயம், இரண்டு, two, double, both.

உபயவிராசி, கன்னி தனு மிதுனம் மீனம், every third sign of the Zodiac, considered in astrology as auspicious for building, &c.

உபயவோசை, ஈரடுக்கொலி, an imitative, reiterated sound.

உபயாத்தம், உபயார்த்தம், உபயோகம், } இரு பொருள், double meaning, ambiguity in words or language.

உபயோகம், பிரயோஜனம், fitness, adaptation, suitableness, availableness (of things for given purposes). 2. உதவி, helps, aids useful to the accomplishment of a purpose, either as persons or things, serviceableness, usefulness, beneficialness.

உபயோகி, உதவியானவன், a fit or helpful person.

உபரசம், சிலை, இரத்தினம், மண் முதலியவற்றிலுள்ள சத்து, natural bodies, ores, &c., of which the Hindus reckon one-hundred and twenty kinds.

உபரசன், தம்பி, a younger brother.

உபரதி, மூன்றுஞ்சாதனமாறிலொன்று, heavenly or spiritual enjoyment, excluding sensual pleasures.

உபராகம், கிரகணம், an eclipse of the sun or moon or the time of an eclipse considered propitious in regard to oblations and other religious duties.

உபராஜன், இளவரசன், the heir apparent to the throne.

உபரி, மேல், on, upon, above.

உபரியாவி, கோட்டம், a plant—Cortus.

உபலம், கல், a rock. 2. சிறு கல், a small stone.

உபலாளனம், தூய்தாக்கல், cleansing, purifying.

உபலேபனம், கோமயத்தால் மெழுகல், smearing with cowdung.

உபலோத்திரம், விளாம்பிசின், the gum of the விளா tree—Feronia elephantum.

உபவம், சீந்தில், a creeper—Menispermum cordifolium.

உபவனம், நந்தனவனம், a flower-garden, a flower-grove.

உபவீதம், பூணூல், the thread or cord worn by Brahmans and others over the left shoulder.

உபவேசனம், உட்காரல், sitting. 2. மலங்கழித்தல், voiding by stool.

உபாகமம், சார்பாகமம், a class of books secondary to the Agamas.

உபாகிதை, விண்வீழ்கொள்ளி, a meteor, a comet.

உபாக்கியானம், இதிகாசம், a tale, a story, a narrative.

உபாங்கம், அணியப்படுவன, necessary appendages—as clothes, ornaments, weapons, sectarial marks, &c. 2. சார்புறுப்புகள், component parts as the eyes, mouth, nose, &c., are of the face.

உபாசனம், ஆசனம், a seat. 2. வில்வித்தை, archery.

உபாசனை, வழிபாடு, worship, adoration, religious practice.

உபாதானம், பிச்சை, present to priests or religious mendicants of uncooked rice, &c., usually a handful.

உபாந்தியம், ஈற்றயல், the last but one, penultimate. 2. கடைக்கண், the corner of the eye.

உபாயம், உபசாரச்சொல், the means for bringing an enemy to terms, salutation. 2. தந்திரம், stratagem, artifice, shift, craft, cunning, intrigue.

உபானம், உபானவரி, } கோபுரத்தினடிச் சித்திரவரை, ornamental line above the lower wall of a temple where the tower begins.

உபேந்திரன், விஷ்ணு, Vishnu—the younger brother of Indra.

உபோதம், பேய்ப்பசளை, a plant—Portulaca.

உப்பக்கம், முதுகு, the back.

உப்பமைப்போர், உப்பளவர், } உப்புச்செய்வோர், salt manufacturers.

உப்பரிகை, மேனிலை மாடம், an upper room or terrace.

உப்பளம், உப்புவிளை நிலம், salt-works, salt-pans. 2. கழி, brackish land.

உப்பிலி, இண்டு, a kind of running plant.

உப்பு, இராகம், melody, music. 2. இனிமை, sweetness, deliciousness. 3. உப்புதலைச் செய்யென்னே வல், *imp.* swell, puff up, rise, as leaven. 4. உவர்த்தல், saltness. 5. கடல், the sea of salt water. 6. மகளிர் விளையாட்டு, a kind of play among females.

உப்புக்கீரை, ஒருகீரை, a kind of plant.

உப்புதல், வீங்கல், swelling, bloating, puffing up.

உப்புத்திராவகம், லவணதிராவகம், muriatic acid.

உப்புவாணிகர், உப்பு விற்போர், salt dealers, salt manufacturers.

உப்பை, ஔவை முதலிய பெண்பால் நால்வருளொருத்தி, one of the four celebrated female authors, the daughter of ஆதி, and பகவன் —the names of her sisters are ஔவை, உறுவை, and வள்ளி.

உமணர், உப்பமைப்போர், salt, manufacturers.

உமம், இறங்குதுறை a wharf, landing place.

உமரி, ஒரு பூடு, a kind of delicate brittle herb, saltish in taste, growing in sandy soils occasionally overflowed by the sea.

உமலகம், அரிதாரம், an orpiment.

உமலோத்திரம், see உபலோத்திரம்.

உமற்கடம், தருப்பை, the cusa grass.

உமாகுரு, இமையமலை, the Himalaya mountains.

உமாசகிதன், சிவன், Siva as united with உமை, who forms his left side or according to the mystical philosophy, by means of whom he carries on his operations.

உமாசுதன், உமை மைந்தன், son of Parvati—as Ganesa, Skanda or Virabadra.

உமாதசி, சணல், the hemp plant.

உமாபட்சி, ஒரு புள், a species of bird, Paradisea.

உமாபதி, உமைகேள்வன், } சிவன், the husband of Parvati—Siva.

உமி, உமி, husk, chaff, hull, bran.

உமிழ்தல், கொப்பளித்தல், casting (a liquid) from the mouth. 2. சத்தி செய்தல், vomiting, retching, puking, ejecting from an overcharged stomach. 3. சொரிதல், discharging as arrows, ejecting as sparks of fire, emitting as rays, casting forth as flower does odour. 4. தெவிட்டல், being sated, glutted, over-loaded as the stomach, being cloyed.

உமை, பார்வதி, Parvati, wife of Siva.

உமைகரநதி, கங்கை, the river that issues from the hand of Parvati—the Ganges.

உமைமகன், வீரபத்திரன், a son of Parvati—Virabadra.

உமையவள், பார்வதி, Parvati.

உமையாள், பார்ப்பதி, Parvati. 2. சவர்க்காரம், soap. 3. மயிலிறகு, a peacock's feather as resembling Parvati in colour (*M. Dic.*).

உம், இடைச்சொல், a connective particle variously used.

உம்பரான், காமதேனு, the divine cow. 2. உயர்ந்தோன், a celestial being or personage.

உம்பருலகு, தேவலோகம், the heavenly world.

உம்பர், ஆகாயம், the sky, the visible heaven. 2. உயர்ச்சி, height, elevation. 3. உவ்விடம், that place (intermediate), that region. 4. பார்ப்பார், Brahmans, the superior caste. 5. மேல், on, upon, above. 6. வானோர், the celestials, the inferior Gods.

உம்பல், ஆட்டுக்கடா, a ram. 2. ஆண் யானை, male elephant. 3. எருது, a bull. 4. எருமைக்கடா, a male buffalo. 5. எழுச்சி, mounting on a beast or vehicle. 6. குலம், lineage, race, caste. 7. கோத்திரம், tribe, family. 8. முறைமை, usage, custom. 9. யானை, an elephant. 10. வலி, power, strength. 11. விலங்கேற்றின் பொது, the male of beasts in general.

உம்பி, நும்பி, your younger brother, (a contraction of உன் தம்பி.)

உம்மை, கழிபிறப்பு, the last birth. 2. வருபிறப்பு, the coming birth. 3. உம்மெனுமிடைச்சொல், the name of the particle உம்.

உயக்கம், வருத்தம், suffering, distress, pain, grief.

உயக்கல், வருத்தல், afflicting.

உயங்கல், வருந்தல், suffering, being in distress, being pained, whether in mind or body.

உயத்தி, வெள்ளைப்பாஷாணம், a kind of arsenic in its natural state.

உயரம், மிகுதி, increase. 2. மேல், height, elevation, altitude. 3. உச்சம், (*in astronomy*), altitude.

உயர்ச்சி, மேல், height, loftiness, sublimity.

உயர்தல், உயர்தல், becoming high, rising, being elevated.

உயர்திணை, மக்கள் தேவர் நரகர், (*in grammar*) the rational class of nouns, comprising human beings, celestials and inhabitants of the nether world.

உயர்தினம், திருவிழா, a high day, a festival.

உயர்த்தல், உயரச்செய்தல், lifting up, raising, elevating, promoting.

உயர்நிலத்தோர், வானோர், the Gods, the celestials.

உயர்நிலம், மேடு, highland, a hill, hillock. 2. தேவலோகம், the world of the inferior Gods. 3. உப்பரிகை, an upper room or terrace.

உயர்நிலை, தேவலோகம், Swarga. 2. மேன்மாடம், an upper room.

உயர்ந்தகுளச்சி, பவளப்புற்றுப் பாஷாணம், a kind of prepared arsenic.

உயர்ந்தோர், அறிஞர், the learned, sages. 2. பார்ப்பார், Brahmans. 3. முனிவர், ascetics, hermits who practise austerities and undergo bodily mortifications 4. வானோர், the celestials.

உயர்வு, உயர்தல், height, loftiness, elevation. 2. மேன்மை, dignity, excellence, greatness.

உயல், உயிர்வாழ்தல், (a poetic contraction of உய்யல்) living.

உயவர், வருந்தினர், persons in distress.

உயவல், உயவு, } வருத்தம், distress, affliction, pain, suffering.

உயவை, காக்கணஞ்செடி, a wild creeper—the Clitoria ternatea. 2. மேகம், a cloud (பிங்கலந்தை).

உயா, வருத்தம், distress, suffering, pain.

உயிரளபு, உயிரளபெடை, } பாட்டிலோசை குறைந்தவிடத்து உயிரெழுத்து அளபெடுத்து வருதல், the lengthening of a vowel, chiefly for the sake of the verse.

உயிர், ஆன்மா, soul, life, vitality. 2. காற்று, wind. 3. உயிரெழுத்து, a vowel. 4. ஜீவராசிப்பொது, a living being, human, brute or vegetable, an animal.

உயிர்க்கணம், (இந்திரகணம்) அட்டகணத்தில் ஒன்று, one of the eight kinds of ominous feet with which the invocation of a poem may begin—that which consists of three நேர்.

உயிர்த்தல், வாய் விடல், yawning, gaping, breathing, respiring. 2. விடுத்தல், emitting fragrance, &c., exhaling, ejecting, discharging, setting at liberty. 3. உயிரடைதல், living, reviving, coming to life as one dead. 4. ஈனல், giving birth to yielding producing.

உயிர்த்துணை, கடவுள், God. 2. பிராண சிநேகன், a friend dear as life. 3. கணவன், a husband. 4. மனைவி, a wife.

உயிர்த்துணைவன், பிராணசிநேகன், a very dear friend. 2. கணவன், a husband.

உயிர்த்துணைவி, சரசுவதி, Sarasvati, the consort of Brahma. 2. மனைவி, a wife.

உயிர்நிலை, உடல், the body as the seat of life or station of the soul.

2. உயிர்த்தானம், the vital parts essential to life.

உயிர்ப்பு, காற்று, wind, air. 2. மூச்சு, breath, respiration.

உயிறு, இலாமிச்சை, a grass—Andropogon muricatum.

உய்தல், உயிர்வாழ்தல், reviving or flourishing as trees, plants, &c.

உய்தி, உயிர் வாழ்தல், living.

உய்த்தலில் பொருண்மை, கருதிய பொருள் தோன்றப் பாடப்படுவது, poetry composed in such terms only as are necessary to express the author's meaning.

உய்த்தல், செலுத்தல், putting in motion, causing to go, driving.

உய்த்துணரவைப்பு, உத்தி முப்பத்திரண்டில் ஒன்று, the use of such terms, descriptions or definitions in a written work, as may require the exercise of thought, reference to other parts, &c., in order to comprehend them—one of the thirty-two உத்தி, in நன்னூல்.

உய்மணல், கருமணல், black sand.

உய்யக்கொண்டான், எருமைமுல்லை, a plant—Jasminum. 2. கொய்யா, a tree—Psidium pyriferum.

உய்யானம், உய்யானனம், } சோலை, a grove, a garden. 2. பூந்தோட்டம், a flower-garden, a flower-grove. 3. சிங்காரவனம், a royal garden, a royal forest.

உரகபந்தம், உரகபந்தனம், } நாகபந்தம், one of the curious kinds of poems called மிறைக்கவி.

உரகமல்லி, நாகமல்லி, a plant—Justicia nasuta.

உரகம், உரங்கம், உரங்கமம், } பாம்பு, a snake, serpent.

உரகர், சமணர், Samanar or Jinas—a sect of Hindus. 2. நாகர், snakes, serpents.

உரகன், ஆதிசேடன், the chief of the (நாகர்) serpents said to have a thousand heads and to be the couch of Vishnu; the earth is represented as supported on one of its heads.

உரகாதிபன், உரகேந்திரன், } ஆதிசேடன், the chief of the serpents.

உரகாரி, கருடன், Garuda.

உரசல், உரிஞ்சல், rubbing.

உரண்டம், காக்கை, a crow.

உரத்தல், வலியுறல், growing strong, firm, hard, increasing in strength.

உரப்பல், அதட்டல், whooping, vociferating, menacing or intimidating by shouts, blustering.

உரப்பு, உரத்தல், growing strong, firm, hard, forcible. 2. உரப்பென்னேவல், *imp.* bluster, menace or intimidate by shouts.

உரம், ஊக்கம், energy, spirit, exertion, firmness of mind. 2. ஞானம், wisdom, knowledge, spiritual knowledge. 3. மதில், a surrounding wall. 4. மார்பு, the breast, chest. 5. வலி, strength, firmness, hardness, compactness, &c. 6. திண்மை, hardness, induration, obduracy.

உரல், உரல், a mortar. 2. இடியப்பவுரல், a mould for making pastry.

உரவன், அருகன், Argha. 2. வலியன், a strong man. 3. அறிஞன், a learned man, an ascetic.

உரவு, வலி, strength, force, firmness, hardness.

உரவுநீர், உவர்நீர், sea-water, salt-water.

உரவோர், அறிஞர், the wise, the learned. 2. மூத்தோர், persons of respectability, gravity, age, &c., chief persons.

உரறல், பெருங்கோபம், great anger the state of being heated with vehement wrath.

உரற்றல், ஒலித்தல், sounding, resounding. 2. பேரொலி, loud noise, thundering sound.

உரன், அறிவு, knowledge. 2. உள்ளமிகுதி, energy determination, resolution, courage, joy.

உராஞ்சல், உரைதல், rubbing, being rubbed.

உராதரம், முலை, woman's breast.

உராய்தல், உரிஞ்சல், rubbing.

உராய்ப்போதல், உரைதல், rubbing one's self against a thing, rubbing in a crowd, jungle, &c., in passing.

உரி, உரிதலைச்செய்யெனேவல், *imp.* strip off clothes, divest. *2.* ஓரளவு, a small dry or liquid measure. *3.* தோல், rind, peel, bark, a skin stripped off. *4.* கொத்துமல்லி, coriander—Coriandrum sativum. *5.* உரிச்சொல், one of the general divisions of words, including adjectives and adverbs, also all words expressive of abstract qualities.

உரிச்சீர், ஒரு வகைச் சீர், a species of feet of two syllables.

உரிச்சொல், பொருள்களின் பல வகைக் குணங்களை யுணர்த்துஞ் சொல், one of the four general divisions of words, including adjectives and adverbs, also words expressive of abstract qualities.

உரிஞல், உரிஞ்சல், } உராய்தல், rubbing.

உரிதல், கழலல், becoming stripped off as clothes.

உரித்தல், உரித்தல், skinning, stripping off, flaying, peeling, excoriating, barking. *2.* கழற்றல், sloughing off the skin, as a serpent.

உரித்து, உரியது, that which is proper, peculiar to, appropriate to, tending to, liable to. *2.* வினையெச்சம் *v. part.* (root உரி).

உரிப்பொருள், அகத்திணை முப்பொருளில் ஒன்று, one of the three constituents of அகப்பொருள், essential characteristics of lovers.

உரிமை, ஒவ்வொன்றிற்குத்தகுவது, appropriateness, peculiarity. *2.* குணம், quality of a person or thing, property. *3.* மனைவி, a wife.

உரியள், உரியாள், } மனையாள், a wife.

உரியர், உரியார், உரியோர், } அறிஞர், the learned, the well-informed. *2.* உறவோர், near relations.

உரியன், உரியான், உரியோன், } புருடன், a husband.

உரிவை, தோல், skin, hide, leather. *2.* மரவுரி, peel, rind, bark.

உரு, அட்டை, a leech. *2.* உடல், the body. *3.* உருத்தலைச் செய்யெனேவல், *imp.* be angry, exhibit signs of anger, be great, sprout. *4.* உள், interior, inner part, centre. *5.* நிறம், colour. *6.* நோய், disease. *7.* அழகு, beauty. *8.* கோபம், anger, signs of anger. *9.* வடிவு, form, appearance, shape, figure, fashion. *10.* அதிகம், much, excessive. *11.* பெரு, large, great. *12.* விலையுயர்ந்த, valuable, precious. *13.* நீண்ட, long.

உருகம், பிறப்பு, birth, production, origin, as from seeds, &c.

உருகல், உருகுதல், dissolving with heat, melting, liquefying, pitying, sympathizing.

உருக்கம், உருகுதல், melting, tenderness, pity, sympathy. *2.* தொடை, the thighs.

உருக்கல், உருக்குதல், melting with heat, dissolving, afflicting. *2.* வருத்தல், afflicting, distressing.

உருக்கினம், அஞ்சனபாஷாணம், a kind of arsenic. *2.* வெண்காரமுதலியன, anything that facilitates the fusion of metals—as Borax.

உருக்கு, உருக்கென்னேவல், *imp.* melt, dissolve, afflict. *2.* எஃகு, steel.

உருக்குகாரம், வெண்காரம், borax.

உருக்குப்பிரிமியம், இரத்தப்பிரமியம், gonorrhoea with a discharge of blood.

உருக்குமம், பொன், gold.

உருசி, சுவை, taste, good taste, relish, gustation, flavour.

உருட்சி, உருண்டிருத்தல், sphericalness, rotundity, globularness. 2. சில்லுருட்சி, revolving, as a wheel.

உருட்டல், உருளச்செய்தல், rolling a ball, wheeling, forming clay or other substances into balls by rolling.

உருட்டுவண்ணம், துரிதவண்ணம், a poem or song composed of syllables occurring in rapid succession.

உருத்தல், கோபம், anger, rage. 2. சினக்குறிப்பு, exhibiting signs of anger. 3. தோற்றல், appearing. 4. மிகுதி, abundance. 5. முளைத்தல், sprouting, shooting. 6. பெருத்தல், becoming great. 7. கன்மம் விளைதல், resulting in effects—as the deeds of former births, growing mature.

உருத்திதம், உரியபொருள், property. 2. தொழிலில் இலாபம், profit obtained by a trade or labour. 3. வளர்தல், increase. 4. வட்டி, interest for money.

உருத்திரகணிகை, தேவதாசி, a courtezan of Siva, a dancing girl of his temples.

உருத்திரஜடை, சிவதுளசி, a plant—Ocimum basilicum.

உருத்திரபஞ்சமம், ஒரு பண், one of the musical modes.

உருத்திரம், வெகுளிதோன்றக்கூறல், (*in rhetoric*) warlike rage, as one of the nine emotions of the mind expressed by poetry. 2. பெருங்கோபம், fury, violent anger, rage. 3. மஞ்சள், turmeric—Curcuma longa.

உருத்திரரோகம், மாரடைப்பு, asthma.

உருத்திரவீணை, ஒரு யாழ், a species of guitar.

உருத்திரன், கொடுங்கோபி, a furious person. 2. சிவன், Siva who disperses the tears of mortals and demi-gods.

உருத்திராக்கம், } உருத்திராட்ச
உருத்திராட்சம், } மணி, the nuts of the Elæcarpus ganitrus, worn as beads by religious mendicants of the Siva sect.

உருத்திராணி, } பார்வதி, Parvati.
உருத்திரை, }

உருத்திராபிஷேகம், உருத்திர மந்திரஞ் ஜெபித்துச் செய்யும் அபிஷேகம், a libation performed by pronouncing the incantation called Rudramantra.

உருத்திரோற்காரி, ஒரு வருடம், the fifty-seventh year of the sixty which forms the Hindu cycle.

உருநாட்டு, விக்கிரகம், an idol, statue.

உருபு, வடிவம், form, shape. 2. வேற்றுமையுருபு முதலிய இடைச்சொற்கள், a class of particles comprising four kinds, *i.e.*, particles which form the declensions, those that form the inflections of verbs, auxiliary component particles employed in the formation of the two classes of verbs, particles of terms of comparison, &c.

உருபுத்தொகை, உருபுதொக்கு நிற்பது, the suppression of the characteristics of the cases.

உருபுப்புணர்ச்சி, வேற்றுமையுருபு முதலிய புணர்கை, sandhi—the union of the particles of inflections with nouns and pronouns.

உருபுமயக்கம், ஒரு வேற்றுமைப் பொருளில் வேறு வேற்றுமையுருபு வருதல், the use of one casal sign for another—as the dative for the local ablative, &c.

உருப்பசி, தெய்வப் பெண்களில் ஒருத்தி, one the courtezans of swarga.

உருப்பம், உஷ்ணம், heat of the sun or temperature of the atmosphere. 2. தினைமா, millet meal. 3. மிகுதி, abundance, copiousness, greatness, intenseness.

உருப்பிரமம், ஆட்டுக்கொம்பு, a sheep's horn.

உருப்பு, மிகுதி, abundance, copiousness, intenseness.

உருமம், உஷ்ணம், heat of the sun, the heat of the atmosphere, sultri-

ness, closeness. 2. மத்தியானம், midday, noon.

உருமலைவாரி, உலோக மணல், sand containing metal.

உருமி, உருமேறு, } இடி, a thunderbolt.

உரும், அச்சம், fear, dread, alarm. 2. இடி, a thunderbolt.

உரும்பரம், செம்பு, copper. 2. பெருங்காயம், asafœtida—Narthea safœtida. 3. சர்ப்பம், a serpent.

உருவகம், உருவகவணி, } உபமான உபமேயங்களின் வேற்றுமையை ஒழித்து ஒன்றென வைப்பது, identification of the objects of comparison, metaphor in general, comprising many species.

உருவகவுருவகம், உருவகத்தையே பெயர்த்தும் உருவகஞ்செய்வது, a double metaphor.

உருவங்காட்டி, கண்ணாடி, a mirror, a looking-glass, glass.

உருவசாஸ்திரம், கலைஞானம் அறுபத்துநான்கில் ஒன்று, the knowledge of the shape, feature, lines, &c., of the human body, including palmistry and physiognomy, considered as indicating the moral and mental characteristics of the individual.

உருவசி, see உருப்பசி.

உருவம், உடல், body, human or other. 2. வடிவு, shape, form, figure.

உருவல், காதணியில் ஒன்று, a kind of pendant or ear-drop.

உருவாரம், வெள்ளரி, a kind of cucumber—Cucumis utilissimus.

உருவி, நாயுருவி, a plant—Achyranthes aspera. 2. புல்லுருவி, a parasite. 3. முள்ளி, Solanum Indicum.

உருவியுப்பு, நாயுருவியுப்பு, a kind of medicinal salt.

உருவிலி, மன்மதன், he who has no shape or form—Kama.

உருவு, அச்சம், fear, dread, alarm. 2. உருவென்னேவல், *imp.* unsheath, draw out of a case or sheath, pierce through, penetrate. 3. வடிவு, form, shape.

உருவுதல், உறுப்பு, தழை முதலியவுருவல், drawing the hand with pressure down a limb or any part of the body—to allay pain, inflammation, &c., stripping off leaves. 2. கணை, வேல் முதலிய புகுந்தோடல், piercing through, penetrating, passing through, as a lance, arrow, needle, &c. 3. வாள் முதலிய கழற்றல், unsheathing, drawing out of a case or sheath.

உருவுவமம், வடிவுவமை, (*in rhetoric*) a kind of comparison from analogy—as when a ship at sea is compared to an elephant in an army.

உருவுள்ளு, கொள், gram—Dolichos uniflorus (பிங்.)

உருவெளி, உருவெளிப்பாடு, an imaginary appearance of a person or other object, a visionary object, an illusion, chiefly applied to the supposed sight of an absent lover.

உருவொளி, a reflection, that which is reflected.

உருளரிசி, கொத்துமல்லி, a spice, coriander seed—Coriandrum sativum.

உருளல், உருளுதல், turning about as a wheel or dice, rolling, bowling, tumbling over and over, revolving on a plane, becoming round.

உருளி, உரோகணிநாள், the fourth lunar asterism. 2. தேருருளை, a carriage wheel, the wheel of a car. 3. வட்டம், a circle. 4. யாக்கையின் மூட்டு, (*anatomy*) Diathrasis of socket and ball in a joint.

உருளை, உருள், a carriage wheel, a wheel. 2. உருள்பொருள், anything that rolls or turns as a ball, bowl, &c. 3. வெள்ளைப்பாஷாணம், a kind of arsenic.

உருளைகாந்தம், ஒரு காந்தக்கல், a kind of loadstone.

உருள், உருளென்னேவல், *imp.* turn about as a wheel or dice, roll, become round. 2. உரோகணிநாள், the fourth lunar asterism. 3. தேருருளை, the wheel of a car, a carriage wheel. 4. வண்டி, a wheeled carriage. 5. வட்டம், a circle.

உருடபதம், இடுகுறி, a word underived.

உருடம், இடுகுறி, a word of unknown origin. 2. பிரக்கியாதி, fame, notoriety.

உருடி, இடுகுறி, the Sanskrit name for words whose etymology is unknown; simple or primitive names of things. 2. பிரசித்தியானது, what is famous or notorious.

உருபகம், உருபகதாளம், one of the seven modes of marking time in music. 2. ஓரலங்காரம், metaphor, metaphoric language.

உருபகாரம், திருஷ்டாந்தம், proof, demonstration.

உருபதன்மாத்திரை, பஞ்சதன்மாத்திரையினொன்று, the primitive element of sight.

உருபம், உருவம், form, shape, appearance, image in the mind. 2. விக்கிரகம், image, idol. 3. அழகு, beauty. 4. நிறம், colour. 5. நிலை, posture, attitude. 6. சாயல், features, lineament.

உருபாருபம், உருவுமருவும், form and formlessness, an attribute of சதாசிவம், as the fifth of the nine forms or transmutations of deity.

உருபி, உருவுள்ளது, one that has shape, a person, a visible object, the opposite to அருபி. 2. அழகன், a fair, beautiful or well-formed person.

உருப்பியம், வெள்ளி, silver. 2. அழகுள்ளது, that which is beautiful, handsome. 3. வெள்ளிநகை, wrought silver. 4. பொன்நகை, wrought gold.

உரேந்திரன், வீரன், a soldier, a hero.

உரை, உயர்ச்சி, eminence. 2. உரையென்னேவல், *imp.* sound, speak, say, tell, rub. 3. ஒலி, sound. 4. சொல், a word, an expression, a saying. 5. சொற்பயன், explanation of a word or sentence, interpretation, commentary. 6. தேய்வு, rubbing, friction, attrition. 7. பொன், gold for touching.

உரைக்கோள், உரையாசிரியர்கருத்து, the construction given by the commentator to the text.

உரைசல், உரைதல், being rubbed.

உரைத்தல், ஒலித்தல், sounding. 2. சொல்லுதல், speaking, telling, saying. 3. தேய்த்தல், rubbing, grating.

உரைநூல், உரைபெற்ற நூல், a work on which a commentary has been written.

உரையல், உரைதல், being rubbed. 2. வியங்கோள்முற்று of உரை, *opt.* may you be rubbed.

உரையாடல், சொல்லல், saying, speaking, telling. 2. பேசல், conversing, disputing.

உரையிலக்கணம், உரைசெய்யுமுறை, rules for making commentaries.

உரைவன்மை, சாதுரியம், eloquence, oratorical power. 2. சொற்றிட்பம், forcible language that cannot be controverted.

உரொக்கம், கையிருப்பு, ready money, cash in hand.

உரோக்கம், சிவனடிபாதம், a name of Adam's peak, a mountain in Ceylon.

உரோகணி, உரோகணி நட்சத்திரம், the fourth lunar mansion represented by a wheeled carriage and containing five stars of the bull. 2. பலதேவன் தாய், the mother of Baladeva.

உரோகதி, நாய், dog.

உரோகம், நோய், disease, distemper. 2. பூவரும்பு, a bud, a blossom. 3. ஏறல், mounting, ascending.

உரோகி, பிணியுற்றோன், a diseased person, a patient.

உரோகிணி, உரோகணிநாள், the fourth lunar asterism. 2. பலராமன் தாய், the mother of Balarama. 3. கடுகுரோகணி, a plant —Helleborus niger. 4. பீதரோகணி, a medicinal and exotic plant used in diseases of the eye. 5. கடுக்காய், the nutgall—Terminalia chebula. 6. ஒன்பதாண்டுப் பெண், a girl nine years old.

உரோகிணிதநயன், பலபத்திரன், Balarama.

உரோங்கல், உலக்கை, a pestle.

உரோசல், உராய்தல், rubbing, friction.

உரோசனி, கடுகு, mustard—Sinapis-nigra.

உரோசனை, கோரோசனை, the bezoar supposed to be the concrete bile of a cow. 2. செந்தாமரை, red lotus—Nymphæa rubra. 3. கடுகு, mustard.

ஓதி, இடங்கழிமை, close attack (in battle, &c.) 2. ஓந்தி, a kind of lizard. 3. கல்வி, erudition, literature. 4. ஞானம், wisdom, knowledge. 5. பூனை, a cat. 6. பெண்மயிர், women's hair. 7. மலை, a mountain. 8. ஓதுவான், a learned person.

ஓதிமமுயர்த்தோன், பிரமன், he whose banner is the swan—Brahma.

ஓதிமம், அன்னம், a swan. 2. கவரிமா, boegrunniens. 3. மலை,

a hill or mountain. 4. புளியமரம், a tamarind tree.

ஓதுதல், see ஓதல்.

ஓதுவான், ஆசான், a teacher of the Vedas and sacred literature. 2. படிப்பவன், a learner, scholar, student. 3. திருப்பாட்டுப் பாடுவோன், the eulogist of the God of the temple whose duty it is to chant the verses directed by the attending priest.

ஓதுவித்தல், படிப்பித்தல், teaching the Vedas, instructing, teaching science, &c.

ஓதை, ஒலி, sound, noise. 2. பேரொலி, a great noise, din, clamour. 3. மதிலுள் மேடை, a mount or area within a fortification. 4. மதில், a surrounding wall, a fortification.

ஓத்தி, ஒந்தி, lizards of different species.

ஓத்து, ஓரினப்பொருளை யொருவழி வைத்திருக்குமியல், a section or chapter of a book treating of one and the same thing. 2. வேதம், the Vedas, sacred writings.

ஓத்துப்புறனடை, இயற் புறனடை, notes, explanatory remarks or exceptions following a section or chapter in a scientific or literary work.

ஓத்துமுறைவைப்பு, முப்பத்திரண்டுத்தியினொன்று, one of the thirty-two உத்தி.

ஓத்துரைப்போர், பொருந்தச் சொல்வோர், teachers of the Vedas 2. உபாத்தியாயர், teachers in general.

ஓந்தி, ஓணான், a lizard embracing several species.

ஓமகுண்டம், வேள்விக் குண்டம், a pit made in the ground for sacrificial fire.

ஓமசாந்தி, ஓமம் வளர்த்துச் சாந்தி பண்ணல், mitigating or propitiating by fire.

ஓமந்திரவியம், யாக உபகரணம், the requisites for a sacrifice including the firewood, &c.

ஓமப்பொடி, திருநீறு, the ashes of the ஓமம்—deemed sacred, and used for smearing the person.

ஓமமண்டபம், யாகசாலை, a sacrificial hall.

ஓமம், அசமதாகம், Sison or Bishop's weed—Sison ammi. 2. யாகம், a burnt-offering.

ஓமாக்கினி, ஓமத்தீ, sacrificial fire.

ஓமான், ஒந்தி, a lizard, chameleon, a blood-sucker.

ஓமை, மாமரம், the mango tree.

ஓம், பிரணவம், the mystic name of the deity, prefacing and concluding all the prayers or incantations of the daily worship, commencing books, &c., from அ, a name of Vishnu; உ, of Siva; and ம், of Brahma, embracing therefore the Indian Triad and expressing the three in one. 2. ஆமெனல், an expression of assent.

ஓம்படை, காவல், protection, safeguard, security.

ஓம்படைக்கிளவி, கையடை கொடுத்தல், committing a lady to the care of her attendants by a gentleman, during his absence. 2. பெரியோர், சொல், advise given to princes by sages.

ஓம்பல், பாதுகாத்தல், taking care of, protecting, preserving. 2. வளர்த்தல், cherishing.

ஓய்தல், ஒழிதல், cessation, ceasing, rest. 2. தளர்தல், becoming tired, weary, failing.

ஓய்வு, சாதல், dying, ceasing to exist. 2. தளர்வு, slackness, becoming weak. 3. முடிதல், ending, termination.

ஓரம், பக்கவாதம், partiality in speaking, pleading, &c. 2. விளிம்பு, side, edge, brim, brink, bank, shore, &c. 3. சத்திசாரம், a kind of salt of burning and acrid taste.

ஓரடிமடக்கு, நான்கடியுளோரடியே மடங்கி வருவது, repetition of a line once in a verse.

ஓரா, ஒரு மீன், a kind of fish—Dioden hystrix.

ஓராசிடைவெண்பா, ஓராசிடையிட்டு வரும் வெண்பா, a species of ஆசிடை வெண்பா, having only one ஆசு.

ஓரி, ஆணரி, a male jackal. 2. ஆண் மயிர், a man's knot of hair. 3. ஆண்முசு, the male of the red monkey. 4. காளிவாகனம், the conveyance of Kali. 5. கிழநரி, an old jackal. 6. புறமயிர், hair on the body. 7. விலங்கேற்றின் பொது, the male of beasts in general. 8. கடையெழுவள்ளலி லொருவன், one of the seven liberal kings of the lowest order.

ஓரிதழ்த்தாமரை, ஒரு பூடு, a little herb with a monopetalous flower.

ஓரும், அசைச்சொல், a poetic expletive.

ஓரெழுத்துமடக்கு, அடிகடோறுமிடை பிறிதெழுத்தின்றி வந்தவெழுத்தே வருவது, repetition of a letter in a verse.

ஓரை, இராசிப்பொது, a sign of the zodiac equal to thirty degrees. 2. கலன்கள், female toys, playthings, &c. 3. சமயம், opportunity. 4. தோழி, a lady's female attendant. 5. மகளிர் கூட்டம், a concourse of women. 6. மாதர் விளையாடுங்களம், a play-ground for females. 7. விளையாட்டு, play. 8. இலக்கினம், the rising of a sign.

ஓர்குடிமனைன், சகலன், the husband of a wife's sister.

ஓர்குண்டலன், பலபத்திரன், Balabhadra.

ஓர்க்கோலை, அம்பர், amber.

ஓர்தல், ஓர்ச்சி, } ஆராய்தல், consideration, pondering, reflecting. 2. தெளிதல், understanding, finding out.

ஓர்ப்பு, கருமமுடிக்குந்துணிவு, firm determination, perseverance. 2. பொறுமை, patience. 3. ஆடூஉக் குணம் நான்கினொன்று, fortitude, firmness, decision—one of the four qualities of men.

ஓலக்கம், மந்திராலோசனை சபை, an assembly of state. 2. சபாமண்டபம், a place for an assembly.

ஓலம், ஒலி, sound, noise, roar. 2. கடல், the sea. 3. பாம்பு, snake.

ஓலிடல், ஒலித்தல், sounding, making a noise. 2. ஓலமிடல், calling on a deity or superior for help, invoking audibly.

ஓலை, ஒலி, sound. 2. தாழையோலை, the leaf of the wild pine-apple tree. 3. தென்னோலை, leaf of the cocoanut palm. 4. பனையோலை, the leaf of the palmyra.

ஓலைதீட்டும்படை, எழுத்தாணி, a style, an iron pen.

ஓல், ஒலி, sound, buzz.

ஓவர், கம்மாளர், mechanics, artisans, smiths. 2. பாடற் கீழ்மக்கள், bards, eulogists employed in processions to repeat the titles and praises of princes.

ஓவல், ஒழிதல், ceasing, deviating, becoming extinct. 2. வருந்தல், being afflicted, suffering.

ஓவியம், சித்திரம், a picture, a portrait.

ஓவியர், சித்திரக்காரர், painters, sculptors, artists. 2. கம்மாளர், mechanics, artificers, smiths.

ஓளி, ஒழுங்கு, order, arrangement, regularity. 2. யானைக்கூடம், an elephant stall.

ஓனம், எழுத்தின்சாரியை, a particle used by children in sounding the long letters.

ஔ

ஔ, ஔகாரம், } உயிரெழுத்திலொன்று, the twelfth or last of the vowels in Tamil.

ஔகாரக்குறுக்கம், மாத்திரை குறுகிய ஔகாரம், the letter ஔ, shortened in sound.

ஔடதம், மருந்து, medicine a medicament or drug.

ஔதாரியம், மிகுகொடை, munificence, liberality.

ஔதாரியன், வரையாது கொடுப்போன், one who gives without limit, a very generous person.

ஔபாசனம், உபாசனம், religious practice, the performance of prescribed rites. 2. ஓமத்தீயோம்பல், a daily offering made by fire kept always burning.

ஔரசன், குலமொத்த கன்னியைத் தீவேட்டுப்பெற்றபுத்திரன், a child by a wife of the same tribe.

ஔரிதம், தருமநூல் பதினெட்டினொன்று, one of the eighteen works on law, ethics and jurisprudence.

ஔவித்தல், அழுக்காறடைதல், being envious.

ஔவியம், அழுக்காறு, envy.

ஔவுதல், கௌவுதல், grasping or seizing or taking hold with the mouth, bitting off.

ஔவை, தவப்பெண், a female ascetic—usually of the Jaina sect. 2. தாய், a mother, matron. 3. திருவள்ளுவர் சகோதரி, an ancient authoress who wrote on moral subjects; she was the eldest of four sisters, who also were authoresses. They were the reputed sisters of திருவள்ளுவர், the author of the Kural.

க

க, ஒருயிர்மெய்யெழுத்து, the first vowel—consonant and first of the hard letters. 2. ஒன்றெனுமெண்ணின்குறி, the figure one. 3. வியங்கோள் விகுதியினொன்று, a termination of verbs in the optative mood.

கஃகான், ककरम், ककारम், } ஒரெழுத்து, the letter க.

கஃசு, காற்பலம், a weight, the fourth of a பலம்.

ககபதி, கருடன், the Brahmany kite—the reputed king of birds.

ககமாறம், மணித்தக்காளி, a plant—Solanum rubrum.

ககம், அம்பு, an arrow. 2. பறவை, a bird.

ககவசுகம், ஆலமரம், the banyan tree—Ficus Indica.

ககனம், ஆகாயம், the air, the atmosphere, the sky. 2. காடு, a wood or thicket, jungle. 3. படை, an army. 4. கிழங்கு, a turnip-shaped root.

ககனரவிந்தம், ஆகாயத்தாமரை, the sky-lotus.

ககுபம், திசை, a region or point of the compass. 2. மருதமரம், a tree—Termin alia alata.

ககேசன், ககேந்திரன், } கருடன், the Brahmany kite, as the reputed king of birds.

ககோளம், அண்டகோளம், the vault of the heavens, a sphere.

கக்கக்கெனல், ஒலிக்குறிப்பு, clucking—as fowls, &c.

கக்கசம், கக்கிசம், } பிரயாசம், difficulty, hardness.

கக்கபாளம், கக்கப்பை, a vessel or bag carried under the arm by religious mendicants.

கக்கம், கட்சம், } அக்குள், the arm-pit. 2. கூலம், sediment, dregs of oil, butter.

கக்கல், சத்திபண்ணல், vomiting. 2. கக்கப்பட்டது, anything ejected from the mouth. 3. இருமல், caughing spasmodically, as in hooping cough.

கங்கணம், கடகம், a bangle or bracelet. 2. வளை, an arm-ring worn between the wrist and the elbow. 3. காப்பு, a yellow cord which the Hindus tie with a piece of turmeric to the right arm of the bridegroom and the left arm of the bride, also round the arm of such as bind themselves by a religious vow.

கங்கதம், சீப்பு, a comb, an instrument for cleaning the hair.

கங்கபத்திரம், அம்பு, an arrow. 2. பருந்திறகு, a hawk's feather.

கங்கம், சீப்பு, a comb. 2. தீப்பொறி, a spark of fire. 3. பருந்து, a species of hawk or kite. 4. கழுகு, an eagle. 5. கோனகபாஷாணம், a species of arsenic.

கங்கன், ஓரரசன், the name of a king, under whose auspices the Nannul was composed. 2. பிறவிச் சீர்பந்தபாஷாணம், a species of arsenic in its natural state.

கங்காசுதன், see கங்கைபெற்றோன்.

கங்காதரன், சிவன், he who supports the Ganges on his head—Siva.

கங்காதீரம், கங்கைக்கரை, the sacred banks of the Ganges.

கங்காதேவி, கங்கை, the river Ganges regarded a Goddess.

கங்காளமாலி, சிவன், Siva.

கங்காளம், முழுவெலும்பு, a skeleton.

கங்காளன், சிவன், he who wears bones—Siva. 2. துரிசு, blue vitriol.

கங்காளி, காளி, Kali.

கங்கு, கருந்தினை, a black kind of millet—Panicum Italicum. 2. பருந்து, a kite. 3. வயலின்வரம்பு, a ridge or bank to retain water in rice-lands. 4. வரம்பின்பக்கம், the side of a bank or ridge.

கங்குல், இரா, night. 2. இருள், darkness. 3. பரணிநாள், the second lunar asterism.

கங்குற்சிறை, இராக்காவல், night-watch.

கங்கை, ஓராறு, the Ganges. 2. சிவன் மனைவி, the wife of Siva.

கங்கை, கங்கைக்குணன், } நவட்சாரம், a solder, a metallic cement (*M. Dic.*).

கங்கைசக்களத்தி, பார்ப்பதி, Parvati.

கங்கைபெற்றோன், கங்கைமைந்தன், } முருகன், Skanda. 2. விநாயகன், Ganesa, 3. வீட்டுமாசாரி, Bishma.

கங்கைவேணியன், சிவன், he whose hair is adorned with the Ganges—Siva.

கங்கையோன், துருசி, blue vitriol.

கசகசா, ஒரு பூண்டு, the poppy—Papaver somniferum.

கசகம், வெள்ளரி, the cucumber creeper—Cucumis sativus.

கசகரிகம், கக்கரி, a cucumber creeper.

கசகன்னம், செவியாட்டும் வித்தை, the power or art of moving or waving the ears in imitation of an elephant.

கசகன்னி, வெருகு, a shrub with a very large leaf used for covering newly-planted saplings—Arum macrorizon.

கசக்கார், தேமா, the sweet mango tree.

கசங்கு, ஈந்து, a palm tree—phœnix farinifera.

கசடன், கீழ்மகன், (pl. கசடர்) a low-bred or base person.

கசபுடம், ஆயிரமெருமுட்டைவைத் தெரிக்கும்புடம், a fire prepared with one thousand cakes of dried cowdung for calcining medicines; also the cavity made for the fire.

கசடு, ஐயம், doubt. 2. குற்றம், fault, defect, inaccuracy, blemish, imperfection. 3. தழும்பு, a scar. 4. மாசு, a blot.

கசமாது, ஊமத்தை, a plant—Datura.

கசம், ஓரளவு, a measure of length, two cubits or a yard. 2. கயம், a spring. 3. யானை, an elephant. 4. மயிர், hair. 5. ஒரு நோய், consumption.

கசரிபு, சிங்கம், the enemy of the elephant—a lion.

கசற்பம், மஞ்சள், turmeric or Indian saffron—Curcuma longa.

கசிதம், துடுப்பு, a small ladle used for taking up ghee in burnt-offerings. 2. பதித்தல், setting with precious stones. 3. பூச்சு, plating, gilding, &c.

கசிதல், அழுதல், weeping. 2. வெயர்த்தல், perspiring. 3. இரங்கல், being tenderminded, becoming compassionate, relenting.

கசிவு, அழுகை, weeping. 2. அன்பு, tenderness, sensibility, softness.

3. வருத்தம், pain, distress. 4. வெயர்வை, perspiration.

கசை, கவசம், a coat-of-mail. 2. குதிரைச்சம்மட்டி, a horse-whip.

கச்சகம், குரங்கு, a monkey.

கச்சபம், ஆமை, a turtle, tortoise.

கச்சம், அளவு, measure in general. 2. கடன், debt. 3. குதிரையங் கவடி, a stirrup. 4. துணிவு, venture, daring rivalry. 5. மரக் கால், a dry measure. 6. முன்றானை, the front border of a woman's cloth worn below the waist. 7. யானைக்கழுத்திடுகயிறு, an elephant's neck-rope. 8. வார், thong. 9. முலைக்கச்சு, stays for the breast. 10. ஒரு மீன், a fish.

கச்சளம், இருள், darkness. 2. கண்ணி லிடுமை, collyrium for the eyes.

கச்சன், ஆமை, a tortoise.

கச்சாலம், காய்ச்சற்பாஷாணம், a kind of arsenic in its naturalstate.

கச்சாலை, கச்சபாலயம், a shrine in Conjeevaram.

கச்சி, காஞ்சிபுரம், the city of Conjeevaram. 2. சீந்தில், a creeper.

கச்சு, முலைக்கட்டு, stays for women's breasts.

கச்சுரு, நெருப்பு, fire.

கச்சூரம், கழற்சிக்கொடி, a shrub—Guilandina bonduc.

கச்சை, கயிறு, a rope, a cord. 2. கவ சம், a coat-of-mail. 3. தழும்பு, a scar, cicatrice, mark made by blow or wound. 4. யானைகட்டுங் கயிறு, an elephant's neck-rope.

கச்சைக்கொடியோன், கன்னன், the king Karna.

கச்சோணி, வாசனைப்பண்டம், a compound of spices used with betel.

கச்சோதம், மின்மினி, a glow-worm or fire-fly.

கஞலல், } கஞறல், } எழுச்சி, rising, elevation. 2. கடுப்பு, severity, quickness. 3. சினக்குறிப்பு, a sign of displeasure. 4. நெருங்கல், closeness, narrowness. 5. பொலிவு, fulness, luxuriance. 6. மிகுதி, abundance, plenty.

கஞறம், கள், toddy,fermented liquor.

கஞன்றல், எழுச்சி, ascent.

கஞ்சகம், கச்சுவிடுந்தலைப்பு, the outer end of a girdle worn by warriors. 2. முன்றானை, the outer bordar of a woman's cloth.

கஞ்சகாரர், கன்னார், braziers.

கஞ்சம், அப்பவர்க்கம், pastry. 2. கஞ்சா, the கஞ்சா, plant—Cannabis sativa. 3. கைத்தாளம், a musical instrument of metal, a kind of cymbal. 4. தாமரை, the lotus flower. 5. நீர், water. 6. வஞ்சம், deception, fraud, knavery. 7. வெண்கலம், bell-metal, also tutenag or white copper. 8. கற்கடக பாஷாணம், a natural arsenic.

கஞ்சரீடம், வலியான்குருவி, a kind of black bird, the wagtail.

கஞ்சனம், கரிக்குருவி, a black bird. 2. கண்ணாடி, a mirror. 3. கைத் தாளம், a kind of cymbal. 4. வலி யான், the wagtail—Gracula religiosa.

கஞ்சனை, கண்ணாடி, a mirror. 2. கலசப்பானை, a small pot.

கஞ்சன், பிரமன், Brahma. 2. கிருஷ் ணன் மாமன், a king, uncle of Krishna.

கஞ்சா, கஞ்சா, a medicinal plant yielding leaves of narcotic and intoxicating qualities much used by smokers—Cannabis sativa. 2. கள், toddy, anything intoxicating (திவா.).

கஞ்சாரி, விஷ்ணு, Vishnu.

கஞ்சி, கஞ்சி, a kind of rice-gruel used as an article of food, also as starch. 2. காஞ்சி, Conjeevaram.

கஞ்சிகை, இரத்தினசிவிகை, a palankeen adorned with gems. 2. சீலை, cloth. 3. திரைச்சீலை, curtains.

கஞ்சுகம், சட்டை, a tunic. 2. மார்ச் சட்டை, bodice, jacket. 3. பாம்புச் சட்டை, snake's skin. 4. புடவை, cloth.

கஞ்சுகன், வயிரவன், the God Bhairava. 2. காவலன், a bodyguard who wears jackets.

கஞ்சுகி, காவலன், a guardian. 2. சட்டை, a jacket. 3. திரைச்சீலை, a curtain. 4. பாம்பு, a snake. 5. அந்தப்புரத்துக் காவல், a attendant in the apartments of women.

கஞ்சுளி, சட்டை, a jacket. 2. சோழியப்பை, a bag of a religious mendicant.

கடகடெனல், கடகடென்றொலித்தல், clattering, rattling, rumbling, clicking.

கடகம், கங்கணம், a variety of bracelets. 2. கூத்தின் விகற்பம், a kind of dance. 3. கெண்டிகை, a pot with a kind of spout. 4. கேடயம், a shield. 5. கைவளை, a bracelet. 6. மதில், a surrounding wall, a fortification. 7. மலைப்பக்கம், the side or ridge of a hill or mountain. 8. யானைக்கூட்டம், a troop of elephants. 9. வட்டம், circle, ring, a wheel. 10. ஆயுதவர்க்கம், weapons collectively. 11. கர்க்கடகம், cancer of the zodiac.

கடத்தல், செலுத்தல், causing to go, driving. 2. தாண்டல், jumping, leaping or bounding over, striding over. 3. நடத்தல், going, passing by, proceeding.

கடப்பாடு, ஈகை, giving, bestowing, liberality. 2. முறைமை, established custom, order, propriety. 3. கடமை, duty, obligation, what is fit or proper to be done.

கடமா, கடமான், } காட்டுப்பசு, a kind of animal, the wild cow.

கடமா, மதயானை, an elephant in rut.

கடமுனி, அகத்தியன், the sage who is represented to have been born in a water-jar—Agastia.

கடமை, முறைமை, duty, obligation, propriety. 2. காட்டுப்பசு, an elk, a wild beast.

கடம், அருநெறி, a hard or difficult way. 2. உடல், body, human or other. 3. கயிறு, a rope. 4. காடு, a forest, jungle. 5. குடம், large water-pot. 6. தோட்டம், a garden. 7. நீதி, right, justice. 8. மலைப்பக்கம், the side of a mountain. 9. யானைக் கதுப்பு, an elephant's temples whence one of the secretions flows. 10. யானைக்கூட்டம், a troop of elephants. 11. யானை மதம், the secretion of an elephant in rut. 12. வான், the sky. 13. மயானம், a grave-yard, burning-ground. 14. கடவாத்தியம், a kind of musical instrument.

கடம்பம், வாலுளுவை, a medicinal seed.

கடம்பர், குறும்பர், unruly persons.

கடம்பல், குமிழமரம், a tree—Gmelina Asiatica.

கடம்பன், முருகன், he to whom the flower tree called கடம்பு is sacred —Skanda.

கடம்பாவனம், கடம்பாடவி, } மதுரை, Madurai.

கடம்பு, ஒரு மரம், a flower tree including two kinds—Eugenia racemosa.

கடரி, மரமஞ்சள், twining shrub very bitter—Coscinium fenestratum (*M. Dic.*).

கடலகம், ஊர்க்குருவி, a sparrow. 2. ஆமணக்கு, castor plant.

கடலஞ்சிகம், தருப்பை, the cusa grass—Saccharum.

கடலடக்கி, பேய்முசுட்டை, a plant—Convolvulus speciosus.

கடலடைத்தான், அபினி, opium. 2. கஞ்சா, the Canabis Indica.

கடலர், நெய்தல் நிலமாக்கள், inhabitants of maritime districts—fishermen.

கடலாடி, நாயுருவி, a plant—Achyranthes aspera.

கடலுராய்ஞ்சி, ஒரு நீர்வாழ்பறவை, a sea-bird.

கடலெலி, ஒரு மீன், a fish.

கடலை, ஒரு பயறு, Bengal gram—Cicerarietinum.

கடலோடி, மரக்கலமோட்டுவோன், a mariner, a sea-man.

கடல், சமுத்திரம், the sea, ocean. 2. ஒரெண், a number (பிங்.).

கடல்மாதர், நீர்மகளிர், mermaids.

கடல்வண்ணன், விஷ்ணு, he whose colour is that of the ocean—Vishnu. 2. ஐயனார், Aiyanar.

கடவல், செலுத்தல், causing to go, driving a beast or vehicle, riding, discharging missile weapons, &c.

கடவு, கடவுமரம், கடவை, } தணக்கு, a tree—Gyrocarpus jacquini.

கடவுட்பணி, ஆதிசேடன், a fabulous serpent supposed to support the earth on his head—king of the serpents. 2. தேவதொண்டு, divine service.

கடவுண்மூர்த்தி, அருகன், Argha.

கடவுளர், தேவர், the Gods.

கடவுளர்தாரம், தேவதாரம், a medicinal tree—Sethia Indica (*M. Dic.*).

கடவுள், குரு, a guru. 2. தெய்வம், the deity, the Supreme Being. 3. நன்மை, goodness. 4. முனிவன், a sage.

கடவுள்வணக்கம், கடவுள் வாழ்த்து, invocation addressed to a God or the Gods at the commencement of a treatise. 2. தெய்வ வணக்கம், worship of the Deity.

கடவை, ஏணி, a ladder. 2. கடவுமரம், a turn-stile. 3. குற்றம், fault, defect, crime.

கடறு, அருநெறி, a hard or difficult way. 2. காடு, a forest, a jungle. 3. வாளுறை, a scabbard.

கடற்குருவி, கல்லுப்பு, salt in lumps (*M. Dic.*).

கடற்சார்பு, நெய்தல்நிலம், a maritime district, the sea-coast.

கடற்சேர்ப்பன், நெய்தனிலத்தலைவன், a chief or headman in a maritime district.

கடற்பச்சை, சமுத்திரப் பச்சை, a plant—Mentha zeylan.

கடற்பிணி, நெய்தனிலப் பெண், a female of the fisher tribe.

கடற்பிறந்தாள், இலக்குமி, the sea-born matron—Lakshmi.

கடற்றீ, கடனுரை, the froth of the sea.

கடன், அளத்தல், measurement. 2. இருணம், debt, loan of money or of goods on trust. 3. குடியிறை, tribute, tax. 4. மரக்கால், a dry measure. 5. முறைமை, duty, obligation, what one is bound to do, what is proper to be done.

கடா, ஆடு, எருமை இவற்றினாண், the male of goats, sheep, buffaloes. 2. கடாவென்னேவல், *imp.* discharge missile weapons, drive a nail, &c., interrogate. 3. வினா, a question, an interrogation.

கடாகம், கொப்பரை, a brass boiler.

கடாட்சம், கடைக்கண், a leer, glance or side look deemed favourable in great persons, deities, &c. 2. கருணை, grace, favour, benignity, clemency.

கடாம், யானை மதம், the secretion of an elephant in rut.

கடாரம், ஓரூர், the city காழகம். 2. கருமை கலந்த பொன்மை, a brown, tawny, yellow colour compounded with black. 3. கொப்பரி, a metal caldron.

கடாரி, ஈனாவிளமாடு, a heifer, a young cow that has not calved.

கடாரை, ஒரு நாரத்தை, a species of citron tree.

கடாவல், கடவல், despatching, discharging missile weapons. 2. செலுத்தல், riding, driving, driving a nail, peg, a screw, a wedge, &c. 3. வினாவல், asking, interrogating.

கடி, அச்சம், fearfulness, dreadfulness. 2. இன்பம், delight, gratification, pleasure. 3. ஒளி, brightness, transparency. 4. கடியென்னேவல், *imp.* rebuke, renounce, restrain, be angry with, destroy, cut, prohibit. 5. கரிப்பு, poignancy, pungency. 6. களிப்பு, merriment. 7. காலம், time in minute or indivisible portions. 8. காவல், protection, safeguard, defence. 9. கூர்மை, sharpness,

keenness. *10.* கைப்பற்றல், marriage. *11.* சிறப்பு, beauty. *12.* சீக்கிரம், speed, swiftness. *13.* நந்தவனம், flower-garden. *14.* நிதம்பம், puden, dum muliebre or mons veneris. *15.* பிசாசம், a vampire, a goblin. *16.* புது மணம், wedding, nuptials. *17.* புதுமை, newness, modernness. *18.* பொழுது, time. *19.* வாசனை, fragrance, odour, scent. *20.* விளக்கம், explication. *21.* இரப்போர் கலம், a beggar's bowl. *22.* இடுப்பு, the hips.

கடிகண்டு, பூனைக்காலி, a plant—Mucuna pruriens.

கடிகம், கைமுட்டி, the fist, the hand closed.

கடிகாரம், நாழிகைவட்டம், a watch, clock, dial.

கடிகை, சமயம், opportunity. *2.* தாழக்கோல், a bolt. *3.* துண்டம், a piece cut off. *4.* நாழிகை, an Indian hour of twenty-four minutes. *5.* அரையாப்பு, venereal tumor in the groins. *6.* வேதம், Vedas, the sacred writings. *7.* கரகம், a kind of drinking vessel with a spout for pouring into the mouth. *8.* உண்கலம், a brass plate for eating.

கடிகைமாக்கள், மங்கலப்பாடகர், panegyrists, who pass before and after a prince pronouncing his titles and singing verses in his honour.

கடிசூத்திரம், அரைநாண், a waist-string supporting the cloth that covers the privities.

கடிச்சை, ஒரு செடி, a shrub whose fruit kills fishes—Casaria elleiptica. *2.* ஒரு மீன், a small fish.

கடிஞை, இரப்போர் கலம், an alms-dish.

கடிதடம், நிதம்பம், the pudendum muliebre or mons veneris. *2.* அரை, the loins, the hip.

கடிதல், அறுத்தல், sundering. *2.* கோபம், anger, being angry. *3.* சினக்குறிப்பு, signs of anger. *4.* வெட்டல், cutting. *5.* (அறிவானன்) ஒடுக்கல், restraining, subjecting—as the senses.

கடிந்தோர், முனிவர், sages, ascetics.

கடிப்பகை, கடுகு, mustard. *2.* வேம்பு, the margosa.

கடிப்பம், ஆபரணப் பெட்டி, a casket. *2.* காதணி, an ear-ornament. *3.* கெண்டிகை, brass oil-vessel.

கடிப்பிணை, காதணி, an ear-ornament.

கடிப்பிரதேசம், பின்பக்கம், the buttocks.

கடிப்பு, குணில், a drumstick.

கடிப்பை, சிறு கடுகு, a kind of small mustard.

கடியிரத்தம், மூக்கிரட்டை, a plant—Boerhaavia procumbens.

கடிரோமம், கடிலா, } கோரைக்கிழங்கு, the root of Cyperus bulbosa.

கடிவை, யானை, an elephant.

கடினம், கொடுமை, severity, cruelty, harshness, rigorousness. *2.* வன்மை, hardness, compactness, induration, firmness.

கடினை, கண்ணின் வெண்மையான வெளிச்சவ்வு, sclerotica (*Anat.*).

கடு, கசப்பு, bitterness. *2.* கடுக்காய் மரம், the gall-nut tree. *3.* கடு வென்னேவல், *imp.* ache, throb, resemble, hesitate, be angry, pass swiftly. *4.* கார்த்தல், astringency. *5.* நஞ்சு, poison, venom. *6.* முள், a thorn. *7.* பாம்பு, a serpent. *8.* கடுகுரோகணி, a kind of purgative drug, Helleborus niger. *9.* முதலை, an alligator, croco dile.

கடுகம், கார்ப்பு, astringency, pungency. *2.* கடுரோகணி, a purgative drug—Helleborus niger.

கடுகல், விரைவு, being in haste.

கடுகியகாந்தி, இரசதபாஷாணம், a kind of prepared arsenic.

கடுகு, ஐயவி, mustard—Sinapis niger. *2.* கடுகென்னேவல், *imp.* pass swiftly, be in haste.

கடுகுரோகணி, ஒரு மருந்து, a kind of purgative drug—Helleborus niger.

கடுக்காய், அரிதகிக்காய், Indian gall-nut or ink-nut.

கடுக்கை, கொன்றை மரம், a tree—Cassia fistula.

கடுக்கைக்கண்ணியன், கடுக்கைசூடி, } சிவன், he who wears a garland of கடுக்கை, Siva.

கடுங்காந்தி, இரசதபாஷாணம், a kind of prepared arsenic.

கடுங்கூர்மை, கடுந்திலா லவணம், salt from sesamum. 2. அமரியுப்பு, salt from urine.

கடுசரம், கடுகுரோகணி, a purgative drug.

கடுசாரம், காசிச்சாரம், a medicinal salt.

கடுஞ்சாரி, நவட்சாரம், a solder, sal ammoniac.

கடுஞ்சுண்ணத்தி, சீனக்காரம், alum.

கடுடம், மருக்காரை, a thorny shrub—Randea dumetorum.

கடுதல், திருடல், robbing, stealing, plundering. 2. பறித்தல், plucking off, pulling up.

கடுத்தலை, வாள், a sword.

கடுத்தல், உவமை, comparison. 2. ஐயம், doubt. 3. கோபம், wrath. 4. சினம், anger, displeasure. 5. வேகம், vehemence.

கடுந்தழற்பூமி, உழமண், fuller's earth.

கடுந்திலாலவணம், எள்ளுப்பு, salt procured from sesamum seed.

கடுப்படக்கி, எருமுட்டைப்பீநாறி, a plant—Ballota disticha.

கடுப்பு, சினம், anger, displeasure, peevishness. 2. விரைவு, speed, rapidity, great haste.

கடுப்பை, வெண்கடுகு, white mustard.

கடுமுள், ஆயுதப்பொது, weapons in general.

கடுமை, கொடுமை, severity, cruelty, hard-heartedness. 2. சீக்கிரம், rapidity, speed, haste, velocity. 3. மிகுதி, excessiveness, intensity.

கடும்பச்சை, நாகப்பச்சை, a curious green stone.

கடும்பு, உறவு, relations. 2. சும்மாடு, a pad of straw for the head used in carrying a load.

கடுரோகணி, கடுரோணி, } see கடுகுரோகணி.

கடுவன், குரங்கு, பூனை, முசு இவற்றினாண், the male of monkeys, cats, red monkeys, &c. 2. விலங்கேற்றின்பொது, the male of beasts in general.

கடை, ஆவணம், a shop, bazaar, market. 2. ஏழனுருபு, the form of the seventh case. 3. கடையென்னேவல், *imp.* churn, turn in a lathe, form moulds in a wheel—as a brazier. 4. கீழ், inferiority, baseness, meanness, lowness. 5. புறவாயில், the outer gate. 6. பணிப்பூட்டு, the clasp or other fastening of a neck-ornament. 7. முடிவு, end, extremity. termination, conclusion. 8. வழி, way. 9. வாயில், a door, a gateway. 10. இடம், place, room. 11. a வினையெச்ச விகுதி, a termination of the verbal participle.

கடைக்கனல், ஊழித்தீ, the final deluge-fire.

கடைக்காப்பு, பதிகத்தின் கடைசிப் பாட்டு, the last verse in the poem called பதிகம், as an invocation, &c.

கடைக்குளம், உத்திராடநாள், the twenty-first lunar mansion.

கடைக்குறை, ஈறுகுறைந்து நிற்குஞ் சொல், elision in the termination of a word.

கடைக்கூழை, ஒரு தொடை, a species of rhyme. 2. பிற்படை, the rear division of an army.

கடைச்சங்கம், பிற்சங்கம், the third and last of the ancient Madura colleges consisting of forty-nine literati.

கடைச்சி, மருதநிலப் பெண், a female of the labouring caste in agricultural districts.

கடைஞர், மருதநிலமாக்கள், the labouring caste in agricultural districts.

கடைத்தடம், வாயில், gateway.

கடைதலைப்பூட்டு, விற்பூட்டுப் பொருள்கோள், an inverted construction in poetry, by which the last word in a verse is connected with the first.

கடைதல், குடைதல், churning, turning in a lathe.

கடைதிறப்பு, கதவு திறக்கை, opening a door—in erotics, the section which relates to an application made for the opening of a door to a coming or expected lover; or in war poems, to a warrior, returning in triumph after a victory.

கடைநாள், கடைமீன், } இரேவதி, the twenty-seventh lunar mansion.

கடைநிலை, ஒரு பிரபந்தம், a poem uttered by holy persons coming from a distance to the hero of the poem at the door of whose residence they stand and desire the door-keeper to inform his master of their arrival. 2. புறவாயில், an outside door. 3. ஈற்றெழுத்து, the last letter of a word or verse.

கடைநிலைத்தீபகம், ஒரு சொல் செய்யுட் கடையில் நின்று மற்றுஞ் சொல்லோடு சேர்ந்து பொருள் கொடுப்பது, a word at the end of a sentence, understood in other parts—one of the தீவகம்.

கடைநிலையளபெடை, ஒரு பாட்டின் சொல்லினீற்றில் வருமளபெடை, the rhyme in which the last letter of each verse is lengthened.

கடைநிலையெழுத்து, இறுதி நிலை, (*in grammar*) letters proper to end a word.

கடைப்பாடு, தீர்மானம், determination. 2. இழிவு, inferiority, baseness.

கடைப்பிடி, சுருமமுடிக்குந்துணிவு, perseverance, firm determination. 2. தேற்றம், certainly, ascertainment. 3. மறவாமை, indelible impressions of gratitude for benefits received, of duties to be performed, of the importance of virtue and religion.

கடைமடக்கு, சொல்லணியிலொன்று, (*in rhetoric*) continued recurrence of the same words at the end of each line through a stanza but with different meanings.

கடைமுரண், ஒரு தொடை, a species of rhyme when the last foot of every line is of opposite meaning.

கடைமோனை, கடையாகுமோனை, } நான்கடியி னீறுமோரெழுத்தின் முடியுங் கவி, a rhyme when the first letter of the last foot of every line is the same.

கடையம், இந்திராணி கூத்து, the dance of Indrani now continued in imitation.

கடையயல், ஈற்றயல், (*in grammar*) the penultimate.

கடையர், see கடைஞர்.

கடையழிதல், வருந்தல், being afflicted with a painful and lingering disease. 2. மிடித்தல், being in want, being distressed with poverty.

கடையனல், ஊழித்தீ, the fire by which the world will finally be consumed.

கடையாகெதுகை, ஒரு தொடை, rhyme.

கடையார், கடையர், persons of the lowest rank.

கடையிணைமுரண், ஒரு தொடை, a rhyme when the last two feet of a line are of opposite meanings.

கடையிணைமோனை, ஒரு தொடை, a consonance of the first letters in the last two feet of each line in a verse.

கடையெழுஞ்சனி, உத்திரநாள், the twelfth asterism in which Saturn is considered malignant in his influence.

கடைவள்ளல், கேட்டபின் கொடுப்போன், the last or the third class of liberal men—he who bestows charity from motives of ostentation.

கடோரம், கடினம், hardness, solidity. 2. கொடுமை, severity, cruelty.

கட்கத்தம்பம், கலைஞான மறுபத்து நான்கினொன்று, stopping the power of the sword—one of the sixty-four கலைஞானம்.

கட்கம், வாள், a sword.

கட்சம், தந்திரவிதி, a magical treatise. 2. சங்கபாஷாணம், a kind of arsenic. 3. நவக்கிரக கட்சம், an astrological treatise.

கட்சி, காடு, desert, jungle. 2. பறவைக்கூடு, a bird's nest. 3. மனிதர் படுக்கை a bed or other sleeping place. 4. வழி, way.

கட்செவி, பாம்பு, a snake—its eyes being considered the organs of hearing as well as of sight.

கட்டங்கம், தண்டு, a kind of club or staff used as a weapon. 2. மாத்திரைக்கோல், a similar staff with a shell fastened on the top of it, carried by religious mendicants.

கட்டம், காடு, a forest, a wood, jungle. 2. தாடி, the chin, the beard. 3. துன்பம், affliction, distress, uneasiness. 4. மலம், ordure, human excrement, dung of dogs, cats, &c.

கட்டல், தடை, a spell, enchantment, magical power or in influence exerted on a person or divination. 2. திருடல், stealing, plundering. 3. தோண்டல், digging up, excavating. 4. பிணித்தல், tying, binding. 5. மூடல், covering. 6. தழுவல், hugging, embracing. 7. இறுகல், hardening, consolidating, forming as concretion, concreting, clotting, congealing.

கட்டழகு, அலங்காரம், ornament. 2. பேரழகு, great beauty.

கட்டழல், கடுந்தீ, a vehement fire.

கட்டளை, இட்டிகை யியற்றுங்கருவி, a mould for making bricks. 2. உரைகல், a touch-stone. 3. உவமை, similitude, likeness, simile. 4. துலாராசி, the libra of the zodiac. 5. நிறை, weight. 6. நிறையறிகருவி, balance, scales. 7. கற்பனை, an order, command, law, precept, direction, appointment, institute, denunciation, injunction, warrant, charge.

கட்டளைக்கலித்துறை, ஒருவகைக் கலித்துறை, a class of கலித்துறை, verse.

கட்டளைக்கலிப்பா, ஒருவகைக் கலிப்பா, a species of கலிப்பா, verse.

கட்டளைக்கல், உரைகல், a touch-stone. 2. நிறைகல், weight.

கட்டாஞ்சி, ஒரு மரம், a tree.

கட்டாண்மை, பேராண்மை, superior heroism, intrepidity, bravery.

கட்டாம்பாரை, ஒரு மீன், a kind of fish.

கட்டார்ச்சிதம், வருந்தித் தேடிய பொருள், property obtained by one's own labor.

கட்டி, அகமகிழ்ச்சி, inward pleasure. 2. ஒரு புள், a bird. 3. கட்டி, a clod, a lump, a clot, a consolidation, grain, a globule, crystallization, concretion, congelation, formation. 4. கருப்புக்கட்டி, coarse sugar, jaggery. 5. கற்கண்டு, sugar-candy.

கட்டில், மஞ்சம், a bedstead, a couch, a sofa.

கட்டிளமை, மிக்கிளமை, tender age, being very young.

கட்டு, உறுதி, hardness, firmness, consolidation. 2. கட்டென்னேவல், *imp.* tie, build, harden, subdue. 3. காவல், guard, sentry, watch, patrol. 4. குறி, divination, conjuration, foretelling events by the aid of a demon. 5. தளைதல், tying, binding, confining, shackling, bracing. 6. மலைப்பக்கம், the side of a mountain. 7. மிகுதி, abundance, plenty.

கட்டுரை, உறுதிச்சொல், an avowal, solemn declaration, undoubted truth, infallible expression.

கட்டை, விறகு, fire-wood.

கட்டோசை, பேரொலி, a tremendous noise, a loud report.

கட்புலன், நேத்திரேந்திரியம், the sense of sight.

கணகம், படையிலொரு தொகை, a body of troops consisting of

twenty-seven chariots, twenty-seven elephants, eighty-one horses and one hundred and thirty-eight footmen.

கணக்கதிகாரம், கணக்குநூல், arithmetic.

கணக்கன், கணக்கன், an accountant, a writer, a cashier, a book-keeper, a writer or accountant as belonging to a particular caste. 2. புதன், mercury, the planet. 3. கணக்கில் வல்லவன், an arithmetician.

கணக்காயர், அறிஞர், the wise, the learned. 2. ஓத்துரைப்போர், teachers of the Vedas. 3. பொருந்தச்சொல்வோர், those who teach the Shastras.

கணக்கு, எண், number, account, calculation, computation, reckoning, 2. எழுத்து, letters, writing, written accounts.

கணநாதர், கணநாயகர், } கணுதிபர், the attendants of Siva.

கணபதி, விநாயகன், Ganesa.

கணமூலி, சாணுக்கி, an herb—Ocimum.

கணம், ஒரு நோய், a kind of hectic fever. 2. காலநுட்பம், a minute portion of time. 3. கூட்டம், a company, tribe, class, clan, flock, herd, a series. 4. சிறுமை, a trifle, a particle. 5. திரட்சி, rotundity, globularness. 6. படையிலொரு தொகை, a body of troops. 7. பிசாசம், a demon, vampire. 8. மாத்திரை, the quantity of a metrical foot. 9. வட்டம், a circle. 10. விலங்கின் கூட்டம், a collection of beasts.

கணவம், அரசமரம், a tree—the Ficus religiosa.

கணவன், தலைவன், a husband.

கணவீரம், அலரிச்செடி, the oleander.

கணனம், எண்ணல், numbering, counting.

கணுதன், காசிபன், a muni or saint.

கணுதிபன், விநாயகன், Ganesa. 2. சிவன், Siva.

கணி, ஒரு ஜாதி, the name of a caste. 2. கணியென்னேவல், *imp.* compute, calculate, count, estimate, regard, foretell, &c. 3. மருதநிலம், agricultural districts. 4. வேங்கை மரம், the Kino tree—the Pterocarpus bilobus. 5. கூத்தாடுந்தொழில், the profession of singing and dancing.

கணிகம், நூறுகோடி, one thousand millions.

கணிகை, வேசி, a harlot, courtesan. 2. தாசி, a dancing girl.

கணிச்சி, உளி, a chisel. 2. கோடரி, a hatchet, an axe for felling timber. 3. நமனுயுதம், the battle-axe of Yama. 4. மழு, battle-axe. 5. (பாரதி) வெற்றிலை மூக்கரிகத்தி, a knife to cut off the stalk of betal leaves.

கணிதசிந்தாமணி, ஒரு நூல், a treatise on astrology.

கணிததீபிகை, ஒரு நூல், a treatise on astronomy.

கணிதம், எண்ணல், numbering, calculation. 2. சோதிடநூல், a treatise on astronomy and astrology. 3. எண், arithmetic, mathematics, mathematical calculations.

கணிதர், சோதிடர், astrologers, astronomers. 2. கணக்கில் வல்லோர், arithmeticians, mathematicians.

கணித்தல், எண்ணல், computing, numbering, calculating. 2. மதித்தல், estimating, esteeming, regarding.

கணியான், கூத்தாடி, one who sings or dances.

கணீர்கணீரெனல், கணீர்கணீரென்றொலித்தல், ringing as a bell, pealing, clanging as a brazen vessel, resounding as a rock struck by an axe, &c.

கணு, கணு, the knuckles, joints, or joining of a branch or twig to the tree, &c. 2. என்புக்கணு, (*in Anat.*) Trochanter tubercle, tuberosity.

கணேசன், விநாயகன், Ganesa, son of Siva and Parvati—God of wisdom and remover of obstacles —whence he is invoked in all new undertakings. He is represented as a short man with an elephant's head and large belly.

கணை, அம்பு, and arrow. 2. திரட்சி, cylindrical or globular form. 3. நிறைவு, fulness, plenitude. 4. பூரநாள், the eleventh lunar asterism. 5. வளைதடி, a curved club.

கணைக்கால், சங்கம், the leg from the foot to the knee, the shank, the shin.

கணையம், காவற்காடு, a desert. 2. பொன், gold. 3. போர், war. 4. யானைக் கம்பம், a timber placed between two elephants to prevent their fighting. 5. வளைதடி, a club in general.

கணையாழி, மோதிரம், a finger-ring, a seal-ring, a signet.

கண், இடம், place, situation, location. 2. ஏழனுருபு, a form of the seventh or locative case. 3. கணு, a knot or joint in a tree. 4. கண்ணென்னேவல், *imp.* propose, think, consider. judge, form an opinion. 5. கண்ணோட்டம், kindness, benignity. graciousness, protection. 6. பெருமை, greatness. 7. மயிற்றோகைக்கண், the spangles in a peacock's tail. 8. விழி, the eye.

கண்கூடு, காட்சியளவை, ocular demonstration, a thing in sight.

கண்டகசங்கம், முட்சங்கு, a thorny shrub—Azima tetracantha monetia.

கண்டகதுவாரம், முட்டொளை, foramen spinale (*Anat.*).

கண்டகம், காடு, forest, jungle. 2. சுரிகை, a dirk or short sword worn in the girdle. 3. முள், a thorn. 4. வாள், a sword. 5. நீர் முள்ளி, a thorny shrub. 6. மரவைரம், the solid part of a tree.

கண்டகர், அசுரர், the Assoors or demons. 2, கீழ்மக்கள், savages, barbarians, ferocious persons.

கண்டகி, ஒரு நதி, a sacred river near Benares—the Gandhaha (the Gunduck). 2. முள்ளெலும்பு, (*Anat.*) the vertebra.

கண்டகிச்சிலை, சாலக்கிராமம், a stone found in the Gandhaha.

கண்டத்தலம், கழுத்து, the neck.

கண்டநாளம், தொண்டைக்குழி, the gullet.

கண்டம், எல்லை, boundary. 2. எழுத்தாணி, a style for writing. 3. கண்ட சருக்கரை, sugar-candy, coarse sugar. 4. கவசம், coat-of-mail. 5. கழுத்து, the throat, the neck. 6. கைப்பிடி வாள், a short sword. 7. சிறுவாள், a small saw. 8. திரைச்சீலை, curtain. 9. துண்டம், a fragment, slice, a piece. 10. நாடு, a country. 11. மணி, a bell. 12. மணியுளோசை, the sound of a bell. 13. யானைக்கச்சை, the girth of an elephant. 14. வெல்லம், jaggery. 15. கள்ளி, a shrub—Euphorbia. 16. பிரிவு, section, division. 17. ஒரு யோகம், the tenth yoga (regulus) or one of the twenty-seven portions of a circle on the plane of the ecliptic. 18. யானைக்கழுத்து, an elephant's cheek and neck. 19. நவகண்டம், any of the nine divisions of the known continent. 20. குன்றிவேர், the root of the Abrus precatorius. 21. ஜாதிலிங்கம், fictitious cinnabar. 22. தத்து, disaster, catastrophe, calamity, malignity of evil planets in astrology, as experienced in its effects in adversity, straits, critical periods in a person's horoscope, fatal days, &c. 23. அக்குரோணி. a complete army.

கண்டரை, இரத்தாசயத்தின் இடச்சடரத்திலிருந்து (கீழறை) எழும்பும் பெருநாடி, the aorta *Anat.*).

கண்டர், துருசி, blue vitriol.

கண்டல், தாழை, the தாழை, tree—Pandanus odoratissimus. 2. நீர் முள்ளி, a kind of aquatic shrub—Barleria longifolia. 3. ஒரு மரம், a tree whose juice is very astringent; it is used to dye sail-cloth, boat-ropes, fishing nets, to preserve them from decay—Rhizophora candel. 4. முள்ளி, the Indian night-shade—Solanum Indicum.

கண்டறை, கற்புழை, a cavern in a a rock.

கண்டணம், கண்டனை, } நிராகரிப்பு, confutation, refutation, rejection.

கண்டன், ஒரு சோழன், a king of the chola dynasty. 2. புருடன், a husband. 3. எஜமான், a lord, a superior. 4. வீரன், a hero.

கண்டாஞ்சி, முள்வேல், a thorny kind of shrub proper for a quick-set hedge.

கண்டாரவம், ஓரிசை, the name of a tune. 2. மணியினோசை, the sound of a bell.

கண்டாவிழ்தம், கண்டூரம், (properly, கண்டௌஷதம்), a strong, compound medicine applied to the tongue in lockjaw.

கண்டி, கண்டியென்னேவல், *imp.* reprove, chide, speak with earnestness, cut in pieces, chop, sever, divide, chastise. 2. கழுத்தணியி லொன்று, a necklace.

கண்டிகை, கடகம், a bracelet. 2. தோளணி, a circular shoulder ornament worn by warriors, a kind of epaulet. 3. பணிசெப்பு, jewel-casket. 4. பதக்கம், a breast-plate of gold set with precious stones. 5. மாதரணிவடம், a necklace of one string or row. 6. நிலப்பிரிவு, a division in a field. 7. உருத்திராட்சமாலை, a necklace of beads worn by religious mendicants.

கண்டிதம், கண்டிப்பு, rigour, severity, reproof, exactness, cutting.

கண்டித்தல், தரித்தல், hewing. 2. வெட்டல், cutting. 3. கடிதல், reproving, reprehending, speaking with severity, censuring.

கண்டிப்பு, கண்டித்தல், hewing, cutting, rebuking, &c.

கண்டியர், பாணர், lyrists.

கண்டீரவம், சதுரக்கள்ளி, the prickly pear—Euphorbia antiquorum. 2. சிங்கம், a lion.

கண்டு, கருப்புக்கட்டி, sugar-candy. 2. கழலைக்கட்டி, a wen. 3. நூற் பந்து, a ball of thread.

கண்டுகம், மஞ்சிட்டி, a plant—Rubia mungista.

கண்டூதி, காஞ்சொறி, a kind of nettle—the Tragia involucrata. 2. தினவு, itching prurience, tingling, stringing.

கண்டூரம், see கண்டாவிழ்தம்.

கண்டை, சீலை, cloth. 2. பெருமணி, a large bell. 3. யானைமணி, a bell tied to the neck of an elephant. 4. வீரக்கழல், warrior's ankle-rings or bells.

கண்ணகி, கோவலன் மனைவி, wife of a merchant celebrated in சிலப்பதிகாரம்.

கண்ணஞ்சல், அஞ்சுதல், fearing, dreading, being excited by the sight of a superior, lightning, &c.

கண்ணல், கருதல், purposing, thinking, considering. 2. குறித்தல், judging, forming an opinion.

கண்ணழித்தல், பதப்பொருளுரைத்தல், interpreting a verse in common Tamil, clause by clause in small portions.

கண்ணறை, அகலம், breadth, width. 2. (பார.) குருடு, blindness.

கண்ணன், திருமால், Vishnu, especially in his Krishna incarnation.

கண்ணு, ஒரு மரம், a bushy tree. 2. திப்பிலி, long-pepper—Piper longum.

கண்ணுளர், கம்மாளர், artificers.

கண்ணுளன், கணவன், a husband. 2. தோழன், an associate, a companion.

கண்ணுள், வாணி, Saraswati.

கண்ணி, அரும்பு, a flower-bud. 2. தாம்பு, rope. 3. புட்படுக்குங் கயிறு, a gin, a trap. 4. பூங் கொத்து, a bunch of flowers. 5. பூமாலை, a flower garland.

கண்ணிகம், மணித்தக்காளி, a plant —Solanum nigrum.

கண்ணிகை, தாமரைக் கொட்டை, pericarp of the lotus. 2. பூவரும்பு, a flower-bud.

கண்ணிக்கொடி, ஒரு படர்கொடி, the name of a creeper.

கண்ணிலி, குருடன், a blind person. 2. திருதராஷ்டிரன், Dhritarashtra.

கண்ணீராக்கி, பச்சைக் கருப்பூரம், crude camphor.

கண்ணுகம், குதிரை, a horse.

கண்ணுக்கரசன், துருசு, blue vitriol.

கண்ணுக்கினியான், பொன்னுங்காணி, an edible plant, bearing a gold coloured flower—Illecebrum sessile. 2. கரிசிலாங்கண்ணி, a medicinal plant—Eclipta prostrata.

கண்ணுதல், கருதல், purposing. 2. குறித்தல், judging, forming an opinion, 3. சிவன், he whose forehead contains an eye, the frontal-eyed—Siva.

கண்ணுவம், கம்மியம், artisanship, mechanism.

கண்ணுவன், ஓரிருஷி, a famous Rishi or Saint.

கண்ணுளர், கண்ணுளர், artificers. 2. நாடகர், persons in masquerade.

கண்ணுள், கூத்து, masquerade, ball.

கண்ணுறல், காணல், seeing, viewing.

கண்ணெச்சில், see கண்ணேறு.

கண்ணேறு, திஷ்டிதோஷம், the blight of the eyes, an unlucky look supposed to cause sickness, &c.

கண்ணோட்டம், நாகரீகம், civility, complaisance, regard.

கண்படல், நித்திரைசெய்தல், sleeping.

கண்படை, நித்திரை, sleep. 2. மனிதர் படுக்கை, a bed or other convenience for sleeping.

கண்படைநிலை, ஒரு பிரபந்தம், a poem consisting of pleasing stories suitable for recital by physicians and courtiers in an assembly of kings and great personages to soothe the mind and induce sleep.

கண்பாடு, நித்திரை, sleep.

கண்புதைத்தல், கண்பொத்தல், covering the eyes, hoodwinking.

கண்மணி, கண்ணின் கருமணி, the apple of the eye.

கண்மை, கண்ணோட்டம், a benignant look.

கண்வளர்தல், துயிலல், going to sleep, sleeping.

கண்விதுப்பழிதல், கண்ணவாக் கெடல், failing, as the eyes of a female by watching and waiting for her absent husband or lover.

கண்வினைஞர், **கண்வினையாளர்**, } கம்மாளர், smiths, mechanics, artisans.

கதகாலம், செல்காலம், the past tense.

கதண்டு, கருவண்டு, a black beetle.

கதம், கோபம், anger, displeasure. 2. பாம்பு, a snake. 3. செல்கை, going, moving, progression.

கதம்பம், ஆள்கூட்டம், a herd of cattle. 2. கடப்பமரம், a tree—Nanclea-Kadamba. 3. மேகம், cloud. 4. வாசனைப்பொடி, a fragrant powder used as a perfume on festive occasions. 5. வெண் கடம்பு, the white kadamba tree. 6. கூட்டம், multitude, assemblage, collection, conjunction. 7. கானங்கோழி, wood or rail hen—Fulica.

கதலி, காற்றாடி, a plaything turned by the wind, a paper-kite. 2. தேற்றாமரம், the water-clearing-nut tree—Strycnos potatorium. 3. வாழை, the plantain tree. 4. விருதுகொடி, a banner, a flag of distinction granted by authority.

கதலிகம், தேற்றாமரம், the water-clearing-nut tree.

கதலிகை, துகிற்கொடி, a flag, a banner.

கதலிச்சி, கர்ப்பூரம், camphor.

கதலிபாகம், செய்யுள்நடை நான்கி லொன்று (*in poetic composition*), a sweet style, an easy style.

கதலுதல், அசைதல், moving, stirring, shaking.

கதவம், கதவு, a door. 2. காவல், a guard.

கதவாக்கியம், சோதிடத்திலோர் வாக்கியம், (*in calendars*), the வாக்கியம், taken for the last day of the year.

கதழ்வு, உவமைச்சொல், comparison, contrast, likeness, rivalry. 2. கடுப்பு, haste, speed. 3. சிறப்பு, decoration, ornament. 4. பெருமை, greatness. 5. மிகுதி, abundance. 6. சினம், anger, displeasure, fury, wrath. 7. உக்கிரம், vehemence, heat.

கதறல், அழல், crying aloud from pain or grief, shrieking, screaming. 2. கூப்பிடல், bellowing as a cow for its young, crying as a deer or as a calf.

கதனம், கடுப்பு, vehemence, severity. 2. கலக்கம், confusion, disorder, disturbance. 3. போர், battle, fight, skirmish, warfare.

கதாபாணி, தண்டபாணி, one armed with a club.

கதாமஞ்சரி, கதைத்திரட்டு, a series of fables or stories.

கதாயுதம், தண்டாயுதம், a club or mace.

கதாயுதன், வயிரவன், Bhairava. 2. வீமன், Bhima, a son of the king Pandu.

கதாயுத்தம், தண்டாயுதப்போர், a club fight, a battle or contest with clubs.

கதி, கதியென்னேவல், *imp.* rise, be high, grow high, sound. 2. குதிரை நடை, the five paces of a horse. 3. நடை, progression, locomotion, gait, pace. 4. நாற்கதி, condition, state or mode of existence, embracing the four divisions of living beings or stages through which the soul may pass. 5. பரகதி, bliss, exemption from future births, final beatitude, absorption of the soul in the deity.

கதிக்கும்பச்சை, நாகப்பச்சை, a kind of precious stone.

கதிக்கை, கருக்குவாளி மரம், a tree —Ziziphus glabrata.

கதித்தல், எழுச்சி, rising, being high, growing high. 2. ஒலித்தல், sounding.

கதிரம், அம்பு, an arrow. 2. கருங்காலி, the ebony tree—Acacia sundra. 3. ஒரு மரம், a tree, the resin of which is used in medicine —Terra japonica or catechu Acacia catedin).

கதிரவன், கதிரோன், } சூரியன், the sun.

கதிரெழுதுகள், சூரியகிரணத்தெழுந்துகள், atoms or dust appearing in a sunbeam, twenty-four of which make half a hair's point.

கதிர், சூரியகிரணம், a ray of light, beam, the sun's rays. 2. சூரியன், the sun. 3. தேருட்பரப்பின் மரம், spokes of a wheel, radii of a circle. 4. பயிர்க்கதிர், an ear or spike of corn, grass, &c. 5. இருப்பு முள், a spinner's spindle, a goldsmith's pin, a spike, an awl, &c.

கதிர்காமம், ஒரு தலம், a place in Ceylon sacred to Skanda.

கதிர்நாள், உத்திரநாள், the twelfth lunar asterism.

கதிர்ப்பகை, இராகுகேது, names of இராகு and கேது the ascending and descending nodes—regarded as planets.

கதிர்மகன், கன்னன், Karna. 2. சனி, the planet Saturn. 3. சுக்ரீவன், Sugriva. 4. நமன், Yama, the regent of the dead.

கது, வடு, cicatrice, a wart. 2. வெடிப்பு, a fissure, crack, rupture

கதுப்பு, கவுள், the cheeks, the sides of the face. 2. பசுக்கூட்டம், a herd of cows. 3. பெண் மயிர், a woman's lock of hair. 4. மைந்தர் மயிர், hair of the head of men.

கதுமெனல், சீக்கிரம், quickness. 2. சீக்கிரத்தின் குறிப்பு, a word expressive of suddenness, quickness, haste.

கதுவாய், வடுப்படல், a scar or seam of a wound. 2. இடையிட்டு வருவது, (*in prosody*) alliterations of which there are two kinds மேற்கதுவாய் and கீழ்க்கதுவாய், see மோனைத்தொடை.

கதுவுதல், கலங்குதல், mixing or coming in contact with, being disturbed. 2. நீங்காதுபற்றல், seizing, catching, entangling, grasping, laying hold of without ceasing.

கதை, காரணச்சொல், a thing, an affair, a topic, a circumstance. 2. சொல், a message, a communication. 3. சொல்லென்னேவல், *imp.* relate a fable. 4. தடி, a stick or rod. 5. தண்டாயுதம், a club. 6. சரிதம், a story, an anecdote, a narrative, an apologue. 7. கட்டுக்கதை, a fable, a romance, a fiction, a fabrication, legend.

கதைத்தல், சொல்லுதல், relating a fable.

கதோபகதனம், சம்பாஷணை, conversation, dialogue, discourse, talk.

கத்தபம், கழுதை, an ass.

கத்தம், புயம், arm. 2. கதை, a story.

கத்தரி, ஒரு பாம்பு, a species of snake. 2. கத்தரியென்னேவல், *imp.* cut with a pair of scissors, shears, &c. 3. வழுதுணை, the brinjal, egg-plant—Solanum melongena.

கத்தரிக்கை, கத்தரிக்குங்கருவி, a pair of scissors, shears, snuffers.

கத்தரிக்கை, கத்தரித்தல், } அறுத்தல், cutting with a pair of scissors, &c.

கத்தரிநாயகம், யானைச்சீரகம், a plant.

கத்தரிமணியன், ஓரெலி, a kind of poisonous rat.

கத்தல், கூப்பிடல், crying, bawling. 2. பிதற்றல், chattering, unmeaning or idle talk, nonsense. 3. விலங்குஜாதி கத்தல், croaking as a frog, cawing as a crow, chucking as a partridge, screaming, screeching or making a harsh sound as some birds, &c., chattering as monkeys in fear, yelping as young dogs, growling as a bear, braying as an ass, chucking as young birds, bleating as calves, making a reiterative sound as some snakes.

கத்தன், கத்தா, } கடவுள், God. 2. செய்பவன், an agent, a doer, a maker, an author.

கத்தி, வாள், a sword, a scimitar. 2. வெட்டுக்கத்தி, a knife, lance, lancet, razor.

கத்திகை, கருக்குவாளிமரம், a tree—the Ziziphus glabrata. 2. சிறு கொடி, a small creeper. 3. துகிற் கொடி a banner, a streamer, a flag. 4. பூமாலை, a garland of flowers.

கத்தியம், இலக்கணமின்றியிலக்கணப் பாட்டுப்போற் சொல்வது, prose composition in imitation of classical writings. 2. சீலை, cloth. 3. (பாரதி) நல்லாடை, drapery of superior quality.

கத்தியோதம், மின்மினிப்பூச்சு, a fire-fly, glow-worm.

கத்திரி, ஒரு பாம்பு, a snake. 2. (கல்லா.) ஒரு வகைப் பறை, a kind of drum.

கத்திரியர், as சத்திரியர்.

கத்து, கத்தென்னேவல், *imp.* cry with a harsh, continued noise, scream, squall, croak, caw, chuck, screech, chatter, yelp, growl, bray, bleat, jabber, &c. 2. சந்து, a notch, joint.

கத்துதல், see கத்தல்.

கத்துரு, கத்தன், an agent, a maker, a doer. 2. ஆதிசேஷன்றாய், the mother of ஆதிசேஷன்.

கத்துருபம், குதிரைப்பல் பாஷாணம், a kind af arsenic.

கத்தூரி, கஸ்தூரி மிருகம், the musk-deer. 2. நானம், musk.

கத்தை, கழுதை, the ass.

கந்தகசிந்தூரம், கந்தகசுண்ணம், கந்தகநீறு, } கந்தகபஸ்பம், calcined brimstone.

கந்தகதிராவகம், கந்தகச் செய்நீர், sulphuric acid.

கந்தகபாஷாணம், அவுபலபாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

கந்தகம், ஒரு மருந்து, brimstone, sulphur. 2. அவுபலபாஷாணம், one of the thirty-two kinds of arsenic in its natural state.

கந்தகரசாயனம், ஒரு மருந்து, a kind of medicine made of sulphur.

கந்தகவுப்பு, கடுங்கூர்மை, salt produced from sulphur.

கந்தசட்கம், தமரத்தை, a tree bearing an acid fruit—Averrhoa carambola.

கந்ததன்மாத்திரை, மணமறிபுலன், the sense of smelling.

கந்தநாகுலி, the செவ்வியம், Piper nigrum.

கந்தநாகுலியம், அரத்தை, the medicinal root of the Alpinia galanga.

கந்தபூதியம், நாய்வேளை, a plant—Polanisia icosandra.

கந்தப்புராணம், see காந்தம்.

கந்தப்பொடி, வாசனைப்பொடி, sweet-scented powders or perfumes.

கந்தமலை, சுப்பிரமணியஸ்தலமுள்ள ஒரு குன்று, the name of a hill having a fane at the base dedicated to Subrahmanya.

கந்தமாதனம், குலகிரியெட்டினொன்று, the name of one of the eight principal mountains that forms the division between Havritta and Badraswa or to the east of Meru. 2. இராமேச்சுரத்திற் கயல்மலை, a mountain near Rameswaram.

கந்தம், இந்திரியம், any of the five senses. 2. கருணை, a kind of yam—the Dracontium pobyphyllum. 3. கழுத்தடி, the bottom of the neck below the nape. 4. கிழங்குப்பொது, esculent roots in general. 5. பங்கு, part, portion, section of a book. 6. பஞ்சகந்தம், five kinds of medicinal roots. 7. வாசனை, scent, odour, fragrance, perfumery. 8. அணுத்திரள், a collection of atoms or particles. 9. சந்தனம், sandalwood, Santalum album 10. நாற்றமெனும் புலன், the sense of smell.

கந்தரக்காட்டம், வெள்ளைப்பாஷாணம், a kind of arsenic.

கந்தரசு, சாம்பிராணி, benzoin.

கந்தரம், கழுத்து, the neck. 2. மலைக் குகை, a natural cave. 3. மேகம், a cloud. 4. புனமுருங்கை, a tree—Indigofera. 5. கடற்பாசி, the sponge. 6. கற்கடகபாஷாணம், a kind of arsenic. 7. தீமுறுகற் பாஷாணம், another kind of arsenic.

குடத்தியர், இடைச்சியர், women of the tribe of cowherds.

குடநாதன், சேரன், the ruler of the west—Sera.

குடந்தம், குடம், a pot. 2. திரட்சி, rotundity, anything round. 3. நால்விரன் முடக்கிப் பெருவிரனிறுத்தி நெஞ்சிடை வைத்தல், clenching the fingers, and, with the fists joined, placing the points of the thumb, on the breast and bending the body forward.

குடந்தை, ஓரூர், the town of Kumbakonam.

குடமண், வெண்மணல், white sand.

குடமாடல், மாயோனுடல், the dance of Vishnu.

குடமுழா, முழவு, an earthenware drum.

குடம், ஊர்ப்பொது, a town or village. 2. குடும்பம், a large kind of earthen pot. 3. கும்பவிராசி, a sign of the zodiac—Aquarius. 4. கைகொட்டிக்குவித்தல், a kind of dance accompanied by clapping the hands hollowed. 5. சருக்கரை, sugar, jaggery, molasses. 6. பசு, a cow. 7. பூசம், the eight lunar mansion. 8. மருதநிலத்தூர், a town in agricultural districts. 9. விஷ்ணுகூத்து, a dance of Vishnu. 10. கொடுந்தமிழ் நாட்டினொன்று, one of the twelve districts where the vulgar unpolished Tamil is spoken. 11. திரட்சி, a globular or round part of a pillar, a cylindrical body.

குடம்பை, பறவைக்கூடு, a bird's nest. 2. முட்டை, an egg.

குடர், குடல், the bowels, the entrails or intestines

குடலை, கிணற்றுக்குடலை, a ring of wicker-work for a well. 2. பூக்குடலை, a kind of basket for flowers.

குடல், குடல், bowels, intestines viscera.

குடவம், பித்தளை, brass.

குடவன், கோட்டம், a plant—Costus (*M. Dic.*).

குடவர், இடையர், cowherds.

குடவு, குமரனுடல், a dance of Skanda.

குடவுதல், வளைதல், bending, being crooked.

குடவுழுந்தர், ஒரு புலவன், the name of a celebrated poet who in his youth, was as long in getting a lesson as it required to fill a pot with lentils.

குடாது, மேற்கிலுள்ளது, what is in the west, what is western or occidental.

குடாரம், கோடாலி, an axe, a hatchet. 2. தயிர்கடைதாழி, a churn of churning pot. 3. தயிர்கடைதறி, the post round which the string of the churning stick plays.

குடாரி, யானைத்தோட்டி, an elephant goad. 2. கோடாலி, an axe.

குடாரு, தயிர்கடைதாழி, a churn, a vessel used for churning.

குடாவடி, கரடி, the crook-footed—a bear.

குடான், செம்முள்ளி, a plant—Barleria prionites—Thorny barleria.

குடி, ஊர்ப்பொது, a town, a village. 2. குடியென்னேவல், *imp.* drink, tripple, suck as infants or other young creatures, &c. 3. குலம், a family, a household. 4. கோத்திரம், a tribe, race, lineage. 5. மருதநிலத்தூர், an agricultural village. 6. வீடு, a house, habitation. 7. உடம்பு, the body, as the tenement of the soul.

குடிக்காடு, ஊர்ப்பொது, towns in general. 2. மருதநிலத்தூர், agricultural towns or villages.

குடிசை, சிற்றில், a hut, cottage, shed.

குடிஞை, ஆறு, river. 2. கோட்டான், a species of owl. 3. பதி, a town. 4. பறவைப்பொது, birds in general.

குடித்தல், பருகுதல், drinking, tippling sucking, &c.

குடிமை, குடியியல்பு, customs or manners of the higher classes-lineage, family descent, servitude, &c.

குடியோட்டி, ஒரு பூண்டு, a kind of thistle—Argemone mericana.

குடிரம், காரை, the name of a thorny shrub—Webera tetranda.

குடிலச்சி, ஒரு வண்டு, a kind of black beetle (*M. Dic.*).

குடிலம், ஆகாயம், ether, as one of the five elements in nature. 2. குராமரம், a species of shrub usually found in barren lands—Webera corymbosa. 3. சடை, tangled or matted hair. 4. வஞ்சகம், dishonesty, fraud. 5. வளைவு, a bend, crook, flexure, curve. 6. குடிலமாயை, undeveloped maya, which, when developed is called குடிலை. 7. பிரணவம், the tri-literal mystic ஓம், employed as the first word of the Vedas and other sacred writings, and the first and last word in incantations.

குடிலை, வியக்தமாயை, primitive Maya in its normal, incipient state of development and as operated upon by the Sakti power of the supreme deity.

குடில், ஆகாயம், ether. 2. சிற்றில், a hut, a shed.

குடு, கள், toddy, fermented liquor.

குடுக்கை, கமண்டலம், the earthen or wooden water-pot of an ascetic or a hermit. 2. குடுக்கை, a cocoa nut or other shell, used as avessel.

குடுமி, ஆண்மயிர், men's hair. 2, உச்சி, the crown of the head. 3. வெற்றி, victory, success. 4. சிகை, the single lock of a man's hair, tied in a knot and never shaven off. 5. மலையுச்சி, the summit of a mountain.

குடும்பத்தானம், களத்திரதானம், the sign next to the rising sign at the moment of one's birth, protending good or evil, wealth or otherwise, to the family, according to the character of the signs.

குடும்பம், உறவு, relations, kindred, connexions. 2. ஒரு குடியிலுள்ளார், a family including the man, his wife his sons, and his son's wives. 3. குடி, race, family, house.

குடும்பி, குடும்பபதி, a householder, the father of a large family.

குடும்பினி, மனைவி, the wife of a house-holder.

குடும்பு, கொத்து, a bunch or cluster of fruits, flowers, &c.

குடுவை, சிறுபானை, a small earthen pot.

குடை, குடை, umbrella, parasol. 2. குடையென்னேவல், *imp.* scoop, excavate, hollow out, bore a tube as a turner, scoop out a tank, well, &c., bathe in water. 3. குமரனுடல், the dance of Skanda. 4. பாதக்குறட்டின்குமிழ், the knob of a sandal. 5. வேலமரம், a tree with very large thorns—the Mimosa.

குடைக்கிழங்கு, சிற்றரத்தை, a plant —Alpinia galanga minor.

குடைசல், குடைதல், scooping, working out a hollow, turning. 2. குளித்தல், bathing.

குபோரி, கீறல், a slit, scarification. 2. கீறி மருந்துபுகட்டல். (*in medicine*) scarifying the skin of the skull and inserting a mercurial or other medical pill on which is placed a pot of live coals, in case of syncope, coma epilepsy, &c., in order to revive suspended animation. 3. வங்கமணல், lead ore. 4. வெங்காரம், borax. 5. வெள்ளைப் பாஷாணம், Mercurius sublimatus.

குட்டநாசனம், வெண்கடுகு. white mustard.

குட்டம், ஆழம், depth, hollow, hole. 2. குளம், a tank or pond. 3.

தொழுநோய், leprosy. 4. கொடுந் தமிழ்நாட்டினொன்று. one of the twelve districts in which vulgar unpolished Tamil is spoken. 5. கோட்டம், a plant—Costus.

குட்டரி, மலை, a hill or mountain.

குட்டல், தலையிற்குட்டல், cuffing on the head. 2. அபகரித்தல், cheating, over-coming by fraud.

குட்டாரி, கந்தகம், brimstone, sulphur.

குட்டன், ஆட்டுக்குட்டி, a kind of lamb. 2. குழந்தை, an infant, a babe. 3. மகன், a son.

குட்டி, ஆடு, கீரி, குதிரை, நரி, நாய், பன்றி, புலி, பூனை, மரக்கோட்டில் வாழ்விலங்கு, மான் முதலியவற்றின் பிள்ளை, the young of animals such as the goat, sheep, ichneumon, horse, jackal, dog, swine, tiger, cat, animals that live on trees, as the squirrel, monkey, &c., deer, &c.

குட்டிமம், கற்படுத்தவிடம், floor plastered or paved, a pavement.

குட்டியம், சுவர், a wall.

குட்டியிடுக்கி, சிற்றரத்தை, a plant—Alpinia galanga-minor (*M. Dic.*). 2. கோட்டம், a plant—Costus. 3. ஒரு புல், a kind of grass or weed in rice fields.

குட்டினம், கருஞ்சீரகம், a plant—Nigella sativa.

குட்டினி, வசவி, a bawd, a procuress.

குட்டு, தலையிற்குட்டுங்குட்டு, a buffet, a blow with the fist on the head, a cuff.

குட்டுவன், சேரன், a king of the ancient Sera dynasty.

குட்டை, குள்ளம், shortness, dwarfishness. 2. சிறுகுளம், a pool or pond.

குணகண்டி, சிவதை, a winding plant—Convolulus.

குணகம், பெருக்குந்தொகை, (*in arith.*) the multiplier.

குணகாங்கியம், ஓராரியநூல். a work on Sanskrit grammar.

குணகாரம், பெருக்குக்கணக்கு, multiplication.

குணகு, பிசாசம், a devil, a goblin.

குணக்கு, கிழக்கு, the east. 2. கோணல், crookedness, curvature, flexure.

குணக்குன்று, குணத்திற்சிறந்தவன், a virtuous man; *lit.* a mountain of excellent qualities.

குணத்திரயம், முக்குணம், the three properties or principles in nature purity, passion and darkness.

குணநிதி, கடவுள், source of all virtues—the Supreme. 2. குணவான், a benevolent, kind person.

குணபத்திரன், அருகன், Argha. 2. கடவுள், the Deity. 3. the name of the preceptor and guruof மண்டலவன், the author of Nighandu.

குணபம், பிணம், a dead body, a corpse, a carcass. 2. பிசாசம், a goblin or ogre, supposed to haunt cemeteries and animate dead bodies.

குணபலம், அதிவிடயம், a medicinal root used for dysentery.

குணபவுணர், பிசிதவுணர், Rakshasas as living on flesh.

குணபாசி, பிசாசம், a spirit, an imp, a goblin.

குணபாடல், see குணவாகடம்.

குணப்பண்பு, குணத்தாலாயபண்பு, (*in grammar*) sensible qualities of objects, as bitterness, whiteness—as distinguished from குறிப்புப் பண்பு, ideal quality, and தொழிற் பண்பு, qualities of actions.

குணப்பெயர், பண்புப்பெயர், (*in grammar*) names of qualities, abstract nouns, denotative nouns signifying attributes only.

குணம், குடம், a water-pot, a pitcher. 2. சீர்மை, gracefulness, beauty, decorum, decency, good behaviour, smoothness. 3. நாணி, bowstring. 4. நிறம், colour. 5. நூல், thread, cord, string. 6. பண்பு, quality, attribute, property. 7. முக்குணம், the three principles in nature, *viz.*, nobleness of mind, pride, mental darkness.

குணலி, சீந்தில், a plant—Menispermum.

குணலை, வீராவேசத்தாற்கொக்கரித்தல், a warrior's shout of triumph, joy, valour or defiance. 2. ஒரு கூத்து, a dance with shouting.

குணவதி, குணவந்தன், } குணவான், a very good-natured person.

குணவவநுதி, (*in rhetoric*) a kind of அவநுதி, figure, in which a property or quality universally predicated of an object is apparently denied, by affirming the opposite, either ironically or ambiguously.

குணவாகடம், ஒரு வைத்தியநூல், a treatise on the signs and symptoms of diseases.

குணவாகுபெயர், பண்புப்பெயரைப் பண்பிற்குரைத்தல், (*in grammar*) names of qualities or attributes, used by metonymy for objects possessing those qualities.

குணவிலக்கு, ஓரலங்காரம், (*in rhetoric*) negation of a property or quality in a person or thing from the presence of its opposite.

குணவுவமம், பண்புவமை, a species of simile; similutude of properties and qualities.

குணனம், பெருக்கல், (*in arithmetic*) multiplication. 2. விவரம், description, enumeration.

குணனீயம், பெருக்கப்படுந்தொகை, (*in arithmetic*) multiplicand.

குணாதீதம், குணங்கடந்துநிற்கை, freedom from all properties.

குணாதீதன், கடவுள், God, he who is above all attributes; he whose attributes and perfections transcend our comprehension.

குணாலயன், கடவுள், the Deity, as the seat and source of all perfections.

குணாலை, see குணலை 2.

குணி, ஊமை, a dumb person. 2. குணியென்னேவல், *imp.* multiply, estimate, reckon. 3. பண்பி, a subjective noun, subject as opposed to attribute *in logic*. 4. வில், a bow. 5. முடவன், a lame person, a cripple. 6. குணவான், one endowed with good qualities.

குணிதம், பெருக்கிக் கண்டபலம், (*in arith.*) product. 2. மடங்கு, fold, times, turns.

குணித்தல், எண்பெருக்கல், multiplying. 2. மதித்தல், estimating, reckoning.

குணில், கவண், sling. 2. குறுந்தடி, a short stick or cudgel. 3. பறையடிக்குங்குறுந்தடி, a drumstick.

குணு, புழு, a worm, a maggot.

குணுக்கு, ஒரு காதணி, an ear ornament for females. 2. வலையினீயம், lead for a fish net. 3. (*M. Dic.*) வெள்ளி, silver.

குணுங்கர், சண்டாளர், the base, the vile, low castes. 2. தோற்கருவியாளர், workers in skin, leather-dressers.

குணுங்கு, பிசாசம், a devil, an imp.

குண்டகன், தலைவனைப் பிழைத்தீன்ற சோரபுத்திரன், a son born in adultery, the son of a married woman born to her by one not her husband.

குண்டக்கிரியம், ஓரிராகம், one of the thirty-two new tunes.

குண்டமண்டலம், the mystic diagram about the sacred hole in the கிரியாவுத்திரி, instruction, &c.

குண்டம், குடுவை, a small pot. 2. குண்டம், a hole in the ground for receiving or preserving sacrificial fire, &c. 3. குளம், a pool. 4. பானை, a large pot. 5. குழி, a deep hole, a pit.

குண்டலகேசி, ஓரிலக்கியநூல், an epic poem being one of the five ancient classic epics in Tamil.

குண்டலம், ஆகாயம், atmosphere, ether. 2. குழை, a kind of ear-ring. 3. வட்டம், a circle, a ring. 4. வானம், sky, the heavens.

குண்டலன், பலபத்திரன், he who wears a ring—Balabhadra. 2. குண்டலம் பூண்டோன், one who wears the குண்டலம், ear-rings.

குண்டலி, இசங்கு, a thorny shrub—the Azima tetracantha. 2. காளி, Kali, a form of Durga. 3. பாம்பு, a snake. 4. சீந்தில், a thorny kind of shrub—Menispermum. 5. மூலாதாரம், the first region of the human body, the posteriors including the hip. 6. பிரணவம், the mystic ஓம்.

குண்டனி, வசவி, a short, crooked and wicked woman.

குண்டி, ஈரல், the liver, lungs, spleen and other viscera. 2. மீன் சினை, the roe or sprawn of a fish.

குண்டிகை, கமண்டலம், the student's or ascetic's water-pot.

குண்டியம், பழிச்சொல், reproach, aspersion.

குண்டில், சிறுச்செய், a small field or lot. 2. முதுகு, the back.

குண்டினம், குண்டினபுரம், the city of Damayanti the heroine of Naishtham, the modern Condavir.

குண்டு, ஆண்குதிரை, a stallion. 2. ஆழம், depth, deep water. 3. உருட்டுருண்டை, a cannon-ball, a bullet, &c. 4. தாழ்வு, a sinking in, a hollow, lowness. 5. திரண்ட கல், a ball of stone.

குண்டை, இடபவிராசி, Taurus of the zodiac. 2. எருது, a bull, an ox. 3. சட்டி, an earthen pot, a chatty. 4. இண்டங்கொடி, a thorny creeper—Mimosa rubicaulis.

குண்டேறு, ஒரு மீன், a fish.

குண்டோதரன், ஒரு பூதன், a short Bhuta with a large round belly in the army of Siva.

குண்ணியம், பெருக்கப்படுந்தொகை, multiplicand. 2. பொருட்டன்மை, nature property, disposition.

குதம், the anus. 2. தருப்பை, sacrificial grass—the Saccharum.

குதம்பைச்சித்தர், ஒரு சித்தன், one of a class of magicians who, by the performance of certain mystical and magical rites, have acquired super-human powers, being able to perform miracles or one or more of the eight சித்தி.

குதரம், மலை, a hill or mountain; *lit.* the sustainer of the earth.

குதா, பிரிவு, separation.

குதர்க்கம், முறைகெட்ட தர்க்கம், unfair argumentation, disputation, cavilling, sophistry.

குதர்செல்லல், நெறிவிலகல், deviating from, missing the way (இனியவை நாற்பது).

குதலை, அறிவில்லான், a simpleton, a weak-minded person, an ignorant fellow. 2. மழலைச்சொல், the lisping or prattle of a child. 3. மாதர்சொல், soft talk, pleasant prattle, as of females.

குதானன், தாளி, a creeper—Convolvulus (*M. Dic.*).

குதி, காற்குதி, heel, as of the foot, a shoe, &c. 2. குதியென்னேவல், *imp.* jump, leap, spring, bound, skip, pass over.

குதித்தல், கடத்தல், leaping over, passing over. 2. பாய்தல், jumping, bounding, skipping.

குதிரை, a horse.

குதிரையாளி, வயிரவன், the God Bhairava.

குதிரைவாய்க்கருவி, கடிவாளம், a a bridle.

குதிரைவாய்வட்டம், குடிசைக்கயிறு, a horse's headstall, a halter.

குதிர், நெல்முதலிய வைக்குங் குதிர், a large vessel made of clay to put rice, &c.

குதுகலம், } மிகக்களிகூர்தல், transport of joy.
குதூகலம், }

குதும்பகர், தும்பை, a plant—Phlomis Indica (*M. Dic.*).

குதை, பசி, hunger. 2. விற்குதை, the notch at the end of a bow to secure the loop of the bowstring.

குத்தல், அடித்தல், striking. 2. குத்துதல், puncturing, pricking, stabbing, pounding in a mortar, &c. 3. நெரித்தல், cracking, crushing, smashing. 4. பறித்தல், plucking.

குத்தி, அடக்கம், restraint, check, repression. 2. மண், earth, ground, soil.

குத்திரம், சீக்கிரம், celerity, speed, intensity. 2. மலை, a hill, a mountain. 3. வஞ்சகம், deceit, guile, craftiness. 4. பொய், falsehood, lying. 5. குரூரம், cruelty, inhumanity. 6. (*M. Dic.*) சணல், hemp.

குத்து, குத்தென்னேவல், *imp.* strike, prick, pound, &c. 2. நோய், an acute throbbing, twinging pain. 3. (*M. Dic.*) சணல், hemp.

குந்தம், கண்ணோய், a disease of the eye, gutta serena, a tubercle on the cornea of the eye. 2. குதிரை, a horse. 3. குருந்தமரம், a tree. 4. கைவேல், a lance. 5. சிறுசவளம், a small dart or lance. 6. நோய், disease. 7. பெருஞ் சவளம், a large kind of lance. 8. நவநிதியிலொன்று, one of the nine treasures of Kuvera. 9. குந்துருகம், gum olibanum. 10. கற்பாஷாணம், a kind of native arsenic. 11. கோளகபாஷாணம், a kind of arsenic. 12. தாலம்பபாஷாணம், a kind of natural arsenic.

குந்தலிங்கம், சாம்பிராணி, frankincense.

குந்தளம், ஒரு தேசம், the name of a country—Kuntala. 2. பெண் மயிர், women's hair. 3. மயிர்க் குழற்சி, a kind of hair-knot or curls. 4. மயிர்ப்பொது, hair in general.

குந்தாலி, கிணறுவெட்டுங்கருவி, a pick-axe with one prong.

குந்தி, கள், toddy, fermented liquor. 2. பாண்டவர் தாய், the mother of the three elder Pandava princes.

குந்திபுதல்வன், தருமராஜன், the son of Kunti—Yudhishtira. 2. வீமன், the son of Kunti—Bhima. 3. அருச்சுனன், Arjuna.

குந்திமுதற்புதல்வன், கன்னன், the eldest son of Kunti, born during her pretended maidenhood—Karna.

குந்துரு, குந்துருகம், குந்துருக்கம், } the olibanum tree and gum, frankincense.

குபசுபா, எட்டி, a tree—Strychnos (*M. Dic.*).

குபலம், ஈனபலம், weakness. 2. கேடு, loss, detriment.

குபேரன், சந்திரன், the deformed in body—the moon. 2. நிதிக்கோன், the wealth king—Kuvera.

குபையம், சிறுபுள்ளடி, a plant—Hedysarum (*M. Dic.*).

குப்பம், ஊர், a village of small houses and huts.

குப்பாயசம், சரீரம், the body, as covered with a குப்பாயம், coat.

குப்பாயம், சட்டை, a cloak, a coat, bodice.

குப்பி, ஒரு பாண்டம், a phial. a flask, a bottle. 2. மாதர் தலையணியிலொன்று, a small golden ornament worn on the hair by woman. 3. வீணையின் முறுக்காணி, the screw of a lute. 4. பூண், a ferrule or knob at the end of a scabbard or bullock's horns elephant's tusk, spout of a kettle &c.

குப்பிச்சாரம், காசிச்சாரம், a mineral salt.

குப்பிலவணம், வளையலுப்பு, a medicinal salt—Fel vitri.

குப்புறல், கடத்தல், passing over, leaping over. 2. பாய்தல், jumping down.

குப்பை, குழிவு, a collection, a heap. 2. கூட்டம், a group, a clump. 3. மேடு, a hill.

குப்பைமேனி, ஒரு பூடு, a kind of plant, a vermifuge, an antidote to poisonous bites, also used for food—Acalypha Indica.

குமணன், முதலெழுவள்ளலிலொருவன், one of the seven liberal men of the first class.

குமதி, துன்மதி, a fool, a stupid fellow.

குமரதானம், எழுத்துத்தானமைந்தி னொன்று, (*in versification*) the second of the five arbitrary divisions of letters, for the beginning of a poem.

குமரம், கொம்பிலாவிலங்கு, beasts without horns. 2. ஓரிலக்கண நூல், an ancient and lost work of Tamil grammar, by a Jaina.

குமரன், ஆண்மகன், a man in his prime, from sixteen years to thirty-two. 2. இளையோன், a young man, one sixteen years old. 3. மகன், a youthful son. 4. முருகன், Skanda. 5. வயிரவன், Bhairava.

குமரி, அழிவின்மை, imperishableness, unchanging youth. 2. கற்றாழை, the wild aloe. 3. கன்னி, a virgin, a maid. 4. காளி, Kali. 5. சப்தமாதர்களிலொருத்தி, one of the seven Saktis or mothers—the consort of Kumara. 6. துர்க்கை, Durga. 7. கன்னியா குமரி, the Kumari river near Cape Comorin, where it is said Parvati did penance; one of the seven sacred rivers.

குமரிகண்டம், நவகண்டத்தொன்று, a portion of Southern India named after the queen குமரி, by whom it was governed.

குமரிச்சேர்ப்பன், பாண்டியன், the owner of the lands along the banks of the Kumari river, any king of the Pandya dynasty.

குமரிஞாழல், ஒரு பூடு, an evergreen ஞாழல்.

குமல், அரிவாள், a sickle.

குமாரன், மகன், a son.

குமாரி, குமரி, a girl arrived at puberty. 2. புதல்வி, a youthful daughter. 3. துர்க்கை, Durga. 4. சுவர்ணபேதி, a solvent or menstruum which dissolves gold.

குமார்க்கம், அமார்க்கம், irreligion, heresy.

குமிகை, வெள்ளெள், white sesamum.

குமிதிகம், தேக்கமரம், the teak tree.

குமிலம், பேரொலி, a great noise, roaring of the sea, &c., acclamation, shout.

குமிழி, குமிழி, a bubble, a small bladder of water.

குமிழ், குமிழ மரம், a kind of thorny tree—Gmelina tomentosa, from which torches are made for travellers, *in poetry*, the nose is often compared to the red குமிழ், flowers. 2. திரண்டவடிவு, anything round or convex—as the head of a nail, the chapter of a column, &c. 3. (*M. Dic.*). நாணல், a reed.

குமிழ்ப்பு, புடைப்பு, growing into a conical shape. 2. புளகம், momentary swelling at the root of the hairs of the body accompanied with horripilation.

குமுதகம், குமுதம், } ஒரு சித்திரக்கம்பி, (*in architecture*) a kind of moulding.

குமுதசகாயன், குமுதநண்பன், குமுதபதி, } சந்திரன், the moon—the friend and lord of the lily, expanding during the night and closing during the day time.

குமுதம், அடுப்பு, a cooking fire-place. 2. தருப்பை, sacrificial grass. 3. தென்மேற்றிசை யானை, the elephant of the south-west, as supporting the earth. 4. படையிலோர் தொகை, a division of an army. 5. பேரொலி, a great noise, roaring, acclamation. 6. வெள்ளாம்பல், the white water-lily. 7. செவ்வாம்பல், the red water-lily. 8. வயிக்கிராந்தபாஷாணம், a kind of native arsenic. 9. வெள்ளைப்பாஷாணம், white oxide of arsenic.

குமுதன், குரங்குபடைத் தலைவரிலொருவன், one of the chiefs of the monkey force of Rama.

குமுந்தம், கற்பாஷாணம், a kind of native arsenic.

குமுலி, துளசி, a sacred plant among the Hindus—Ocymum sanctum (*M. Dic.*).

குமுறல், ஒலித்தல், sounding, roaring. 2. பேசலாலெழுமொலி, the noise of a multitude. 3. பேரொலி, thundering, great noise.

குமைதல், அழிதல், being destroyed.

குமைத்தல், மிதித்தல், treading down, treading out into a mash. 2. அழித்தல், destroying.

கும்பகம், சுவாசபந்தனம், stopping the breath by shutting the mouth and closing both nostrils with the fingers of the right hand. As a religious exercise among ascetics, it is the power of suspending respiration, thereby securing the attention, as the Hindu metaphysicians think, to the contemplation of divine and superhuman things. 2. தொட்டிப் பாஷாணம், red arsenic, orpiment. 3. சாலாங்கபாஷாணம், a native arsenic (*M. Dic.*).

கும்பகர்ணன், இராவணன்தம்பி, the gigantic brother of Ravana, whose ears where like a jar. He is said to have performed austerities to obtain immortality, but under the evil influence of the supernals, who dreaded his power, he was made to falter in his words and to say நித்திராத்துவம் (sleepiness), and he was thenceforward given up to sleep.

கும்பகாம்போதி, ஓரிராகம், a tune or class of tunes, a species of காம்போதி.

கும்பகாரன், குயவன், a potter.

கும்பசம்பவன், கும்பசன், } அகத்தியன், the pot-born—Agastya. 2. துரோணாசாரியன், a name of Drona, teacher in archery of the Pandavas and Kurus.

கும்பஞ்சான், சிவதை, the jalap plant —Convolvulus turpethum.

கும்பமுனி, see கும்பயோனி 1.

கும்பம், ஓரிராசி, a zodiacal sign—Aquarius. 2. குடம், an earthen pot, a water-pot. 3. நெற்றி, the forehead. 4. யானை மத்தகம், the frontal globe of an elephant's head, which swells during the rutting season. 5. சிவதை, the jalap plant—Convolvulus turpethum. 6. பலண்டுறுகம், a kind of arsenic. 7. தாலம்பம், a kind of native arsenic.

கும்பயோனி, அகத்தியன், the pot-born—Agastya. 2. வசிட்டன், a name of Vasishta. 3. துரோணாசாரியன், a name of Drona.

கும்பவாதம், ஒரு வாதநோய், one of the eight disorders of flatulence (*M. Dic.*).

கும்பளம், பூசணி, a pumpkin, a kind of gourd—Cucurbita Indica.

கும்பன், ஓரிராக்கதன், the name of a Rakshasa, the nephew of Ravana.

கும்பி, கும்பியென்னேவல், *imp.* suppress the breath. 2. சேறு, mud, mire, slough. 3. நரகம், hell. 4. யானை, an elephant. 5. வயிறு, the belly, paunch, pot-belly.

கும்பிடல், தாழுதல், making obeisance with the hands joined and raised.

கும்பித்தல், வாயுவடக்கல், suppressing the breath, suspending the respiration.

கும்பிபாகம், ஒரு நரகம், one of the seven chief hells.

கும்பீடு, வணக்கம், worship, obeisance by raising the hands.

கும்பீரம், கும்பீலம், } முதலை, crocodile.

கும்மாளம், குதித்துவிளையாடல், jumping, romping, moving about as children, calves, &c., often a kind of rustic dance.

கும்மி, (*probably a corruption of* கொம்மை), மகளிர்கூத்து, dancing especially among young women —accompanied with the clapping of hands to a tune sung by all. 2. ஒருவகைச் செய்யுள், a species of poem in which the verses are of the same metre as that sung in the கும்மி dancing.

கும்மெனல், ஒரு குறிப்புச்சொல், a word expressing surprise or a sense of greatness.

குயக்காலம், நிலக்கடம்பு, a shrub—Justicia.

குயத்தினலகை, நிலவாகை, a plant—Cassia.

குயபீசகம், எட்டி, a tree—Strychnos.

குயம், இளமை, juvenility, youthfulness. 2. கொடுவாள், a sickle, a reaping hook, a curved knife. 3. முலை, female breast. 4. தருப்பை, sacrificial grass.

குயவரி, புலி, a tiger.

குயவர், குயவர், potters.

குயவு, தேர், a car, a coach.

குயா, கோங்கு, a kind of cotton tree, the silk-cotton—Bombax gossypinum (*M. Dic.*).

குயிலல், இழைத்தல், enchasing or setting, as precious stones. 2. கொல்லல், uttering, telling. 3. கூப்பிடல், calling, inviting. 4. கட்டல், building, constructing. 5. செய்தல், forming, shaping, effecting. 6. துளைத்தல், boring, perforating.

குயிலன், வாசவன், he who assumed the disguise of an Indian cuckoo during the flight from his paradise to Srikali in Southern India—Indra.

குயிலாயம், சுவரறை, a partition or cavity in a wall. 2. பறவைக்கூடு, a bird's nest. 3. மட்கலம் வனையுங் கூடம், a potter's workshop.

குயிலுவம், நரம்புக்கருவியாற்பாடல், playing on stringed instruments, drums, tabrets, clarionets, &c.

குயிலுவர், தோல்வினைஞர், workers in skins, leather-dressers. 2. நரம்பினுய, கருவிக்குரியோர், lute-players, fiddlers and other performers on stringed instruments, also players on drums, tabrets, clarionets, horns, &c.

குயில், ஒரு புள், a bird celebrated in Indian poetry for the sweetness of its notes—the Indian cuckoo. 2. குயிலென்னேவல், *imp.* enchase or set precious stones, utter, tell. 3. சொல், words, declamation. 4. துளையுடைப்பொருள், a tube, a pipe, a hollow cylinder.

குயிறல், அழைத்தல், calling, inviting. 2. செய்தல், making, executing, working in general. 3. சொல்லுதல், saying, uttering. 4. துளைத்தல், perforating, boring. 5. நெருங்கல், being thick, close, crowded.

குயிற்றல், செய்தல், making, constructing, forming. 2. பதித்தல், enchasing, setting, stones. 3. சொல்லல், uttering, telling, expressing, declaring.

குயின், மேகம், a cloud (நன்.).

குய், தாளித்த கறி, a seasoned dish. 2. நரம்புகை, incense, odoriferous smoke.

குய்யகர், ஒரு தேவகணம், a class of demi-gods in the service of Kuvera, to whose custody his treasures were committed (காசி).

குய்யகலோகம், ஒரு தேவலோகம், the region next above the earth being the haunt of the Guhyaka demi-gods (காந்.).

குய்யபீசகம், see குயபீசகம்.

குய்யம், பெண்குறி, pudendum muliebre. 2. மறைவு, that which is secret, mystical, hidden or private. 3. வஞ்சம், deceit, hypocrisy, dissimulation. 4. ஆண்குறி, genitale virile. 5. அபானவாயில், the anus.

குரகதம், குதிரை, a horse. 2. குதிரைப்பற் பாஷாணம், (*M. Dic.*) red orpiment or realgar arsenic.

குரகம், நாகணவாய்ப்புள், a talking bird, the maina, the Jackdaw—Gracula. 2. நீர்வாழ்பறவை, water-birds.

குரகர், சாகதீவார், a race of people said to inhabit Saka Dwipa (காந்.).

குரங்கம், மான், a deer, an antelope. 2. விலங்கின்பொது, animals in general. 3. (*M. Dic.*) எட்டி, a tree—Strychnos.

குரங்கல், தாழ்தல், bowing, making obeisance, bending inclining, stooping, humiliation.

குரங்கி, சந்திரன், the antelope-shaped—the moon, the dark figure in the moon being said to resemble an antelope.

குரங்கு, குரங்கென்னேவல் (*imp.*) relent, pity, grieve, feel sorry, bow, adore. *2.* வானரம், a monkey. *3.* விலங்கின்பொது, an animal in general. *4.* முசுமுசுக்கை, a climbing plant—Bristly bryonia—Bryonia scabra.

குரங்குதல், இரங்குதல், pitying, relenting, commiserating. *2.* வணங்குதல், bowing, making obeisance.

குரச்சை, குதிரைக் குளம்பு, a horse's hoof.

குரஞ்சி, ஓரிராகம், a kind of tune.

குரண்டகம், பச்சைப்பூமருதோன்றி மரம், species of Lawsonia bearing green flowers.

குரண்டம், கொக்கு, a stork.

குரத்தம், ஆரவாரம், clamour, acclamation, noise.

குரத்தி, தலைவி, a mistress, a matron, the lady of the house. *2.* குருவின் மனைவி, wife of a priest. *3.* ஐயை, a mother or any venerable, elderly woman.

குரமடம், பெருங்காயம், asafoetida (*M. Dic.*).

குரம், குதிரைக் குளம்பு, a horse's hoof. *2.* தருப்பை, sacrificial grass. *3.* பசு, a cow. *4.* பாகல், a creeping plant—Momordica charantia. *5.* விலங்கின் குளம்பு, a hoof in general.

குரம்பு, செய்கரை, a causeway, an artificial bank or dam. *2.* வரம்பு, ridges, banks in rice-fields.

குரம்பை, உடல், the body. *2.* சிறு குடில், a hut, hovel, shed. *3.* பறவைக்கூடு, a bird's nest. *4.* முட்டை, an egg.

குரல், இறகு, feathers, plumage, wings. *2.* ஒலி, voice, the voice of one person as distinguished from another. *3.* தினை, millet. *4.* பயிர்க்கதிர், ears of corn. *5.* பெண் மயிர், woman's hair. *6.* மிடறு, throat, trachea, wind-pipe. *7.* மிடற்றூர்பிறக்குமிசை, the first of the seven musical tunes produced from the throat. *8.* யாழ் நரம்பினோசை, the same tune on the lute or guitar. *9.* யாழ்நரம்பு, the first or lowest string of the guitar. *10.* பாதிரிமரம், the trumpet-flower tree—Bignonia chilonoides (*M. Dic.*). *11.* மயிர்ச் சுருள், a curl or lock of hair.

குரவகம், மருதோன்றிமரம், a flowering tree. *2.* வாடாக்குறிஞ்சி, a plant whose flower changes not its colour in withering.

குரவம், கோட்டம், a plant from which a medicinal drug is extracted. *2.* பேரீந்து, the date-tree. *3.* குறவு, a shrub usually found in barren lands—Webera corymbosa. *4.* நறுமணம், perfume, a gratifying odor.

குரவரம், குறிஞ்சா, a name of an edible medicinal creeper (*M. Dic.*).

குரவர், தந்தை, தாய், parents. *2.* மந்திரிமார், statesmen. *3.* மூத்தோர், elders. *4.* குருக்கள், priests, religious preceptors.

குரவன், குரு, guru, religious preceptor. *2.* தந்தை, father. *3.* பிரமன், Brahma—as the father or progenitor of all. *4.* மூத்தோன், an elder.

குரவு, குராமரம், a shrub usually found in barren lands—the Webera corymbosa. *2.* நறுமணம், perfume, a gratifying odor.

குரவை, கடல், sea. *2.* கூத்து, a dance. *3.* கைகோத்தாடல், a a rural noisy sport accompanied with dancing hand in hand, especially among females of the ploughman's caste. *4.* பேரொலி, a harsh sound, a loud cry.

குரா, see குரவு *1.*

குராசானி, ஒரு பூடு, a medicinal plant—Heliotropium Ceylanicum.

குராசானியோமம், ஒரு பூடு, black henbane—Hyosciamus niger.

குரால், கபிலைநிறம், a dun, tawny colour. 2. கோட்டான், a kind of owl. 3. பசு, a cow.

குரிசில், ஆண்மகன், a man. 2. இராஜா, a king. 3. பெருமையிற் சிறந்தோன், a person of distinction, &c.

குரீஇ, குருவி, a small bird.

குரு, ஆசான், a spiritual teacher, a priest. 2. இருமாத்திரை, the quantity of a long vowel. 3. ஒரு தேசம், one of the nine divisions or varshas of Jambu Dwipa which fell to the share of the prince Kuru, being the most northern portion beyond the Sringa range of mountains. 4. ஒரு வியாதி, any eruptive disease, such as the small-pox, chicken-pox, measles, &c. 5. நிறம், colour, hue. 6. பாரம், weight, gravity, heaviness. 7. பெருமை, greatness, eminence. 8. வியாழம், the planet Jupiter, regarded as the priest of Swarga. 9. நெடில், (*in grammar*) a long vowel. 10. (*in the agama*) சிவன், the deity Siva as illuminator of souls. 11. திவ்வியம், divinity. 12. பலண்டுருகம், a kind of native arsenic. 13. துருசி, (*in medicine, &c.*) blue vitriol. 14. உலோகங்களை வேவிக்குஞ் சிந்தூர முதலியன. (*in alchemy*) a compound medicine formed of different metals, philosopher's powder. 15. இரசம், (*in chemistry*) mercury. 16. பிரகாசம், brilliancy, lustre, effulgence. 17. அங்கீதிரன் புதல்வரிலொருவன், the name of one of the nine sons of அங்கீதிரன், who was the first monarch of Jambu Dwipa (காந்.).

குருகு, இளமை, tenderness, the state of being young. 2. உலை மூக்கு, hole in the centre of the smith's forge for the nozzle of the bellows. 3. குருக்கத்தி, a tree—the Gærtnera racemosa. 4. கைவளை, an arm-ring, bracelet. 5. கோழி, the gallinaceous fowl. 6. நாரை, the heron or crane. 7. பறவைப்பொது, a bird in general. 8. மூலநாள், the nineteenth lunar asterism. 9. வெண்மை, whiteness. 10. ஒரு தேசம், one of the fifty-six countries of India.

குருகுலவேந்தர், கௌரவர், descendants of the Kuru dynasty.

குருகை, ஆள்வார்திருநகரி, a place sacred to Vishnu.

குருக்கேத்திரம், ஒரு தலம், the country near Delhi, the scene of the great battle between the Kurus and Pandavas, described in the Bharata.

குருக்கண், முலை, the female breast.

குருக்கு, பிரமதண்டு, a thistle.

குருசந்திரயோகம், the conjunction of Jupiter and the moon in the same sign—considered auspicious.

குருசம், வேந்தோன்றி, a shrub (*M. Dic.*).

குருசாரபலம், வியாழபலம், (*in astrology*) good and ill-results, derived from the progress of the planet Jupiter through the signs.

குருச்சி, சீனக்காரம், alum (*M. Dic.*).

குருடன், கண்ணில்லான், a blind person. 2. சுக்கிரன், the squint-eyed—Venus.

குருடு, குருடு, blindness.

குருதி, இரத்தம், blood. 2. சிவப்பு, red. 3. செவ்வாய், the planet Mars. 4. மூளை, (*M. Dic.*) the brain.

குருதுரியம், (*in the agamas*) the highest degree in the சுத்தம், state of souls; that next to absorption.

குருத்தல், பெருங்கோபம், indignation, great rage.

குருத்து, குருத்து, the tender leaves or shoots of the palm, &c. 2. வெண்மை, whiteness.

குருநாடி, ஒரு நாடிவிதி, a treatise on the ten tubular vessels of the system and for the ascertainment of diseases by feeling the pulse.

குருநாதன், குமரன், Skanda, as having explained to his father Siva the mystic word ஓம். 2. சிவன், Siva. 3. குரு, a guru, as the Lord of the disciple.

குருநாள், பூசநாள், the eighth lunar asterism.

குருநோய், வைசூரி, the small-pox.

குருத்து, ஒரு மரம், a class of trees of fragrant foliage.

குருமித்தல், பேசலாலெழுமொலி, clamouring, sounding inarticulately.

குருமுறை, கோடாசுளி, a kind of arsenic. 2. சவர்க்காரம், soap.

குருமை, பெருமை, greatness, dignity.

குரும்பை, குரும்பை, young immature cocoa or palmyra nuts, or fruit-buds. 2. புற்றுஞ்சோறு, the comb of white ants' nests.

குருலிங்கசங்கமம், குருவுஞ் சிவமுந் திருக்கூட்டமும், an aggregate of the spiritual guru—Siva under the phallic emblem—and the devotees of Siva.

குருவாரம், வியாழக்கிழமை, Thursday.

குருவாரு, இத்தி, a species of tree, one of the nine kinds of sacrificial firewood—Ficus virens.

குருவி, பறவை, a small bird. 2. மூலநாள், the nineteenth lunar mansion.

குருவிச்சை, புல்லுருவி, a kind of parasitic plant like the mistletoe, a parasite which thrives on several kinds of trees.

குருவிந்தம், செம்மணி, diamond spaat, emery. 2. குன்றிக்கொடி, a medicinal climber yielding a beautiful bean—Abrus precatorius, Wild licorice. 3. கோரை, a medicinal grass with a fragrant root—Cyperus rotundus. 4. வாற்கோதுமை, a corn of barley. 5. ஜாதிலிங்கம், vermilion.

குருவுக்காதி, பச்சைக்கர்ப்பூரம், crude camphor.

குருளை, இளமை, youthfulness, juvenility. 2. நரி, நாய், பன்றி, புலி, மான், பசு, முயல், யாளி இவற்றின் குட்டி, the young of jackals, dogs, swine, tigers, deer, red monkeys, hares, lions, &c. 3. ஆமை, (*M. Dic.*) tortoise.

குருள், பெண் மயிர், a woman's tresses. 2. முன்கொண்டை, a curl or lock of hair, especially on the forehead.

குரூபம், விகாரரூபம், ugliness, deformity, amorphy.

குரூரம், கொடுமை, cruelty, savageness, harshness, severity.

குரை, அசைச்சொல், a poetic expletive 2. ஒலி, sound, roar, clamour. 3. குதிரை, a horse. 4. குளம்பு, a hoof, as of a cow, horse, &c.

குரைத்தல், எழுத்திலாவோசை, a mere sound, not expressing a distinct letter. 2. ஒலித்தல், sounding, roaring, clamouring, barking, &c.

குரைமுகன், நாய், a dog, *lit.* the barking mouthed.

குரோசம், கூப்பிடுதூரம், the distance of a call, being equal to two thousand Indian poles, each two or according to some, four cubits.

குரோடம், பன்றி, a hog.

குரோட்டம், நரி, a jackal.

குரோட்டன், ஆணரி, a he-jackal.

குரோதம், சினம், anger, fierce anger, wrath—one of the six உட்பகை. 2. விரோதம், malice, rancour.

குரோதன், ஓராண்டு, the fifty-ninth year of the Hindu cycle of sixty years.

குரோதன், வீரபத்திரன், a rancorous person—Virabhadra.

குரோதி, ஓராண்டு, the thirty-eighth year of the Hindu cycle. 2. பகைவன், a foe, an enemy.

குலகாயம், பேய்ப்புடல், a plant—Trichosanthes laciniosa.

குலகாலம், நிலக்கடம்பு, a plant—Justicia.

குலகிரி, அஷ்டகுலபருவதம், the eight mountains in Jambu Dwipa.

குலக்கொடி, குலத்திரி, குலபத்தினி, குலாங்கனை, } மனையாள், the lawful wife. 2. கற்புடையாள், a woman reputed for chastity. 3. குலமகள், a woman of good family and caste and of repute for chastity.

குலசுவேதகன், சவரிலோத்திரம், the pulp of Trichosanthes palmata (*M. Dic.*)

குலடன், சுவிகாரபுத்திரன், an adopted son, a foster child.

குலட்சயம், குடியழிவு, the ruin or decay of a family of tribe.

குலம், அரமனை, royal palace. 2. இரேவதி, the twenty-seventh lunar asterism. 3. கூட்டம், herd, flock, shoal, assemblage, collection. 4. ஜாதி, tribe, family, lineage, race, caste, nation, people. 5. மனை, house, abode. 6. விலங்கின் கூட்டம், kind, species of animals.

குலம்பா, பேய்ச்சுரை, a creeping plant, a bitter variety of gourd.

குலவுதல், பிரகாசித்தல், shining, glittering, being conspicuous. 2. கொண்டாடல், rejoicing, experiencing, delight. 3. பொருந்துதல், being connected.

குலாங்குலி, காவட்டம்புல், a grass—Andropogan.

குலாதனி, கடுரோகினி, a kind of purgative drug—Helleborus niger.

குலாயம், பறவைக்கூடு, a nest.

குலாலன், குயவன், a potter.

குலாவல், கொண்டாடல், rejoicing, experiencing, delight. 2. பாராட்டல், admiring, praising, extolling. 3. வளைவு, bending, being bent or curved. 4. பொழுதுபோக்கல், spending time in a pleasant way, pastime, amusement.

குலிகம், இலுப்பைமரம், the long-levaved Bassia. 2. ஜாதிலிங்கம், vermilion. 3. சிவப்பு, red.

குலிங்கம், ஊர்க்குருவி, a sparrow. 2. ஒரு தேசம், a country, one of the eighteen. 3. காக்கை, a crow.

குலிசம், இலுப்பைமரம், the long-leaved Bassia. 2. வச்சிரச்சோடு, an impenetrable coat of mail. 3. வச்சிராயுதம், the thunderbolt—as the weapon of Indra and Skanda. 4. வன்னிமரம், the Suma tree—Prosopis spicigera. 5. கற்பரிபாஷாணம், a kind of native arsenic.

குலிசல், நாகபாஷாணம், a kind of prepared arsenic.

குலிஞன், குலீனன், } குலமுளோன், a person of high family, honourable descent.

குலிந்தம், தேயமைம்பத்தாறினொன்று, one of the fifty-six countries.

குலிலி, படைமுகவொலிக் குறிப்பு, a shout of triumph, &c., as in a battlefield.

குலுத்தம், கொள், gram.

குலுமமூலம், இஞ்சி, ginger.

குலுமம், படைத்தொகை, a division of an army consisting of nine elephants, nine chariots, twenty-seven horse and forty-five foot.

குலை, அம்பின்குதை, the lower end of an arrow. 2. குலை, the viscera as the liver, &c. 3. குலையென்னேவல், *imp.* be relaxed, as the mind from duty, show signs of anger, untie, loosen, dishearten. 4. கொத்து, a collection, crowd. 5. செய்கரை, the artificial bank of a paddyfield, a causeway. 6. நடுக்கம், trembling, trepidation. 7. பூங்கொத்து, a bunch of flowers. 8. ஈந்து, கமுகு, காந்தள், தெங்கு, பனை, வாழை முதலிய மரக்குலை, a bunch of palm, arecanuts, November flowers, cocoanuts, palmyra fruits, plantains, &c. 9. விற்குதை, notches in a bow to receive the string.

குலைதல், அச்சக்குறிப்பு, signs of anger. 2. குன்றல், being disheartened, disconcerted. 3. அவிழ்

தல், becoming loose. 4. கலைதல், dispersing as a company, a flock, &c., scattering. 5. தளர்தல், being relaxed, at the mind from duty, austerities, &c. 6. நடுங்கல், trembling, perturbation.

குலைத்தல், குலையச்செய்தல், untying, disturbing, disorganizing.

குலையல், அச்சக்குறிப்பு, sign of anger.

குலோமி, வெள்ளறுகு, a plant—Exacun hyssopifolium (*M. Dic.*).

குலோமிசை, வசம்பு, a medicinal plant, sweet calamus.

குல்லரி, இலந்தை, the Jujube, a thorn-tree—Zizyphus.

குல்லை, கஞ்சா, a plant whose leaves form an intoxicating drug—the Cannabis. 2. துளசி, the sacred basil—Ocymum. 3. வெட்சி, a flowering tree—the Ixora.

குல்வலி, இலந்தை, the Jujube tree.

குவடு, சிறுமலை, a hillock. 2. திரட்சி, roundness, rotundity. 3. மரக் கொம்பு, a branch. 4. மலை, a mountain or hill. 5. மலையுச்சி, the top of a hill, a speak. 6. சங்க பாஷாணம், (*M. Dic.*) a kind of arsenic.

குவட்டிற்புளிதம், சங்கபாஷாணம், a kind of arsenic.

குவட்டினீயம், நீலாஞ்சனக்கல், sulphuret of antimony.

குவட்டுக்கூர்மை, தொட்டிப்பாஷாணம், a kind of native arsenic.

குவரிகுண்டல், வாலுளுவை, a medicinal seed.

குவலம், அவுபலபாஷாணம், a kind of arsenic in its natural state.

குவலயம், குவளை, water-lily. 2. நெய்தல், a water-plant—the Nymphoe. 3. பூமி, the earth, the world.

குவலயாபீடம், ஓர் யானை, the name of the elephant of Kamsa despatched against Krishna.

குவலயானந்தம், ஓரலங்காரம், a treatise on rhetoric.

குவலிடம், ஊர், a village, a town.

குவலையன், துருசி, blue vitriol.

குவவு, குவிதல், being heaped up, being piled up conically. 2. கூட்டம், assemblage a colletion, group. 3. திரட்சி, globularness. 4. பூமி, the earth. 5. பெருமை, largeness, greatness. 6. மேடு, a heap, a hillock.

குவளச்சி, புத்தாம்பழம், one of the one hundred and twenty natural bodies.

குவளை, ஒரு நீர்ப்பூ, the water-lily—Pontederia. 2. மன்மதன் கணையி னொன்று, one of the flowery arrows of the Indian cupid. 3. விழி, the eye. 4. கண்கோளகை, the orbit of the eye. 5. மணிபதிக் குங்குவளை, a kind of bed or socket in a jewel for a gem or bead.

குவளைத்தாரான், தருமராஜன், he who wears a garland of the water-lily—the prince Yudhishtira.

குவால், குவிதல், a heap, a pile. 2. கூட்டம், a collection, a group. 3. மேடு, a hillock.

குவிதல், உண்டை, roundness. 2. கூடுதல், becoming conical. 3. கூட்டம், a collection, accumulation, crowd. 4. திரட்சி, globularness.

குவித்தல், ஒளித்தல், hiding, concealing. 2. கூடுவித்தல், accumulating, boarding up, heaping up, filing up. 3. கைகுவித்தல், closing, joining the hands conically.

குவில், அறுத்தல், reaping, breaking.

குவிவு, குப்பை, a heap, abundance. 2. குவிதல், becoming conical, being heaped, crowded.

குவை, குப்பை, a heap, a conical pile, a dunghill. 2. கூட்டம், a collection, accumulation, crowd. 3. திரட்சி, conical shape. 4. மேடு, a hillock.

குழகம், அழகு, beauty, gracefulness, fairness. 2. சிறுவர்க்குரிய ஒரு நூல், a book containing sweet verses for children.

குழகன், முருகன், Skanda. 2. சிவன், Siva.

குழகு, அழகு, beauty, fairness.

குழங்கல், ஒரு மாலை, a kind of garland.

குழமகன், குழந்தை, a male infant. 2. ஒரு பிரபந்தம், a poem in praise of a male infant.

குழம்பல், கலங்கல், being disturbed, agitated, disconcerted.

குழம்பு, கஞ்சி, thick gruel, pap. 2. குழம்பென்னேவல், *imp.* be mingled, stirred up, agitated, disturbed. 3. குழைசேறு, mud, slime, macerated earth.

குழலல், குழற்சி, being folded back into a roll or tied in a lock as the hair of women.

குழல், இசைப்பாட்டு, a song, an ode to be sung. 2. ஊதிடுகுழல், a flute, a fife. 3. குழலென்னேவல், *imp.* be folded back into a roll. 4. கொண்டை, hair-knot. 5. துளையுடைப்பொருள், a pipe, a tube. 6. பெண்மயிர், women's tresses. 7. மயிற்குழற்சி, hair dressed in one of the five modes.

குழவி, இளமை, youthfulness, juvenility. 2. இளம்பிறை, the young moon. 3. ஒட்டகக்கன்று, the young of a camel. 4. கடமை, பன்றி, மான், முசு, யாளி, யானை இவற்றின் குட்டி, the young of an elk, hog, deer, red monkey, the fabulous wild cow, elephant, &c. 5. குழந்தை, an infant, a babe. 6. பெருமை, greatness. 7. மரக்கன்று, a sapling, a sucker. 8. மரக்கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை, the young of animals that live on the branches of trees, as monkeys, squirrels, chameleons, sloths, &c.

குழவு, இளமை, youthfulness, juvenility.

குழற்கொத்து, மயிர்க்குழற்சி, a tuft of women's hair.

குழாம், கூட்டம், society, company, association, band, herd, flock, swarm, shoal.

குழாய், துளையுடைப் பொருள், a tube, pipe. 2. துளை, tubular cavity.

குழி, கிணறு, a well. 2. குழியென்னேவல், *imp.* sink into a hollow, be excavated. 3. குளம், a tank. 4. பள்ளம், a pit, a hole, hollow, cavity, dimple. 5. வயிறு, the belly.

குழிசி, பானை, a pot. 2. மிடா, a large water-pot.

குழிதல், குழியாதல், being worn hollow, becoming hollow.

குழித்தாமரை, ஆகாசத்தாமரை, a water-plant, the roots of which float in the water—Pistia Stratioles.

குழிநாவல், ஒரு நாவல், a species of the நாவல், or jumbu tree.

குழிப்பு, பிரபந்தவுறுப்பினொன்று, a peculiar harmonic rhythm in verse, in which the மோனை, rhyming of the metrical feet are discarded, but the correspondence of the letters, or syllables, ending each foot and beginning the next forms a pleasing harmony.

குழிமிட்டான், நத்தைச்சூரி, a plant—Spermacoce.

குழியம், திரட்சி, rotundity, globosity, cylindricity. 2. பாராவலயம், a kind of curved bludgeon.

குழிவு, குழிதல், hollowness, depression, cavity.

குழு, குழுவென்னேவல், *imp.* flock together, associate, unite with. 2. கூட்டம், company, class, flock, herd. 3. மகளிர்கூட்டம், a company of females, a lady's female companions. 4. (*Sans, Ghusha*) விறகு, wit, ingenuity, expressions, fanciful or shrewd intimations.

குழுமல், கூடல், collecting, associating. 2. கூட்டம், a crowd, multitude.

குழுவல், கூட்டம், a crowd.

குழூஉ, கூட்டம், (*a poetic form*) class, company, flock.

குழூஉக்குறி, ஒரு கூட்டத்தார் தம்மில் வழங்குஞ்சொல், a cant or conventional term peculiar to a class or body of men.

குழூஉப்பெயர், திரட்பெயர், (*in grammar*) a noun of multitude.

2. வகுப்புப்பெயர், a noun denoting a particular class.

குழை, குண்டலம், ear jewels. 2. குழைசேறு, soft well trodden mud, slime. 3. குழையென்னேவல், *imp.* fade, shrink, be bent, be mashed, reduced to pulp. 4. தளிர், young leaves, sprouts, foliage, boughs, twigs. 5. துளையுடைப்பொருள், a tube. 6. நெய்தல், a class of water-flowers—Nymphæa alba.

குழைதல், வாடல், fading, shrinking, being spoiled. 2. குழைதல், being, soft, mashed, pulpy, slimy, &c.

குழைத்தல், குழைவித்தல், macerating, mashing. 2. தளிர்த்தல், sprouting sending out sprouts.

குளகம், குற்றெழுத்துத்தொடர்ந்த செய்யுள், a curious poem consisting of short letters only. 2. பலபாக்கூடிப்பொருண்முடியுஞ் செய்யுள், a species of poem in which the connexion of the subject and predicate is not expressed in the same stanza but in one following. 3. மரக்கல், a corn measure. 4. ஆழாக்கு, one-eighth of a measure or நாழி. 5. பலபாலிற் செல்லும் பொருட்டொடர்பு, protraction of the government of the noun or verb through several stanzas, instead of giving the terminal word in each.

குளகன், சுப்பிரமணியம், Skanda (காந்.) see குழகன்.

குளகு, இலையுணும்விலங்குணவு, the food of graminivorous animals, such as herbs, grass, leaves, &c.

குளகுளெனல், ஈரடுக்கொலிக் குறிப்பு, reiterated words imitative of sound—gurgling, sounding, as water when squirted, &c.

குளக்கோட்டன், ஓரரசன், a former king in the northern part of Ceylon celebarted for constructing and repairing temples and tanks.

குளபாகம், இலளிதபாகம், an easy flowing style.

குளம், தடாகம், a tank, a pond. 2. நுதல், the forehead, the frontal part. 3. வெல்லம், jaggery or coarse sugar, molasses.

குளவி, ஒரு வண்டு, a kind of hornet or wasp. 2. மலைப்பச்சை, a fragrant mountain plant.

குளவிந்தம், ஒரு மஞ்சள், a kind of turmeric, used medicinally.

குளன், குளம், a tank.

குளிகன், அஷ்டநாகத்தொன்று, one of the eight serpents that support the earth. 2. கரந்துறைகோளினொன்று, one of the seven invisible planets said to be the son of Saturn.

குளிகை, மாத்திரை, a pill, a bolus.

குளித்தல், நீராடல், washing, bathing.

குளிப்பச்சை, ஆற்றுப்பச்சை, a curious green stone, one of the one hundred and twenty kinds of minerals.

குளியம், உண்டை, a ball, a globe. 2. புலி, tiger.

குளிரி, பீலிக்குஞ்சம், a fan made of peacock's feathers. 2. வெற்றிலைமூக்கரிகத்தி, a knife for cutting the stem of betel leaves.

குளிர், அச்சக்குறிப்பு, shivering, trembling, as with fear. 2. கர்க்கடகவிராசி, cancer, a sign of the zodiac. 3. கவண், a sling. 4. குளிர்ச்சி, coldness, chilliness, frigidity. 5. சூலம், a trident. 6. நண்டு, a crab, a lobster. 7. பனிக்காற்று, dewy wind, cold wind. 8. மழு, a battle-axe. 9. மீனெழுக்கு, a shoal of fishes. 10. முழவு, a kettle-drum. 11. வெற்றிலைமூக்கரிகத்தி, a knife for cutting the stem of betel leaves. 12. வெண்குடை, a white umbrella.

குளிர்ப்பித்தல், குளிர்ச்சி செய்தல், making cold, cooling, refrigerating, refreshing with water, perfumes, &c.

குளிறல், எழுத்திலாவோசை, inarticulate sound. 2. ஒலித்தல், roaring, clamouring, vociferation. 3. பேசலாலெழுமொலி, din.

குளிறு, ஒலி, roar, vociferation. 2. குளிரென்னேவல், *imp.* roar, utter inarticulate sounds.

குளீரம், நண்டு, a crab, a lobster.

குள்ளம், குறுமை, shortness in stature. 2. தந்திரம், fraudulent, dexterity, craft, cunning.

குறங்கு, தொடை, thigh, lap.

குறஞ்சனம், வெண்காரம், borax (*M. Dic.*).

குறடு, ஒரு கருவி, pincers, tongs, forceps, &c. 2. திண்ணை, a raised floor or verandah. 3. பலகை, a plank, board. 4. மரத்துண்டு, a block or clump of wood. 5. (*M. Dic.*) நண்டு, a crab.

குறட்டை, காக்கணங்கொவ்வை, a kind of creeper with large black fruit that becomes red when ripe.

குறண்டி, ஒரு பண், a mode of singing.

குறத்தி, குறிஞ்சிநிலப் பெண், a fortune-telling female of the tribes who live by the chase.

குறம், ஒரு ஜாதி, a tribe of mountaineers, foresters, hunters, fowlers, snake-catchers, basket-makers, &c.

குறவஞ்சி, ஒரு பிரபந்தம், a kind of poem. 2. குறப்பெண், a woman of the குறவர் tribe, a fortune-teller, &c.

குறவர், குறிஞ்சிநிலமாக்கள், mountaineers, tribes who live by the chase. 2. வேடர், hunters.

குறவன், இரதம், mercury.

குறவை, ஒரு மீன், a fish—the Ophicepshalus punctatus.

குறளடி, இருசீரடி, a line consisting of two metrical feet.

குறளடிவஞ்சிப்பா, இருசீரடியான் வரும் வஞ்சி, a kind of வஞ்சி, verse, consisting of three or more lines of two metrical feet each, together with a detached foot and an அகவற்சுரிதகம்.

குறளன், குள்ளன், a dwarf, a short person.

குறளி, வசவி, a short wicked shrew.

குறளை, குள்ளம், dwarfishness. 2. கோட் சொலல், tale-bearing, slander.

குறள், ஒரு பா, a distich, couplets of short lines. 2. சிறுமை, shortness, conciseness, abridgment. 3. பூத கணம், an imp or goblin. 4. திருவள்ளுவர் குறள், a celebrated poetical work by திருவள்ளுவர் in three parts, viz.: அறத்துப்பால், பொருட்பால் and காமத்துப்பால்.

குறள்வெண்பா, குறட்பா, a distich of two metrical lines.

குறள்வெண்செந்துறை, a verse consisting of two equal metrical lines of four or more feet each.

குறி, அடையாளம், a mark, sign, stamp, symbol, token, emblem. 2. குறிப்பு, idea, notion, intention, suggestion, hint, insinuation. 3. குறியென்னேவல், *imp.* note down, sketch an outline in painting, denote, specify, designate, intend, conceive. 4. (*in grammar*) a word, a term, an appellation, designation—as in இடுகுறி, காரணக் குறி.

குறிக்கோள், ஒற்றுமை, union, unity. 2. கணித்தல், the act of comprehending or understanding. 3. கரும முடிக்குந்துணிவு, strenuous perseverance in any one pursuit.

குறிச்சி, குறிஞ்சிநிலத்தூர், a village of foresters, mountaineers, &c.

குறிச்சூத்திரம், (*in grammar*) rules containing terms, definitions, &c.

குறிஞ்சி, ஓரிசை, a class of tunes peculiar to agricultural districts. 2. ஒரு பண், a tune, melody. 3. குறிஞ்சிநிலத்திராகம், tunes peculiar to hilly tracts. 4. குறிஞ்சிமரம், a species of large tree in hilly districts. 5. செம்முள்ளி, thorny shrubs growing in marshes. 6. மருதயாழ்த்திரம், lutes peculiar to agricultural districts. 7. மருதோன்றி, a flowering shrub—the Lawsonia spinosa. 8. மலைச் சார்நிலம், a tract of land in a a hilly country. 9. (*in love poetry*) illicit intercourse. 10. ஈந்து, a

species of palm very slow in its growth—Phoem farinifera.

சதாசிவம், முடியாநன்மை, eternal felicity. 2. Deity or Siva in the exercise of benevolence towards sentient beings, the highest of பஞ்சகர்த்தாக்கள்; also the state of Siva, when designing the salvation of souls before he assumed visible forms for the purpose.
சதாசிவன், சிவன், the eternal God—Siva, the first and the highest of the five forms assumed by Siva.
சதாநந்தம், நித்தியாநந்தம், eternal beatitude.
சதாநந்தன், கடவுள், the Supreme Being. 2. பிரமன், Brahma.
சதாபடம், சதாபூடம், } எருக்கு, a coarse milky shrub—Calotropis gigantea.
சதாபதி, மரவட்டை, a kind of millipedes living in trees.
சதாபலம், எலுமிச்சை, the lime tree.
சதாபுசம், வண்டு, a humming insect, a beetle.
சதாமூலம், சதாவேரி, } தண்ணீர்விட்டான், a kind of medicinal creeper and its roots.
சதாவரி, பாம்புகொல்லி, a plant which cures the bite of snakes.
சதி, உரோகணி, the fourth lunar asterism. 2. கற்புடையாள், a

chaste woman, a faithful wife. 3. சோறு, boiled rice. 4. தாள வொத்து, equal time in music and dancing. 5. பார்வதி, Parvati. 6. வஞ்சனை, treachery, perfidy, stratagem, insidiousness. 7. வட்டம், a circle, periphery.

சதிபதி, சிவன், the lord of Parvati—Siva.

சதிரிசம், உவமை, comparison, resemblance, similarity.

சதினகம், சதினம், } பயறு, pulse (*M. Dic.*).

சது, நான்கு, the number four.

சதுக்கம், நாற்றெருகூடுமிடம், a place where four ways meet. 2. சதுரம், a square, quadrangle.

சதுட்டயம், நான்கின் கூட்டம், four, four-fold, an aggregate of four.

சதுட்பாதம், நாற்கால்விலங்கு, (lit. four-footed) a quadruped. 2. நாய்க்கரணம், one of the four astrological கரணம்.

சதுமுகன், அருகன், that four-faced —Argha. 2. பிரமன், Brahma.

சதும்பை, பேய்மருட்டி, a plant.

சதுரங்கசேனை, காலாள், தேர், பரி, யானை, the aggregate of the four constituents of an army, viz., infantry, chariots, horses and elephants.

சதுரங்கபலம், சதுரங்கதளம், a force composed of the four military constituents of an army.

சதுரங்கம், ஒரு வகைச் சூதாடு கருவி, the game of chess, consisting of figures representing the four kinds of force in an army.

சதுரம், நாற்கோணவடிவம், a quadrangle. 2. விவேகம், sagacity, discretion. 3. திறமை, dexterity, cleverness. 4. நாகரிகம், propriety, polished manners.

சதுரர், (*sing.* சதுரன்.) நகரப்பதியோர், inhabitants of a large city, the polite, the polished.

சதுரை, சதுரங்கப்பட்டணம், Sadras.

சதுர், நான்கு, four, four-fold.

சதுர்கூலி, ஆவிரை, a shrub, cassia —Cassia auriculata.

சதுர்த்தசி, பதினான்காந்திதி, the fourteenth day of the moon.

சதுர்த்தர், சூத்திரர், the fourth caste of the Hindus—Sudras.

சதுர்த்தல், அப்புதல், daubing, besmearing, clapping on as ointment, mortar, &c.

சதுர்த்தி, நான்காந்திதி, the fourth day after the new or full moon.

சதுர்ப்புயன், திருமால், the four-armed—Vishnu.

சதுர்யுகம், யுகம் நான்கும்கூடிய மகா யுகம், a mahayuga being the aggregate of the four yugas or 43,20,000 years.

சதுர்வேதம், நான்கு வேதம், the four Vedas.

சதுனி, வௌவால், a bat.

சதேசன், நூறூர்க்குத் தலைவன், a chief of a hundred village.

சதைபொருத்தி, ஒரு நீர்ப்பூடு, a water-plant, (*lit.*) the flesh joiner.

சதோகநாதர், நவசித்தரிலொருவர், one of the nine Siddhars.

சத்தகன்னிகை, ஏழு மாதர், the seven famous Goddesses or Saktis.

சத்தசாகரம், ஏழு கடல், the seven circumambient seas.

சத்தசாஸ்திரம், சொல்லிலக்கணம், philology, especially the etymology of Sanskrit words. 2. ஒலியிலக்கணம், phonics, acoustics.

சத்தசுரம், ஏழ்சுரம், the seven musical tones or notes represented by the letters ச,ரி,க,ம,ப,த,நி.

சத்ததன்மாத்திரை, ஒலிப்பிரகிருதி, the archetype of sound.

சத்ததாது, ஏழ்தாது, the seven constituent parts of the body.

சத்ததாரணை, நவதாரணையிலொன்று, one of the nine classes of things existing or established by art, contrivance for the formation or modulation of sound, as bells, musical instruments.

சத்தபுரி, காஞ்சிமுதலேழுதலம், the seven sacred cities.

சத்தப்பிரமம், சப்தமேபிரமமென்கை, the system which maintains that

sound is God. 2. கலைஞானமறு பத்துநாலினொன்று, directions for the modification, of sound—one of the sixty-four கலைஞானம்.

சத்தமருத்துக்கள், ஏழுவகைக்காற்று, the seven kinds of winds.

சத்தமி, ஏழாந்திதி, the seventh day after the new or full moon.

சத்தம், ஏழு, seven-fold. 2. ஒலி, sound, clamour. 3. மொழி, a word, a vocable.

சத்தன், சிவன், applied to Siva, considered as the true and all pervading God (சிவ. சி.).

சத்தாவஸ்தை, சாக்கிர முதலிய வுயிர் நிலை யுபாதியேழு, the seven stages of the soul, from ignorance and self-delusion to the knowledge of Brahman, and consequent felicity.

சத்தி, கக்கல், matter disgorged. 2. குடை, an umbrella or parasol. 3. கைவேல், a lance, an iron spear or dart. 4. சத்தியென்னேவல், *imp.* vomit, sound. 5. சூலம், a trident. 6. தேரிடக்கியம், the flag of a chariot or car. 7. பார்வதி, Parvati, the female energy or active power of deity in all the operations of creating, preserving, destroying, &c. 8. வலி, power, strength, ability, energy, prowess. 9. விருதுக்கொடி, a flag or banner as a badge of honour. 10. வெண்குடை, the white parasol, as a badge of royalty. 11. கந்தகம், sulphur. 12. சவர்க்காரம், soap. 13. நிமிளை, bismuth pyrites. 14. கிரியைநாடல், pursuit after works, ceremonies, &c.

சத்திகம், குதிரை, a horse.

சத்திகுருநாதன், கஞ்சா, a medicinal plant, yielding leaves of narcotic and intoxicating qualities, much used by smokers—Cannabis sativa.

சத்திக்கூற்றோன், நவச்சாரம், sal-ammoniac.

சத்திக்கொடி, கொம்மட்டி, a class of running plants of the melon or gourd kind.

சத்திசாரணை, மூக்கிரட்டை, a plant—Borehavia, procumbens, Spreading Hogweed.

சத்திச்சாரம், காந்தாரி, one of the twenty-five bodies containing acid salts.

சத்திநாதம், பொன்னிமிளை, bismuth of a golden colour. 2. ஏமாப்பிரகம், mica of a yellow colour (*M. Dic.*).

சத்திநிபாதம், சத்தியைவிடுதல், (*in the agamas*) the degree of spiritual advancement, in which there is an utter mortification of self, and self-energizing principles, and a ripening of the soul for union with the deity.

சத்திநிபாதர், மனதையடக்கித் தெய்வம் வழிபடுவோர், those in whom self-will is subdued and who tend toward the deity.

சத்தியநிருவாணம், பிறவியறுத்தல், entire liberation from births and consequent supreme bliss.

சத்தியபாமை, கிருஷ்ணன் மனைவிகளி லொருத்தி, one of Krishna's wives.

சத்தியம், சபதம், an oath, swearing. 2. மெய், truth, veracity, sincerity.

சத்தியயுகம், கிரேதாயுகம், the first of the four yugas, the age of truth, the golden age.

சத்தியலோகம், பிரமலோகம், the highest of the seven upper worlds, said by some to be the abode of Brahma, and by Saivas to be the abode of Siva.

சத்தியவதி, வியாசன் தாய், the mother or Vyassa.

சத்தியவிரதன், உண்மையினிலை நிற்போன், one who scrupulously adheres to the truth. 2. தருமன், a name of the eldest of the five Pandavas. 3. திரேதா யுகத்திலிருந்த சூரியவம்சத்தரசன், the twenty-fifth king of the Solar dynasty in the second age.

சத்தியோசாதம், சிவனைம்முகத்தொன்று, one of the five faces of

Siva, indicative of production or reproduction.

சத்திரம், அன்னசத்திரம், an almshouse where food is given to travellers, Brahmans, mendicants, &c., choultry. 2. கைவிடாப் படை, a weapon used in close combat, as a sword, spear, &c. 3. கைவேல், a lance. 4. பாணம், an arrow. 5. யாகம், sacrifice, especially an oblation in the field of battle to secure the aid of the Goddess of victory. 6. வெண் குடை, a white parasol, an emblem of royalty. 7. தும்பை, a flowering shrub of several species. 8. கவிழ்தும்பை, Borago Indica.

சத்திராட்சி, அரத்தை, a shrub whose root is medicinal and forms a drug—Galanga (*M. Dic.*).

சத்திரியர், அரசர், the second of the four general divisions of castes, the royal or military class.

சத்து, உண்மை, truth, reality. 2. நன்மை, virtue, goodness, morality, moral excellence. 3. அறிவு, sentient knowledge. 4. ஞானி, a person of moral worth, virtue, great learning, &c., a sage. 5. அவுபலபாஷாணம், one of the thirty-two kinds of native arsenic.

சத்துநாமத்தி, ஏகம்பபாஷாணம், a a kind of arsenic.

சத்துருத்தானம், ஜன்மத்திற்காறு மிடம், (*in astrology*) the unfavourable position of a planet at the time of one's birth, being the sixth from the rising sign.

சத்துவம், வலி, strength, vigour. 2. முக்குணத்துள் முதற்குணம், the first of the three principles in nature.

சத்தை, இருக்கை, being, existence, entity.

சநகநகர் (சனக—), மிதிலை, the town of Mithila.

சநகந்தம் (சனகந்தம்), வசம்பு, sweet-flag.

சநகம் (சனகம்), சநசித்திரம் (சன-), } புளியாரை, wood—sorrel (*M. Dic.*).

சநகன் (சனகன்), சீதையின் தகப்பன், the father of Sita, the wife of Rama. 2. தகப்பன், father, progenitor. 3. ஒரு முனிவன், a Rishi, one of the four sons of Brahma, to whom Siva first taught spiritual wisdom.

சநநசக்கரம் (சனன-), ஒரு நூல், the name of a work on human Anatomy and Physiology by திரு நந்தித்தேவர்.

சநநசாகரம் (சனன-), பிறவிக்கடல், the vast ocean of births, consisting of endless transmigrations.

சநநமோசனம் (சனன-), பிறவியறல், the termination of births.

சநநம் (சனனம்), பிறப்பு, birth transmigration, whether past, present or future, production in creation, by birth or otherwise, from the celestials down to the vegetables.

சநனி (சனனி), தாய், she who has given birth—mother.

சநந்தன் (சன-), ஒரு முனிவன், a rishi, one of the four sons of Brahma.

சநபதம் (சன-), நாடு, an inhabited region. 2. ஜனம், (பார.) mankind.

சநமேசயன் (சன-), ஓரரசன், the name of a celebrated king of the line of the Pandava princes.

சநம் (சனம்), இனம், relation, one's own people. 2. மனிதர், people, mankind, community, folks, men. 3. (பார.) கூட்டம், multitude, drove, flock, draft of fish, &c.

சநலோகம் (சனலோகம்), மேலேழுலகி லொன்று, the fourth, from the earth, of the seven upper worlds, where the Rishis சனகன், &c., reside.

சநற்குமாரம் (சனம்-), அஷ்டாதசவுப புராணத்தொன்று, one of the eighteen secondary Puranas, so called from its author சனற் குமாரன்.

சநற்குமாரன், (சனற்-), பிரமபுத்திரர் நால்வரிலொருவன், one of the four sons of Brahma, to whom the Puranas were communicated by Nandi, Siva's chamberlain (ஸ்காந்தம்).

சநாதன் (சனா-), ஒரு முனிவன், one of the four sons of Brahma.

சநார்த்தனம் (சனா-), ஒரு தலம், a place sacred to Vishnu.

சநார்த்தனன் (சனா-), திருமால், the worshipped—Vishnu.

சநி (சனி), ஒரு கிரகம், the planet Saturn, the most malignant an astrological influence of all the planets. 2. ஜநியென்னேவல், *imp.* be born, produced, generated, be conceived, result, appear. 3. சனிக்கிழமை, Saturday.

சநித்தல் (சனித்தல்), பிறத்தல், being born, produced, generated, brought forth.

சநிப்பு, பிறப்பு, being born, birth.

சநு, (சனு), பிறப்பு, birth.

சந்தணி, சந்தனம், sandal, either the tree, the wood or the fragrant paste.

சந்ததம், எப்போழ்தும், always, perpetually, eternally.

சந்ததி, சந்தானம், descendants, posterity. 2. மகன், a son.

சந்தப்பா, இருபத்தாறெழுத்து நான்கடியாக வரும் பா, a kind of verse in which twenty-six letters make a stanza of four lines.

சந்தம், கலிவண்ணம், metre in poetry—also musical flow or harmony in verse, resembling the metre of the Greeks and Romans. 2. அழகு, beauty. 3. சந்தனம், sandal. 4. நிறம், colour, hue. 5. வடிவு, shape, form, likeness.

சந்தர்ப்பம், சமயம், season, opportunity, time.

சந்தவிருத்தம், ஒரு விருத்தம், a stanza of a pleasing kind of metre.

சந்தனம், சந்தனமரம், the sandal-tree. 2. இரதம், (பார.) a chariot, a car.

சந்தனாசலம், பொதியம், the Malaya mountain, called the sandal-mountain, from its superior sandal trees.

சந்தனு, பீஷ்மன் தந்தை, a famous king of the lunar race, the twenty-first sovereign in the line, and father of Bishma.

சந்தனுமுன்மகன், பீஷ்மாசாரி, the eldest son of Santanu—Bishma.

சந்தாபம், வெப்பம், heat, ardency, fervour. 2. துன்பம், distress, affliction.

சந்தானகரணி, முறிந்தவுறுப்புக்களை யிணைக்கு மருந்து, a medicament for reuniting and healing limbs broken or cut off.

சந்தானசருவோத்தம், சிவாகம மிருபத்தெட்டினொன்று, one of the twenty-eight Agamas.

சந்தானதீபிகை, ஒரு சோதிட நூல், a work on astrology.

சந்தானம், ஐந்தருவிலொன்று, one of the five trees of Swarga that yield whatever is desired. 2. சந்ததி, offspring, progeny, issue.

சந்தானவுவமை, சிலேடையுவமை, a comparison formed on the ambiguity of terms.

சந்தாணி, வெண்காரம், borax.

சந்தி, இசைப்பு, a joining, junction, combination, union, meeting. 2. சந்தியென்னேவல், *imp.* meet, join, come or be in contact with, conjoin. 3. பலதெருக்கூடுமிடம், the meeting or junction of two or more roads, &c. 4. மாலை நேரம், the period of evening twilight. 5. மூங்கில், the bamboo, so called from its knots. 6. யுகசந்தி, a period at the expiration of each yuga, connecting it with the follwoing, and occupying $\frac{1}{12}$ of each, during which a gradual change takes place in the world, introductory to the peculiarities of the succeeding yuga; also a period of the same length, as the Satya yuga at the end of each Manvantara and of each Kalpa.

சந்தித்தல், கூடுதல், meeting, coming in contact with, joining, conjoining.

சந்திபண்ணல், நியமநிஷ்டை முடித்தல், performing the daily private worship, morning, noon and evening.

சந்திமான், இடையெழுவள்ளலிலொருவன், one of the second class of seven liberal kings.

சந்தியாகாலம், மாலை நேரம், the period of evening twilight. 2. யுகசந்தி, the interval between one yuga and another.

சந்திரகம், பொன்வண்டு, the bright gold-coloured beetle. 2. மயிற்றோகைக்கண், the eyes in a peacock's tail.

சந்திரகாந்தம், சந்திரமணி, } சந்திரமுகத்து நீர் விடுங்கல், the moon-stone said to emit moisture when placed in the moonlight.

சந்திரகாம்புயம், வெண்டாமரை, the white lotus (*M. Dic.*).

சந்திரகுப்தன், யமன் கணக்கரிலொருவன், the name of the registrar at Yama's court. 2. ஓரரசன், Sandrakuptus, the famous sovereign of Pataliputra (the ancient Palibothra, and modern Patna) who flourished in the time of Alexander the Great.

சந்திரசேகரன், சிவன், the moon-crested—Siva.

சந்திரசைலம், ஒரு மலை, a mountain in the Ramayana.

சந்திரஞானம், சிவாகமமிருபத்தெட்டினொன்று, one of the twenty-eight Agamas.

சந்திரதிலகம், சந்தனம், a sectarian sandal spot on the forehead.

சந்திரநாகம், இராகு, a black serpent, the dragon's head or ascending node in astronomy.

சந்திரபீசம், இந்திரகோபம், the cochineal insect.

சந்திரபுடம், moon's longitude.

சந்திரபூரம், பச்சைக்கர்ப்பூரம், crude camphor.

சந்திரமண்டலம், the orb or disk of the moon. 2. பரிவேடம், the moon's halo. 3. சிரமுந்தோளும், (*in the human body*) the head and the shoulders.

சந்திரமதி, அரிச்சந்திரன் மனைவி, the wife of the king Harichandra.

சந்திரமத்திமபுத்தி, (*in astron.*) the mean motion of the moon in a fixed time, as a day, an hour.

சந்திரமந்தோச்சம், (*in astron.*) the moon's apsis.

சந்திரமானம், (*in astron.*) a calculation made from the motion of the moon in its orbit.

சந்திரமோலி, சந்திரமௌலி, } சிவன், Siva, the moon-crested.

சந்திரம், கர்ப்பூரம், camphor. 2. பொன், gold.

சந்திரரேகை, சந்திரகலை, the moon's digits.

சந்திரலவணம், இந்துப்பு, rock salt, a medicinal salt.

சந்திரவட்டம், அருகன் முக்குடையினொன்று, one of the three umbrellas of Argha.

சந்திரவாதம், ஒரு சமயம், a system of religion in which the moon is God.

சந்திரனாள், திதி, the phases of the moon.

சந்திரன், நிலவு, the moon.

சந்திரிகை, சந்திரனொளி, moonlight, moonshine. 2. பேரேலம், large cardamoms.

சந்திரேகம், கார்போகரிசி, the seed of a medicinal plant—Psoralea corylifolia.

சந்திரோதயம், நிலவுதயம், moonrise.

சந்தில், சனி, Saturn (திவா.)

சந்திவிக்கிரகம், சத்துருசினேகம், forming a friendship with enemies to compass their ruin; one of the modes recommended for dealing with enemies.

சந்திவிட்சனன், சமாதானஞ்செய்தூதன், an ambassador who makes a treaty of peace.

சந்து, சந்தனம், sandal. 2. நாற்றெருகூடுமிடம், a place where four ways meet. 3. மூட்டு, a joint, articulation. 4. பிளப்பு, a gap, a cleft. 5. தூது, message, errand. 6. தூதன், a messenger. 7. ஜீவன், an animal, brute, insect.

சந்துசெய்தல், பொருத்துதல், reconciling parties.

சந்துநயத்தான், தூதுளை, a shrub, three-lobed night-shade—Solanum trilobantum (*M. Dic.*).

சந்துபோதல், going on a message, errand, &c.

சந்தேகநிவாரணம், தயாவிருத்தி பதினான்கினொன்று, one of the fourteen acts of beneficence—removing doubts, contingency, &c.

சந்தேகம், ஐயம், doubt, hesitation, scruple, uncertainty, dubiousness.

சந்தை, பண்டமாற்றுக்காகக்கூடுங் கூட்டம், a fair, a bazaar, a stated market.

சந்தோபிசிதம், சந்தோபிசிதி, } வேதாங்கமாறினொன்று, the science which treats of the different modulation of the voice and of prosody.

சந்நத்தன், போருக் காயத்தமானோன், one armed and prepared for war.

சந்நாகம், போர்க்கவசம், armour for the body; mail, either of iron or thick quilted cotton.

சந்நிதானம், திருமுன், the divine presence, the presence of a great man. 2. தேவசந்நிதி, the sacred shrine in a temple.

சந்நிதி, சமுகம், presence, nearness, proximity. 2. திருமுகம், the presence of the deity, guru or some great person. 3. உயர்ந்தோன், the holy.

சந்நிபம், உவமை, a comparison, a simile.

சந்நியம், போர், fight, battle, an engagement.

சந்நியாசம், துறவு, asceticism, abandonment of all worldly possessions and attachments, being the highest and last of the four Brahmanical states, relinquishment, renunciation.

சந்நிரோதம், (சந்நிரோதனம்) தடை, hindrance, obstruction, check.

சந்மம், பிறப்பு, birth, nativity, transmigration.

சந்மானம், உபசாரம், honour, respect, homage, civilities, complaisance.

சந்மினி, காளியேவல் செய்பவள், a female attendant of Kali.

சபக்கம், சபட்சம், } ஒத்தபட்சம், (*in logic*) analogy, similitude, analogical proof.

சபதம், ஆணை, an oath, an asseveration confirmed by oath or ordeal.

சபதி, விரைவு, quickness, swiftness, instantaneousness.

சபம், ஆல்முதலியவற்றின் வீழ், roots from branches of the banyan and other trees. 2. மூங்கில், bamboo. சபரம், கெண்டைமீன், the carp fish—the Cyprinus.

சபலத்துவம், கைகூடல், the completion of desire, complete success.

சபலம், இரதம், quicksilver. 2. இலாபம், advantage, profit, gain, productiveness, fruitfulness. 3. நிறைவேறல், completion, fulfilment. 4. மின்னல், lightning. 5. சித்தி, success.

சபலா, திப்பிலி, long-pepper.

சபலை, மின்னல், lightning.

சபாகம்பம், சபைக்கோழை, diffidence as to appearing before an assembly.

சபாசனம், சங்கம், a stated assembly. 2. மரியாதை, courtesy, politeness, civility.

சபிண்டர், பிதிர்பிண்டமிடுதற்கு உரியோர், relatives to the 6th degree in the male line who may unite in offering the funeral cake to the manes of deceased ancestors.

சபினம், சபீனம், } வசம்பு, calamus.

சப்பன்னம், ஐம்பத்தாறு, the number fifty-six.

சப்பியம், சபைக்கேற்றது, being related to or fit for an assembly.

சமக்கிருதம், ஆரியமொழி.

சமங்கை, வறட்சுண்டி, a species of sensitive plant. 2. ஆடுதின்னாப்பாலை, a plant—Aristolochia bracteata (*M. Dic.*).

சமட்டி, எல்லாம், all, entireness, the whole, the aggregate of all the parts. 2. மதைவு, (*in philo.*) an undeveloped embryo state, as that of the future tree contained in the seed—opp. to வியட்டி.

சமணம், சமண், } புறச்சமயமாறினொன்று, one of the six systems of religion regarded as heterodox by the Siva sect—the Jaina religion.

சமணர், அமணர், the Jaina sect.

சமணி, இலவமரம், silk-cotton tree (*M. Dic.*).

சமதக்கினி, ஓரிருஷி, the name of a celebrated Rishi, the father of Parasurama.

சமதன், சங்காத்தி, an associate, a counsellor.

சமதாளம், நவதாளத்தொன்று, one of the nine rules for keeping time in music, when an image is carried round at a heathen fane with nine halts, the nine different instrumental and vocal measures being observed.

சமதை, ஒப்பு, similarity, sameness, equality.

சமத்தம், எல்லாம், all, the whole, entireness, universality.

சமநிலை, ஒருவகைச்செய்யுள், (*in pros.*) poetry composed of words having a due mixture of hard, soft and medial letters. 2. நடுநிலை, equilibrium, equipoise, medium, mean.

சமநிலைவெண்பா, சவலைவெண்பா, a stanza composed of two குறள், வெண்பா, without an extra connective foot at the end of the second foot.

சமப்பால், நெய்தனிலம், maritime soil or district. 2. முல்லைநிலம், forest soil or district (திவா.).

சமமுகம், தியானிப்பதுபோற் றலையசைவின்மை, one of the fourteen expressions of the countenance, that of the head erect and fixed—as in contemplation, deep thought, &c.

சமம், உவமை, likeness, similarity, uniformity. 2. நடு, mean, medium. 3. போர், war, battle, conflict, engagement.

சமயம், காலம், time, season, occasion, juncture of time. 2. சைவ முதலிய சமயம், any religious persuasion, faith or system, such as Saivaism, &c.

சமரசம், சமாதானம், reconciliation, equality.

சமரதம், நால்வகை ரதத்தினொன்று, a royal car or chariot of war of the third order, that next above அத்தரதம், and next below மாரதம்.

சமரதர், warriors fighting in a சமரதம், car, defending themselves and the army equally (பார.).

சமரம், போர், battle, war, conflict.

சமரி, துர்க்கை, the Goddess of war—Durga. 2. பாம்பு, snake.

சமர், போர், war, conflict, engagement. 2. முட்பன்றி, a porcupine.

சமர்த்தகம், ஈகை, granting a boon.

சமர்த்தன், திண்ணியன், a clever, competent, skilful person, a champion.

சமர்ப்பணம், சமர்ப்பணை, சமர்ப்பகம், } கொடை, giving, presenting. 2. உயர்ந்தோர்க்குக் கொடுத்தல், giving to superiors.

சமலம், சமலை, } அசுத்தம், defileness, filthiness, ordure. 2. மும்மலம், the three evil passions or inherent principles in which the soul is involved.

சமவாசம், சகவாசம், cohabitation.

சமவாதம், தர்க்கம், discussion, debate, dispute, controversy.

சமவாயம், கூட்டம், multitude, assemblage, collection, aggregate. 2. தற்கிழமை, (*in logic*) relation of a species to its genus or of a part to the whole—as of a nail to the finger or of a material to what is made from it.

சமவிருஷ்டி, மிதமழை, moderate rain.

சமழ்த்தல், நாணுதல், being ashamed. 2. வருத்தம், suffering, pain, distrees, affliction.

சமழ்ப்பு, நாணம், shame.

சமழ்மை, தாழ்வு, blemish, sordidness, deterioration (நாலடி.).

சமனம், வசம்பு, calamus. 2. புழுக்கொல்லி, a plant whose medicinal effects counteract the poison of worms, bees, &c.—Aristolochia (*M. Dic.*).

சமனிசை, ஓரிசை, tenor in music. 2. ஒத்தவிசை. (*in pros.*) a due mixture of gutteral, nasal and medial letters.

சமனியகரணி, இரணந்தீர்க்கும் மருந்து, a medicine which heals wounds speedily.

சமன், காலன், the minister of Yama. 2. நடு, medium. 3. யமன், Yama, the regent of death.

சமாசம், தொகைப்படுவது, collection, accumulation, aggregation. 2. மொழியாக்கம், (*in grammar*) formation of words both derivative and compound.

சமாதானவுருவகம், ஓரலங்காரம், (*in rhetoric*) a species of metaphor.

சமாதி, அஷ்டாங்கயோகத்தொன்று, the last of the eight states and modes of silent contemplative worship. 2. சாவு, death, demise, commonly spoken of a devotee. 3. சமாதி தரிசனை, knowledge of the sublimest description—as of the deity, one's own spiritual nature, &c., acquired by supernatural illumination, without the aid of organs physical or mental. 4. ஓரலங்காரம், (*in rhet.*) a species of personification, a metaphor in which the quality or attribute properly belongs to the objects to which the metaphor refers.

சமாதியுப்பு, a kind of medicinal salt formed from the corpse interred in a sitting posture, taken up after some years ; also the salt cast into the grave at the interment to prevent putrefaction.

சமாது, ஊமத்தை, a narcotic plant (*M. Dic.*).

சமாத்தி, முற்றுகை, end, conclusion, completion.

சமாயுதம், ஓரலங்காரம், (*in rhet.*) a figure expressing the accomplishment, through some incidental occurrence, of a desired but retarded event.

சமாலம், பீலிக்குஞ்சம், a bunch of peacock's feathers used as a fan.

சமாலுகம், குறிஞ்சா, an edible and medicinal creeper (*M. Dic.*).

சமானகரணி, இரணத்தழும்புதீர்க்கு மருந்து, a medicament that heals wounds, removes scars, &c.

சமானம், உவமை, comparison, resemblance, likeness, similitude.

சமானன், நாபியினின்றுமெழும்வாயு, one of the ten vital airs—that which is essential to digestion.

சமி, அருகன், Argha. 2. சமியென்னேவல், *imp.* bear patiently, endure, be digested, as food, become absorbed. 3. வன்னிமரம், the Suma tree—Prosopis spicigera. 4. தணக்கு, a tree—Gyrocarpus laquine. 5. வாழை, (*M. Dic.*) plantain tree.

சமிதி, போர், battle, war, engagement.

சமிதை, ஓமவிறகு, sacrificial fuel of nine kinds of trees or plants.

சமித்தம், ஓமமண்டபம், a sacrificial hall.

சமித்தல், பொறுத்தல், enduring, bearing patiently.

சமித்து, ஓமவிறகு, sacrificial fuel of nine kinds of trees or plants.

சமிப்பாகம், கொன்றை, a genus of flower-trees—Cassia (*M. Dic.*).

சமியன், அருகன், Argha.

சமிலாகி, திப்பலி, long pepper—plant or fruit—Piper longum (*M. Dic.*).

சமீகம், போர், war, battle. *2.* கோல், a dart, pike.

சமீபம், அண்மை, nearness, proximity, vicinity, contiguity.

சமீரணம், கடாரை, a species of citron tree (*M. Dic.*).

சமீரணன், காற்று, the air, wind. *2.* வாயுதேவன், the Hindu Aeslus. *3.* வாயுபுத்திரன், any of the sons of the God of the wind, a patronymic of Bhima, Hanuman, &c.

சமீரம், போர், battle, engagement.

சமீரன், காற்று, air, wind.

சமு, படையிலோர்தொகை, a division of an army of seven hundred and twentynine chariots, seven hundred and twenty-nine elephants, two-thousand one hundred and eighty-seven horses and three thousand six hundred and eighty-five infantry.

சமுகவிலாசம், ஒரு பிரபந்தம், a poem celebrating the praises of a God, a king or a great personage, sung in his presence.

சமுச்சயம், சமுச்சயவுவமை, (*in rhet.*) an additional assertion, comparison, &c., as this resembles that not only in colour but also in quality.

சமுதாயம், கூட்டம், a company, multitude, an assembly.

சமுத்தி, பாடும்படி யெதிரிகொடுக்கு முள்ளுறைவசனம், the line or phrase or words repeated at the conclusion of each verse of a poem. *2.* நிறைவு, completeness, fulness.

சமுத்திரம், கடல், sea, ocean. *2.* படையிலோர்தொகை, a division of an army, as சமு. *3.* பத்துலட்சங் கோடி, the number ten billions. *4.* முடக்கறுத்தான், (*M. Dic.*) a medicinal plant, Heart-pea, curing palsy and gout—Cardiospermum Halicacabam.

சமுத்திரவருணச்சிலை, ஒரு கல், beryl, a precious stone of a greenish colour.

சமுத்திராந்தம், சிறுகாஞ்சொறி, a kind of nettle. *2.* பருத்திச்செடி, cotton plant. *3.* ஜாதிக்காய், nutmeg (*M. Dic.*).

சமுப்பவம், தைவேளை, a plant—Cleome felina.

சமுற்கம், ஒரு மிறைக்கவி, a stanza, in which two or more lines correspond in sound but differ in sense.

சமூகம், கூட்டம், multitude, crowd. *2.* சபை, association, society.

சமேதம், கூடவிருத்தல், approximation.

சமை, சமையென்னேவல், *imp.* make, construct, form, build, cook; dress food. *2.* வருடம், a year. *3.* மனதையடக்கல், (*in Ved. philosophy*) restraining the passions, patience.

சமைதல், அமைதல், being made, constructed, built.

சமைத்தல், அமைத்தல், constructing, building. *2.* செய்தல், making.

சம், அன்பு, love, affection. *2.* பிறப்பைக் குறிக்கும் வடமொழியிறுதி, a Sanskrit suffix generally to nouns of Sanskrit origin, denoting that which is born, generated, produced, &c. *3.* வடமொழி முதனிலையடை, a Sanskrit prefix, implying junction, union, completion, fulness, intensity, happiness, goodness, loveliness, &c.

சம்பகம், செண்பகம், a very fragrant large yellow flower tree—the Michelia champaca.

சம்படம், சீலை, cloth. *2.* சோம்பல், lethargy, indolence, sluggishness of the system.

சம்பத்துவேட்டம், தாள மைந்தி னொன்று, one of the five modes of time in beating the cymbal, consisting of twelve measures.

சம்பந்தர், சிவனடியாரிலொருவர், one of the three famous servants of Siva.

சம்பம், மரவயிரம், the hard or solid part of a tree. 2. வச்சிராயுதம், the thunderbolt, as the weapon of Indra.

சம்பரம், எண்காற்புள், a fabulous eight-legged bird. 2. சீலை, cloth, garment. 3. நீர், water.

சம்பரன், ஓரிராக்கதன், the name of an Asura killed by Kama. 2. பின்னுமோரிராக்கதன், another Asura killed by Indra.

சம்பராரி, இந்திரன், the destroyer of an Asura called சம்பரன். 2. மன்மதன், Kama, the destroyer of another of the same name.

சம்பரி, நேர்வாளம், the croton seed.

சம்பர்க்கார்த்தம், (*in astronomy*) சூரிய கிரகணகாலத்துச் சசிரவிதேகம், the sum of the semi-diameters of the sun and moon in a solar eclipse. 2. சந்திரகிரகண காலத்துச் சசி பூச்சாயைகளின் தேகம், the sum of the semi-diameters of the moon's and the earth's shadow in a lunar eclipse.

சம்பவம், பிறப்பு, birth, generation, production. 2. சம்பவப் பிரமாணம் (*in logic*) (சிவ. ஞா.) ascertainment of the nature of persons, of things by their attributes—as when a stone attracts iron, to infer that it is a magnet. 3. தற்கிழமை, (உபநி.) the necessary existance of one thing in or with another—as, the species in the genus, a hundred in a thousand, &c.

சம்பளம், கரை, a bank, shore. 2. பண்டாரம். stores, treasures, materials. 3. பொறுமை, malice, envy at another's success. 4. வழிசேரற்கு வேண்டும் பொருள், goods for travellers. 5. வழியுணவு, food for a journey. 6. எலுமிச்சை, the citron tree. 7. மாதாந்தக்கொடை, wages, salary.

சம்பன், ஓரிராக்கதன், the name of a powerful titan or mischievous goblin.

சம்பன்னகரணி, இரணந்தீர்க்கு மருந்து, a medicament that effaces scars, &c.

சம்பன்னம், நிறைவு, completeness, perfectness, accomplishment. 2. பாக்கியம், prosperity, happiness.

சம்பன்னன், நிறைவுடையோன், one perfect in knowledge, good qualities, &c.

சம்பாகம், தர்க்கம், reasoning, arguing, discussion.

சம்பாஷணை, கூடிப்பேசல், conversation, dialogue. discourse, talk.

சம்பாதி, அருணன்மகன், one of the two sons of Aruna, the other being Jatayu, who by a curse, were transformed into eagles.

சம்பாவிதம், மிகுதி, (நன்.) probability, likelihood. 2. சங்கேதத்துக் கடுத்தது, what is hypothetical or conditional.

சம்பிரதம், சித்து, illimitable or supernatural power exercised at pleasure (கலம்ப.).

சம்பிரதாயம், குருபாரம்பரியம், tradition, traditional communications —as of a doctrine; knowledge transmitted orally from teacher to teacher and established as of divine authority, such as the meaning of the Vedas and Agamas and other sacred books (சிவ ஞா.) 2. குலாசாரம், customs and manners—as of a tribe, usage, observance.

சம்பிரமம், பரங்கிப்பாஷாணம், mercurius sublimatus.

சம்பிரேட்சியம், சீர்தூக்கல், deliberation, due consideration (பஞ்ச தந்.).

சம்பீரம், எலுமிச்சை, the lime or citron tree.

சம்பு, அயன், Brahma. 2. அரன், Siva. 3. அரி, Vishnu. 4. அருகன், Argha. 5. இரவி, the sun. 6. எலுமிச்சை, the lime tree. 7. ஒரு புல், a kind of reed or sedge, some-

times used for thatching. *8.* நரி, a jackal. *9.* நாவல், the jumbu tree. *10.* சம்பு தீவு, (ஸ்காந்.) the central circular continent, surrounded by six others—so named from the jambu trees abounding in it.

சம்புகம், நரி, a fox, a jackal.

சம்புகேச்சுரம், திருவானைக்கா, a place sacred to Siva, near Srirungum.

சம்புரோட்சணம், ஆலயப் பிரதிஷ்டை, conseration of a temple.

சம்புதம், சம்பூதம், } பிறப்பு, birth, being born, coming into life.

சம்பை, ஒரு தாளம், a mode of beating the drum, &c. *2.* மின்னல், lightning.

சம்போகம், புணர்ச்சி, copulation, sexual enjoyment.

சம்போதனை, விளிவேற்றுமை, (*in Sans. Gram.*) the vocative case.

சம்மதம், கோட்பாடு, tenet, opinion.

சம்யோகம், புணர்ச்சி, copulation.

சம்வர்த்தம், சப்தமேகத்தொன்று, one of the seven classes of clouds.

சம்வற்சரம், வருடம், a year.

சம்வாகம், மலையூர், a town on a hill.

சய, ஓராண்டு, the twenty-eighth year of the Hindu cycle. *2.* போற்றி, praise, applause.

சயகண்டை, பரந்தவட்டிகை, a kind of cymbal used by mendicants, also at temples.

சயகம், பூவரும்பு, a flower-bud.

சயதாளம், தாளமொன்பதிலொன்று, one of the nine kinds of musical measure.

சயத்தம்பம், வெற்றித்தம்பம், a post or pillar set up in celebration of a victory, a great act of liberality, &c.

சயத்திரதன், ஓரரசன், a hero famous in the Bharata.

சயந்தமாலை, ஒரு நூல், the name of an astronomical treatise in Tamil.

சயந்தனம், தேர், a car, chariot.

சயந்தன், இந்திரன் மகன், the son of Indra. *2.* சந்திரன், the moon.

சயந்தி, வாதமடக்கி, two different trees furnishing medicine for flatulency—நந்தக்காரி, and தழுதாழை, (*M. Dic.*).

சயபாளம், நேர்வாளம், a tree—Croton tiglium (*M. Dic.*).

சயபேரிகை, வெற்றிப்பறை, a large martial drum beaten in celebration of victory.

சயமகள், துர்க்கை, the Goddes of war—Durga. *2.* மிதுனவிராசி, Gemini of the zodiac.

சயம், ஆம்பல், the water-lily. *2.* இரவி, the sun. *3.* கூட்டம், assemblage, multitude, collection. *4.* கை, the hand. *5.* சர்க்கரை, coarse sugar. *6.* மாலை, a garland. *7.* வெற்றி, triumph, victory, success, tone, vigour, virtue.

சயம்பு, அருகன், the self-existent—Argha. *2.* கடவுள், the Deity. *3.* தானுகவாதல், self-existence, independent existence. *4.* சிவன், Siva.

சயனம், நித்திரை, sleep, lying down, taking rest. *2.* நித்திரைசெய்யுமிடம், a dormitory, a place for sleeping. *3.* புணர்ச்சி, copulation, coition.

சயா, as சயந்தி.

சயித்தல், வெல்லல், conquering.

சயித்திரம், சித்திரை மாதம், the month of April.

சயிரேகம், (சைரேயகம்), மேகவண்ணப்பூவுள மருதோன்றிமரம், a species of Lawsonia spinosa bearing sky-coloured flowers.

சயிலம், மலை, (properly சைலம்.) a mountain.

சயினி, திப்பலி, the long-pepper (*M. Dic.*).

சயை, சந்திரன் மூன்றும், எட்டாம், பதின்மூன்றும் திதிகள், the third, eighth, and thirteenth lunar days of either half month.

சய்யோகம், see சையோகம்.

சரகம், தேனீ, a bee. *2.* வண்டு, a beetle.

சரகாண்டபாஷாணம், a kind of arsenic.

சரகாண்டம், (*in astron.*) ascensional difference. 2. அம்புத்தாள், the shaft of an arrow. 3. அம்புக்கூடு, a quiver.

சரகூடம், அம்பாற்சமைத்தகூடம், a covering formed supernaturally by arrows shot into the air, as a means of defence from the weapons of the enemy.

சரக்கொன்றை, ஒரு கொன்றை, a species of the Cassia.

சரங்கம், சரங்க பாஷாணம், a kind of arsenic.

சரசம், இனியகுணம், complaisance, courteousness. 2. தேக்கு, (*M. Dic.*) the teak tree. 3. காம சேஷ்டை, wanton sport.

சரசா, சரச்சா, } சரகாண்டத்தின்சா, sine of ascensional difference.

சரசி, இனியகுணி, one of a pleasant temper. 2. பரியாசக்காரன், a jester, a humorous person.

சரசு, குளம், a tank, a large pond, a lake.

சரசுவதி, கலைமகள், Saraswati, wife of Brahma, the Goddess of speech, eloquence, music and literature—She is fancied to reside on the tongue of Brahma, also on those of poets and orators. 2. ஓராறு, the name of a river. 3. குணவதி, (*fig.*) an amiable, excellent woman.

சரசுவதிமாலை, ஒரு பிரபந்தம், the name of a work on astrology.

சரச்சிறு, குறிஞ்சா, an edible and medicinal creeper, vomiting swallow wort.

சரடம், ஓணான், a lizard, chameleon.

சரடு, நூல்முதலியவற்றிழை, a thread twine, yarn, &c.

சரணம், அடைக்கலம், shelter, refuge, protection, asylum. 2. கால், foot, leg. 3. மயிற்றோகை, a peacock's tail. 4. மருதநிலத்தூர், agricultural towns or villages. 5. வீடு, house. 6. சந்து முதலிய செய்யுளடி, a line in poetry ; also any one of the three or more lines or stanzas of an ode that occurs between the repetition of the chorus. 7. நமஸ்காரம், homage, reverence, worship at the foot of a great person. 8. மயில், a peacock. 9. அரசு, a tree, the Ficus religiosa, Pepul or poplar-leaved fig-tree—forming one of the nine kinds of wood used in burnt offerings.

சரணுகதம், சரணுகதி, } புகலடைதல், taking refuge with one application for protection.

சரணுயுதம், கோழி, a cock whose feet is its weapon—the gallinaceous fowl.

சரண், அடைக்கலம், a refuge, asylum, protection. 2. கால், foot.

சரண்புகல், அடைக்கலம் புகல், taking refuge.

சரதம், மெய், veracity, faithfulness.

சரதலம், கிரககதியறிகைக்குறி, (*in astron.*) an element required for computing the equinoctial points and the daily motion of the planets.

சரதலவிநாடி, கிரககதியறிகைக் குறியை விளக்கும் விநாடி, numbers in விநாடி, expressing the above elements.

சரநூல், சரகாஸ்திரம், the science of predicting events by one's breath as it falls on the hand from either nostril or both.

சரபம், எண்காற்புள், a fabulous eight-legged bird, regarded as the foe of the lion and as inhabiting the snowy mountains. 2. குறும் பாடு, the woolly sheep. 3. வரை யாடு, the mountain sheep.

சரமணி, அரைப்பட்டகை, a waist-belt with tinkling bells.

சரமம், முடிவு, end, finality, ultimate state, death.

சரமாதம், (*in astrol.*) மேடம், கடகம், விருச்சிகம், மீனம் என்னும் சராராசிகளைச் சேர்ந்த மாதம், any of the four months corresponding with

the signs Aries, Cancer, Scorpio and Pisces.

சரம், அம்பு, an arrow. 2. கொறுக்கை, a kind of reed or rush. 3. நடையுள பொருள், a living or movable being, opposed to அசரம். 4. நாணல், the reed. 5. மணிவடம், a string of beads, pearls, &c. 6. மாலை, wreaths of flowers tied or strung singly. 7. அசைவு, motion, locomotion. 8. சுவாசநடை, the passage or flowing of the breath in connexion with the art of fore-telling by it. 9. சுவாசம், the breath. 10. One of the three air vessels of the body, according to the yoga philosophy, sacred to the God of fire. 11. (*in astron.*) உத்கிரமச்சா, versed sine of an arc. 12. சரகாண்டம், ascensional difference. 13. தடாகம், a tank, pond.

சரயு, சரயு நதி, (காந்.) Serju river, deemed sacred.

சரவணபவன், குமரன், he who was born and brought up in the சரவணம், pond—Skanda.

சரவணம், கொறுக்கை, rush. 2. நாணல், reed. 3. தாமரை, the lotus. 4. ஒரு தடாகம், (காந்.) the name of a sacred pond or lake in the vicinity of the Himalaya mountains.

சரவை, மாலை, a wreath, garland.

சரளம், ஒழுங்கு, order, regularity. 2. தகுதி, fitness, uprightness, probity, honour. 3. சிவதை, (*M. Dic.*) a creeping medicinal plant, a substitute for jalap—Convolerilus turpethum.

சரளி, சப்தசுரங்களையு மாரோகணமவரோகணமாகப் பயிலல், practising the seven ascending or descending notes in music.

சரற்காலம், மாரிகாலம், the rainy season.

சராகம், வண்டு, a beetle.

சராகை, வட்டில், a kind of brass plate, a cup, a drinking vessel.

சராசந்தன், ஓரரசன், a valiant king and warrior sovereign of Maghada and a foe to Krishna. He was slain by Bhima in duel. Note—He was thus named from the fabulus story that he was born in two halves and thrown out of the walls of the city, but these being found and brought together by the demoness Jara, the two united halves became a child.

சராசரம், நடையுள்ளதுமில்லதும், things movable and immovable.

சராசனம், வில், that which throws out an arrow—a bow.

சராயு, கர்ப்பாசயம், womb, uterus.

சராயுசம், கருப்பையிற்பிறப்பன, that which is formed in or produced from the womb; viviparus animals; one of the four classes of creatures according to the mode of production.

சராவம், அகல், a bowl, a shallow saucer-like vessel. 2. சலாகை, anything long and thin—as a lath, a bar, a rib, &c.

சரி, ஒப்பு, agreement, conformity, similarity. 2. கூட்டம், collection, multitude, flock. 3. கைவளை, a kind of bracelet. 4. *imp.* சரியென்னேவல், lean, decline from the perpendicular, decline, fall on one side, cause to decline from the perpendicular, slant, slope, incline. 5. மலைச்சாரல், declivity or side of a mountain. 6. வழி, way, road. 7. ஒருதன்மை, indentity.

சரிகை, சரிதல், slanting, sloping, reclining. 2. பொன் முதலியவற்றின் சரிகை, gold or silver thread, fringe or embroidery.

சரிதம், சரித்திரம், history, biography, a course of actions, doings, adventures or events.

சரிதல், சாய்தல், leaning, declining from the perpendicular reclining.

சரிதை, ஒழுக்கம், good behaviour, good conduct. 2. சரித்திரம், history, story, biography. 3. நாற்பாதங்களினொன்று, a prescribed course of observances constituting

the first of the four degrees in the Saiva system.

சரித்தல், சரியச்செய்தல், causing to slant, slide, slip, roll down, &c. 2. சஞ்சரித்தல், dwelling, sojourning.

சரித்திரம், ஒழுக்கம், instituted practice or observances. 2. சரிதம், a course of actions, a series of events in one's life, history, story, biography.

சரித்திரை, புளியமரம், tamarind tree.

சரித்து, நதி, river—particularly the river Ganges.

சரிபம், அசோகு, the Ashoka tree—Uvaria longifolia.

சரியம், சிறுநன்னாரி, a plant—a variety of Periploce Indica.

சரியை, ஒழுக்கம், good behaviour. 2. பிச்சை, alms. 3. as சரிதை.

சரிவு, சாய்வு, recumbency, slope, declivity.

சரிளப்பா, வெண்கடுகு, white mustard (*M. Dic.*).

சரிற்பதி, சமுத்திரம், the ocean, the sea—the lord of rivers.

சரிற்புதல்வன், பீஷ்மன், Bishma, as the son of the Ganges.

சரீரத்திரயம், முத்தேகம், a three-fold enumeration of bodies, as given in the Agama, viz., தூலசரீரம், சூக்குமசரீரம் and காரணசரீரம்—or according to another classification, யாதனுசரீரம், பூதனுசரீரம் and பரிணுமசரீரம்.

சரீரம், உடல், the body, the living human body, the tenement of the soul.

சரு, சோறு, boild rice. 2. தேவருணவு, an oblation of rice ; pulse &c., boiled with ghee and milk, for presentation to the gods in the daily temple worship and in burnt offerings.

சருகு, உலர்ந்த இலை, dry leaves.

சருக்கம், காப்பியச் செய்யுட் கூறுபாடு, a chapter or section in an epic poem &c.

சருச்சரை, எண்வகை யூறுகளிலொன்று, one of the eight sensations conveyed by the touch—roughness, unevenness.

சருச்சை, சர்ச்சை, } இகழ்ச்சி, censure, abuse.

சருத்தி, தேரிடக்கியம், the streamer or flag of a car. 2. விருதுக்கொடி, a distinguishing banner, a flag.

சருப்பதோபத்திரம், மிறைக்கவியினொன்று, a kind of stanza so contrived as to convey a meaning, whether the lines be read backwards, forwards or in several other directions.

சருப்பம், பாம்பு, a snake, a serpent.

சருப்பராசி, நாணல், the bulrushes (*M. Dic.*).

சருப்பராச்சியம், சங்கங்குப்பி, a shrub with an offensive smell, as பீநாறி.

சருமம், தோல், skin, hide, leather, &c. 2. தோற்பாய், skin for sleeping on, commonly of an antelope or a tiger, used by students or ascetics. 3. புளியம்புறணி, (*M. Dic.*) the bark of the tamarind tree.

சருமர், சக்கிலியர், workers in skins, leather, &c., shoe-makers.

சருமன், சற்குணன், an honorific epithet, affixed to names among Brahmans, meaning the auspicious, happy, lovely, dear, &c.

சருவசங்கப்பரித்தியாகம், முற்றத்துறத்தல், relinquishing all society.

சருவசாட்சி, கடவுள், God— as the witness of all things, the searcher of all.

சருவசாதகம், வேங்கை, the kino tree—Ptrocarpus bilobus.

சருவசித்தி, அஷ்டமாசித்தி, the eight superhuman powers.

சருவசித்து, ஒரு வருடம், the twenty-first year of the Hindu cycle.

சருவதா, எப்பொழுதும், at all times.

சருவதாரி, ஒரு வருடம், the twenty-second year of Hindu cycle.

சருவம், எல்லாம், all, universality, entireness, the whole. 2. பானை, a brass or copper pot.

சருவரி, இருள், darkness, gloom.

சருவல், சரசஞ்செய்தல், dallying, fondling, &c.
சருவாணி, பார்வதி, a name of Parvati.
சருவேச்சுரன், கடவுள், the Supreme Being.
சரேந்திரன், வில்லில் வல்லவன், one skilled in archery.
சரேனெலல், விரைவுக்குறிப்பு, passing swiftly with a hurried rushing sound.
சரை, நரை, greyness, as of hair, hoariness. 2. ஓரரக்கி, the name of a demoness who produced சராசந்தன், by uniting the two halves in which he was born.
சரோசம், சரோருகம், } தாமரை, a lotus.
சரோருகன், பிரமன், Brahma, the lotus born.
சர்க்கம், சருக்கம், a section, chapter.
சர்ப்பம், பாம்பு, a serpent.
சர்வதா, எப்பொழுதும், at all times.
சலகந்தி, சகஸ்திரபேதி, a kind of ochre, a coarse red ochre.
சலகம், நீராடல், bathing.
சலகாமி, நீரிலஞ்சாதிறங்குங்குதிரை, a horse that readily enters water.
சலக்கிரீடை, நீர் விளையாட்டு, sporting or gambling in water.
சலக்கு, நவட்சாரம், sal-ammoniac.
சலக்கூர்மை, அமரியுப்பு, urinary salt.
சலசம், தாமரை, what is born in the water—the lotus.
சலசயனன், விஷ்ணு, Vishnu—*lit.* he who sleeps on water.
சலசரம், மீனவிராசி, pisces of the zodiac. 2. மீன், that which moves in the water—a fish in general.
சலசருப்பிணி, நீரட்டை, a leech.
சலசலப்பு, சலசலெனல், } ஒலிக்குறிப்பு, reiterated sounds.
சலசலோசனன், திருமால், the lotus-eyed—Vishnu.
சலசூசி, as கலசருப்பினி.
சலசை, இலக்குமி, Lakshmi.
சலஞ்சலம், வலம்புரிச்சங்கு, a fanciful kind of conch of super-eminent quality, said to be found in beds, and surrounded by one thousand other conches turning to the right, being of great value.
சலணி, வால்மிளகு, long-pepper.
சலதரம், குளம், that which holds or contains water—a tank, a pond. 2. மேகம், a cloud.
சலதளம், அரசு, a tree, the Ficus religiosa.
சலதி, கடல், what holds water—the sea, ocean.
சலத்தம்பம், சலத்தம்பனம், } கலைஞான மறுபத்து நான்கினொன்று, the art of counteracting the yielding quality of water so as to be able to walk on its surface.
சலநிதி, கடல், a receptacle of water —, the sea, ocean.
சலபதி, வருணன், Varuna, as lord of the waters.
சலபம், விட்டிற் பறவை, a grasshopper, a locust.
சலமலம், நீர்ப்பஞ்சு, the sponge.
சலம், அசைவு, motion, mobility, wavering. 2. சலஞ்சாதித்தல், cherishing or harbouring malice. 3. தணியாக்கோபம், implacable hatred, cherished anger, malice. 4. நீர், water. 5. பொய், falsehood. 6. முட்பன்றிமுள், a porcupine's quills.
சலம்புரி, சங்கு, the couch-shell (*M. Dic.*).
சலரசம், உப்பு, salt.
சலராகம், வெண்சிவப்பு, pale red, reddish colour.
சலராசி, கடல், collection of water—the sea, ocean.
சலலம், சலலி, } முட்பன்றி முள், a porcupine's quill.
சல்லியம், முட்பன்றி, a porcupine.
சலவகு, இலவம்பிசின், the gum of the silk-cotton tree.
சலவர், நெய்தநிலமாக்கள், seafaring men—inhabitants of maritime districts.

சலனம், அசைவு, motion, shaking, tremulousness. 2. காற்று, wind. 3. கால், foot, leg.

சலனன், காற்று, one in motion—wind.

சலன், கால், foot, leg.

சலாகு, சலாகை, a surgeon's probe, a kind of stake, rod, pin, peg, bar, spike, a ramrod.

சலாகை, அகன்மணி, a flat gem or bead, a precious stone of a superior kind. 2. ஈட்டி, a spear, a javelin, dart. 3. ஊசிக்காந்தம், the magnet or loadstone. 4. சலாகு, a surgeon's probe, a kind of stake, rod, pin, peg, bar, spike, &c., a ramrod.

சலாங்கு, பொய்யாப்புள், a species of water-bird, the gallinite.

சலாசயம், நீர்ப்பை, (*in phys.*) the receptacle of urine, the bladder.

சலாம், வணங்கல், peace, prosperity, a term of salutation, salam.

சலித்தல், இளைத்தோய்தல், being wearied, exhausted, spent, tired. 2. ஒலித்தல், sounding. 3. சலனமுறல், waving as the wind, being in motion, tremulous.

சலியாமை, அசைவின்மை, immobility.

சலிலம், நீர், water.

சலினி, திப்பிலி, long-pepper (*M. Dic.*).

சல்லகி, ஆத்திமரம், mountain ebony—Bauhinea. 2. இலவு, silk-cotton tree.

சல்லடை, தானிய முதலியவற்றைச் சல்லுங் கருவி, a sieve, riddle, bolter.

சல்லபம், முட்பன்றி, (*prop.* சல்லகம்.) a porcupine.

சல்லரி, பம்பைமேளம், a kind of drum. 2. கைத்தாளம், large cymbals.

சல்லாபம், சம்பாஷணை, conversation, dialogue familiar discourse, conference.

சல்லி, தூக்கங்கள், hangings, short pendent ornaments.

சல்லியகரணி, ஆயுதத்தாற்பட்டகாயமாற்று மருந்து, a feigned medicament for healing wounds from spears, darts, javelins, &c.

சல்லியம், ஆயுதநுனிமுள், the sharp point or head of a weapon. 2. எலும்பு, a bone. 3. செஞ்சந்தனம், a kind of red wood used medicinally, also in offerings to the sun. 4. பாணம், an arrow. 5. முட்பன்றி, a porcupine.

சல்லியன், சுக்கிரன், the planet Venus. 2. நகுலசகாதேவர்மாமன், the maternal uncle of the two Pandava princes, Nakula and Sahadeva, a king.

சவட்டல், அழித்தல், destroying, subverting. 2. துவட்டல், bending, warping, making flexible. 3. மெல்லல், masticating, chewing.

சவம், சீக்கிரம், swiftness, speed, velocity. 2. பிசாசம், a demon, vampire. 3. பிணம், a corpse, a carcass.

சவரம், சாமரம், the tail-hairs of the bosgrunniens used as a fan, a chowry.

சவரர், வேடர், hunters in mountainous districts, wearing peacock's feathers and other wild decorations, *lit.* carcass-eaters.

சவரி, சாமரம், the tail-hairs of the bosgrunniens, used as a fan, a chowry. 2. குறட்டை, a creeper bearing a red fruit.

சவரிலோத்திரம், ஒரு மருந்து, the pulp of the குறட்டை, fruit, used medicinally.

சவலம், பயன், benefit, profit, advantage, as சபலம்.

சவலை, சவலைவெண்பா, a kind of metre, a species of the வெண்பா, verse. 2. இளமை, tenderness, immaturity.

சவளம், ஈட்டி, a spear, a bearded dart or lance. 2. சங்கபாஷாணம், a kind of native arsenic.

சவளை, வங்கமணல், the lead sand (*M. Dic.*).

சவற்சலம், கல்லுப்பு, salt in lumps (*M. Dic.*).

சவனிகை, இடுதிரை, a curtain or screen before actors just ready to advance on the stage.

சவி, அழகு, beauty, fairness. 2. ஒளி, light, lustre, splendour, brilliance. 3. சரமணிக்கோவை, a girdle of a number of strings of beads or bells. 4. செவ்வை, rectitude, correctness, propriety.

சவிகம், விஷ்ணுகரந்தை, the globe flower—Spæranthus Indica.

சவிகற்பக்காட்சி, விகற்பக்காட்சி, (*in the agama logic*) discriminating knowledge.

சவிகற்பம், விகற்பம், discrimination, distinction (சிவ. சி.).

சவிசங்கம், சவிசங்கவாதம், } ஒரு வாதரோகம், one of the eighty kinds of flatulency in the human system (*M. Dic.*).

சவிதா, சூரியன், the sun.

சவித்திரு, துவாதசாதித்தரிலொருவன், one of the twelve suns so called.

சவுசம், as சௌசம், cleanliness, purity.

சவுசன்னியம், see சௌசன்னியம்.

சவுண்டி, திப்பலி, long-pepper (*M. Dic.*).

சவுபாக்கியம், வாழ்வு, auspiciousness, good-fortune. 2. நித்தியயோகத்தொன்று, the fourth of the astrological yogas.

சவுமம், சிற்பநூன் முப்பத்திரண்டிலொன்று, one of the thirty-two shasters which teach architecture and other mechanical arts.

சவை, அம்பலம், an assembly room, a place of assembling. 2. கூட்டம், an assembly, meeting. 3. புலவர் சங்கம், poets, literati; society or assembly of the learned.

சவைமகள், மிதுனவிராசி, Gemini of the zodiac.

சவ்வியசாசி, அர்ச்சுனன், one famous for drawing the bow with his left hand—Arjuna.

சவ்வியம், இடப்பக்கம், the left hand, the left side, opp. to அபசவ்வியம்.

சவ்வீரம், ஒரு தேசம், a district in the north-west of India. 2. ஒரு மருந்து, a strong compound medicine of quicksilver, sulphur, alum, ammonia, &c., sublimated.

சழக்கு, குற்றம், fault. 2. ஒலிக்குறிப்பு, splash, gush. 3. அறியாமை, ignorance. 4. பொய், lie, falsehood, illusion.

சளகந்தம், வசம்பு, calamus.

சளசளெனல், ஈரடுக்கொலிக்குறிப்பு, sounding, repeatedly, pattering, as falling rain; rushing, gushing, as a stream; pouring water with a splash.

சளம், பொய், falsehood. 2. வஞ்சனை, fraud, circumvention.

சளுகம், அட்டை, leeches in general.

சளுக்குவேந்தர், சாளுவவேந்தர், kings of the Salava country; also tributary princes.

சறுக்கல், வழுக்கல், sliding, slipping, as in mud or from a tree.

சறுதாசம், வேங்கை மரம், a timber-tree—Pterocarpus marsupium.

சற்காரம், உபசாரம், kindness, beneficence, hospitality, civility.

சற்சங்கம், நல்லோர் கூட்டம், good society.

சற்சலம், தெளிநீர், pure water.

சற்சுகாதி, பெருமருந்து, a twining plant—Indian Birthwort—Aristolochia Ind. (*M. Dic.*).

சற்பாத்திரம், ஒழுக்கமுடையோன், a worthy, pious, virtuous man—literally a good vessel.

சற்று, அற்பம், littleness, smallness.

சன்மானம், உபசாரம், complaisance, civilities, honour, respect.

சன்மித்தல், பிறத்தல், being born, generated; transmigrating.

சன்மினி, காளியேவல் செய்பவள், a female attendant of Kali.

சன்னகம், போர்க்கவசம், armour for the body, mail, either of iron or thick quilted cotton.

சன்னி, சீதநோய், apoplexy, affection of the brain, paralysis, convulsions.

சன்னியம், மரமஞ்சள், a medicinal plant, a bitter root tree, turmeric (*M. Dic.*).

சன்னிரோதனம், தடை, hindrance, check, obstruction.

சா

சா, ஓரெழுத்து, a compound letter composed of ச் and ஆ. 2. சாவென்னேவல், *imp.* die, perish. 3. மரணம், death, mortality. 4. (*in astron.*) the chord of an arc; *but commonly used for* அர்த்தச்சா —the sine of an arc. 5. an equation of the centre—as மந்தச்சா. 6. கற்கிச்சாமுதலியன, the annual parallax of a planet.

சாகசம், மெய்மை, truth, certainty. 2. யானை, elephant. 3. வீரம், boldness, bravery, fortitude, daring. 4. ஒரு பட்சி, a kind of bird said to clean the crocodile's teeth.

சாகதன், வீரன், (correctly சாகசன்.) a man of bravery and strength (பார.).

சாகமனம், உடன்கட்டையேறல், concremation—(compare சகமனம்).

தண்டம், அரசன் கொடுங்கோன்மை யானிறையிறுத்தல், unjust tax, exorbitant impost. 2. ஊன்று கோல், a staff, walking stick. 3. ஒரு புருஷப்பிரமாணம், the height of a man or four cubits. 4. குடைக் காம்பு, handle of an umberlla or parasol. 5. தண்டிப்பு, punishment, castigation, chastisement, correction—as one of the four modes of dealing with a hostile power. 6. நாடு, country. 7. படை, army. 8. பண்டாரம்,

stores. *9.* பற்றுக்கோடு, support, stay, dependence. *10.* யானைத் துதிக்கை, the trunk of an elephant. *11.* யானைசெல்வழி, an elephant's track or way. *12.* வணங்கல், obeisance, homage, reverence to a superior, adoration, worship. *13.* அபராதம், fine, amercement, penalty. *14.* மூவகை யறத்திலொன்று, one of the three kinds of charity.

தண்டலை, ஒரூர், the name of a town. *2.* சோலை, a grove, forest. *3.* பூந் தோட்டம், flower garden.

தண்டன், வணங்கல், obeisance, homage, reverence to a superior, especially to a guru. *2.* கடவுள் வணக்கம், worship, adoration. *3.* நமன், Yama.

தண்டாகாரம், (*in Hindu astronomy*) the arranging of sea-shells (which are used for numbers) in a line beginning with units up to tens, hundreds &c., or numbers placed one after another according to their local value-oppos. to சர்ப் பாகாரம்.

தண்டாச்சிறப்பினள், சரச்சுவதி, she who possesses perpetual excellency—Sarasvati, the consort of Brahma.

தண்டாமை, நிலைநீங்காமை, steadfastness.

தண்டாயுதபாணி, குமரன், an epithet of Subramanya, as worshipped at Palani.

தண்டாயுதன், ஐயனார், the club-armed—Aiyanar. *2.* வயிரவன், Bhairava. *3.* வீமன், Bhima.

தண்டி, ஒரு புலவன், a celebrated poet, one of the nine gems or celebrated authors in the court of king Boja, and author of a work on rhetoric. *2.* தண்டியென் னேவல், *imp.* punish, chastise. *3.* தண்டியடிகள், one of the sixty-three devotees of Siva, said to have been born blind, and afterwords to have received sight. *4.* as தண்டேசன்.

தண்டிகை, சிவிகை, a superior kind of palanquin used on state occasions.

தண்டித்தல், கண்டித்தல், chastising, castigating, punishing for correction. *2.* வெட்டல், cutting off, mutilating, hacking.

தண்டியலங்காரம், ஒரு நூல், a treatise on rhetoric comprising thirty-five figures.

தண்டு, ஓந்தி, chameleon. *2.* சிவிகை, palanquin. *3.* சேனை, army, troops, train. *4.* தடி, stick, cudgel, bludgeon, staff of an ascetic. *5.* தண்டாயுதம், a club, as a weapon. *6.* தண்டென் னேவல், *imp.* collect, exact, gather, recover debts, rents, taxes, dues, contributions, &c. *7.* துளை யுடைப்பொருள், a tube, anything tubular. *8.* நமனாயுதம், the weapon of Yama. *9.* படை, army, troops, train. *10.* பூவிதழ், petal of a flower. *11.* மிதுனராசி, Gemini of the zodiac. *12.* மூங்கில், bamboo. *13.* வரம்பு, ridge, embankment in fields, causeway. *14.* வீணை, the Indian lute.

தண்டுதல், தண்டல், collecting, gathering, recovering debts, rents, taxes, &c.

தண்டுலம், அரிசி, rice.

தண்டேசன், **தண்டேசுரன்**, } சிவன்றொண்டரறு பத்துமூவரிலொருவன், one of the sixty-threefamed devotees of Siva.

தண்டை, காலணி, tinkling ankle-rings. *2.* பிரப்பங்கேடயம், rattan shields.

தண்ணடை, நாடு, a country. *2.* பச் சிலை, green leaves, foliage, herbage. *3.* மருதநிலத்தூர், a village in an agricultural district.

தண்ணம், ஒருகட்பறை, the one-headed drum. *2.* காடு, jungle, forest. *3.* குளிர், coldness, frigidity. *4.* பறைப்பொது, drum in general. *5.* மழு, battle-axe.

தண்ணவன், சந்திரன், the cool-rayed—the moon.

தண்ணளி, கருணை, mercy, tenderness, kindness, benevolence.

தண்ணீர்விட்டான், ஒரு பூடு, a kind of plant, a linar-leaved shrub—Asparagus racemosa.

தண்ணுமை, உடுக்கை, a small drum tapering from each end, forming a small neck in the centre. 2. உறுமிமேளம், a kind of drum that causes murmuring sound. 3. ஒருகட்பறை, the one-headed drum. 4. பேரிகை, a kettle drum. 5. மத்தளம், a kind of drum.

தண்ணெனல், குளிர்தல், being cool, refreshing.

தண்மை, இகழத்தகுபொருள், a vile thing, worthlessness. 2. எளிமை, meanness, inferiority. 3. குளிர்ச்சி, coldness, freshness. 4. தாழ்வு, lowness, depth. 5. புல்லறிவு, shallowness, feebleness of mind, depravity, perversion of intellect. 6. சாந்தம், calmness, self-command, self-possession, tranquillity. 7. இன்பம், pelasantness, agreeableness, that which is gratifying to any of the senses.

ததம், அகலம், width, breadth, expanse.

ததல், நிலை, stability, firmness, durability.

ததாகதன், புத்தன், Buddha.

ததாளரம், அந்தரூபம், that shape.

ததி, தயிர், curds, coagulated milk. 2. பருவம், season, opportunity, a fit time.

ததிசி, ததீசி, } ஒரு முனிவன், the name of a rishi, who, on the application of the Gods, gave his backbone as a weapon to destroy an asura, invulnerable to other weapons.

ததும்பல், தளும்பல், wabbling as water in a vessel. 2. நிறைதல், becoming full, overflowing. 3. பெருகுதல், increasing.

ததைதல், மிடைதல், being narrow. 2. வெளிப்படாது நெருங்கிநிற்றல், being thick, close together, crowded.

தத்தம், ஈகை, gift, present, donation, grant, &c.

தத்தரம், நடுக்கம், tremulousness, quivering. 2. விரைவு, overhastiness, flurry.

தத்தல், தாண்டல், leaping, jumping, moving by jerks and starts.

தத்திகாரம், பொய், a lie, falsehood.

தத்தியம், மெய், truth.

தத்துவக்கட்டளை, அங்காதி பாதம், Hindu physiology.

தத்துவத்திரயம், முப்பதார்த்தம், a metaphysical triad—God, spirit, matter. 2. The three classes of faculties or powers, i.e., ஆத்தும தத்துவம், சிவ தத்துவம் and வித்தியாதத்துவம்.

தத்துப்பிரகாசம், தத்துவவிளக்கம், } works on metaphysics, physiology, &c.

தத்துவம், உண்மை, substantialness, existence, reality. 2. இயற்கை, the real or essential nature of things corporeal and spiritual. 3. பிருதுவி முதலிய கருவிகள், elementary principles, property, qualities, constituent principles in nature; operations whether of deity or of creatures, including elements, bodily and mental organs, faculties, matter, &c. 4. தத்துவநூல், physiology, natural philosophy, works treating on physics.

தத்துவவாதம், தத்துவமே கடவுள் என்னும் சமயம், a system of religion that regards nature as God.

தத்துவன், அரன், the lord of all powers—Siva. 2. அருகன், Argha of the Jainas.

தத்துவாகமம், அங்காதிபாதம், a book of physics, chiefly anatomical.

தத்துவாதீதன், கடவுள், God as not dependent on powers and faculties.

தத்தை, கிள்ளை, a parrot. 2. முன் பிறந்தாள், an elder sister.

தநயன், மகன், a son.

தநயை, மகள், a daughter.

தந்தக்காரி, வாதமடக்கி, a tree—Mimosa.

தந்தசூகம், பாம்பு, fanged reptile—snake.

தந்ததாவனம், பற்கொம்பு, a tooth-brush or fibrous stick used for cleaning the teeth.

தந்தம், பல், tooth, fang. 2. யானைக் கொம்பு, an elephant's tusk.

தந்தாவளம், யானை, that which has tusks—an elephant.

தந்தி, ஆண் யானை, a male elephant. 2. யாழ்நரம்பு, strings or wires for musical instruments.

தந்திமுகன், விநாயகன், Ganesa, as elephant faced.

தந்திரகலை, தந்திராகமம், } ஆகமத்தோர்பிரிவு, one of the divisions of the agamas, treating on rites, &c. 2. Study of the agamas with attchment, confidence and understanding.

தந்திரபாலன், சேனாதிபதி, general of an army.

தந்திரம், உபாயம், contrivance, pretext, expedient, means, scheme. 2. நூல், treatise—scientific, literary or religious. 3. படை, army, troops, forces. 4. யாழ்நரம்பு, wire or string of a lute, guitar, &c. 5. ஆகமநூல், a set of religious works of the Siva sect, the *Tantras*, inculcating rites and ceremonies.

தந்திரர், கந்தருவர், celestial musicians.

தந்திரவுத்தி, நூலுக்குள்ள பதின்மூன்று விகற்ப நடையிலொன்று, approved methods of teaching on a subject embracing chiefly thirty-two particulars.

தந்திரி, மந்திரி, a king's minister. 2. யாழ்நரம்பினோசை, the sounds of the lute. 3. யாழ்நரம்பு, strings for musical instruments. 4. படைத்தலைவன், a commander of an army.

தந்திவீழியோன், சிவன், he who is covered with an elephant's skin—Siva.

தந்து, கல்வி நூல், scientific or literary treatises, science. 2. பஞ்சி நூல், thread, string.

தந்துரை, பாயிரம், preface, introduction, as supplying what is not given in the body of the work.

தந்துவர், தந்துவாயர், } நெய்வோர், weavers.

தந்தை, தகப்பன், father.

தபசி, தவத்தோன், a devotee, an ascetic, a recluse, a religious mendicant.

தபசு, see தவசு.

தபதியர், கம்மாளர், artificers. 2. தச்சர், carpenters.

தபம், தவம், austerity, penance, self-mortifications, bodily tortures. 2. மாசி மாதம், the month of February.

தபனம், வெப்பம், heat.

தபனன், சூரியன், the sun. 2. நெருப்பு, fire, the God of fire.

தபுதல், கெடுதல், perishing, coming to an end. 2. சாதல், dying.

தபுதாரம், தபுதாரநிலை, } (*in love poetry*) மனைவிக்காகப் புலம்பல், a husband lamenting his lost wife.

தபோதனர், முனிவர், hermits, sages.

தபோலோகம், மேலேழுலகத்தொன்று, one of the seven upper worlds.

தபோவனம், a sacred forest frequented by ascetics.

தப்பு, குற்றம், fault, error, inadvertence, inaccuracy. 2. தப்பென்னேவல், *imp.* miss a mark, fail, err, mistake, be frustrated, go wrong, escape. 3. பொய், falsehood, lie. 4. ஒரு பறை, a small kind of tabour.

தமசு, இருள், darkness. 2. தாமச குணம், the third condition of humanity, mental blindness, delusion.

தமப்பிரபை, ஏழுநரகத்தொன்று, the first of the seven hells.

தமம், இராகு, the ascending node. 2. இருள், darkness, gloom. 3. மனவிருள், mental darkness, as obscuring the soul and hiding duty from view. 4. மாயை, illusion. 5. புறக்கரணதண்டம், restraining the senses.

தமயந்தி, see தமையந்தி.

தமயன், see தமையன்.

தமரகம், சுவாசக்குழல், the windpipe.

தமரத்தை, ஒரு மரம், a tree bearing an acid fruit—Averrhoa carambola.

தமரம், அரக்கு, lac, gum-lac, sealing wax. 2. பேரொலி, great noise, din, roar.

தமரல், பெரிதொலித்தல், sounding, roaring, bellowing.

தமருகம், உடுக்கை, a little drum.

தமரோசை, கிலுகிலுப்பை, the name of a plant whose seeds rattle in the legumen, when ripe and dry—Crotolaria labumifolia (*R.*).

தமர், உறவோர், relatives, kindred. 2. தம்மவர், their people, their party. 3. (பிங்.) மூடர், the unlearned, the vulgar.

தமள், தம்மவள், a relation, said of a female.

தமனகம், மருக்கொழுந்து, a kind of shrub, Southern wood—Artemisia.

தமனகன், ஒரு நரி, a kind of jackal (பஞ்ச.).

தமனி, வன்னிமரம், a tree—Prosopis spicigera.

தமனியன், பொன், gold.

தமனியம், இரணியன், the name of an asura. 2. சனி, Saturn, the planet. 3. பிரமன், Brahma.

தமன், தம்மவன், a male relative.

தமாலம், இலை, a green leaf. 2. பச்சிலை மரம், a tree bearing white flowers and yellow fruit, something like an orange—Xanthochymus pictorius.

தமி, தனிமை, solitude, singlenss, being alone. 2. ஒப்பின்மை, being unequalled, matchless. 3. தாக்கின்மை, absolutness, independence. 4. உதவியின்மை, destitution, helplessness.

தமிசு, வேங்கைமரம், the Kino tree—Pterocarpus bilabus.

தமியம், கள், toddy, spirituous liquor.

தமியன், தனியன், a solitary person. 2. எளியன், a poor man.

தமிழோர், தமிழ்ப் புலவர், Tamil poets, the learned.

தமிழ், இனிமை, sweetness, pleasantness, melodiousness. 2. ஒரு பாஷை, the Tamil language. 3. நீர்மை, nature, state, quality, property.

தமிழ்நாடன், பாண்டியன், any king of the Pandya race.

தமிழ்மொழியாக்கம், தமிழ்ச் சொல் அமைதி, the formation of Tamil words.

தமிழ்வாணர், தமிழ்ப்புலவர், Tamil poets; (*lit.*) they in whom classical Tamil lives.

தமிழ்வேதம், நாலாயிரப்பிரபந்தம், a book of four thousand parts. 2. தேவாரம், திருவாசகம், the books தேவாரம், திருவாசகம், and the குறள், of the poet திருவள்ளுவர்.

தமை, (*in the Vedantic philosophy*) restraining the external organs.

தமையந்தி, நளன் மனைவி, the heroine in the poem Naishatham.

தமையம், அரிதாரம், a kind of arsenic.

தம், oblique of தாம். 2. சாரியையிடைச்சொல், a poetic expletive, used with the third person plural.

தமையன், அண்ணன், elder brother or elder male cousin, son of a paternal uncle or of a maternal aunt.

தம்பம், கவசம், armour, coat of mail. 2. சங்கீதம், concert of music. 3. தூண், post, pillar, column, obelisk. 4. நிலை, fixed posture, standing. 5. பற்றுக்கோடு, staff, support, walking stick. 6. யானைத் தறி, a post for tying an elephant.

7. தூண், post, column, pillar, obelisk.

தம்பலம், இந்திரகோபம், a scarlet insect, the cochineal—Coccinella. 2. தம்பலம், the red spittle when chewing betel or the refuse of the betel chewed.

தம்பலை, நிலவிலந்தை, a plant.

தம்பல், தம்பலம், refuse or spittle of chewed betel.

தம்பனம், அசைவறநிறுத்தல், stopping, restraining, hindering the power of fire; stopping a flow of water or blood; checking the ferocity of wild beast; causing the person or spirit to stand immovably in a place; suppressing bodily faculties; depriving one of the power of speech, action, motion; suspending natural qualities.

தம்பி, தம்பியென்னேவல், *imp.* stop, check, suspend, restrain, counteract by magical incantation. 2. பின்பிறந்தான், a younger brother.

தம்பித்தல், வாயுமுதலியவடக்கல், suspending or suppressing breath or respiration.

தம்மவன், தமன், a relative.

தம்மனை, தாய், a mother.

தம்மிலம், மயிர்முடி, a hair-knot.

தம்முன், தமையன், an elder brother.

தம்மை, தாய், mother.

தயங்கல், அசைதல், wavering, shaking, being flexible. 2. ஒளிசெய்தல், glittering, coruscating, shining.

தயாவிருத்தி, கிருபை மிகுதல், increase of grace. 2. தயாவிருத்தி பதினாலு, the fourteen acts of beneficence—The first seven relate to the soul, the other seven to the body. Of the soul: 1. களாபடனம், education, communication of knowledge. 2. வியாதாகாரம், comfort to the afflicted, consolation of mind. 3. நிர்க்கத்தண்டனம், (தண்டம் நீக்குகை) relieving from punishment; 4. சந்தேகவாரணம், removing doubts, contingency, &c. 5. அன்னியகுணசகனம், hearing of the superiority of others without envy and enduring their infirmities with patience. 6. பரதிருதூனயோகம், forgetting the evils inflicted by others and seeking to do them good. 7. பரார்த்த தேவப் பிரார்த்திதம், praying for the prsoperity and good of others—Of the body: 1. அன்னம், food, giving boiled rice. 2. பானம், drink. 3. அம்பரம், raiment. 4. மந்திரம், a dwelling. 5. தாசபாலனம், preservation from slavery. 6. காராமயத்திரிதய மோசனம், removing the three afflictions of captivity, viz., restraint from the calls of nature; corporal punishments, chains, fetters. 7. சவச்சேமம், burial—There are eight other kinds of benevolence: 1. பிறர்க்குப்பொருள் வரவையுவத்தல், rejoicing in a neighbour's wealth. 2. பிறர் செல்வம் பொறுத்தல், being content in seeing a neighbour's welfare. 3. பிறர் கருமத்திற் குடன்படுதல், assisting in others' business with interest. 4. தீமைக்கஞ்சல், fearing to do evil. 5. பிறர்கரும முடிக்க விரைதல், hastening to assist others. 6. பிறரையந்தீர்த்தல், removing others' doubts. 7. நன்மை கடைப்பிடித்தல், persevering in doing good. 8. பிறர்துயர்க்கிரங்கல், commiserating the distress of others; sympathizing with the afflicted.

தமாளம், கிருபை, grace, favour, benevolence, goodness, compassion.

தயாளன், கிருபையுடையோன், a compassionate person.

தயாளு, கிருபாளு, a gracious person, male or female.

தயினியம், see தைனியம்.

தயை, கிருபை, favour, clemency, kindness, tenderness, mercy, compassion.

தரக்கு, புலி, a tiger. 2. புலிக்குடத்தி, a hyena.

தரங்கம், நீர்த்திரை, a wave, billow. 2. கலக்கம், distress, sorrow.

தரங்கிணி, ஆறு, river.

தரங்கு, வழி, way, road, path.

தரணம், தரித்தல், holding, bearing, supporting, possessing. 2. தாண்டல், crossing over, passing, going across.

தரணி, சூரியன், the sun. 2. பூமி, the earth. 3. மலை, a hill, mountain.

தரம், அச்சம், terror, fear, dread. 2. கூட்டம், company, assembly, party, herd, drove. 3. சமானம், likeness, equality, mediocrity. 4. பக்குவம், seasonableness, fitness. 5. மலை, hill, mountain. 6. வலி, power, strength, vigour.

தரல், தருதல், giving, bestowing, granting, begetting.

தரவு, கலிப்பாவினோறுப்பு, the first member of the கலிப்பா, verse. 2. தலைவன் கட்டளை, order of a master or superior. 3. பிடரி, nape of the neck.

தரளம், அசைவு, shaking, tremulousness. 2. திரட்சி, globularity. 3. முத்து, pearl.

தரன், அஷ்டவசுக்களிலொருவன், one of the eight classes of Gods.

தரர், ஒரு கசப்புக்கீரை, a low spreading bitter herb resembling chickweed. 2. சங்கு, a conch. 3. தரா, a mixed dark metal of copper and spelter or copper and zinc, one of the seven metals. 4. பூசநாள், the eighth lunar asterism. 5. பூமி, the earth.

தராங்கம், மலை, a mountain.

தராசு, துலாக்கோல், scales, steelyard, balances 2. பரணிநாள், the second lunar asterism.

தராதரம், மலை, hill, mountain.

தராதலம், பூமி, the earth.

தராபதி, அரசன், lord of the earth—a king, ruler.

தரிசனம், காட்சி, vision, sight, perception, view, sight of a great person, a deity, an idol. 2. கண்ணாடி, a mirror or looking glass. 3. மனக்காட்சி, mental illumination, spiritual knowledge, intellectual perception, spiritual attainment or acquisition.

தரிசனவேதி, தரிசனபேதி, } தாழ்ந்த லோகங்களைப் பொன்னாக்குமூலிகை, a kind of drug, by which the inferior metals are said to be changed into gold; adduced as an illustration of the transforming effects on the soul of the presence of the guru or of the deity in human form.

தரிசனாவரணீயம், அஷ்ட குற்றத்தொன்று, imperfection in sight—one of the eight imperfections of creatures.

தரிசனீயம், தரிசியம், } தோன்றுவது, that which is visible.

தரிசித்தல், காணல், seeing, visiting or obtaining sight of an idol, a king or other great person. 2. (தத்.) ஞானக்கணாற் காணல், perceiving with the spiritual faculty, discovering truth, comprehending divine things, especially the mysteries in the சித்தாந்தம்.

தரிஞ்சகம், அன்றில், the nightingale of India, much celebrated by poets, for attchment to its mate which it is said never to leave, nor long to survive.

தரித்தல், சுமத்தல், bearing patiently, enduring, toleration. 2. தங்கல், staying, abiding, halting, tarrying.

தரித்திரம், வறுமை, poverty, indigence, want, destitution.

தரித்திரி, பூமி, the earth. 2. வறியள், a poor woman.

தரிப்பு, see தரித்தல்.

தரியலர், தரியலார், } பகைவர், foes, enemies.

தரு, மரப்பொது, a tree in general.

தருக்கசிந்தாமணி, ஒரு நூல், a treatise on logic.

தருக்கம், நியாயம், reasoning, arguing, discussion. 2. பொருள், that which is known by a process of reasoning. 3. தருக்கவித்தை, the art of reasoning, logic dialectics. 4. திருஷ்டாந்தரம், demonstration, showing the truth of the matter.

தருக்கல், அகங்கரித்தல், being proud, vain, arrogant, supercilious, assuming. 2. களித்தல், being mirthful, jovial, elated.

தருக்கு, அகங்காரம், pride arrogance, ostentation, superciliousness, self-conceit. 2. களிப்பு, mirth, joviality, elation, liveliness. 3. தருக்கென்னேவல், *imp.* be proud, arrogant, mirthful, &c.

தருணம், இளமை, juvenility, youthfulness. 2. சமயம், proper season, opportunity, seasonable time.

தருணி, மங்கைப்பருவத்தாள், a girl from twelve to thirteen years of age inclusive.

தருதல், கொடுத்தல், giving bestowing, granting, bearing, producing.

தருப்பகன், மன்மதன், a name of Kama.

தருப்பசயனம், தருப்பைப் பாய், a mat of sacrificial grass. 2. தருப்பையிற்படுக்கை, sleeping on such a mat.

தருப்பணம், இன்பநிறைவுறச் செய்தல், satisfying, yielding full enjoyment. 2. ஒரு தாளம், a kind of cymbal. 3. கண்ணாடி, a mirror. 4. மந்திர நீரிறைக்கை, presenting water on a sacrificial grass, to the manes of a deceased person.

தருப்பை, குசை, a sacrificial grass, much used in Hindu worship—Kusa.

தருமகேத்திரம், குருக்கேத்திரம், a place near Delhi, where the Kurus and Pandavas fought.

தருமக்கிழவர், வைசியர்பொது, traders of three kinds (*lit.*) guardians of justice.

தருமதேவதை, அம்பாலிகை, the Goddess of virtue, born from the right breast of Brahma. 2. நந்தி, the vehicle of Siva in the form of a bull.

தருமநாள், பரணிநாள், the second lunar asterism.

தருமநூல், தருமசாஸ்திரம், works on law, ethics and jurisprudence, called Smriti; eighteen are in repute, named for the most part after their respective authors.

தருமபுரம், சைம்மினி, the city of Yama.

தருமம், அறம், charity, any charitable or meritorious act from which future good is expected. 2. தொழில், peculiar or prescribed duty, occupation, &c., according to the different ranks and classes in society, such as giving alms, &c., by the house-holder—administering justice, by kings—piety and performing rites, by Brahmans—courage, bravery in the soldier, &c. 3. நீதி, justice, right, equity, law.

தருமராஜன், அருகன், Argha. 2. தருமன், Yama, the regent of death. 3. பாண்டுமக்களின் மூத்தோன், the eldest of the Pandavas. 4. புத்தன், Buddha.

தருமன், யமன், Yama, the judge of the dead. 2. பாண்டுமக்களின் மூத்தோன், the eldest of the Pandavas.

தருவி, (*Probably a change of* சுருவை.) சட்டுவம், a kind of ladle.

தரை, பூமி, the earth, the world.

தர்க்கம், see தருக்கம்.

தர்ப்பகன், மன்மதன், the name of Kama.

தலத்தாது, நிலப்பனை, a kind of plant—Curculigo orchioides (*R.*).

தலம், இடம், place, site, position, location, space, room. 2. இலை, leaf, foliage. 3. உலகின்பொது, the world in general, any of the fourteen worlds. 4. பூமி, the earth.

தலன், as தலம், a place.
தலாகவம், போர்க்களம், battle-field.
தலை, ஆகாயம், the air, the ethereal regions. 2. ஆதி, origin, beginning, source, commencement. 3. இடம், place, location, position, site. 4. தலை, head. 5. தலைமை, priority, precedence, superiority. 6. பெருமை, greatness.
தலைத்திராணம், தலைச்சீரா, a helmet.
தலைநாள், அச்சுவினிநாள், the first lunar asterism.
தலைப்போடம், பொடுதலை, a plant, vervain—Verbena cuneata (Wild.).
தலைப்படல், எதிர்த்தல், encountering, attacking, assaulting.
தலைப்பெய்தல், கூட்டல், bringing together, uniting.
தலைமகள், தலைவி, lady, matron.
தலைமகன், புருஷன், the head of a household—a husband.
தலைமடக்கு, ஆதிமடக்கு, a repetition of the first word of a line.
தலைமை, முதன்மை, superiority, pre-eminence, headship, presidency, priority of rank, birth, office, &c.
தலையணை, தலையணை, a bolster, pillow, cushion.
தலையல், நீந்துபுனல், water of a swimming depth. 2. புதுப்புனல் வரவு, a freshet. 3. மழைபெய்து விடுதல், cessation of rain.
தலையாகுமோனை, அடிமோனைத் தொடை, rhyming of the first letter in each line.
தலையாகெதுகை, அடிதோறும் முதற் சீரின் முதலெழுத்தொழிய மற்றவை யொத்திருத்தல், in rhyme, similarity of the first class, in which all the letters except the initial of the first foot in each line through the stanza are the same.
தலையாயார், பெரியோர், chief persons, the eminent (நீதிநெறி.).
தலையுவா, அமாவாசியை, the new moon.
தலைவன், அண்ணன், an elder brother. 2. அரசன், a king, ruler, governor. 3. எப்பொருட்கு மிறைவன், the Deity, the Supreme Being. 4. குரு, a guru, priest. 5. புருஷன், a husband. 6. மூத்தோன், a superior, a senior.
தலில், தாய், a mother.
தவ, குன்றல், scarcity, as of rain, supplies of grain, &c. 2. மிகுதி, intensity, much.
தவசு, தவம், penance, religious austerities.
தவசுமுருங்கை, ஒரு பூடு, a medicinal plant—Justicia Tranquebariensis.
தவத்தர், முனிவர், ascetics of the higher class, Munis.
தவம், see தவசு.
தவர், முனிவர், exalted devotees. 2. வில், a bow.
தவர்தல், சிந்தல், spilling, shedding. 2. தப்புதல், stopping, failing, swerving.
தவலல், குறைதல், decreasing, diminishing. 2. கெடுதல், perishing, dying.
தவலோகம், மேலேழுலகிலொன்று, one of the seven upper worlds—the fifth.
தவல், குறைதல், being reduced, shrinking, diminution.
தவளம், வெண்மை, whiteness, white, ash-colour, grey.
தவளாங்கம், வெள்ளைமேனி, a white body.
தவளை, தவளை, a frog—Rama Temporaria. There are different species.
தவளோற்பலம், வெள்ளாம்பல், a flowering water-plant—white lily.
தவறல், கடத்தல், transgressing, failing in duty. 2. குறைதல், falling short, being deficient. 3. சாதல், perishing, dying.
தவறு, குற்றம், fault, blame. 2. தவறென்னேவல், *imp.* err, mistake, blunder, slip.
தவனகம், மருக்கொழுந்து, wormwood, improperly called Indian Southern wood—Artemisia austriasa.

தவனம், தாகம், thirst, especially from exposure to the heat of the sun.

தவனன், (*a change of* தபனன்) சூரியன், the sun. *2.* நெருப்பு, fire.

தவன், புருடன், a husband. *2.* தவசி, an ascetic.

தவாநிலை, தவறுநிலை, a firm condition.

தவாவினை, மலை, hill, mountain. *2.* முத்தி, termination of births, absorption, bliss.

தவிசு, தடுக்கு, a little mat for the floor, chair, &c. *2.* பாய், a mat. *3.* மெத்தை, mattress, a cushion.

தவிடு, தவிடு, bran.

தவித்தல், இளைத்தல், being distressed for want of water, food, &c., being wearied with thirst.

தவிர்தல், ஒழிதல், being omitted, excepted, dispensed with.

தவிர்த்தல், ஒழிவித்தல், omitting, excepting, dispensing with, terminating, bringing to an end, putting away.

தவில், ஒரு பறை, a kind of drum, a tabour.

தவுசெலம், முருங்கை, the Muringa tree—Hyperanthera Moringa, called horse-radish (*R.*).

தவுரிதகம், குதிரையின் பஞ்சகதியி னென்று, one of the five paces of the horse, trotting.

தவ்வி, சட்டுவம், a kind of ladle.

தவ்வை, அக்காள், elder sister. *2.* செவிலித்தாய், a nurse, a foster-mother. *3.* மூதேவி, the Goddess of misfortune, as the elder sister of Lakshmi.

தழங்கல், ஒலித்தல், sounding, resounding, roaring.

தழலல், அழலல், glowing, being very hot.

தழல், கவண், a sling. *2.* கார்த்திகை நாள், the third lunar asterism. *3.* கிளிகடிகோல், a corn-crack to scare away birds. *4.* தழலென் னேவல், *imp.* glow, shine with intense heat. *5.* தீ, live coals of fire, embers.

தழற்சி, அழற்சி, heat, glow, burning.

தழாத்தொடர், (*in gram.*) combination of such words as slightly affect the meaning from the interposition of an adjunct or ellipsis.

தழால், தழுவல், embracing, union.

தழிஞ்சி, சாய்ந்தார்மேற்படராமை, non-pursuance of a routed, fleeing army.

தழீஇந் தழீஇமெனல், clamoring, rattling, roar, as of a drum (நாலடி.).

தழுதணை, படர்தாமரை, a disease of the skin (*R.*).

தழுதாழை, வாதமடக்கி, a shrub whose leaves are used in medicine —Clerodendrom phlomoides.

தழுவல், தழுவுதல், adopting as an opinion, a course of life, &c., comprising, copulating.

தழை, இலை, leaf, foliage. *2.* தழை யென்னேவல், sprout, shoot forth, vegetate, thrive as vegetables. *3.* தளிர், sprout, shoot. *4.* பீலிக் குடை, a fan or bunch of peacock's feathers, used as an ornament. *5.* மயிற்றோகை, the tail of a peacock.

தழைக்கை, தழைதல், தழைத்தல், } தளிர்த்தல், sprouting, shooting forth, thriving as vegetables.

தளதளெனல், ஒலிக்குறிப்பு, being brilliant, glimmering, gaudy.

தளப்பம், ஒரு மரம், talipot tree—Corypha umbraculifera.

தளம், இலை, leaf. *2.* உப்பரிகை, a terrace-roof, any upper open room or balcony. *3.* ஜாடி, a jar, water-pot. *4.* சாந்து, mortar, plaster, sandal paste. *5.* படை, army. *6.* பூவிதழ், petal.

தளம்பல், ததும்பல், wavering, wabbling as water or a floating vessel. *2.* நடுங்கல், shaking, tottering, being unsteady.

தளர்ச்சி, தளர்தல், } சோம்பல், laziness.

2. சோர்வு, languor, lassitude, weakness, infirmity, depression of spirits.

தளவம், தளவு, } முல்லைக்கொடி, a climbing shrub—Jasminum sambac.

தளி, கோயில், a temple, a sacred shrine. 2. மழைத்துளி, rain drops. 3. விளக்குத்தண்டு, candle-stick, lamp-stand.

தளிகை, உண்கலம், an eating vessel.

தளிமம், அழகு, beauty, loveliness, grace. 2. மக்கட்படுக்கை, bed, couch, cot or any other contrivance for sleeping. 3. மெத்தை, mattress, bedding, cushion. 4. வீடுகட்டும்நிலம், ground prepared for the site of a dwelling.

தளிரடி, மெல்லடி, tender feet. 2. பெண், a female.

தளிரியல், பெண், a damsel.

தளிர், தழை, sprout, shoot, bud, an eye on twigs. 2. தளிரென்னேவல், *imp.* bud, germinate, shoot forth, sprout, vegetate.

தளிர்த்தல், துளிர்த்தல், budding, germinating, sprouting, vegetating.

தளை, ஆண் மயிர், men's lock of hair. 2. கால்விலங்கு, fetter, shackles for the legs. 3. காற்சங்கிலி, chains for the feet. 4. காற்சிலம்பு, foot-trinket. 5. தளையென்னேவல், *imp.* tie, bind, fasten, be fettered, tied, bound, &c. 6. யாப்புறுப்பு, the metrical connexion of the last syllable of any foot, with the first of the succeeding foot, one of the six constituent parts or elements of poetry.

தளைதட்டல், தளைதவறல், failing or being defective, as the metrical connexion in verse.

தளைதல், பிணித்தல், tying, binding, fastening, chaining.

தளைப்படுதல், சிறைப்படல், being imprisoned, taken captive.

தளைப்பொறுத்தம், தளையினிணக்கம், harmonious combination of the தளை in verse.

தள்ளல், தள்ளல், pushing, shoving, forcing forward, rejecting, dismissing, abolishing, deducting, excluding, launching a vessel. 2. பொய், a lie, falsehood. 3. வியங்கோண்முற்று, *opt.* (root, தள்ளு.)

தள்ளாடல், அசைதல், staggering, reeling, rocking, vacillating, vibrating, fluctuating.

தறி, கட்டுத்தறி, a post, a stake. 2. தறியென்னேவல், *imp.* lop, chop off, cut off, cut down, hew. 3. தூண், a pillar, column. 4. நெய்வார்கருவி, a weaver's loom. 5. முளை, a peg.

தறிகை, உளி, a chisel. 2. தறி, a stake, post. 3. கோடரி, a kind of axe.

தறித்தல், வெட்டல், lopping, cutting down, sundering, hewing.

தறுகணாளர், படைவீரர், soldiers, heroes, fierce warlike persons.

தறுகண், தறுகண்மை, } மறம், குரூரம், cruelty, savageness, a warlike disposition. 2. வீரம், valor, bravery, ferocity.

தறுகல், தடைபடல், being hindered, impeded, checked, frustrated, failing.

தறை, தரை, land, ground.

தற்காலம், (*in astron.*) a given time for which calculation is made.

தற்காலசுத்தபுடம், the true longitude or position of a planet at a fixed time.

தற்காலமத்திமம், the mean longitude at a given time.

தற்காலித்தல், (*in astron.*) determining longitude, &c., for a given time, to make a reduction in the elements of calculation of the time given or sought.

தற்கிழமை, (*in gram.*) the thing possessed or closely connected with the possessor—*oppos.* to பிறிதின்கிழமை.

தற்குணம், விசேஷகுணம், peculiar nature or quality.

தற்குறிப்பேற்றம், ஓரலங்காரம், one of the thirty-five rhetorical figures, a fanciful kind of metaphor—as the trees, flourishing after a rain, extend, as it where, their arms to return fruits to the clouds.

தற்சமம், வடமொழிக்கும் பிற பாஷைக்கும் பொதுச்சொல், words from the Sanskrit used in Tamil or any of the other cognate languages, without change.

தற்சனி, சுட்டுவிரல், the fore-finger.

தற்சாட்சி, மனச்சாட்சி, self-evidence. 2. பரமாத்துமா, the universal soul or deity inspiring all creatures.

தற்சிவம், இச்சுரன், absolute deity, the self-existent.

தற்சுட்டு, தன்னைக்குறிப்பித்தல், self-reference.

தற்செல்வம், வலி, strength, force, power.

தற்பதம், கடவுள், Deity.

தற்பம், மக்கட்படுக்கை, bed, couch or other convenience for sleeping. 2. மனைவி, wife. 3. மெத்தை, mattress, bedding. 4. மேனிலை, upper room. 5. அகந்தை, haughtiness, arrogance, self-importance.

தற்பரன், கடவுள், absolute deity independent of agencies, assumed energies or operation. 2. சிவன், Siva.

தற்பவம், வடமொழியிற்றிரிந்த சொல், words of Sanskrit origin which have undergone a change in their derivatives.

தற்பாடி, வானம்பாடி, a lark.

தற்புருடம், சிவனைம்முகத் தொன்று, one of the five faces of Siva, indicative of his attributes as preserver, and invoked by incantations in the daily worship, called தற்புருடயாகம்.

தற்போதம், தன்னையுங் கடவுளையு மறியுமறிவு, self-knowledge knowledge of the soul and deity. 2. ஈச்சுரனதியற்கையறிவு, intuitive knowledge, inherent and eternal knowledge as possessed by the deity.

தனகு, களிப்பு, wantonness, mirthfulness, jollity.

தனஞ்சயன், அர்ச்சுனன், Arjuna. 2. உயிர்போகினும் போகாதுடலை வீக்கித் தலைகிழித்தகலும் வாயு, one of the ten vital airs supposed to remain after death, causing the body to swell, and on the third day, to part the sutures of the skull, and thus leave. 3. தீ, fire.

தனதன், ஈகையாளன், a liberal person. 2. குபேரன், bestower of wealth—Kuvera.

தனபதி, குபேரன், the lord of wealth —Kuvera.

தனம், பொன், gold, wealth, substance, property. 2. முலை, female breasts or bosom.

தனயன், (*fem.* தனயன் or தனயை) புத்திரன், a son.

தனலக்குமி, தனலட்சுமி, } Lakshmi, the patroness of riches.

தனவைசியர், செட்டிகள், merchants.

தனவையாதம், சிறுகாஞ்சொறி, a plant, a kind of nettle, a variety of the Tragia involucrata.

தனுது, தனது, his, hers, its (*a poetic form*).

தனி, ஒப்பின்மை, matchless, unique, unparalleled. 2. தனி, solitary, alone, insulated, detached, distinct. 3. தனியென்னேவல், *imp.* be alone, single, solitary, detached from company, be forsaken.

தனிகம், தனிகா, } கொத்தமல்லி, coriander.

தனிக்காப்பு, ஒரேபாட்டிலடங்கிய காப்பு, an invocation comprised in a single verse.

தனிக்குறில், தனிக்குற்றெழுத்து, a single short letter.

தனிக்கோலான், கடவுள், he whose government is incomparable, the Supreme Being. 2. ஏகாதிபதி, an independent Sovereign.

தனிச்சொல், தனிச்சீர், a detached foot in வெண்பா and other verses, between two lines.

தனிட்டை, அவிட்டநாள், the twenty-third lunar asterism.

தனிதம், முழக்கம், a roaring sound.

தனித்தல், தனிமை, being alone, solitary, single.

தனிநிலை, ஆய்தவெழுத்து, the letter ஃ.

தனிமுதல், கடவுள், the matchless and only God, absolute deity.

தனிமை, உவமையின்மை, incomparableness, matchlessness. 2. ஏகாந்தம், singleness, loneliness, solitude.

தனிமொழி, ஒரு சொல், a simple uncompounded word.

தனிவலிப்பெருமாள், குப்பைமேனி, a kind of plant, a vermifuge, an antidote to poisonous bites—also used for food—Acalypha Indica (*R.*).

தனிவீடு, மோட்சம், heaven.

தனு, உடல், body, either of creatures or as assumed by the Deity. 2. சிறுமை, smallness, minuteness, subtleness. 3. வில், a bow. 4. தனுவிராசி, Sagittarius of the zodiac. 5. தக்கன் மகள், daughter of Daksha, wife of Casyapa and mother of the Danavas.

தனுசர், அசுரர், Asuras, Danavas.

தனுசன், மகன், he who is born out of the body—a son.

தனுசாரி, இந்திரன், a name of Indra. 2. திருமால், Vishnu.

தனுத்திரம், கவசம், a coat of mail.

தனுர்வாதம், ஒரு வாயு, a contraction of the muscles.

தனேசன், குபேரன், Kuvera, once a rich king, now regent of the north, and guardian of riches.

தனை, அளவு, measure, a particle used as an affix to express number or quantity.

தன், the oblique of தான். 2. அசைச் சொல், a poetic expletive commonly annexed to nouns of the third person and sometimes to the other persons.

தன்பொருட்டனுமானம், (*in logic*) inference from experience or observation applied to one's own benefit, as opposed to பிறர் பொருட்டனுமானம்.

தன்மம், அறம், charity, virtue, merit, justice, equity.

தன்மேம்பாட்டுரை, ஓரலங்காரம், a figure in rhetoric, declaration of one's greatness, abilities, &c.

தன்மாத்திகாயம் புண்ணியபாவ சரீரம், a suitable body assumed by the soul at death, for future joys and sufferings.

தன்மாத்திரை, பூதங்களினுதி, archetypes or subtile rudiments of elementary matter, the five elements being resolved into the rudimentary elements of the five senses, as earth into that of smell, &c. 2. ஐம்பொறிகளின்மூலம், first principles of grounds of knowledge or perception by means of the senses.

தன்மை, குணம், quality, property, nature, essence. 2. மூவிடத் தொன்று, the first of the three persons in grammar. 3. ஓரலங் காரம், (*In rhetoric*) a figure of speech, description, the first of the thirty-five figures embracing four varieties.

தன்வந்தரி, தேவர்மருத்துவன், a famous physician of the Gods, produced at the churning of the sea of milk. 2. சிவன், Siva. 3. சூரியன், sun.

தன்னம், சிறுமை, smallness, minuteness. 2. பசுவின்கன்று, a calf. 3. மான்கன்று, a fawn.

தன்னியம், முலைப்பால், mother's milk, breast milk.

தன்னியாசி, ஓரிராகம், a tune.

தன்னினி, வேங்கைமரம், the Kino tree—Pterocarpus bilobus.

தன்னை, தாய், a mother, an own mother. 2. தமையன், an elder

brother. 3. (திவா.) தமக்கை an elder sister.

தா

தா, ஓரெழுத்து, a syllabic letter composed of த் and ஆ. 2. கேடு, decay, destruction. 3. தாண்டுதல், jumping at, towards, upon, over, &c., attacking, attack. 4. தாவென்னேவல், *imp.* give, grant, bestow, distribute, generate, produce, jump or leap over. 5. பகை, hostility. 6. வருத்தம், pain, distress, affliction. 7. வலி, strength, force. 8. குற்றம், fault, defect, blemish.

தாகம், ஆசை, desire, eagerness, appetency. 2. நீர்வேட்கை, thirst. 3. உயிர்வேதனையினொன்று, one of the punishments of the soul.

தாக்கணங்கு, இலக்ஷ்மி, she who beats others in beauty—Lakshmi.

தாக்கல், எதிர்த்தல், opposing, resisting, attacking. 2. பாய்தல், butting, springing against.

தாக்கு, தாக்கென்னேவல், oppose, resist, assault, attack, butt, as beasts &c. 2. போர், attack, assault, invasion. 3. (*in arith.*) பெருக்கு, multiplication.

தாங்கல், காத்தல், protecting, guarding. 2. குளம், a natural reservoir, a pond. 3. சுமத்தல், carrying, bearing up.

தாங்கி, பூணுகக்கட்டுவது, a golden ferrule put on the end of the elephant's tusk, a fastening from an ornament, &c.

தாசநந்தினி, வியாசன் தாய், the mother of Vyasa.

தாசரதி, இராமன், Rama.

தாசன், அடிமை, a slave. 2. ஏவல் கேட்போன், a servant. 3. தாதன், a devotee of Vishnu. 4. வலையன், a fisherman. 5. சூத்திரன், one of the fourth caste.

தாசி, அடிமைப்பெண், a maid-slave. 2. பரணிநாள், the second lunar asterism. 3. மேகவன்னப் பூவுளமருதோன்றிமரம், a species of Henna shrub with sky blue flowers.

தாசு, சூதாடுகருவி, a conical piece in the play of draughts.

தாசேரகம், (*a change of Sa. Dasara.*) ஒட்டகம், a camel or dromedary.

தாசோகம், அடியேன், profession of homage, by the Vaishnavas, as your servant.

தாடகை, (*in mythol.*) ஓரரக்கி, a Raksasa female, a savage.

தாடங்கம், காதணி, a female ear-ornament, 2. தோடு, another kind of ear-ornament, often a rolled ola coloured red.

தாடனம், அடித்தல், patting, tapping, whipping.

தாடாளன், முயற்சியுள்ளோன், a person of great energy and application.

தாடி, மோவாய்மயிர், beard.

தாடிமஞ்சம், சத்திக்கொடி, a kind of creeping plant, the கொம்மட்டி, creeper.

தாடிமம், தாதுமாதளை, a kind of pomegranate bearing full flowers but no fruit.

தாட்டாந்தம், திருஷ்டாந்தத்தைக் கொண்டது, (*in logic*) a proposition ; or doctrine, to be proved, ascertained, determined. (a correlative of திருஷ்டாந்தம்.)

தாட்படை, கோழி, a gallinaceous fowl.

தாணு, சிவன், Siva. 2. தூண், post, pillar. 3. நிலை, state, a firm state, stability. 4. நிலைபெறுதல், constancy, firmness of mind or conduct. 5. மலை, mountain hill.

தாண்டகம், இருபத்தாறெழுத்தின் மிக்க வடியான்வரும் பா, a poem the lines of which consist of more than twenty-six letters.

தாண்டல், ஆடல், dancing. 2. கடத்தல், leaping, bounding, jumping over, crossing, passing over. 3. கெலித்தல், overcoming.

தாண்டவம், கூத்து, dance. 2. சிவன் கூத்து, dancing with violent gesticulations applied to the frantic

dance of Siva and his votaries. *3.* (*mystically*) திருக்கூத்து, the operations of the deity in sentient beings, supplying them with bodies and acting through these in all their movements.

தாண்டவராயன், தாண்டவன், } சிவன், an appellation of Siva.

தாண்டி, நடனநூல், any treatise on dancing.

தாதகி, ஆத்திமரம், a tree—Bauhinia racemosa.

தாதன், அடிமை, a slave. *2.* தாசன், a devotee of Vishnu.

தாதா, ஈகையாளன், a liberal donor. *2.* தகப்பன், a father. *3.* பிரமன், Brahma of the Triad.

தாதான்மியம், ஒற்றுமை, identity, unity, sameness.

தாதி, செவிலித்தாய், a nurse, a foster-mother.

தாது, இரசமாதியேழு, the seven constituent parts of the body, viz., serum, blood, semen, brains or marrow, flesh, bone, skin. *2.* காவிக்கல், red ochre. *3.* தாது மாதளை, a kind of pomegranate bearing full flowers but no fruit. *4.* நரம்பு, artery, nerve, pulse. *5.* பூந்தாது, the filaments of a flower. *6.* பொன்னுதியேழு, the seven metals, viz., gold, silver, copper, iron, lead or tin, bell-metal, pinchbeck. *7.* மண்ணுதியைந்து, the five elements, viz., earth, water, fire, ether, air. *8.* விளைதாது, mineral, a fossil. *9.* ஒரு வருடம், the tenth year of the Hindu cycle. *10.* பாஷாணம், arsenic in its natural state, in distinction from that which is prepared.

தாதுமாதளை, பூமாதளை, a flowering pomegranate without fruit.

தாதுவாதம், கலைஞான மறுபத்து நான்கினொன்று, mineralogy —one of the sixty-four கலைஞானம்.

தாதுவைரி, கந்தகம், sulphur. *2.* கடுக்காய், nutgall. *3.* ஏலம், cardamom.

தாதை, தகப்பன், a father. *2.* பாட்டன், a grandfather. *3.* பிரமன், Brahma.

தாதைதாதை, பாட்டன், grandfather.

தாத்திரம், கோடாலி, an axe.

தாத்திரி, பூமி, earth. *2.* நெல்லி, a kind of tree—Phyllanthus emblica, including three species.

தாத்துரு, பன்னிரண்டாதித்தரிலொருவன், one of the twelve suns so called.

தாபகம், நிலைநிறுத்தல், establishment, settlement, foundation.

தாபதநிலை, விதவை தவம்புகல், a widow's entering on a course of austerities at the death of her husband.

தாபதம், முனிவரிருக்கும் வாசம், abode of an ascetic.

தாபதர், சடைமுடியர், ascetics with tangled locks. *2.* சமணமுனிவர், ascetics of the Jaina sect.

தாபத்திரயம், மூவகைத்துன்பம், the three kinds of distress according to their sources: *1.* தெய்வீகம், affliction from the divine hand. *2.* ஆன்மீகம், affliction from creatures. *3.* பௌதீகம், afflictions caused by the elements.

தாபநீயம், உபநிஷதத்தொன்று, one of the Upanishads.

தாபம், காடு, a jungle, forest. *2.* துன்பம், sorrow, distress, anguish. *3.* வெப்பம், heat, burning, ardour.

தாபரன், கடவுள், the Deity.

தாபிஞ்சம், தமாலம், a tree bearing white flowers and a yellow fruit, something like an orange. *2.* ஆமணக்கு, castor plant.

தாபிதம், சூடு, heat, fervour, ardency. *2.* தாபித்தல், establishment.

தாப்பிசை, தாப்பிசைப்பொருள்கோள், } ஒரு பொருள்கோள், one of the eight methods of constructing verses by

which a word in the middle is connected both with the end and beginning, from the idea of a swing.

தாமணி, தாம்பு, a rope for tying cattle together. 2. கயிறு, a string, a rope in general.

தாமநிதி, சூரியன், fulness of light—the sun.

தாமம், அணைகயிறு, rope, cord or string with which a calf is tied to the cow's foreleg when she is to be milked. 2. இடம், place, location, position. 3. உடல், body. 4. ஒழுங்கு, row, order. 5. ஒளி, light, lustre, brilliancy, radiance. 6. கீர்த்தி, fame, celebrity. 7. கொன்றைமரம், a genus of flower trees—Cassia. 8. சுகம், health, ease, pleasantness, gratification. 9. தாமணி, a string to tie oxen together. 10. பிறப்பு, birth, transmigration. 11. பூ, a flower. 12. பூமாலை, flower garland, wreath, chaplet. 13. மணி வடம், necklace of beads. 14. முடியுறுப்பு, ornaments of a crown. 15. மூவாறுகோவை மணியுள மாதரிடையணி, women's waist ornament consisting of eighteen zones of beads. 16. வீடு, house, abode, dwelling. 17. மலை, mountain. 18. நகரம், city, town.

தாமரைக்கண்ணன், விஷ்ணு, Vishnu, as lotus-eyed.

தாமரைச்சத்துரு, ஒரு பாஷாணம், a kind of native arsenic.

தாமரைநண்பன், தாமரைநாயகன், } சூரியன், the sun, as lord of the lotus.

தாமரையாசனன், பிரமன், Brahma, the lotus-seated.

தாமரையாசனி, தாமரையாள், } இலக்ஷ்மி, Lakshmi.

தாமரையாள், ஒரு பாஷாணம், yellow sulphuret of arsenic.

தாமரையான், பிரமன், an epithet of Brahma.

தாமரைவாசி, ஒரு பாஷாணம், a kind of arsenic (*R.*).

தாமிரகருணி, மேற்றிசையானைக்குப் பெண்யானை, the female elephant of the west.

தாமிரபருணி, ஓராறு, a river near Palamcottah, supposed to contain copper sands. 2. மேற்றிசையானைக்குப் பெண் யானை, the female elephant of the west.

தாமிரம், தாம்பிரம், } செம்பு, copper.

தாமோதரன், திருமால், Vishnu, his foster-mother having in vain passed the folds of a rope round him, when a child, to keep him in confinement.

தாம், அசைச்சொல், an expletive. 2. சாரியை, an emphatic particle suffixed to plural pronouns of any person.

தாம்பு, கயிறு, a rope for drawing water. 2. தாமணிக்கயிறு, a rope to tie oxen together.

தாம்பூலம், வெற்றிலை, betel leaf.

தாம்பூலவல்லி, தாம்பூலி, } வெற்றிலைக்கொடி, the betel vine.

தாயகம், ஈகையுடைமை, being liberal, munificent.

தாயத்தார், தாயாதிகள், kinsmen, paternal relatives.

தாயம், உரித்து, appropriation, a portion, inheritance. 2. சூதாடு கருவி, cubical pieces in the play of dice, the backgammon board. 3. தந்தை வழிச்சுற்றம், relationship, chiefly paternal. 4. துன்பம், affliction, distress.

தாயுமானர், தாயுமானவர், } செவ்வந்தியீசர், Siva as worshipped in the temple on the rock at Trichinopoly. 2. ஓரடியார், a religious devotee of Siva.

தாய், மாதா, mother.

தாரகம், உச்சவிசை, the highest voice, a high key or note. 2. பிரணவம், the majestic mantra or prayer of the Hindus, containing the mystic syllable ஓம். 3. வெள்ளி, a star.

தாரகன், கண்ணன் சாரதி, the charioteer of Vishnu.

தாரகாகணம், நட்சத்திரக்கூட்டம், cluster of stars.

தாரகாபதி, சந்திரன், a ruler of the stars—the moon.

தாரகை, விண்மீன், star. 2. கண்மணி, the pupil of the eye.

தாரகைமாலை, ஒரு பிரபந்தம், a poem which describes the exalted fidelity and chastity of a woman who equals the virtue of அருந்ததி, transformed to a star.

தாரண, ஒரு வருடம், the eighteenth year of the Hindu cycle.

தாரணம், அஷ்டாங்க யோகத் தொன்று, one of the eight qualities of a yogi, viz., fixing the mind constantly on a member of the body as an expedient for keeping the thoughts from wandering. 2. உறுதி, stability, firmness, steadiness, constancy. 3. தரித்தல், wearing, investing, bearing, holding, sustaining. 4. நிலை, enduring, lasting, remaining.

தாரணி, பூமி, that which upholds—the earth.

தாரணை, அஷ்டாங்க யோகத் தொன்று, one of the eight அங்க யோகம் of the silent, motionless devotee; fixing the mind constantly on a member of the body, as an expedient for keeping the thoughts from wandering. 2. உறுதி, stability, steadiness, firmness, establishment, fixture. 3. கிரமம், construction, arrangement, order, system, principles, established order of things either natural or artificial.

தாரம், அரும்பண்டம், a rarity, a rare thing, the best of its kind. 2. இங்குலிகம், vermilion or red sulphuret of mercury. 3. நா, the tongue. 4. பச்சைப்பாம்பினஞ்சு, venom of the green snake. 5. பாதரசம், quick silver, mercury. 6. பிரணவம், the mystic monosyllable ஓம். 7. மனைவி, a wife. 8. மூக்காற்பிறக்குமிசை, the nasal sound. 9. வல்லிசை, (*in music*) the treble. 10. வீணைநரம்பிலொன்று, the highest of the seven strings of the guitar. 11. வெண்கலம், bell-metal. 12. வெள்ளி, silver. 13. தேவதாரம், any of the five famous trees in Swarga.

தாரா, ஒரு புள், a duck. 2. குருகு, a heron, 3. விண்மீன், a star or planet.

தாராகணம், விண்மீன், the body of stars.

தாராதரம், மேகம், that which holds a continuous stream—cloud.

தாராபதம், வானம், the starry firmament, the sky.

தாராபதி, சந்திரன், lord of the stars—the moon. 2. வியாழம், the husband of தாரை—Jupiter.

தாரி, வழி, way, road.

தாரு, மரக்கொம்பு, branch of a tree. 2. மரப்பொது, a tree in general.

தாருகவிநாசனி, தாருகற்செற்றாள், } காளி, the destroyer of Daruka, an asura—Kali.

தாருகற்செற்றோன், தாருகாரி. } குமரன், the destroyer of another asura of the same name—Skanda.

தாருகன், ஓரசுரன், Daruka an asura, killed according to the Skanda Purana, by Skanda. Also another of the same name, said to have been slain by Kali.

தாருகாவனம், ஒரு வனம், a forest celebrated in Skanda Purana.

தாருணம், அச்சம், timidity. 2. பயங்கரம், fear, dread, horror.

தாருண்ணியம், இளம்பருவம், youth, juvenility.

தாரை, ஒழுங்கு, row, range, line, series, stripe, streak. 2. கண், eye. 3. கண்மணி, the apple or pupil of the eye. 4. காளம், a long trumpet or pipe. 5. கூர்மை, point edge, sharp or cutting side

of an instrument. 6. கொடிப் படை, van of an army, the banner-detachment. 7. சிறுசின்னம், a smaller trumpet. 8. சீலை, cloth. 9. சுக்கிரீவன் மனைவி, the wife of Sugriva. 10. திகிரி, a wheel-like weapon. 11. தேவ குருவின் மனைவி, the wife of Jupiter, the priest of the Gods. 12. நா, tongue. 13. நேரோடல், running in a straight course. 14. மழை, heavy rain falling in large drops. 15. வலி, strength, vigour, force, power. 16. வழி, way, road. 17. விண்மீன், star. 18. வியாழன் மனைவி, wife of Jupiter, priest of the Gods.

தார், கிண்கிணிமாலை, a string of bells for a horse, &c. 2. கொடிப் படை, van of an army bearing the flag. 3. படை, army, troops, a regiment. 4. படைவகுப்பு, rank and file of an army. 5. பூ, flower, blossom. 6. பூவரும்பு, a flower bud. 7. மாலை, wreath, garland, chaplet, chain.

தார்க்கிகன், தருக்கசாஸ்திரி, a clver, disputant, a reasoner, a logician, a sophist.

தார்க்கியன், கருடன், the brahmany kite, the vehicle of Vishnu.

தாலகேதனன், தாலத்துவசன், } பீஷ்மாசாரி, he whose banner is a palmyra tree—Bhishma.

தாலமேழுடையோன், அக்கினி பகவான், an epithet of Agni, the God of fire, it having many tongues.

தாலம், உண்கலம், an eating dish. 2. கூந்தற்பனை, the bastard sago —Caryota urens. 3. நா, the tongue. 4. பனை, the palmyra or fan-palm—Borassus flabelliformis. 5. பூமி, the earth. 6. யானைச் செவி, ear of an elephant.

தாலம்பபாஷாணம், ஒரு பாஷாணம், a kind of natural arsenic.

தாலவட்டம், பூமி, the earth. 2. யானைச் செவி, ear of an elephant. 3. யானை வால், tail of an elephant.

தாலவிருந்தம், பேராலவட்டம், a large fan. 2. விசிறி, fan in general.

தாலவ்வியம், அண்ணத்தாற் பிறக்கு மெழுத்து, the palatal class of letters.

தாலாலம், பழிமொழி, scandal, calumny, aspersion.

தாலி, மங்கலநாண், the nuptial badge tied on the neck of the bride by the bridegroom at the time of the wedding.

தாலு, நா, the tongue. 2. அண்ணம், the palate.

தால், பிள்ளைக்கவியிலோர் பருவம், cradle songs or one of the ten parts of juvenile poetry.

தாவட்டம், சிற்பநூலினொன்று, a work on architecture.

தாவந்தம், நரகம், hell.

தாவம், காடு, forest, desert, a wild. 2. காட்டுத்தீ, desert-fire kindled, it is said, by friction. 3. மருத நிலத்தூர், towns, villages, &c., in agricultural districts.

தாவரம், இடம், place, location, habitation. 2. உடல், body, as the dwelling of the soul. 3. நிலை, basis, foundation, prop. 4. பூமி, the earth. 5. மரப்பொது, trees and plants in general. 6. மலை, mountain. 7. வின்னாண், a bow-string.

தாவரன், கடவுள், the deity.

தாவல், தாவுதல், } தாண்டல், jumping or leaping over. 2. பாய்தல், springing at or upon. 3. பரத்தல், spreading, pervading.

தாவளம், மருதநிலத்தூர், towns, villages, &c., in agricultural districts.

தாவு, குதிரைநடை, one of the paces of a horse, gallop. 2. தாவென்னேவல், *imp.* spring at or upon, jump or leap over. 3. பகை, hostility, hostile attack. 4. பற்றுக்கோடு, support, a staff.

5. வருத்தம், pain, distress, anguish, suffering. 6. வலி, strength, power, valour.

தாழி, குடம், a vessel with a wide mouth, a large pot. 2. ஜாடி, a jar. 3. பரணிநாள், the second lunar asterism.

தாழிசை, பாவினத்தொன்று, one of the four subdivisions of any of the four kinds of verse.

தாழை, தாழைமரம், a wild plant, found on sea-shores, the sweet scented or screw pine—Pandanas odoratissima. 2. தென்னைமரம், cocoanut tree.

தாழ், சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், blocks in a wall to support beams. 2. தாழ்க்கோல், a bolt, a bar, latch. 3. தாழென்னேவல், *imp.* stay, wait, halt, stop, bow, prostrate, be humble, sink be slow, dull.

தாழ்தல், ஆசை, desiring, being eager for. 2. ஆசைப்பெருக்கம், greatly desiring. 3. தங்கல், tarrying, halting, stopping. 4. வணங்கல், bowing, stooping, prostrating, in reverence, yielding,

தாழ்த்தல், தாழ்த்துதல், bringing low, lowering, letting down, subjecting. 2. மந்தம், being slow, dull.

தாழ்வடம், முத்துக்கோவை முதலியன, necklace of pearls, beads, &c.

தாழ்வாரம், வீட்டிறப்பு, a sloping roof.

தாழ்வு, ஈனம், lowness, degradation, degeneration. 2. பள்ளம், depth of a pit, water, &c.

தாளகம், தாளக்கம், } அரிதாரம், yellow sulphuret of arsenic.

தாளம், ஒரு வாச்சியம், a kind of cymbal for keeping time in music. 2. இலயை, time or measure in music. 3. சுதி, syllables sung in correspondence with the drum. 4. ஒரு கலைஞானம், the art of beating the cymbals. 5. பனை, the palmyra tree. 6. பொன்னரிதாரம், yellow orpiment.

தாளாண்மை, ஊக்கம், energy, activity, spirit. 2. முயற்சி, perseverance, application, diligence.

தாளாளர், வைசியர்பொது, persons of enterprise—any of the divisions of the third or Vaisya class. 2. முயற்சியுடையோர், persons of enterprise, application.

தாளி, அனுடநாள், the seventeenth lunar asterism. 2. ஒரு கொடி, a running plant of several species—Convolvulus. 3. தாளியென்னேவல், *imp.* season and flavour curries with ghee, spices, &c., macerate lime. 4. பனைமரம், palmyra tree.

தாளிசம், ஒரு செடி, a shrub whose leaves are medicinal—Flacourtia cataphracta.

தாளிதம், தாளிப்பு, seasoning of curries, &c.

தாள், ஆதி, beginning, commencement, origin. 2. கதவுறுதாள், bolt, bar, latch. 3. கால், leg, foot, stem, pedicle, &c. 4. முயற்சி, energy, enterprise, perseverance, application. 5. விற்குதை, string ends of a bow. 6. நெல் முதலியவற்றின்தாள், stubble.

தாறு, அளவு, measure of land, degree, quantity, limit. 2. இருப்பு முள், an ox-goad, a kind of weapon. 3. ஈந்து, கமுகு, வாழை இவற்றின் குலை, bunch or cluster of the date, areca, plantain and some other fruits. 4. வில்லின்குதை, string ends of a bow, the notch. 5. அங்குசம், an elephant-goad.

தாறுகன்னி, வெள்ளைக்காக்கணம், a plant—Clitoria forneata.

தாற்பரியம், எண்ணம், opinion, sentiment. 2. கருத்து, scope, import, purport, precise meaning of a verse, passage, &c. 3. நோக்கம், object, design.

தாற்பரியவுரை, கருத்துரை, the scope or object of a verse, as given by the commentator, the argument.

தாற்றுக்கதிர், கொத்தாய்க் காய்க் குங் கதிர், clustered corn ears.

தாற்றுப்பூ, கொத்தாய்நிற்கும் பூ, flowers growing in a bunch, panicle.

தானம், இடம், place, position, situation, spot, station. 2. கொடை, gift in charity, donation, grant contribution, liberality, munificence. 3. தேவலோகம், the world of the Gods, the world of Indra. 4. யானைமதம், the rut of the elephant. 5. வலி, strength, power, firmness. 6. இராகம், a tune. 7. உயர்நிலை, the vital parts essential to life. 8. அவஸ்தை, a physical or intellectual state, the local position of the soul in the body.

தானவண்ணம், சுரவிகற்பப்பாட்டு, a curious kind of song.

தானவர், அசுரர், the children of Dhanu—Asuras.

தானவன், அசுரன், an asura. 2. சந்திரன், the moon.

தானவாரி, விஷ்ணு, Vishnu, as foe of the Danavas.

தானுதிபதி, தானுபதி, } படைத்தலைவன், a general.

தானுபதி, தூதன், an ambassador, envoy, a plenipotentiary.

தானி, தானத்திலுள்ளது, that which is in a place, the occupant, inhabitant.

தானிகம், கொத்தமல்லி, the coriander.

தானியம், பண்டம், provisions, such as grain, corn, &c.

தானியாகுபெயர், (*in gram.*) ஒரு பொருளின் பெயர் அது இருக்கு மிடத்துக்காவது, a figure of speech in which the name of a thing is applied to the place occupied.

தானை, ஆயுதப்பொது, weapon in general. 2. தூசு, cloth. 3. படை, an army.

தானைத்தலைவன், படைத்தலைவன், a general.

தானைத்தறுகணாளர், படைவீரர், warriors.

தானைமாலை, ஒரு பிரபந்தம், a military poem describing the van of an army in the ஆசிரியப்பா verse.

தான், தேற்றச்சொல், an emphatic or intensitive particle, signifying indeed, really, certainly, &c. 2. அசைச்சொல், an expletive, suffixed to any noun or pronoun of any person and declined instead of it. 3. படர்க்கை யொருமைப் பொதுப் பெயர், the reciprocal pronoun, himself, herself, itself, the genitive being தன், in composition sometimes தற். 4. தாதான்மியம், personal identity.

தான்றி, தான்றிமரம், a large tree—Terminalia bellerica.

தி

தி, ஓரெழுத்து, a letter compounded of த் and இ.

திகசம், ஓமம், a medicinal plant—Sison Ammi.

திகந்தம், திக்கறுதி, the farthest extremity of any point of the compass, produced in space, the horizon.

திகம்பரம், நிருவாணம், nakedness, being clothed only by space.

திகம்பரர், சமணமுனிவர், the naked—sages of the Jaina sect.

திகம்பரன், அருகன், Argha of the gainas. 2. நிருவாணி, a naked mendicant. 3. சிவன், Siva.

திகம்பரி, பார்வதி, Parvati, the wife of Siva.

திகரம், இளைப்பு, fatigue, weariness, exhaustion of strength. 2. ஓரெழுத்து, a letter composed of த் and இ.

திகழல், ஒளிசெய்தல், shining, glimmering, emitting rays.

திகழ், ஒளி, brightness, lustre, splendour. 2. திகழென்னேவல், *imp.* shine, glimmer, &c.

திகழ்ச்சி, திகழ்தல், } விளக்கம், glimmer, appearance, visibility, brilliancy.

திகனு, கொடுவேலி, a medicinal plant—Plumbago zeylanica.

திகாந்தம், as திகந்தம்.

திகிரி, உருளை, a wheel, potter's wheel. 2. சக்கராயுதம், the discus. 3. தேர், car, chariot. 4. மலை, hill, mountain. 5. மூங்கில், bamboo. 6. வட்டம், circle, periphery.

திகிரிகை, சக்கரம், a wheel, a circle.

திகிரிக்கல், சக்கரவாளகிரி, the mountain surrounding the last of the seven oceans. 2. கோரோசனை, bezoar.

திகு, தாளக்குறிப்பு, two of the syllables sung to tunes for dancing.

திகை, திகையென்னேவல், *imp.* be taken aback, be confused, perplexed, bewildered, astonished, amazed. 2. திசை, region, point of the compass. 3. தேமல், spreading spots on the skin, induced by hot humours.

திகைத்தல், மயங்கல், being confused, bewildered, astonished, dismayed.

திக்கயம், திக்குயானை, any of the eight elephants of the points.

திக்காரம், தள்ளல், rejecting, confuting.

திக்கு, திசை, region, quarter, point of the compass.

திக்குப்பாலகர், எட்டுத்திசையுங் காப்போர், the regents of the eight cardinal points, as protectors of the earth, situated beyond the seventh circumambient sea and invoked in the daily worship, &c. 1. இந்திரன், Indra, regent of the east, whose sign is இடி, the thunderbolt. 2. அக்கினி, Agni, regent of the south-east, whose sign is புகை, smoke. 3. இயமன், Yama, regent of the south, whose sign is சிங்கம், lion. 4. நிருதி, Niruti, regent of the south-west, whose sign is நாய், a dog. 5. வருணன், Varuna, God of the waters, regent of the west, whose sign is இடபம், a bull. 6. வாயு, Vayu, God of the wind, regent of the north-west, whose sign is கழுதை, an ass. 7. குபேரன், Kuvera, God of riches, regent of the north, whose sign is யானை, an elephant. 8. ஈசானன், Isanan, regent of the north-east, whose, sign is காகம், a crow.

திக்குறு, புனமுருக்கு, a tree, a wild species of Butea frondosa (*Bot. Dic.*).

திங்கட்குடையோன், மன்மதன், he whose umbrella is the moon—Kama.

திங்கணாள், மிருகசீரிடம், the birthday of the moon—the fifth lunar asterism.

திங்கள், சந்திரன், the moon. 2. மாதம், a month in general.

திசாயம், குங்கிலியம், resin (*R.*).

திசை, see திக்கு.

திசைச்சொல், திசைமொழி, } அவ்வவர் நாட்டுச் சொல், provincial words.

திசைமுகன், பிரமன், he whose four faces are turned towards the four points—Brahma.

திடம், மெய், certainty, assurance, confidence, reality. 2. வலி, strength, vigour, power.

திடர், திடல், } திட்டை, a sand-bank rising above water or not, a flat shoal, dry place in a river. 2. மேடு, rising ground, highland.

திடர்ச்சுண்டி, திடற்சுண்டி, } வறட்சுண்டி, a shrub or plant—Mimosa triquetra.

திடுதிடெனல், ஈரொலிக் குறிப்பு, sounding in succession, as claps of thunder, rolling, rumbling, &c.

திட்கல், அச்சக்குறிப்பு, indication of fear.

திட்டம், ஒப்புரவு, evenness, smoothness. 2. நிலைவரம், certainty, accuracy, justness, exactness.

திட்டல், வைதல், abusing, reviling, imprecating.

திட்டனம், இலுப்பை, the long-leaved Bassia—Bassia longifolia.

திட்டி, கண், eye. 2. ஞானம், wisdom, divine illumination, supernatural knowledge. 3. (*R.*) தினை, millet.

திட்டிக்கல், திட்டிமணி, } அஞ்சனக்கல், a stone called jet or agate.

திட்டித்தம்பம், கண்கட்டுவித்தை, the art of fascinating the eyes, the act of suspending the sight—one of the sixty-four கலைஞானம்.

திட்டு, திட்டென்னேவல், *imp.* abuse, revile, curse, &c. 2. மேடு, sand-bank, a little hill, dry spots in a river.

திட்டை, உரல், a mortar for pounding. 2. திடர், dry spots in a river, sand-bank. 3. திண்ணை, raised floor. 4. மேடு, rising ground, a bank, an elevation.

திட்பம், காலநுட்பம், a moment, a small portion of time. 2. திண்மை, solidity, firmness, verity, &c.

திணி, திணியென்னேவல், *imp.* cram, press in with a stick, stuff in, become solid, consolidate, be crowded. 2. திண்மை, solidity, firmness, strength.

திணிகம், போர், battle, fight.

திணிதல், திண்மை, being solid, firm, compact, crowded.

திணித்தல், துறுத்தல், cramming, stuffing in.

திணுக்கம், திணுங்கல், being close, thick, dense, crowded.

திணுங்கல், நெருங்கல், being close, thick, crowded.

திணை, அகத்திணை, rules for amatory poems, &c. 2. அஃறிணை, the irrational class of nouns, pronouns and verbs. 3. இடம், place, situation, location, site. 4. உயர்திணை, the rational class of nouns, pronouns and verbs. 5. ஒழுக்கம், prescribed or regular course of conduct. 6. குடி, a dwelling. 7. குலம், tribe, caste, race. 8. புறத்திணை, public or state affairs, reference to foreign powers. 9. பூமி, the earth, soil, land. 10. (*in love-poetry*) பெருந்திணை, general intercourse of the sexes, as love attachments, love quarrels, &c.

திணைப்பெயர், names of the five soils.

திணைமயக்கம், ஐந்திணையு மாறிவருவது, blending of different soils. 2. (*in love-poetry*) பல நிலத்தோரைக் கலந்துரைத்தல், blending the peculiarities of any two or more soils, in an account of the inhabitants.

திணைவழு, (*in gram.*) disagreement in திணை, as of a verb with its nominative, the pronoun with its noun, &c.

திண்கல், சுக்கான்கல், lime stone.

திண்டகம், கிலுகிலுப்பை, a plant whose seeds rattle in the legumen, when ripe and dry—Crotolaria labumifolia.

திண்டி, தம்பட்டம், a drum. 2. யானை, elephant. 3. ஓரசுரன், name of an Asura. 4. பசலைக் கொடி, a class of plants, spinage —Portulacaoleracoa.

திண்டிமம், தம்பட்டம், a drum.

திண்டிறல், அதிவீரம், great valor.

திண்டோள், திண்புயம், strong, robust shoulders.

திண்ணகம், செம்மறிக்கடா, a ram. 2. துருவாட்டேறு, a ram of the fleecy kind of sheep.

திண்ணம், மெய், truth, verity, certainty. 2. வலி, vigour, strength, solidity, firmness.

திண்ணன், பலவான், a strong, robust, powerful man. 2. (*Beschi.*) வேடன், a hunter.

திண்ணியன், வலியுடையோன், a stout, fat person.

திண்ணெனல், தந்திநாதம், the vibrating of the string of any musical instrument.

திண்ணை, வேதிகை, a seat of mortar work or earth against the walls of a house for sleeping, &c.

திண்மை, see திண்ணம்.

திதத்தாபகம், } தாக்கிமீளல்,
திதித்தாபகம், } elasticity, tendency to return to a former position.

திதம், நிலை, fixedness, steadiness.

திதலை, } தேமல், spreading or
திதனி, } other spots on the skin, produced by hot humours, regarded as ornament in females.

திதளம், மாமரம், the mango tree—Mangifera Indica.

திதி, காசிபப்பிரமாவின் மனைவி, one of the wives of the Rishi Kasyapa, and mother of the Daityas. *2.* காத்தல், preservation, continuance of creation or the process of operations of nature, as one of the acts of Deity. *3.* சந்திரனுள், a phasis of the moon or lunar day of different lengths, of which there are fifteen respectively, in the increase and decrase of the moon. *4.* திதியென்னேவல், *imp.* preserve, sustain the operations of nature. *5.* நிலை, state, condition. *6.* நிலைபெறுதல், stability, permanence. *7.* (வைரா. *18.*) இருப்பு, existence, life, as distinguished from birth or death.

திதித்தல், நிலைபெறுத்தல், establishing, sustaining, preserving, carrying forward the operations of nature.

திதிசர், }
திதிசுதர், } அசுரர், Asuras, the
திதிமைந்தர், } offsprings of திதி.

திதிட்சை, பொறுமை, patience, endurance.

திதிக்கை, } ததேகநிஷ்டை, (*in the*
திதிட்சை, } *Vedantic philosophy*) spiritual contemplation, fixing the mind on one object.

தித்தம், கசப்பு, bitterness. *2.* (*R.*) நிலவேம்பு, a medicinal plant—Justicia paniculata. *3.* மலைவேம்பு, a beautiful tree—Persian Lilac—Milia Azidarachta.

தித்தா, தாளக்குறிப்பு, two syllables sung for a tune. *2.* பீதரோகிணி, an exotic plant. *3.* வட்டத்திருப்பி, a plant—Cissampelos.

தித்தி, தித்திப்பு, sweetness, daintiness. *2.* தித்தியென்னேவல், *imp.* be sweet, savoury, delicious. *3.* தின்னற்குரியன, light eatables, tidbits. *4.* வேள்விக்குண்டம், a sacrificial pit. *5.* பேரீந்து, the date tree.

தித்திரம், அரத்தை, a shrub whose root is medicinal and forms a drug—Galanga.

தித்திரி, சிச்சிலிக்குருவி, a king-fisher. *2.* ஒரு கவுதாரி, the francoline partridge. *3.* ஓரிருஷி, a Rishi or Muni.

தித்திரு, } நாணல், a reed-Sac-
தித்திருச்சி, } charum.

திந்திடம், } புளியமரம், tamarind
திந்திருணி, } tree—Tamarindus.

திபதிசம், } வாலுளுவை, a medi-
திபதிச்சம், } cinal seed.

திப்பலி, (*a change of* பிப்பலி) long pepper plant or fruit—Piper longum.

திப்பி, கோது, dregs, refuse of anything from which the juice has been squeezed out.

திப்பியம், ஓமம், sison or Bishop's weed, a species of cumin, the seed of which is distilled for medicinal use, also given in decoction to children—Sison ammi.

திமி, நூறுயோசனை நீளமுள்ள மீன், a fabulous fish of enormous size, said to be one hundred yojana long.

திமிங்கிலகிலம், திமிங்கிலத்தை விழுங்குமீன், a fish supposed to be large enough to swallow a whale.

திமிங்கிலம், யானையை விழுங்கு மீன், a whale or imaginary fish said to be large enough to swallow the திமி, which is a fabulous fish of enormous size.

திமிசம், திமிசு, } வேங்கைமரம், a large tree —Pterocarpus.

திமிதிமி, see திமிங்கிலம்.

திமிரம், இருள், darkness, obscurity, gloom. 2. நரகம், hell. 3. குருடு, gutta screna, total blindness from an affection of the optic nerve.

திமிராரி, சூரியன், the foe to darkness—the sun.

திமிர்தம், ஒலி, sound, noise.

திமிர்தல், பூசுதல், rubbing or smearing. 2. வளர்தல், growing, increasing, becoming more intense.

திமிர்ப்பூச்சி, வயிற்றுப்புழு, a small kind of worms, Ascarides.

திமிலம், பேரொலி, a great noise, roar, din. 2. யானைமீன், a whale.

திமிலர், நெய்தனிலமாக்கள், inhabitants of maritime districts—fishermen.

திமிலை, பம்பைமேளம், the drum of fishermen.

திமில், எருத்துத்திமில், hump on a bullock's back. 2. தோணி, a boat, dhoney. 3. மரக்கலம், a vessel, ship. 4. வேங்கைமரம், a tree—Pterocarpus.

திமிறல், வளர்தல், growing, increasing.

திமைத்தல், கிளப்புதல், raising up, heaving up stones, &c.

தியக்கம், தியக்கு, } அசைவு, motion, agitation, aberration of the senses, swoon. 2. கலக்கம், bewilderment, perturbation.

தியங்கல், சோரல், fainting, drooping, languishing.

தியசம், மரமஞ்சள், a medicinal tree.

தியந்தி, திராய், a plant—Pharnaceum.

தியாகம், கொடை, a present, gift, donation. 2. உதாரம், liberality, bounty, generosity. 3. விடல், leaving, departing from, abandonment, desertion.

தியாகராயர், தியாகர், } சிவன், Siva as worshipped at திருவாரூர், and other places.

தியாகி, கொடையாளன், a liberal person, a donor.

தியாச்சியம், விலக்கு, a leaving, forsaking. 2. ஒவ்வொரு நட்சத்திரத்திலுஞ் சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்ட நேரம், in astrological calculations, a time of three and three quarters to four Indian hours following the asterism that rules the day and considered to be unlucky, &c.

தியாமம், நான்முகப்புள், the name of a water bird, which has a quadrangular beak.

தியானசமாதி, யோகநிலையினொன்று, sitting as the yogi in deep and silent contemplation.

தியானம், அஷ்டயோகத்தொன்று, one of the eight yogas, consisting of restraining or suspending the senses and contemplating Siva. 2. நினைவு, meditation, contemplation, fixed and undivided attention to an object.

தியோதம், வெயில், sunshine, light with heat.

திரகமூலகம், முடக்கொத்தான், a medicinal plant, heart-pea, *curing palsy and gout*—Cardiospernum Halicacabam.

திரகத்தாரு, நிலப்பனை, a kind of plant—Curculigo orchioides.

திரக்கம், கொன்றை, a genus of flower-trees—Cassia.

திரக்காரம், நிந்தை, disrespect, reproach, censure.

திரங்கல், திரைதல், being wrinkled, crumpled, shrivelled. 2. மிளகு, black pepper.

திரச்சீனமுகம், நாணத்தாற்றலையாட்டல், shaking the head with bashfulness.

திரட்சி, உண்டை, rotundity, globularness. 2. முத்து, pearl.

திரட்டல், கூட்டல், collecting, bringing together, compiling from

various authors, incorporating, embodying, accumulating.

திரட்டு, கூட்டம், collection, compilation, incorporation, accumulation. 2. திரட்டென்னேவல், *imp.* collect, bring together, compile, embody, accumulate, &c.

திரணபதி, வாழை, the chief of grasses—plantain.

திரணம், துரும்பு, a straw, blade of grass, stubble, &c. 2. புல், grass, gramineous plant.

திரணி, ஒரு செடி. a shrub—Dalbergia heterophylla.

திரண்டகொடிச்சி, புற்றும்பழம், a kind of ore.

திரந்திகம், திப்பலிமூலம், the long pepper root.

திரமம், ஜாதிலிங்கம், vermillion (*R.*).

திரமாதம், (*in astrol.*) the four months in which the sun is in the stationary signs, viz., May, August, November and February, as propitious to things stationary; opposite to சரமாதம், or moving signs.

திரமிடம், தமிழ், the Tamil country or Dravida proper, also the Tamil language.

திரம், நிலை, steadiness, firmness, stability, permanence, durableness.

திரயோதசி, பதின்மூன்றுந்திதி, the thirteenth day of each lunar fortnight.

திரராசி, (*in astrol.*) signs of the zodiac favourable to employments of a stationary kind, as building, planting, &c.

திரலடி, ஏலம், cardamom (*R.*).

திரவம், நீர் முதலியவற்றினெகிழ்ச்சி, the flowing property of liquids, fluidity. 2. சாரம், juice, essence.

திரவாதி, காட்டாமணக்கு, an angular leaved shrub whose nut is used in medicine—Jatropha curcas.

திரவிடம், see திரமிடம்.

திரவியம், பொன், gold, wealth, treasure. 2. மூலபதம், an elementary substance, of which nine kinds are reckoned.

திரளல், திரட்சி, becoming round, collecting, accumulating.

திரள், உண்டை, a ball, a globe. 2. குழியம், a circle. 3. கூட்டம், cluster, clump, tuft, assembly, multitude, flock, herd, shoal. 4. திரளென்னேவல், *imp.* become, round, collect, congregate, accumulate, &c. 5. படை, army.

திராட்சம், கொடிமுந்திரி, grape including the vine and its fruit.

திராமரம், பவளமல்லிகை. the coral tree—Nyctanthes.

திராமிடம், see திரமிடம்.

திராய், ஒரு பூண்டு, a kind of edible but bitter herb or plant.

திராவகம், செய்நீர், (*in chem.*) ether, distilled acids, spirits, waters distilled from minerals.

திராவகநீறு, precipitate of nitre or of sulphur.

திராவிடம், ஒரு தேசம், Southern India. 2. தமிழ், the Tamil, a language spoken in Southern India.

திரி, திரிசீலை, a roll or twisted cloth for a wick, a match. 2. திரியென்னேவல், *imp.* walk about, wander, vary, be twisted, revolve, change, &c. 3. மூன்று, three, three-fold, triple, treble.

திரிகடகசங்கலிதம், the summation of சங்கலிதம், and சங்கலித சங்கலிதம் and வர்க்கசங்கலிதம்.

திரிகடுகம், } திரிகடுகு, } மூன்றுகாரம், the three-special stimulants. 2. முச்சொல்லலங்காரம், a poem in which each verse has three things for its theme.

திரிகண்டகம், நெருஞ்சில். a three thorned plant—Tribulus.

திரிகத்தம், ஒரு தேசம், a country, in the north of India, apparently part of Lahore.

திரிகரணம், முப்பொறி, the three constituent parts of a person, as employed in divine worship.

திரிகாலம், முக்காலம், the past, present and future.

திரிகாலோசிதம், தருப்பை, the kusa-grass.

திரிகுணம், முக்குணம், the three principles in nature, Satva, Raja and Tama, which are the ultimate source of all quality or character in man, and may be indefinitely developed and expanded.

திரிகூடம், ஒரு மலை, a sacred mountain.

திரிகை, இடக்கைமேளம், a musical instrument. *2.* ஏந்திரம், a hand-mill. *3.* குலாலசக்கரம், a potter's wheel. *4.* திரிதல், change, alteration, permutation, roaming about.

திரிகோணம், முக்கோணம், a triangle.

திரிகோணமிதி, முக்கோணசாஸ்திரம், trigonometry.

திரிசங்கு, ஓரரசன், the name of a king.

திரிசங்குமண்டலம், the constellation named after திரிசங்கு, the father of அரிச்சந்திரன், being the southern cross.

திரிசா, tabular radius.

திரிசாரம், மூவகையுப்பு, the three kinds of salt, viz.: *1.* நவட்சாரம், solder. *2.* எவட்சாரம், alkaline salt. *3.* சத்திச்சாரம், another kind of salt.

திரிசூலம், முத்தலைவேல், the trident.

திரிசொல், ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும், அரிதாகக் கற்றோரறிகின்ற பொருளளவாய் வருகின்றன, variable words used principally by the learned. *1.* ஒருபொருட் பலபெயர், different names of the same thing. *2.* பலபொருளொருபெயர், a word with different meanings. *3.* அரும்பதம், words not in common use. *4.* உவமைச்சொல், metaphorical words. *5.* விகாரப்பட்டசொல், words declined of modified.

திரிச்சிரமம், முக்காலானுஷ்டானம், the three daily devotional exercises.

திரிதண்டசந்நியாசி, an ascetic who carries three staves tied together and is a worshipper of Vishnu.

திரிதண்டி, as திரிதண்டசந்நியாசி, *2.* கரண மூன்றுமடக்கினோன், an ascetic who has acquired the command over his mind, body and speech.

திரிதரல், சுழலல், whirling round. *2.* திரிதல், walking about. *3.* மீளல், returning.

திரிதராட்டிரன்மைந்தன், துரியோதனன், the son of Dritharadra—Duryodhana.

திரிதல், உலாவல், walking about, wandering. *2.* கெடுதல், perishing. *3.* சுழலல், whirling, revolving. *4.* நடத்தல், changing places.

திரிதியம், செவ்வள்ளி, an edible root.

திரிதியை, மூன்றுந்திதி, the third day of the moon, either in its increase or decrease.

திரிதேகம், மூவகையுடல், three kinds of bodies as given in the agama, see சரீரத்திரயம்.

திரிநேத்திரன், சிவன், Siva the three-eyed—Compare முக்கண்ணன்.

திரிபங்கி, மிறைக்கவியினொன்று, a curiously wrought poem, one of the மிறைக்கவி, a stanza, which may be turned into three others and give three different meanings.

திரிபணி, ஓரலங்காரம், a figure of speech, a metaphor.

திரிபதகை, கங்கை, the Ganges, fancied to run through three worlds.

திரிபதாகி, மிறைக்கவியினொன்று, a curiously constructed poem.

திரிபதாகை, ஒரு கரலட்சணம், a mode of using the hands in dancing.

திரிபலம், } கடுக்காய், நெல்லிக்காய்
திரிபலை, }
தான்றிக்காய், the three Myrobalan or medicinal fruits, i.e., Terminalia chebula, Phyllanthus emblica, and Terminalia bellerica.

திரிபாகி, ஒரு மிறைக்கவி, a curious poem in which a word of three

letters when taken regularly gives one meaning, and when the first, second or third letter is taken away will give in each case a different meaning.

திரிபு, வினையெச்சம், *v. part.* varying, changing, walking, perishing. *2.* வேறுபாடு, change, alteration, mutation, variation, diversity.

திரிபுக்காட்சி, (*in logic*) optical illusion, misconception in objects of sense; i.e., mistaking one thing for another, as a post for a thief.

திரிபுசம், முக்கோண வடிவம், triangle.

திரிபுடி, முக்குணம், the three qualities, viz.: *1.* ஞாதுரு, soul. *2.* ஞானம், wisdom, knowledge. *3.* ஞேயம், that which is known.

திரிபுடை, ஒரு தாளம், a mode of beating tune.

திரிபுரசுந்தரி, பார்வதி, Parvati.

திரிபுரதகனன், as திரிபுராந்தகன்.

திரிபுரமல்லிகை, ஒரு மல்லிகை, a medicinal plant, apparently a kind of Jasmine.

திரிபுரமெரித்தான், சிவன், Siva, who burnt and destroyed the three cities. *2.* நொச்சி, a tree—Vitex. *3.* மாவிலங்கு, a tree—Crataeva Roxburghu.

திரிபுரம், முப்புரம், the three cities or castles severally of iron, silver and gold, floating in the sky one above another, destroyed by Siva for embracing the Jaina tenets. The chiefs of the castles were கமலன், கமலாட்சன் and விச்சுவ மாலி.

திரிபுராந்தகன், சிவன், the destroyer of the three cities—Siva.

திரிபுரி, சாரடை, a plant—Trianthema monogyna.

திரிபுவனம், மூவுலகு, the three worlds, viz., the earth, the etherial regions and the world of the Gods.

திரிபுவிகாரம், (*in gram.*) the change of one letter into another.

திரிமூர்த்தி, மும்மூர்த்தி, the Indian triad—Brahma, Vishnu and Siva.

திரிமூலம், three kinds of medicinal roots, viz., *1.* of long-pepper. *2.* of plumbago, and *3.* of a kind of tree called சிறுதேக்கு.

திரியம்பகன், அரன், the three-eyed—Siva. *2.* அருகன், Argha.

திரிலிங்கம், கரலட்சணத்திலொன்று, a mode of using the hands in dancing. *2.* (*in gram.*) முப்பால், the three genders.

திரிலோகம், மூவுலகம், the three worlds—the earth, the etherial regions and the world of the Gods. *2.* பொன், வெள்ளி, செம்பு, three metals, gold, silver and copper.

திரிலோகாதிபதி, இந்திரன், Indra.

திரிலோகி, விஷ்ணுகரந்தை, a plant —Sphoeranthus Indicus.

திரிவிக்கிரமன், விஷ்ணு, Vishnu, as crossing over the three worlds, in three steps, to the discomfiture of Bali.

திரிவேணி, } கங்கை, யமுனை,
திரிவேணிசங்கமம், } சரசுவதி இம்மூன்றும் கூடுமிடம், the confluence of three sacred rivers near Benares, a place of great resort for bathing, &c.

திரு, இலட்சுமி, the Goddess of felicity, riches, &c.—Lakshmi. *2.* செல்வம், wealth, riches, affluence, &c. *3.* மேன்மை, distinction, eminence. *4.* அழகு, beauty.

திருகல், முறுக்கல், wringing off, twisting off. *2.* வளைத்தல், crooking, crumpling, making tortuous.

திருகு, திருகென்னேவல், *imp.* wring, twist, bend, &c. *2.* முறுக்கு, twisting, a crook, a crumple.

திருகுதாழை, ஒரு தாழை, a species of Pandanus odoratissima.

திருக்கடைக்காப்பு, the last verse in a poem called பதிகம், as an invocation, &c.

திருக்கடையூர், ஒரு சிவஸ்தலம், a place sacred to Siva.

திருக்கழுக்குன்றம், the name of a mountain sacred to Siva.

திருக்காளத்தி, a famous town.

திருக்கு, கண், the eye. 2. குற்றம், fraud, deceit.

திருக்கூட்டம், the fraternity of the worshippers of Siva.

திருக்கை, ஒரு மீன், a kind of fish, the ray, thorn-back.

திருசியம், கண்ணுக்குத்தோன்றுவது, anything visible.

திருச்செந்தூர், திருச்சீரலைவாய், } ஒரு சுப்பிரமணிய ஸ்தலம், a town near Rameswaram, one of the six places sacred to Subramanya.

திருடல், களவு, stealing, stealth, roguery, theft.

திருடன், கள்ளன், a thief. 2. விஷ்ணு கரந்தை, a plant—Sphoeranthus.

திருட்டம், திட்டம், accuracy, exactness.

திருட்டி, கண், the eye.

திருட்டு, களவு, stealing, theft, roguery.

திருதம், தரித்தல், putting on, wearing, &c.

திருதி, துணை, help, assistance. 2. ஒரு யோகம், one of the astrological yogas.

திருத்தம், திருந்தல், exactness, precision, amendment.

திருத்தல், திருந்தச்செய்தல், correcting, rectifying, mending, improving.

திருநாமச்செடி, ஒரு பூண்டு, a plant —Artemisia vulgaris.

திருநாமத்துத்தி, ஒரு துத்தி, a plant.

திருநாளைப்போவார், சிவனடியாரறுபத்துமூவரிலொருவர், one of the sixty-three devotees of Siva.

திருநாள், உற்சவநாள், a holy day, a special day, a day of religious festival.

திருநீலகண்டன், சிவனடியாரிலொருவன், one of the sixty-three devotees of Siva.

திருநீறு, விபூதி, sacred ashes of burnt cowdung, one of the chief marks of Siva sect.

திருநீற்றுப்பச்சை, திருநீற்றுப்பத்திரி, } உருத்திரசடைப் பூடு, a species of fragrant evergreen shrub used for perfuming the திருநீறு, also medicinal sweet Basil—Ocymun Basilicum.

திருந்தகைமை, மேன்மை, superiority, excellence.

திருந்தலர், திருந்தார், } பகைவர், foes, enemies.

திருந்தல், திருத்தமாதல், becoming correct, proper, amending, improving, reforming, being disciplined as the mind, being educated, cultivated.

திருப்பதி, வடமலை, the mountain Tirupati, a place sacred to Vishnu.

திருப்பரங்குன்று, ஒரு சுப்பிரமணிய ஸ்தலம், a hill west of Madura, one of the six places sacred to Subramanya.

திருமகண்மைந்தன், மன்மதன், the son of Lakshmi—Kama.

திருமகள், திருமாது, } இலக்குமி, Lakshmi.

திருமயிலை, ஒருஸ்தலம், a sacred place.

திருமரம், அரசமரம், the sacred fig tree.

திருமலர், தாமரை, the sacred flower —the lotus.

திருமலை, கயிலாயமலை, a name of the feigned mountain Kylasa, the chief residence of Siva. 2. திருப்பதி, Tirupati.

திருமறுமார்பன், அருகன், he who has a mole in his breast—Argha. 2. விஷ்ணு, Vishnu.

திருமாலுந்தி, தாமரை, that which resembles the navel of Vishnu—the lotus.

திருமால், விஷ்ணு, Vishnu, as lord of illusion, in the universe.

திருமால்புதல்வன், மன்மதன், the son of Vishnu—Kama.

திருமானகரம், வைகுந்தம், the heaven of Vishnu.

திருமுகம், கடவுள் சந்நிதானம், a divine face, divine presence. 2.

பெரியோர் சமுகம், presence of the great. 3. சீமுகம், an epistle or edict from a superior to an inferior. 4. நிருபம், an epistle.

திருமுருகாற்றுப்படை, ஒரு செய்யுள், a poem.

திருமுறை, திருவாசகம், a class of sacred writings, odes, &c.

திருமுற்றம், குதிரைவையாளிவீதி, a circus for horse-race, Hippodrome.

திரும்பல், மீளல், turning back, returning, being averted as an evil, retrograding.

திருவட்டி, கள்ளி, a shrub—Euphorbia tirucalli.

திருவணை, சேது, Adam's bridge between Ramesveram and Ceylon.

திருவண்ணுமலை, அருணாசலம், a sacred mountain.

திருவருட்பயன், ஒரு நூல், a treatise in praise of Siva.

திருவலகு, கோவில் முதலிய விளக்கும் துடைப்பம், a broom.

திருவள்ளுவர், குறளாசிரியர், the celebrated author of the Kural.

திருவாசகம், a poem by மாணிக்கவாசகர்.

திருவாதிரை, ஆதிரைநாள், the sixth lunar asterism.

திருவாய்மொழி, ஆழ்வார்பாடல், a book of note containing praises to Vishnu.

திருவாவினன்குடி, பழனி, a mountain town, one of the six places sacred to Skanda.

திருவாளன், செல்வன், a rich, prosperous man.

திருவானைக்கா, ஒரு ஸ்தலம், a sacred place near Trichinopoly.

திருவிலி, கைம்பெண், she that has lost her beauty—a widow. 2. வறியன், a poor person.

திருவிளையாடல், a book treating on the sixty-four wonderful sports of Siva at Madura.

திருவுந்தியார், திருவாசகத்தோருறுப்பு, a section of திருவாசகம், composed by Manikkavasakar.

திருவுறுப்பு, நுதன்மேலணி, a female ornament of solid gold, bearing the figure of Lakshmi, worn on the forehead.

திருவேங்கடம், திருப்பதி, a place sacred to Vishnu.

திருவேரகம், one of the six places, sacred to Skanda, near Pondicherry.

திருவொற்றியூர், ஒரு சிவஸ்தலம், a place sacred to Siva.

திருவோணம், the twenty second lunar asterism, containing three stars, in the neck of eagle, ஓணம்.

திரேக்காணம், (*in astrol.*) a division of the rising sign into three parts, in forming a horoscope.

திரேசந்தி, திராய், a plant—Pharnaceum.

திரேதம், } ஒரு யுகம், the
திரேதாயுதம், }
second or silver age or yuga, of the Hindus consisting of 12,96,000 years.

திரேதாக்கினி, முத்தி, the three-fold class of sacred or Brahmanical fire.

திரை, ஆறு, river, brook. 2. இடுதிரை, curtain. 3. கடல், the sea. 4. திரைதல், wrinkling by age, rolling as waves, rippling, curdling as milk. 5. திரையென்னேவல், *imp.* wrinkle, roll as waves, ripple, &c. 6. புனற்றிரை, wave, billow, surge, breaker, ripple.

திரைத்தல், திரைக்குதல், shrivelling up, gathering up the folds of a garment, &c.

திரையன், தொண்டைமான், a chief of a district near Trichinopoly. 2. நெய்தநிலத்தலைவன், a ruler or chief in a maritime district.

திரைராசிகம், முத்தொகைவினு, rule of three.

திரோதம், } Obscuration or
திரோதயம், }
darkening of the understanding, அறிவை மயக்குதல்.

திரோதசத்தி, } the female energy
திரோதாயி, }
of the deity, which is operative in

veiling the understanding and leading the soul to the performance of various actions and thus enabling it to work itself clear from moral evil, and effect its salvation.

திரோதானம், மறைப்பு, cover, covering, veil, anything that hides from sight. 2. அதரிசனம், disappearance, removal from sight. 3. hiding spiritual things from view, &c., as one of the divine operations embracing five particulars: (1) Obscuring the internal vacuum or spiritual faculty. (2) Causing the illusions of the world to appear as realities, and the deity and spiritual things as illusions. (3) Inducing the belief that the mental and bodily faculties are the agents in the actions performed, instead of the soul, or the deity operating through the soul. (4) Depriving the soul of spiritual comprehension, reflection, &c. (5) Inducing desires after the pleasures of sense.

திரோபவம், திரோபாவம், } பஞ்சகிருத்தியங்களி லொன்று, the darkening of the soul, as one of the operations of the deity.

திலகம், கலித்துறை, a class of verses including several species. 2. சிந்தூரம், vermilion or red paint for marking the forehead. 3. சுட்டி, an ornament for the forehead. 4. பொட்டு, a mark or spot on the forehead by the Saivas. 5. மஞ்சாடி மரம், a tree—Adananthera pavonia.

திலச்சாரம், திலாட்சாரம், } கடுந்திலாலவணம், the salt extracted from rape seed.

திலதம், சுட்டி, an ornament for the forehead. 2. நெற்றித் திலகம், another ornament for the forehead. 3. பொட்டு, a sectarian spot on the forehead.

திலம், எள், rape seed or the plant—Sesamum. 2. மஞ்சாடி மரம், a tree—Adananthera pavonia.

திலவகம், விளாம்பட்டை, the bark of the Feronia (*R.*).

திலோதகம், libations of water poured on rape seed.

தில், a particle found in ancient poetry expressing. 1. விழைவு, desire. 2. காலம், time. 3. ஒழியிசை, implied ellipsis. 4. அசைச் சொல், an expletive.

தில்லம், காடு, jungle, forest.

தில்லானா, தாளக்குறிப்பு, syllables used in humming tunes. 2. ஒரு சந்தக்குறிப்பு, a song of two stanzas in the interlude of which these syllables occur.

தில்லை, ஒரு மரம், a tree, the milky juice of which from the bark affords a gum—Excoecaria agallocha. 2. சிதம்பரம், the town of Chithambaram.

தில்லையம்பலம், சிற்றம்பலம், the chief of the five sacred halls in the temple at Chithambaram, also the temple itself.

தில்லைவனம், the town of சிதம்பரம்.

திவசம், நாள், day.

திவண்டல், துவளல், slackening, relaxing, staggering, bending.

திவம், தோற்றம், appearance, visibility, manifestation of a deity, &c. 2. பகல், day-time.

திவரம், நாடு, country, as distinguished from town.

திவலை, சிதறுந்துளி, a small drop watery particle or globule. 2. மழை, rain. 3. மழைத்துளி, rain drop.

திவவு, வீணைவலிக்கட்டு, frets of the guitar or places where the wires are struck with the fingers. 2. பனிக்கட்டு, steps made for ascending a mountain.

திவளல், துவளல், slackening, relaxing, staggering, bending.

திவறல், சாதல், dying.

திவா, பகல், day-time, as distinguished from night.

திவாகரம், ஒரு நிகண்டு, an ancient poetic lexicon, still in use.

திவாகரன், சூரியன், he that makes the day, the ruler of the day—the sun. 2. திவாகரமியற்றினோன், the author of திவாகரம்.

திவாகீர்த்தி, நாவிதன், a barber. 2. சண்டாளன், one of an impure caste.

திவாந்தம், கூகை, an owl, that which is blind by day.

திவாமானம், பகல், day-time, length of the day from sunrise to sunset.

திவார்த்தம், பகலிற்பாதி, half of the day-time. 2. மத்தியானம், noon or mid-day.

திவேச்சுரன், துவாதசாதித்தரிலொருவன், one of the twelve suns, so called.

திவோதாசன், } காசியரசன், a king
திவோதாதன், } of Benares and founder of the Indian school of medicine.

திளைத்தல், அனுபவித்தல், having sensual enjoyment, copulating. 2. நிறைதல், being full, abounding. 3. நெருங்கல், being thick, close, crowded. 4. பெருகுதல், increasing.

திறத்தல், திறக்குதல், opening, making an avenue or passage, unlocking.

திறம், காரணம், cause, as distinguished from effect. 2. குணம், quality, nature, state. 3. குறைநரம்புள வீணை, a kind of guitar with less than seven strings. 4. கூறுபாடு, division, class, sort. 5. வலி, strength, vigour, power, force.

திறம்பல், மாறுபடல், being changed, coming into different circumstances, swerving, deviating.

திறலோன், திண்ணியன், a stout, valiant man.

திறல், பகை, hostility. 2. போர், fighting, warfare, battle. 3. வலி, strength, vigour. 4. தைரியம், bravery, courage, valour.

திறவு, திறத்தல், opening, aperture.

திறனில்யாழ், நெய்தல்யாழ்த்திறம், a lute or fiddle used in maritime districts.

திறன், காரணம், cause. 2. குணம், good disposition. 3. கூறுபாடு, a part.

திறை, அரசிறை, tribute, as paid by inferior states.

தினகரன், சூரியன், he who makes the day—the sun, as திவாகரன்.

தினகவி, அற்றைக்கவி, a poem in praise of a king, on his rising up and sitting down. 2. ஒரு புலவன், a poet who composed it.

தினமணி, சூரியன், the pearl of the day—the sun.

தினம், நாள், day of twenty-four hours.

தினவு, சொறி, itching, prurience.

தினாந்தம், மாலைப்பொழுது, evening, sunset, close of the day.

தினை, ஒரு பயிர், ஒரு தானியம், millet, a kind of grain—Panicum italicum. 2. சிறுமை, smallness, trifle.

தின்றல், புசித்தல், eating, feeding, taking a meal.

தீ

தீ, அறிவு, knowledge, understanding, intellect. 2. இனிமை, sweetness, palatableness. 3. ஓரெழுத்து, a letter compounded of த் and ஈ. 4. தித்திப்பு, deliciousness. 5. தீமை, evil, wickedness, sinfulness. 6. தீயென்னேவல், *imp.* be slightly scorched or burnt. 7. நரகம், hell. 8. நெருப்பு, fire. 9. பஞ்சபூதத்தொன்று, elementary principle of fire and heat, caloric.

தீக்கஞ்சி, ஆரதிகர்ப்பூரம், a kind of camphor.

தீக்கடைகோல், sticks for producing fire by friction.

தீக்கணம், அஷ்டகணத்தினொன்று, a foot consisting of one நிரை, one நேர், and one நிரை—one of the eight kinds of ominous feet for the beginning of a poem.

தீக்கதிக்கும்பச்சை, நாகப்பச்சை, a precious stone.
தீக்கதிர், உலையாணிக்கோல், a smith's poker.
தீக்கல், தீத்தட்டிக்கல், flint.
தீக்குணர், கீழ்மக்கள், the vile, the low, the base.
தீக்குருவி, தழல்விழுங்கி, the ostrich.
தீக்குவெறுங்குகை, சவர்க்காரம், soap.
தீக்கூர்மை, இந்துப்பு, rock-salt. 2. திலாசாரம், salt extracted from Sesamum (*R.*).
தீக்கை, தீட்சை, } விரதநியமம், initiation by a Guru.
தீக்கையோன், அரன், Siva, as holding fire in his hand. 2. ஆசான், a spiritual teacher. 3. தீட்சை பெற்றவன், a disciple who has received initiation by a Guru.
தீக்கோள், துர்க்கிரகம், a malignant planet, an evil portent.
தீங்கினர், தீயோர், the vicious, the wicked. 12384
தீங்கு, குற்றம், fault, defect, blemish. 2. தீமை, evil, vice, wickedness, crime. 3. கேடு, misfortune, calamity, adversity, ruin.
தீச்சலம், கடல்நுரை, sea-shell eaten by age, the cuttle bone.
தீச்சொல், பழிச்சொல், slander, evil speaking. 2. சாபம், inauspicious or evil words.
தீட்சதன், சீடன், a disciple who has received the தீட்சை.
தீட்டல், எழுதல், writing, inscribing, delineating. 2. சித்திரமெழுதல், painting, drawing pictures, &c. 3. (திருக்குற்றால புராணம்) கட்டல், binding, tying, fastening.
தீட்டுகோல், எழுதுகோல், a paint brush.
தீண்டல், தொடல், touching, feeling, coming in contact.
தீண்டியம், பவளக்குறிஞ்சி, a shrub, a variety of Lawsonia spinosa, with red flowers.
தீதல், கருகல், being scorched, burnt.
தீது, குற்றம், fault, blemish, defect. 2. தீமை, evil, vice, mischief.
தீத்தம், பிரகாசம், splendour, brightness. 2. சிவாகமத்தொன்று, one of the twenty-eight agamas. 3. பெருங்காயம், asafœtida.
தீத்தாங்கி, தீ மறைக்கும் பலகை, a fire fender.
தீத்திரள், ஊழித்தீ, the deluge of fire.
தீத்தீண்டல், ஒரு சடங்கு, a marriage ceremony.
தீபகம், see தீவகம்.
தீபகாந்தி, வைரக்கல், a diamond.
தீபக்கொடிச்சி, ஆரதிகர்ப்பூரம், a kind of camphor.
தீபமத்திகை, விளக்குத்தண்டு, candle stick, lamp-stand.
தீபம், ஜோதிநாள், the fifteenth lunar asterism. 2. விளக்கு, a lamp, commonly one lighted. 3. as தீவகம், a figure in rhetoric. 4. தீவு, island, continent.
தீபவதி, ஆறு, a river.
தீபவராடி, வராடித்திறத்திலொன்று, a subdivision of the வராடி, melody.
தீபாவலி, தீபாவளி, lamp-lighting in October.
தீபிகை, விளக்கு, lamp.
தீப்பி, நெருப்பு, fire (பிங்.)—in திவாகரம், it is தீபி.
தீமுறுகல், ஒரு பாஷாணம், a kind of prepared arsenic.
தீமை, பொல்லாங்கு, vice, wickedness, evil, sin, turpitude, depravity.
தீம், இனிமை, sweetness, agreeableness.
தீம்பு, பொல்லாங்கு, wickedness, vileness, vice. 2. கீழ்மை, baseness, vulgarity.
தீம்பர், கீழ்மக்கள், the low, the base.
தீம்புகை, வாசனைப்புகை, fragrant smoke, odorous incense.
தீயகம், நரகம், the seat of fire—hell.
தீயம், தித்திப்பு, sweetness, lusciousness, deliciousness.
தீயர், தீயோர், } கீழ்மக்கள், the base, the low, the vulgar. 2. வேடர், those

that live by the chase, hunters. *3.* மூடர், savages, barbarians.

தீயளி, காய், immature fruit.

தீயாக்கீரை, பொன்னாங்காணி, a medicinal plant—Illecebrum sessile.

தீயெச்சம், அவியாநெருப்பு, unextinguished fire.

தீரம், கரை, shore, bank, border, edge. *2.* சிறுவரம்பு, ridge, dam in rice fields. *3.* வலி, strength, vigour power. *4.* தைரியம், courage, bravery, valour.

தீர்க்கசந்தி, வடவெழுத்துப் புணர்ச்சியுளொன்று, (*in gram.*) changes in Sanskrit words, of two similar vowels, whether long or short, when they coalesce in one long vowel.

தீர்க்கம், நிச்சயம், positiveness, certainty. *2.* நீளம், extension, length, either of space or time.

தீர்தல், நடத்தல், being decide, determined, settled. *2.* நீளம், being extended, being long. *3.* முடிதல், ending, terminating, being completed. *4.* விடுதல், leaving, quitting, ceasing.

தீர்த்தகரர், } சமணமுனிவர், Rishis
தீர்த்தகர், } among the Jainas.

தீர்த்தம், திருவிழா, a temple festival or procession. *2.* நீர், water in common.

தீர்த்தர், கடவுளர், celestials, Devas, inhabitants of Swerga.

தீர்த்தல், முடித்தல், finishing, completing, concluding. *2.* விடுத்தல், terminating births, removing affliction, sorrow, pain.

தீர்த்தன், அருகன், Argha of the Jainas. *2.* உபாத்தியாயன், a teacher, especially of the Vedas. *3.* குரு, guru, priest. *4.* சிவன், Siva.

தீர்த்திகை, ஆறு, a river.

தீர்ப்பு, தீர்த்தல், finishing, completing, terminating, removing affliction, &c,, decision.

தீர்வை, இறை, custom, duty, excise, toll, tax, impost. *2.* கீரி, a mungoose.

தீவகம், விளக்கு, lighted lamp, flame, luminousness. *2.* (*in rhetoric*) ஓரலங்காரம், a word once used and then understood in the other parts of a sentence, embracing several varieties but especially three. (*1*) முதனிலைத்தீவகம், a word used in the begining of a sentence and understood in other parts. (*2*) இடைநிலைத்தீவகம், a word so used in the middle of a sentence. (*3*) கடைநிலைத்தீவகம், a word thus used at the end of a sentence.

தீவலஞ்செய்தல், அக்கினிப் பிரதட்சணஞ்செய்தல், worshipping fire, as in the marriage ceremonies, by passing around it to the right.

தீவி, புலி, a tiger.

தீவிகை, see தீபிகை.

தீவிரம், சூரியகிரணம், rays of the sun. *2.* நரகம், hell. *3.* பெருங்கோபம், great anger, fury, rage.

தீவிளங்கும்வயிரம், மீனம்பர், ambergris (*R.*).

தீவிளி, காய், immature fruit (நிக.)

தீவினை, பாவம், evil deeds, vile conduct, wickedness, sin.

தீவு, இடைக்குறை, an island. *2.* சுவை, lusciousness, deliciousness, sweetness.

தீவேட்டல், யாகஞ்செய்தல், performing a sacrifice. *2.* மணமுடித்தல், marrying a wife.

தீவேள்வி, கலியாணம், a wedding, attended by performing a sacrifice.

தீனம், வறுமை, poverty, indigence, need, distress.

தீனர், இரப்போர், beggars, mendicants.

தீனன், தரித்திரன், a poor man, a pauper.

து

து, ஓரெழுத்து, a syllabic letter compounded of த் and உ. *2.* துவ்வென்னேவல், *imp.* eat, take food,

make a meal, enjoy by means of the senses, experience pleasure or pain.

துகள், குற்றம், fault, moral defect, flaw in character or conduct. 2. பராகம், pollen, farina of flowers. 3. புழுதி, dust, a particle of dust.

துகிரிகை, சாந்து, sandal paste, cement. 2. சித்திரம், a picture, painting.

துகிர், பவளம், red coral.

துகிலிகை, எழுதுகோல், a painter's pencil. 2. சித்திரம், a picture.

துகில், சீலை, cloths, dress. 2. விருதுக் கொடி, a banner, as a badge of honour.

துகினம், பனி, dew.

துகைத்தல், வருந்துதல், being vexed.

துக்கம், குற்றம், fault, defect, natural or moral. 2. துன்பம், pain, anguish, grief, sorrow, distress. 3. நரகம், hell.

துக்கிதன், துன்புறுவோன், a mourner.

துங்கபத்திரி, துங்கபத்திரை, } ஓராறு, a river in the Mysore country.

துங்கமத்திமபுத்தி, mean daily motion of moon's apogee.

துங்கமந்தோச்சம், (*in astronomy*) aphelion of a hevenly body.

துங்கம், உயர்ச்சி, height, elevation, upward tendency. 2. பரிசுத்தம், purity, holiness, neatness. 3. பெருமை, dignity, greatness, exaltedness. 4. மந்தோச்சம், superior apsis, the apogee or aphelion of a planet.

துங்கன், உயர்ந்தோன், an eminent man. 2. (*in Hindu astronomy*) the apogee of the moon, practically, the longitude of the apogee. As such, it is an element for equating the moon's place.

துசகம், மாதளை, pomegranate.

துசம், குங்கிலியம், a kind of resin.

துச்சம், அற்பம், lowness, meanness. 2. வெறுமை, emptiness.

துச்சவனன், இந்திரன், he who attacked the giant Chavana—Indra.

துச்சன், அற்பன், a mean, worthless fellow.

துச்சாதனன், துச்சாசனன், } துரியோதனன் தம்பி, the brother of Duriyodhana.

துச்சில், ஒதுக்கிடம், a place of retreat, shelter, resort. 2. சூட்டு, a crest. 3. (குறள்) சரீரம், the body as a temporary abode of the soul.

துஞ்சல், உறங்கல், sleeping, dozing, drowsing, slumbering. 2. சாதல், dying, spoken auspiciously. 3. சோம்பல், being drowsy, sluggish, dull. 4. நிலைபெறுதல், abiding, staying, being settled, enduring, continuing.

துடக்கறுப்பான், கொத்தான்கொடி, a kind of plant—Cassyta.

துடக்கு, மகளிர்சூதகம், ceremonial impurity of child-birth, catamenia, &c.

துடவை, உழவுகொல்லை, an enclosed cultivated field. 2. பூந்தோட்டம், flower garden or grove.

துடி, அகில், a fragrant wood—aquila. 2. உடுக்கை, a small drum tapering from each end, forming a small neck in the centre. 3. உதடு, lip. 4. ஏலம், cardamom. 5. காலநுட்பம், a small portion of time, a minute. 6. குமரனாடல், dance of the God Skanda. 7. குறிஞ்சிநிலப் பறை, drum of hilly tracts. 8. கூதாளிச்செடி, a shrub—Solanum. 9. சத்த கன்னிகைகளாடல், dances of the seven virgin Goddesses. 10. துடியென்னேவல், *imp.* be rude, mischievous, giddy, palpitate, shine, glitter, coruscate, lighten. 11. பாலைநிலப்பறை, drum of barren tracts. 12. முதன்மை, superiority.

துடித்தல், குதித்தல், palpitating, being rude, mischievous, giddy. 2. மின்னல், shining, glittering.

துடியடி, யானைக்கன்று, a young elephant (*lit.*) the துடி, drum-footed.

துடியாஞ்சி, இசங்கு, a thorny shrub found in hedges, &c., medicinal and bearing white berries—Azimate-tracantha.

துடுப்பு, துடுப்பு, a spatula a small ladle, an oar.

துடுமெனல், ஒலிக்குறிப்பு, sounding imitatively, roaring.

துடுவை, நெய்த்துடுப்பு, a ghee-ladle of wood, used in burnt sacrifices, &c.

துடை, சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், a beam projecting from a wall. 2. துடையென்னேவல், *imp.* wipe off, rub, scour, sweep.

துடைத்தல், துடைக்குதல், wiping, wiping off, rubbing, sweeping, &c.

துடைப்பம், வாருகோல், broom, brush, mop.

துடைவாசி, விஷமூங்கில், a medicinal shrub—Crinum Asiaticum.

துட்கல், அச்சக்குறிப்பு, being struck with fear.

துட்கெனல், அச்சக்குறிப்பு, being struck with fear.

துட்டர், தீயர், the wicked, fierce, ferocious, savages.

துட்டவி, ஒரு செடி, a shrub bearing an edible fruit—Rhamnus circumcissus.

துட்டன், தீயன், a wicked man, a savage. 2. தேள், a scorpion.

துட்டு, தீமை, wickedness, savageness, evil, ferocity.

துட்டை, வசவி, a vicious, bad woman.

துணங்கறல், இருள், darkness. 2. திருவிழா, temple, festival or procession.

துணங்கை, இருகையுமுடக்கிப் பழுப்புடையொற்றியாடல், dancing of devils, or of persons imitating them, striking the elbows on the sides, the hands being raised upright. 2. கூத்து, dancing, dance. 3. திருவிழா, temple festival or procession.

துணர், பூ, a flower. blossom. 2. பூங்கொத்து, a bunch or cluster of flowers. 3. பூந்தாது, filaments of flower.

துணர்த்தல், முகைத்தல், forming as buds.

துணவு, சீக்கிரம், quickness, celerity, suddenness. 2. நுணா, a class of trees—Morinda umbellata.

துணி, ஒளி, light. 2. ஜோதிநாள், the fifteenth lunar asterism. 3. துணியென்னேவல், *imp.* ascertain, form an opinion about, cut in pieces, detach, saw, sunder. 4. துண்டம், a piece, slice, chop, fragment, bit, morsel. 5. தூக்கங்கள், pendent ornaments, hangings, commonly of cloth. 6. தெளிவு, ascertainment, certainty, determination, the thing or doctrine assumed or taken as true. 7. தேரிடக்கியம், the flag of an idol car.

துணிதல், தெளிதல், ascertainment, judgment, determination.

துணித்தல், அறுத்தல், sundering. 2. வெட்டல், cutting in pieces, detaching.

துணிவு, தெளிவு, ascertainment, certainty, determination, conclusion, decision. 2. தீர்ப்பு, opinion founded on facts, knowledge, evidence, &c.

துணிவுரை, one of the fourteen subdivisions of விருத்தியுரை.

துணுக்கம், அச்சம், fear, terror, tremor, alarm. 2. உள்ளோசை, internal sound, as of the beating of the heart, through fear, &c.

துணுக்கெனல், அச்சக்குறிப்பு, being startled, afraid.

துணை, அளவு, measure, extent, degree, quantity, number. 2. இணை, couple, brace, pair, two. 3. ஒப்பு, comparison, parallel, similitude, resemblance. 4. சகாயம், aid, help, succour, support, resource. 5. சல்லியம், point of a weapon. 6. உதவி, escort, convoy, attendant.

துணைக்காரணம், உபகரணம், means to an end, medium. 2. the facul-

ties of the body and mind as organs of the soul in the performance of actions, acquisition of ideas or knowledge.

துணைமை, உதவி, aid, help, resource (நீதிநெறி.).

துணைவர், மந்திரிகள், king's ministers.

துணைவன், தலைவன், a husband. 2. தோழன், a companion, confederate, friend. 3. மந்திரி, a king's minister. 4. a helper, assistant, convoy, escort.

துணைவி, தோழி, a lady's maid, a female assistant. 2. மனைவி, a wife. 3. சகோதரி, a sister.

துணைவு, விரைவு, quickness, celerity, swiftness.

துண்டம், சாரைப்பாம்பு, a rat-snake. 2. துணி, a piece of cloth cut off. 3. துண்டித்தல், shredding, sundering, severing. 4. முகம், face. 5. மூக்கு, nose. 6. பறவை மூக்கு, beak bill. 7. யானைத் துதிக்கை, elephant's trunk.

துண்டித்தல், அறுத்தல், sawing, sundering, severing, slicing. 2. தறித்தல், hacking, mincing. 3. வெட்டல், cutting.

துண்டிவிநாயகன், காசிக்கணபதி, Ganesa, as worshipped at Benares.

துண்டீரன், ஓரரசன், a king.

துண்டீரபுரம், காஞ்சிபுரம், Conjeeveram, as formerly governed by துண்டீரன்.

துண்ணெனல், அச்சக்குறிப்பு, being startled, frightened.

துதமுகம், வேண்டாமைக்கு வலமிடந்தலையாட்டல், moving the head to the right and left—a sign of refusal.

துதம், அசைவு, motion, vibration, oscillation, agitation.

துதி, துதித்தல், praising, eulogizing, flattering. 2. துதியென்னேவல், *imp.* praise, eulogize, flatter.

துதித்தல், வழுத்தல், praising.

துதியம், சவரிலோத்திரம், the pulp of Tricosanthes palmata.

துதியை, இரண்டாந்திதி, the second day of the moon.

துதை, நெருக்கம், closeness, a crowded state.

துதைதல், நெருங்கல், being close or crowded. 2. மிகுதல், being copious, abounding, being intense.

துதைத்தல், நெருக்கல், straitening, pressing together.

துத்தநா, முயற்புல், a kind of grass —Agrostis linearis.

துத்தபாஷாணம், a kind of natural arsenic.

துத்தம், கண்மருந்து, a collyrium of either blue or white vitriol. 2. சமனிசை, tenor in music. 3. நாய், dog. 4. நாவினுற்பிறக்கு மிசை, the second tone of the gamut, or நி modulated by the tongue. 5. பால், milk. 6. யாழினோர் நரம்பு, string in the guitar, corresponding to the நி tone. 7. வயிறு, belly. 8. நாண்முகப்புல், a grass—Sacchar.

துத்தல், புசித்தல், eating, taking food, making a meal.

துத்தி, உண்டற்குரியன, an eatable, anything proper to be eaten. 2. ஒரு செடி, a plant, a species of mallow, Indian marshmallow—Sida mauritiana. 3. தேமல், yellow or tawny spreading spots on the skin. 4. பாம்பின் படப்பொறி, the ornamental spots on the neck of the cobra.

துந்துமாரி, முதலெழுவள்ளலிலொருவன், one of the seven of the first class of kings famed for liberality.

துந்துமி, பறையின்பொது, a drum in general. 2. பேரிகை, a large kettle-drum. 3. ஓரசுரன், an Asura famous in Hindu mythology. 4. ஒரு வருடம், the fifty-sixth year of the Indian cycle.

துப்பகம், நெய், ghee (*a change of* துப்பு).

துப்பிரசம், கருஞ்சொண்டி, a plant and its root.

துப்பு, அரக்கு, red wax, gum-lac. 2. அறிவு, intelligence, intellect. 3. அனுபோகம், enjoyment, experience. 4. ஆயுதப்பொது, weapons in general. 5. உணவு, provision, food. 6. குற்றம், guilt, mistake. 7. சகாயம், aid, assistance, help. 8. சிவப்பு, red. 9. சுத்தம், cleanliness, purity. 10. துணை, means, an instrument. 11. துணைக்காரணம், means. 12. நெய், ghee, clarified butter. 13. பகை, hatred. 14. பவளம், red coral. 15. பானம், drink, beverage. 16. பொலிவு, beauty, excellence. 17. மிகுதி, copiousness, abundance. 18. வலி, strength, vigour, valour.

துப்புரவாக்கல், சுத்தஞ் செய்தல், cleaning, cleansing, purifying.

துப்புரவு, அலங்காரம், great beauty. 2. ஐம்பொறி நுகர்தல், enjoyment of the senses, gratification. 3. ஒப்புரவு, propriety of conduct, established custom, order.

துமானம், ஆபரணப்பெட்டி, casket for jewels.

துமி, துமியென்னேவல், *imp.* drizzle, rain softly. 2. மழைத்துளி, rain drops.

துமிதம், நீர்த்துளி, drop, flirting drop, particle of water.

துமிதல், வெட்டுண்ணல், being cut off, severed, sundered. 2. தொலைதல், being dispelled, as ignorance.

துமித்தல், அறுத்தல், sundering, severing. 2. வெட்டல், cutting, cutting off.

தும்பகா, தும்பை, a plant—Phlomis.

தும்பரம், (*a contraction of* உதும்பரம்) அத்தி, glomerous fig—Ficus glomerata.

தும்பராஷ்டகம், பேரரத்தை, a medicinal root—Alpinia or Costus, of Roxb.

தும்பன், தீயன், a wicked person.

பளிக்கறை, பளிங்குமண்டபம், a crystal palace.
பளிங்கு, கண்ணாடி, a mirror. 2. சுக்கிரன், Venus the planet. 3. படிகம், crystal glass.
பளிதம், ஓரெண், a number. 2. கர்ப்பூரம், camphor.
பளீரெனல், ஒளிக்குறிப்பு, glittering, gleam, glistening.
பள்ளம், ஆழம், depth of a pit, water, &c., lowness. 2. குழி, a hollow pit, a hole, ditch.
பள்ளர், உழவர், a low, dependent caste employed in husbandry, &c., under their feudal lords, a peasant tribe dwelling in the South—*supposed to be a change of* மள்ளர்.
பள்ளி, அறச்சாலை, an almonry. 2. ஒரு ஜாதி, name of a caste. 3. சிற்றூர், a small village. 4. தேவர் கோயில், temple, church, a place of worship. 5. நித்திரை, sleep. 6. மக்கட்படுக்கை, a sleeping place or bed. 7. மருதநிலத் தூர், an agricultural town or village. 8. முனிவர்வாசம், a hermitage, cell of a recluse. 9. பள்ளிக்கூடம், a school.
பள்ளிகொண்டபெருமாள், விஷ்ணு, a name of Vishnu as sleeping.
பள்ளியெழுச்சி, துயிலெழுப்புகை, waking a great person, or an idol in the morning, with singing and other music. 2. ஒரு பிரபந்தம், a song daily sung to awaken the God, especially on a festival of ten days in December; also sung by the people on these days to rouse one another to their religious duties.
பள்ளு, ஒரு ஜாதி, name of a caste. 2. பள்ளுப்பாட்டு, a kind of drama in which those of the பள்ளர், caste form most of the characters.
பள்ளை, ஆடு, a sheep or goat. 2. வெள்ளாடு, a goat.
பறங்கிப்பாஷாணம், ஒரு பாஷாணம், a medicinal mineral, sublimate of mercury.
பறத்தல், பறக்குதல், flying, fluttering, hovering, moving with celerity, dispersing.
பறந்தலை, சுடுகாடு, place of burning the dead. 2. போர்க்களம், field of battle.
பறப்பன், தேள், a scorpion. 2. விருச்சிகவிராசி, the Scorpio of the zodiac.
பறம்பர், தோல்வினைஞர், workers in skins, leather, &c.
பறம்பு, மலை, a hill, mountain. 2. முலை, female breast.
பறவை, அவிட்டநாள், the twenty-third lunar asterism. 2. புள், a bird, fowl. 3. புள்ளிறகு, wing, feather. 4. சிறகுள்ளன, winged creatures in general.
பறவைவேந்தன், கருடன், the sovereign of the feathered race—the Brahmany kite.
பறழ், அணில், குரங்காதி, கோட்டில் வாழ் விலங்கு, அரா, ஆடு, கீரி, நரி, நாய், பன்றி, புலி, பூனை, மான் முதலியவற்றின் குட்டி, the young of creatures living in trees, such as, the squirrel, monkey, &c., and also of snakes, sheep, goat,

mungoose, fox, dog, hog, tiger, cat, deer, hare, &c.

பறளிகை, பறளை, } பற்றிரும்பு, a metal plate attached to boards, &c., as a fastening. 2. குறடு, a smith's tongs.

பறி, பறியென்னேவல், *imp.* pluck, crop, pick off with a twist, weed, crop flowers, plunder, extort. 2. பொன், gold. 3. மீன்படுக்குங் கருவி, a basket for catching fish. 4. மீன் பெய்யுங் கருவி, a basket for fish.

பறிக்கல், கிட்டக்கல், scoria, dross.

பறிதலையர், சமணரினோர் வகுப்பார், one of the two classes of Jainas, so called because they pluck all the hair from their heads to avoid vermin, and so to prevent taking away life.

பறித்தல், களைதல், weeding, cropping, plucking. 2. கள்ளல், extorting, robbing, plundering.

பறிவை, சீந்தில், twining shrub—Menispermum.

பறை, இறகு, feather, wing, plumage. 2. சொல், word, saying, declaration, statement. 3. பறையென்னேவல், *imp.* speak, tell, say. 4. வாச்சியம், drum, tabour of various kinds, as beaten for public proclamation or on festive or mournful occasions.

பறைதல், சொல்லல், saying, telling, declaring.

பற்குனன், அர்ச்சுனன், born in the twelfth lunar mansion or asterism —Arjuna.

பற்குனி, உத்திரநாள், the twelfth lunar asterism. 2. பங்குனி, the month of March.

பற்சர், பகைவர், foes, enemies.

பற்படகம், பற்படாகம், பற்பாடகம், } ஒரு மருந்துபூடு, a low annual medicinal plant.

பற்பநாபன், பதுமநாபன், Vishnu as the lotus navelled.

பற்பமாமுனி, முனிவர் முப்பத்தொரு வரிலொருவர், one of the thirty-one munis or distinguished persons.

பற்பம், அஷ்டாதச புராணத் தொன்று, one of the eighteen puranas. 2. தாமரை, the lotus. 3. நீறு, ashes, dust, medicinal powder, calx.

பற்பராகம், பதுமராகம், one of the nine precious stones, a ruby.

பற்றலர், பகைவர், foes, enemies.

பற்றல், ஆசைப்பெருக்கம், intense desire, attachment, love. 2. குறித்தல், concerning, referring, adverting to. 3. தொடர்தல், pursuing, aiming at a thing. 4. பிடித்தல், grasping, seizing, holding, apprehending.

பற்றற்றார், பற்றற்றோர், } முனிவர், those who have relinquished earthly attachments—rishis, munis.

பற்றுக்கை, அம்புத்திரளைக் கட்டுங் கயிறு, a string to tie a bunch of arrows with. 2. கட்டுங்கயிறு, a string to tie anything with.

பற்றார், பகைவர், those that are not attached to one—enemies, foes.

பற்றிலி, துறந்தோன், one free from sensual attachments—as the Deity or an advanced devotee.

பற்றினர், உறவோர், adherents, relations. 2. சிநேகிதர், friends, allies.

பற்று, அன்பு, love, affection. 2. ஆசை, desire, attachment, adherence. 3. பற்றென்னேவல், *imp.* hold, grasp, be attached to, refer, pursue.

பற்றுக்கால், தாவரம், supporter or swing.

பற்றுக்கோடு, தஞ்சம், support, dependence. 2. as பற்றுக்கோல்.

பற்றுக்கோல், பற்றுக்கோடு, a walking staff.

பற்றுவீடு, பாசம்விடல், relinquishment of earthly attachments.

பற்றை, செங்காந்தள், the red species of November flower.

பனசம், பலாமரம், jack-tree.

பனசை, ஒரு பாம்பு, a venomous kind of snake. 2. பனையூர், name of a town.

பனந்தாமன், as பனந்தாரான் 2.

பனந்தாரான், சேரன், he who is adorned with a gold necklace like the palmyra flower—a king of the Sera dynasty. 2. பலபத்திரன், a name of Balabhadra.

பனம்பாரனார், அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரிலொருவர், he who lived in the town of பனம்பாரம் —one of the twelve disciples of Agastya.

பனம்பாரனார் சூத்திரம், ஓரிலக்கண நூல், an able treatise on grammar, a preface to தொல்காப்பியம்.

பனி, அச்சம், fear, dread. 2. பனி, dew, mist, fog. 3. குளிர், cold, coolness. 4. துன்பம், distress, suffering, sorrow. 5. நடுக்கம், trembling, quaking, shivering with cold, agitation. 6. *imp.* பனியென் னேவல், be shed, poured out, distil, flow or fall out, shiver, tremble, suffer.

பனிக்கதிர், சந்திரன், the cool-rayed —Moon.

பனிச்சை, மயிர்ச்சுருள், hair-curls, plaited hair, as one of the five modes of dressing ladies' hair. 2. காட்டத்தி, the wild mangosteen, the juice of whose fruit forms a glue—Embryopteris glutinifera.

பனிதாங்கி, ஒரு பூடு, a kind of herb.

பனித்தல், சொரிதல், being shed, poured out, distilling. 2. நடுங்கல், trembling, shivering. quaking, being agitated. 3. வருந்துதல், suffering, being in pain. 4. விடா மழை பெய்தல், raining incessantly, drizzling constantly.

பனிப்பகை, சூரியன், the foe or dispeller of dew or fog—the sun.

பனிப்பு, அச்சம், being afraid, dreading. 2. நடுக்கம், trembling, quaking, agitation.

பனிமலை, இமயமலை, snow-topped hill—the Himalaya range.

பனிமொழி, குளிர்ந்தசொல், soothing and gratifying words.

பனுவலாட்டி, சரச்சுவதி, the Goddess of science—sarasvati.

பனுவல், ஆகமம், the mystic writings of the Saivas—the agamas. 2. சொல், word, discourse. 3. நூல், science, literature. 4. பஞ்சிநூல், cotton.

பனை, அனுஷநாள், the seventeenth lunar asterism. 2. ஒரு மரம், a species of palmyra tree—Borassus flabelliformis.

பனைக்கொடியோன், பலபத்திரன், he whose ensign is the palmyra tree —Balabhadra.

பனைசை, as பனசை 2.

பனைமீன், யானைமீன், a very largefish.

பனையூர், ஓரூர், name of a town.

பன், ஒரு நாணல், a kind of grass of which mats are made; a rush, a bulrush.

பன்மணிமாலை, ஒரு பிரபந்தம், a kind of poem formed of various species of verse.

பன்மை, பலவற்றின்றன்மை, many, multiformity, plurality.

பன்மைப்பொதுப்பெயர், இருதிணைப் பொதுப் பன்மைப் பெயர், a plural noun common to both the rational and irrational classes.

பன்றி, வராகம், a hog, swine. 2. ஒரு கொடுந்தமிழ் நாடு, one of the twelve districts around the kingdom of Madura, where corrupt vulgar Tamil is spoken.

பன்றிக்கொவ்வை, ஒரு கொவ்வை, a species of the கொவ்வை plant.

பன்றித்தகரை, ஒரு தகரை, the larger and stronger species the Cassia tora.

பன்றிப்புல், ஒரு புல், a grass—Andropogan contortum.

பன்னகம், பாம்பு, a snake.

பன்னகவயிரி, கருடன், a foe to snakes—the hawk or kite.

பன்னகாசனன், கருடன், Garuda the kite, as a snake-devourer

2. விஷ்ணு, Vishnu as making a serpent his seat.

பன்னகாபரணன், சிவன், Siva as adorned with snakes.

பன்னம், (*St.* பர்ணம்) இலை, a leaf. 2. முடைதல், braiding with olas or straw, platting.

பன்னல், சொல்லுதல், speaking, saying, declaring. 2. நெருங்கல், being close, thick, crowded. 3. பருத்தி, cotton for spinning.

பன்னுசனம், புற்பாய், a grass mat used as a seat for religious exercises.

பன்னுடை, நெய்யரி, the web about the bottom of a young palmyra or cocoa-nut leaf.

பன்னுன்கு, பதினுன்கு, fourteen.

பன்னி, மனைவி, (*St.* பத்னி) a wife. 2. வினையெச்சம், *v. part* (root, பன்னு).

பா

பா, ஓரெழுத்து, a syllabic letter compounded of ப் and ஆ. 2. பாவென்னேவல், *imp.* divide, distribute, share, apportion, give. 3. வெண்பா முதலிய பா, a class of verse embracing five varieties, such as the வெண்பா, &c.

பாகசன், ஓரிராக்ஷதன், the name of a rakshasa.

பாகசாசனி, பாகசாதனி, } ஜயந்தன், Jayanta, the son of Indra. 2. அர்ச்சுனன், Arjuna, the son of Indra.

பாகசாதனன், இந்திரன், he who over-came பாகசன்—Indra.

பாகசாலை, மடைப்பள்ளி, a kitchen, cook-room.

பாகண்டன், வெளிவேஷக்காரன், a pompous, affected person, one who puts on appearances.

பாகதம், எல்லா நாட்டு மொழி, words in the vulgar tongue of any country.

பாகபுடி, குயவன் சூளை, a potter's kiln.

பாகம், ஓரளவு, a measure of the arms distended, a fathom. 2. பக்குவம், maturity, ripeness. 3. பங்கு, share, portion, lot, part. 4. பாதி, moiety, half. 5. பிச்சை, alms, charity. 6. சமையல், cooking, dressing food. 7. செய்யுள் நடை, the style of poetry, as easy or otherwise of which there are four kinds:—(1) பலாபாகம் or பனசபாகம், an easy style, like the jack fruit; (2) சிலாபாகம், a hard style, like stone; (3) கதலி பாகம், a very easy style, like a plantain; (4) நாரிகேளபாகம் or நாளிகேரபாகம், a difficult style as a cocoa-nut, which must be broken. 8. புயம், the arm. 9. பக்கம், side—right or left.

பாகலம், யானை நோய், fever in an elephant.

பாகல், பலாமரம், the jack tree, breadfruit tree. 2. பாகற்கொடி, a kind of climbing garden plant which is medicinal and whose bitter fruit is used in cooking—Momordica charantia.

பாகவதம், அஷ்டாதச புராணத் தொன்று, last of the eighteen puranas, which details the ten incarnations of Vishnu.

பாகவதர், வைணவர், the Vishnu sect, generally applied to such as are most advanced in the system.

பாகன், தேர்முதலிய நடத்துவோன், a charioteer, elephant driver, groom, muleteer, &c. 2. புதன், the planet Mercury.

பாகாரம், பிரிவுக்கணக்கு, (*in arithmetic*) division.

பாகி, நாய், a dog. 2. பக்குவன், a mature, competent, worthy or eligible person. 3. பங்குள்ளது, anything which has parts.

பாகிடுதல், பங்கிடுதல், dividing, apportioning.

பாகிநேயன், மருமகன், a sister's son, nephew (*ex.* பகினி, sister).

பாகியம், புறத்தது, that which is external, outward, strange.

பாகீரதி, கங்கை, that which was brought from heaven by பகீரதன்,

a king of the Solar dynasty—the river Ganges.

பாகு, குழம்பு, a liquid food or medicine of the consistence of jelly. 2. சர்க்கரை, coarse sugar, palm sugar. 3. பங்கு, share, portion, lot. 4. பரணி நாள், the second lunar mansion. 5. பாகன், a groom, charioteer, elephanteer, &c. 6. பாக்கு, areca-nut.

பாகுடம், அரசிறை, royal revenue, imposed tribute.

பாகுலம், கார்த்திகை மாதம், November—December.

பாகை, வட்டத்தின் முந்நூற்றறுபதிலொருபங்கு, a degree, gradation, the three-hundred and sixtieth part of the circumference of a circle. 2. சாகை, part, division, section, especially as applied to the third part of the Vedas. 3. இராசியளவு, the thirtieth part of a zodiacal sign. 4. ஒரு கால அளவு, division of time.

பாக்கம், ஊர்ப்பொது, a district in common. 2. நெய்த நிலத்தூர், a maritime district. 3. மருத நிலத்தூர், agricultural district.

பாக்கன், பூனை, a cat.

பாக்கு, எதிர்கால வினையெச்சவிகுதி, a poetic form of the future, commonly a participial affix, signifying to the end, that in order to, &c. 2. துவர்க்காய், areca-nut, betel-nut.

பாங்கர், இடம், place, location. 2. தோழர், partisans, associates, friends. 3. பக்கம், side, party.

பாங்கன், (*fem.* பாங்கி) தோழன், a man's companion.

பாங்கு, அழகு, beauty, fairness, neatness. 2. உரிமை, peculiarity, propriety. 3. பக்கம், party, favour, interest. 4. இணக்கம், accommodation, conciliation, agreeableness, suitableness. 5. முறைமை, custom, fashion, style, manners, carriage, gentility, politeness. 6. பக்கம், side, right or left.

பாசகம், மூலாக்கினி, the warmth of the stomach, gastric juice. 2. (*in arith.*) பிரிக்குமெண், divisor.

பாசகரன், காலன், the rope-armed, the messenger of Yama. 2. யமன், Yama, the God of death.

பாசகர், மடையர், cooks, those who dress food.

பாசசாலம், the innumerable entanglements of the soul caused by the illusions of பாசம்.

பாசஞானம், knowledge of the entanglements of matter.

பாசடம், வெற்றிலை, betel.

பாசடை, இலை, green leaf or blade.

பாசண்டம், பாகியம், heresy, nonconformity to the orthodox doctrines of the Hindu faith.

பாசண்டமூடம், பதிதமூடம், heretical folly.

பாசதரன், யமன், Yama as holding the cord of death.

பாசதரிசனம், see பாசஞானம்.

பாசநாசம், பந்தநாசம், annihilation of the three evil principles in the soul, by the initiation of the guru or of the deity in the form of a guru.

பாசபந்தர், பாசபெத்தர், பாசபெந்தர், those engrossed or bound by the entanglements of matter, the senses, &c.

பாசபாணி, வருணன், Varuna, the God of the waters and regent of the west-point. 2. இயமதூதன், messenger of Yama; (*literally*) the rope-armed.

பாசம், அன்பு, love, affection, attachment, kindness. 2. ஊசித்தொளை, eye of a needle. 3. கவசம், coat of mail. 4. கயிறு, cord. 5. சிவனாயுதம், யமனாயுதம், பிரமனாயுதம், the rope or noose as a weapon of Siva, Yama and Brahma. 6. பிசாசம், demon, vampire. 7. கட்டு, tie, bandage, fetter. 8. திரிபதார்த்தத்திலொன்று, (*in the agama philosophy*) one of the three eternal uncreated principles பசு-பதி-பாசம் being the illusive

power ensnaring the soul. It includes the three மலம் original and moral evils, and matter in all its forms.

பாசவைராக்கியம், பந்தம் வெறுத்தல், settled hatred of the principle of evil in the senses, leading to self-denial and rigid austerities.

பாசறை, துன்பம், suffering, distress. affliction. 2. பகைமேற்சென்றோருறைவிடம், encampment or tents of an army, a camp.

பாசறைமுல்லை, பாசறைத் தலைமகன் தலைவியை நினைத்தல், (*in love poetry*) the lover thinking of his lady when absent from her in the camp.

பாசனம், உண்கலம், an eating dish or plate. 2. உறவு, consanguinity, relations, kindred. 3. மட்கலம், an earthen vessel.

பாசன், ஜீவன், he who is fettered—the soul as subject to births and worldly attachments. 2. இயமன், Yama the God of death as holding a cord for a weapon.

பாசாங்குசன், பாசாங்குசதரன், } விநாயகன், Ganesa, as armed with a noose and an elephant-hook.

பாசி, சடைச்சி, aquatic plants. 2. நாய், a dog. 3. நீர்ப்பாசி, green weeds or moss growing on standing water, duck-weed. 4. கரிய மணி முதலியன, variegated glass beads. 5. வருணன், he who is armed with a noose or rope—Varuna.

பாசிதம், பிரித்தானது, that which is divided, a portion, a share. 2. (*in arith.*) ஈவு, quotient.

பாசிலை, பச்சிலை, a green leaf.

பாசு, பச்சை, green, greenness, verdure. 2. மூங்கில், a bamboo.

பாசுபதம், உட்சமயமாறினொன்று, the Saiva system, one of the six special Saiva sects regarding Siva, or பசுபதி, as the lord of souls.

பாசுபதர், சிவசமயத்தோர், professors of the Saiva system.

பாசுபதாஸ்திரம், சிவனஸ்திரம், an arrow or weapon given by Siva to Arjuna.

பாசுரம், வசனம், saying, declaration, communication. 2. ஞானப்பாட்டு, a hymn, a mystic poem or chant. 3. வேய்ங்குழலோசை, the melody of a bamboo pipe or flute. 4. வாசகநடை, form or tenor of a letter or writing.

பாச்சல், எழுச்சி, rising, ascent.

பாஞ்சசன்னியம், சலஞ்சலமென்னுஞ் சங்காயிரஞ் சூழ்ந்த சங்கு, the conch of Vishnu, said to be surrounded when in the sea by thousands of conchs with spirals to the right.

பாஞ்சாலம், ஒரு தேசம், one of the fifty-six countries of puranic geography.

பாஞ்சாலி, துரோபதி, the daughter of the king of Panchala—Draupati, wife of the Pandava princes.

பாடகம், காலணியிலொன்று, a female foot ornament.

பாடகன், புகழ் பாடுவோன், a panegyrist, attending the prince in his movements, pronouncing his titles and singing verses in his praise. 2. பாடுவோன், singer.

பாடணம், பேச்சு, speaking, speech.

பாடபம், see பாடவம்.

பாடம், இடையர் வீதி, a street of herdsmen. 2. தெரு, a street. 3. பாடம், lesson, task. 4. வேத பாடம், study of the Vedas, one of the பஞ்சம காயக்கியம் or sacrifices of the Hindus.

பாடம்போற்றல், கேட்ட பாடத்தைப் பலகாற் சிந்தித்தல், impressing a lesson on the memory, reflecting.

பாடலம், குதிரை, a horse. 2. இளஞ் சிவப்பு, pale red, pink or rose colour. 3. சேரன் குதிரை, the horse of king Sera. 4. பாதிரி மரம், the trumpet-flower tree—Bignonia chelonoides.

பாடலி, கள், inebriating drink—toddy. 2. as பாடலம் 4.

பாடல், சங்கீதம், song, hymn. 2. பாடுதல், singing verses from a book. 3. செய்யுள், a poem, large or small.

பாடவம், களிப்பு, animal excitement, joy. 2. வடவாமுகம், the delugefire.

பாடவள், பாடவை, } மிதுனவிராசி, Gemini of the zodiac.

பாடனம், போதித்தல், lecturing, teaching, reciting. 2. ஒத்துப் பாடல், singing in concert.

பாடன்மகடூஉ, பாண்மகள், a female of the singing class.

பாடாணதாரகம், பாடாணதாரணம், } கல்லுளி, a chisel for cutting stone.

பாடாணமுத்தி, கற்போற்கிடக்கு முத்தி, bliss like that of a stone, annihilation—as taught by the Buddhists.

பாடாணம், பாஷாணம், } கல், a stone. 2. நச்சுச் சரக்கு, arsenic including the different mineral poisons—There are two classes, பிறவிப் பாஷாணம், native arsenic and வைப்புப் பாஷாணம், prepared arsenic; each having thirty-two varieties.

பாடாண்டிணை, புறப்பொருட்டிணையி ஞென்று, a class of external objects of perception.

பாடி, ஊர், a district. 2. ஓரிராகம், a tune. 3. கவசம், armour, coat of mail. 4. சேரி, village. 5. நகரம், city, town. 6. நாடு, country. 7. படை, army, troops. 8. முல்லை நிலத்தூர், village in a jungle tract.

பாடிதம், பாஷிதம், } பேச்சு, speech, anything spoken, declaration.

பாடியம், உரை, commentary, interpretation of verses.

பாடிரம், பாடீரம், } ஒரு கிழங்கு, a root. 2. சந்தனம், sandal. 3. துத்தநாகம், zinc. 4. முகில், a cloud. 5. மூங்கிலரிசி, bamboo rice. 6. வாதம், rheumatism.

பாடிலம், நாடு, country.

பாடிவீடு, பகைமேற்சென்றோருறைவிடம், soldiers' quarters when encamped against the foe.

பாடினி, பாடுவள், a female of the singing class, a songstress.

பாடு, இடம், place, situation, location. 2. ஓசை, sound, noise, tone. 3. குணம், disposition, temperament, nature, quality, attribute, property. 4. கேடு, ruin, waste, injury, loss, damage. 5. பக்கம், side. 6. படுதல், suffering, drudgery, toil, affliction. 7. பாடென்னேவல், *imp.* sing, chant, warble as birds, hum as bees, make verses, sing verses from a book. 8. பெருமை, greatness, eminence. 9. (*in astron.*) உதயத்திற்கேழாமிடம், the seventh from the rising sign. 10. (*in astron.*) அஸ்தமனம், the setting of a planet, the heliacal setting of a planet.

பாடுவன், (*fem.* பாடுவள்—பாடுவாள்) பாடுவான், a singer.

பாடை, ஆசந்தி, bier. 2. சொல், language, tongue, speech.

பாட்சிகன், குருவி வேட்டுவன், a fowler, a bird-catcher.

பாட்டகம், வைசூரி, chicken-pox.

பாட்டப்பிரபாகரம், பாட்டாப்பிரபாகரம், } ஒரு மதம், the religion of a sect who regard the vedas as deity.

பாட்டம், அச்சல் மழை, a shower of rain. 2. பலகாரம், cakes, pastry (பிங்.). 3. பாட்டாசாரியம், one of the six exterior systems of religion—the system founded by Battacharya.

பாட்டன், மூதாதை, a grandfather.

பாட்டாசாரியன், the founder of the system.

பாட்டி, பெண் பன்றி, பெண்ணாய், பெண்ணரி முதலிய ஒருசார் விலங்கின் பெண் பொது, a name in general applied to certain she-animals, such as a sow, a bitch, a she-jackal, &c. 2. பாடுவள், a

songstress. 3. மூதாய், a grandmother.

பாட்டியல், ஒரு நூல், a book on poetry. 2. செய்யுளிலக்கணம், that part of Tamil grammar which treats of poetry. 3. கனம்-நயம்-தேசிகம், the name of three different modes of singing.

பாட்டு, இசைப்பா, a song, hymn, ode, poem as sung or adapted to music. 2. செய்யுள், a verse, poetry, a poetic verse or stanza.

பாட்டுடைத்தலைவன், பாட்டுநாயகன், } கவியுடைத்தலைவன், the hero of a poem.

பாட்பம், கண்ணீர், tears.

பாணகோசரம், சரகதி, the velocity of an arrow.

பாணம், அம்பு, arrow, dart. 2. வாணம், fireworks, rockets, &c. 3. மழை வண்ணக் குறிஞ்சி, a species of குறிஞ்சி tree that yields sky-coloured flowers—Lawsonia spinosa. 4. பட்டு, silk.

பாணர், புகழ்ந்து பாடுவோர், panegyrists, attending a prince, to pronounce his titles and sing verses in his praise. 2. தையற்காரர், tailors.

பாணி, இசைப்பாட்டு, a song as sung. 2. ஊர்சூழ்சோலை, groves around a town or village—one of the four defences. 3. கள், toddy. 4. காலம், time. 5. கூத்து, a kind of dramatic entertainment with dancing. 6. கை, hand, arm. 7. சங்கீதம், a chant with an accompaniment. 8. சொல், word, declaration, speech. 9. தாமதம், delay, procrastination. 10. நீர், water. 11. பலபண்டம், stores, provisions. 12. பாகு, molasses, treacle.

பாணிக்கிரகணம், கலியாணம், taking the (bride's) hand as a part of the marriage ceremony.

பாணித்தல், பொழுது நீட்டித்தல், protracting time, delaying.

பாணினி, ஓரிலக்கண நூலாசிரியன், Panini—a famous Sanskrit grammarian.

பாணினியம், பாணினீயம், } ஒரு வடமொழி இலக்கணம், a Sanskrit grammar by Panini.

பாண், இசைப்பாட்டு, singing, vocal music-song, musical mode. 2. கள், toddy.

பாண்செயல், பாடல், singing.

பாண்டம், பாத்திரப்பொது, a vessel in general, a pot, cup, plate, &c. 2. மட்கலம், an earthen vessel. 3. (*fig.*) உடல், the body.

பாண்டரங்கம், சிவன்கூத்து, dancing of Siva in his assemblies or according to the mystic theology, the divine operations in creation.

பாண்டரங்கன், சிவன், Siva, as the actor in the universe.

பாண்டரம், வெண்மை, whiteness, paleness.

பாண்டவர், பாண்டுபுத்திரர், the five Pandava princes, famous in the Bharata; also called பஞ்சபாண்டவர்.

பாண்டவர் முன்பிறந்தோன், கன்னன், the elder brother of the Pandavas by the same mother—Karna.

பாண்டி, ஒரு தேயம், the ancient Madura kingdom. 2. ஒரு பண், a melody.

பாண்டிகன், பள்ளியெழுச்சி பாடுவோன், a singer, one who chants early in the morning to waken a God or a great personage from sleep—also வைதாளிகன்.

பாண்டித்தியம், கல்வித் திறம், scholarship, learning.

பாண்டியம், பாண்டிமண்டலம், } பாண்டியன் தேயம், the ancient Madura kingdom.

பாண்டியன், பாண்டிதேயத்தரசன், a king of Madura of the lunar dynasty or any prince of that line.

பாண்டில், அகல், a bowl, a shallow pot, cup, &c. 2. இடபவிராசி, Taurus of the zodiac. 3. எருது,

a bull. 4. கட்டில், a bedstead. 5. கைத்தாளம், cymbals. 6. நாடு, country, territory. 7. பண்டி, a carriage, cart. 8. மூங்கில், bamboo. 9. வட்டம். a circle. 10. வாகைமரம், a tree—Mimosa.

பாண்டு, ஒரு நோய், a kind of chronic jaundice causing paleness, and bloatedness of the body. 2. குருகுலத்தரசரு ளொருவன், a sovereign of ancient Delhi, the nominal father of the five Pandava princes, being a white man. 3. வெண்மை, whiteness, paleness.

பாண்டுமைந்தர், தருமராஜன் முதலேவர், the five Pandava princes of whom Uthishdra was the eldest—as reputed sons of Pandu.

பாண்டுரம், வெண்மை, whiteness, paleness. 2. ஒரு நோய், jaundice.

பாண்மகள், (*mas.* பாண்மகன்) பாடுபவள், a singing woman of the பாணர் tribe.

பாதகடகம், பாடகம், a female foot-ornament.

பாதகம், பாவம், a heinous sin.

பாதகர், (*sing.* பாதகன்) கீழ்மக்கள், vile, desperate sinners.

பாதக்காப்பு, செருப்பு, slippers, clogs.

பாதசன், சூத்திரன், a man of the fourth or Sudra tribe, as born from the feet of Brahma.

பாதசாகை, கால்விரல், a toe.

பாதசாபலியம், as பாததாடனம்.

பாதசாரம், கிரகநடை, motion of the planets.

பாதசாரி, காலாள், a foot-man, a foot-soldier.

பாதசாலம், காலணிப்பொது, foot ornaments in general.

பாததாடனம், உதை, kicking with the foot.

பாததீட்சை, திருவடித்தீட்சை, a kind of தீட்சை or species of illumination.

பாதபம், மரப்பொது, a tree in general.

பாதபரிசம், சீதாங்க பாஷாணம், a kind of native arsenic.

பாதப்பிரகாரம், as பாததாடனம்.

பாதப்பிரட்சாளனம், கால் கழுவுகை, washing the feet.

பாதப்பிரதாரணம், பாதரட்சை, shoes, slippers, clogs or sandals.

பாதமயக்கு, அடிமயக்கு, transposing the lines of a verse without destroying the sense.

பாதம், கால், foot, the leg of a person, animal, article of furniture, &c. 2. நாலிலொன்று, a fourth part, quarter. 3. பாட்டினடி, line of a stanza. 4. வட்டத்தின் காற்பங்கு, quadrant of a circle, ninety degrees. 5. சரிதை முதலிய நிலை, the four degrees in the Saiva system. 6. வீழ்கை, falling, descending, prostration.

பாதரசம், பாதாரதம், } இரதம், mercury or quicksilver.

பாதராயணன், வேதவியாசன், an epithet of Vyasa.

பாதரோகணம், அரசமரம், a tree—Ficus religiosa.

பாதலம், பாதாளம், the abyss, the infernal regions.

பாதலவாழ்நர், நாகர், the inhabitants of the world or region under the earth.

பாதவம், கொல்லை, a garden. 2. மரப்பொது, a tree in general. 3. மலை, hill, mountain.

பாதக்கிராந்தன், அடிவணங்குவோன், a worshipper at the feet, an expectant.

பாதாக்கிரம், கானுனி, the tip of the foot, end of the great toe.

பாதாங்குஷ்டம், கால்பெருவிரல், the great toe.

பாதாசனம், பாதபீடிகை, footstool.

பாதாதிகேசம், பாதமுதற் சிகை பரியந்தம், from foot to head. 2. ஒரு பிரபந்தம், the name of a species of poem describing a female from head to foot.

பாதார்த்தம், அரைக்கால், the eighth part of unit.

பாதாளகங்கை, பாதாளவாகினி, } கீழுலக நதி, the Ganges of the abyss.

பாதாளகிரகணம், காணுக்கிரகணம், an invisible eclipse. 2. an eclipse partly visible and partly invisible.

பாதாளமூலம், பாதாளமூலி, } சீந்தில்கொடி, a medicinal creeper—Menispermum cordifolium. 2. ஆடுதின்னுப் பாலை, a plant—Aristolochia bracteata. 3. ஒரு கறையான், a kind of white ant.

பாதாளம், கீழுலகம், the infernal regions under the earth, the supposed abode of Nagas. 2. நரகம், hell. 3. கீழேழுலகத்தொன்று, any of the lower worlds, especially the lowest. 4. the fourth sign from that in which the sun is present.

பாதாளவஞ்சனம், பூமிக்குட் பொருளைத் தெரியக்காட்டு மை, a kind of magic, by which things deep in the earth are discovered.

பாதி, அரை, half, moiety. 2. பங்கு, part, share, proportion.

பாதிடல், பங்கிடல், apportioning, distributing. 2. நெருக்கல், narrowing, contracting, compressing. 3. காத்தல், preserving.

பாதித்தல், பாதி செய்தல், halving, dividing into two parts.

பாதித்தியம், பதிதம், apostasy, departure from professed principles.

பாதிமதி, அர்த்தசந்திரன், half moon.

பாதிரி, ஒரு மரம், the trumpet-flower tree—Bignonia chelonoides. 2. மூங்கில், bamboo.

பாதீடு, செறித்தல், compressing. 2. பாதுகாத்தல், securing, keeping carefully. 3. பங்கிடல், division, sharing.

பாதுகம், பாதகுறடு, sandals, defence for the foot—wooden slippers.

பாதுகாசகஸ்திரம், ஒரு நூல், a poem in praise of a God's sandals.

பாதுகாசித்தி, அந்தரத்தில் மிதியடி மேல் நடத்தல், the power of passing at will through the sky to any distant place, by putting on a pair of magical sandals.

பாதுகாத்தல், ஓம்பல், protecting, defending, preserving, guarding, taking care of.

பாதுகை, see பாதுகம்.

பாதுனசந்திரன், (*in astron.*) nodal distance of the moon.

பாதேயம், கட்டுச்சோறு, that which is put up for a journey—boiled rice or other provisions tied for a journey.

பாதை, மரக்கலம், a navigating vessel in general. 2. வழி, a footpath, a beaten way.

பாதோதகம், பாததீர்த்தம், water in which the feet of an idol or guru have been washed.

பாத்தம், எல்லா நாட்டிலும் வழங்கு மொழி, words in the vulgar tongue of any country.

பாத்தி, சிறுசெய், any small cultivated spot or patch. 2. பங்கு, division, share, part, portion. 3. வீடு, house, dwelling, abode.

பாத்தியம், சம்பந்தம், connection, affinity, relation, agreement. 2. பெரியோர்கட்குப் பாதங்கழுவக் கொடுக்கு நீர், water for washing the feet of great persons. 3. பாதங்கழுவல், bathing the feet of the idol or of a holy person.

பாத்திரச்சுரை, ஒரு சுரை, a kind of gourd of which the shell is used as a vessel.

பாத்திரபதம், புரட்டாசி மாதம், the month of September—October.

பாத்திரம், இரப்போர்கலம், mendicant's vessel for alms. 2. உண்கலம், an eating vessel. 3. தகுதி, fitness, worthiness, merit, desert, propriety. 4. புரட்டாசி மாதம், the month of September-October. 5. கொள்கலம், a vessel in general, cup, pot, jar, plate. 6. தக்கோன், a worthy or qualified person.

பாத்திரீரம், காணிக்கை, an oblation, an offering.

பாத்திரை, இரப்போர்கலம், an earthen or other pot used in begging.

பாத்தில், வீடு, house, residence.

பாத்து, கஞ்சி, rice, gruel, congee. 2. சோறு, boiled rice. 3. பங்கு, division, portion, share, part. 4. பாதி, half, moiety, middle.

பாந்தம், பகரவீறு, termination of words in ப. 2. ஒழுங்கு, order, regularity, system, propriety.

பாந்தல், பதுங்கல், skulking, stooping to hide one's self.

பாந்தவம், பாந்தவியம், } பந்துத்துவம், affinity, relationship.

பாந்தள், பாம்பு, a snake. 2. பெரும் பாம்பு, mountain snake.

பாந்தன், வழிச்செல்வோன், passenger, traveller, wayfarer.

பாந்து, பதுங்கு, skulk, hide, slink away.

பாபக்கிரகம், பகைக்கோள், (*in astrol.*) any unfavourable or inauspicious planet—as Saturn, Mars, Rahu or Kethu.

பாபசமனம், பாவப்பரிகாரம், removing sin.

பாபத்தி, வேட்டை, hunting, the chase, fishing.

பாபம், பாவம், sin, crime, wickedness.

பாபி, பாவி, a sinner, a perpetrator of evil deeds.

பாப்புரி, see பாம்புரி.

பாமகள், பாமடந்தை, } சரஸ்வதி, the Goddess of poetry and learning—Sarasvati.

பாமம், கோபம், anger. 2. பிரவை, light, lustre. 3. தினவு, itching. 4. பரப்பு, extension.

பாமரம், அறிவின்மை, ignorance, stupidity, doltishness, idiotism.

பாமரன், அறிவிலான், an ignorant, stupid person, an idiot, a dolt. 2. கீழ்மகன், a vile, low, base person.

பாமன், சூரியன், sun. 2. மைத்துனன், cousin or brother-in-law.

பாமாலை, கவிமாலை, an encomium in poetry of some personage.

பாமுதல்வி, see பாமகள்.

பாம்பாட்டிச்சித்தர், ஒரு சித்தர், an author of the சித்தர் class.

பாம்பு, அரவு, a snake, serpent. 2. ஆயிலியநாள், the ninth lunar asterism.

பாம்புகொல்லி, a plant.

பாம்புதின்னி, முண்ணுயகி, a kind of poisonous herb, the leaves of which are used with other ingredients to extract thorns.

பாம்புரி, அகழி, a moat, a ditch round a fort (as the skin surrounds the snake). 2. பாம்புச் சட்டை, snake's skin.

பாயசம், பாற்சோற்றிச்செடி, a kind of shrub—Ruellia. 2. பாற் சோறு, rice boiled in milk.

பாயல், மக்கட்படுக்கை, a bed or convenience for sleeping.

பாயிரம், முகவுரை, preface, introduction, preamble, prologue. 2. (ஸ்காந்.) பொழிப்புரை, synopsis, compend, syllabus.

பாயு, குதம், anus, fundament.

பாய், கப்பலில் விரிக்கும் பாய், the sail of a vessel. 2. படுக்கும் பாய், a mat.

பாய்ச்சல், பாய்தல், bounding, galloping, jumping, leaping, springing.

பாய்தல், குதித்தல், springing, leaping, pitching, plunging, floundering. 2. தாண்டல், leaping, jumping. 3. தாவல், moving suddenly, springing. 4. பரவுதல், flowing and spreading as water, light, &c., extending, diffusing.

பாய்த்தல், பாயச்செய்தல், leading or conducting water, irrigating, infusing, inserting. 2. குத்து, thrust, thrusting in. 3. கடப்பு, passing over. 4. தாவல், leaping, jumping, bounding.

பாய்மா, குதிரை, leaping animal—a horse. 2. புலி, tiger.

பாய்விரி, பசிரி, a vegetable, purslane —Portulaca quadrifolia.

பாரகம், திரைச்சீலை, a curtain. 2. பூமி, the earth. 3. கடக்கை, crossing, going over.

பாரகர், கரைகண்டோர், persons learned, versed in; (*lit.*) able to conduct one across a river; *i.e.*, from the world to bliss, &c.

பாரங்கதன், கல்வியிற் கரைகண்டவன், one who is versed in a science.

பாரசவன், பார்ப்பானுக்குச் சூத்திரிச்சிபெற்ற பிள்ளை, offspring of a Brahman by a Sudra wife.

பாரசிகை, பருந்து, a hawk, falcon, kite.

பாரணம், பாரணை, } சோறுண்டல், eating, taking food. 2. உபவாசமிருந்துண்ணல், eating or drinking at the close of a fast.

பாரதம், இரதம், quicksilver. 2. ஐந்தாம் வேதம், the Bharata or great sacred epic poem, sometimes called the fifth Veda. 3. பாரத வருடம், the Bharata region of India.

பாரதர், குருகுலவேந்தர், the descendants of king Bharata, the son of Dushdyanta, the Pandavas and Kurus whose exploits are related in the Bharata.

பாரதவருடம், பரதகண்டம், the Bharata region of India.

பாரதாரிகன், விபசாரன், an adulterer.

பாரதி, சரஸ்வதி, the Goddess of speech—Sarasvati. 2. மரக்கலம், a sailing vessel.

பாரதிகொழுநன், பிரமன், the husband of Sarasvati—Brahma.

பாரதிதீபம், ஒரு நிகண்டு, the name of a negundu or poetic lexicon.

பாரத்துவாசம், கரிக்குருவி, a kind of black bird, the sky-lark. 2. வலியன், a quail.

பாரத்துவாசன், பாரத்துவாசி, } ஒருரிஷி, he who was nursed by a lark—the rishi Bharadvaja. 2. துரோணாசாரி, Dronacharya, teacher in archery of the Pandavas and Kurus.

பாரபட்சம், பட்சபாதம், partiality, preference, bias, a leaning unreasonably or unfairly to one side or party; respect of persons.

பாரமுகார்க்கியம், சிவனைம்முகப்பூசை, oblations presented to the five faces of Siva.

பாரமேச்சுரம், சிவாகம இருபத்தெட்டினொன்று, one of the twenty-eight agamas of the Saivas.

பாரம், கரைப்பொது, bank, border. 2. கல்லணை, saddle. 3. கவசம், mail, coat of mail. 4. சுமை, burden, load, pressure. 5. நிறை, a weight of five-hundred pounds, being twenty-eight துலாம் or twenty maunds. 6. பூமி, the earth, world. 7. வரம்பு, boundary, limit, extremity.

பாரம்பரியம், முறைமை, continual or hereditary order, unbroken succession. 2. ஐதிகம், tradition.

பாராகம், உபநிஷத முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two upanishads.

பாராசரி, பாராசரியன், } வியாசன், the son of பராசரன்—Vyasa the compiler of the vedas.

பாராசரியகற்பிகன், பராசரநூற்படி நடப்போன், he who walks according to பாராசரியம்.

பாராசாரியம், சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two systems of architecture. 2. பராசரம், one of the eighteen law books.

பாராட்டல், கொண்டாடல், celebrating, making much of, applauding, &c.

பாராட்டு, கொண்டாடல், celebration, applause, caressing, &c. 2. பாராட்டென்னேவல், *imp.* celebrate, make much of, applaud, caress, &c.

பாராட்டுந்தாய், ஐவகைத் தாயி லொருத்தி, a nurse to divert a child—one of the five kinds of nurses.

பாராயணம், நியமமாக ஓதுதல், recitation of the Veda, according to rule, morning and evening, and on special occasions, with the performance of puja.

பாராயணர், குறிக்கொள்வோர், persons who have their heart and mind in one pursuit or object. 2. பார்ப்பார், reciters of the veda.

பாராவதம், கரும்புறு, the black dove. 2. புறுப்பொது, a dove or pigeon in general.

பாராவலையம், பாராவளையம், } வளைதடி, a curved club.

பாராவாரம், கடல், sea, ocean. 2. கடற்கரை, sea-shore.

பாரி, கடையெழுவள்ளலி லொருவன், one of the last or seventh class of kings famed for liberality. 2. கட்டில், bedstead. 3. நற்சீலை, fine cloth. 4. பாரியென்னேவல், *imp.* cause to appear, produce, appear, come into being, arise, spread, lay open. 5. பூமி, the earth, world. 6. மனைவி, a lawful wife.

பாரிசகிரகணம், பக்கக்கிரகணம், a partial eclipse.

பாரிசம், பக்கம், side.

பாரிசாதம், ஐந்தருவிலொன்று, one of the five ever-greens of Swerga. 2. பவளமல்லிகை, the coral tree —Nyctanthes.

பாரிசேடப்பிரமாணம், law of deduction by exception.

பாரிசேடம், ஒழிபளவை, (*in logic*) one of the modes of reasoning or of discovering truth by exception or implication.

பாரிசேடவனுமானம், deduction or inference by exception.

பாரிஷதன், பார்ப்போன், a spectator.

பாரிடம், பூதகணம், companies of Bhutas, goblins, fiends, demons. 2. பூமி, earth.

பாரித்தல், உண்டாக்கல், producing, causing to exist. 2. தோற்றல், appearing, coming into existence. 3. பரப்பல், spreading, laying open.

பாரியை, see பாரி 6.

பாரை, கடப்பாரை, a crowbar.

பார், உரோகணி நாள், the fourth lunar asterism. 2. தேரின் பரப்பு, floor of a carriage or car. 3. பாரென்னேவல், *imp.* look, look through, revise, see, view, notice, worship. 4. பூமி, earth, world. 5. கரை, a bank or border.

பார்க்கவம், அஷ்டாதச புராணத் தொன்று, a composition of Bhargava—one of the eighteen puranas.

பார்க்கவன், சுக்கிரன், the son of Bhrigu, an ancient rishi—Venus, or the regent of that planet.

பார்க்கவி, இலக்ஷ்மி, Lakshmi.

பார்த்தல், காணல், seeing, viewing, noticing. 2. வணங்கல், worshipping.

பார்த்தன், அர்ச்சுனன், the son of Bhiradai—Arjuna one of the Pandavas. 2. கார்த்தவீரியன், one of the six great autocrats.

பார்த்திவம், பூமி, the daughter of Prithu—earth, world.

பார்த்திவன், அரசன், lord of the earth—king.

பார்த்தீப, ஓராண்டு, the nineteenth year of the Hindu cycle.

பார்ப்பதி, பார்வதி, Parvati, the Goddess, as mountain-born.

பார்ப்பதிகொழுநன், சிவன், Siva, as husband of Parvati.

பார்ப்பனச்சேரி, பார்ப்பார்சேரி, a Brahman village.

பார்ப்பனத்தி, பார்ப்பனி, பார்ப்பினி, } பிராமணத்தி, a female of the Brahman caste.

பார்ப்பனமாக்கள், பார்ப்பார், Brahmans.

பார்ப்பு, கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை, the young of animals living on trees, as the ape, &c.

2. தவழ்ஜாதியின் பிள்ளை, the young of frogs, toads, lizards and others of this tribe. 3. பறவைக் குஞ்சு, young of the feathered and flying races. 4. மான்கன்று, young of deer, a fawn.

பார்மகன்சாரி, பச்சைக் கர்ப்பூரம், crude camphor.

பார்மிசையோன், புத்தன், Buddha, as the leader of his sect.

பார்வணம், யாகமிருபத்தொன்றி ஞென்று, one of the twenty-one sacrifices.

பார்வதி, see பார்ப்பதி.

பார்வதிகொழுநன், see பார்ப்பதி கொழுநன்.

பார்வல், as பார்ப்பு, the young of several creatures (ஸ்காந்.).

பார்வை, கண், the eye. 2. மதிப்பு, inspection for the purpose of estimating.

பாலகன், பாலன், } குழந்தை, an infant. 2. பையல், a youth, a lad, a boy under five, or seven or according to some, sixteen years. 3. காப் போன், a protector, a guardian.

பாலடை, ஒரு செடி, a shrub—Hallia scroria.

பாலம், ஆற்றுப்பாலம், a bridge, pier, jetty, projecting wharf, embankment. 2. நெற்றி, the forehead. 3. பூமி, earth, world. 4. மரக்கொம்பு, branch of a tree. 5. மழு, a testing iron applied red-hot to the hand to prove guilt or innocence.

பாலரசம், பொன்னிறம், gold colour.

பாலர், இடையர், herdsmen, shepherds. 2. பிள்ளைகள், children.

பாலலீலை, குழந்தை விளையாட்டு, children's play.

பாலலோசனன், நெற்றிக்கண்ணன், Siva as frontal-eyed.

பாலவம், கரணம் பதினொன்றி ஞென்று, the Tiger constellation.

பாலவரை, ஓரவரை, pulse of a white kind—Lablab cultratus.

பாலனம், பாதுகாப்பு; protection, preservation, defence.

பாலனன், காப்போன், protector, defender, guard.

பாலி, ஆலமரம், the banyan tree. 2. கள், the fermented sap of a palm tree. 3. பாலியென்னேவல், *imp.* keep, preserve, maintain, give. 4. ஒரு பாஷை, the sacred language of the Buddhists.

பாலிகை, உதடு, lips. 2. படை வாளின் முட்டி, the handle of a sword. 3. முளை தெளிக்கும் பாலிகை, pots with the earth, in which seeds are sprouting, placed before a new married couple, as an auspicious sight. 4. வட்டம், a circle, anything round. 5. ஆயுதத்தின் கூர், the sharp edge of a cutting instrument. 6. பெண், a young damsel.

பாலித்தல், ஈதல், giving, bestowing. 2. காத்தல், keeping, protecting, preserving, maintaining.

பாலியம், இளமை, youth, juvenility. 2. குழந்தைப் பருவம், infancy, childhood.

பாலுகம், கர்ப்பூரம், camphor.

பாலை, ஒரு நிலம், arid, desert tracts, one of the five species of land. 2. ஒரு மரம், the iron-wood tree —Mimusops hexandrus. 3. ஒரு வகைப் பாடல், a kind of poem. 4. கடல், sea, ocean. 5. மிருகசீரிஷ நாள், the fifth lunar asterism. 6. புநர்பூச நாள், the seventh lunar asterism. 7. கலவியிற் பிரிதல், (*in love poetry*) temporary separation of lovers. 8. பாலைப்பண், air, tune, melody in music.

பாலைக்கருப்பொருள், men, beasts, things. &c., the adjuncts of arid tracts. They are:—1. பாலைத் தெய்வம், the Goddess, Durga, துர்க்கை. 2. பாலைக் குடிகள், inhabitants, the வேடர் or hunter caste. 3. பாலைத் தலைவன், the chief, as காளை. 4. பாலை நிலத் தூர், the village, as குறும்பு. 5. பாலைநீர், well-water. 6. பாலைப் பண், the melody, as பஞ்சுரம்.

7. பாலைப் பறை, a small drum, as துடி. 8. பாலைப் புள், the birds, as the dove, புறு, kite, பருந்து, and eagle, கழுகு. 9. பாலைப் பூ, the flowers, as of பூளை, பாலை and கள்ளி plants. 10. பாலைமரம், the trees, as குரா and மரா. 11. பாலை நில மாக்கள் தொழில், occupation of the inhabitants—mostly plundering, கொள்ளையாடல். 12. பாலை மாக்களுண், the food, plunder—on which they principally subsist. 13. பாலை விலங்கு, the animals, a wild dog that chases tigers. 14. பாலை யாழ், a lute of the desert tracts.

பாலைக்கிழத்தி, துர்க்கை, she who is peculiar to arid, desert tracts—Durga.

பால், இடம், place, location, situation. 2. உரிமை, right, title, propriety. 3. குணம், nature, quality, property. 4. பக்கம், side, region, quarter, point of the compass. 5. பங்கு, part, portion, share. 6. பாதி, half, moiety, middle. 7. பால், milk, lymph, matter, fluid in pustules, &c. 8. வெண்மை, whiteness. 9. ஐம்பால், (*in gram.*) any of the five divisions of number and gender. 10. ஏழனுருபு, a sign of the ablative case. 11. ஊழ், fate, destiny, fruit of actions good or bad.

பால்பகாவஃறிணைப் பெயர், neuter nouns without distinction of number.

பால்முடங்கி, ஒரு பூடு, a kind of medicinal plant.

பால்வழு, (*in gram.*) misuse of number or gender.

பாவகம், இயல்பு, natural state, nature, state or condition of being. 2. கருத்து, meaning, purpose, intention. 3. கொலை, murder. 4. தோற்றம், appearance, dress, figure, form. 5. உள்ளன்பு வெளியிடல், external expression of amatory feelings.

பாவகன், தூய்மை செய்வோன், a purifier. 2. நெருப்பு, fire. 3. அக்கினி தேவன், the God of fire. 4. சொரூபி, one possessed of form or shape.

பாவகி, முருகன், the son of fire—Skanda.

பாவசேஷம், ஊழின் மீதி, remaining demerit of souls at the close of a term of existence to be expiated afterwards.

பாவட்சயம், பாவநாசம், destruction of the accumulated demerit of sin attaching to the soul.

பாவட்டை, ஒரு செடி, a flowering shrub whose root is used as an aperient—Pavitta Indica.

பாவமூர்த்திகள், வேடர், those whose very shape is the effect of sin—hunters who live by the chase.

பாவயோனி, பாவப் பிறப்பு, a sinful birth.

பாவலர், கவிகள், those who are skilled in versification—scientific persons. 2. புலவர், poets, bards.

பாவல், பாதக்குறடு, wooden sandals.

பாவனம், தூய்மை, purity. 2. தூய்மை செய்வது, purification, expiation.

பாவனன், சுத்தி செய்வோன், purifier. 2. அனுமான், Hanuman. 3. பீமன், Bhima.

பாவனாதீதம், மனதிற்கெட்டாதது, that which is above conception.

பாவனை, எண்ணம், imagination, conception, fancy. 2. தியானம், religious and abstract meditation. 3. பாவனாரூபம், reminiscence, subject of mental contemplation—as the image of deity, formed in the mind.

பாவாணர், புலவர், poets.

பாவாபாவம், உண்மையின்மை, existence and non-existence, entity and non-entity.

பாவார்த்தம், பதப்பொருள், signification of a word.

பாவி, தீயோன், a sinner, a barbarian, savage. 2. பாவியென்னேவல், *imp.* imagine, conceive, imitate, feign.

பாவிகம், ஓரலங்காரம், one of the thirty-five figures of language, moral instruction, inference, application, &c., from events related in epic poems. 2. இறப் பெதிர்வை நிகழ்வெனக் கூறுமலங் காரம், a figure describing the past or future as present.

பாவினம், பாக்களின்வகை, the varieties or subdivisions of verse.

பாவுதல், தாண்டல், leaping, jumping over.

பாவை, சித்திரப்பாவை, statue, image, picture, portrait. 2. பெண், a woman, lady, damsel. 3. மதில், a wall.

பாழி, அகலம், width, extension. 2. உரை, comment, exposition. 3. ஊர், a village, town. 4. குகை, a cave, a mountain cavern. 5. சயனம், sleeping place, bed, couch. 6. தேவர் கோயில், temple or sacred fane. 7. பகைவரூர், an enemy's village. 8. பெருமை, greatness, superiority, eminence. 9. மருதநிலத்தூர், agricultural village or town. 10. முனிவர் வாசம், hermitage, abode of munies. 11. வலி, vigour, force, strength. 12. விலங்கின் படுக்கை, lair, den, litter of a beast.

பாழ், பாழென்னேவல், *imp.* go to ruin, be laid waste, be inauspicious. 2. பாழ்த்தல், being ruined, corrupted. 3. சூனியம், vacuum of the mind, mental abstraction, &c.

பாழ்த்தல், see பாழ் 2.

பாழ்வெளி, அந்தரவெளி, the vast expanse or vacuum in which the deity is supposed to dwell.

பாளி, அடையாளம், sign, signal, mark. 2. பாசறை, encampment, camp.

பாளிதம், கண்ட சர்க்கரை, sugar-candy. 2. கர்ப்பூரம், camphor. 3. சோறு, boiled rice. 4. பட்டுச் சீலை, silk cloth. 5. பாற்சோறு, rice boiled in milk.

பாளை, கமுகு, தெங்கு, பனை முதலிய வற்றின் பாளை, flower-sheath or spatha of the areca, cocoa, palmyra, &c.

பாளையம், பாசறை, camp, encampment.

பாறல், இடபவிராசி, Taurus of the zodiac. 2. எருது, a bull. 3. ஓடல், running, fleeing, flight. 4. பொதி யெருது, a pack-ox. 5. பொருதல், fighting, joining battle.

பாறு, பருந்து, hawk, kite, falcon. 2. பாறென்னேவல், *imp.* run, flee, flight, join battle. 3. மரக்கலம், a navigable *dhoney*.

பாறை, திட்டை, hillock, bank.

பாற்கடற்பிறந்தாள், இலக்ஷ்மி, she who was born in the sea of milk —Lakshmi.

பாற்கரம், உபநிஷதத்தொன்று, one of the thirty-two Upanishads.

பாற்கரன், சூரியன், the sun. 2. ஒரு ககோள நூலாசிரியன், a Hindu astronomer.

பாற்குனம், பங்குனி மாதம், the month of a part of March and of April.

பாற்குனி, உத்திரநாள், the twelfth lunar asterism.

பாற்குனிகம், see பாற்குநம்.

பாற்கொவ்வை, ஒரு கொவ்வை, a species of கொவ்வை creeper.

பாற்சோற்றி, ஒரு பூண்டு, a kind of plant—Ruellia secunda.

பாற்பீர்க்கு, வெண்பீர்க்கு, a whitish kind of gourd—Cucumis sulcatus.

பாற்றுத்தம், வெண்டுத்தம், white vitriol, sulphate of zinc.

பானசியர், சமையல் செய்வோர், cooks.

பானம், கள், toddy or other fermented liquor. 2. குடித்தல், drinking. 3. நீர்த்த உணவு, liquid food, spoonmeat. 4. பருகுவன, drink, beverage.

பானல், கருங்குவளை, the blue-lotus —Pontidaria. 2. மருதநிலம், agricultural land. 3. வயல், rice field.

பானுள், பாதி நாள், mid-day or mid-night.

பானி, படை, army, troops. 2. பானஞ் செய்வோன், one who takes liquid food.

பானீயம், நீர், water.

பானு, சூரியன், the sun. 2. சிற்ப நூன் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two shastras which teach architecture and other mechanical arts.

பானுமைந்தன், யமன், the son of the sun—Yama, the messenger of death. 2. சனி, Saturn, the planet. 3. கன்னன், Karna, the munificent prince. 4. சுக்கிரீவன், Sugriva, king of Rama's monkey-forces.

பானுவாசரம், பானுவாரம், } ஞாயிற்றுக்கிழமை, Sunday.

பானை, மிடா, a pot, a vessel.

பான், எதிர்கால இடைச்சொல், one of the forms of the future participle.

பான்மயக்கம், (*in gram.*) allowed use of the singular number for the plural or the contrary.

பான்முளை, the germ of fate (நீதி நெறி).

பான்மை, குணம், nature, quality, property. 2. பங்கு, division, portion, class. 3. தகுதியுடைமை, propriety, right, decorum, fitness.

பி

பி, ஒரெழுத்து, a syllabic letter compounded of ப் and இ.

பிகபந்து, மாமரம், the mango tree, as the resort of the பிகம்.

பிகம், குயில், the koil bird, Indian cuckoo; a bird celebrated in Indian poetry for the sweetness of its notes.

பிங்கதிருஷ்டி, சிங்கம், the tawny eyed—a lion.

பிங்கம், பொன்மை கலந்த சிவப்பு, a tawny reddish colour.

பிங்கலந்தை, ஒரு நிகண்டு, a Tamil lexicon by பிங்கலன்.

பிங்கலம், see பிங்கலந்தை. 2. பொன், gold. 3. பொன்மை நிறம், gold colour, yellow. 4. வடக்கு, north.

பிங்கலன், ஒரு நிகண்டாசிரியன், the author of பிங்கலந்தை, lexicon. 2. குபேரன், a king of great wealth—Kuvera.

பிங்கலை, ஆந்தை, a small owl. 2. சூரியசரம், the solar nerve or vessel—a vessel of the body, the right of the three canals which pass from the *os* coccygis to the head, and right nostril, being the chief passage of breath and air, according to yoga philosophy. 3. பார்வதி, Parvati. 4. தசநாடியி னொன்று, one of the ten nerves beginning from the great toe of the left foot, and passing up to the right nostril, crossing the இடைநாடி in five different places. 5. தென்றிசை யானைக்குப் பெண் யானை, the female elephant of the south point.

பிங்கள, ஓராண்டு, the fifty-first year of the Hindu cycle.

பிங்களம், வஞ்சகம், guile, deception, insincerity, &c. see விங்களம்.

பிங்களை, தென்றிசை யானைக்குப் பெண் யானை, the female elephant of the south point. 2. மக்களாயு ளின் முப் பருவத்தொன்று, one of the three seasons of life.

பிசங்கம், பொன்மை கலந்த சிவப்பு, yellowish red, tawny colour, brown.

பிசண்டம், பிசிண்டம், } வயிறு, belly or stomach. 2. விலங்கின் முதுகு, the back of a beast.

பிசம், இறகு, feather, wing.

பிசனம், செஞ்சந்தனம், red sandal.

பிசி, அரும் பொருள், something rare, choice, valuable. 2. சோறு, boiled rice. 3. பொய், a lie, falsehood. 4. நுண் பொருள், anything sublime, deep; or displaying great acumen, in language.

பிசிண்டம், see பிசண்டம்.

பிசிதம், ஊன், flesh, meat. 2. நீர், water. 3. வேம்பு, the Neem or

Margosa tree. Persian Lilac—Melia azedarach.

பிசிதாசனர், ராக்ஷதர், those that feed on flesh—rakshasas.

பிசிர், தூவல், drizzling rain.

பிசினம், கோட் சொல்லல், tale-bearing, slander.

பிசினன், கோளன், a tale-bearer, slanderer, tell-tale.

பிசின், நீர்வஞ்சி, an aquatic plant. *2.* பஞ்சினூல், cotton thread. *3.* பிசின், gum, exudation from some trees. *4.* வெட்டுக் குருத்து, the tender and edible sprout of the palm tree.

பிசுமந்தம், see பிசிதம் *3.*

பிசுனம், உலோபம், niggardliness.

பிசுனன், உலோபன், a niggard, a miser. *2.* கோளன், a tale-bearer, a slanderer. *3.* பொய்யன், a liar.

பிச்சம், ஆண் மயிர், a man's lock of hair. *2.* இறகு, feather. *3.* பீலிக்குஞ்சம், a bunch of peacock's feather, used as a fan. *4.* வெண்குடை, a white umbrella.

பிச்சர், பித்தர், maniacs, deranged persons, madmen. *2.* மருளர், persons captivated, enamoured, fascinated.

பிச்சாசரன், இரப்போன், a mendicant, beggar.

பிச்சாடனம், இரப்பு, begging, mendicancy.

பிச்சாபாத்திரம், இரப்போர் கலம், a mendicant's vessel.

பிச்சி, ஒரு கொடி, a flowering creeper, a kind of jasmine. *2.* கொம்மட்டி, a water melon—Cucurbita.

பிச்சு, பித்து, bile (from Sa. *pichcha* =venomous saliva of a snake).

பிச்சை, ஐயம், alms, rice and other food given as alms, charity.

பிஞ்சகம், பிஞ்சம், } கொலை, killing, life-taking. *2.* இறகு, a feather.

பிஞ்சகன், கொலை செய்வோன், a killer, life-taker. *2.* சிவன், Siva, as destroyer.

பிஞ்சு, இளங்காய், a young, tender, immature fruit.

பிஞ்ஞகம், தலைக்கோலம், head-dress, plaited hair of men or women.

பிஞ்ஞகன், சிவன், he who wears matted hair and also who is adorned on his head with the Ganges, new moon, &c.—Siva.

பிடகம், நூல், any scientific work. *2.* பிச்சை, alms, charity. *3.* புத்த நூல், the three sacred books of the Buddhists.

பிடகன், புத்தன், Buddha. *2.* வைத்தியன், a doctor, physician.

பிடகாரி, விஷ வைத்தியன், poison doctor.

பிடர், பிடர்த்தலை, } பிடரி, the hinder and upper part of the nape.

பிடவம், பின்புறம், the back.

பிடவு, ஒரு செடி, a wild shrub, bearing fragrant white flowers.

பிடாரச்சொல், வைத்தியச் சொல், a medical term.

பிடாரம், ஒரு வைத்திய அகராதி, a medical dictionary.

பிடாரி, காளி, a form of the Goddess Kali.

பிடி, கைப்பிடி, handle, half, hilt, catch. *2.* பிடியென்னேவல், *imp.* tie, fasten, stick to, cleave to, adhere to, cling to. *3.* பெண் கவரி, a female yak, bosgrunniens. *4.* பெண்ணொட்டகம், a she-camel. *5.* பெண் யானை, a female elephant.

பிடிகம், பிள்ளைக் கைவளை, a bracelet for children.

பிடிதம், பிச்சை, alms (திவா.).

பிடித்தல், கட்டல், tying, fastening. *2.* சார்தல், adhering, cleaving, sticking. *3.* பற்றல், catching, grasping, seizing, holding.

பிடியல், சீலை, cloth. *2.* நல்லாடை, fine cloth.

பிடுங்கல், பறித்தல், snatching, seizing on grasping, pulling out, plucking up, extracting. *2.* வியங்கோள்முற்று, *opt.* (root, பிடுங்கு).

பிடை, மூசை, a melting pot, crucible.

பிட்டம், கடிப்பிரதேசம், buttocks, fundament. 2. சிற்றுண்டி, a kind of pastry.

பிட்டு, see பிட்டம். 2. தினைமா, flour of millet.

பிணக்கம், see பிணங்கல்.

பிணக்கல், பின்னல், entangling, involving, confusing, twisting.

பிணக்காடு, சுடுகாடு, place of cremation.

மகதத்துவம், ஒரு தத்துவம், one of the qualities or properties of things.

மகதந்திரம், சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two shastras which teach architecture and other mechanical arts.

மகதம், ஒரு தேசம், a country, south Behar. 2. பதினெண் பாஷையிலொன்று, one of the eighteen languages.

மகதி, நாரதன் வீணை, a kind of guitar. 2. சேம்பு, a kind of garden plant with esculent leaves and roots—Caladium nymphacifolium. 3. திப்பிலி, a long-pepper plant or fruit—Piper longum.

மகதை, திப்பிலி, long-pepper plant or fruit.

மகபதி, இந்திரன், Indra—lord of sacrifices, as having offered a hundred sacrifices.

மகப்பால்வார்த்தல், அறமுப்பத்திரண்டினொன்று, one of the thirty-two acts of charity, giving milk to infants.

மகமுறை, யாகக்கிரமம், method of performing sacrifices 2. விருந்து, a feast, banquet.

மகமேரு, see மகாமேரு.

மகம், ஒருநாள், the tenth lunar asterism. 2. யாகம், sacrifice, a large burnt offering.

மகரகண்டிகை, see மகரதோரணம்.

மகரகுண்டலம், காதணியினொன்று, fishshaped ear-rings.

மகரகேதனம், மச்சக்கொடி, a flag or banner with the figure of a fish.

மகரகேதனன், } மகரகேது, } மன்மதன், he whose banner is distinguished by the figure of a fish—Kama, the Hindu cupid.

மகரக்குறுக்கம், ஒலிகுறுகிய மகரம், the letter ம் shortened in sound.

மகரசங்கிராந்தி, சூரியன் தனுராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்லுதல், the transit of the sun from Sagittarius to Capricornus.

மகரச்சா, tabular correction for the parallax of the orbit of the superior planets from the first of Capricornus to Cancer—Compare கற்கிச்சா.

மகரதோரணம், மச்சதோரணம், ornamental hangings of cloth representing two fishes.

மகரத்துவசன், as மகரகேதனன்.

மகரந்தம், கள், fresh sap of a palm tree. 2. தேன், nectar or honey of flowers. 3. பூந்தாது, filaments of the lotus, pollen and anther of a flower.

மகரமாதம், தை, the month தை when the sun is in Capricornus.

மகரம், ஒரு நிதானம், a gem in common, either celestial or terrestrial. 2. ஓரிராசி, Capricorn of the zodiac, figured as half fish,

half animal. 3. ஓரெழுத்து, the letter ம். 4. சுறுமீன், a shark. 5. பூந்தாது, pollen and anther of flowers. 6. முதலை, an alligator.

மகரம்பூ, வெந்தயம், the Fenugreek plant—Trigonella foenum graccum.

மகரயாழ், நால்வகையாழிலொன்று, one of the four kinds of fiddle.

மகரயூகம், ஒரு படையணி, an army arrayed for battle in the shape of a fish.

மகராலயம், கடல், the abode of fish —the sea.

மகரிகை, தோரணம், ornamental hangings. 2. figures of crocodiles drawn in gold dust on the cheeks of women.

மகவான், இந்திரன், a sacrificer—Indra.

மகவு, குரங்காதிகோட்டில் வாழ் விலங்கின் பிள்ளை, the young of monkeys and other animals living on trees. 2. குழந்தை, an infant. 3. மகன், a son.

மகளிக்கீரை, ஒரு கீரை, an edible plant—Celosia albida.

மகளிரான் மலர்மரம், மகடூஉக் காரண மாயலருமரம், ten kinds of trees or shrubs which are poetically said to bud and blossom when approached by the பதுமினி or first class of women. 1. மகிழ மரம்,—சுவைக்க; 2. ஏழிலைம் பாலைமரம்,—நட்புற; 3. பாதிரி மரம்,—நிந்திக்க; 4. முல்லைக் கொடி,—நகைக்க; 5. புன்னை,—ஆட; 6. குரா,—அணைக்க; 7. அசோகு,—உதைக்க; 8. குருக் கத்தி,—பாட; 9. மராமரம்,—பார்க்க; 10. சண்பகம்,—நிழல்பட.

மகளிர், மகளார், } மாதர், women, ladies.

மகள், (*fem.* of மகன்.) புத்திரி, daughter.

மகன், ஆண்மகன், an eminent man. 2. பிள்ளை, a son.

மகா, பெரிய, great, high, exalted, dignified, noble, honourable. 2. அளவற்ற, immense, prodigious, stupendous, monstrous, extreme. 3. உன்னத, superior, greater, paramount, superlative. 4. மிகுந்த, intense.

மகாகதி, மேற்கதி, supreme bliss.

மகாகந்தம், வெள்ளைப்பூண்டு, garlic —Allium sativum.

மகாகர்வம், பத்துலட்சங்கோடி, ten billions.

மகாகற்பம், the great *kalpa*, consisting of a vast period, probably the lifetime of Brahma, of 155,520,000,000,000 solar years, after which there will be a universal destruction. *Note.*—By analogy it will be only, 10 கற்பம் of 4,320,000,000 each or 43,200,000,000 years; but கற்பம், is used very indefinitely.

மகாகாசம், மகாகாயம், } பெருவெளி, the air or ether, at large, as distinguished from கடாகாசம், or air in a pot, the atmosphere.

மகாகாலம், நெடுங்காலம், a great and long period of time, sometimes used for eternity.

மகாகிதி, கோடி கோடாகோடி, one thousand trillions.

மகாகோணி, இலட்சங் கோடா கோடி, ten trillions.

மகாகோரம், நரகத்தினோர் வகுப்பு, a division of hell or Tartarus.

மகாக்கினி, ஓமாக்கினி, sacrificial fire.

மகாங்கம், ஒட்டை, a camel.

மகாசகை, வாடாப்பூவுள மரு தோன்றிமரம், a plant, bearing an unfading flower—Gomphroena globosa.

மகாசங்கம், ஆயிரங் கோடாகோடி, a hundred billions.

மகாசங்காரம், சர்வசங்காரம், the universal destruction.

மகாசத்தி, the great and universally pervading female energy of deity.

மகாசமுத்திரம், ஓரெண், a number usually, one hundred billions. 2. மகோததி, the ocean, the great sea.

மகாசேனன், முருகன், the commander of a large force—Skanda. 2. சேனாதிபதி, a general, the commander of a large force. 3. அருகன், Argha.

மகாசைவம், சைவம் பதினாறினொன்று, one of the sixteen divisions of the Saiva system of religion.

மகாசோபம், நூறுகோடி கோடா கோடி, a hundred thousand trillions.

மகாச்சுவாலம், ஓமாக்கினி, sacrificial fire.

மகாஞானி, one who has attained to the highest degree of religion.

மகாதலம், கீழுலகேழினொன்று, the sixth of the seven nether worlds.

மகாதாது, பொன், gold, a precious metal.

மகாதிசை, aggregate influence of the planets, counted according to the natal asterism for the horoscope.

மகாதுந்துமி, இரணபேரிகை, a battle drum.

மகாதுருமம், அரசு, a tree—the Ficus religiosa.

மகாதேவன், கடவுள், God. 2. சிவன், Siva—as supreme. 3. வருணன், a God of the sea or waters.

மகாதேவி, பார்வதி, Parvati, as the great Goddess.

மகாத்தியாகம், சர்வதியாகம், giving up all things, total and absolute enunciation of the world, the will, &c, from religious motives.

மகாநசம், மடைப்பள்ளி, a cook-house, kitchen.

மகாநாதம், சங்கு, the conch-shell. 2. சிங்கம், a lion. 3. பேரொலி, a great noise, clamour. 4. முகில், a cloud. 5. யானை, an elephant.

மகாநிசி, அர்த்தசாமம், midnight.

மகாநிதி, குபேரநவநிதியினொன்று, one of the nine gems of Kuvera.

மகாநீலம், மரகதம், emerald.

மகாபதுமம், பத்துக் கோடாகோடி, a thousand billions. 2. நவநிதியினொன்று, one of the nine gems of Swerga which is very much like lotus.

மகாபதுமன், அஷ்டநாகத்தொன்று, one of the eight serpents that support the earth.

மகாபலன், வலியான், a strong person. 2. காற்று, air, wind.

மகாபலி, ஓரரசன், a king dethroned by Vishnu in his Dwarf Avatar.

மகாபாரதம், ஒரு காவியம், Mahabharat, the great epic poem; so called from its having outweighed the four vedas, when weighed by the rishis in a scale.

மகாபூதம், பஞ்சபூதம், elementary principles.

மகாபூரி, ஆயிரங்கோடி கோடா கோடி, ten quintillions.

மகாப்பிரகாசசத்தி, அப்பிரகம், mica.

மகாமந்திரமூர்த்திகள், a class of souls of a superior order, consisting of seventy-five millions, of these thirty-five millions attain liberation when the work of creation is finished.

மகாமந்திரம், மூலமந்திரம், an appropriate name of Deity.

மகாமாயை, சூரபன்மன் தாய், the mother of the king of the asuras. 2. as மாமாயை.

மகாமாரி, துர்க்கை, a name of Durga.

மகாமிருகம், யானை, an elephant.

மகாமுத்திரை, யோகமுத்திரை, one of the symbols of the Yoga system.

மகாமுனி, மகாவிருஷி, a great muni. 2. அகஸ்தியன், a name of Agasthya.

மகாமேரு, பொன்மலை, the great Meru or gold mountain, thought to be in the middle of the central continent.

மகாயக்கியம், மகாயாகம், the first order of sacrifices. It is of five kinds:—1. பிரமம் or வேத மோதல், reading and learning vedas; 2. தெய்வம் or ஓமம் வளர்த்தல், kindling a sacrificial fire; 3. பூதம் or பலியீதல், frag-

ments of food left at an oblation; 4. பிதிர் or தர்ப்பண முடித்தல், preventing water to the manes of persons deceased; 5. மானுஷம் or இரப்போர்க் குணவீதல், gifts to beggars.

மகாயுகம், நாலுயுகங்கூடின நாற்பத்து மூன்று லட்சத்திருபதினாயிரம் வருடம், the great age, the aggregate of the four ages, 4,320,000 years.

மகாரண்ணியம், பெருங்காடு, a very large forest.

மகாரதன், பதினோராயிரந் தேருக்குத் தலைவன், a charioteer commanding 11,000 chariots.

மகாராஜன், குபேரன், a great king—Kuvera. 2. யானைகட்டி வாழ்பவன், one who possesses elephants.

மகாராஷ்டிரம், ஒரு தேசம், the original Maharatta country. 2. ஒரு பாஷை, the Maharatta language.

மகாராத்திரம், அர்த்தஜாமம், midnight.

மகார், குழவிப்பன்மை, *pl.* of மக, children.

மகாலக்குமி, மகாலட்சுமி, the great Lakshmi, Goddesss of felicity.

மகாலயம், பிரமனுலகம், the world of Brahma. 2. கோயில், a temple.

மகாலோகம், மேலேழுலகிலொன்று, one of the seven upper worlds.

மகாவராகம், விஷ்ணு, Vishnu in the hog incarnation.

மகாவற்புதம், ஒரு பேரெண், a large number.

மகாவாக்கியம், பெரும்பதம், a mystic word in the vedanta, a religious formula among the Sivas and others.

மகாவிசுவம், மேஷசங்கிராந்தி, (*in astron.*) the moment of the sun's entering Aries, the vernal equinox, but varying several days from the European computation.

மகாவிந்தம், ஒரெண், a number probably one thousand billions. 2. நளன்நகரம், the capital of Nala. 3. வைகுந்தம், a residence of Vishnu.

மகாவிந்து, அப்பிரகம், mica or talc.

மகாவியாகிருதி, காயத்திரிமந்திரம், the three mystical words, Bhur, Bhuva and Swer, the essential part with ஓம், of the Gayatri of the Brahmans in their daily incantations.

மகாவிரதம், மாவிரதம், } சைவசமயத்தொன்று, one of the six approved or orthodox sects of the Siva religion.

மகாவிருகதி, சேம்பு, a kind of garden plant with esculent leaves and roots—Caladium nymphacifolium.

மகாவெள்ளம், பெருவெள்ளம், a great flood. 2. ஒரெண், a great number.

மகானலம், ஓமாக்கினி, sacrificial fire.

மகான், in the order of creation, the gradation or process next above மாயை.

மகி, மகீ, } பூமி, the earth.

மகிடம், எருமை, a buffalo.

மகிடரோசனை, biliary calculus of a buffalo.

மகிடற்செற்றாள், காளி, she who killed the buffalo-faced asura—Kali. 2. துர்க்கை, Durga.

மகிடன், மகிடாசுரன், மயிடன், } ஓரசுரன், an asura slain by Durga.

மகிணன், see மகிழ்நன்.

மகிதம், சிவன் சூலம், the three pronged dart or trident of Siva.

மகிதலம், பூதலம், the earth.

மகிபதி, மகிபன், மகிபாலன், } அரசன், a king, a monarch.

மகிமா, மகத்துவம், majesty. 2. அஷ்டசித்தியினொன்று, one of the eight superhuman powers—the

power of increasing one's bulk without limit.

மகிமை, பெருமை, greatness, grandeur, glory, majesty.

மகிரன், சூரன், the name of an asura.

மகிருகம், மகீருகம், } மரப்பொது, a tree in general.

மகிலேதை, நாங்கூழ், an earth-worm, a belly-worm.

மகிழ், மகிழ மரம், a precious flower tree—Miumsops elengi. 2. மகிழென்னேவல், *imp.* joy, rejoice, exult, be exhilarated.

மகிழ்ச்சி, இன்பம், pleasure, delight, gladness. 2. களிப்பு, mirth, exhilaration, high spirits.

மகிழ்தல், களித்தல், exulting, being overjoyed, rejoicing.

மகிழ்நன், புருஷன், a husband. 2. மருதநிலத் தலைவன், a ruler of an agricultural district.

மகிழ்வு, see மகிழ்ச்சி.

மகிளி, ஒரு கீரை, a species of wild herbs used as vegetable food.

மகித்திரம், மலை, that which is upheld by the earth—a mountain.

மகுடம், முடி, a crown. 2. முடியுறுப்பு, one of the component parts of a crown. 3. பாட்டின் மகுடம், the finishing part of a poem as a crown. 4. சிவாகம மிருபத்தெட்டினொன்று, one of the twenty-eight agamas of the Siva sect.

மகுடராமக்கிரியம், ஒரு பண், a kind of tune.

மகுடவர்த்தனர், முடிதரிக்குமரசர், crowned kings, independent kings.

மகேசன், மகேச்சுவரன், } சிவன், the obscurer of souls—Siva.

மகேச்சுவரி, பார்வதி, Parvati.

மகேந்திரஜாலம், வானில் அற்புதங் காட்டும் வித்தை, astonishing supernatural appearances by magic.

மகேந்திரம், ஒரு மலை, a range of mountains, one of the seven distinguished mountains in India. 2. மலை, a mountain. 3. ஒரு நகரம், (*in mythology*) a famous town said to have been inhabited by the asuras, but afterwards submerged in the southern ocean.

மகேந்திரன், இந்திரன், Indra.

மகைசுவரியம், மிகுசெல்வம், great opulence.

மகோகதி, கடல், the great sea, the ocean.

மகோதயம், முத்தி, final beatitude, emancipation from vitality and absorption into the divine essence. 2. the rising of the sun and moon in conjunction, on a Monday, the sun being in Capricorn, in the month of January, and the moon in the twenty-second lunar asterism, in the seventh யோகம்—regarded as a most auspicious moment for sacred bathing; such is called மகோதய தீர்த்தம்.

மகோதரம், ஒரு நோய், dropsy of the belly, ascites.

மகோதரன், (*in mythology*) இராவணன் மந்திரி, the big-bellied—the minister of Ravana.

மகோபநிஷதம், உபநிஷத முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two upanishads.

மகோற்சவம், பெருவிழா, a great festival.

மகோற்பலம், தாமரை, the lotus flower or water-lily.

மகௌஷதி, நன்மருந்து, a general term for different surgical medicaments.

மக்கடம், குரங்கு, a monkey—see மர்க்கடம்.

மக்கட்கதி, மனிதர், human beings.

மக்கட்படுக்கை, மனிதர் படுக்கை, a bed for men.

மக்கட்பரப்பு, மன்பதை, multiplicity, extent or mass of human beings. 2. நாட்டார், inhabitants of a state, the public, the common wealth.

மக்கள், மனிதர், men, human beings. 2. மகார், children.

மக்கனம், மக்கினம், } அமிழ்தல், immersion, state of sinking, drowning.

மக்கி, ஒரு மருந்து, gamboge (*Ains.*).

மங்கலகௌசிகம், மங்களகௌசிகம், மங்களகௌசிகை, } ஓரிராகம், a tune.

மங்கலச்சொல், மங்கலமொழி, } செய்யுட்களின் முதற் கவியின் முதலில் வருதற் குரிய சுபமொழி, auspicious terms together with their synonyms, used for beginning a poem. They are twenty-two in number:—(1) திரு, wealth, &c. (2) யானை, an elephant. (3) தேர், a chariot. (4) பரி, a horse. (5) கடல், the sea. (6) மலை, a mountain. (7) மணி, a gem. (8) பூ, a flower. (9) புகழ், praise. (10) சீர், good state or condition. (11) மதி, the moon. (12) நீர், water. (13) எழுத்து, a letter, a writing. (14) பொன், gold. (15) ஆரணம், vedas, the law. (16) சொல், a word. (17) புயல், cloud. (18) நிலம், earth. (19) கங்கை, the Ganges. (20) உலகம், the world. (21) பரிதி, the sun. (22) அமிழ்தம், nectar.

மங்கலபாடகர், கடிகைமாக்கள், bards, encomiasts, panegyrists.

மங்கலமங்கையர், கட்டுக்கழுத்தியர், women wearing the marriage-badge.

மங்கலம், தருமம், moral or religious merit, according to the shastras. 2. பொலிவு, prosperity, increase. 3. விவாகம், marriage. 4. வாழ்த்து, praise, panegyric, blessing. 5. அஷ்டமங்கலம், auspicious object used on festive occasions; of which eight are special:—(1) சாமரம், chowry, a fly-whisk; (2) நிறைகுடம், a full ornamented pot; (3) கண்ணாடி, mirror; (4) தோட்டி, elephant's goads; (5) முரசு, drums; (6) விளக்கு, lamps; (7) கொடி, flags; (8) இணைக்கயல், a brace of carp fish.

மங்கலவள்ளை, ஒரு பிரபந்தம், a poem on a female of noble birth, in nine வெண்பா and nine வகுப்பு.

மங்கலவாரம், நல்லநாள், an auspicious day, commonly Monday or any day on which there is a favourable configuration of planets. See மங்கலன். 2. செவ்வாய்க்கிழமை, Tuesday, as the day of Mars.

மங்கலவினைஞர், சுபகாரியஞ் செய்வோர், persons who perform auspicious acts or ceremonies.

மங்கலன், செவ்வாய், the planet Mars. 2. நாவிதன், a barber.

மங்கலி, சிற்பத்தொழிலோர் மாதுக்குஞ் செக்கானுக்கும் பிறந்து மயிர் களைவோன், a barber, son of an oil-presser and a woman of the mechanic's caste.

மங்கலை, உமை, the Goddess Parvati, Durga. 2. இலக்ஷ்மி, Lakshmi. 3. சுமங்கிலி, a married woman. 4. அம்பட்டத்தி, a woman of the barber caste.

மங்கல், கெடுதல், perishing, dying, decaying, mouldering. 2. நிறங் குன்றல், fading, growing pale. 3. பார்வை குன்றல், growing dim or dull as the sight.

மங்களகவுசிகம், ஓரிராகம், a tune sung on marriage and other auspicious ceremonies.

மங்களம், வாழ்த்து, blessing, praise, panegyric. 2. சுபம், auspiciousness, luckiness.

மங்களாசரணை, மங்கள வழிபாடு, three prefixes to any book or composition:—(1) வாழ்த்து, salutation; (2) வணக்கம், invocation to some deity; (3) செயப்படு பொருள், the contents, object or division of the work.

மங்களாதேவி, இலக்ஷ்மி, Lakshmi.

மங்களை, ஆயுட்கால வகுப்பு மூன்றி னொன்று, one of the three seasons of life. See சங்கடை, பிங்களை.

மங்குசனி, முதன்முறை வருமேழரை, one of the evil influences of Saturn, that of declining prosperity.

மங்குதல், see மங்கல்.

மங்குல், ஆகாயம், the visible heavens. 2. இரவு, night. 3. மேகம், cloud.

மங்கை, பதின்மூன்று வயதுப் பெண், a girl from twelve to thirteen years of age inclusive. 2. பெண், a woman.

மங்கைபங்கன், மங்கைபங்காளன், மங்கைபாகன், } சிவன், Siva as half female.

மங்கையர்க்கரசியார், கூன்பாண்டியன் மனைவி, a queen of the Pandyan dynasty, one of the sixty-three devotees of Siva.

மசகம், மசம், } கொசுகு, a gnat, mosquito.

மசகிற்புள், ஒரு கடற்பறவை, a species of sea-gull.

மசரதம், பேய்த்தேர், mirage.

மசானம், (*aphocresis of* ஸ்மசானம்) மயானம், burning or burying place for the dead.

மசி, மை, ink.

மசுக்கரம், மூங்கில், a kind of cane, the bamboo.

மசூசிகம், மசூரி, மசூரிகம், } குருநோய், small-pox.

மச்சகந்தி, மச்சோதரி, } வியாசன் தாய், the mother of the poet Vyasa.

மச்சமுனி, ஒரு சித்தர், a distinguished poet and philosopher of the Siddhar class, contemporary with *Agastya*; of his compositions, only a treatise, வாதநிகண்டு, is extant.

மச்சம், அஷ்டாதச புராணத் தொன்று, one of the eighteen puranas. 2. ஒரு தேசம், a country including the Dinagpur and Rangpur, one of the middle divisions of India. 3. மச்சம், மாற்றறிய வெட்டிவைக்கும் பொன், a small piece cut from a lump of gold before it is given to a goldsmith to work up. 4. மீனவிராசி, Pisces of the zodiac. 5. மீன், fish. 6. திருமால் மச்சாவதாரம், a kind of fish, probably the saphari, in which Vishnu is fancied to have been incarnate. 7. மச்சை, a black spot or mole on the skin.

மச்சயந்திரம், வில் வித்தையைப் பரீட்சிப்பதற் கேற்படுத்திய யந்திரம், a mark for archers in shape of a fish.

மச்சரம், (also மற்சரம்) பொறுமை, envy, impatience at another's success or prosperity.

மச்சனம், see மஞ்சனம்.

மச்சிகை, மோர், butter-milk.

மச்சு, குற்றம், fault. 2. மேனிலை, a board-partition for the gable of a room or boarded enclosure of an upper-room.

மச்சேந்திரநாதர், நவசித்தரிலொருவர், one of the nine principal siddhars.

மச்சை, மூளை, marrow of the bones.

மஞ்சட்கடம்பு, ஒரு கடம்பு, a tree—Nanclea cordifolia.

மஞ்சணத்தி, மஞ்சணுற்றி, } see மஞ்சணுணு.

மஞ்சணுணு, ஒரு நுணு, a kind of நுணு tree, the timber of which is a bright yellow.

மஞ்சம், கட்டில், a bed-stead, couch, cot.

மஞ்சம்புல், மஞ்சனப்புல், } a grass—Andropogan (*R.*).

மஞ்சரி, ஒரு பிரபந்தம், a poem. 2. தளிர், a shoot, a sprout. 3. பூங்கொத்து, a bunch of flowers. 4. பூத்திரள், a cluster of flowers. 5. பூமாலை, a flower-garland. 6. மலர்க்காம்பு, a fruit-stalk. 7. நாயுருவி, a plant—Achyranthes.

மஞ்சனம், குளித்தல், bathing. 2. நீரின் முழுகல், bathing the entire body by dipping.

மஞ்சாடி, ஒரு மரம், a kind of tree—Adenanthera pavonia. 2. வயிர நிறுக்குநிறை, seeds or kernals of that tree used as a weight by jewellers ; each being equal to two குன்றிமணி—or to four grains, and five to a scruple.

மஞ்சாளி, see மஞ்சாடி 2.

மஞ்சிகம், தாளிக்கொடி, a winding plant—Convolvulus striatus. 2. பெட்டி, a box, chest, trunk.

மஞ்சிகன், நாவிதன், a barber—one of the caste.

மஞ்சிகை, காதணி, an ear-ornament. 2. குண்டலம், a circular ear-ring. 3. தாளிக்கொடி, a winding plant (see மஞ்சிகம்). 4. பேழை, a chest, trunk.

மஞ்சிட்டி, the அமுத்தரம், shrub and its seed for dyeing—Bix orellana.

மஞ்சிலிக்கான், சிவதுளசி, a plant—Ocimum basilicum.

மஞ்சில், பழைய வரம்பின் வழி, an old embankment or causeway between rice-fields, used as a road.

மஞ்சு, அழகு, beauty, gracefulness. 2. ஆபரணம், a jewel. 3. இளமை, youthfulness, juvenility. 4. கட்டில், a bed-stead, a cot. 5. பனி, dew, fog. 6. முகடு, the ridge of a roof. 7. மேகம், a cloud. 8. யானை முதுகு, the back of an elephant. 9. வலி, force, strength.

மஞ்சுகம், கொக்கு, a stork.

மஞ்சுளம், அழகு, beauty, agreeable appearance.

மஞ்சூடை, பேழை, a basket like a chest, a large basket.

மஞ்சூரம், see கடலை.

மஞ்ஞையூர்தி, குமரன், he who rides on a peacock—Skanda.

மஞ்ஞை, மயில், a peacock.

மடக்கல், முடக்கல், bending as the arms, knees, &c. drawing in, folding, infolding, shutting as a knife, inflecting, deflecting, refracting, doubling.

மடக்கியல், சுரிதகம், the last member of some kinds of கலிப்பா and வஞ்சிப்பா verse, sung to a quicker movement than the other parts.

மடக்கிளி, a parrot as resembling a woman in its talk.

மடக்கு, ஒரு சித்திரகவி, a curiously wrought poem—the repetition of a word, foot or line of a poetry through the stanza, each time in a different sense, considered as an ornament, and embracing, according to தண்டியலங்காரம், three hundred and fifteen varieties. 2. ஒரு பாத்திரம், a kind of earthen vessel. 3. மடக்கென்னேவல், *imp.* bend, fold, shut, inflect, deflect, refact, double, turn, repeat, subdue, repulse, restrain, quash, break. 4. மாறிமாறி வரல், alternation, constant recurrence.

மடக்கொடி, பெண், a tender, young, married woman.

மடங்கலர், பகைவர், foes, enemies, insubordinate persons.

மடங்கல், இடி, thunder-bolt. 2. ஊழித்தீ, deluge of fire. 3. காலன், Yama, the messenger of death. 4. சிங்கம், a lion. 5. நோய், disease. 6. மீளல், returning. 7. முடங்கல், curving or becoming blunt, as the edge, &c. 8. யுகமுடிவு, termination of a yuga.

மடங்கற்கொடியோன், வீமன், he who bears a lion banner—Bhima, the second of the five Pandavas.

மடங்கு, அளவு, a weight, twenty-five pounds, a maund. 2. மடங்கென்னேவல், *imp.* become bent, as the arm or leg, be shut, closed, folded, inflected, deflected, refracted, submit, surrender, yield. 3. வியாதி, disease.

மடநல்லார், பெண்கள், woman as weak-minded.

மடந்தை, பத்தொன்பது வயதுப் பெண், a girl from fourteen to nineteen years of age. 2. பெண், a woman, a lady.

மடந்தைபாகன், மடந்தைபாதியன், } சிவன், Siva as half female.

மடப்பம், ஐன்னூறு கிராமத்துக்குத் தலைக்கிராமம், the metropolis of five hundred villages.

மடப்பிடி, பெண் யானை, the female elephant, as resembling women in the stateliness of its gait.

மடமயில், the peacock, as similar to a woman in some of its qualities.

மடமான், the deer, resembling a woman in its timidity.

மடமை, அறிவின்மை, ignorance. 2. கபடின்மை, simplicity, as a commendable feminine quality.

மடமொழிமாதர், sincere, mild or soft speaking women.

மடம், அறிவின்மை, ignorance. 2. சத்திரம், a caravansary for pilgrims and other religious mendicants. 3. முனிவர்வாசம், a monastery occupied by ascetics.

மடலூர்தல், தலைவன் காமத் தாற்றா னாகிப் பனைமடலாற்செய்யும் பரி மேலூர்தல், riding on a palmyra-stem, as a disappointed lover.

மடல், ஏற்றமடல், the standing pole of a well-sweep. 2. ஒரு பிரபந்தம், a poem figuratively describing a disappointed lover riding on a palmyra-stem. 3. ஈந்து, கமுகு, தாழை, தெங்கு, பனை, வாழை இவற்றிற்குரிய வேடு, anything flat and long, especially the leaves of the wild date, areca, screw-pine, cocoa, palmyra and plantain, also their stems. 4. பூவிதழ், a flower-petal. 5. வியங்கோள் முற்று, *opt.* (root. மடு).

மடவரல், பெண், gifted with simplicity—a woman.

மடவன்னம், the swan compared to a woman for its beauty and stately walk.

மடவாள், (*pl.* மடவார், மடவியர்) பெண், she who is characterized by simplicity—a woman.

மடவை, ஒரு மீன், a kind of fish, mullet—Mugil cephalus. 2. கடவுமரம், an oar, a paddle.

மடவைக்கெண்டை, ஒரு கெண்டை, a small kind of mullet or carp.

மடற்பரி, மடன்மா, } மடற்குதிரை, (*fig.*) a palmyra-stem used as a horse.

மடற்பனை, a learned man unwilling to communicate his knowledge being one of the four classes of teachers.

மடற்றுத்தம், impure carbonate of Zinc, Calamine.

மடன், அறிவிலான், an ignorant man, ignoramus. 2. உன்மத்தம், confusion of mind.

மடன்மா, see மடற்பரி.

மடி, கேடு, ruin, loss, detriment, damage. 2. சீலை, cloth, garment. 3. சோம்பல், loth, idleness, indolence. 4. தாழை, screw-pine—Cardeira. 5. நோய், disease, ailment. 6. பொய், lie, falsehood. 7. மடியென்னேவல், *imp.* perish, be slain in war, perish by epidemics, die, be bent, folded, lapped in, bend, double, fold, braid, confound by artifice, equivocate. 8. முலைமேற்றிரள், nipple, teat, pap, dug, the lap of a person. 9. வயிறு, the belly or bosom.

மடிதல், கெடுதல், perishing. 2. சாதல், dying. 3. மடிதல், being folded, doubled, lapped in, confounded, baffled in speech.

மடித்தல், மடிக்குதல், bending, folding, doubling up, braiding.

மடிமை, சோம்பு, idleness, indolence, sloth.

மடிவித்தல், முனை மடங்கச்செய்தல், turning the edge of an instrument. 2. கொல்லல், killing, slaying, destroying.

மடிவு, சாவு, dying, death.

மடு, ஆற்றினுட் பள்ளம், deep place in a river or channel. 2. குளம், a pond, pool, tank. 3. மடுவென் னேவல், *imp.* drink, take liquid food, frustrate.

மடுத்தல், பருகல், drinking, taking liquid food. 2. வாய் முதலிய வற்றுன் மடுத்தல், baffling, inveigling.

மடை, ஆபரணக் கடைப் பூட்டு, clasp of a necklace. 2. சோறு, boiled rice. 3. துவாரம், hole, cavity. 4. நீர்பாயு மடை, a small sluice of a canal or stream.

மடைத்தல், மடைமுகம், head of a channel.

மடைநூல், பாகசாஸ்திரம், system of cookery.

மடையர், சமையற்காரர், cooks.

மடையான், ஒரு பறவை, a water-bird—Ardea.

மட்கல், அழுக்கேறல், being fouled, becoming dirty. 2. ஒளி மழுங்கல், growing dim, being deprived of lustre, brilliancy.

மட்டத்துருத்தி, ஒரு விசிறி, a pump, squirt, bellows.

மட்டம், அளவு, measure. 2. கேடயம், shield.

மட்டாயுதம், வாள், a sword.

மட்டி, படைக்கலம், weapon in general. 2. மட்டியென்னேவல், *imp.* become circular, form into ringlets or circle, coil; clap on, daub, put on—as sandal paste.

மட்டித்தல், மண்டலித்தல், being or becoming circular, forming into ringlets, coiling. 2. பூசுதல், putting on, clapping on, daubing as sandal paste.

மட்டியம், ஒரு தாளம், one of the seven notes or tunes in music.

மட்டு, அவதி, expiration of a term, limit, termination. 2. அளவு, measure, quantity, standard, proportion, amount. 3. கள், toddy, vinous liquor.

மட்டை, உடற்குறை, a headless body, trunk. 2. கமுகு, தெங்கு, பனை இவற்றின் மட்டை, stem of the areca, cocoanut and palmyra leaves.

மட்டைக்கோரை, ஒரு புல், Cyperus procerus, and C. Congus (*Wild.*).

மட்பகைஞன், குயவன், the earth's enemy—potter.

மணங்கல், பெரும் பானை, a large pot.

மணங்கு, ஆட்டுக்குட்டி, a lamb or kid. 2. ஒரு நிறை, a certain weight.

மணத்தல், கமழ்தல், emitting fragrance, being diffused as odours. 2. கூடல், joining, uniting. 3. வாசனை விடுதல், emitting odour. 4. வேட்டல், marrying.

மணப்பறை, கலியாணப்பறை, drumming at a marriage—oppos. to பிணப்பறை.

மணமகள், மனைவி, a bride, wife.

மணமகன், புருஷன், bridegroom, husband.

மணம், கலியாணம், marriage, nuptials, wedding, wedlock. 2. வாசனை, scent, fragrance. *Note*:—Eight kinds of marriage are enumerated:—(1) பிரமம், marriage of a virgin to a bachelor; (2) பிரசாபத்தியம், marriage by mutual consent of the relations; the girl having been solicited by the friends of the bridegroom; (3) ஆரிடம், the gift of a girl in marriage; her relations receiving as a present one or two cows or bullocks or according to some, the girl is placed between a cow and a bullock with gilded horns and hoofs, and the ceremoney is confirmed by the pouring of water; (4) தெய்வம், marriage of a girl bestowed by a deity in recompense for a sacrifice offered by her father or as some say, marriage in the presence of a sacrifice; (5) காந்தருவம், marriage by the mutual consent of the individuals themselves; without consulting friends or having a marriage ceremony; (6) ஆசுரம், marriage in which the bridegroom furnishes the bride with jewels, and pays her friends the sum which they demand for her; (7)

இராக்கதம், marriage in which the girl is taken by force, without her own consent or that of her friends; (8) பைசாசம், marriage in which a girl is forced when asleep or in a state of insensibility.

மண்வணி, கலியாணவலங்காரம், wedding ornaments or decorations.

மணவாளன், மணாளன், } *fem.* (மணவாட்டி, மணாட்டி) புருஷன், a husband. 2. (திவா.) ஆண்மகன், a man.

மணவினை, விவாகச் சடங்கு, nuptial, marriage-ceremony.

மணவை, அடுப்பு, hearth, a cooking place.

மணலி, ஒரு கீரை, a bitter kitchen-herb—Gisekia pharnacioides.

மணலை, ஒரு மீன், a kind of fish, a mullet. *Port. Mugem.* (*Beschi*).

மணாளன், see மணவாளன்.

மணி, அழகு, beauty. 2. ஓசை, sound. 3. கறுப்பு, blackness. 4. நவமணிப்பொது, a gem, a jewel. 5. மணிப்பொது, a bead of gold, silver or coral. 6. முத்து, a pearl. 7. ருத்திராட்சம், a sacred bead as the seed of the Eliocarpus. 8. நெல் முதலிய தானியம், a grain, kernel of corn. 9. கண்மணி, apple of the eye. 10. அதர், wattles on the throats of sheep. 11. மணிக்கட்டு, the wrist.

மணிகன்னிகை, காசித் தீர்த்தத்தி னொன்று, a sacred tank at Benares.

மணிக்கிரீபன், குபேரன் மைந்தன், one of Kuvera's children.

மணிசகம், சந்திரகாந்தம், a kind of mineral gem, the moon-stone, said to emit moisture, when placed in the moon-light, and believed by some to be a congelation of the moon's rays.

மணித்தக்காளி, ஒரு தக்காளி, black-berried solanum—Solanum nigrum.

மணிபூரகம், மணிபூரம், } நாபிஸ்தானம், one of the six regions of the body—that of the navel.

மணிப்புறு, ஒரு புறு, the ring-necked turtle dove.

மணிமந்தம், இந்துப்பு, a fossil salt brought, it is said, from Ormus and much esteemed in medicine.

மணிமலை, பொன்மலை, the golden mountain, mount Meru.

மணிவடம், பாதசாலம், a string of beads—foot-ornaments in general. 2. வீரக்கழல், a warrior's ankle-rings.

மணை, ஓராசனம், a low seat or stool.

மண், ஒப்பனை, decorating, adorning, embellishment. 2. சுட்டசாந்து, burnt lime. 3. பூமி, the earth, the world. 4. மண்ணென்னேவல், *imp.* decorate, adorn, embellish, wash, clean by washing. 5. மலை, a mountain, hill. 6. மாட்சிமை, excellence, superiority, greatness. 7. முழவின் மார்ச்சனை, paste smeared on the head of a drum to increase its sound. 8. அணு, atom, particle, grain.

மண்கணை, குடமுழவு, an earthen pot with a skin over its mouth for a drum. 2. வாச்சியம், any drum.

மண்குகை, மண்மூசை, a crucible for calcining medicines or metals.

மண்டகம், சர்க்கரை போடாத கோதுமைப் பூரி, a cake of wheat flour without sugar.

மண்டம், தயிரேடு, cream of curdled milk.

மண்டர், படைவீரர், heroes, champions, soldiers.

மண்டலநிலை, நிலைநான்கினொன்று, the second of the four attitudes in archery.

மண்டலபுருஷன், ஒரு நிகண்டா சிரியன், (also called வீரமண்ட லவன்), a Jaina ascetic equally eminent as a poet and lexicographer. His poetic lexicon சூடா மணி நிகண்டு, outshines all similar productions in Tamil. He

also wrote an epic poem in honour of Argha.

மண்டலம், நாடு, a region, country, province, territory. 2. பூமி, the earth, the world. 3. வட்டம், circle, sphere, orbit. 4. கிராந்தி மண்டலம், a great-circle—as the equator or ecliptic. 5. சக்கரம், a mystic circular diagram. 6. மண்டலநிலை, a bending attitude in archery—*Note*:—The three mystic regions of the human body (திரிமண்டலம்) are:—(1) அக்கினி மண்டலம், the region of fire, in the lower abdomen; (2) ஆதித்த மண்டலம், of the sun, in the stomach and heart; (3) சந்திர மண்டலம், of the moon, in the head and shoulders.

மண்டலாகாரம், வட்டவடிவம், a circular figure, course, &c.

மண்டலார்த்தம், பாதி வட்டம், a semi-circle.

மண்டலி, ஒருவகைப் பாம்பு, a large venomous serpent; of two kinds: இரத்தமண்டலி, and சீதமண்டலி. 2. கூட்டம், a company, a crowd. 3. நாய், a dog. 4. பூமி, the earth. 5. பூனை, a cat.

மண்டலீகர், அரசர், kings, sovereigns of a limited reign, territorial rulers.

மண்டலேச்சுவரன், நாற்பது யோசனை சதுரம் அல்லது நூறுயிரங் கிராமம் அடங்கிய தேசம் புரக்கு மரசன், a monarch who governs a country forty yojanas in length and forty in breadth or containing over a hundred thousand hamlets. 2. மற்றொருவரைப் பணியா துலகாள்வோன், an independent sovereign.

மண்டல், நெருங்கல், being close, crowded, pressed. 2. மிகல், being excessive, vehement, fierce.

மண்டிகை, அப்பவர்க்கம், cake, bread.

மண்டிலம், குதிரை, a horse. 2. கூத்து, a dance or play. 3. நாடு, country, province, territory. 4. போர், war, battle. 5. வட்டமா யோடல், a circular motion.

மண்டுதல், நெருங்கல், being close, crowded, pressed.

மண்டூகம், தவளை, a frog.

மண்டை, இரப்போர்கலம், a mendicant's begging vessel, probably from Siva's using the skull of Brahma for this purpose.

மண்டோதரி, (also மந்தோதரி) இராவணன் மனைவி, the wife of Ravana.

மண்ணம், சுட்டசாந்து, burnt lime.

மண்ணரிநார், குயவர் மண்ணரிநார், a potter's string for cutting clay.

மண்ணரியாளன், **மண்ணரிவாளன்**, } குயவன், he who cuts the clay—a potter.

மண்ணல், அலங்கரித்தல், decorating, ornamenting, beautifying. 2. கழுவல், washing. 3. வியங் கோள்முற்று, *opt.* (root, மண்).

மண்ணவர், **மண்ணுள்ளார்**, **மண்ணோர்**, } மனிதர், men, human beings.

மண்ணிலம், **மண்ணிலகு**, } பூமி, the earth, the world.

மண்ணிலவேந்தன், முடிதும்பை, a fragrant kind of plant.

மண்ணீடு, திண்ணை, a raised verandah. 2. மாடம், niche, a small recess in the side of a wall for a statue or for a light.

மண்ணீட்டாளர், சிற்பாசாரியர், masons, architects.

மண்ணுடையான், குயவன், a potter. 2. அரசன், a king.

மண்ணுலகு, பூமி, the earth.

மண்ணிறுத்தல், அலங்கரித்தல், adorning, embellishing.

மண்ணை, அறிவில்லான், an ignorant, stupid or dull person or clown. 2. இளமை, youth, juvenility. 3. பிசாசம், a devil, hobgoblin.

மண்ணோர், see மண்ணவர்.

மண்பொதுத்தந்தை, பிரமன், the creator or evolver of all the worlds—Brahma.

மண்மகள், பூமிதேவி, the Goddess earth.

மண்மகள்புதல்வர், வேளாளர், the offspring of the Goddess earth—agriculturists.

மண்மக்கள், சூத்திரர், those who till the ground—the servile caste.

மதகயம், மத யானை, a rutting elephant.

மதகரி, ஆண் யானை, a male elephant.

மதகு, நீரோடி, a covered gutter or channel, a sluice, a drain, a conduit.

மதங்கநாதர், நவசித்தரிலொருவர், one of the nine principal siddhars.

மதங்கம், ஒரு மலை, a certain mountain mentioned in the Ramayana. 2. யானை, an elephant. 3. a contraction of மிருதங்கம், a small drum.

மதங்கர், ஓரிருஷி, the name of a rishi. 2. பாணர், lutists, a class of musicians.

மதங்கி, காளி, the Goddess Kali. 2. பதினாறு வயதுப் பெண், a young woman of sixteen. 3. பாடுவாள், a songstress.

மதஜலம், மதநீர், } as மதம் 5.

மதத்தல், கொழுத்தல், being self-conceited, arrogant.

மதத்தவள், வாணினி, a meretricious or an immodest, intriguing woman.

மதமத்தகம், கஞ்சா, a medicinal plant yielding leaves of narcotic and intoxicating qualities much used by smokers—Cannabia, sativa also anything intoxicating, *bang*.

மதமொய், யானை, an elephant.

மதம், கருத்து, opinion, sentiment. 2. சமயமதம், belief, religious tenet, religion. 3. சம்மதம், consent. 4. செருக்கு, arrogance, self-conceit, pride, recklessness, presumption. 5. யானை மதம், juice from the male elephant's temples when in rut. 6. வலி, strength. 7. களிப்பு, high exhilaration, joy. 8. யாக்கைக் குறுகுற்றம் பதினெட்டினொன்று, one of the eighteen properties of the body—passion. 9. மயக்கம், inebriety, intoxication, infatuation, fanaticism, religious frenzy.

மதர், களிப்பு, joy. 2. மதரென் னேவல், *imp.* rejoice, be full of joy. 3. மிகுதி, abundance.

மதர்த்தல், களித்தல், rejoicing, being full of joy.

மதர்ப்பு, மதர்வு, } களிப்பு, joy. 2. மிகுதி, abundance.

மதர்விழி, மதர்த்த பார்வை, a lascivious eye, wanton look.

மதலிகை, ஆபரணத் தொடக்கு வடிவு, a kind of jewel, an ornamental chain in goldsmith's work. 2. தூக்கங்கள், ornamental hangings.

மதலை, கொடுங்கை, a bend in the lower part of an arch, a projecting cornice or moulding. 2. கொன்றை மரம், a tree—Cassia. 3. தூண், a post, pillar. 4. மகன், a son. 5. மரக்கலம், a ship, a boat.

மதனகாமப்பூ, மதனகாமேசுரப்பூ, } ஒரு சரக்கு, a flower which excites evenery—Pergularia tomentosa.

மதனசாஸ்திரம், மதனநூல், } கலைஞான மறுபத்து நான்கினொன்று, erotics—Modus coeundi.

மதனம், கடைதல், churning. 2. காமம், love, the passion. 3. மௌனம், silence, taciturnity.

மதனலீலை, காமவிளையாட்டு, lascivious actions, libidinous indulgence.

மதனன், காமன், Kama, the Indian Cupid.

மதனாலயம், குய்யம், pudendum muliebre.

மதன், அழகு, beauty. 2. கலக்கம், perturbation of mind. 3. காமன், Kama. 4. மாட்சிமை, excellency.

5. வலி, strength. 6. வளமை, fertility.

மதாணி, ஆபரணம், ornaments, jewels, apparel. 2. பெரும்பதக்கம், an ornament for the breast.

மதாவளம், யானை, that which abounds in strength—an elephant.

மதி, அறிவு, understanding, intellect. 2. கர்க்கடகவிராசி, Cancer of the zodiac. 3. சந்திரன், moon. 4. நிதானம், judgement, discrimination, discernment. 5. மதியென்னேவல், *imp.* churn, turn, become fat, libidinous, estimate, consider, conceive. 6. மாதம், a month, lunar month. 7. முன்னிலையசைச் சொல், a poetic expletive of imperatives. 8. மதிப்பு, reverence, honour, estimation.

மதிகூர்மை, இந்துப்பு, rock-salt.

மதிக்கணம், சந்திரகணம், one of the eight kinds of ominous feet with which the invocation of a poem may begin—a foot consisting of one நிரை and two நேர்.

மதிசகன், காமன், Kama, the moon's associate.

மதிச்சடையன், சிவன், Siva, the moon-crested, as சந்திரசேகரன்.

மதிதம், மோர், butter-milk.

மதிதிசை, வடக்கு, the north point.

மதித்துருவம், see சசிதுருவம்.

மதித்தல், கடைதல், churning, turning. 2. மதத்தல், being libidinous. 3. வரையறுத்தல், estimating, considering, discerning.

மதிநாள், மிருகசீரிஷம், the fifteenth lunar asterism.

மதிப்பகை, இராகு, the foe of the moon—Caput draconis. 2. கேது, Cauda draconis.

மதிப்பிரமம், மதிமயக்கம், bewilderment, confusion, perturbation.

மதிமகன், புதன், the son of the moon—Mercury, the planet.

மதியம், சந்திரன், moon.

மதியிலி, அறிவில்லான், a fool.

மதியுணி, இராகு, that which swallows the moon—Caput draconis.

மதிவல்லோர், மந்திரிமார், king's ministers, counsellors, statesmen.

மது, இருப்பைப்பூத் திராவகம், liquor distilled from the blossoms of the Bassia longifolia. 2. ஓரரக்கன், the name of a *baitya*, also of a demon slain by Vishnu. 3. கள், spirituous liquor. 4. சித்திரை மாதம், the month March—April. 5. தேன், honey of flowers. 6. மகரந்தம், pollen of flowers. 7. வசந்தகாலம், the season of spring.

மதுகண்டம், குயில், the Koil or Indian cuckoo.

மதுகம், அதிமதுரம், liquorice. 2. எட்டி, a poisonous and very bitter tree—Strychnos nuxvomica. 3. தரா, tin. 4. தித்திப்பு, sweetness. 5. இருப்பை, the long-leaved Bassia longifolia.

மதுகரம், ஆண் வண்டு, honey-maker—a male beetle. 2. கள், honey of flowers. 3. வண்டு, a bee.

மதுகாரி, தேனீ, a bee.

மதுகை, வலி, strength.

மதுகோசம், தேன்கூடு, a beehive.

மதுக்காரை, (also மருக்காரை) ஒரு பூண்டு, a plant the young shoots and bark of which are used in dysentery.

மதுக்கெண்டை, ஒரு மீன், a kind of fish.

மதுசகன், மன்மதன், the companion of spring—Kama.

மதுசூதனன், திருமால், the destroyer of the demon மது—Vishnu.

மதுதிருணம், கரும்பு, sugar-cane.

மதுதூதம், மாமரம், the mango tree—Mangifera Indica.

மதுதூலி, கருப்பஞ்சாற்றுப்பாணி, molasses.

மதுபதி, காளி, Kali, the Goddess.

மதுபம், வண்டு, honey-sucker—a bee.

மதுபருணிகை, அவுரி, the Indigo plant—Indigofera tinctoria.

மதுபலி, காளி, Kali, the Goddess.

மதுமத்தை, ஊமத்தை, a flower plant whose flower is worn by Siva.

மதுமூலம், சர்க்கரைவள்ளி, sweet potato.

மதுரகவி, நாற்கவியினொன்று, one of the four kinds of poetry—a poem in which sublime and gratifying ideas are couched in rich language, with varied appropriate rhymes and rhetorical figures and all in a sweet flowing style. 2. திருமால் தொண்டரிலொருவன், one of the servants of Vishnu.

மதுரசம், முந்திரிகை, sweet juice—wine.

மதுரபாஷணம், கலைஞானமறுபத்து நான்கினொன்று, one of the 64 கலை ஞானம்—eloquence or oratory.

மதுரம், ஒரு கவி, one of the four kinds of poetry—a pleasing poem. 2. சமனிசை, tenor in music. 3. செஞ்சந்தனம், red sandal. 4. தித்திப்பு, sweetness. 5. முந்திரிகை, the vine.

மதுரை, ஒரு நகர், the city of Madura, of *Mathura* in Agra. 2. கள், sweet liquor.

மதுரோதகம், நல்ல தண்ணீர்க் கடல், sea of fresh water.

மதுர்ச்சி, பொன்னிமிளை, yellow or gold-coloured bismuth.

மதுவம், கள், toddy, vinous liquor.

மதூகம், இருப்பை, a tree—Bassia longifolia. 2. வண்டு, a bee.

மதோன்மத்தர், வெறியர், persons mad, insane or intoxicated with vanity, fanaticism, &c.

மத்குணம், see மற்குணம்.

மத்தகமூலகம், கழுத்து, the neck.

மத்தகம், தலை, the head—the top of anything. 2. நுதல், the forehead. 3. பொல்லா நிலம், bad ground. 4. யானை மஸ்தகம், the forehead of an elephant.

மத்தகீசம், யானை, an elephant so called from its excitability.

மத்தங்காய்ப்புல், ஒரு புல், Cynosurus Egyptius.

மத்தப்பிரமத்தன், மதோன்மத்தன், an insane person.

மத்தம், உன்மத்தம், intoxication from liquor, pride, passion or lust, furiousness. 2. ஊமத்தை, the thorn-apple, a strong narcotic—Datura fastuosa. 3. களிப்பு, pleasure, gladness, delight. 4. மத்து, churnstaff.

மத்தவாரணம், அர்த்தசந்திர வடிவுள்ள தலையணை, a pillow in the shape of a half moon. 2. மத யானை, an elephant in rut.

மத்தளம், ஒரு வாச்சியம், a kind of drum.

மத்தனம், கடைதல், churning.

மத்தாடி, கருவூமத்தை, a species of the thorn apple or Datura fastuosa, sometimes smoked for asthma (*M. Dic.*).

மத்திகை, குதிரைச் சம்மட்டி, a horse-whip. 2. விளக்குத்தண்டு, lamp-stand. 3. பூமாலை, a flower-garland.

மத்திமகண்டம், நவகண்டத்தொன்று, one of the nine divisions of the known continent.

மத்திமக்கூர்மை, திலாலவணம், the salt extracted from rape seed.

மத்திமதானம், இடைப்படுதாளம், giving of a secondary order, bestowing through pity on the poor, the blind.

மத்திமதீபம், ஓரலங்காரம், a figure in rhetoric.

மத்திமபரிசம், (*in astron.*) mean time of the beginning of an eclipse.

மத்திமபாதிச்சா, கர்க்கிச்சா, (*in astron.*) tabular correction of the parallax of the orbit from the first of Cancer to six signs.

மத்திமபுடம், mean longitude of a planet.

மத்திமபுத்தி, (*in astron.*) mean daily motion of a planet.

மத்திமம், இடை, the waist. 2. சமனிசை, one of the three movements in singing, as to quickness, *mediocre*. 3. நடு, mediocrity, what is middling or ordinary. 4. மத்திம நாதம், the tenor in music.

மத்திமன், சாமானியன், an ordinary man, not distinguished. 2. நடுவுள்ளவன், one in the middle.

மத்திமை, நடுவிரல், the third finger. 2. வாக்கு நான்கினொன்று, one of the four kinds of sound, that which proceeds from the throat.

மத்தியகதி, mean motion of a planet.

மத்தியகந்தம், மாமரம், the mango tree—Mangifera Indica.

மத்தியகாலம், (*in astron.*) middle of an eclipse, expressed in nalikai, &c.

மத்தியமம், நடு, the middle place or space. 2. நடுவிரல், the third or middle finger. 3. இடுப்பு, the waist.

மத்தியமாவதி, ஓரிசை, a tune used at mid-day.

மத்தியமோட்சம், (*in astron.*) mean end of an eclipse.

மத்தியம், இடை, the waist. 2. கள், vinous or spirituous liquor. 3. நடு, the centre, middle. 4. (*in astron.*) mean.

மத்தியலோகம், பூலோகம், the earth, as central in the Hindu system.

மத்தியவிருத்தம், உந்தி, the navel.

மத்தியானம், உச்சிப்பொழுது, mid-day, noon.

மத்தியை, நாணமும் காமமும் சமமாகவுள்ளவள், a woman equally disposed to chastity and incontinence.

மத்திரிப்பு, சினம், anger.

மத்திரை, சுமத்திரை, one of the wives of Dasaratha.

மத்து, தயிர் முதலியன கடையு மத்து, a churnstaff.

மத்துமலை, மந்தர மலை, the Mandara mountain.

மத்துவம், மத்துவமதம், a class of Brahmans—the Madhvachary or Dwaitas, as distinguished from Adwaitas or followers of Sankaracharya.

மத்தை, ஊமத்தை, a deleterious shrub—Datura.

மந்தகதி, தாமதநடை, slow pace.

மந்தகாசம், ஒரு காசம், a species of consumption.

மந்தகேந்திரம், (*in astron.*) argument of anomaly.

மந்தச்சா, (*in astron.*) equation to the centre. 2. table of மந்தச்சா.

மந்தபரிதி, epicycle used for computing the first inequality of a planet.

மந்தபலம், the anomalistic equation of a planet.

மந்தமா, யானை, a slow going animal —an elephant.

மந்தமாருதம், தென்றல், the south wind—as gentle.

மந்தம், அற்பம், meanness, worthlessness, smallness. 2. ஒரு நோய், a disease, indigestion, dyspepsia. 3. கூர்மையின்மை, dulness, stupidity. 4. சோம்பல், slowness, tardiness. 5. மத்து, churning-staff. 6. (*in music*) மெல்லெனல், lowness of tone. 7. வெறி, drunkenness. 8. (*in astron.*) anomaly. 9. the first equated heliocentric longitude.

மந்தரம், அஷ்டகிரியி லொன்று, mount Mandara, used by the suras and asuras in churning the sea of milk after the deluge, one of the eight mountains. 2. தேவலோகம், Swerga. 3. மந்தவிசை, the lowest pitch in music. 4. சப்த சுரத்தினொன்று, one of the notes of the musical scale.

மந்தரை, கூனி, a female servant of கைகேசி. 2. விரோசனன் மகள், daughter of விரோசனன்.

மந்தவாரம், சனிக்கிழமை, Saturday.

மந்தவிசை, மூவிசையினொன்று, the lowest pitch in music.

மந்தனம், யானை முகபடாம், a cloth thrown over the forehead of an elephant.

மந்தனி, தயிர்கடைதாழி, a churn, a vessel in which cream is turned in order to produce butter.

மந்தன், கூர்மையில்லான், a dullard, a blockhead, a dunce. 2. சனி, the planet Saturn, *as slow*.

மந்தாகினி, அறுபதாண்டுள்ளவள், a woman sixty years of age. 2. கங்கை, the celestial Ganges.

மந்தாசம், மந்தாசியம், } புன்னகை, a smile, a gentle laugh.

மந்தாரசு, வெள்ளெருக்கு, a white species of the milky shrub called Calotropis gigantea.

மந்தாரம், ஐந்தருவிலொன்று, one of the five trees of Swerga. 2. செம்பரத்தை, the shoe flower shrub—Hibiscus rosa sinensis. 3. முண்முருக்கு, a thorny species of Butea frondosa.

மந்தாரை, ஒரு பூச்செடி, a shrub—Bauhinia variegata.

மந்தார்த்தம், சூரியனது மையத்தினின்று ஒரு கிரகத்துக்குள்ள தூரம், the first equated heliocentric longitude of a planet.

மந்தானம், மத்து, a churning-staff.

மந்தி, கருங்குரங்கின் பெண், female of the black monkey. 2. பெண் குரங்கு, a female monkey in general. 3. பெண் முசு, female of another kind, the முசு, monkey, ape, marmost. 4. மந்தியென்னேவல், *imp.* become dull, stupid, be undigested as food. 5. வண்டு, a black bee, a beetle, a humming insect. 6. ஆடுதின்னுப்பாலை, a plant—Aristolochia bracteata.

மந்தித்தல், மந்தப்படல், becoming dull, being undigested.

மந்திரகலை, ஆகமத்தினோர் பிரிவு, one of the three divisions of the agamas—the devotional.

மந்திரகூடன், ஒற்றன், a spy, an emissary.

மந்திரகூர்மை, இந்துப்பு, rock-salt.

மந்திரம், அரசன் மனை, the king's residence. 2. ஆலோசனை, private deliberation, secret consultation. 3. எண்ணம், opinion. 4. ஒரு தேசம், name of a country. 5. தேவர் கோயில், a temple, an edifice erected to some deity. 6. நாப்புடை பெயராதுச்சரித்தல், a mystical verse, as a prayer or form of exorcism, reciting mystical formulas. 7. வீடு, a house. 8. குதிரைப்பந்தி, a horse stable. 9. உபநிஷத முப்பத்திரண்டினொன்று, one of the உபநிஷதம், a class of sacred books containing doctrines of the vedas explained and enlarged according to the vedantic sect.

மந்திரி, குபேரன், Kuvera. 2. சுக்கிரன், the planet Venus. 3. தந்திரி, a king's counsellor, prime minister. 4. புதன், Mercury. 5. மந்திரியென்னேவல், *imp.* recite mystic formulas, enchant by incantations. 6. வருங்காரியஞ் சொல்வோன், a foreteller, one who predicts or prophesies. 7. வியாழம், the planet Jupiter. 8. திராய், a kind of edible, but bitter herb or plant.

மந்திரித்தல், மந்திரம்பண்ணல், reciting mystic formulas, enchanting by incantations.

மந்தினி, as மந்தனி, a churn.

மந்துரை, குதிரைப்பந்தி, a horse stable or row of horses.

மந்தோச்சம், (*in astron.*) apsis of a planet's orbit. 12383

மந்தோதரி, see மண்டோதரி.

மமகாரம், நானெனதெனுஞ்செருக்கு, ideas of self-importance.

மமகாரன், ஓரரசன், a king (பிரபு).

மமதை, அகந்தை, self-conceit, venity.

மம்மட்டி, சிற்றுமுட்டி, a plant used for medicine, oppos. to பேரா முட்டி—Pavonia Zeylanica (*M. Dic.*).

மம்மர், துன்பம், distress, affliction. 2. மயக்கம், lasciviousness, lust.

மம்மாயி, மாம்சபேதி, a solvent of flesh (*M. Dic.*).

மயக்கமின்மை, அறத்துறுப்பினொன்று, one of the constituents of charity or virtue—freedom from delusion.

மயக்கம், உன்மத்தம், mental delusion, infatuation, stupor, drowsiness, a besotted state. 2. ஜாதிக் கலப்பு, confusion in nature—as in the blending of sexes among

animals or vegetables. *3.* (*in gram.*) சையோகம், combination of letters, coalescence.

மயக்கவணி, ஓரலங்காரம், in rhetoric a fault in speech, mistaking one object for another. *Note* :—According to a work called குவலையானந்தம், it is one of a hundred rhetorical figures.

மயக்கு, see மயக்கம். *2.* மயக்கென்னேவல், *imp.* fascinate, allure, charm, stupify, confuse, bewitch.

மயங்கல், மயங்குதல், being confused, enchanted, allured, intoxicated.

மயங்கவைத்தல், நூற்குற்றம் பத்தினொன்று, one of the ten faults or defects in a literary composition—obscurity, mystification.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா, கலிப்பாவினோர் பேதம், a variety of கலிப்பா verse.

மயம், அழகு, beauty, in reference only to the works of மயன், a daitya. *2.* ஒட்டை, a camel. *3.* சிற்ப நூன் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two shastras which teach architecture and other mechanical arts.

மயர்வு, மயக்கம், the illusions of the senses, confusion of mind.

மயல், உன்மத்தம், bewilderment, confusion, delusion. *2.* செத்தை, dried rubbish. *3.* பிசாசம், a demon, an imp. *4.* மயக்கம், lust, sensual infatuation of either sex.

மயன், அரக்கர்தச்சன், *daitya*, the architect of asuras, also father of மந்தோதரி. *2.* கின்னரன், a lutist. *3.* தச்சன், carpenter. *4.* வினைஞன், an artificer, architect.

மயானம், சுடுகாடு, burning or burial ground.

மயானவயிரவன், சுடலைவயிரவன், Bhairava, as residing in places for burning the dead.

மயிடம், எருமை, a buffalo.

மயிடற்செற்றாள், see மகிடற்செற்றாள்.

மயிரகம், மயிர்ச்சீலை, hair-cloth, woollen.

மயிரொழுங்கு, மயிர்க்குழற்சி, the line of hair in females, from the navel upward, also looseness of hair.

மயிரோசனை, கோரோசனை, a concretion in the stomach of a cow.

மயிர், உரோமம், hair. *2.* ஆட்டுரோமம். fleece of sheep. *3.* தூவி, down of birds.

மயிர்வாரி, சீப்பு, a comb.

மயிர்வினை, கத்தரிக்கை, a hair-dresser's trade.

மயிர்வினைஞன், நாவிதன், a barber.

மயிலடிக்குருந்து, ஒரு குருந்து, a tree whose leaf is trifurcated—sacred to Siva.

மயிலம், குப்பைமேனி, a plant—Acalypha Indica (*M. Dic.*).

மயிலியம், செம்பருத்தி, the cotton plant with red flowers (*M. Dic.*).

மயிலை, இருவாட்சி, a kind of jasmine. *2.* ஒரு நகர், a town—Mailapur. *3.* மீனவிராசி, Pisces of the zodiac. *4.* மீன், a fish.

மயிலைநந்தி, மருதோன்றி, a flowering shrub—Lawsonia spinosa (*M. Dic.*).

மயில், மயூரம், } மயில், a peacock (*M. Dic.*). *2.* செங்கத்தாரி, a shrub with a medicinal bark and root.

மயில்வாகனன், குமரன், Skanda, as borne by a peacock.

மயிற்பீலி, மயிலிறகு, peacock's feathers.

மயிற்றுத்தம், துருசி, sulphate of copper, blue vitriol.

மயிற்றோகை, மயில் வால், a peacock's tail.

மயூகம், கடிகாரவூசி, the hand or pin of a dial, gnomon. *2.* கிரணம், a ray of light, beam.

மயூரகதி, see மயூரம் *3.*

மயூரகம், துருசி, blue vitriol. *2.* (*M. Dic.*) நாயுருவி, Achyranthes aspera.

மயூரபதகம், நகக்குறி, marks or indents of the nails—*used in erotics.*

மயூரம், மயில், a peacock. 2. யோக நிலையினொன்று, one of the postures of the yogi, sitting with two elbows pressed to the navel, the hands on the ground, the feet extended, and the head raised. 3. துரககதியைந்தினொன்று, one of the five paces of a horse like a peacock. 4. (*M. Dic.*) மயில் கொன்றை, a species of Cassia.

மயூராரி, பச்சோந்தி, chamelion.

மயேந்திரம், see மகேந்திரம்.

மரகதமேனியன், விஷ்ணு, Vishnu.

மரகதம், பச்சை, green, emerald colour. 2. பச்சை மணி, emerald.

மரகதவல்லி, தர்ம தேவதை, the Goddess of virtue. 2. பார்வதி, Parvati.

மரகதன், குபேரன், Kuvera.

மரக்கலம், கப்பல், a ship, vessel, bark, boat.

மரக்கலன், மீகாமன், a ship-master, commander of a ship.

மரக்கா, நந்தவனம், a flower-garden.

மரக்காரை, ஒரு மரம், a kind of tree.

மரக்கால், உப்பளம், salt-pans. 2. சோதி நாள், the fifteenth lunar asterism. 3. துர்க்கைக் கூத்து, dance of Durga. 4. முகந்தளக்குங் கருவியிலொன்று, a corn measure, the twelfth part of a *kalam*. 5. விஷ்ணு கூத்து, dance of Vishnu.

மரக்கோல், மொட்டம்பு, a blunt arrow.

மரங்கொத்தி, ஒரு புள், a woodpecker.

மரச்செறிவு, சோலை, a grove. 2. மரப்பொது, a tree in general.

மரணம், சாவு, death, mortality.

மரணயோகம், (*in astrology*) நாச யோகம், one of the three யோகம், unfavourable.

மரணை, சாதல், dying, death.

மரதம், (as மிருதம்) சாவு, death.

மரபார், } சான்றோர், the worthy.
மரபினோர், }
2. சுற்றத்தார், kinsfolk, relations.

மரபிலக்கணம், the use of appropriate terms.

மரபு, குணம், nature. 2. பழமை, antiquity. 3. முறைமை, established usage, order, propriety, *ancestral line*—as in இருமரபு.

மரபுச்சொல், } appropriate names
மரபுப்பெயர், }
or terms.

மரமஞ்சள், ஒரு மஞ்சள், tree-turmeric, a bitter root.

மரம், விருக்ஷம், tree, shrub, plant, any growing vegetable.

மரல், அரலை, a shrub, the fibre of which is used for cordage.

மரவட்டணம், } நெடும்பரிசை, a
மரவட்டம், }
wooden shield.

மரவம், a tree, see குங்குமம் 1.

மரவினைஞர், } தச்சர், carpenters.
மரவினையாளர், }

மரவுப்பு, ஓருப்பு, potash, potasa impura.

மரவுரி, as சீரம், the bark of a tree. 2. நார்ச் சீலை, cloth made from the bark.

மரவை, மரச்செப்பு, a wooden vessel.

மரா, } வெண்கடம்பு, the white
மராமரம், }
species of a flower tree sacred to the God Skanda—Eugenia racemosa. 2. ஆச்சா, a kind of timber tree, ebony—Diospyros ebenaster. 3. அரசு, the Indian fig tree.

மராடம், பதினெண் பாஷையி லொன்று, the Mahratta language —one of the eighteen languages. 2. மகராஷ்டிர தேசம், the Mahratta country.

மராட்டம், இடம், place. 2. புறமயிர், hair of the body. 3. பெண் மயிர், hair of females.

மராம், கடம்பு, a flower tree—Eugenia racemosa. 2. வெண் கடம்பு, the white species of it.

மராரம், பண்டசாலை, a granary, a store-house.

மராளம், அன்னம், a sort of goose or swan, with red legs and bill, said to be the flamingo. 2.

பாம்பு, a snake. 3. மாதளை, pomegranate.

மரிசம், மரீசம், } மிளகு, pepper, considered as an antidote.

மரிசி, புது வரம்பு வழி, a new embankment or causeway, used as a road.

மரித்தல், சாதல், dying.

மரியாதம், நீதி, rectitude, equity, justice.

மரியாதை, அமைவித்த நிச்சயம், a fixed certainty. 2. கடற்கரை, the sea-shore. 3. வரம்பு a boundary, limit, a dike. 4. நீதி, justice.

மரீசி, கிரணம், a ray of light. 2. சப்தவிருஷிகளி லொருவர், a saint, the son of Brahma, and one of the Prajapathis and Brahmadikas or first created beings.

மரீசிகம், மரீசிகை, } கானல், mirage.

மரு, ஒரு பரிமளப்புதல், a fragrant plant, as மருகு. 2. மருவென் னேவல், *imp.* come near, approach. 3. வாசனை, fragrance.

மருகன், (*fem.* மருகி), மருமகன், a son-in-law.

மருகு, மகர வாழை, a kind of plantain. 2. ஒரு வாசனைப்பூண்டு, a fragrant plant—Origanum majoranum. 3. (*M. Dic.*) காட்டு மல்லிகை, a kind of wild jasmine with red blossoms.

மருக்கடம், as மர்க்கடம், monkey or ape.

மருக்காரை, ஒரு காரை, a kind of thorny shrub.

மருக்கொழுந்து, ஒரு வாசனைப்புதல், a fragrant kind of shrub, southern wood—Artemisia austriaca.

மருக்கொழுந்துச்சக்களத்தி, அளத்துப் பச்சை, a plant growing by the sea and in blackish soil.

மருங்கு, மருங்குல், } இடை, the waist. 2. பக்கம், side.

மருச்சகம், கொம்மட்டிமாதளை, a kind of citron (*M. Dic.*).

மருச்சகன், இந்திரன், Indra.

மருட்சி, அறிவின்மை, ignorance. 2. மயக்கம், confusion.

மருட்டம், கள், that which intoxicates, toddy.

மருட்டல், மயங்குவித்தல், fascinating. bewitching, alluring, enticing. 2. பயப்படுத்தல், threatening, menacing.

மருட்பா, ஐந்து பாவினொன்று, one of the five varieties of verse, in which வெண்பா and ஆசிரியப்பா are intermingled. The stanza begins with two lines of வெண்பா, and the remainder, not limited, is of the ஆசிரியப்பா.

மருண்மா, மதயானை, an infuriated elephant.

மருண்மாலை, கருகு மாலை, the dusk of the evening.

மருதக்கருப்பொருள், மருத நிலத்துற் பத்திப்பொருள், men, beasts and other living creatures, things, employments, &c., peculiar to agricultural tracts.

மருதப்பறை, மருத நிலத்திற்குரிய பறை, a drum of agriculturists.

மருதம், ஒரு மரம், a species of tree —Terminalia alata. 2. மருத நிலத்தி ராகம், tunes peculiar to agricultural tracts. 3. மருத நிலம், agricultural land. 4. வயல், rice-field. 5. (*in love poetry*) love-quarrels.

மருதயாழ், ஒரு யாழ், lutes peculiar to agricultural tracts.

மருதவேந்தன், இந்திரன், an epithet of Indra, as the giver of rain.

மருது, மருத மரம், a tree—Terminalia alata.

மருதோன்றி, ஒரு செடி, a flowering shrub, the leaves, flowers and roots of which are used medicinally, and the leaves for a dye—Lawsonia spinoso—Henna or broad Egyptian Privet.

மருத்தன், மருத்துவன், } வாயு, the God of the winds, regent of the north-west. 2. இந்திரன், Indra.

மருத்து, காற்று, a wind.

மருத்துவநாள், அச்சுவினி நாள், the first lunar asterism.

மருத்துவர், அச்சுவினி தேவர்கள், the two celestial physicians of Swarga. 2. வைத்தியர், doctors.

மருத்துவன், இந்திரன், Indra. 2. வைத்தியன், a physician.

மருத்துவன் தாமோதரனார், சங்கப் புலவரிலொருவர், a professor of the ancient Madura College, who was well skilled in the medical art.

மருந்தம், நஞ்சு, poison.

மருந்து, அமுதம், nectar, ambrosia. 2. மருந்து, medicine.

மருப்பு, இஞ்சி, ginger. 2. விலங்கின் கொம்பு, a horn of a beast.

மருமம், மார்பு, the breast. 2. உயிர் நிலையம், any vital part of the body.

மருமரம், மருமராஞ்சம், } அசையுஞ் சீலையானு மிலையானு மெழுமொலி, the rustling sound of cloth or dry leaves.

மருமான், மகன், a son. 2. மருமகன், a son-in-law. 3. வழித்தோன்றல், a male descendant.

மருவலர், மருவார், } பகைவர், those who do not approach—enemies, foes.

மருவல், கிட்டல், approaching, drawing near. 2. கலத்தல், joining, uniting, combining, copulating.

மருளல், அஞ்சல், fearing. 2. எழுத்திலா வோசை, inarticulate sounds. 3. பேசலாலெழுமொலி, murmur of voices. 4. மயங்கல், being infatuated, confused of thought, bewildered, deluded.

மருளிந்தம், மருளிந்தராகம், } ஒரு பண், a tune.

மருள், உவமையுருபு, a particle of comparison. 2. உன்மத்தம், infatuation, delusion, bewilderment of mind. 3. அரலை, a shrub, the fibre of which is used for cordage. 4. பிசாசம், *imp.* devil. 5. மருளென்னேவல், *imp.* be confused, bewildered, fear.

மரூஉ, மரூஉச்சொல், மரூஉமொழி, } இலக்கணம் சிதைந்து வழங்குவது, a contracted word authorized by learned men, but not according to rule.

மரை, ஒரு மிருகம், an elk, the gayal or yak. 2. தவளை, a frog. 3. (*by aph.*) தாமரை, a lotus.

மரைநீகம், தவளை, a frog.

மர்க்கடநியாயம், கெடு நியாயம், a corrupt judgment.

மர்க்கடம், குரங்கு, a monkey.

மர்க்கடவாசம், சிலந்தி வலை, spider's web.

மர்த்தனம், இடிக்கை, rubbing, grinding, pounding.

மர்த்தியம், உலகம், the earth, the abode of mortals.

மர்மம், as மருமம்.

மலகரி, ஓரிராகம், a tune, one of the thirty-two melodies.

மலங்கல், அசைதல், shaking, moving. 2. குளம், a tank.

மலங்கு, ஒரு மீன், an eel. 2. மலங்கென்னேவல், *imp.* shake, move.

மலசகிதர், மலசம்பந்தர், persons in whom sin is innate, inherent.

மலத்திரயம், மும்மலம், the three evil passions or inherent principles of the soul.

மலபரிபாகம், ripening of the three inherent principles of the soul for its liberation (தீ. 216).

மலம், அழுக்கு, dirt, filth; also serum, blood, marrow, urine, ear-wax, phlegm, sweat, &c. 2. பாவம், sin. 3. வண்டல், dregs, sediment.

மலயக்கால், மலயமாருதம், மலயானிலம், } தென்றல், wind from the Pothiya mountain—south wind.

மலயசம், சந்தனம், mountain-produced—sandal wood. 2. தென்றல், south wind.

மலயம், பொதிய மலை, mount Pothiya famed as the abode of Agastya and other sages, situated near Cape Comorin.

மலரவன், மலரோன், } பிரமன், the lotus-residing—Brahma.

மலர், பூமலர், flower, blossom. 2. மலரென்னேவல் *imp.* open as a flower, bloom, be expanded, increase, be cheerful, appear, rise.

மலர்க்கணைவேள், மன்மதன், Kama, the Hindu Cupid, as bearer of the flowery arrows.

மலர்க்கா, பூந்தோட்டம், a flower garden.

மலர்ச்சி, எழுதல், appearing, rising. 2. களிப்பு, cheerfulness. 3. பொலிவு, increasing, expanding. 4. அலர்ச்சி, blossoming, blooming.

மலர்தல், எதிர்தல், meeting. 2. தோன்றல், appearing, rising to view. 3. நிறைதல், becoming full. 4. விரிதல், being expanded or extended, as water, the earth, the rays of the sun, flower, &c.

மலர்தாங்கி, ஒரு கொடி, a kind of medicinal creeper.

மலர்த்திரள், பூங்கொத்து, a collection of flowers.

மலர்த்தேன், பூந்தாது, the anther of a flower. 2. பூந்தேன், honey gathered from flowers.

மலவாகி, மலாசயம், } (*in anat.*) மலப்பை, the rectum.

மலாடனார், ஒரு சங்கப் புலவர், a professor of the ancient Madura College.

மலாடு, (*contraction of* மலயமாநாடு) மலைநாடு, a mountainous country. 2. மலயாளம், Malayalam.

மலர்வகம், பிண்ணாக்கு, cakes of the refuse of cocoa-nuts or sesamum, after the oil is expressed.

மலிதல், நிறைதல், becoming or being full. 2. பெருகல், increasing, multiplying.

மலினமுகன், இறந்தோன், a ghost or goblin. 2. தீக்கடவுள், Agni, the God of fire. 3. தீயோன், a wicked, vile, cruel man. 4. முசு, the black faced monkey. 5. வண்டு, a black beetle.

மலினம், கருமை, blackness. 2. மாசு, dirt, filth.

மலீமசம், மாசு, dirt, foulness, uncleanness.

மலை, உவமை, a word of comparison. 2. மலை, hill, mountain. 3. மலையென்னேவல், *imp.* wear, put on, oppose, fight, contradict, stagger.

மலைகலக்கி, ஒரு பூண்டு, a plant—Adiantum caudatum.

மலைச்சார்பு, குறிஞ்சி நிலம், a mountainous tract.

மலைதல், அணிதல், wearing, putting on. 2. எதிர்த்தல், opposing. 3. பொருதல், fighting. 4. மறுத்தல், contradicting. 5. மயங்கல், staggering, being confused.

மலைதாங்கி, ஒரு பூண்டு, a plant—Sida lanceolata.

மலைத்தும்பை, ஒரு தும்பை, a plant—Pholomis biflora.

மலைத்துவரை, ஒரு துவரை, a variety of lentil—Pigeon-pea, dholl.

மலைத்தேங்காய், fœtid sterculia.

மலைநாடன், சேரன், ruler of a mountainous country—a kind of the Sera race.

மலைநாரத்தை, ஒரு நாரத்தை, mountain orange.

மலைபடுதிரவியம், மலையி லுற்பத்தியாகுந் திரவியம், mountain productions, one of the five sources of riches.

மலைப்பச்சை, குளவி, a shrub, a kind of wild jasmine with red blossoms. 2. பச்சிலைமரம், a tree bearing white flowers and yellow fruit something like an orange—Xanthochymus pictorius.

மலைப்பருத்தி, ஒரு பருத்தி, hill-cotton.

மலைப்பாறை, மலைப் பக்கம், the side of a mountain.

மலைப்பு, கூத்தின் விகற்பம், a kind of dance. 2. போர், fighting. 3. மலைவு, confusion of mind.

மலைமகள், மலைமடந்தை, } பார்வதி, she who was brought upon a mountain—Parvati.

மலைமல்லிகை, ஒரு மல்லிகை, a species of jasmine—Millingtonia hortensis.

மலைமுள்ளங்கி, ஒரு பூடு, a plant—Ornithogal Gadense (*Rott.*).

மலையத்தி, ஓரத்தி, a species of Ficus racemosa.

மலையத்துவசபாண்டியன், ஓரரசன், one of the ancient kings of Madura and the father of the Goddess Minatchi.

மலையமான், சேரன், any king of the Sera race.

மலையம், குறிஞ்சி யாழ்த்திறம், lute of a hilly district. 2. மலையினுச்சி, summit of a mountain.

மலையரசன், இமயம், the Himalaya as king of mountains.

மலையன், கடையெழு வள்ளலிலொருவன், one of the third class of liberal princes. 2. குறிஞ்சிநிலத் தலைவன், the chief of the hilly country. 3. சேரன், any king of the Sera race.

மலையாமணக்கு, ஓராமணக்கு, the coral tree—Jatropha multifida.

மலையாரம், சந்தனம், sandal-wood.

மலையிருவேலி, as சைலகம், a grass growing on hills.

மலையினுச்சி, மாமிசபேதி, a solvent of flesh.

மலையின்முனிவன், மிளகு, pepper. 2. அத்தி, a tree—Ficus racemosa.

மலையீந்து, ஓரீந்து, a species of palm which grows on hills, whose bark is used in distilling spirituous liquors.

மலைவீரியம், அன்னபேதி, green vitriol.

மலைவு, உவமை, a word of comparison. 2. போர், contending with, opposition. 3. மயக்கம், delusion, confusion of mind. 4. மாறுபாடு, contrariety of meaning in a sentence. 5. சொன்மலைவு, obscurity in language.

மலைவெட்பு, சந்தனம், sandal-wood.

மலைவேம்பு, ஒரு வேம்பு, a beautiful tree, Persian Lilac—Milia Azidarachta.

மல், கூத்தின் விகற்பம், a kind of dance. 2. திருமால் கூத்து, dance of Vishnu. 3. வலி, strength, robustness. 4. வளமை, fertility, richness. 5. மற்போர், wrestling, boxing.

மல்கல், நிறைதல், becoming full, abounding. 2. பெருகல், increasing, being multiplied.

மல்புறு, கார்போகரிசி, the seed of a medicinal plant—Psoralea corylifolia.

மல்லகதி, துரககதியைந்தினொன்று, the jumping pace of a wrestler, a gallop.

மல்லகம், சிறுவாலுளுவை, a kind of medicinal seed (*M. Dic.*).

மல்லம், தட்டம், a kind of cup or porringer. 2. வலிமை, strength, robustness. 3. மற்பிடி, wrestling, boxing, palestra.

மல்லரங்கம், மல்லகசாலை, a place for boxing and for athletic exercises, a gymnasium.

மல்லரி, மல்லாரி, } பம்பைமேளம், a kind of drum.

மல்லல், மிகுதி, abundance. 2. வலி, power, strength. 3. வளமை, greatness.

மல்லன், ஓரரசன், name of a king or chief of Mallapuram. 2. வலியோன், a strong man. 3. மல்லாடுவோன், a wrestler, a boxer.

மல்லாரி, சண்டைக்காரி, a shrew, a quarrelsome woman. 2. வாச்சியத்தினோர் பகுதி, a division of a musical mode. 3. as மல்லரி.

மல்லி, மல்லிகை, Arabian jasmine.

மல்லிகம், மல்லிகை, Arabian jasmine (*M. Dic.*).

மல்லிகார்ச்சுனம், ஒரு சிவஸ்தலம், a place sacred to Siva.

மல்லிகை, இரப்போர்கலம், a mendicant's vessel. 2. ஒரு பூஞ்செடி, Arabian jasmine—Jasminum sambac. 3. விளக்குத்தண்டு, an earthen vessel as a lamp, for holding oil in burning. 4. பாத்திரம், a goblet, a drinking vessel.

மல்லை, இரப்போர்கலம், a mendicant's vessel. 2. வட்டம், a circle.

மவுனம், see மௌனம்.

மழலை, நிரம்பா மெல்லிய சொல், prattling of children.

மழவன், கட்டிளமையோன், a young man.

மழவு, இளமை, youth, juvenility, tenderness. 2. குழந்தை, an infant.

12384

மழித்தல், மொட்டையாக்கல், shaving off the hair.

மழு, எரியிரும்பு, a testing iron applied red-hot to the hand to prove guilt or innocence. 2. பரசாயுதம், a battle-axe—It is one of the weapons of Siva.

மழுங்கல், பொலிவழிதல், losing lustre, bloom or splendour.

மழுவாளி, மழுவேந்தி, } சிவன், the battle-axe-armed—Siva. 2. பரசுராமன், Parasurama.

மழை, குளிர்ச்சி, coolness. 2. நீர், water. 3. மேகம், cloud.

மழைக்கோள், சுக்கிரன், Venus, as the planet which brings rain.

மளமளெனல், ஈரடுக் கொலிக் குறிப்பு, breaking with a crashing noise.

மள்ளம், மள்ளல், } வலி, strength, power, robustness.

மள்ளர், உழவர், the labouring class in agricultural districts. 2. குறிஞ்சி நில மாக்கள், the inhabitants of mountainous districts. 3. திண்ணியர், strong, powerful persons. 4. படைவீரர், warriors.

மறதி, பொச்சாப்பு, forgetfulness. 2. தமகுணத்தொன்று, obscuration or beclouding of the understanding or the spiritual faculties; oblivion as to the events of a former birth.

மறத்தல், பொச்சாப்பு, forgetfulness.

மறத்தியர், பாலை நிலப் பெண்கள், females of desert tracts.

மறநிலைப்பொருள், பகைவரை வருத்தியும், சூதில் வென்றும் திறை சேர்த்தல், obtaining revenue and wealth by forced tribute from enemies and by success in games.

மறநிலையறம், நிரைமீட்டுப் பகை வென்று செஞ்சோற்றுக் கடன்கழி யாதாரைத் தண்டித்தல், punishing soldiers and others who are false to their rice and refuse to defend their country and recover plundered cattle.

மறநிலையின்பம், ஏறுதழுவல், இலக்க மெய்தல் முதலிய மறத்தகையாற் கன்னியை மணமுடித் தின்புறல், having the pleasure connected with obtaining a bride by some brave act, as subduing a bull or conquering in archery, &c.

மறப்பு, மறதி, forgetfulness.

மறப்புலி, சிங்கம், a lion.

மறமலி, யானை, an elephant.

மறம், கொலை, murder, killing. 2. கோபம், anger. 3. சினம், wrath. 4. யமன், Yama. 5. பாவம், sin, vice, evil. 6. பிணக்கு, disagreement. 7. வலி, strength, power, 8. வீரம், military exploits, bravery. 9. கெடுதி, injury.

மறலி, யமன், Yama. 2. மயக்கம், confusion of mind, delusion.

மறல், எழுச்சி, height, elevation. 2. ஒரு கூத்து, a kind of dance. 3. காலன், the minister of death. 4. குற்றம், fault. 5. சாதல், dying, death. 6. தரித்திரம், poverty. 7. யமன், Yama. 8. பகை, hatred. 9. பிணக்கு, dissension. 10. போர், quarrel, fight. 11. மயக்கம், confusion of mind, delusion, infatuation. 12. மறதி, forgetfulness.

மறவர், படைவீரர், warriors, heroes. 2. பாலை நிலமாக்கள், inhabitants of arid tracts. 3. வேடர், hunting tribes. 4. ஒரு ஜாதியார், a caste, *Maravars*.

மறவி, ஈனம், defect, want. 2. கள், toddy, intoxicating liquor. 3. மறதி, forgetfulness.

மறி, அளுங்கு, ஆடு, குதிரை, மான் இவற்றின் குட்டி, the young of the armadillo, sheep, horse and deer. 2. மறியென்னேவல், *imp.* be stopped, checked, detained, check, detain, confine. 3. மான், a deer. 4. மேடவிராசி, Aries of the zodiac. 5. (திவா.) கஸ்தூரி மான், musk-deer.

மறிதரல், மீளல், returning or coming back.

மறிதல், மடங்கல், being stopped, checked, receding.

மறித்தல், தடுத்தல், stopping, detaining, arresting, confining.

மறு, குற்றம், fault, stigma. 2. மறுவென்னேவல், *imp.* refuse, deny, put away, renounce. 3. மாசு, spot, blemish, stain.

மறுகல், சுழலல், whirling, revolving.

மறுகு, குறுந்தெரு, a narrow street. 2. நெடுந்தெரு, a road, street. 3. மறுகென்னேவல், *imp.* whirl, revolve.

மறுக்கம், சுழற்சி, unsteadiness, whirling. 2. துன்பம், distress, sorrow, affliction.

மறுதலை, பகைவன், an enemy, antagonist.

மறுத்தல், கொடாமை, refusing, denying. 2. நீக்கல், putting away, renouncing. 3. வெட்கம், being ashamed, shame.

மறுமை, வருபிறப்பு, the next birth, as distinguished from இம்மை, அம்மை, the future state.

மறுவல், } கஸ்தூரி மிருகம், the
மறுவி, } civet-cat.

மறை, அடைக்கலம், refuge, shelter. 2. இரகசியம், a secret thing, secrecy, concealment. 3. கேடயம், a shield. 4. சொல், word. 5. மந்திரம், silent repetition of an incantation. 6. மறை, a speck or speckle, spot, blemish. 7. மறையென்னேவல், *imp.* be hidden, disappear, recede, hide, cover, shroud. 8. வேதம், divine, precept, the sacred writings, the vedas.

மறைக்கொடியோன், துரோணாச்சாரியன், the Veda-bannered—Dhronacharia. 2. பிரமன், Brahma. 3. (*pl.* மறைக்கொடியோர்) பார்ப்பான், a Brahmin.

மறைசை, a name of வேதாரண்யம்.

மறைதல், மறைவு, being hidden, shrouded, disappearing.

மறைத்தலைவி, இலக்ஷ்மி, Lakshmi. 2. உமை, Parvati.

மறைபுகல், அடைக்கலம் புகல், taking refuge.

மறைப்பு, மறைவு, a screen.

மறைமுடிவு, வேதாந்தம், the subtance of the vedas, the vedanta.

மறைமுதலி, } சிவன், Siva. 2.
மறைமுதல், } கடவுள், an epithet of the Deity.

மறைமொழி, மந்திரம், incantation. 2. வேதம், the vedas.

மறையவர், } அந்தணர், Brahmans.
மறையோர், }

மறையிலார், கீழ்மக்கள், the low, the ignorant.

மறையோன், பிரமன், he who revealed the vedas—Brahma. 2. வியாழம், Jupiter, the preceptor of the celestials. 3. பார்ப்பான், a Brahmin.

மறைவு, see மறைதல்.

மற்குணம், மூட்டை, a bug. 2. யானை, an elephant.

மற்கோல், பகை, hatred, enmity.

மற்சரம், as மச்சரம், envy, impatience at another's success or prosperity.

மற்று, அசைநிலை, an expletive. 2. வினைமாற்று, otherwise, else. 3. a disjunctive particle.

மற்றை, மற்றையது, } சுட்டியதற்கினம், another, the rest, the next, following other.

மற்றொன்றுவிரித்தல், நூற் குற்றம் பத்தினொன்று, digression, introducing another subject—one of the ten faults or defects in a literary composition.

மற்றோ, அதிசய விரக்கச்சொல், a word expressive of surprise, pity.

மனக்காட்சி, as மானதக்காட்சி, perception by the senses.

மனக்கோட்டம், மனத்தழுக்கம், } அழுக்காறு, envy, dislike.

மனவிழி, இசைப்பாட்டு, a kind of melody.

மனவு, அக்குமணி, a mock-pearl. 2. சங்கு, a conch. 3. மணிப் பொது, a gem in general.

மனனம், சிந்தித்தல், minding, considering.

மனுகுலம், மனத்துன்பம்; grief.

மனுகை, பெண் யானை, a female elephant.

மனுவு, அரைப்பட்டிகை, a gold or silver girdle.

மனு, அஷ்டாதச தர்ம நூலி லொன்று, one of the eighteen works on law, ethics and jurisprudence by Manu, the great legislator and saint. 2. மந்திரம், a mystical verse or formula. 3. மனுச் சக்கரவர்த்தி, Manu, the great legislator and saint, regarded as the son of Brahma or a personification of that God and the author of மானவம் or Institutes of Manu. He is called Swayambhuva. 4. a generic term, applied to the fourteen successive *Manus* who preside over the universe each for the period of a *Manuvantara*. In the present *Kalpa* there have already been six, of whom Swayambhuva was the first. The seventh or now ruling Manu, is *Vaivaswata*.

மனுவந்தரம், மனுவின் காலவளவு, the reign of a *Manu*, a period equal to seventy-one ages of the Gods, fourteen of them making a Kalpa or 4,320,000,000 of years of mortals.

மனுவர், கொல்லர், smiths, blacksmiths.

மனை, மனை, a piece of ground of 2,400 square feet. 2. மனைவி, wife. 3. வீடு, a house. 4. குடும்பம், family, household.

மனைக்கிழத்தி, மனைவி, a wife.

மனைக்கோள், பல்லி, a lizard.

மனைத்தக்காள், மனைவி, a wife, a house-wife.

மனைத்தாயம், இல்லற வொழுக்கம், the virtue of domestic life (குறள்).

மனையறம், இல்லறம், the domestic life.

மனையாட்டி, மனையாள், } மனைவி, a wife, a bride.

மனைவாழ்க்கை, இல்வாழ்க்கை, conjugal life.

மனோகதம், எண்ணம், idea.

மனோகரம், மனோக்கியம், } அழகு, beautifulness, pleasingness. 2. இச்சை, desirableness.

மனோசன், மனோபு, மனோற்பவன், மனோயோன், } மன்மதன், the mind born—Kama, the Hindu cupid.

மனோசிலை, ஒரு பாஷாணம், a kind of orpiment, red arsenic.

மனோபதி, பிரமன் நகரம், Brahma's city (ஸ்காந்.).

மனோபலம், தைரியம், fortitude, good courage.

மனோபவம், மனதிற் பிறந்தது, the thought of the mind.

மனோமயகோசம், பஞ்சகோசத் தொன்று, one of the cases supposed to invest the soul—the mental organs with the faculty of thought operating through the senses.

மனோரதம், இச்சை, desire, pleasure.
மனோரமை, மேரு புதல்வி, the daughter of mount Meru and wife of mount Himalaya.
மனோலயம், மனவொடுக்கம், extinction of will.
மனோலவுலியம், வீணினைவு, whim, freak, caprice.
மனோலி, ஆசியக்காரன், a wit, a joker.
மனோற்பவன், see மனோசன்.
மனோன்மணி, பார்வதி, a desirable, superior gem—Parvati. 2. அப்பிரகம், mica or talc.
மனோன்மணித்தாய், இந்துப்பு, chloride of sodium.
மன், அசைநிலை, an expletive. 2. அரசன், a king. 3. ஆக்கம், modification. 4. ஒழியிசை, indicating words omitted necessary for a full sense. 5. கழிவு, what is gone. 6. பெருமை, greatness. 7. மிகுதி, abundance. 8. மன்னெனுமேவல், *imp.* be fixed, remain, be settled ; persevere.
மன்பதை, மக்கட்பரப்பு, the world collectively, a crowd of people.
மன்மத, ஓராண்டு, the twenty-ninth year of the Hindu cycle.
மன்மதகிருகம், கடிதடம், pudendum mulieris or mons veneris.
மன்மதம், காமம், love of the sexes, passion.
மன்மதன், காமன், Kama. 2. மனங்கலக்கு விப்போன், one who confounds the mind.
மன்வந்தரம், see மனுவந்தரம்.
மன்விருத்தம், ஆசிரிய விருத்தம், a kind of verse of a peculiar metre, being the second of the பா, class.
மன்ற, தேற்றம், certainty. 2. மிகுதி, abundance.
மன்றகம், சபை, a place of assembly.
மன்றம், அம்பலம், a place of assembly. 2. நிச்சயம், certainty. 3. நெடுந்தெரு, the main street, highway 4. வாசனை, scent, perfume. 5. வெளி, an open space.
மன்றல், கலியாணம், marriage. 2. நெடுந்தெரு, highway, main street. 3. வாசனை, perfume, scent.
மன்று, வெளி, an open field. 2. சபை, a court, assembly-room. 3. கனக சபை, the temple of Siva at Chithambaram in South Arcot.
மன்றுபடுதல், வெளிப்படல், coming to the knowledge of the public, being divulged.
மன்றுளாடி, சிவன், Siva as dancing in void space or as existing in vacuum.
மன்னர், அரசர், kings, princes.
மன்னர்பின்னோர், வைசியர், the three classes employed in industry and labour—merchants, agriculturists and shepherds.
மன்னர்மன்னன், துரியோதனன், a king of kings—the king Duryodhana.
மன்னல், நிலை, steadiness, being stable. 2. நிலைபெறுதல், lasting, being settled, preserving. 3. வியங்கோள்முற்று, *opt.* (root, மன்-னு).
மன்னவன், அரசன், a king, an emperor. 2. உத்திரட்டாதி, the twenty-sixth lunar asterism. 3. எப்பொருட்குமிறைவன், auniversal master.
மன்னன், அரசன், a king, a prince. 2. ஆடவர் பருவத்தொன்று, a man in his prime or from thirty-two to forty-eight.
மன்னார், பகைவர், enemies, foes.
மன்னுமான், கடவுள், the lasting one, the Deity.
மன்னுயிர், ஆன்மா, human life, the soul as surviving death.
மன்னுலகு, தேவலோகம், the enduring world—the abode of the Gods, Swarga.
மன்னோ, அசைச்சொல், an expletive.

மா

மா, அழகு, beauty. 2. குதிரை, பன்றி, யானையிவற்றினாண், the male of the horse, hog and ele-

phant. 3. இலக்ஷ்மி, Lakshmi. 4. ஓரெழுத்து, a syllabic letter composed of ம் and ஆ. 5. கறுப்பு, black, blackness. 6. குதிரைப்பொது, a horse in general. 7. சீலை, cloth. 8. செல்வம், wealth. 9. பெருமை, great. 10. மா, flour, meal, dough, pulverized powders. 11. மாமரம், mango tree—Mangifera Indica. 12. வயல், a field. 13. வியங்கோளொடு வரும் அசைச்சொல், an expletive used with the optative form of the verb. 14. வண்டு, a humming insect. 15. வலி, strength. 16. விலங்கின் பொதுப் பெயர், a beast, an animal. 17. வெறுப்பு, disgust. 18. தாய், mother. 19. ஒரு பின்னம், a fraction, one-twentieth.

மாகசம், கையாந்தகரை, a medicinal herb—Eclypta prostrata.

மாகண்டம், as அதிகண்டம், one of the twenty-seven sections of the lunar path.

மாகதம், மகத தேசத்துள்ளது, that which belongs to or is produced in the kingdom of Magadha or south Behar.

மாகதர், அரச மாதுக்கும், வைசியனுக்கும் பிறந்தொருவர், வீர முதலியவற்றைப் புகழ்வோர், a particular tribe said to spring from a *Kshatrya* or kingly mother, and a Vaisya or servile father. Their profession is to sing the praises and chivalrous exploits of sovereigns and attend on the march of an army. 2. பாணர், Lutists, minstrels. 3. மகதர், the inhabitants of Magadha.

மாகதி, ஒரு பாஷை, the language of Magadha, a dialect of Sanskrit. 2. திப்பிலி, long-pepper. 3. முல்லைக் கொடி, a kind of jasmine, Jasminum frichotomum.

மாகநீர், as மாமாங்கம், sacred bathing.

மாகந்தம், மாமரம், mango tree.

மாகம், ஆகாயம், the sky, the air, atmosphere. 2. மகநாள், the tenth lunar mansion. 3. மாசி மாதம், the month February.

மாகயம், கௌரிபாஷாணம், a kind of prepared arsenic.

மாகரி, ஆண் யானை, a male elephant.

மாகாணி, ஒன்றிற் பதினறி லொரு பங்கு, one-sixteenth, a fractional part.

மாகாளம், ஒரு சிவஸ்தலம், a place celebrated for the worship of Siva.

மாகாளி, காளி, Durga.

மாகுத்தம், பூனைக்காலி, a perennial climbing plant, whose root is used in cholera morbus—Dolichos pruriens.

மாகுலவர், வேடர், hunters, savages.

மாகேசுவரி, பார்வதி, Parvati, one of the seven saktis or mothers.

மாகேந்திரம், தசப்பொருத்தத்தி னொன்று, one of the ten points in which there should be agreement in the horoscope of the bride and bride-groom.

மாக்கருவி, குதிரைக்கல்லணை, a saddle.

மாக்கள், மனிதர், mankind, men, people. 2. பிள்ளைகள், children of any age.

மாங்கலியம், தாலி, a marriage badge tied to the neck.

மாங்குடிமருதனார், ஒரு சங்கப்புலவர், one of the forty-nine professors of the Madura College.

மாசக்காய், the gall-nut, the oakapple—Quercus infectoria.

மாசங்கம், சூதகம், women's menses.

மாசறல், குற்றமின்மை, spotlessness, blamelessness, immaculateness.

மாசி, ஒரு மாதம், February. 2. புதுவரம்பு, a new ridge in a paddy field. 3. மகநாள், the tenth lunar mansion.

மாசிபத்திரி, ஒரு பூடு, Indian wormwood—Artemisia Indica.

மாசு, அழுக்கு, taint, tarnish, defect, stain, flaw, spot. 2. கருமை,

blackness. 3. குற்றம், fault. 4. மேகம், cloud. 5. பால்வீதி மண்டலம், the galaxy or milky way.

மாசுகம், பீர்க்கு, a kind of gourd.

மாசுணம், பாம்பு, snake. 2. மலைப் பாம்பு, a rock-snake.

மாசுதீர்ப்பான், நாவிதன், he who removes a stain—a barber.

மாசேனன், அருகன், the commander of a large army—Argha. 2. கடவுள், the deity. 3. முருகன், the God Subramanya.

மாசை, பொன், gold.

மாச்சரியம், பொறுமை, envy, malice.

மாஞ்சி, வாசனைப் பண்டம், a fragrant substance. 2. ஜடாமாஞ்சி, a medicinal grass—Valeriana, jatamansi.

மாஞ்சில், ஜடாமாஞ்சில், a kind of medicinal grass, Valerian or Indian spikenard—Cyperus stoloniferus.

மாடகம், வீணை முறுக்காணி, the screw-pin of a lute.

மாடம், உழுந்து, a kind of pulse, green gram—Phaseolus mango. 2. வீடு, a house, hall, palace.

மாடல், செய்தல், doing.

மாடி, அரண்மனை, a palace. 2. இக்கட்டு, distress, danger. 3. கோபம், anger. 4. புடவை யோரம், the border of a garment.

மாடு, அகன் மணி, a flat gem. 2. இடம், a place. 3. செல்வம், felicity, prosperity. 4. பக்கம், side. 5. பொன், gold. 6. மாடு, a cow or bull, the genus *bos*. 7. ஒருருபிடைச் சொல், a particle of declension for the ablative of place.

மாடை, பொன், gold.

மாட்சி, மாட்சிமை, } பெருமை, glory, greatness, magnificence, majesty.

மாட்டல், மூட்டல், joining, linking, hooking, buttoning.

மாட்டார், ஏலாதார், incapable or incompetent persons.

மாட்டெறிந்தொழுகல், ஒருத்தி, a rule of criticism, viz., comparison with other parts of the book—one of the thirty-two உத்தி.

மாட்டேற்று, குறிப்பு, allusion, reference.

மாணம், மாட்சிமை, excellency, greatness.

மாணல், நன்மை, being good. 2. மாட்சிமை, being great, becoming excellent.

மாணவகன், எட்டுவயசுக்கும்பதினாறு வயசுக்குமுள்ளாய சிறுவன், a lad more than eight and less than sixteen years of age, a manikin. 2. மாணாக்கன், a pupil, a scholar, a religious student.

மாணவன், ஆண் மகன், a man, a male person.

மாணவ்வியம், பிள்ளைத் தன்மை, childhood, sonship.

மாணாக்கன், கற்போன், a scholar, a pupil, a student, a disciple.

மாணார், பகைவர், enemies, foes.

மாணி, பிரமச்சாரி, a bachelor who is a religious student.

மாணிக்கதீபம், a very bright gem, said to have been used in king's palaces as a light.

மாணிக்கம், ஓரிரத்தினம், a ruby, a carbuncle.

மாணிக்கவாசகர், ஒரு சிவபக்தர், a devotee of the Saiva religion and a poet.

மாணிக்குழி, ஓரூர், the name of a town at the south.

மாண், மாட்சிமை, splendidness, illustriousness, excellence, greatness, honor, worthiness. 2. மாணென் னேவல், *imp.* be excellent.

மாண்டல், மாட்சிமை, being great, being good.

மாண்டார், இறந்தோர், the dead. 2. பெரியோர், the illustrious, the great.

மாண்டூகம், உபநிஷத முப்பத்திரண்டி னொன்று, one of the thirty-two upanishads.

மாண்பு, அழகு, beauty. 2. மாட்சிமை, glory, magnificence, splendour, majesty, honor, dignity, respectability, virtue.

மாதங்கம், யானை, elephant.

மாதங்கர், சண்டாளர், the wicked, the base or vile people.

மாதங்கன், அரசமாதுக்கும் வேடனுக்கும்பிறந்து செருப்புத்தைப் போன், a mongrel, the mother being of the Rajput caste, and the father of the hunter's tribe.

மாதங்கி, காளி, Kali. 2. துர்க்கை, Durga.

மாதண்டம், பெரும்பாதை, a principal road, a king's highway.

மாதம், மாசம், a month.

மாதரி, காளி, Kali.

மாதர், அழகு, beauty. 2. ஆசை, desire, lust. 3. மகளிர், women. 4. தலைவியர், matrons.

மாதலி, மாதுலி, } இந்திரன் சாரதி, charioteer of Indra.

மாதவம், கள், spirituous or fermented liquor. 2. தவம், great austerity. 3. வசந்தகாலம், the season of spring. 4. வைகாசி மாதம், the month of May.

மாதவர், முனிவர், ascetics, rishis.

மாதவன், திருமால், Vishnu, as the husband of Lakshmi. 2. வசந்தன், lord of the spring season—the Hindu cupid.

மாதவி, அர்ச்சுனன் மனைவி, the wife of Arjuna, sister of Krishna. 2. கண்ணன் மனைவி, the wife of Krishna. 3. கள்ளினையட்ட வெல்லம், sugar, treacle from sweet toddy. 4. குருக்கத்தி மரம், a kind of tree. 5. கோவலன் கூத்தி, the concubine of Kovala, a merchant. 6. தூதிகை, a female messenger or procuress usually for bad purposes, a bawd. 7. நாடகக் கணிகை, a *danseuse*, a prostitute. 8. வசந்தகால மல்லிகை, a large creeper—Gaertnera racemosa.

மாதவிகொழுநன், அர்ச்சுனன், the husband of Madhavi—Arjuna.

மாதளை, ஒரு மரம், the pomegranate-Punica granatum.

மாதா, தாய், mother. 2. பார்வதி, —Parvati.

மாதி, வட்டமாயோடல், a circular motion. 2. (*M. Dic.*) மா, mango tree. 3. (*in astronomy*) வட்டம், a revolution.

மாதிகம், குதிரை மார்க்கம், a horse-course, a circus.

மாதிசை, மகாதிசை, aggregate influence of the planets.

மாதிபொதி, நெருஞ்சில், a thorny plant or thistle, small caltrope—Tribulus terrestris (*M. Dic.*).

மாதிரம், ஆகாயம், the air or atmosphere. 2. திசை, a region of the world. 3. பூமி, earth or ground. 4. மலை, a mountain. 5. யானை, an elephant.

மாதிரி, ஒப்பு, pattern, specimen, kind, class, form, sample.

மாதிரிகை, தாய், mother, as opposed to புத்திரிகை, a daughter. 2. மூலப்பிரதி, the original—as applied to books *oppos.* to பிரதி.

மாது, அசைச்சொல், an expletive. 2. பெண், a woman, a damsel.

மாதுகரம், மாதூகரம், } பிரமசாரிப் பிச்சை, alms received by a brahmachari. from five individuals.

மாதுபாகம், புஷ்பராகம், topaz.

மாதுபாகன், மாதொருபாகன், } சிவன், Siva as having his wife Parvati on his side; (*lit.*) the female-sided.

மாதுரியம், இனிமை, sweetness, tastefulness.

மாதுரு, மாதா, mother.

மாதுருவாக்கியம், தாய்ச் சொல், the words of a mother.

மாதுலம், ஊமத்தை, a deleterious shrub, the different parts of which cause stupor, intoxication, &c.

மாதுலன், மாமன், maternal uncle, a father-in-law.

மாதுலுங்கம், மாதுளங்கம், மாதுளம், } மாதுளை, pomegranate, citrus.

மாதுவம், கள், spirituous liquor, toddy. See மாதவம்.
மாதேவன், சிவன், Siva.
மாதேவி, பார்வதி, Parvati. 2. (*M. Dic.*) சீதேவியார், a kind of herb, a species of செங்கழுநீர்.
மாதோ, ஓரசைச்சொல், an expletive.
மாத்தகை, மிகுசிறப்பு superfineness, splendour (நீதி).
மாத்திரம், பிரமாணம், quantity, measure. 2. தன்மாத்திரை, the primitive, subtle, invisible type of visible elementary matter.
மாத்திரை, அளவு, measure. 2. கால நுட்பம், a moment of time. 3. காலவிரைவு, swiftness of time. 4. குளிகை, a medicinal pill. 5. எழுத்தினளவு, quantity in prosody.
மாநடன், சிவன், Siva.
மாந்தப்புல், காவட்டம்புல், a medicinal grass—Andropogan (*M. Dic.*).
மாந்தம், ஒரு நோய், a disease in children.
மாந்தர், ஆண் மக்கள், male children. 2. மனிதர், men, the human kind.
மாந்தல், குடித்தல், drinking. 2. புசித்தல், eating, feeding. 3. ஊழ்வினைப் பயனனுபவித்தல், experiencing pleasure and pain from former births.
மாந்தன், ஆண் மகன், a male child. 2. மனிதன், a man or one of human kind.
மாந்தாதா, ஓரரசன், a king foastered by Indra.
மாந்தி, மாமரம், mango tree.
மாந்தை, ஓரூர், the name of a town.
மாபலன், காற்று, wind.
மாபலி, மாவலி, a king dethroned by Vishnu in his dwarf incarnation.
மாபுலி, சிங்கம், a lion.
மாபூதி, ஏழு நரகிலொன்று, one of the seven hells.
மாமகம், as மாமாகம்.
மாமகன், மன்மதன், the son of Lakshmi—Kama.
மாமடி, as மாமன் (in மீனாட்சி பிள்ளைத் தமிழ்).
மாமணி, மாணிக்கம், a ruby, carbuncle.
மாமருத்துநூலோர், வைத்தியர், physicians.
மாமலை, பெருமலை, any great mountain.
மாமன், அம்மான், the paternal aunt's husband, a mother's brother, a father-in-law.
மாமாகம், ஒருற்சவம், a festival celebrated every twelve years at Cumbaconum.
மாமாத்திரர், வைத்தியர், physicians.
மாமாயை, மகாமாயை, a form of Maya, the material principle or the chief cause of all things.
மாமி, மாமன் மனைவி, maternal uncle's wife, mother-in-law, a paternal aunt.
மாமுகில், அடர்ந்த மேகம், thick clouds.
மாமுடி, நெட்டி, a variety of shrubs —Aeschynomene (*M. Dic.*).
மாமுனி, அருகன், an epithet of Argha. 2. வசிஷ்டன், the sage Vasishta. 3. (*M. Dic.*) நாயுருவி, a kind of plant—Achyranthes aspera.
மாமூலனார், ஒரு சங்கப்புலவர், a professor of the ancient Madura College.
மாமேரு, மகாமேரு, mount Meru.
மாமை, அழகு, beauty. 2. நிறம், colour.
மாயம், அழகு, beauty. 2. கறுப்பு, blackness. 3. தீமை, wickedness, evil act, treachery. 4. பொய், deception. 5. வஞ்சம், hypocrisy, trick. 6. மாயை, ideality, illusion, unreality of the visible world.
மாயவள், இடாகினி, an evil being. 2. காளியேவல் செய்மகள், a maid-servant of Kali. 3. தெய்வப் பெண், Goddess in general.
மாயவன், மாயோன், } திருமால், Vishnu.
மாயன், திருமால், a dark-coloured person Vishnu.

மாயாகாரியம், மாயையிற் றோன்றுவது, the effects of *Maya*, its various changes and diversifications in nature.

மாயாசங்கற்பம், விசேஷ மாயாகாரியம், any remarkable effect of *Maya* by way of creation or destruction.

மாயாசக்தி, பஞ்ச சக்தியிலொன்று, a power, energy or principle which contains five kinds of மாயை.

மாயாஜாலம், மாயாசித்து, } மாயம், dissimulation, treachery, imposture.

மாயாதர்மம், பொய்ப் புண்ணியம், transient or deceptive merit. 2. மாயையின் தன்மை, the two peculiarities of *Maya*, viz., contraction and expansion.

மாயாதாரகம், மாயையை யாதாரமாகவுடையது, that which has *Maya*, for a principal cause.

மாயாதாரணை, நவதாரணையிலொன்று, things formed by *Maya*, the third of the nine classes.

மாயாதேவி, புத்தன் தாய், the mother of Buddha.

மாயாதேவிசுதன், புத்தன், the son of Maya—Buddha.

மாயாபஞ்சகம், மாயையைந்து, five kinds of delusion or evil, on the principles of Adwaitas or followers of Sankaracharya. They are :—(1) தமம், the *tamasa* disposition—darkness or obscurity of mind. (2) மாயை, ideality, inherent evil, personified matter. (3) மோகம், depravity, error. (4) அவித்தை, ignorance, folly. (5) அநிர்தம், that which is without or strange, opposed to God.

மாயாபாசம், பந்தமாயை, being under the influence of Maya.

மாயாபுரி, சப்தபுரியிலொன்று, one of the seven famous towns. 2. பித்தளை, brass.

மாயாப்பிரதிபிம்பர், மாயையாற் பிரதிபலிக்கு முருவுடையோர், he whose glories are reflected, in creation, &c., by means of Maya.

மாயாமலம், மும்மலத்தொன்று, one of three evil passions or defilements—confusion of mind.

மாயாரூபம், feigned shapes, forms assumed or caused by superhuman powers.

மாயாவாதம், ஒரு சமயம், a religion whose doctrines are false, scepticism.

மாயாவி, மாயை செய்வோன், a conjuror, an impostor.

மாயூரம், ஓரூர், a town—Mayavaram. 2. மயில், a peacock, as மயூரம்.

மாயேசுவரி, as மகேசுவரி, Parvati as consort of Siva.

மாயை, இந்திரஜாலம் முதலியன, tricks, jugglery. 2. இரதிதேவி, Rati, wife of Kama. 3. இலக்ஷ்மி, Lakshmi. 4. காளி, Kali. 5. சப்தபுரியிலொன்று, a famous town, one of the seven. 6. பொய், falsehood, vanity, ideality of the world. 7. மாயா சக்தி, a power or energy. 8. வஞ்சம், deceit, fraud, trick. 9. வித்தியா தத்துவத்திறோரங்கம், one of the seven subjects of inquiry which belong to the department of knowledge—matter.

மாயையுற்றாள், காளி, Kali.

மாயோபாதானம், that which is caused by *Maya*.

மாயோள், பெண், a woman, as a dissembler.

மாயோளை, திருவோணம், the twenty-second lunar mansion.

மாயோன், see மாயவன்.

மாயோன்மருகன், குமரன், Vishnu's son-in-law—Skanda.

மாய், ஆச்சா, a kind of timber tree, ebony—Diospyros ebenaster (*M. Dic.*).

மாய்ச்சி, பாம்புகொல்லி, a plant (*M. Dic.*).

மாய்தல், சாதல், perishing, dying. 2. மறைதல், vanishing, being annihilated.

மாய்த்தல், கொல்லல், killing, destroying, reducing to nothing.

மாய்வு, சாவு, death. 2. மறைவு, vanishing, being shrouded, disappearing, a shelter.

மாரகம், மரணம், death. 2. மரண காரணம், that which causes death. 3. as மாரி, any epidemic disease.

மாரகாகளம், குயில், the koil bird.

மாரசயன், புத்தன், a name of Buddha, as conqueror of மாரன்.

மாரணம், கொலை, killing, slaughter. 2. மந்திரத்தாற் கொல்லல், killing by magic or enchantment.

மாரணவித்தை, சூனியவித்தை, necromancy, witchcraft.

மாரதம், நால்வகை ரதத்திலொன்று, one of the four kinds of the war chariots.

மாரதன், see மகாரதன்.

மாரம், கோடகசாலை, a kind of plant —Justicia procumbens (*M. Dic.*).

மாரன், மன்மதன், Kama.

மாராயம், உவகை, good news, auspicious tidings. 2. வாழ்த்து, compliment, congratulation.

மாரி, கள், spirituous liquor, fermented sap of a palm tree. 2. சாவு, death. 3. நீர், water. 4. பற்பல நிறக்குநோய், a destructive and contagious disease. 5. மழை, rain, a shower. 6. மேகம், cloud. 7. வடுகி, an evil Goddess supposed to inflict the small-pox and to deliver from it. 8. ஒட்டு ரோகம், a destructive and contagious disease, a variety of small-pox.

மாரிநாள், உத்திரநாள், the twelfth lunar mansion.

மாரீசம், அஷ்டாதச வுபபுராணத் தொன்று, one of the eighteen secondary puranas.

மாரீசன், இராவணன் மாமன், the name of a rakshasa, maternal uncle of Ravana.

மாருண்டம், பாதை, path, way, road. 2. பாம்பு முட்டை, the eggs of a snake.

மாருதம், காற்று, wind, air. 2. பிராணவாயு, vital air, one of the three humors of the body.

மாருதநாதம், வங்க மணல், sand mixed with lead ore.

மாருதவண்ணக்கல், காகச்சிலை, a loadstone, being black.

மாருதவீமன், ஏகம்ப பாஷாணம், a kind of arsenic.

மாருதி, அனுமான், the wind-born—Hanuman. 2. வீமன், Bhima.

மார்கழி, ஒரு மாதம், the month of December. 2. மிருகசீரிஷம், the fifth lunar mansion.

மார்க்கசிரம், see மார்கழி 1.

மார்க்கணம், அம்பு, an arrow. 2. தேடல், research, inquiry.

மார்க்கணர், இரப்போர், mendicants, beggars.

மார்க்கண்டேயம், அஷ்டாதச வுப புராணத்தொன்று, one of the eighteen secondary puranas.

மார்க்கண்டேயர், ஒரு முனிவர், a muni or sage, the supposed author of the Purana Markandeya.

மார்க்கம், தெரு, a street. 2. நெடுந் தெரு, king's high road. 3. மார்கழி மாதம், the month of December. 4. வழி, a road, path. 5. ஒரு கூத்து, a kind of dance. 6. தாளப் பிரமாணம் பத்திலொன்று, one of the ten rules for keeping time in music. 7. (*M. Dic.*) கையாந்தகரை, a medicinal herb—Eclypta prostra.

மார்ச்சனம், துடைப்பு, cleaning, wiping.

மார்ச்சனி, விளக்குமாறு, a broom.

மார்ச்சனை, முழவொலி, the sound of a drum.

மார்ச்சாரகம், மயில், a peacock.

மார்ச்சாரம், பூனை, a cat.

மார்ச்சாலநியாயம், மார்ச்சால நியாயத்தீர்ப்பு, partial judgment.

மார்ச்சாலம், பூனை, a cat. 2. கோமேதகம், cinnamon stone, onyx.

மார்த்தாண்டம், அஷ்டாதச வுப புராணத்தொன்று, one of the eighteen puranas.

மார்த்தாண்டன், சூரியன், the sun.

மார்த்தாண்டம், பதினெண் புராணத் தொன்று, one of the eighteen puranas—called also பிரமகை வர்த்தம்.

மார்பகம், மார்பம், } நெஞ்சு, breast, chest.

மார்பு, அகலம், breadth. 2. நெஞ்சு, bosom, breast, chest.

மாலதி, சிறுசண்பகம், a small kind of the fragrant champaka flower. 2. மல்லிகை, a kind of jasmine. 3. முல்லை, another species of jasmine.

மாலம், குங்குமமரம், a species of fragrant tree. 2. பேய், a devil.

மாலயம், புரட்டாசி மாதத்திற் பண்ணும் பொதுச் சிராார்த்தம், a ceremoney performed once a year for deceased parents, especially in the month of September.

மாலயற்கரியான், சிவன், the unknown to Vishnu and Brahma—Siva.

மாலர், கவசம், a coat of armour. 2. பார்ப்பனப் பெண்ணுக்குஞ் சூத்திரனுக்கும் பிறந்தோர், those whose mothers are Brahmans and fathers Sudras. 3. புலையர், those of no caste or Paraias. 4. வேடர், savages.

மாலவன், புதன், the planet Mercury.

மாலி, ஓரரக்கன், the name of a rakshasa. 2. கள், toddy. 3. மாலை யணிந்தவன், one who wears a garland.

மாலிகை, நிரல்பட நிற்குங்குழூஉ, things that stand in a row. 2. மாலை, garland, a string of flowers.

மாலிமி, இளமைப் பருவத்திற் செய் நட்பு, the friendship made in youth.

மாலியவான், ஓரரக்கன், the name of a rakshasa.

மாலினி, காளி, an epithet of Kali or Durga.

மாலுகம், வேம்பு, the neem or margosa tree.

மாலுக்கிளையாள், துர்க்கை, the younger sister of Krishna—Durga.

மாலுதானம், கண்குத்திப் பாம்பு, a green snake found on trees which darts at the eyes, a whip-snake.

மாலுந்திவந்தோன், பிரமன், one produced from the navel of Vishnu—Brahma.

மாலுமி, மீகாமன், the captain of a vessel, a pilot.

மாலுறல், மயங்கல், being fascinated, deluded, charmed. 2. மாறு கொள நினைத்தல், misapprehending, coming to an erroneous conclusion.

மாலூரம், வில்வ மரம், a tree—Grataevo religiosa.

மாலூர்தி, கருடன், the vehicle of Vishnu—Garuda.

மாலை, அந்திப்பொழுது, evening. 2. அரசன் மனை, a palace. 3. இயல்பு, natural quality. 4. இரா, one of the six divisions of the day—from sunset till ten o'clock. 5. ஒழுங்கு, a line, a row. 6. சொல், பூ, பொன், மணி இவற்றிலொன்றால் தொடுத்த தொடை, a garland or wreath of flowers or gold; a string of beads or gems. 7. நோய், a kind of disease affecting the neck.

மால், அருகன், Argha. 2. இந்திரன், Indra. 3. கருமை, blackness. 4. காற்று, wind. 5. சோழன், king of the Cholas. 6. திருமால், Vishnu. 7. புதன், Mercury. 8. பெருமை, greatness. 9. மயக்கம், illusion, delusion, aberration of mind, dulness, stupor. 10. மேகம், cloud. 11. வேட்கை, concupiscence, lust.

மால்தொடை, மால்முருகு, } துளசி, a fragrant shrub held in great veneration by the Hindus, holy basil—Ocymun sanctum (*M. Dic.*).

மால்பு, கண்ணேணி, a bamboo ladder.

மாவகம், இலுப்பை, long-leaved Bassia—Bassia longifolia. 2.

காஞ்சிரை, a very poisonous tree —Strychnos, nux vomica (*M. Dic.*).

மாவலர், குதிரைப் பாகர், horsemen. 2. யானைப் பாகர், elephant drivers.

மாவலி, ஒரு சக்கரவர்த்தி, a king dethroned by Vishnu in his dwarf incarnation.

மாவிரதம், மகாவிரதம், one of the six approved or orthodox sects of the Saiva religion.

மாவிரதியர், சிவசமயத் தோர் வகை யோர், professors of one of the six approved or orthodox sects of the Saiva religion.

மாவிருக்கம், சதுரக்கள்ளி, the pricklypear—Euphorbia antiquorum, Triangular Spurge.

மாவிலந்தம், விடத்தேர், a medicinal shrub—Mimosa cinerea (*M. Dic.*).

மாவிளம், see மாலூரம்.

மாவீரன், அதிவீரன், a great hero, a champion.

மாவுரம், வலி, strength.

மாவெனல், அழைத்தல்.

மாழாத்தல், மயக்கம், being charmed, fascinated, bewildered.

மாழை, அழகு, beauty. 2. அறிவின்மை, ignorance. 3. உலோகக் கட்டி, a lump of metal. 4. ஓலை, palm leaf. 5. திரட்சி, a collection, an accumulation. 6. புளிமா, a sour mango tree. 7. பொன், gold. 8. மாமரம், a mango tree.

மாழ்கல், சாதல், dying. 2. மயக்கம், being allured, bewildered. 3. மேவல், mingling, holding intercourse.

மாழ்கு, மாழ்கென்னேவல், *imp.* die, bewildered, hold intercourse. 2. மிருகசீரிஷம், the fifth lunar mansion.

மாழ்தல், சோம்பல், being lazy. 2. மயக்கம், being bewildered.

மாள, முன்னிலையசைச்சொல், an expletive prefix in personal verbs.

மாளல், மாள்தல், } சாதல், dying, perishing.

மாளவகவுளம், ஓரிசை, a melody.

மாளவம், ஒரு தேசம், the Malwa country.

மாளவி, ஓரிராகம், a melody.

மாளிகை, அரசன் மனை, a palace, a strong edifice. 2. வீடு, a house.

மாறல், ஆடல், moving. 2. தவிர்தல், ceasing, being excepted. 3. விடுதல், leaving. 4. வேறுபடல், being changed, exchanged, altered, reversed, changing. 5. (*in arithmetic*) பெருக்கல், multiplying numbers.

மாறன், பாண்டியன், a title of Pandya kings.

மாறு, கைம்மாறு, recompense. 2. துடைப்பம், a besom, a broom. 3. மாறென்னேவல், *imp.* move, cease, be excepted, leave, sell, exchange.

மாறுகம், சீலை, a cloth.

மாறுகொளக்கூறல், நூற்குற்றம் பத்தினொன்று, contradiction.

மாறுகோள், விரோதம், contradiction. 2. ஒவ்வாமை, discrepancy.

மாறுபடுபுகழ்நிலை, ஓரலங்காரம், praising a person or thing to the disparagement of another.

மாற்றம், சொல், a word. especially an answer or reply. 2. பகை, hatred. 3. வேற்றுமை, change, diversity.

மாற்றலர், பகைவர், enemies, foes.

மாற்றல், கொடாமை, denying, detaining. 2. ஒன்றையொன்றாக்கல், changing, altering.

மாற்றவள், சக்களத்தி, a female rival.

மாற்றார், பகைவர், enemies, foes.

மான, உவமைச் சொல், a word of comparison. 2. முன்னிலையசைச் சொல், an expletive used with verbs in the second person. 3. வினையெச்சம், *inf.* to be like, to resemble, to be confused.

மானசம், கருத்து, thought, attention. 2. மனது, the mind, the faculty of reason. 3. மானத வாவி, a fancied tank.

மானசாரம், சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-

two shastras which teach architecture and other mechanical arts.

மானதக்காட்சி, பொறிவழியிற் கண்டவுருவை மனத்தாற் குறித்துணர்தல், mental perception.

மானததீட்சை, அகத்தீட்சை, a mode of spiritual illumination.

மானததீபம், உபநிஷதம் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two upanishads.

மானதபூசை, மனோபூசை, worship in the mind, spiritualism.

மானதப்பிரத்தியட்சம், மானதக்காட்சி, that which is evident to the eye of the understanding, *a term in logic or metaphysics*.

மானபோதம், சிற்பநூன் முப்பத்திரண்டினொன்று, one of the thirty-two shastras which teach architecture and other mechanical arts.

மானமா, கவரிமா, the yak or bos-grunniens.

மானம், அபிமானம், honour, esteem. *2*. அளவு, measure in general. *3*. உவமை, comparison. *4*. குற்றம், fault. *5*. பெருமை, pride, self-respect, dignity. *6*. வலி, strength. *7*. வெட்கம், shame, bashfulness. *8*. கால கணிதம், the computation of a year, solar, lunar or siderial—as சௌரமானம், சாந்திரமானம், &c.

மானல், ஐயம், doubting. *2*. ஒத்தல், resembling, equalling. *3*. மயக்கம், being confused.

மானவம், உபபுராணம், one of the eighteen secondary puranas.

மானவர், ஆண் மக்கள், men, human beings of the male sex. *2*. படைவீரர், champions, strong men, heroes. *3*. மனிதர், human kind in general. *4*. மானமுடையோர், honourable people.

மானவு, தெளிவு, intellectual clearness.

மானார், பகைவர், enemies, foes. *2*. பெண்கள், women.

மானி, மானமுடையோன், a person of honour, magnanimity.

மானிடத்தன்மன், குபேரன், he who possesses a human nature—an epithet of Kuvera.

மானிடமேந்தி, மானேந்தி, } சிவன், he who holds a deer in one of his hands—Siva.

மானிடர், மானுடர், } மனிதர், men, human beings.

மானிதம், கனம், pride, dignity.

மானியம், சன்மானம், honour, respect. *2*. அரசர்கள் சன்மானத்தால் விட்ட நிலம், land held on free tenure.

மானினி, பெண், a woman.

மானுடயாகம், பஞ்ச மகா யக்கியத்தொன்று, one of the five special sacrifices or oblations.

மானேந்தி, சந்திரன், the moon whose spots considered as disease from a curse are supposed to resemble those of the deer.

மானேறு, உத்திர நாள், the twelfth lunar mansion. *2*. கலைமான், the male of a deer.

மான், உருவம், shape, figure. *2*. மகர மீன், a sea-monster. *3*. மகரராசி, Capricorn of the zodiac. *4*. மான், a deer, hart. *5*. விலங்கின்பொது, a generic term for beasts.

மான்குளம்பு, அடம்பு, a running flower plant including two species (*M. Dic.*).

மான்செவி, இலைக்கள்ளி, a medicinal plant—Euphorbia neriffolia (*M. Dic.*).

மான்மகன், பிரமன், the son of Lakshmi—Brahma. *2*. மன்மதன், Kama.

மான்மதம், கஸ்தூரி, musk.

மான்றலை, மிருகசீரிஷம், the head of a deer—the fifth lunar mansion.

மான்றல், மயக்கம், being confused, doubtful.

மி

மி, ஒரெழுத்து, a syllabic compound of ம் and இ.

மிகப்படல், மிகுதல், increasing, abounding.
மிகல், மிகுதி, becoming plentiful, increasing.
மிகவல்லோர், அறிஞர், those who are well skilled in any art.
மிகன்மக்கள், பெரியோர், the great (நீதி.).
மிகுகொடையாளன், கன்னன், a very liberal person—Karna.
மிகுண்டம், சாரணை, a pungent medicinal creeper (*M. Dic.*).
மிகுதி, அநேகம், much, abundance, profusion. 2. திரட்சி, a crowd, multitude. 3. பூரிப்பு, fulness, satiety. 4. பொலிவு, increase.
மிகுத்தியல், வில்வம், a sacred tree—Crataeva religiosa (*M. Dic.*).
மிகுந்தவனம், தண்ணீர் விட்டான், a kind of plant, a linear leaved shrub—Asparagus racemosus.
மிகுப்பலத்தம், காத்தோட்டி, a climbing plant—Capprais horrida (*M. Dic.*).
மிகை, கேடு, destruction. 2. துன்பம், affliction, sorrow. 3. மிகுதி, abundance, superfluity. 4. வருத்தம், trouble. 5. குற்றம், fault, defect, error.
மிகைபடக்கூறல், நூற்குற்றம் பத்தி லொன்று, redundancy as a fault in composition.
மிக்கவை, ஊண், food. 2. சோறு, boiled rice. 3. நியாயமல்லவை, unjust proceedings. 4. நிறைதல், fulness, abundance, increase.
மிக்கிளமை, கட்டிளமை, tender age, juvenility.
மிக்கோர், அறிஞர், the knowing, superior men.
மிசிரம், கலப்பு, a mixture, mixing.
மிசை, உயர்ச்சி, eminence, elevation. 2. சோறு, boiled rice. 3. தரித்திரம், poverty. 4. மிசையென்னேவல், *imp.* eat, take food. 5. மேடு, a hill. 6. மேல், on, upon, above.
மிசைதல், உண்டல், eating, taking food.
மிசைத்திரள், கரடு, the ankles.
மிசைவடம், வீரதண்டை, a warrior's ankle-rings (திவா.).
மிச்சில், எச்சில், what is left or remaining after a meal. 2. ஒழி பொருள், any remainder.
மிச்சை, அஞ்ஞானம், ignorance. 2. தரித்திரம், poverty.
மிஞிறு, வண்டு, (change of ஞீமிறு) a chafer.
மிஞ்சல், மிகுதல், exceeding, abounding.
மிடல், வலி, strength, power, might.
மிடறு, கழுத்து, neck. 2. கீழ் வாய், the lower jaw. 3. தொண்டை, throat.
மிடா, பானை, a large earthen vessel. 2. மிடா, a corn-measure containing sixteen வள்ளம் or marakal, *used in Mysore*.
மிடி, மிடியென்னேவல், *imp.* be poor, be in want, be destitute 2. வறுமை, poverty.
மிடித்தல், வறுமையுறல், being poor, being in want.
மிடிமை, see மிடி 2.
மிடியன், வறியன், a poor man.
மிடை, தூறு, a bush, small shrub. 2. மிடையென்னேவல், *imp.* be close, thick, crowded, pressed.
மிடைதல், நெருங்கல், being close, thick, crowded.
மிண்டன், திண்ணியன், a strong man.
மிண்டு, மதத்தாற் பிழைத்தல், a wilful fault, a crime. 2. மிண்டென்னேவல், *imp.* be thronged.
மிண்டுதல், நெருங்கல், thronging.
மிதத்தல், மிதப்பு, floating, a float.
மிதம், அளவு, moderation, abstinence.
மிதலை, கொப்பூழ், navel.
மிதலை, சோறு, boiled rice. 2. தெப்பம், a raft of boards.
மிதி, மிதித்தல், treading, a tread. 2. மிதியென்னேவல், *imp.* tread down, trample on.
மிதித்தல், காலான் மிதித்தல், treading, trampling on. 2. குதித்தல், jumping.

மிதியடி, பாதக்குறடு, wooden slippers.

மிதிலை, சனகநகர், a city in the province of Behar, to the north-west of Bengal.

மிதுனம், இரட்டை, a couple, a pair, as much again. 2. புணர்ச்சி, union, copulation. 3. மிதுன விராசி, Gemini of the zodiac.

மூழ்கல், முழுகல், bathing, submerging, sinking.
மூழ்த்தல், மொய்த்தல், pressing or heaping upon.
மூளல், மூளுதல், kindling, catching fire.
மூளுதல், நெருப்பு முதலிய மூளல், kindling, catching fire.
மூளை, தலை முதலியவற்றின் மூளை, brains, marrow, medullary substance.

மெ

மெச்சல், கொண்டாடல், admiring greatly, wondering. *2.* துதித்தல், praising, extolling highly, flattering.
மெத்து, மென்மை, softness.
மெத்தை, அமளி, bolster, cushion, pillow, mattress, bed. *2.* மேல் வீடு, upper storey of a house.
மெய், உடல், the body, person. *2.* உண்மை, truth, sincerity. *3.* ஒற்றெழுத்து, a consonant. *4.* ஐம்பொறியுளொன்று, the surface of the body or feeling as one of the five senses.
மெய்கண்டதேவர், சுவேதவனப் பெருமாள், a poet well skilled in Hindu metaphysics.
மெய்காப்பாளர், காவலர், body-guards.
மெய்க்கவசம், as மெய்யுறை, a coat of armour, a vestment.
மெய்க்கீர்த்திமாலை, ஒரு பிரபந்தம், a panegyric poem in the கட்டுரை versification, describing the illustrious descent and famous actions of a hero.
மெய்ந்நலம், வலி, strength.
மெய்ந்நூலன், துரோணாச்சாரியன், a professor of ancient writing—an epithet of Dronacharya.
மெய்புகுகருவி, கவசம், a vestment, a coat of armour.
மெய்ப்படாம், நிலையங்கி, a mantle or cloak covering the whole body.
மெய்ப்பரிசம், அஷ்ட மெய்ப்பரிசம், eight sensations of the body arising from placing, binding, stabbing, stroking, patting, touching, seizing and cutting.
மெய்ப்பாடு, சரீரக் குறிப்பு, indication of passion or sentiment by

gesture or any other signs—as tears for sorrow, the erection of the hairs of the body from love, joy, transport.

மெய்ப்பிரம், மேகம், a cloud.

மெய்ப்பை, சட்டை, a tight garment fitted to the body.

மெய்ப்பொறி, the body as the organ of touch.

மெய்ம்மயக்கம், ஒற்றெழுத்தியைபு, consonants occurring together in a word, as ண் and ட in கண்டம், க்க in பக்கம்.

மெய்ம்மை, உண்மை, truth, fact. 2. கருத்து, thought, intention.

மெய்யர், அந்தணர், Brahmans. 2. முனிவர், rishis, sages.

மெய்யன், உண்மையுள்ளோன், a true man, an honest person, a trust-worthy, upright man. 2. மகன், a son.

மெய்யுரைத்தல், உரை சொல்லல், explaining a text, commenting.

மெய்யுறை, கவசம், a coat of armour.

மெய்விரதன், தருமராஜன், an epithet of Yudhistra. 2. பீஷ்மன், an epithet of Bhishma.

மெலி, மெலிவு, softness, thinness. 2. (*in gram.*) மெல்லெழுத்து, a soft letter.

மெலிதல், } மெலிவு, } இளைப்பு, being weak, feeble, emaciated, lassitude.

மெலித்தல், மெலிவித்தல், making lean, making soft, softening.

மெல்கல், இலகுவாதல், being light, not heavy.

மெல்லல், மெல்லுதல், masticating, chewing softly.

மெல்லன், நெய்தனிலத் தலைவன், the ruler of a brackish soil or of a district near the sea.

மெல்லியர், (*sing.* மெல்லி) மாதர், the weak sex—women.

மெல்லியல், பெண், a female. 2. மரத்திளங்கொம்பு, a tender twig of a tree.

மெல்லியாள், பெண், a woman.

மெல்லிலை, வெற்றிலை, a soft leaf—betel leaf.

மெல்லினம், மெல்லின மெய், the class of soft or nasal consonants.

மெல்லினவெதுகை, ஓரினவெதுகை, one of the இனவெதுகை, in which the second letter of each line is any of the soft consonants.

மெல்லெனல், மந்தக் குறிப்பு, acting or moving softly, gently.

மெழுகு, மெழுகு, bee's wax. 2. மெழுகென்னேவல், *imp.* smear, spread, coat over with cow-dung, &c.

மென்கணம், as மெல்லினம்.

மென்பால், மருத நிலம், fertile and cultivated ground.

மென்மை, மிருது, softness, thinness, fineness.

மென்னடை, அன்னம், a swan as a bird of graceful walk. 2. அன்ன நடை, a gentle, slow walk.

மென்னிலை, கரலட்சணத்தினொன்று, a mode of using the hands in dancing.

மே

மே, ஓரெழுத்து, a compound letter composed of ம் and ஏ.

மேகநாதம், சிறுகீரை, small greens—Amaranthus. 2. முழக்கம், thunder.

மேகநாதன், இந்திரஜித்து, an epithet of Indrajit, son of Ravana and reputed conqueror of Indra.

மேகபந்தி, முகிலிரை, a range of clouds.

மேகபுட்பம், நீர், the blossom of the clouds—water.

மேகப்புள், வானம்பாடி, a lark.

மேகம், ஒரு நோய், a urinary disease. 2. முகில், cloud.

மேகரஞ்சி, ஓர் இராகம், a kind of melody.

மேகராகக்குறிஞ்சி, ஒரு பண், a melody. 2. குறிஞ்சித் திறத்தினொன்று, a melody adapted to a hilly country.

மேகலை, சீலை, a garment worn by women. 2. மாதரிடையணியு

ளெழு கோவை, a woman's jewelled girdle. 3. மலைப்புடைப்பு, the swelling sides of a mountain.

மேகவண்ணக்குறிஞ்சி, ஒரு மரம், a tree—Lawsonia.

மேகவண்ணன், விஷ்ணு, an epithet of Vishnu from his cloud-like colour.

மேகவாகனன், இந்திரன், the cloud-borne—Indra.

மேகாதிபன், (*in calendars*) the planet that governs the clouds for the year.

மேகாரம், மயில், peacock.

மேக்கு, உயர்ச்சி, height. 2. மேல், above, over. 3. மேற்கு, west.

மேசகம், மயிற்றோகைக் கண், the eye of the peacock's tail.

மேடம், ஆடு, a ram. 2. மேஷவிராசி, Aries of the zodiac.

மேடவீதி, (*in astronomy*) a trisection of the zodiac.

மேடாயனமண்டலம், equinoctial colure.

மேடு, உயர்ச்சி, height. 2. ஊர், a town or village. 3. சிறு திட்டை, a little hill, hillock, a rising ground. 4. வயிறு, belly.

மேடுகம், சுவர், wall.

மேடை, மேடு, a square place in the open air artificially raised from the ground.

மேட்டிமை, மேன்மை, loftiness, haughtiness, excellence.

மேதகம், மதிப்பு, valuation. 2. மேன்மை, greatness, excellence.

மேதகையோர், உயர்ந்தோர், eminent persons.

மேதம், கொலை, murder. 2. யாகம், sacrifice.

மேதாரம், மலை, mountain.

மேதாவியர், அறிஞர், learned men, poets.

மேதி, எருமை, a buffalo.

மேதிச்சென்னிமிதித்தோள், துர்க்கை, she who stood on the head of a buffalo-faced asura and killed him, the Goddess Durga.

மேதியன், இயமன், Yama, the buffalo-rider, from his vehicle.

மேதினி, பூமி, the earth, as made (*according to the legend*) of the *adeps* of two asuras slain by Brahma.

மேதை, அறிவு, understanding, knowledge. 2. இறைச்சி, flesh. 3. கள், sap of the palm tree, mead, any intoxicating beverage. 4. தோல், the skin. 5. நரம்பு, a nerve, fibre. 6. நிணம், fatness. 7. புதன், the planet Mercury. 8. மேன்மை, excellency. 9. (*in anat.*) membrane.

மேதையர், புலவர், learned men, poets.

மேத்தியம், சுத்தம், purification, purity, cleanness.

மேநகை, தேவதாசி, the proper name of a courtesan of Swarga. 2. மேருமலைக்குப் பெண்ணும், இமயமலைக்கு மனைவியுமாகிய மனோரமை யென்பவள், one Manoramai, the daughter of Meru and wife of Himalaya.

மேநகைபுதல்வி, பார்வதி, Parvati, daughter of Menaka.

மேநை, மலையரையன் மனைவி, wife of the Himalaya mountain.

மேம்பாடு, புகழ், praise, fame. 2. மேன்மை, nobleness, greatness, grandeur.

மேய்தல், உண்டல், feeding, eating, grazing, browsing, gnawing or preying on. 2. வேய்தல், thatching, covering or constructing an awning with leaves.

மேய்த்தல், மேயச்செய்தல், feeding cattle, fowls, &c., grazing.

மேரு, பொன் மலை, a fabulous mountain said to be situated in the centre of the earth. 2. மலை, mount, mountain, a hill in general. 3. தேரின் மேலாசனம், the top-seat of an idol in a car. 4. (*in geog.*) நாராசம், axis.

மேருவில்லி, சிவன், an epithet of Siva from his using the mountain Meru as a bow.

மேலகம், மோட்சம், a high abode—beatitude.

மேலவரிறைவன், முருகன், leader of the celestial armies—Subramaniya.

மேலவர், see மேலோர்.

மேலாலவஸ்தை, மேனோக்கி நிற்கு மவஸ்தை, an ascending அவத்தை, when the soul of one whose births are ended departs upward at death.

மேலுலகம், தேவலோகம், upper world, the celestial world.

மேலோர், அறிஞர், the learned, sages. 2. புலவர், poets. 3. வானோர், celestials. 4. உயர்ந்தோர், the great, the excellent, the exalted. 5. முன்னோர், ancestors, ancients.

மேல், அகலம், width, breadth. 2. ஆகாயம், the sky, the visible heavens. 3. இனி, hereafter, as a future birth. 4. ஏழனுருபு, (உ—ம்: தன்மேற்கடுவரை நீரிற் கடுத்து வரக்கண்டும்.) the seventh case or ablative of place. 5. மேல், height, surface. 6. மேற்கு, west.

மேல்விதேகம், நவகண்டத்தொன்று, one of the nine continents of the Hindus.

மேவலர், மேவார், } பகைவர், foes, enemies.

மேவல், ஆசைப் பெருக்கம், strong desire. 2. உண்டல், eating. 3. விரும்பல், desiring. 4. சேரல், joining, combining, approaching.

மேவினர், உறவோர், relations. 2. சிநேகிதர், friends, allies.

மேவு, ஆசை, desire. 2. மேவென்னேவல், *imp.* fill up, desire, love, level, eat, approach.

மேழகம், கவசம், a coat of armour. 2. செம்மறிக்கடா, a ram. 3. துருவாட்டேறு, a ram bred for fighting.

மேழி, கலப்பை, a plough. 2. கலப்பையினோருறுப்பு, the plough-tail.

மேழியர், மருதநில மாக்கள், people who live in a cultivated country. 2. வேளாளர், farmers.

மேளம், பலவாச்சியக் கூட்டம், a collection of musical instruments.

மேளனம், கூட்டம், a crowd, an assembly.

மேற்கதி, மோட்சம், supreme bliss.

மேற்கதுவாய், முதலயற் சீர்க்கணின்றி யொழிந்த சீர்க்கண் மோனைவரத் தொடுப்பது, (*in prosody*) rhyming in every foot but the second.

மேற்கு, மேல், on, upon, above. 2. மேற்றிசை, the west.

மேற்குலத்தோர், அந்தணர், high caste people—Brahmans.

மேற்கோள், எடுத்துக்காட்டும் செய்யுள், quotation. 2. சனி, the planet Saturn. 3. மேன்மை, excellency. 4. போர்வை, a covering.

மேற்செம்பாலை, ஓரிராகம், a tune pitched on the seventh note.

மேற்றிசைப்பாலன், வருணன், the regent of the west—Varuna.

மேனி, உடலுருவம், bodily form or shape, body. 2. நிறம், colour. 2. வடிவு, beauty.

மேன்மக்கள், பெரியோர், great men, the great.

மை

மை, அஞ்சனம், black or magical paint for the eyes. 2. கறுப்பு, black, blackness, ink. 3. குற்றம், fault. 4. செம்மறியாடு, a kind of sheep. 5. நீர், water. 6. மலடு, barrenness. 7. மேகம், a cloud. 8. மேடவிராசி, the first sign of the zodiac. 9. மையென்னேவல், *imp.* be slightly pounded, be separated from the husk by beating. 10. பண்புப்பெயர் விகுதி, an affix expressing an abstract quality or condition.

மைதல், மையச் செய்தல், being slightly pounded, being separated from the husk by beating.

மைதிலி, சீதை, a native of Mithila—Sita, the wife of Rama.

மைதுனம், புணர்ச்சி, copulation, union.

மைத்திரம், மைத்திரியம், } சிநேகம், love, friendship.

மைத்திராவருணம், ஒருபநிஷதம், an upanishad.

மைத்துனன், மச்சினன், a sister's husband.

மைநாகன், மலையரசனுக்கும் மேனகைக்கும் புத்திரன், a rock in the sea between the southern point of the peninsula and Ceylon, considered in mythology to be the son of Himalaya by Menaka.

மைந்தர், (*sing.* மைந்தன்) ஆண் மக்கள், sons. 2. மனிதர், men.

மைந்து, மயக்கம், confusion of mind. 2. வலி, strength.

மைம்மை, மலடி, a barren woman. 2. மலட்டெருமை, a barren buffalo.

மைம்மா, பன்றி, black animal—a hog being usually black.

மைம்முகன், முசு, the black faced—a large and black kind of ape.

மையம், நடு, the centre, the middle.

மையல், ஊமத்தம், a plant—Datura. 2. மயக்கம், confusion of mind.

மையாத்தல், மயங்கல், being confused in mind.

மையுண்கண்ணி, மைதீட்டிய கண்ணுடையாள், a woman with painted eyes.

மைரேயம், கள், a fermented liquor from the flower of the Lythrum fruticosum.

மொ

மொ, ஒரெழுத்து, a syllabic letter compounded of ம் and ஓ.

மொகமொகெனல், ஈரடுக்கொலிக் குறிப்பு, a word imitative of the noise of boiling hot water or its gurgling from a narrow-necked bottle.

மொக்குள், கொப்பூழ், the navel. 2. நீர்க்குமிழி, bubble, a water-bladder. 3. மலரும் பருவத் தரும்பு, the bud of a flower, the callax.

மொச்சை, ஒரு கொடி, a leguminous creeper, black-seeded dolichos—Lablab vulgaris.

மொடமொடெனல், ஈரடுக்கொலிக் குறிப்பு, the rustling of dried skins, starched cloth, &c.—an imitative sound.

மொட்டம்பு, as உதணம், a blunt-pointed arrow.

மொட்டு, இளம்பூவரும்பு, a tender flower-bud.

மொட்டை, மழித்தல், shaving off the hair.

மொத்தம், பொது, the whole, universality.

மொத்தல், அடித்தல், striking, beating.

மொந்தை, ஒருகட்பறை, a drum open at one end. 2. ஒரு பாத்திரம், a small vessel for sour milk, toddy, &c.

மொய், கூட்டம், a company, assembly, crowd. 2. போர், a fight, war, battle. 3. போர்க்களம், a field of battle. 4. மொய்த்தல், swarming, pressing, thronging, covering. 5. மொய்யென்னேவல், *imp.* press, throng, crowd, cover. 6. யானை, an elephant. 7. வண்டு, beetle.

மொய்கதிர், முலை, the paps of women or teats of the lower animals.

மொய்த்தல், நெருங்கல், pressing, thronging, crowding, swarming. 2. மூடுதல், covering.

மொய்த்தாய், தாய், a mother.

மொய்ம்பு, தோள், the shoulder. 2. வலி, strength, prowess.

மொழி, சொல், a word, a saying. 2. மொழியென்னேவல், *imp.* say, speak.

மொழிதல், சொல்லல், speaking, saying.

மொழிமாற்று, பொருள்கோளெட்டினொன்று, a transposition of words—construction in which the nominative and verb are interchanged with another verb and nominative.

மொழிமுதலெழுத்து, சொற்கு முதனிற்கு மெழுத்து, initial letter proper to begin words.

மொழிமை, பழஞ்சொல், an old saying, proverb, maxim.

மொழியிடையெழுத்து, சொல்லிடைநிற்குமெழுத்து, letters proper to follow inanimate consonants in the middle of a word.

மொழியிறுதி, மொழியீறு, the termination of a word.

மொழியீற்றெழுத்து, final letters.

மொள்ளல், முகத்தல், drawing water.

மோ

மோ, ஓரெழுத்து, a syllabic letter compounded of ம் and ஓ. 2. முன்னிலையசைச்சொல், an expletive affixed to the second person singular of verbs. 3. மோவென்னேவல், *imp.* smell a thing.

மோகம், ஆசை, desire, affection. 2. உன்மத்தம், confusion of mind, bewilderment, fainting. 3. காமம், fierce, ungovernable lust, lasciviousness.

மோகர், சித்திரக்காரர், those that fascinate people by their work—painters.

மோகனம், அஷ்டசித்தியிலொன்று, one of the eight superhuman powers—the power of enchanting, libidinous fascination by magic.

மோகனங்கனை, மோகனங்கினி, } மோகினி, a fascinating female.

மோகனாஸ்திரம், மன்மதபாணம், an enchanted missile weapon.

மோகனீயம், subjection to the passions.

மோகன், மன்மதன், Kama, the Hindu cupid.

மோகினி, திருமால் பெண்ணுருக்கொண்ட மோகினி, a female incarnation of Vishnu.

மோக்ஷம், தீர்தல், liberation from the body, release from transmigration, entire liberation, absorption. 2. பரகதி, heaven, eternal bliss, endless felicity.

மோசம், வஞ்சனை, deceit, cunning, treachery.

மோசனம், ஒருவகை நெல், a species of paddy. 2. தீர்தல், liberation, deliverance, the end of an eclipse.

மோசிகை, உச்சிமுடி, a tuft of hair on the crown of the head (உப. 157).

மோடி, காடுகாள், a forest Goddess. 2. பிணக்கு, love-quarrel.

மோடு, உயர்ச்சி, elevation, height. 2. பெருமை, greatness. 3. வயிறு, belly, stomach. 4 மடமை, stupidity, ignorance, dulness of intellect.

மோட்சகாலம், மோட்சநாடி, } கிரகணம் விடுங்காலம், time when an eclipse ends.

மோட்சம், see மோக்ஷம்.

மோதகம், அப்பவர்க்கம், a cake of conical form made of rice flour, filled with pulse and boiled or steamed. 2. தோசை, a kind of pastry, a pancake. 3. இணக்கம், agreeableness, delight.

மோதம், உவகை, joy, rejoicing, gladness. 2. வாசனை, smell, scent, strong perfume.

மோதல், அடித்தல், beating against with force, striking.

மோதிரம், ஆழி, a ring for the finger.

மோத்தல், ஆக்கிராணித்தல், smelling, perceiving by the nose.

மோத்தை, வெள்ளாட்டுக் கடா, a he-goat, the ram of a long-legged species of sheep.

மோவாய், தாடி, the beard.

மோழல், பன்றி, swine.

மோழை, கஞ்சி, rice-gruel. 2. கொம்பின்மை, being without horns. 3. கொம்பில்லா விலங்கு, a beast without horns.

மோனம், மௌனம், silence, taciturnity, muteness.

மோனர், முனிவர், silent hermits, sages.

மோனை, ஆதி, commencement, beginning. 2. ஒரு தொடை, a resemblance between the first letter of one சீர் or foot, and the first letter of one or more of the succeeding feet in the same line.

மௌ

மௌ, ஓரெழுத்து, a syllabic letter composed of ம் and ஔ.

மௌஞ்சி, நாணற்புல்லாற் செய்த அரைஞாண், the girdle or waist cord of a Brahmin, made of three strings of munja grass.

மௌட்டியம், மூடத்துவம், fanaticism, ignorance, folly, destitution of spiritual wisdom.

மௌண்டிரம், ஓர் உபநிஷதம், an upanishad.

மௌத்திகம், முத்து, a pearl.

மௌர்வி, வின்னாண், a bow-string.

மௌலி, கள், toddy, palm tree sap. 2. சிகை, the head. 3. மயிர்முடி, a lock of hair on the head of men. 4. முடி, a crown, a diadem.

மௌவல், வனமல்லிகை, the wild jasmine.

மௌனம், பேசாமை, silence, taciturnity, muteness, as மவுனம்.

மௌனியர், முனிவர், hermits, silent devotees.

ய

ய, ஓரெழுத்து, a syllabic letter composed of ய் and அ.

யகரவுடம்படுமெய், (*in gram.*) the consonant ய் as a connecting letter.

யக்கர், as இயக்கர், a class of demigods.

யக்கியசூத்திரம், முப்புரி நூல், a three-threaded cord, Brahminical cord.

யக்கியசேஷம், யாகமிச்சில், what is left remaining in a sacrifice.

யக்கியம், யாகம், a sacrifice as எக்கியம்.

யக்கியோபவீதம், as யக்கிய சூத்திரம்.

யசமானன், தலைவன், a master, a superior. 2. யாக குரு, offerer of a sacrifice.

யசனம், யாகம், a sacrifice.

யசுசு, } இரண்டாம் வேதம், the
யசுரு, } second veda—yajur.

யட்டி, ஊன்றுகோல், a staff, a stick. 2. முத்துத்தாழ்வடம், a garland of pearls.

யதா, ஏற்ற, as, according to, proper, fit, right.

யதார்த்தம், as எதார்த்தம், truth, correctness.

யதி, தாளப்பிரமாணம், time in music. 2. முனிவர், a sage, an anchorite. 3. மோனை, alliteration, similarity of sound.

யது, ஓரரசன், the name of a king, son of the fifth of the lunar line, and head of the Yadava race.

யத்தனம், } எத்தனம், preparation.
யத்தினம், }

யந்திரம், as எந்திரம், machine, engine.

யமகண்டம், ஒரு செய்யுள், a composition of the poet காளமேகம், each stanza containing a description of two different things.

யமகம், வந்தசொல்லே வருதல், a species of alliteration, the repetition of words or syllables of like sound, but varying in sense, in the different parts of a stanza, as at the beginning, middle or end of each hemistich.

யமதக்கினி, as ஜமதக்கினி, the name of a celebrated Rishi, the father of Parasurama.

யமபகினி, யமுனா நதி, the river Jumna as the sister of Yama.

யமம், ஒரு தர்மநூல், a work on law. 2. யோக நிலையினொன்று, one of the postures of a yogi.

யமரதம், எருமைக்கடா, male buffalo, as the conveyance of Yama.

யமளம், இரட்டை, a couple, brace, pair.

யமன், or இயமன், Yama, the God of death.

யமி, முனிவன், a hermit, a sage, one self-restrained.

யமுனை, காளிந்தி நதி, the river Jumna, rising near the Himalayas and entering the Ganges at Allahabad.

யயாதி, குருகுலத்தரசர்களி லொருவன், the fifth king of the lunar race.

யவட்சாரம், as எவட்சாரம், nitre, nitrate of potassa, saltpetre—*Note*:—According to some commentators it is said to be prepared from burnt barley.

யவம், ஒருவகைக் கோதுமை, barley.

யவனம், ஒரு தேயம், a Muhammadan country, perhaps Bactria or possibly Afghanistan—By late Hindu writers, it is applied to Arabia.

யவனர், கம்மாளர், artificers. 2. சித்திரக்காரர், painters, sculptors. 3. சோனகர், Moormen—According to Wilson, it is applied to both the Muhammadan and European invaders of India, and often used for any barbarous race.

யவ்வனம், see யௌவனம்.

யா

யா, அசைச்சொல், an expletive. 2. ஓரெழுத்து, a syllabic letter compounded of ய் and ஆ long. 3. ஒரு மரம், a tree. 4. சந்தேகம், doubt, suspicion, discrepancy. 5. யாவென்னும் வினு, an interrogative letter.

யாகசேனன், ஓரரசன், *Panchala*, the father of Drobadhi.

யாகபதி, திருமாலவதாரத்தொன்று, one of the fifteen incarnations of Vishnu.

யாகபோஜனர், வானோர், those who feed on burnt sacrifices–celestials.

யாகம், வேள்வி, a sacrifice, an oblation.

யாக்கியவற்கியம், ஒருபநிஷதம், an upanishad. 2. As யாஞ்ஞவற்கியம்.

யாக்கை, உடல், the body as consisting of fibres and ligaments. 2. கட்டு, a band, a tie, anything bound or tied, a frame, a system.

யாக்கைக்குறுகுற்றம், யாக்கைக்குறும் பதினெண் குற்றம், the eighteen properties of the body :—hunger, thirst, fear, anger, joy, desire, thought, sleep, hoariness, pain, death, birth, passion, pleasure, admiration, sweating, affliction and incapacity for work.

யாங்கணும், **யாங்கண்**, } as யாங்ஙனம்.

யாங்கு, **யாண்டை**, } இடத்தினையுற்ற சொல், an expression of doubt as to place. 2. எங்கு, where, at what place.

யாங்ஙனம், எங்ஙனம், where, what place. 2. எப்படி, how, in what manner.

யாசகம், இரப்பு, begging, mendicity.

யாசகர், இரப்போர், beggars, mendicants.

யாசனம், யாகம் நடத்தல், the direction of a sacrifice.

யாசித்தல், இரத்தல், begging, asking alms, soliciting.

யாஞ்ஞவற்கியம், ஒரு தர்ம நூல், a work on Hindu law called after its author *Yagnavalkya*.

யாடு, ஆடு, a goat.

யாணர், அழகு, beauty. 2. தச்சர், carpenters, stone-cutters, architects. 3. நன்மை, a good. 4. புதுமை, novelty. 5. வளமை, fertility, fruitfulness, prosperity.

யாண்டு, எங்கு, where, in what place. 2. காலம், time, a year. 3. (நீதிநெறி) எப்பொழுது, when.

யாண்டை, as யாங்கண், what place.

யாதம், as இயாதம், an elephant goad.

யாதனம், தெப்பம், a raft. 2. மரக்கலம், a boat, a ship.

யாதனுசரீரம், தண்டனை யனுபவிக்கத் தக்க சரீரம், a body capable of unending suffering in hell.

யாதனை, துன்பம், pain, anguish, agony, torment. 2. நரகத்திற் கொல்லாது வருத்தும் நோய், the never ceasing pains of hell, punishment inflicted by Yama or his ministers.

யாது, இராட்சதர், a kind of rakshasa, a goblin or demon. 2. எது, what, which. 3. ஐயுற்ற சொல், an expression of doubt. 4. கள், palm tree sap fermented.

யாதுதானவர், இராட்சதர், *pl.* see யாது 1.

யாதோ, ஐயச்சொல், an expression of doubt as to which of the things enumerated is the one in question.

யாத்தல், கட்டல், binding.

யாத்திரை, திருவிழா, a festival with an idol procession. 2. பிரயாணம் போதல், pilgrimage to sacred places, journeying.

யாப்பருங்கலம், ஒரு யாப்பு நூல், a treatise on prosody.

யாப்பு, கட்டு, a bandage, a tie. 2. செய்யுள், poetry. 3. (*fig.*) செய்யுளிலக்கணம், prosody—*lit. binding* words together.

யாமம், இடக்கை மேளம், a drum beaten with a stick and not the hands. 2. இராத்திரி, night. 3. ஜாமம், a watch of three hours. 4. தெற்கு, the south. 5. நடு ஜாமம், midnight, the middle watch of the night.

யாமவதி, யாமினி, } இராத்திரி, the night.

யாமளம், இரட்டை, two, a couple. 2. பச்சை, green colour.

யாமளை, காளி, Kali.

யாமிகன், நகர சோதகன், one spying out a city in disguise, *incognito*.

யாமியம், யாமினியம், } தெற்கு, the south.

யாமுனாசாரியர், a Vaishnava devotee.

யாம், நாம், we.

யாரி, கதவு, a door.

யார், வினா, the interrogative who or which.

யாலம், ஆச்சா, a tree, black-wood.

யாவச்சீவம், இகத்திற்குரிய அனைத்தும், all that belongs to this life. 2. all things and secrets.

யாவன், as எவன், who, which man.

யாவும், எல்லாம், all, the whole.

யாவை, எவை, what or which things.

யாழ, முன்னிலையசைச்சொல், a poetic affix to the second *per. sing.*

யாழல், கறையான், the white ant, termites.

யாழ், அச்சுவினி நாள், the first lunar mansion. 2. திருவாதிரை நாள், the sixth lunar mansion. 3. மிதுனவிராசி, Gemini of the zodiac. 4. வீணை, a musical instrument, the lute.

யாழ்த்திறம், குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் எனும் ஐந்திணைக் குரிய யாழ், different lutes peculiar to the different soils.

யாழ்வல்லோர், கந்தருவர், skilful players on the lute, heavenly choristers.

யாளி, சிங்கம், the lion. 2. சிங்க விராசி, Leo of the zodiac. 3. யாளி, a fabulous animal like a lion with an elephant's proboscis, possibly the mammoth.

யாளியூர்தி, காளி, the lion-borne—Kali. 2. துர்க்கை, Durga.

யாறு, ஆறு, a river.

யானம், கள், palm tree sap fermented. 2. சிவிகை, a palanquin, a litter. 3. மரக்கலம், a vessel or ship. 4. வாகனம், any carriage or vehicle for conveyance.

யானை, ஆனை, an elephant. 2. வடதிசைப்பாலன் குறி, the sign of Kuvera, as regent of the north.

யானைச்சார்பு, யானை துயிலிடம், a place of rest for elephants, elephant's stall.

யானைமுகவற்கிளையோன், வீரபத்திரன், the younger brother of Ganesa, the elephant-faced—Virabhadra.

யானைமுகன், விநாயகன், the elephant faced—Ganesa.

யானையுண்குருகு, சக்கரவாகப்புள், a fabled carnivorous bird said to devour the elephant—the ruddy goose.

யானையுரித்தோன், சிவன், he who skinned an elephant—Siva.

யு

யு, ஓரெழுத்து, a syllabic letter composed of ய் and உ.

யுகதர்மம், யுகத்திற்குரிய நடை, the conduct prescribed in the shastras for any yuga, and the events appropriate to it.

யுகந்தரம், தேர் முதலியவற்றின் நுகத்திற் பிணிக்கு நெடுந்தறி, the pole or shaft of a coach, plough, &c., which supports the yoke.

யுகபேதம், கால வேற்றுமை, the difference of one age from another. 2. any strange or anomalous occurrence supposed to result from the vices of the age.

யுகமுடிவு, உலகம் முடியுங் காலம், the end of an age, the universal destruction or the end of a quadruple age.

யுகம், இரு பொருள், a couple, a pair. 2. ஒரு காலத்தளவு, an age of the world, any one of the four yugas. 3. நுகத்தடி, a yoke. 4. பூமி, the earth.

யுகளம், } இரண்டு, a pair, a brace.
யுகளி, }

யுகாதி, அருகன், an epithet of Argha.

யுத்தம், உசித்தம், fitness, propriety. 2. கூடல், combination, closeness, union. 3. நியாயம், any thing proved by inference or argument, equity. 4. போர், war, battle, fight.

யுத்தி, உபாயம், an expedient, artifice. 2. யோசித்தல், deliberation, reasoning, argument, inference.

யுத்தயுத்தர், தார்க்கிகர், logicians, lawyers.

யுவ, ஓராண்டு, the ninth year of the Hindu cycle.

யுவதி, பதினாறு வயதுப் பெண், a young woman, one from sixteen to thirty years old.

யுவராஜன், இளவரசன், a young prince, especially the heir-apparent.

யுவன், (*fem.* யுவதி) a young man between sixteen and thirty years of age.

யூ

யூ, ஓரெழுத்து, a syllabic letter composed of ய் and ஊ.

யூகம், ஒரு புலி, a tiger. 2. கருங் குரங்கு, a black monkey. 3. காந்தி, brightness, lustre. 4. தர்க்கம், reasoning, disputation, logic. 5. படை, battle. 6. படை வகுப்பு, military array. 7. பெண் குரங்கு, a female monkey. 8. முசு, a large black ape. 9. உட் பொருளுணர்தல், knowledge of secret arts.

யூகி, யூகியென்னேவல், *imp.* meditate, scrutinize, consider attentively. 2. விவேகி, a reasoning man, a wise, ingenious man.

யூகித்தல், ஆராய்தல், meditating, scrutinizing, considering attentively.

யூகிமந்திரி, as மதிமந்திரி, a wise minister.

யூகை, கல்வி, learning, erudition.

யூதநாதன், } யானைக் கூட்டத்துத்
யூதபம், } தலை யானை, the chief elephant or leader in a wild herd.

யூதம், யானைக் கூட்டம், a herd of elephants. 2. விலங்கின் கூட்டம், multitude of birds, beasts, &c.

யூபம், உடற் குறை, a head and trunk deprived of members. 2. யாகப் பசுவைக் கட்டுந் தறி, a sacrificial post to which the victim for sacrifice is bound. 3. யாகம்,

a sacrifice. 4. படை வகுப்பு, battle-array.

யோ

யோ, ஓரெழுத்து, a syllabic letter composed of ய் and ஓ.

யோகக்காட்சி, தேசகால விகற்ப மின்றித் தன் செயலற்றுச் சிவன் செயலிற்கூடி யறியுமறிவு, the spiritual perception of the yogi.

யோகசம், சிவாகமமிருபத்தெட்டி னொன்று, one of the twenty-eight agamas of the Saivas.

யோகசாதனை, the practice of yoga discipline.

யோகசாரணம், ஒரு சமயம், a system of religion.

யோகதீட்சை, தீட்சையேழினொன்று, instruction by example, in character of the silent motionless, ascetic, in the eight postures prescribed.

யோகநித்திரை, அறிதுயில், a kind of sleep or meditation in which the person understands all that passes about him—an attribute supposed to belongs to the Gods.

யோகநிலை, யோகநிஷ்டை, religious and abstract meditation.

யோகபதம், காரணச்சொல், a complex-word resolvable into simpler elements—opposed to ரூடபதம், a simple word.

யோகப்பிரத்தியட்சம், see யோகக் காட்சி.

யோகம், அஷ்டயோக முதலிய யோகம், the qualities of a yogi, the following eight are enumerated :— restraint of the appetites, voluntary religious observance, position, breathing in a peculiar way, restraining the senses, fixing the mind on a member of the body, silent meditation and vision of one's self. 2. அதிர்ஷ்டம், luck, fortune, a lucky conjunction. 3. உபசாரம், civility, urbanity. 4. உபாயம், a means, an expedient. 5. உயர்ச்சி, height, excellence. 6. உற்சாகம், effort, perseverance. 7. கூடல், union, junction, especially of stars and planets. 8. கூட்டம், an assembly. 9. சாவு, death. 10. தியானம், religious and abstract meditation, contemplation. 11. பஞ்சாங்கத்திலொன்று, twenty-seven sections of the lunar path or ecliptic depending upon the sum of the longitudes of the sun and moon—one of the five things embraced by an almanac.

யோகர், சமண முனிவர், sages among the Jainas or Buddhists. 2. முனிவர், anchorites or ascetics.

யோகாதிகாரம், ability to undertake the practice of the *Yoga* philosophy, power for abstract meditation (சி. 21).

யோகி, அரன்—Siva. 2. அருகன், Argha. 3. ஐயனார், Aiyanar. 4. முனிவன், an ascetic, a contemplative sage. 5. (*in anat.*) abductor muscle.

யோகினி, காளி, Kali. 2. யோகினி, a female fiend or spirit attendant of Durga.

யோகினிதிசை, யோகினி தேவதை யாட்சி, the influence of a seven-fold class of demi-goddesses, as calculated in the horoscope.

யோக்கியம், தகுதி, fitness, suitableness, worthiness, eligibility, qualification. 2. நன்கு, goodness.

யோசனை, ஒலித்தல், a sound. 2. ஓரெல்லையளவு, a measure of distance reckoned from 4 to 10 *naligai*, usually about 13 miles. *Wils*, about 9 miles. 3. யோசித்தல், thought, opinion, sentiment, discretion, prudence, wisdom. 4. (*in astron.*) the 5059*th* part of a great circle or on the equator, about 4¼ geographical miles.

யோசனைகந்தி, வியாசர் தாய், an epithet of *Sattyavathi*, the mother of Vyasa.

யோசித்தல், ஆராய்தல், considering attentively, pondering, deliberating.

யோனி, காரணம், cause, origin. 2. பெண் குறி, the vulva. 3. பிறப்பு, birth.

யௌ

யௌ, ஓரெழுத்து, a syllable compound of ய் and ஔ.

யௌகிகம், பகு பதம், a divisible word.

யௌதகம், மகட்கு மருமானுக்குந் தந்த பொருள், a nuptial gift, presents made to a bride and bridegroom by the father or friends of the bride.

யௌவனம், அழகு, beauty. 2. களிப்பு, joy. 3. யவ்வனம், adolescence, youth, manhood.

வ

வ, ஓரெழுத்து, a syllabic letter composed of வ் and அ.

வஃகான், வகரம், வகாரம், (*in gram.*) the letter வ.

வகித்தல், சுமத்தல், bearing, carrying, assuming, taking, enduring.

வகிர், வகிரென்னேவல், *imp.* divide, slice, disentangle and part the hair, distribute, split. 2. வழி, way, road. 3. வார், a leather girdle.

வகிர்தல், அறுத்தல், cutting in slips, slicing. 2. கோதல், disentangling and parting the hair. 3. பங்கு செய்தல், distributing. 4. போழ்தல், splitting.

வகுதி, வகுப்பு, a classification of letters, as பரிமாண வகுதி, long and short vowels, and பரிசன வகுதி, the three sub-divisions of consonants.

வகுத்தல், வகைப்படுத்தல், classifying, designating, arranging in classes.

வகுத்திராபிகாரம், as ஐம்பொறி, the five senses or their organs.

வகுத்துக்காட்டல், ஒருத்தி, the subdivision of a scientific or literary work.

வகுந்து, வழி, a way, road (இரா.).

வகுப்பு, அழகு, beauty. 2. வகுத்தல், a section, division, paragraph, class.

வகுலி, மீன், a kind of fish.

வகுளம், மகிழ மரம், a tree—Mimusops.

வகுளாபரணர், as சடகோபர், one of the twelve distinguished votaries of Vishnu.

வகுளி, ஒலி, a sound.

வகை, கூறுபாடு, division, branches. ramifications of a subject. 2. வகுப்பு, a part or portion.

வகையகத்தினை, தொகையாயுரைத்த பொருளை வகையறுத்துரைத்தல், amplification or detailing at large what has been said briefly.

வகையுளி, அவ்வச்சொன் முடிவே சீர் முடிவாக்கித் தளைகொள்ளாமல் வேண்டிய விடத்துச் சீர் முடிவு செய்து தளைகோடல், a fault in versification, when the first part of a word is to be scanned as a part of the first, and the other as a part of the second foot.

வக்கணத்தி, ஒரு செடி, a shrub—Symphoresma involucrata.

வக்கா, ஒரு பறவை, a bird, a kind of stork.

வக்கிரகிரகம், a retrograding planet.

வக்கிரசாரம், motion of a planet when retrograding.

வக்கிரம், கொடுமை, violence, cruelty. 2. பொய், a lie, falsehood, dishonesty. 3. பொறுமை, envy, impatience. 4. மீள மடங்குதல், retrograde motion, retrogression. 5. வட்டம், a circle. 6. வளைவு, a curve, a bend. 7. கலக்கம், confusion, disorder.

வக்கிரன், செவ்வாய், the planet Mars. 2. குரூரன், a man of perverse temper.

வக்கிராங்கம், அன்னம், as having a crooked neck.

வக்கிராத்தமனம், heliacal setting of a planet when retrograding.
வக்கிரோதயம், heliacal rising of a planet when retrograding.
வங்கசிந்தூரம், ஈயப்பற்பம், red lead, Minium.
வங்கணம், சிநேகம், friendship, love, familiarity.
வங்கணன், a familiar friend, a clandestine lover.
வங்கம், ஈயம், lead. 2. ஒரு தேயம், Bengal. 3. கத்தரிச் செடி, the egg-plant. 4. பதினெண்பாஷையி லொன்று, the Bengali language, one of the eighteen. 5. மரக்கலம், a ship. 6. வெள்ளி, silver.
வங்கர், சண்டாளர், base or vile persons.
வங்கனூர், commonly ஆலங்குடி வங்கனூர், a professor of the third ancient Madura College.
வங்காரம், உலோகக் கட்டி, an ingot or mass of metal.
வங்காளப்பச்சை, ஒரு வண்ணம், subacetate of copper, verdigris.
வங்காளம், ஓரிராகம், a kind of tune. 2. ஒரு தேசம், a country—Bengal.
வங்கி, துறடு, a crooked instrument.
வங்கியம், இசைக்குழல், a pipe, a kind of hautboy.
வங்கு, கற்புழை, an orifice, a hole in a stone.
வங்கூழ், காற்று, wind.
வசதி, மருத நிலத்தூர், a village among rice-fields. 2. வீடு, a house, a dwelling, a residence.
வசந்தபயிரவி, ஓர் இராகம், a kind of melody.
வசந்தம், இந்திரன் மாளிகை, the palace of Indra. 2. இளவேனில், the season of spring. 3. தென்றற் காற்று, the south wind. 4. வாசனை, odour, scent.
வசந்தன், தென்றற்காற்று, the south wind. 2. மன்மதன், Kama, the Hindu cupid.
வசந்திகை, தேமல், spots in the face or on the body, of a yellow colour.
வசம்பு, ஒரு மருந்து, sweet flag—Acorus calamus.
வசவி, as அசதி, a woman of bad life.
வசனம், சொல், speech, word, vocable. 2. வாசகம், prose in distinction from poetry.
வசனித்தல், சொல்லல், speaking, saying, discoursing.
வசி, கூர்மை, sharpness, point, edge. 2. சூலம், a trident. 3. தழும்பு, the mark of a stripe. 4. வசியம், possession, the exercise of a charm, magic influence. 5. வசியென்னேவல், *imp.* abide, dwell, live, reside. 6. வாள், a sword.
வசிஷ்டன், பிரமன் மானத புத்திரன், son of the mind of Brahma—Vasishta, a rishi of the first order.
வசித்தல், தங்கல், abiding, dwelling, living, residing. 2. வாசகம், speech, speaking, uttering.
வசித்துவம், அஷ்ட மாசித்தியு ளொன்று, the power of enchanting, changing the course of nature or assuming any form, one of the eight super-human powers which may be acquired by extraordinary austerities, attended with magical rites. 2. வசமாக்கல், holding in possession.
வசியம், கைவசம், actual possession. 2. அஷ்டகருமத்தொன்று, one of the eight kinds of magical enchantments—getting a person into one's own power, influence, &c.
வசிவு, வளைவு, bending, a curve, an arch, vault.
வசீகரணம், புணர்ச்சிக் கிணக்கம், magical influence for obtaining an object of desire. 2. வசம், subjection, possession.
வசீகரம், see வசீகரணம் 2.
வசு, கிரணம், a ray of light. 2. நெருப்பு, a name of *Agni*. 3. பசுவின் கன்று, the young of a cow, a calf. 4. பொருள், substance, wealth. 5. பொன், gold.
வசுக்கள், அஷ்டவசுக்கள், the eight *Vasus* or a class of Gods, their

names are தரன், துருவன், சோமன், ஆபன், அனியன், அனலன், பிரத்தியூடன், பிரபாசன்.

வசுதேவன், கண்ணன் தந்தை, father of Krishna, a demi-god.

வசுதை, வசுந்தரை, வசுமதி, } பூமி, she who possesses wealth—the earth.

வசுநாள், அவிட்ட நாள், the twenty-third lunar mansion.

வசை, இகழ்ச்சிச்சொல், a stigma, reproach, censure, blame. 2. குற்றம், a fault, defect.

வச்சகம், மலைமல்லிகை, a tree—Milling toria.

வச்சநாபி, as வற்சநாபி, a strong poison, a powerful vegetable poison, the root of a plant said to be from Nepaul.

வச்சி, காயாமரம், a shrub—Memecylon.

வச்சிரகம், தாமரைக்காய், the pericarp of a lotus.

வச்சிரதாரணை, நவதாரணையினொன்று, one of the nine forms of worship practised by the Siva yogis—rendering homage to Siva only in the *lingam*, rejecting the lower positions which represent Brahma and Vishnu; and renouncing passion, and the corporeal senses, contemplating the divine essence with a fixed mind.

வச்சிரபாணி, இந்திரன், the thunderbolt-hand—Indra as holding a thunderbolt.

வச்சிரம், சதுரக்கள்ளி, a species of Euphorbia. 2. வச்சிராயுதம், a weapon used by wrestlers in boxing, a hand of horn. 3. வயிரமணி, diamond.

வச்சிரவல்லி, பிரண்டை, a medicinal shrub—Vivitis quadrangularia.

வச்சிராங்கம், see வச்சிரம் 1.

வச்சிராவர்த்தம், இராமன் வில், the bow of Rama.

வச்சிரி, இந்திரன், he who wields the thunderbolt—Indra.

வச்சிரீகரணம், இடை பிங்கலை சுழிமுனை, two passages and one receptacle for breath in the human body, the former are the left nostril இடை, and the right nostril பிங்கலை, the latter is சுழிமுனை, the place of union for the breath from both.

வச்சையம், கலைமான், a roebuck—Capreolus dorcas.

வஞ்சகம், சூது, fraud, deceit.

வஞ்சகன், தூர்த்தன், a debauchee, a lecher, a gallant. 2. வஞ்சிப்போன், an impostor, a cheat.

வஞ்சப்பெண், காளியேவல்செய்பவள், a female servant of Kali.

வஞ்சம், கொடுமை, cruelty, violence. 2. சிறுமை, smallness. 3. பொய், a lie. 4. வாள், a sword. 5. as வஞ்சகம், fraud, deceit.

வஞ்சலம், பாம்பு, a snake.

வஞ்சனம், வஞ்சித்தல், fraud, deceit. 2. as வஞ்சினம், a vow, an oath.

வஞ்சனி, இடாகினி, a kind of female imp. 2. காளியேவல்செய்மகள், a female servant of Kali. 3. பெண். a woman.

வஞ்சனை, தெய்வப்பெண், a Goddess. 2. வஞ்சம், deceit, fraud.

வஞ்சி, ஒரு கொடி, a creeping plant. 2. ஒரு பா, a kind of stanza. 3. கருவூர், a town of the Sera country now applied to one in the Coimbatore district. 4. தர்மதேவதை, the Goddess of virtue. 5. பகைவர் மேற் செல்லுஞ் சேவகர்க்கு மாலை, one of the wreaths with which invaders are crowned. 6. பெண், a female. 7. வஞ்சியென்னேவல், *imp.* deceive, defraud, cheat, supplant. 8. வஞ்சித்தளை, one of the different modes of combining metrical feet.

வஞ்சித்தல், வஞ்சனைசெய்தல், deceiving, defrauding, cheating.

வஞ்சிவேந்தன், சேரன், the king of Vanchi—Sera.

வஞ்சினம், சபதம், an oath, a vow (நைட.).

வஞ்சுளம், அசோகமரம், the ashoka tree—Uvaria. 2. as வஞ்சுளன்.

வஞ்சுளன், கரிக்குருவி, a small black-bird.

வடகம், உல்லாசம், an upper garment. 2. தோல், the skin.

வடகிரி, பொன்மலை, the north or gold mountain.

வடகீழ்த்திசைப்பாலன், ஈசானன், the guardian of the north-east—Siva.

வடக்கு, வடதிசை, north.

வடதிசைப்பாலன், குபேரன், the guardian of the north—Kuvera.

வடந்தை, வட காற்று, north-wind.

வடமரம், வடவிருக்கம், } ஆலமரம், a banyan tree.

வடமீன், அருந்ததி, a small star in Ursa Major.

வடமேற்றிசைப்பாலன், வாயு, the guardian of the north-west—Vayu.

வடம், ஆலமரம், banyan tree. 2. ஊர், a town. 3. கயிறு, a string. 4. வில்லின் நாண், bow-string. 5. பூவரும்பு, a flower-bud. 6. அணி வடம், a string of jewels.

வடவாநலம், வடவாதுகம், } ஊழித்தீ, a submarine fire which will cause the final conflagration. It is in the shape of a mare's head. Springing from the thighs of அருப்பகமாமுனி, it was received by the ocean.

வடவிருக்கம், ஆல், banyan tree.

வடவை, ஊழித்தீ, the submarine fire. 2. எருமை, a buffalo. 3. பெண் குதிரை, a mare. 4. பெண் யானை, a female elephant.

வடி, கள், palm tree sap. 2. நாய், a dog. 3. வடியென்னேவல், *imp.* lengthen, become long, flow downward, trickle down, distil in drops, strain, filter, cause to flow, take or give in possession.

வடிகயிறு, குதிரைக்கயிறு, halter for a horse.

வடிதல், வடியல், } நீளம், length. 2. நீளல், lengthening, being long. 3. வடியல், ebbing, decreasing.

வடித்தல், வடிக்குதல், straining, filtering. 2. வசமாக்கல், taking or giving in possession.

வடிவம், உடலுருவம், form, shape, figure. 2. வடிவு, beauty, comeliness, elegance.

வடிவு, அல்குல், *Mons veneris.* 2. அழகு, beauty, elegance.

வடு, இளங்காய், unripe fruit. 2. குற்றம், reproach, taunt. 3. செம்பு copper. 4. தழும்பு, a scar, wale, cicatrice. 5. மருதயாழ்த்திறம், a kind of lute peculiar to agricultural tracts. 6. வடுவென்னேவல், *imp.* set as the bud of fruits. 7. வண்டு, a beetle.

வடுகன், வயிரவன், Bhairava, a form of Siva.

வடுகன்றாய், வடுகி, } காடுகாள், the mother of Bhairava.

வடுத்தல், இளங்காயரும்பல், setting as the bud of fruits.

வடுகு, உபநயனம், the investiture of the sacred thread. 2. ஒரு தேயம், the Telugu country. 3. ஒரு பாஷை, the Telugu language.

வடுவரி, வண்டு, bees, beetles, insects.

வட்கல், கெடுதல், being destroyed. 2. வெட்கம், being ashamed.

வட்கார், பகைவர், enemies.

வட்சத்தலம், மார்பு, the breast, the bosom.

வட்டணம், பரிசை, a shield.

வட்டணை, தாளம், a cymbal. 2. வட்டம், a circle.

வட்டணையுறுத்தல், தாளம் போடல், beating cymbals.

வட்டத்திருப்பி, பங்கம்பாளை, a plant—Cissampelos.

வட்டம், குளம், a tank, pond. 2. கேடயம், a shield. 3. கைமணி, a hand-bell. 4. கொள்கலம், a receptacle for different things. 5. சக்கரம், a circle, a circular form, a ringlike shape. 6. சீலை, a cloth. 7. தாழ்வு, lowness, a valley. 8. திரிகை, a potter's

wheel. *9.* நீர்ச்சால், a large water-pot. *10.* பரிவேடம், a halo round the sun or moon. *11.* பீடம், a chair, a seat. *12.* பொற்காசு முதலியவற்றிற்கு வட்டம், a premium in exchange. *13.* வளைதடி, a curved club, a weapon. *14.* as கிரகவட்டம், revolution of a planet.

வட்டி, பலகறை, cowries, small coins. *2.* முதற்பொருட்கு வருமூதியம், interest on money. *3.* வட்டியென்னேவல், *imp.* swear, take an oath, distribute or serve out food, beat cymbals.

வட்டிகை, கூடை, a basket. *2.* கைம்மணி, a hand-bell. *3.* சித்திரம், a picture or carved work. *4.* நால்வகைச்சாந்து, an unguent, one of the four.

வட்டிகைப்பள்ளம், (*in anat.*) fossa ovalis.

வட்டித்தல், ஆணையிடல், swearing, taking an oath. *2.* ஊணிடுதல், distributing, or serving out food. *3.* தாளம்போடல், beating cymbal.

வட்டில், கூடை, a basket. *2.* புட்டில், a basket for lading water. *3.* வட்டில், a brass tray, platter, cup. *4.* வழி, a way.

வட்டு, சூதாடு கருவி, a small spheroidal pawn or draught. *2.* திரட்சி, anything round as a ball, a bush, &c. *3.* (*M. Dic.*) கறிமுள்ளி, a low thorny shrub of the brinjal genus.

வட்டுடை, சீலை, a cloth.

வட்டை, வழி, a way.

வட்புலி, சிங்கம், a lion.

வணக்கம், தொழுதல், adoration, reverence, submission, worship, respect.

வணக்கல், வளைத்தல், bending, making flexible, training the body for athletic exercises.

வணக்கு, as வணக்கம், adoration.

வணங்கல், தொழுதல், worshipping, adoring, saluting respectfully. *2.* வளைதல், bending, being bent.

வணங்காமுடியினன், துரியோதனன், One who bowed his head to none —an epithet of Duryodhana.

வணர், வளைவு, a vault, an arched roof.

வணிகம், செட்டு, commerce, traffic, trade.

வணிகன், கொள்ளல் விற்றல் செய்வோன், a dealer, merchant, tradesman. *2.* வைசியன், one of the Vaisya caste, a merchant, farmer or herdsman.

வணிச்சியம், வாணிச்சியம், trade, trafficking, buying and selling.

வணிதம், செப்பம், goodness, elegance, handsomeness.

வண்களமர், சூத்திரர், உழவர், men of the fourth or servile tribe, agriculturists.

வண்சிறை, மதில், part of a fort or fortified wall.

வண்டர், கவிகள் கற்றோர், bards reciting old compositions. *2.* மங்கலப் பாடகர், panegyrists, encomiasts.

வண்டல், மகளிர் விளையாட்டு, a game at which girls play. *2.* வண்டல், dregs, lees, sediment.

வண்டன், திண்ணியன், a valiant man.

வண்டானம், நாரை, a heron, a pelican.

வண்டு, அம்பு, an arrow. *2.* குற்றம், a fault. *3.* கைவளை, a bracelet. *4.* சங்கு, a conch. *5.* பூசநாள், the eighth lunar mansion. *6.* வண்டு, a chafer, beetle, scarab of any kind.

வண்டுகொல்வி, ஒரு மரம், a kind of flower tree whose leaves are used to cure cutaneous eruptions—Cassia alata. *2.* (*M. Dic.*) தேவதாரம், a kind of pine tree.

வண்டுணுமலர்மரம், சண்பக மரம், Michelia champaka. *2.* வேங்கை மரம், a tree—Pterocarpus.

வண்டுரை, எழுத்தில்லா வோசை, inarticulate sound.

வண்டோதரி, see மண்டோதரி.

வண்ணகம், கலிப்பா முடுகியல், a rapid or trochaic measure.

வண்ணக்குழிப்பு, } **வண்ணக்குனிப்பு,** } a melodious tune with a sprightly succession of short syllables.

வண்ணமகள், கோலஞ் செய்வாள், a lady's maid, a woman employed in dressing and adorning another.

வண்ணம், அழகு, beauty. 2. இராகம், a musical mode, a melody. 3. குணம், property, way or manner. 4. சந்தம், harmony. 5. சாந்துப் பொது, all kinds of ointment. 6. நன்மை, goodness. 7. நிறம், colour. 8. வடிவு, form, figure, (*in mathematics*) coefficient.

வண்ணார், ஏகாலியர், washermen, bleachers.

வண்மை, அழகு, beauty. 2. ஈகை, bounty, liberality. 3. குணம், quality, good quality, property. 4. புகழ், reputation, celebrity. 5. மெய்ம்மை, truth. 6. வளமை, fruitfulness, fertility, abundance. 7. விதம், manner, nature.

வதந்தி, பேச்சு, speech, talk, report.

வதம், கொலை, murder.

வதரி, இலந்தை, the jujube.

வதனம், முகம், the mouth, face, countenance.

வதன், கொலை செய்வோன், a murderer.

வதானியன், குபேரன், an epithet of Kuvera. 2. வரையாது கொடுப் போன், a bountiful giver, a munificent man.

வதி, சேறு, mire. 2. வதியென்னே வல், *imp.* sojourn, abide, tarry. 3. வழி, way.

வதிஷ்டன், வசிஷ்டன், Vasishta, husband of அருந்ததி.

வதிதல், தங்கல், abiding, sojourning, tarrying, staying, dwelling.

வதிரன், செவிடன், a deaf man.

வதுவர், குதிரைப்பாகர், horsemen, cavaliers. 2. யானைப்பாகர், riders on elephants.

வதுவை, புதுமணம், a recent marriage, first joining. 2. வாசனை, smell.

வதை, கொலை, murder. 2. வதை யென்னேவல், *imp.* kill, murder. 3. வாதனை, affliction, torment.

வதைத்தல், கொல்லல், killing, murdering. 2. துன்புறுத்தல், tormenting or distressing in body or mind.

வத்தகம், வெட்பாலை, a tree—Nerrium antidysentericum (*M. Dic.*).

வத்தமம், ஆமணக்கு, the castor plant (*M. Dic.*).

வத்தி, விளக்குவர்த்தி, the wick of a lamp.

வத்திரம், சீலை, a garment, vestment. 2. முகம், face.

வத்து, பொருள், a thing, a being, a creature.

வந்தனமாலை, வாயிலிற் கட்டுந் தோரணம், the ornamental arch of a gateway.

வந்தனம், அஷ்டாங்கமாகப்பணிதல், adoring or worshipping by bringing in contact with the ground the eight parts of the body, viz., the feet, hands, shoulders, forehead, and breast. 2. விநயம், decorum, decency, modesty.

வந்தனை, ஆராதனை, adoration, worship. 2. வணங்கல், reverence, homage.

வந்தி, மலடி, a barren woman. 4. வந்தியென்னேவல், *imp.* do homage, salute reverentially.

வந்திகள், கவிஞர், poets. 2. புகழ் வோர், pain panegyrists. 3. மங் கலப் பாடகர், retained minstrels.

வந்தித்தல், வணங்கல், doing homage, saluting reverentially.

வந்தித்துநிற்போர், புகழ்ந்து பாடு வோர், paid panegyrists.

வந்தியர், see வந்திகள்.

வந்தியை, } **வந்தை,** } as வந்தி, a barren woman.

வந்து, காற்று, wind.

வந்தை, பெருமை, greatness. 2. see வந்தியை.

வபனம், மழித்தல், shaving.

வபு, உடல், body.

வபை, வயிற்றினுபிக்குள் வெண்டுகில் போன்ற புரையாகிய நிணம், the fat or marrow in the region of the navel, the caul.

வமனம், சத்திபண்ணல், vomiting.

வமிசம், race, lineage, descent, kindred.

வம்பலர், அயலோர், neighbours. 2. புதியோர், new comers, guests.

வம்பல், திசை, a region of the world.

வம்பி, (*mas.* வம்பன்) வசவி, a mean, vile woman.

வம்பு, கச்சு, a woman's bodice. 2. நிலையின்மை, instability. 3. புதுமை, novelty. 4. மிடா, an earthen vessel, a water urn. 5. வாசனை, smell.

வயங்கல், ஒளி செய்தல், shining. 2. நடத்தல், conducting, managing.

வயதரம், கடுக்காய், Indian gall-nut or ink-nut (*M. Dic.*).

வயது, யௌவனம், juvenility, youth. 2. வயசு, age, period of life-time from birth.

வயந்தம், வசந்தம், the season of spring.

வயப்புலி, வயப்போத்து, } சிங்கம், a lion.

வயமா, சிங்கம், a lion. 2. புலி, a tiger. 3. யானை, an elephant.

வயம், குதிரை, a horse. 2. நீர், water. 3. பறவை, a bird. 4. வசம், state of subjection. 5. வலி, power, might.

வயல், கழனி, a rice-field. 2. மருத நிலம், an agricultural tract. 3. வெளி, an open field.

வயவரி, புலி, a tiger.

வயவர், படைவீரர், heroes, soldiers.

வயவன், கரிக்குருவி, a blackbird. 2. காதலன், a husband, a friend. 3. திண்ணியன், a strong, robust, powerful man. 4. வலியன், a valiant man.

வயவு, ஆசை, desire, love, affection. 2. (இரா.) as வயாவு, the womb.

வயவெற்றி, திப்பிலி, long pepper—Piper longum (*M. Dic*).

வயவை, வழி, a way.

வயற்சுள்ளி, பொரிப்பூண்டு, a kind of plant—Lepidagathes cristata (*M. Dic*).

வயாமது, சீந்தில்.

வயாவு, ஆசை, desire, love, affection. 2. கர்ப்பம், the womb. 3. வருத்தம், the pains of child birth. 4. மசக்கை, the faintness and weakness attending the early stages of gestation.

வயானம், பறவை, a bird in general.

வயானன், வலியன், a small blackbird.

வயிக்கிராந்தம், as வைக்கிராந்தம், a kind of native arsenic.

வயிடூரியம், see வைடூரியம்.

வயிந்தவம், see வைந்தவம்.

வயிரப்படை, வச்சிராயுதம், any weapon or war instrument made of diamond.

வயிரம், கூர்மை, the point or edge of a thing. 2. சலஞ்சாதித்தல், obstinacy, malice. 3. சினம், wrath. 4. தண்டாயுதம், a club. 5. திருவோணம், the twenty-second lunar mansion. 6. பூணைக் கட்டுவது, an ornamental knob on a tusk or horn. 7. மரவயிரம், the heart of a tree. 8. வச்சிரம், a diamond. 9. வச்சிராயுதம், a diamond weapon.

வயிரவம், see வைரவம்.

வயிரவன், a demon, one of the sons or incarnation of Siva; under which form he is said to have cut off Brahma's fifth hand. *Note*:—Of Bhairavas, there are 80,000,000.

வயிராகம், வயிராக்கியம், zeal, enthusiasm.

வயிராக்கியம், ஆசையின்மை, absence of secular passions or desires.

வயிரி, see வைரி.

வயிரியம், மயிர்ச்சீலை, a woollen cloth.

வயிரியர், கூத்தர், stage-players, hired dancers. 2. பாணர், hired panegyrists.

வயிர், ஊதுகொம்பு, a horn, a large trumpet.

வயினதேயன், கருடன், the brahmani-kite.
வயினம், பறவை, a bird.
வயின், இடம், place. 2. ஏழனுருபு, a particle used in declension of the seventh case of nouns. 3. வயிறு, belly, stomach. 4. வீடு, a house.
வயோதிகம், முதுமை, old age, gray hairs, senility.
வரகவி, தேவ அருள்பெற்றுப் பாடும் புலவன், a natural poet, a poetic genius.
வரகு, ஒரு பயிர், a kind of millet—Paspalum frumentaceum.
வரதம், வரங்கொடுத்தல், bestowing a gift, granting a boon.
வரதன், அரன், Siva. 2. அரி, Vishnu. 3. அருகன், Argha. 4. ஈகையாளன், one granting a boon, a benefactor.
வரதை, கன்னி, a girl, a virgin.
வரநதி, கங்கை, the river Ganges.
வரப்பு, எல்லை, a limit, border. 2. வரம்பு, a ridge to retain water in corn-fields.
வரப்புள், வயல், a rice-field.
வரம், அனுக்கிரகம், favour, help. 2. நவநிதியிலொன்று, one of the nine kinds of treasures. 3. மேன்மை, excellency, eminence. 4. கொடை, boon, gift, privilege or endowment by a deity or some superior.
வரம்பிகத்தல், எல்லை கடத்தல், exceeding the limits, being boundless.
வரம்பிலாற்றல், அளவற்ற வலிமை, almighty power.
வரம்பிலின்பமுடைமை, possessing infinite happiness—one of the attributes of the deity.
வரம்பில்காட்சி, omniscience.
வரம்பு, எல்லை, a boundary, limit. 2. வழி, a way. 3. வரப்பு, a low ridge in a tilled piece of ground.
வரர், மேலோர், sages. 2. வானோர், celestials.
வரலாற்றுவஞ்சி, ஒரு பிரபந்தம், a panegyric in the வஞ்சிப்பா, a poem on high birth, greatness and fame.
வரல், வருதல், coming, occurring, happening. 2. வராதே, come not.
வரவு, வருகை, coming, income, anything received.
வரன், சிவன், one who bestows boons—Siva. 2. தமையன், an elder brother. 3. பிரமன், Brahma. 4. புருஷன், a husband.
வரன்முறை, ஊழ், oldness, antiquity established usage, customs of long-standing. 2. வரலாறு, the way, manner, order of succession, a schedule, a genealogical list.
வரன்றல், கொழித்தல், sweeping along or over the ground, as a river.
வராகம், அஷ்டாதச புராணத் தொன்று, one of the eighteen puranas giving an account of Vishnu's boar incarnation. 2. பன்றி, a boar, swine, hog.
வராகன், திருமால், Vishnu, from his incarnation of a boar.
வராகி, சப்த மாதாக்களிலொருத்தி, the Sakti or consort of Vishnu, one of the seven mothers.
வராங்கம், தலை, the head. 2. அழகிய உருவம், an elegant form. 3. முத்தியர், மெய், the bodies of celestials.
வராடகம், தாமரைக்காய், the seed-vessel of the lotus. 2. பலகறை, small shells, cowries.
வராடம், ஒரு தேயம், a country, as மராடம். 2. see வராடகம் 2.
வராடி, see வராடகம். 2. முரட்டு நூற்சீலை, a coarse cloth.
வராலி, பிரமி, a kind of herd deemed important in many medical preparations—Gratiola monieri.
வரால், ஒரு வகை மீன், a fish—Ophicephalus striatus.
வராளம், பாம்பு, a snake.
வராளி, ஓரிசை, a kind of melody.
வரி, இசைப்பாட்டு, a melody in general. 2. எழுத்து, a letter, a

line of writing. 3. குடியிறை, tribute, tax, impost, toll, duty. 4. தேமல், spots on the face, &c. 5. நீளம், length, distance. 6. நெல், rice in the husk. 7. வண்டு, a beetle. 8. வரியென்னேவல், *imp.* draw lines, write, paint, bind, join, smear. 9. வழி, way, road. 10. விரலிறை, the lines in the palm of the hand.

வரிக்கடை, வண்டு, a chafer.

வரிசந்தி, நாற்றெருக்கூடுமிடம், a place where four streets meet, a crossway.

விசுவான்மா, பிரமன், the soul of the universe—Brahma.

விசுளி, கள், fermented palm tree sap.

விசேஷணம், குணத்தை விளக்குவது, a qualifying term, epithet, attribute, one of five specialities of grammatical construction.

விசேஷியம், அடையடுத்தபொருள், the thing qualified.

விசை, சீக்கிரம், haste, speed, swiftness. 2. விசையென்னேவல், *imp.* make haste.

விசைத்தல், வேகமுறல், making haste.

விச்சாதரர், வித்தியாதரர், a class of celestials.

விச்சிராமம், மலங்கழிக்கை, evacuation of bowels.

விச்சின்னம், வேறுக்கப்பட்டது, what has been divided, parted, alienated.

விச்சுவகாசிபம், விச்சுவசாரம், விச்சுவதர்மம், விச்சுவபோதம், different systems of architecture.

விச்சுவம், as விசுவம், the world universe.

விச்சுவரேகை, வானவரை, celestial equator.

விச்சுவர், தேவரிலோர் பிரிவு, a class of celestials. 2. சிற்பர், artisans, artists, mechanics, workmen.

விச்சுவேசம், ஒரு சிற்பநூல், a system of architecture.

விச்சை, தெரு, street. 2. வித்தை, science.

விச்சொரூபம், விகார வடிவம், deformed shape.

விஞ்சை, கல்வி, knowledge. 2. வித்தை, magic.

விஞ்சையரூர், நாகலோகம், Swerga inhabited by a class of celestial singers.

விஞ்சையர், புலவர், poets. 2. வித்தியாதரர், demi-gods of a certain class.

விஞ்ஞானகலர், the first of the three classes of souls, subject to but one மலம், free from births and deaths, and preparing for final absorption.

விஞ்ஞானப்பிரகாசம், light of wisdom.

விஞ்ஞானமயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும், the spiritual faculty with means of discernment.

விஞ்ஞானம், see விக்கியானம்.

விடக்கு, ஊன், flesh.

விடங்கம், அழகு, beauty. 2. ஆண்மை bravery, ability. 3. கொடுங்கை, the inside of a bent arm. 4. சுவர்ப் புறத்து நீண்ட வுத்தரம், the projection of a beam, or rafter outside. 5. புறாக்களுக்குத் தூண்கள் மேற்செய்த கூட்டின் வரிசை, dove-cotes on a pillar. 6. முகடு, the top of a house. 7. வீதியிற் கட்டிய கொடி, a flag hoisted in a street.

விடங்கர், சிறுவழி, a narrow way.

விடசூசகம், சகோரப்புள், a bird probably the red partridge.

விடதம், முகில், cloud. 2. துரிசு, verdigris (தீபம்).

விடதரம், பாம்பு, that which bears poison—a snake. 2. மேகம், cloud.

விடதரன், சிவன், he who bears poison (in his throat)—Siva, as ஆலகண்டன்.

விடதாரி, விஷ வைத்தியன், poison—a doctor, physician.

விடதாளம், நவதாளத்தொன்று, one of the nine rules for keeping time in music when an image is carried round at a heathen fane with nine halts.

விடந்தை, ஒரூர், the name of a town.

விடபகதி, துரககதி ஐந்தினொன்று, one of the five paces of the horse, like the short trotting pace of the bull.

விடபம், எருது, a bull, bullock. 2. சிவனூர்தியுங்கொடியும், a vehicle and banner of Siva. 3. சிறுதூறு, brushwood, thick underwood, low jungle. 4. மரக்கொம்பு, a branch of a tree. 5. (*in anatomy*) Perinaeum, or septum of the scrotum.

விடபி, மரப்பொது, a tree.

விடப்பு, } கமர், a fissure.
விடம்பு, }

விடம், நஞ்சு, poison. 2. தூர்த்தவிர்த்தி, gallantry, debauchery. 3. மலை, a mountain.

விடயபரித்தியாகம், abstraction.

விடயம், காணப்பட்டது, an object of sense. 2. காரணம், origin, original cause.

விடயவஞ்ஞானம், ignorance, illusion.

விடரூகம், பூனை, a cat.

விடர், கமர், a fissure. 2. காடு, a forest. 3. தூர்த்தர், gallants, licentious persons. 4. மலைப்பிளப்பு, a cleft of a mountain.

விடர்வு, வெடிப்பு, cranny, chink.

விடலை, ஆண் மகன், a male child. 2. திண்ணியன், a valiant man. 3. பாலை நிலத்தலைவன், the chief of a barren district. 4. மணவாளன், a bridegroom. 5. நடுவயதுடையோன், a man from sixteen to thirty-two. 6. இளங்காளை, a young bull.

விடல், குற்றம், a fault. 2. சாதல், ceasing to exist, dying. 3. விடுதல், releasing, setting at liberty, quitting, leaving.

விடபம், விசுவம், the equinox.

விடவிடெனல், நடுக்கக் குறிப்பு, trembling from cold, fear &c.

விடவு, as விடர், any fissure.

விடன், தூர்த்தன், a gallant, a licentious person.

விடாணம், விலங்கின்கொம்பு, horn of animals.

விடாதவாகுபெயர், using a term in its secondary sense without entirely giving up its primary one. See விட்டவாகுபெயர்.

விடாந்தகன், சிவன், Siva as remover of the poison at the churning of the sea.

விடாலகம், பூனை, a cat.

விடி, திரைச்சீலை, a curtain. 2. விடியென்னேவல், *imp.* break or dawn, as the day.

விடிதல், உதயமாதல், breaking or dawning, as the day.

விடியல், விடியற்காலம், daybreak.

விடுதல், எறிதல், emitting, despatching. 2. நீக்கல், letting, leaving, parting with.

விடுத்தல், அனுப்பல், sending away, dismissing. 2. தங்கல், remaining. 3. நடத்தல், causing to go, making to walk. 4. பிரித்தல், separating.

விடுந்தலைப்பு, முன்றானை, the front end of a cloth.

விடுவம், as விசுவம், the equinox.

விடுவாய்செய்தல், அறுத்தல், cutting off.

விடுசி, அம்பு, an arrow (ஞானவாசி.)

விடேபம், திரிபு, mutation, change.

விடேலெனல், அனுகரணவோசை, the repetition of a natural sound.

விடை, இடபவிராசி, the sign Taurus. 2. எதிர்மொழி, answer, reply. 3. எருது, a bull. 4. விடுதல், liberty, leave, license, permission.

விடைதல், கோபம், being angry. 2. சினம், wrath. 3. பிரிதல், becoming disjointed, split.

விடைதழாஅல், grappling and subduing a wild bull—as a test of bravery by a suitor.

விடைத்தல், சினக் குறிப்பு, frowning. 2. பெருங்கோபம், vehement wrath.

விடையோன், சிவன், an epithet of Siva as having a bull.

விட்கம்பம், நித்தியயோகத்தொன்று, an astrological yoga. 2. விட்டம், diameter.

விட்சேபசக்தி, elasticity (உபநி.)

விட்சேபம், as விக்கேபம், celestial latitude.

விட்டம், உத்தரம், a cross beam. 2. diameter.

விட்டரம், கொள்கலம், a receptacle. 2. தவத்தோர்பீடம், a seat of ascetics of kusa grass. 3. மரம், a tree.

விட்டவர், துறந்தோர், ascetics. 2. பகைவர், enemies.

விட்டவாகுபெயர், மொழிக்கியன்ற பொருளை விட்டுக் குறிக்கப்படு பொருட்கிடனாய்ப் பிறிதொன்றை விளக்குவது, using a term in its secondary sense, having given up its primary one.

விட்டார்த்தம், பாதி விட்டம், semi-diameter.

விட்டிசைத்தல், பிரிந்திசைத்தல், diæresis or sounding one syllable as two.

விட்டில், பிராய மரம், a tree—Trophis. 2. விட்டிற்பறவை, a small winged insect, destructive to rice, a grass-hopper. 3. வெட்டுக்கிளி, a locust.

விட்டுணு, திருமால், Vishnu, one of the Hindu triad. 2. தர்மநூல் பதினெட்டினொன்று, one of the eighteen works on law, ethics and jurisprudence.

விட்டுணுகரந்தை, ஒரு கரந்தை, a plant—Sphoeranthus Indicus.

விட்டுணுகாந்தி, ஒரு பூண்டு, a medicinal plant—Evolvulus alsinoides.

விட்டுணுபதம், பாற்கடல், the milk-sea. 2. வைகுந்தம், the heaven of Vishnu, also any place or shrine where he is supposed to be.

விட்டுணுவல்லபை, லக்ஷ்மி, Lakshmi.

விட்டேறரணம், } வேல், any missile
விட்டேறு, } weapon.

விட்டை, மலம், the dung of apes, dogs, and some other animals.

விணிகை, கச்சு, a bodice for women's breasts.

விண், ஆகாயம், air, atmosphere, sky. 2. இளமை, youthfulness, tenderness. 3. மேகம், cloud.

விண்டலம், ஆகாயம், the ethereal space.

விண்டல், மூங்கில், the bamboo.

விண்டு, அஷ்டாதச தர்ம நூலி லொன்று, one of the eigtheen treatises of law. 2. காற்று, wind. 3. திருமால், a name of Vishnu. 4. மலை, a hill or mountain. 5. மூங்கில், the bamboo. 6. மேகம், cloud. 7. வினையெச்சம், of விள்ளு, *v-part.* opening, splitting, embracing, revealing.

விண்டுநதி, ஆகாய கங்கை, the celestial Ganges.

விண்டுபதம், ஆகாயம், the ethereal region.

விண்ணவன், அருகன், Argha. 2. தேவன், a celestial being.

விண்ணுலகம், தேவலோகம், the world of the celestials.

விண்ணுளார், as விண்ணோர்.

விண்ணேறு, இடி, thunder-bolt.

விண்ணோர், தேவர், the celestials.

விண்மணி, சூரியன், the sun.

விண்மண், ஆகாயமும் பூமியும், heaven and earth.

விண்மீன், நட்சத்திரம், a star.

விண்முழுதாளி, இந்திரன், the ruler of the sky—Indra.

விண்வீழ்கொள்ளி, உற்கை, a meteor.

விதண்டை, வீண் வாக்குவாதம், vain disputation, controversy, investigation.

விதத்தல், மிகப்படல், enhancing, distinguishing.

விதப்பு, சீக்கிரம், haste. 2. மதிலுறுப்பு, cornice of a wall. 3. மிகுதி, abundance.

விதப்புக்கிளவி, விதப்புமொழி, (*in gram.*) a qualifying term.

விதம், புட்பொது, bird in general. 2. விதம், form, manner, method.

விதரணம், ஈகை, a gift, donation. 2. விவேகம், capacity, cleverness.

விதரணன், ஈகையாளன், a generous man.

விதர்க்கம், உத்தேசம், conjecture. 2. ஐயம், doubt. 3. நியாயம் பேசல், reasoning, discussion.

விதர்ப்பம், ஒரு தேசம், a district and city to the south-west of Bengal, the modern Bara-Nagpore, said to be the country of *Bhima*, the father of Damayanti, wife of Nala. *Note* :—The name is said to be given to this country because it produces no தர்ப்பை, grass, in consequence of the course of a rishi whose son had died of a wound from a blade of the grass.

விதர்ப்பு, அச்சம், fear. 2. நெருக்கம், crowdedness, closeness. 3. போர், battle, fight. 4. வெற்றி, victory.

விதலம், கீழுலகத்தொன்று, a division of the lower world, the next below the earth.

விதலை, நடுக்கம், trembling, shivering.

விதவாகாமி, கைம்பெண்ணை விரும்புவோன், one who has intercourse with a widow.

விதவை, கைம்பெண், a widow. [*ex.* வி *priv et.* தவன். husband.]

விதனம், வேதனை, chagrin, sorrow, grief.

விதாதா, அருகன், Argha. 2. பிரமன், Brahma.

விதாரணம், பிளப்பு, a rent, breach, cleft.

விதானம், உபாயம், means, expedient. 2. கூட்டம், a crowd. 3. மேற்கட்டி, an awning, a canopy. 4. விதம், way, manner.

விதி, உண்மை, truth. 2. ஊழ், fate, destiny. 3. குணம், disposition. 4. செய் தொழில், an act, an action. 5. செல்வம், felicity, prosperity. 6. நியமித்தல், determination, decision. 7. பிரமன், Brahma. 8. மெய், truth. 9. விதியென்னேவல், *imp.* appoint, institute, enact, say, utter. 10. வேதாகம விதி, institute, precept, text.

விதிக்கு, கோணத் திசை, a corner-region.

விதிதம், தெரியப்பட்டது, that which is known, manifest, clear.

விதித்தல், உண்டாக்கல், making, creating. 2. செய்தல், doing, acting, transacting. 3. சொல்லல், saying, uttering, laying down rules.

விதித்தோன், கடவுள், God the Creator.

விதிபாதம், நித்தியயோகத்தொன்று, one of the twenty-seven astrological yogas.

விதிப்பாள், மகள், daughter.

விதியர், கணக்கர், accountants, writers. 2. தந்திரிகள், military men. 3. மந்திரிகள், king's ministers.

விதியுளி, ஓமம், a burnt offering of the Hindus. 2. தூதன், a messenger. 3. விவாகம், matrimony.

விதியை, இரண்டாந்திதி, the second phasis of the moon.

விதிர்ப்பு, அச்சம், fear, tremor. 2. நடுக்கம், trembling, shivering.

விதிர்விதிர்த்தல், துடிதுடித்தல், throbbing, fluttering, quivering with intensity of feeling, being tremulous.

விதிவசம், fate, destiny.

விதிவிலக்கு, செய்வதும் தவிர்வதும், law enjoining and law forbidding.

விதிவினை, உடன்பாட்டு வினை, an affirmative verb.

விது, சந்திரன், the moon. 2. விஷ்ணு, a name of Vishnu.

விதுஷி, படித்தவள், a learned woman.

விதுதமுகம், உணவணி முதலிய வேண்டாததற்குத் தலையசைத்தல், a gesture of the head and face expressive of disgust for food, and dress.

விதுப்பு, ஆசை, desire, lust. 2. சீக்கிரம், haste.

விதும்பல், ஆசைப்படல், desiring, longing for, hankering after.

விதுரன், அறிஞன், a learned man. 2. திண்ணியன், a valiant man. 3. வாழ்க்கைத் துணையிழந்தோன், a widower. 4. விதுரன், the younger brother of Dhrutharastra.

விதேகமுத்தி, being delivered from bodies and births, attaining union with the deity.

விதேகம், தேக விமோசனம், emancipation from the body either real or imaginary as in trances and ecstacies. 2. as விதேகை.

விதேகை, மிதிலை நகரம், the ancient Mithila or modern Tirhut.

விதேயன், சொற்படி கேட்போன், one who is compliant, obedient, governable.

விதை, பெருமை, greatness. 2. விதை, யென்னேவல், *imp.* sow seed. 3. வித்து, seed of plants.

விதைத்தல், வித்துதல், sowing seed.

விதைப்புனம், புதுக்கொல்லை, a spot of ground newly cultivated.

வித்தகம், ஞானம், knowledge.

வித்தகர், கம்மாளர், artificers. 2. தூதர், messengers.

வித்தகன், வயிரவன், Bhairava. 2. ஞானி, a knowing one.

வித்தம், ஞானம், wisdom. 2. பொன், gold, wealth.

வித்தன், வித்துவான், a learned man.

வித்தாரம், அகலம், extension. 2. ஒரு கவி, an extended poem, such as the great epics Ramayana and Bharata, 3. ஒரு சிற்ப நூல், a book on architecture.

வித்தியர், கம்மாளர், artificers, as mechanics, goldsmiths, &c.

வித்தியாதத்துவம், தத்துவத்திரயத்தொன்று, one of the three classes of faculties or powers, a department of knowledge. According to the *Saivas*, it includes:—(1) காலம், time; (2) நியதி, fate; (3) கலை, science; (4) வித்தை, arts; (5) இராகம், desire; (6) புருஷன் or ஆன்மா, soul; (7) மாயை, matter.

வித்தியாதரர், as விஞ்சையர், one of the eighteen classes of dependent supernals, heavenly singers.

வித்தியாதானம், இலவசமாய்க் கல்வி கற்பித்தல், charitable instruction of the ignorant.

வித்தியாதேகம், an embodiment of knowledge.

வித்தியாபாரகன், கல்விக்கடல் கரை கண்டவன், one who has reached the other shore of the sea of knowledge.

வித்தியாரம்பம், கற்கத் தொடங்கல், beginning of knowledge.

வித்தியார்த்தி, கற்போன், a scholar, a student.

வித்தியாலட்சுமி, patroness of science.

வித்தியாவந்தன், கல்விமான், a learned man.

வித்தியேசுரர், வித்தீசுரர், } வித்தையாளர், lords of learning, learned men, poets.

வித்து, விதை, seed. 2. வித்தென்னேவல் *imp.* sow seed.

வித்துதல், விதைத்தல், sowing seed.

வித்துரு, மின்னல், lightning.

வித்துருமம், பவளம், coral.

வித்துவசிரோமணி, one transcendently eminent for learning.

வித்துவான், புலவன், a learned man.

வித்துவேஷணை, அஷ்டசித்தியிலொன்று, one of the eight kinds of magical enchantment—excitement to enmity.

வித்துவேஷம், விரோதம், enmity, hatred.

வித்தை, கல்வி, science, learning, sacred or profane, a branch of learning. 2. ஞானம், knowledge, wisdom.

விநதை, கருடன் தாய், the mother of Garuda. 2. சப்தபுரியிலொன்று, one of the seven sacred cities.

விநயம், மரியாதை, modesty, affability, mildness. 2. வணக்கம், obeisance.

விநாசம், கொலை, murder. 2. முழு நாசம், entire destruction.

விநாசன், கொலை செய்வோன், a murderer, destroyer.

விநாடி, கால நுட்பம், a minute portion of time, the sixtieth part of an Indian hour.

விநாயகன், அருகன், Argha. 2. புத்தன், Buddha. 3. விநாயகன், Ganesa.

விநீதன், தண்டிக்கப்பட்டவன், one who has been chastised, punished. 2. விநயமுள்ளவன், a humble, modest person.

விநோதம், விளையாட்டாற் பொழுது கழித்தல், pastime, diversion, play, sport. 2. அழகு, beauty, handsomeness, pomp.

விந்தம், ஒரெண், a number. 2. ஒரு மலை, the Vindhya mountains.

விந்தர், இடையர், shepherds, cowherds.

விந்தியம், அஷ்டகுல பர்வதத் தொன்று, the mountainous range across India from Behar nearly to Gujerat dividing Hindustan proper from the Deccan.

விந்து, ஒரு புள்ளி, a dot, point. 2. நீர்த் துளி, a drop of water. 3. (*in astronomy*) the twenty-fourth part of a quadrant, the *tabular unit*. 4. நவபேதத்தொன்று, one of the nine forms or transmutations of Siva according to the சித்தாந்த system.

விந்தை, ஆச்சரியம், admiration, astonishment. 2. துர்க்கை, a name of Durga.

விபகரி, வழக்குப் பேசு, to carry on a lawsuit.

விபகலனம், } கழித்தல், subtraction.
விபகலிதம், }

விபகாரம், வழக்கு, a lawsuit.

விபக்கம், } எதிர்ப்பக்கம், the opposite side or party.
விபட்சம், }

விபக்கன், } பகைவன், an adversary, an enemy.
விபட்சன், }

விபசாரம், வேசித்தனம், adultery, unchastity, fornication.

விபஞ்சி, } வீணை, a lute.
விபஞ்சிகம், }

விபணி, கடை, a shop. 2. கடை வீதி, a market street, a place, where things are sold.

விபதம், கெடுவழி, a bad road.

விபத்தம், பஞ்சம், scarcity, famine.

விபத்தன், வேறுபட்டோன், one who is separated.

விபத்தி, குற்றம், a fault. 2. துன்பம், affliction, distress. 3. வேற்றுமை, case in grammar, declension.

விபத்து, துன்பம், affliction, suffering, calamity, adversity, misfortune.

விபரீதம், அதிசயம், strangeness, uncommonness, excessiveness. 2. வேறுபாடு, discordance, contrariety, perversity.

விபலம், பயனின்மை, fruitlessness, unprofitableness.

விபவ, ஓராண்டு, the second year of the Hindu cycle.

விபவம், வாழ்வு, happiness, prosperity. 2. செல்வம், riches, wealth. 3. மகத்துவம், majesty, highness.

விபன்னன், மெலிந்தோன், a man in adversity.

விபாகம், செல்வம், felicity. 2. பக்குவம், opportunity. 3. வேறுபாடு, diversity, change.

விபாகரன், } சூரியன், the sun. 2. தீக் கடவுள், the God of fire, fire.
விபாவசன், }

விபாதம், உதயகாலம், dawn, daybreak.

விபாவரி, இராத்திரி, night.

விபாவனை, ஆராய்வு, examination. 2. ஓரலங்காரம், a figure in rhetoric—separating effects from their proper causes and attributing them to other causes alluded to.

விபினம், காடு, wilderness, jungle, desert.

விபீஷணன், இராவணற்கிளையோன், a younger brother of Ravana.

விபீதகம், தான்றி மரம், a tree—Terminalia Belerica.

விபு, கர்த்தா, the Supreme Being, as omnipresent and eternal. 2. எஜமானன், a lord, a master.

விபுணன், நிபுணன், one who excels.

விபுதர், அறிஞர், learned men. 2. மிகக் கற்றோர், sages, men of great wisdom. 3. வானோர், celestials.

விபுத்துவம், illimitable bulkiness, as distinct from அணுத்துவம்.

விபுலம், அகலம், breadth, expanse, width. 2. பூமி, earth. 3. பெருமை, greatness, eminence. 4. விரிவு, wide, expanded space.

விபுலை, பூமி, the earth.

விபூஷணம், ஆபரணம், ornament, decoration.

விபூதி, அணிமா முதலியன, superhuman power, consisting of eight faculties attributed to Siva. 2. குற்றம், fault. 3. கொடுமை, violence. 4. செல்வம், prosperity, felicity. 5. திருநீறு, ashes of cowdung smeared by Saivas. 6. பெருமை, greatness.

விப்பிரமம், தலைவன் தலைவி விளையாட்டு, playfulness of lovers. 2. மயக்கம், giddiness, confusion.

விப்பிரயோகம், பிரிதல், separation, absence, separation of lovers. 2. பஞ்சபாணவஸ்தையினொன்று, one of the five effects produced by the arrows of Kama—sighing and lamenting.

விப்பிரர், பார்ப்பார், Brahmans.

விப்பிரலம்பம், பிரிதல், separation of lovers.

விப்பிலவம், நாட்டுக் குற்றம், irregular war, rapine, calamities of a country.

விப்புருதி, அரிபுண், an eating sore, a cancer.

விமதன், பகைவன், an enemy, an adversary.

விமரிசம், விமரிசனம், விமரிசை, ஆராய்வு, inquiry, investigation, proving by inquiry or experiment. 2. யூகம், genius, wit, cleverness.

விமர்த்தனம், அரைத்தல், grinding or triturating perfumes.

விமலம், அழுக்கின்மை, absence of impurity, holiness, immaculateness. 2. சிவகாம மிருபத்தெட்டினொன்று, one of the twenty-eight agamas of the Saiva sect.

விமலன், கடவுள், the holy—God. 2. சிவன், Siva.

விமலாகாசம், ஞானகாசம், the spiritual vacuum of the ஞானி, by which he affects to perceive at once everything in the universe.

விமலி, சரஸ்வதி, Saraswati.

விமலை, லக்ஷ்மி, Lakshmi. 2. துர்க்கை, Durga. 3. பார்வதி, Parvati.

விமார்க்கம், துர்நடை, a bad course, ill-behaviour, immorality. 2. விளக்கு மாறு, broom, broomstick.

விமார்த்தம், half the duration of an eclipse.

விமானம், உரோகணி நாள், the fourth lunar mansion. 2. ஏழ்நிலை மாளிகை, a house seven stories in height. 3. தேர், a self-moving car of the Gods. 4. தேவர் கோயில், a shrine. 5. தேவலோகம், the world of the celestials.

விமோசனம், தீர்த்தல், relinquishment, expiation, abandonment.

விம்பம், கொவ்வைக் கொடி, a plant—Bryonia grandis. 2. பிரதிவிம்பம், reflection, shadow. 3. வட்டம், the disc of the sun and moon. 4. ஊருவம், form, figure, image, shape. 5. ஒளி, light, splendour. 6. சாலங்கபாஷாணம், a kind of arsenic. 7. சிவாகம மிருபத்தெட்டினொன்று, one of the twenty-eight agamas of the Saiva sect.

விம்பிகை, see விம்பம் 1.

விம்பித்தல், சாயை தோன்றல், reflecting, as an image.

விம்பல், அழுதல், crying, sobbing as a child. 2. ஒலித்தல், sounding.

விம்மிதம், அச்சம், fear. 2. அதிசயம், admiration. 3. உடல், the body.

விய, ஓராண்டு, the twentieth year of the Hindu cycle.

வியக்கம், பெருமை, greatness.

வியங்கம், பிறவி மறு, the stain of birth.

வியங்கியம், குற்றுவார்த்தை, irony, sarcasm.

வியங்குலம், the sixtieth part of an inch.

வியங்கோள், ஐம்பான் மூவிடத்து வருமேவல், that part of the verb which answers to the optative mood.

வியஞ்சகம், அபிநயம், pantomime in dancing.

வியஞ்சனம், அடையாளம், a sign, mark, a signal. 2. ஒற்றெழுத்து, a consonant. 3. பருப்புத்திரளை, sauce, condiment, anything to give relish to food.

வியஷ்டி, வேறுதல், separation, development.

வியஷ்டிரூபம், ஸ்தூலரூபம், the visible form of things in nature.

வியதிரேகம், எதிர்மறை, the negative form of expression. 2. விகற்பம், difference. 3. ஓரலங்காரம், a figure in rhetoric.

வியத்தம், வெளிப்படை, that which is manifest.

வியத்தல், அதிசயப்படல், showing wonder, being captivated or delighted with. 2. துதித்தல், praising, extolling.

வியத்திகை, பெருமை, greatness, excellence.

வியத்தியாசம், ஓரிடத்திருந்து பிரிதோரிடத்துறல், removing from one place to another.

வியநெறி, பெரும் பாதை, the main street, the high way.

வியந்தரம், பிசாசம், devil.

வியப்பு, அதிசயம், admiration, amazement, surprise.

வியம், உடல், a body. 2. பறவை, a bird. 3. பெருமை, greatness. 4. ஏவல், the imperative.

வியர்த்தம், பயனின்மை, uselessness, vanity.

வியர்த்தல், சினக்குறிப்பு, being angry or provoked. 2. வியர்வை, sweat or perspiration.

வியர்ப்பு, கோபம், anger. 2. சினம், wrath. 3. வியர்வை, sweat, perspitation.

வியர்வு, see வியர்த்தல் 2.

வியலிகை, பெருமை, greatness.

வியலிடம், அகலம், breadth.

வியல், அகலம், breadth. 2. காடு, forest, jungle. 3. பெருமை, greatness. 4. விரிவு, expansion, extension.

வியவகாரம், judicial procedure, jurisprudence.

வியவன், ஏவுவான், one in authority, a commander. 2. திண்ணியன், a valiant man. 3. வழிச் செல்வோன், a traveller.

வியனுலகு, தேவலோகம், the celestial world.

வியன், பெருமை, greatness, vastness, expansion. 2. (நன்.) எண்ணின் ஒற்றை, oddness of numbers.

வியன்சங்கலிதம், ஒரு சங்கலிதம், the sum of odd terms in any series.

வியாகரணம், இலக்கணம், grammar, philology, one of the sixty-four கலைஞானம்.

வியாகாதம், இடையூறு, impediment, obstacle, hindrance. 2. அழிவு, destruction. 3. ஒரு யோகம், an astronomical yoga.

வியாகாரம், அவலட்சணம், ungracefulness, deformity. 2. சத்தம், sound.

வியாகிருதி, a mystical phrase.

வியாகுலம், துக்கப்படல், sorrow, sadness, grief. 2. கலக்கம், confusion, derangment.

வியாக்கியாதா, உரைகாரன், a commentator.

வியாக்கியானம், உரை, commentary exposition, annotation.

வியாக்கிரம், சிறந்த, best, excellent. 2. பெரும் புலி, a tiger. 3. மேன்மை, superiority.

வியாக்கிராசனம், புலித்தோலாசனம், tiger's skin for a seat.

வியாசம், நிபம், alleged cause. 2. பகுத்தறிதல், discrimination. 3. விரிவு, extension, diffusion. 4. உவமை, a comparison, simile. 5. தர்மநூல் பதினெட்டினொன்று, a work on Hindu law by Vyasa.

வியாசன், வேத வியாசன், the sage *Vyasa*, compiler of the vedas, and founder of the vedantic philosophy.

வியாச்சியம், வழக்கு, a dispute, lawsuit, dissension, discord, difference.

வியாதம், வேறுபாடு, change, alteration.

வியாதன், வியாசமுனி, Vyasa. 2. வேடன், a famous hunter.

வியாதாகாரம், துயர்தீர்க்கை, comforting the afflicted, consolation of mind.

வியாதி, நோய், disease, sickness, malady, distemper.

வியாதுதம், சரம், moveable things.

வியாத்தம், வியாத்தியோடு கூடியது, that which is pervaded, as the universe by the spirit.

வியாத்தி, வியாபிப்பது, that which pervades, the inherent quality or property, of a substance—as heat in fire or pantheistically, God, in the universe.

வியாபகம், எங்குமிருப்பது, omnipresence, ubiquity, universality.

வியாபாதம், வஞ்ச மனம், an evil design to injure another.

வியாபாதனம், கொல்லல், killing, murder.

வியாபாரம், காரியம், வர்த்தகம், business, traffic, merchandise, commerce. 2. அப்பியாசம், exercise, practice.

வியாபி, எங்குமிருப்போன், deity, the omnipresent, all pervading.

வியாபினி, as வியாபி, that which is present everywhere.

வியாப்பியம், வியாத்தியை யுடையது, that which may be inferred to exist.

வியாமம், நான்கு முழவளவு, a fathom, a measure of four cubits.

வியாழம், ஒரு நாள், Thursday. 2. தேவ குரு, Preceptor of the Gods. 3. ஒரு கிரகம், the planet Jupiter.

வியாளகிராகி, பிடாரன், a snake-catcher.

வியாளம், கெட்ட யானை, a vicious elephant. 2. பாம்பு, a snake. 3. புலி, a tiger.

வியானன், ஒரு வாயு, one of the ten vital airs of the body.

வியூகம், விலங்கின் கூட்டம், herd, flock. 2. திரள், multitude, collection. 3. படை வகுப்பு, division of an army, as யூகம்.

வியோகம், பிரிதல், separation. 2. விடுதல், release from births.

வியோமம், ஆகாயம், the atmosphere.

விரகம், காமநோய், lasciviousness, lust. 2. பிரிவு, separation, absence, parting of lovers or married persons.

விரகு, அழித்தல், destruction. 2. உணர்வு, discretion, prudence, tact, dexterity. 3. உபாயம், means, expedient.

விரணம், புண், a sore, an ulcer. 2. விழல், a kind of grass—Andropogan muricatum.

விரதத்துவம், a state of self-inflicted austerity.

விரதம், ஆணை, an oath, a vow. 2. தவம், penance.

விரதர், தவத்தோர், ascetics, mendicants.

விரதி, துறவோன், one who has renounced the world.

விரத்தம், } துறவறம், renunciation
விரக்தம், } of worldly objects.

விரத்தன், விரதி, a friar, a bachelor, one devoted to celibacy.

விரத்தி, துறவு, renunciation. 2. *fem.* of விரத்தன்.

விரவல், கலத்தல், mixing, mixture.

விரவு, கலப்பு, mixture. 2. விர வென்னேவல், *imp.* mix, unite, mingle, approach, draw near.

விரவுதல், கலத்தல், mixing, uniting.

விரளம், நீக்கம், separating, parting, removal.

விராகம், விருப்பின்மை, absence of passion, as an exalted state of the soul.

விராகன், அருகன், one without passion—Argha.

விராடம், ஒரு தேயம், a country.

விராட்டு, பரப்பிரமம், the primary cause, the deity. 2. புள்ளரசு, the king of birds, the large kite. 3. All beings animate and inanimate, amounting 84,00,000 considered to be contained in the mystic form of Vishnu especially at the time of the பிரளயம்.

விராத்தியன், ஜாதிதர்மம்விட்டவன், one who has renounced caste. 2. பிரதிலோமத் தந்தைக்கும், அனுலோமத் தாய்க்கும் பிறந்தோன், a son of a father and mother of a low and mixed caste.

விராமம், ஒற்றெழுத்து, a mute consonant. 2. இளைப்பாறுதல், rest, recreation, reprieve.

விராய், விறகு, fuel, firewood (நீதி.).

விராலி, ஒரு செடி, a shrub—Dodonæa viscosa.

விராவம், ஒலி, sound, noise.

விராளி, as விரளம், separation, parting, removal.

விரானு, காக்கணம், a parasitic plant.

விரி, மாட்டு விரி, a panel for bullocks, a pack-saddle. 2. விரியென்னேவல், *imp.* expand, unfold, extend, open, part.

விரிகை, முப்பத்திரு கோவை மணியுள மாதரிடையணி, an ornamental string, containing thirty-two beads or jewels, worn by women round their waist.

விரிச்சி, நன்நிமித்தம், a good omen, a good sign.

விரிச்சிகன், சூரியன், the sun.

விரிஞ்சனன், விரிஞ்சன், விரிஞ்சி, } பிரமன், an epithet of Brahma.

விரிதல், அலர்தல், blossoming. 2. ஒளி செய்தல், shining. 3. பரவல், extending, expanding. 4. விசாலம், breadth, width.

விரிதூறு, புதர், a thicket.

விரித்தல், சொல்லல், explaining, elucidating. 2. பரப்பல், extending, expanding, diffusing. 3. பூசுதல், spreading on, plastering, anointing.

விரியலர், மலர்ந்த பூ, a full blown flower.

விரியல், ஒளி, shining. 2. பரவல், spreading. 3. மலர்தல், blossoming. 4. வியங்கோள்முற்று (root, விரி).

விரிவு, அகலம், expansion, breadth, width.

விரீகி, நெல், rice—corn of various kinds.

விருகம், செந்நாய், a wild dog.

விருகு, விருகந்தண்டு, a medicinal plant, having a bulbous root.

விருகோதரன், வீமன், Bhima. 2. பிரமன், a name of Brahma.

விருக்கம், மரப்பொது, a tree.

விருச்சிகம், ஓரிராசி, the sign Scorpio. 2. தேள், a scorpion.

விருஷணம், பீஜம், the testicles.

விருட்சம், மரப்பொது, a tree in general

விருட்டி, மழை, rain.

விருதர், படைவீரர், warriors.

விருதா, பயனின்மை, uselessness, fruitlessness.

விருத்தகங்கை, கோதாவரி, the Godavery river.

விருத்தகிரி, விருத்தாசலம், a hill-town with a Saiva fane, south of Madras.

விருத்தம், பழமை, antiquity. 2. பாவினத்தொன்று, one of the three kinds of verse. 3. மூப்பு, old age, mature age. 4. வட்டம், a circle, anything circular.

5. வேறுபடல், change, contrariety. 6. ஒரு சிற்பநூல், a book on architecture.

விருத்தர், கிழவர், the aged. 2. மேலோர், great men.

விருத்தவிலக்கணம், ஒரு பிரபந்தம், a poem in which the nine different things which pertain to the prosperity of a king are explained.

விருத்தாசலம், ஒரு சிவஸ்தலம், a hill-town with a Saiva fane, south of Madras.

விருத்தாந்தம், வர்த்தமானம், news, intelligence. 2. கதை, a fable, story.

விருத்தி, அடிமை, bondage, slavery. 2. ஒழுக்கம், appropriate duties, order, rules. 3. ஒருரை, a mode of explaining verse. 4. செல்வம், wealth, prosperity. 5. தொழில், employment. 6. வளர்தல், increase, increment, growth. 7. இலாபம், profit, income, avails. 8. ஒரு யோகம், an astrological yoga.

விருத்திசந்தி, a species of verbal combination incident to Sanskrit words.

விருத்தை, கிழவி, an old woman, a woman in the last stage of life.

விருந்தம், விலங்கின் கூட்டம், a number of beasts together, a herd. 2. கூட்டம், a multitude, a company, an association.

விருந்தர், } புதியர், guests.
விருந்தினர், }

விருந்தனை, மனைவி, a lawful wife, a matron in a household.

விருந்து, புதுமை, a novelty. 2. எண் வனப்பினொன்று, one of the eight beauties of composition. 3. அதிதியர்க்கிடுமுண்டி, a feast, a banquet.

விருந்துபுறந்தரல், விருந்தினரை ஓம்பல், to be hospitable to newcomers.

விருந்தை, துளசி, holy basil. 2. ஜலந்தரன் மனைவி, the wife of Jalantaran, a giant.

விருந்தோம்பல், வேளாண்மாந்தரியல்பினொன்று, hospitality.

விருபன், வெள்ளெலி, a whitish rat.

விருப்பம், } ஆசை, desire, appetite.
விருப்பு, }

விரும்பல், ஆசைப்பெருக்கம், longing or being eager for. 2. கருத்து, applying the mind intensely.

விருளை, கடிவாளப் பூண், an ornamental knob or ring of a bridle.

விருபம், விகாரரூபம், deformity, monstrosity, an unusual form. 2. வேற்றுமை, difference.

விருபாக்கன், } சிவன், Siva, as having a third eye.
விருபாட்சன், }

விரேசனம், விடுவித்தல், evacuation by stool. 2. பேதி மருந்து, an aperient, a purgative.

விரேசித்தல், having, evacuations, purging.

விரை, சாந்து, ground or powdered sandal. 2. வாசனை, perfume. 3. விரையென்னேவல், *imp.* hasten, pass rapidly, long for, be importunate, be in earnest, be intent upon. 4. விதை, seed of herbs and plants.

விரைதல், விரைவு, making haste. 2. வெயில், being warm by the heat of the sun. 3. வேண்டல், being eager for, longing for.

விரைவு, வேகம், swiftness, celerity, despatch.

விரோசனன், சூரியன், the sun. 2. பலிச் சக்கரவர்த்தி தந்தை, the father of Bali, and son of the sovereign Prahalada.

விரோதசிலேடை, முன் சிலேடித்து வந்தவற்றைப் பின்னும் விரோதிப்பச் சிலேடிப்பது, (*in rhet.*) an ambiguous expression of contrast.

விரோதம், பகை, hatred, enmity, animosity. 2. வேற்றுமை, contrariety, diversity, contradiction. 3. விரோதாலங்காரம், a figure in rhetoric, antithesis.

விரோதி, ஓராண்டு, the twenty-third year of the Hindu cycle.

2. சத்துரு, an enemy. 3. விரோதி யென்னேவல், *imp.* hate, oppose, resist, withstand.

விரோதிகிருது, ஓராண்டு, the forty-fifth year of the Hindu cycle.

விர்த்தி, see விருத்தி.

விலகல், எறிதல், emitting rays. 2. நீங்கல், withdrawing, receding from.

விலக்கல், மாற்றல், turning aside, diverting, averting.

விலக்கு, மறிப்பு, prohibition, exception, hindrance—opposed to விதி. 2. வழு, error, fault.

விலங்கரசு, சிங்கம், the king of beasts—a lion.

விலங்கல், கலங்கனீர், turbid water, a puddle. 2. மலை, a hill or mountain. 3. விலங்குதல், scintillating, twinkling, getting away, receding from.

விலங்கு, கால் தளை, fetters. 2. குறுக்கு, that which is transverse or across. 3. மிருகம், beast in general. 4. விலங்கென்னேவல், *imp.* scintillate, twinkle, get away, remove.

விலங்குதல், எறிதல், scintillating, twinkling. 2. விலகல், getting away, receding.

விலா, பழு, the sides of the body.

விலாங்கு, ஒரு மீன், an eel.

விலாசம், ஆடவர் மகளிர் விளையாட்டு, dalliance of men and women. 2. நாணக் குறிப்பு, affected aversion or bashfulness of a female. 3. அழகு, beauty. 4. ஒரு பிரபந்தம், a kind of dramatic rhyme.

விலாசனை, மகளிர் விளையாட்டு, a female sport.

விலாபம், கனவுகண்டிரங்கல், weeping in sleep. 2. புலம்புகை, the language of grief, lamentation.

விலாழி, குதிரை வாய் நுரை, foam from a horse's mouth or lather from hard work. 2. யானைத் துதிக்கை நீர், water or mucus from an elephant's proboscis.

விலாளம், ஆண் பூனை, a tom-cat. 2. பூனை, a cat.

விலேபனம், பூசுதல், daubing, smearing, plastering, anointing. 2. வாசனைச் சாந்து, an unguent, a perfume. 3. சந்தனத் தைலம், the oil or perfume of sandal.

விலேபி, கஞ்சி, boiled rice with its water.

விலை, விற்றல், selling, sale. 2. கிரயம், price, cost.

விலைஞர், செட்டிகள், those of the Chetti caste, merchants.

விலைமகள், வேசி, a harlot.

விலையாளர், விற்போர், sellers, dealers.

விலோசனம், கண், the eye. 2. பார்வை, sight, seeing.

விலோதம், பெண் மயிர், hair of women. 2. மயிற்குழற்சி, the hair of women's head knotted behind.

விலோதனம், துகிற்கொடி, a flag for ornament. 2. பெருங்கொடி, a large flag, an ensign.

விலோமம், முறைபிழைத்தல், the reverse, an opposite course or order.

வில், ஒளி, light. 2. சேரன்கொடி, the banner of the Sera kings. 3. மூலநாள், the nineteenth lunar mansion. 4. வில், a bow. 5. வில் லென்னேவல், *imp.* sell, put in sale.

வில்லவன், சேரன், he whose banner has the device of a bow in it—an epithet of the Sera kings.

வில்லார், வில்லியர், } வில்லுடையோர், bowmen. 2. வேடர், hunters, savages.

வில்லாளன், வில்வல்லோன், } one skilled in archery, an archer.

வில்லி, மன்மதன், the Hindu Cupid. 2. வீரபத்திரன், Virabhadra.

வில்லிபுத்தூரர், translator of the Bharata into Tamil. 2. A Vaishnava devotee.

வில்லுவம், வில்வம், } கூவிளை, a sacred tree—Crataeva religiosa.

வில்லேருழவர், படைவீரர், warriors. 2. வேடர், hunters.

வில்வித்தை, வில் நூல், archery.

விவகரித்தல், நியாயம் பேசல், debating, disputing, arguing.

விவசம், பரவசம், ecstacy, state of the mind in which the senses are absorbed. 2. A state of soul without earthly cares.

விவரகதி, difference of the daily motion of the sun and moon.

விவரணம், விளக்கம், explanation.

விவரம், உட்டுளை, hole, the hollow of a tube, a cavity, a chasm. 2. பகுத்தல், separation, disjunction.

விவர்த்தம், } புரளல், circumgyration, a rolling or passing round.
விவர்த்தனம், }

விவாகம், கலியாணம், marriage, matrimony.

விவாதம், சொற்கலகம், a dispute, a verbal contention. 2. வாது, a lawsuit.

விவிதம், பலவிதம், various kinds.

விவேகம், பகுத்தறிவு, the faculty of distinguishing things by their properties; the power of separating Brahma or invisible spirit from the visible world, truth from untruth, error from illusion. 2. புத்தி, cleverness, ingenuity, discrimination, penetration, judgment. 3. மனத்தெளிவு, the spiritual faculty.

விவேசனம், விவேகம், discrimination, judgment.

விழம்பு, சோறு, boiled rice.

விழலர், அறிவிலார், the ignorant, the base.

விழலாண்டி, வீணன், idler, saunterer.

விழல், ஒரு புல், the sweet-scented cuscus grass—Andropogan muricatum. 2. விழுதல், falling down, in, off, out, through, &c. 3. வீண், a thing of no value, a worthless thing.

விழவு, திருவிழா, a festival, a sacred celebration. 2. மிதுனவிராசி, Gemini of the zodiac.

விழா, விழவு, a festival. 2. *v. part.* வினையெச்சம், falling down, &c.

விழி, கண், the eye. 2. விழியென்னேவல், *imp.* open the eyes, wake from sleep, watch.

விழித்தல், கண் திறத்தல், opening the eyes, waking from sleep.

விழுகை, விழுதல், falling down, in, off, out, &c.

விழுக்கு, நிணம், fat, suet.

விழுங்கல், விழுங்குதல், swallowing, absorbing, gulping.

விழுதல், see விழுகை.

விழுது, ஆலமர முதலியவற்றின் விழுது, the root falling down from the branches of the banyan and some other trees. 2. விழுதுநூல் a weaver's harness. 3. The lead of the mariner for sounding.

விழுத்தம், கருஞ்சீரகம், black cumin.

விழுத்தல், வீழ்த்தல், causing to fall, involving, overwhelming.

விழுப்பம், ஆசை, desire, wish. 2. குலம், a tribe. 3. நன்மை, a good, a benefit, goodness, beneficence. 4. சிறப்பு, excellence, sublimity.

விழுப்பு, தீட்டு, impurity, pollution.

விழுமம், இடும்பை, poverty, affliction. 2. சிறப்பு, excellence, magnificence, superiority. 3. சீர்மை, a good state. 4. நன்மை, goodness.

விழுமியோர், மேலோர், excellent persons.

விழைச்சு, இளமை, tenderness. 2. புணர்ச்சி, wantonness, the sexual embrace.

விழைதல், ஆசைப்பெருக்கம், intense desire, as from avarice, lust or hunger, connubial love.

விழைந்தோர், சிநேகிதர், friends.

விழைவு, ஆசைப்பெருக்கம், intense desire, as from avarice, lust or hunger, connubial love. 2. உள்ளோசை, internal sound. 3. கலத்தல், mixture.

விளக்கம், சந்திரனுள், a phase of the moon. 2. தெளிவு, illustration, elucidation, conspicuousness.

விளக்கு, சோதிநாள், the fifteenth lunar asterism. 2. தீபம், a lamp. 3. விளக்கென்னேவல், *imp.* polish, brighten, illustrate, solder, clear, sweep.

விளங்கல், ஒளிசெய்தல், shining, being conspicuous, clear, illustrious.

விளங்குதிங்கள், சுக்கிரன், Venus, as the bright planet.

விளம்பம், தாமதம், slowness, delay. 2. The slowest movement in singing.

விளம்பல், சொல்லல், speaking openly, saying publicly.

விளம்பனம், தாமதம், delay, slowness.

விளம்பி, ஓராண்டு, the thirty-second year of the Hindu cycle.

விளம்பிதம், முற்றுந் தாமதப்படுந் தாளப் பிரமாணம், an adagio movement in musical time.

விளரி, இளமை, youth, juvenility, tenderness. 2. நெஞ்சாற் பிறக்கு மிசை, one of the seven musical sounds, that which proceeds from *the chest*. 3. நெய்தனிலத்தி யாழ், a lute of a maritime district. 4. மிகுதி, abundance. 5. யாழி லோர் நரம்பு, one of the strings of the lute, that whose tone is in unison with the pectoral tone. 6. வேட்கை, desire.

விளரிப்பாலை, ஓரிராகம், a tune.

விளர், இளமை, tenderness. 2. கொழுமை, fatness, fertility. 3. நிணம், fat. 4. வெண்மை, whiteness.

விளர்தல், வெளுத்தல், becoming white or pale.

விளவு, கமர், a crack. 2. விளவென் னேவல், *imp.* split, burst asunder, mix. 3. விளாமரம், wood-apple tree.

விளா, see விளவு 3.

விளாகம், போர்க்களம், a battle-field.

விளாவல், கலத்தல், mixing.

விளி, எட்டன்வேற்றுமை, the eighth or vocative case. 2. விளியென் னேவல், *imp.* be ruined, die, turn about, call, invite, summon, suffer, be angry.

விளிதல், கெடுதல், being ruined. 2. சாதல், dying, becoming extinct. 3. மறிதல், turning about. 4. வருந்தல், suffering. 5. கோபித்தல், being angry.

விளித்தல், அழைத்தல், calling, summoning, inviting.

விளிம்பு, கண்ணிமை, eye-lid. 2. கரை, border, brink, margin.

விளிம்புதெற்றி, கரைத்திண்ணை, a seat of mortar-work against the walls of a house *(இராமா.)*.

விளிவித்தல், அழைப்பித்தல், sending one to call another. 2. கொல்லல், killing, slaying.

விளிவு, கோபம், wrath. 2. சாவு, death.

விளை, கொல்லை, high ground, not supplied with water.

விளைஞர், மருதநில மாக்கள், ploughmen.

விளைதல், உண்டாதல், becoming, being formed, originating. 2. தானியம் விளைதல், growing, ripening as corn.

விளைநிலம், **விளைபுலம்**, **விளையுள்**, } வயல், fertile ground or fields, a table-land.

விளைவு, மேகம், a cloud. 2. வயல், a field. 3. விளைதல், ripening as corn, concretion, crystallization.

விள்ளல், தழுவல், embracing. 2. மலர்தல், opening, expanding, opening as a blossom. 3. வேறு படல், being at variance, being diverse. 4. வெடித்தல், cracking. 5. சொல்லல், speaking, revealing, making known.

விறப்பு, அச்சம், fear. 2. நெருக்கம், narrowness, straitness. 3. பெருக் கம், increase. 4. போர், fight. 5. வெற்றி, victory.

விறலி, பதினாறு வயதுப் பெண், a girl of sixteen years old. 2. பாடன் மகடூஉ or songstress.

விறலிவிடுதூது, a poem, in which a விறலி is sent as a messenger.

விறலோன், அருகன், Argha. 2. திண்ணியன், a robust, muscular man.

விறல், பெருமை, greatness. 2. வலி, strength. 3. வீரம், bravery, magnanimity. 4. வெற்றி, victory.

விறைத்தல், becoming stiff with cold, becoming numb—as a limb. 2. பயப்படல், being amazed, being overcome by fear or surprise, being paralyzed.

விற்பத்தி, கல்வி, learning, skill, acumen. 2. Etymology, derivation of words.

விற்பன்னம், பிரசங்கம், harangue, discourse. 2. கல்வி, science, learning.

விற்பன்னர், கற்றோர், the learned, those eminent for learning. 2. புலவர், poets, bards.

விற்பன்னித்தல், வர்ணித்தல், haranguing, beautifying, representing in vivid colours.

விற்றல், விற்குதல், selling, putting in sale.

வினகம், சேங்கொட்டை மரம், the marking-nut tree.

வினவல், வினவல், inquiring, questioning, investigating. 2. Paying visits of congratulation, saluting.

வினவுதல், see வினவல் 2.

வினா, கேள்விகேட்டல், one of the modes of explanation, anticipating objection, asking questions. 2. வினவென்னேவல், *imp.* ask, inquire. 3. புத்தி, sagacity, prudence. 4. அவதானம், attention.

வினாசன், கொலை செய்வோன், a murderer, a destroyer.

வினாபூதகற்பனை, தெளிவில்லாத கற்பனை, an obscure precept.

வினாபூதம், that which is obscure or doubtful.

வினாப்பெயர், an interrogative pronoun.

வினாவெழுத்து, an interrogative letter.

வினியோகக்காரன், கொடையாளன், a liberal man.

வினியோகம், கைம்மாறு நோக்கி ஈதல், giving in expectation of a return.

வினீதன், தண்டிக்கப்பட்டவன், he who is punished, chastised. 2. விநய முள்ளவன், a humble, modest man.

வினை, கருத்து, design, thought, counsel. 2. தொழில், act, action, deed, work. 3. போர், war, action. 4. ஊழ், accumulation of moral actions, the results of deeds in former births. 5. தீவினை, an evil deed, mischief, the actions or intentions of enemies. 6. வினைச் சொல், in grammar—a verb.

வினைக்குறிப்பு, குறிப்பு வினை, a conjugated appellative.

வினைக்குறிப்புமுற்று, குறிப்பு வினை முற்று, a finite conjugated appellative.

வினைசூழல், plotting evil.

வினைசெயல்வகை, means of accomplishing an action.

வினைஞர், கம்மாளர், artificers. 2. கூத்தர், dancers. 3. சூத்திரர், Sudras. 4. மருதநிலமாக்கள், ploughmen.

வினைத்திட்பம், வினைவலி, } boldness in action.

வினைத்தூய்மை, a pure action.

வினைத்தொகை, an *aorist* form of the relative participle, as செய், instead of செய்த, செய்கிற or செய்யும்.

வினைப்பகாப்பதம், வினைப்பகுதி, the root or primitive verb.

வினைப்பகுபதம், the verb with its termination.

வினைப்பயன், வினைப்போகம், வினைவழி, } fruit of moral actions.

வினைமுதல், எழுவாய், the agent or subject of the verb.

வினைமுற்று, a finite verb.

வினையாலணையும்பெயர், finite verbs used as appellatives.

வினையுரைப்போர், தூதர், messengers.

வினையுவமை, a figure in which the verb is the word of comparison.

வினையெச்சம், an unfinished part of a verb.

வினைவிநாசன், கடவுள், the destroyer of sin—God.

வின்ஞண், a bow-string.

வின்னுலாளன், துரோணாசாரியன், one skilled in archery—Dronacharya.

வீ

வீ, ஓரெழுத்து, a syllabic compound of வ் and ஈ. 2. சாவு, death. 3. நீக்கம், separation. 4. பறவை, a bird. 5. பூ, a flower. 6. வீயென்னேவல், *imp.* be ruined, die, perish.

வீகம், பூட்டு, a lock. 2. மோதிரம், a ring.

வீக்கம், மிகுதல், plenty, abundance. 2. வீங்கல், swelling, enlargement.

வீக்குதல், கட்டல், tying, binding. 2. அழித்தல், destroying, annihilating. 3. வீங்கச்செய்தல், causing to swell.

வீங்கல், நித்திரை செய்தல், sleeping. 2. வீக்கம், swelling. 3. மிகுதல், being copious, exceeding mediocrity, being full.

வீங்கி, சேங்கொட்டை, the kernel of the marking-nut tree.

வீசகணிதம், அட்சரகணிதம், algebra.

வீசகா, வேங்கை, the kino tree—Pterocarpus bilobus.

வீசம், ஓரெண், one-sixteenth of an integer. 2. நெல்லடைப் பொன், a weight of gold equal to a rice-corn.

வீசல், ஈதல், giving liberally. 2. எறிதல், throwing, flinging, casting, as a weapon or a net. 3. emitting as rays or odour. 4. சிதறல், strewing, scattering, sowing. 5. சுழற்றல், waving or flourishing as a sword.

வீசனம், சிற்றுலவட்டம், a small fan. 2. விசிறி, a fan.

வீசை, ஒரு நிறை, a *vis*, equal to forty *palams* or about three pounds, two ounces avoirdupois.

வீடல், சாதல், dying.

வீடி, கொற்றான், a twiggy plant—Cassyta filiformis.

வீடிகை, தாம்பூலம், betel leaf folded with areca-nut, lime, &c., for chewing.

வீடு, மனை, a house, habitation, abode. 2. மோட்சம், emancipation from births, separation, heavenly felicity. 3. வீடென்னேவல், *imp.* die, let, leave off.

வீடுபேறு, முத்திப்பேறு, obtaining heaven.

வீடெடுத்தல், laying the foundation of a building.

வீட்சணம், } பார்வை, sight, seeing.
வீட்சணை, }

வீட்டுதல், கொல்லல், killing.

வீட்டுமம், வைராக்கியம், superstitious zeal, fanaticism.

வீட்டுமாசாரி, Bhisma, the son of சந்தனு.

வீட்டுள்ளார், இல்வாழ்வார், householders.

வீணை, ஓசையாழ், the Indian lute, usually of seven strings and two octaves.

வீணைவல்லோர், கந்தர்வர், celestial choristers.

வீண், பயனின்மை, vanity, uselessness, unprofitableness, being unemployed.

வீதம், முறை, regularity, rule. 2. அளவு, rate, ratio.

வீதராகம், வைராக்கியம், zeal, fanaticism. 2. பற்றின்மை, freedom from worldly passion.

வீதல், கெடுதல், being ruined. 2. சாதல், dying. 3. வறுமை, poverty.

வீதி, ஒழுங்கு, order, row. 2. கடைவீதி, a market street. 3. தெரு, a street, a road. 4. நேரோடல், straight course. 5. வழி, way.

வீத்துமம், சதகுப்பை, dill—Anethum sowa, Bishop's-weed.

2. வெள்ளரி, a kind of melon—Cucumis sativus.

வீபணி, கடைவீதி, a market street, a fair, a market.

வீபத்து, சந்திரன், the moon.

வீபற்சு, அர்ச்சுனன், an epithet of Arjuna.

வீப்பகழி, மன்மதன் கணை, a flower-arrow of the Hindu Cupid.

வீமசேனன், தமயந்தி பிதா, the father of Damayanti, heroine of the poem Naishatham. 2. வீமன், Bhima, second son of Pandu, and supposed son of Vayu, God of the wind.

வீமதேவன், பதினொரு உரித்திரரி லொருவன், one of the eleven celestials.

வீமம், பயங்கரம், a fearful thing. 2. பருமை, bulkiness.

வீமன், பஞ்சபாண்டவரிலொருவன், Bhima, second son of Pandu, and supposed son of Vayu God of the wind.

வீரகங்கணம், a warrior's bracelet.

வீரசாகி, சேங்கொட்டை மரம், the marking-nut tree.

வீரசேனன், நளன் தந்தை, the father of Nala Raja.

வீரசைவம், ஒரு சைவம், the high Saiva or Jungama system.

வீரச்செல்வி, துர்க்கை, an epithet of Durga.

வீரட்டாணம், கூத்தின் விகற்பம், a kind of dance or play.

வீரணம், இலாமிச்சம் வேர், the root of the fragrant Kusa grass.

வீரதச்சுவன், மன்மதன், Kama.

வீரதுரந்தரன், மகாவீரன், a champion, one ready to take the part of others.

வீரபத்திரன், சிவன் மகன், Virabhadra a form of Siva and destroyer of the sacrifice of Daksha.

வீரப்பாடு, வெற்றி, victory, conquest.

வீரமாகாளர், ஜைன படைத்தலைவன், the commander of a Jain army.

வீரமார்த்தாண்டன், நவவீரரி லொருவன், one of the nine heroes in Subramanya's army. 2. சிறந்த வீரன், an illustrious hero.

வீரமுட்டி, வீர சைவத்து ருத்திர வேஷம்பூண்டு சமயப் பாதுகாவலனாயிருப்போன், a *Vira Saiva* or Sangama mendicant of a ferocious class, and often licentious.

வீரமுத்திரிகை, கானடுவிரலணி, an ornament worn on the middle toe.

வீரம், ஒரு மருந்து, a king-like medicine. 2. மலை, a mountain. 3. வலி, strength, might. 4. வீரியம், bravery, heroism, fortitude, magnanimity. 5. சிவாகம மிருபத்தெட்டிலொன்று, one of the twenty-eight Saiva agamas. 6. யோக நிலையினொன்று, a posture of the yogi.

வீரர், படை வீரர், warriors, heroes, champions.

வீரவெட்சிமாலை, ஒரு பிரபந்தம், a panegyric, on one who has made a successful foray, and been crowned with a wreath of வெட்சி.

வீரவெண்டையம், a large kind of trinket worn on the feet by warriors.

வீரன், அருகன், an epithet of Argha. 2. திண்ணியன், a hero, a veteran. 3. பீஷ்மாசாரி, Bishma.

வீராணம், ஒருவகைப் பறை, a kind of drum. 2. ஓரூர், a town.

வீராவேசம், குணலை, fury of bravery, a warrior's shout of triumph, joy, valor or defiance.

வீரி, காளி, Kali. 2. துர்க்கை, Durga. 3. வீரமுடையவள், a heroine (*masc.* வீரன்).

வீரியத்தம்பனம், privation of strength by enchantment.

வீரியம், சுக்கிலம், semen virile. 2. பறைப் பொது, musical instruments. 3. வீரம், fortitude, firmness, courage. 4. வலி, strength, vigor, power.

வீரியர், வீரர், heroes.

வீருதம், மிடைதூறு, bushes, small shrubs.

வீரை, ஒரு மரம், a tree. 2. கடல், the sea. 3. துன்பம், affliction.

வீவு, சாவு, dying, death.
வீழி, ஒரு செடி, a medicinal plant.
வீழ், மர விழுது, the falling roots from the branches of a banyan, &c. 2. வீமென்னேவல், *imp.* fall, cause to fall.
வீழ்கதி, நரகம், hell.
வீழ்க்கை, சோதி நாள், the fifteenth lunar mansion.
வீழ்தல், ஆசை, desire. 2. ஆசைப் பெருக்கம், longing for, earnest desire. 3. மேவல், longing for, desiring earnestly. 4. விழுதல், falling.
வீழ்த்தல், விழுவித்தல், causing to fall.
வீறல், பெருமையாதல், being great. 2. விளங்கல், being evident. 3. வெறுப்பாதல், being disgustful. 4. தனித்தல், being alone. 5. பிரிதல், being split, cleft.
வீறு, தனிமை, solitariness. 2. புண்ணியம், merit. 3. பெருமை, greatness, arrogance. 4. விளக்கம், clearness, brightness. 5. வீறென்னேவல், *imp.* be great, evident, disgustful, solitary. 6. வெறுப்பு, disgust.
வீற்றம், வேறுபாடு, difference.
வீற்று, தனிப்பாடு, solitariness. 2. வேறுபாடு, difference.

வெ

வெ, ஓரெழுத்து, a syllabic compound of வ் and எ.
வெஃகல், ஆசைப்பெருக்கம், ardent desire, longing for, excessive desire.
வெஃகாமை, வேண்டாமை, dislike, disgust.
வெகுச்சுருதம், சிற்ப நூல் முப்பத்திரண்டினொன்று, an order of architecture.
வெகுதானிய, ஒரு வருடம், the twelfth year of the Hindu cycle.
வெகுத்துவம், பன்மை, plurality. 2. மகத்துவம், magnificence.
வெகுநாயகம், பலர் தலைமை, government in the hands of many.
வெகுளாமை, சினமின்மை, absence of anger.
வெகுளி, சினம், anger, wrath.
வெகுளிவிலக்கு, ஓரலங்காரம், a figure of speech in which anger is expressed and disowned.
வெகுளுதல், சினத்தல், being angry, incensed, enraged.
வெக்காலி, ஒரு மரம், a kind of tree used for timber.
வெங்கண், பொறுமை, jealousy, spite, animosity, implacability, enmity.
வெங்களம், போர்க்களம், a battle-field.
வெங்கோல், கொடுங்கோல், a cruel sceptre, an arbitrary government.
வெச்செனல், வெப்பமாதல், being hot, becoming heated.
வெஞ்சமம், பாலைநிலத்து இராகம், a tune for a barren country. 2. போர், war, battle.
வெஞ்சமன், இயமன், the cruel arbiter.
வெஞ்சன், பழி, vengeance.
வெஞ்சிலைச்செல்வன், வீரபத்திரன், he who bears a cruel bow—an epithet of Virabhadra.
வெஞ்சுடர்க்கிரணன், சூரியன், the hot-rayed—the sun.
வெடி, அச்சம், fear. 2. இடி, shock, crack, thunder. 3. கள், toddy. 4. நறும்புகை, incense of a good smell, smoke of frankincense. 5. வெடியென்னேவல், *imp.* explode, discharge, crack as an earthen-ware, chap. 6. வெளி, an open field. 7. explosion of a gun, &c. 8. (*M. Dic.*) சிற்றேலம், a species of cardamom.
வெடித்தல், பிளத்தல், splitting, cleaving. 2. Exploding, discharging.
வெடிப்பு, பிளப்பு, a cleft, crevice, fissure.
வெட்கம், நாணம், shame, modesty, bashfulness.
வெட்கல், அச்சக் குறிப்பு, being afraid. 2. நாணுதல், being ashamed.

வெட்சி, ஒரு பூஞ்செடி, a flower-shrub—Ixora coccinea. 2. பகை நிரை கவர்ந்தவர்க்கு மாலை, a flower-garland worn by a certain class of warriors.

வெட்டல், கொலை செய்தல், killing with a sword. 2. தறித்தல், cutting off, felling.

வெட்டி, வழி, path, road, way. 2. (*M. Dic.*) இருவேலி, an odoriferous shrub—the root is medicinal and used also for tats.

வெட்டெனல், being furious, violent.

வெட்டெனவு, severity, harshness, hardness.

வெட்டை, உஷ்ணம், heat in the system.

வெட்பாலை, ஒரு மரம், a plant—Nerium antidysentericum.

வெண், white, pure, bright.

வெண்கதிரோன், சந்திரன், the silver-rayed—the moon.

வெண்கலம், ஓர் உலோகம், bell-metal, a composition of copper and pewter.

வெண்காந்தள், ஒரு கொடி, the white species of the November-flower plant.

